KAMALATCHI

A NOVEL

BY

Sreeman T. M. Ponnoosawmy Pillay Rai Sahib Avergal,
(TREASURER, PAPER CURRENCY OFFICE, RANGOON)

DEDICATED TO THE TAMILIANS,

WITH

AN INTRODUCTION

IN ENGLISH AND TAMIL

BY

Sreeman T. Balasundara Mudaliar Avergal,
(*Munshi to the Tamil Translator to the Government of Maaras, and Chief Examiner in Tamil for the University of Madras for several yecrs*)

Second Edition.

Madras :

PRINTED BY THOMPSON AND CO., AT THE " MINERVA " PRESS,
POPHAM'S BROADWAY.

1910.

All Rights Reserved.

Full Calico Price Rs. 2-8-0
Wrapper „ „ 2-0-0

Postage Extra.

கடவுள் துணை.

கமலாகூடி சரித்திரம்.

(படங்களுடன்.)

இஃது

இரங்கூன் பேபர் கறென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரர்

ஸ்ரீமான

திரிசிரபுரம். ம. பொன்னுசாமி பிள்ளை, ராய்சாயிப்

அவர்கள் இயற்றித்

தமிழ்ச் செல்வர்களுக்கு

அர்ப்பணஞ் செயிதது.

இரண்டாம் பதிப்பு.

சென்னை :

மினெர்வா அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1910

All Rights Reserved.

டி காலிகோ விலை ரூ. 2—8—0
பேப்பர் ,, ,, 2—0—0

தபால் வரித்தனி வேறு.

5C48:a

Printed by Thompson & Co., at the " Minerva " Press, Madras.



கடவுள் துணை.

முகவுரை.

"முத்தமிழு நான்மறையு மானுன் கண்டாய்" என்று சைவ சமயாசாரியர்களி லொருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் திரு வாய்மலர்ந்தருளிய அருந்தமிழ் வேதவாக்கியப்படி சிவசொரூபமா யிருக்கத்தக்க இய லிசை நாடக மென்னும் முத்தமிழ்த் துறைகளை முழுதுணர்ந்த உத்தமப் புலவர்கட்கு யான் சொல்லுவதொன் றுண்டு.—

உலகத்தில் மானிடர் நன்மை தீமை இன்னவையென்றும் அவற்றால் விளையும் இன்ப துன்பங்கள் இன்னவையென்றும் தெரிந்துகொள்வதற்குத் தமிழில் உத்தரவேதமாகிய திருக்குற ளென்னும் முப்பாலால் முதலாக அளவிறந்த நூல்க ளிருக்கினும், அவை யாவும் செய்யுள் நடையி லிருக்கின்றமையாலும், பன்னிரண்டு மந்திரிக் கதைகள் பஞ்சதந்திரக் கதைகள் முதலிய வசன நூல்கள் நீதி புகட்டத்தக்கவையா யிருந்தும், அஃறிணைப்பொருள்கள் ஒன்றோடொன்று உரையாடல் முதலிய அசம்பாவிதமான கற்பனை விஷயங்கள் அவற்றில் பொதிந்து கிடக்கின்றமையாலும், காடகச் சாயலாக ஆங்கிலேய பாஷையில் நவநவமான கதைகள் இயற்றி யாவர்க்கும் மகிழ்ச்சியை விளைவித்து நற்புத்தி புகட்டும் ரொஞ்ல்ட்ஸ் முதலிய அபிநவகதாக் கிரந்தகர்த்தர்களுடைய கோட்பாட்டை யனு சரித்து, கமலாக்ஷிசரித்திரம் என்னும் இதனை எழுதி வெளிப்படு த்தலானேன். இஃது பண்டிதபாமர ரஞ்சிதமா யிருத்தல்வேண்டு மென்றும், இல்லறத்துக் குரிய காரியங்களைச் செய்து முடித்தபின் அன்றுடம் வேலையற்றிருக்குங் காலத்து இதனை நமமாதரும் பொழு துபோக்காக எளிதில் வாசித்துக் களிப்படைதல வேண்டுமென றும் யான் உத்தேசித்தவ ணதலின், அனுவசியமாகப் பாஷைநடை யைக் கடினமாக்காமல் கூடியவரையில் முழுவதுமே சம்பாஷணை ரூபமாகக் கருத்தை வெளியிட்டிருக்கின்றேன். ஆங்காங்கு அவ்வவர்களுடைய நற்குணங்களினுலும் தீர்க்குணங்களினுலும்

இகத்திலேயே உண்டாகக்கூடிய சுகதுக்கங்களை வாசிப்போர் கண்டறிந்து,

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்."

என்னும் தெய்வப்புலவரது கட்டளைக் கிலக்காக அனைவரும் நல்லொழுக்க முடையவராகி,

"பரவை வெண்டிரை வடகடற் படுநகத் துளையுட்
டிரைசெய் தென்கட லீட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே."
(ஜீவகசிந்தாமணி.)

என்றபடி, அரிதாகக் கிடைத்த மானிடப்பிறவியா லடையவேண்டிய அறம் பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்களை இதை வாசிப்போர் அடைவரெனச் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்து, இந்நூலைத் தமிழ்ச்செல்வர்களாகிய இருபாலார்க்கும் வினயத்துடன் அர்ப்பணஞ்செய்கிறேன். இந்நூலில் வழுக்க ளிருத்தல்கூடும்.

"நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு."

ஆதலின், அவ்வழு குற்றங்களை நீக்கிக் குணத்தையே கொள்வாராக.

இந்நூலின் தன்மை இஃதென அனைவர்க்கும் உபயபாஷைகளிலும் சூசிகை வாயிலாக எடுத்துக்காட்டிய எனது ஆப்தர், உபயபாஷாவிற்பனராகவும், சென்னைக் கவர்ன்மென்ட் தமிழ் ட்ரான்ஸ்லேட்டர் முனிஷியாராகவும், சென்னைச் சர்வகலாசங்கத்துத் தமிழ்ப் பரீக்ஷகராகவும் விளங்கும் ஸ்ரீமான்-தண்டலம்-பாலசுந்தரமுதலியாரவர்களுக்கும், சிறப்புப்பாயிரம் தந்த எனது நண்பர் அருமபுலமை வாய்ந்த ஸ்ரீமான் - முத்துகிருஷ்ணபிள்ளையவர்களுக்கும், இந்நூலைப்பற்றி அபிப்பிராயம் தந்த வித்துவசம்பன்னர் ஸ்ரீமான்-அனவரதவிநாயகம்பிள்ளை, M.A. & L.T. அவர்களுக்கும் மன மொழி மெய்களினல் வந்தன மளிக்கின்றேன்.

தி. ம. பொ.

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

கமலாகூீ முதற் பதிப்பில் அச்சிட்டிருந்த பிரதிகளெல்லாம் செலவாய்விட்டன. ஆயிரம் பிரதிகளே முதற்பதிப்பில் அச்சிட்டிருந்தமையால், அவைகளே விரும்பிய அநேகர்க்குப் பிரதிகள் அனுப்பித் திருப்திசெய்ய முடியவில்லை. புத்தகம் எழுதும் பிரயாசையைவிட அதனை அச்சிடுவதில் உள்ள பிரயாசையின் மிகுதியாலும், எனக்குள்ள உத்தியோகத் தொந்தரவினாலும், இரண்டாம் பதிப்பு அச்சிட எண்ணமில்லாம லிருந்தேன். இருந்தும், அடிக்கடி எங்ஙனத் தூண்டியும் எனக்கெழுதியும் வந்த சிநேகிதர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்வதான கடப்பாடு உண்டாயிற்று. அதுவும் ஒரு நன்மையையே தருத தெனலாம். முதற் பதிப்பை அச்சிடுங் காலத்திலேயே, கதைகிழச்சிக் கேற்ற சில படங்களை அத்துடன் சேர்க்கவேண்டு மென்று நான் எண்ணியிருந்த துண்டு. அது செய்யக் கொஞ்சகாலம நீடிக்குமென்று தெரிந்ததாலும், எழுதியதை விரைவில் உலகிற்குப் பயன் படுத்த வேண்டுமென்னும் விருப்பந துரிதப்படுத்தியதாலும், அப்பொழுது அவ்வாறு செய்ய முடிந்திலது. இவ்விரண்டாம் பதிப்பு அந்தக் கருத்துக்கு அநுகூலத்தை விளைத்தது ஒரு விசேஷமே. ஆதலின், கமலாகூீ இரண்டாம் பதிப்பாகிய இதில் சமயோசிதமான அனேக படங்களைப் பெருந்தொகைச் செலவில் தயாரித்துச சேர்த்திருக்கிறேன். முதற் பதிப்பில் கண்டிருக்குங் கதையின் விவரங்களும், சொற்சுவை பொருட்சுவைகளும, விவேகிகள் பலராலும் நன்கு மதிக்கப்பெற் றிருப்பதால், வேறு நூதன விஷயங்களைக் கூட்டவாவது புதுப்பிக்கவாவது செய்பவில்லை. இவ்விரண்டாம் பதிப்பை அச்சிடுவதில் எனக்கு வேண்டிய சௌகரியங்களைச செய்து உதவி புரிந்த என் ஆப்த நண்பர் சென்னை பேபர் கறென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரர் ஸ்ரீமான் ராய்சாயிப் T. T. கந்தசாமி முதலியாரவர்களுக்கு என் நன்றியறிதலும் வந்தனமும் உரியவை.

இரங்கூன்,
1910ஞ ஜூன்மீ 15உ.

கி. ம. பொ.

INTRODUCTION.

In introducing to the English and Tamil reading Public this interesting and instructive Novel entitled the "Kamalatchi," I think it necessary to say a few words expressive of my opinion about some of the chief characteristics of the Work.

This is a fictitious narrative written generally in a dramatic form intended to exhibit the operations of the human mind of both sexes in its various aspects and under a variety of circumstances, nothing appearing to be romantic and unnatural, the whole being a realistic fiction. The truthful lifelikeness of the pictures delineated reminds me of the complimentary manner in which Professor Masson speaks of De Foe as his "power of fiction in fac-simile of nature" in that the Novel is built up of a number of matter of fact minutiæ and circumstantial details relating to the customs and manners of the Tamilians to whom it has been deservedly dedicated.

Kamalatchi, the heroine of the Novel, is represented to be the ideal of a woman pictured by Mrs. Browning in the following lines :—

> "Rise, woman, rise
> To thy peculiar and best attitudes
> Of doing good and enduring ill,
> Of comforting for ill, and teaching good
> And reconciling all that ill and good
> Unto the patience of a constant hope."

Her taintless chastity, persuasive eloquence, firmness of mind under ufferings and temptations, constancy of love, sympathy for the distressed, charitable view of the attitude of others, love of all that is agreeable and hatred of everything that is detestable are very well exemplified by the author.

Vijiarangam, the hero of the Work, who enjoys conjugal felicity with the heroine whom he loves *par amours*, which forms the joyous conclusion of the plot, is a follower of the precept inculcated by Herbert thus—

"Pitch thy behaviour low, thy projects high,
So shalt thou humble and magnanimous be;
Sink not in spirit: who aimeth at the sky
Shoots higher much than he that means a tree."

His nobility of purpose, unflagging zeal in his undertakings, undaunted courage and unparelleled fortitude in critical moments, reluctance to see his benefactors in pain and the consequent sensitiveness, sense of gratitude towards those that do him good, be it small or great, enquiring spirit and search after religious truths, resistance of the most alluring temptations and a high degree of self-respect are prominently brought out by the novelist.

In fine, the lives of the hero and his beloved consort who is the polar star of his thought, form a repertory of models for both sexes.

The checkered life of *Arunachela Mudaliyar* who is the *Periavar* referred to in the major portion of the Novel reminds us of Alexander Selkirk left in the desolate isle of Juan Fernandez in the awe-inspiring adventures of Robinson Crusoe, and of the following memorable lines.—

"The soul, secured in her existence, smiles
At the drawn dagger, defies its point."—*Addison.*

"For blessings ever wait on virtuous deeds,
And though a late, a sure reward succeeds."—*Congreve.*

His unostentatious perseverance, unflinching forbearance under sufferings, prompt reconciliation to his lot, attributing to the Divine Will even the worst of human actions, never failing forgiveness, sobriety of thought, unassuming manners, skill to live *incognito* for several years undetected even by those that are nearly and dearly connected with him and magnanimity in thought, speech and action are clearly manifested in the Novel.

The universal truth intended to be inculcated by the singular lives of these three personages seems to be what is embodied in the following memorable lines :—

"Calamity is man's true touchstone."—*Beaumont.*

"The web of our life is of a mingled yarn, good and ill together."

"One sorrow never comes but brings an heir."—*Shakespeare.*

"The good are better made by ill,
As odours crushed are sweeter still."—*Rogers.*

Jaganada Mudaliyar is a character intended to be despised *in toto* as a scourge of mankind. The atrocities of his early life, the vortex of dissipation and the harpies of avarice to which he is subject and his heinous sins of omission and commission due to mammonism, cupidity and lewdness, and the wretched end he meets with are all illustrative of the incontrovertible truths embodied in the following extracts.—

"The child is the father of the man.' —*Wordsworth.*

"Ill habits gather by unseen degrees
As brooks make rivers, rivers run to seas."—*Dryden.*

"Our acts our angels are, or good or ill,
Our fatal shadows that walk by us still."—*Fletcher.*

"Punishment always attends the villain."—*Goldsmith.*

His habit of undervaluing the lives of others has led him to undervalue his own life and commit suicide unscrupulously.

Muthucumara Mudaliyar, Rathnam, Manickam, Kathan, Sathan, and *Soliappen,* and his comrades as well as *Kaliayee, Packiayee and Kanakambujam* also afford ample illustrations of the exquisitely beautiful lines quoted above in connection with *Jagannada Mudaliyar.*

Sathanantha Mudaliyar, Somasundaram, Annapurani, Selunkamalam, Sumpurnam and *Ambujam* are typical examples of patience, nobility and chastity.

Ranga Rao, whose position as Judge is due to the timely help rendered to him in his early days by his friend *Arunachela Mudaliyar* exhibits towards the latter "a grateful mind" which "by owing, owes not, but still pays,"—in the glowing language of Milton.

Somasundaram's detective skill which has been the means of bringing to light the several atrocities of *Jagannada Mudaliyar* by mustering at *Ranga Rao's* dhurbar all those male and female

characters who could depose before the assembly is unique and laudable. I need hardly dilate on the peculiarities of the other characters in the Novel, each of whom has a particular part to play, as they speak for themselves. While passing, it may be observed that the machinations practised by prostitutes and the tangled web they weave to ensnare dolts like *Rathnam* are depicted in the scene in which *Mathanaranjini* and her mother play a prominent part. The customs and manners of the *Nattu Kottai Chetties*, a trading and money-lending class of Southern India, are very well represented and explained. The most edifying portion of the Novel is the nineteenth chapter, which contains an exhaustive logical discourse on some of the most difficult religious problems, which sounds the knell of agnosticism and dispels scepticism, and is a true manifestation of the author's argumentative faculty, religious tolerance and catholic spirit, all of which redound much to his credit

The by-plays of wisdom such as those relating to *Chinthamoney*, *Manonmoney*, *Somasundaram* and others, as well as *Rathnam*'s sad disappointment at the kick he receives from *Dharmalingam* whom he fondly imagines to be *Mohanaranjini* and the several sallies of wit on the part of some of the characters, which are well worth the pen of a Reynolds, form as it were a fountain of sparkling laughter and bespeak the author's fertile imagination, genial humour, keen insight into the realities of human life and singular power of close observation.

The interludes relating to *Muthucumara Mudaliyar* and *Sathanantha Mudaliyar* and their family circles, the equilibrium of whose domestic happiness is sadly disturbed by irregularities of temper, fretfulness, peevishness, gross misrepresentation of facts and every other infirmity of the uneducated section of the Hindu fair-sex, seem to be intended to show that the *sweet home*, to which men retire from their labours abroad even as the bird after fluttering in the air all the day long descends into his nest in view to partake its genial warmth with his young ones, ceases to afford the much-longed-for felicity and proves to be a hot bed of thorns owing to the presence of shrews and viragoes. The whispers of

Chinthamoney, while in the disguise of a beau into the ears of *Manonmoney*, and the consequent change in the attitude of the latter all of a sudden at the sight of which *Somasundaram* is lost in bewilderment, and the mysterious disappearance of *Chatram Venkatachela Mudaliar* from his restaurant as soon as he hears from *Vijiarangam* that he is the son of *Kaliyanasundara Mudaliar* and other felicitous turns and incidents of this kind must keep the reader in continued curiosity and anxious suspense as to their solution until their key-note is furnished at the dhurbar, and remind us of the Works of Fielding and Samuel Richardson.

It is often said that the perfection of art is to conceal art, and this is no doubt realized in the Novel before us. Further expatiation on the several particulars and their elegance will have no meaning to one who has not had the patience to go through the whole work. So I abstain from dilating on them. Suffice it to say that the central idea pervading the whole Work is what the ever-living Dramatist and Poet of all ages has beautifully expressed thus.—

> " There's a divinity that shapes our ends,
> Rough-hew them how we will "

The dhurbar scene which is intended to disclose many of the otherwise inexplicable incidents is well worth the present year, which ushers into existence this Novel and which is an important epoch in the history of this country on account of His Imperial Majesty's Coronation Dhurbar.

It is highly gratifying to note that the author's clear perception of individuality which alone constitutes the real artist is palpable in his silent but eloquent delineation of the peculiarities of the several characters, which is accurate in consequence of its undraped and uncoloured truthfulness, that no part of this ponderous Novel is melodramatic, and that the style adopted by him is very simple but chaste and elegant, and free from the florid tinsel of novelty on the one hand and the rust of archaisms on the other, which the Tamil Prose works of even some of the modern writers bristle with, and is best suited to leisure-hour-reading of both sexes, paticularly, of the Hindu fair-sex, who find time hang heavily on them when they are relieved of their kitchen drudgery.

The happy puns and seasonable equivocations indulged in by some of the characters, the best of which is what is found in Vijiarangam's soliloquy near heaps of straw in a village overheard by his sweetheart, are worthy of being highly relished, as being comical or tragical according to circumstances, and bear testimony to the author's unique power of wielding the Tamil language to the best of his purpose as far as the genius of "That wonderful language almost every word of which is an example of the figure of Rhetoric known as *Paronomasia*" can allow, to quote the words of my late beloved and esteemed Professor P. Ranganada Mudaliar, M.A., a genius and one of the brightest luminaries of the Indian literary world, that set a decade ago alas! never to rise—all honor to his sacred and loving memory.

The author's knowledge of the Siva Sithantha Philosophy is seen in the nineteenth chapter, as the Lecturer referred to therein may be fairly presumed to express the author's views, and his scholarship in Tamil and ability to write it even in a literary style may be fairly guessed from the concluding portion of the Novel which serves as its epilogue.

One word of apology to the readers of this Introduction.

As the Novel seems to be intended to illustrate by concrete examples many a moral truth which forms its latent beauty, I have thought it desirable to elucidate those truths, which no one can express better than the standard authors themselves whose names are set down at the end of the several passages quoted. This, I hope, will afford sufficient justification for the quotations which, I am afraid, are rather too many.

I sincerely wish this beautiful work of no small originality every success, and trust that it will grace the hand of every Tamilian and for whom it is intended, and every library which can boast of good Tamil Works for the edification of both sexes and for their leisure-hour-reading.

T. BALASUNDARA MUDALIAR.

உ

சிவமயம்.

சூசிகை.

"உயர்மதிக் கூடலிலைந்த வொண்டீந்தமிழ்" என்று ஸ்ரீ மணி வாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளும் அருமை வாய்ந்த நந்த மிழ்ப்பாஷையிலே அறம் பொருளின்பம வீடென்னும் புருஷார்த் தங்கள் நான்கினையும் நமமனோரெய்துவதற்குச் சாதகமாயுள்ள நூல் கள் அளவிகந்திருக்கினும், மாயை வயப்பட்ட மானிடமனோதத்துவ லட்சணம் இனதெதென்பதையும், நல்லொழுக்கத்தால் விளையும இன் பம் இஃதென்பதையும், கூடாவொழுக்கத்தால் நேரிடும் துன்பம் இத்திறத்ததென்பதையும் எளிய வசனநடையில் கதாரூபமாக அசம் பாவிதமான கற்பனைசங்களை பொழித்துக்கூறும் நூல்களில் மிகச் சிறு பான்மையேயாதலின், ஸ்ரீமான் தி - ம - பொன்னுசாமிபிள்ளை யவர்களியற்றிய **"கமலாக்ஷி சரித்திரம்"** என்னும் இந்நூல் தமிழராம் இருபாலார்க்கும் அமுதுபோலினித்து நற்பயன் நல்கவல்லதென் பது திண்ணம்.

"மிதவையினேக்கமைத்துழலு மீன்சொலுன்போற்சவரும்
பதமிதெனப்பார்த்துழலும் பாழ்ங்கூற்றுண்மையினுலெவ்
விதமுமுடம்பொழியுமதன் மேற்புரிவதொன்றுமிலை
யிதமகிதமேயுயிர்க்குத் துணையாசவெய்திடுமே."

என்று திருப்பெருந்துறைப்புராணத்துட்கூறியபடி, உயிரினை நல் வினை தீவினை விடாதுபற்றிவருதலின், தீவினையை யறவே யகற்றி நல்வினையையே எந்நாளும் நாடுதல் வேண்டுமென்பதும்,

"காட்டியவந்தக்கரணமு மாயையிக்காயமென்று
சூட்டியகோலமுநானு வியங்கத்துறையிதனுள்
நாட்டியநான்றனக்கென்றே றறிவற்றநானிவற்றைக்
காட்டினின்றூட்டினையே பரமே நல்ல கூத்திதுவே."

என்று ஸ்ரீ தாயுமானவர் கூறிய அமுதவசனத்துக்கு இலக்கியமாகப் பல் வேறுகுணவிசேஷங்களமைந்த பல்வகை உயிர்களை இத்தமிழ்

நாடென்னும் நடனசாலையில் நிதரிசனமாகக்காட்டுதல் வேண்டு மென்பதும் இந்நூலாசிரியரது கருத்தென்பது கரதலாமலகம்போல் விளங்குகின்றது.

இதில் விவகரிக்கப்பட்டுள்ள ஆண்பாலார் பெண்பாலார் இவர் களுடைய குண வேறுபாடுகளும் செய்கைகளும் அவ்வவற்றால் அவரவர்களடையும் இன்ப துன்பங்களும் ஆங்காங்கு தொனிக்கும் நீதிகளும் சித்தசமாதானத்துடன் ஆதியோடந்தமாக இந்நூலை வாசிப்போர்க்கு நன்கு விளங்குமாதலின், அவற்றை யீண்டு தனித்தனியே விவரித்துக்காட்டல் மிகையென விடுக்கலாயிற்று. ஆங்கிலேய சிறந்த நூல்களிற் பயின்றவர்களுக்கு இந்நூலின் தன்மை இனைத்தென ஒருவாறு தெரிவிப்பான்கருதி ஆங்கிலேய பாஷையிலெழுதிய சூசிகையிலே சமயோசிதமான சிற்சில மேற்கோள்களெடுத்துதகரித்து ஞாபகமூட்டவேண்டியதாயிற்று.

செய்ந்நன்றியறிதல், அன்புடமை, பொறையுடைமை, தீவினையச்சம், ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை முதலிய நற்குணங்கள் விஜயரங்கம், அருணாசலமுதலியாராதி நல்லோர்பாலும், இந்நற்குணங்களே யன்றிக் கற்புடைமையும் சொல்வன்மையும் கமலாசூரி பாலும், கொலை, பிறர்மனை விழைதல், பிறர்பொருள்வெஃகல் முதலிய கூடாவொழுக்கங்கள் ஜெகநாதமுதலியாராதி தீயோர்பாலும் தெற்றென விளங்கும்.

" தீர்வருமின்னறமைச் செய்யினுஞ்செய்யசிந்தைப்
பேரருளாளர்த்தஞ் செய்கையிற் பிழைப்பதுண்டோ
கார்வளைமுத்தித்தன்னைக் கனலெழக்கலக்கக்கண்டு
மார்கலியமரருய்ய வமிழ்துபண்டளித்ததன்றே."

என்னும் இராமாயணச் செய்யுளுக்கு அருணாசலமுதலியாராதி சத்துவகுண சம்பன்னரும்,

" பிறர்க்கின்னமுற்பகற்செய்யிற்றமக்கின்னு
பிற்பகற்றாமேவரும்."

" மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழின்
அறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு."

என்னும் திருக்குறளுக்கு ஜெகநாத முதலியாராதி தமகுணவயப்பட்டவர்களும் நிதரிசனமாவதை இந்நூலில் வெள்ளிடை மலைபோற் காணலாகும்.

இவ்வரிய நூலின்கண் விளங்கும் நூலாசிரியருடைய கதாகற்பனாசக்தியும், சொல்வன்மையும் சாலவியக்கத்தக்கனவேயாம். நாத்திகம் பேசி நாத்தழும்பேறினரும் அங்கீகரிக்கற்பாலனவாயுள்ள நியாயங்களினுல் சுருதியுக்தியனுபவவாயிலாக 19-ம் அத்தியாயத்தில் நூலாசிரியர் விளக்கியிருக்கும் உண்மைகளும், ஆங்காங்கு விளங்கும் செம்மொழிச் சிலேஷையான உபயார்த்த சொற்றொடர்களும், யாவரிடத்துஞ் சகோதரவாஞ்சையை வளர்க்கத்தக்கதாய்த் தற்காலத்திலவசியம் ஒவ்வொருவரிடத்தும் அமைந்திருக்க வேண்டிய சமய சமரசஞானமும் நூலாசிரியருடைய அருங்கல்வியிப் புலமைக்கும் நுண்ணறிவுக்கும் பெருநூலாராய்ச்சிக்கும் நற்சான்றுகும்.

இவ்வரிய நூல் தமிழ்ச்செல்வர்களுக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்டமையால், இது தமிழராகிய ஆடவர்க்கும் மகளிர்க்கும் அஸ்தஷ்ஷணமாயும், நன்னூல்களின்சார்புபெற்ற பிரதி புஸ்தகசாலைக்கும் அணியாயுமிருக்குமாறு திருவருள் முன்னிற்க.

சென்னை,
1903ஆம்
ஜனவரிமீ 5உ.,

தண்டலம் - பாலசுந்தர முதலியார்.

சிவமயம்.

ம ா-ா-ஸ்ரீ திரிசிரபுரம் தி. முத்துகிருஷ்ணபிள்ளை அவர்கள்

(Assistant Inspector of Local Fund Accounts,
Accountant-General's Office, Rangoon.)

இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

திருவருணிறைந்தபரவெளிமறுகின்
முருகெனவெழுதருமிருசுடர்வான்மீன்
சுற்றெளிதுளக்கவாயிரமாமணி
நற்றேரருலவியநீரணிநங்கை
தன்குணமளவத்தவிலைவிளச்சு
மெண்ணருகலதிகழோர்மதிதுதலா
மும்பர்கல்லுறவுக்குரியமைபூண்ட
ஜம்புத்தீவின்றக்கணபாசத்
திலக்கியவிலக்கணமிலங்கியகடலுக்
கலக்கிமுகந்தோர்கவிமழையொழியப்
பண்படுசெந்தமிழ்ப்பயிர்தழைத்தோங்கும்
விண்ணுறுமுகிலோர்விதிமுறையேகிக்
குணக்கொடுகுடக்குக்குரைகடல்வாரிக்
கணக்கறச்சொரியக்கதிர்விடுப்பணையோடு
திருமகண்மைந்தன்றென்றற்றேரி
னறுமணமேற்றிநாணுக்களியுங்
கருப்பைவில்லுக்குங்கணைச்சுமலருங்
கரக்கவிடன்றருந்தண்ணிழற்காசூழ்
திரிசிரபுரத்திற்சீரணிமேழியர்
மரபின்மாதவப்பயனுலுதித்த
பொன்னுசாமிப்பிள்ளைதன்புகழை
யென்போலெளியரிசைத்திடலிழிவாம்
மன்னும்பொருளும்மகவுடன்கல்வி
யென்னுமூச்செல்வத்துளித்தைமாந்த
றொன்றிரண்டன்றிமூன்றுறன்மிக்கரிதாம்
பொன்னுடையோர்க்குப்புத்திரச்சோகம்

புத்திரருடையோர்பொருளுச்சழுவர்
வித்தையின்மிச்சோர்மிடிதுயர்ப்படுவர்
முச்செல்வத்தின்மூழ்குவர்சிலரே
யச்சிலரிற்சிறந்தருளுடைசீமான்
முயலும்வினையின்முடிவுகாண்மட்டு
மயிர்வின்றூக்கமளித்திடுமனத்தோன்
றன்மனவூக்கந்தளராச்கொள்கையின்
றென்பாலிசலுஞ்செந்தமிழ்க்கவிஞனாய்
வடமொழியிங்கிலிஷ்மற்றசிற்பாடை
திடமுணர்சைவசித்தாந்தவாதி
சுயமுயற்சியினூற்றுணாத்தனத்தவர்பாற்
பயன்றருசிறுவினையாதியிற்பயின்று
பிறையெனமுதிர்க்துதிவளர்பேபர்
கறன்வியாபீவிற்கஜான்ஜியாஞன்
வெண்ணீறென்றும்விளங்குநெற்றியன்
றண்ணளிநோக்சத்தடமுறுகண்ணன்
வினைக்கிடம்பயந்துவீழ்கருப்ச்குஞ்
சினக்குறிசற்றுந்தீண்டாமுச்சன்
புன்மொழிநீக்கிப்புன்னகைதிகழும்
மென்மதுரச்சொல்விளம்பிடும்வாயன்
பேரவைபுக்குப்பேசுழிவாக்குச்
சோராதீரச்சொன்னயசாலன்
வறியவர்குறையைவாரிச்செவியா
லெறியும்வள்ளண்மையேந்தியசையன்
கன்மனத்தவரைக்கனவிலுநினையா
நன்னெறிதனிலேநாட்டியநெஞ்சன்
நீதியோரெளியோரெனமதியாதவர்
வதிக்குமிடஞ்செலமறுக்காக்காலன்
நட்புச்சூரியன்நற்புகழுற்றோன்
நூட்பவறிவினன்நூன்முறைவாழ்வோன்
வையவனுபவம்மாண்புடனுணர்ந்தோன்
றுயரின்மாக்களயர்வறவாடுஞ
சதுரங்காதித்தகுவினையாட்டிற்
சதுரனெஞ்ஞான்றுந்தவறிற்சயத்தோ
னிரங்கூன்நேசன்பிரமதூத
னெனுமிருபத்திரிகையியற்றியமால்
செந்தமிணூட்டுச்செல்வர்சடங்கண்
மைந்தர்கள்பயிலவைத்தவோர்சழசந்

தழைத்துவிலேபெறத்தனஞ்சேர்வண்ணம்
விழைத்துதுரைத்தனவினைபயிலுஞ்சில
சற்சனர்தர்மச்சால்பொடுசேரச்
சுஜனரஞ்சனசபையெனுஞ்சுகிர்த
நாடகசபையொன்றிரங்கூஞட்டிச்
சேடியர்தமிழில்ஷேக்ஸ்பியர்கவிபல
பாரதமுதலாம்பன்னூலறையு
மாரியசரிதமனேகமியற்றி
வியனளியாடைவிசித்ரக்காட்சி
மயலளியிராகவாத்தியவிரப்பி
நாற்றிசைமெச்சும்பாரசிநாடகர்
காற்றெனவோடக்களித்திடுங்காலை
இங்கிலத்தறம்பொருளின்பந்தழைக்க
மூன்னூறோதியசாதையின்முறையை
தழுவாதிக்கமலாகூசிசரித
மெழுதியநூதனவியல்பின்வாய்மை
பழையனகழியப்புதியனபுகுதல்
வழுவலகாலவகையெனுமுணையால்
சேனல்ட்ஸாதியிங்கிலிஷ்கவிஞர்
மேனடியற்றிவிளங்குபன்னுவ
துள்ளமைவிவேசமுத்தியனுபவம்
விள்ளுங்கற்பிதவினுதவியல்பாய்ச்
சற்குணமாந்தர்சாரும்நெறியும்
பெற்றோருற்றோர்பிறரிடமொழுகும்
பான்மைபொறுமைபருத்தறிவிரக்கம்
மேன்மைமிடியிற்சிதருமதியுங்
தீக்குணஞ்சேர்சிந்தனைவிரிவிற்
போக்குந்திறனும்பொல்லாங்கிழைக்க
மோசச்செய்கையுமுற்றியகாலை
நாசக்கதினியநல்கும்விளைவும்
திலமிசைதிசழுளனுபவஞ்சேர்
மதியாயப்பகுப்பினையுணர்த்தி
நீதிவிதமாங்கற்பனைநீட்டித்
தேனையொழுகச்செய்தனனதனை
நானிலம்புகழ்ந்திடவிவன்
ரூமேபுசலுந்தாரணியோர்க்கே.

ஆசிரிய விருத்தம்.

காவலெனுந்தரு வேங்கித்தழைத்தினியசனியளிக்குங்கனிகொள்வ
ளவலுடனுலகனுருமோராணைதழுசவவரனேற்பானிந்
நாவலெனுங்கதைபலவாறுத்தியனுடவபுனைதூநலமேயோங்க
நாவலனுஞ்சிரபுரத்தோன்றிசபூடோன்னுமிவள்ளலகவின்ரூன்மாதோ

கற்பிலுயாசமலாகூசகதையனைமுதலிரண்டேடுசவனிப்போர்க
ளற்புதமாய்ப்புனைந்தபலசற்டனைபுடிசலுமர்ம்மறியுமட்டும்
னிற்பரேதம்வினைமறதூகாலலபாதனமிழந்துனித்தைநீங்கிப்
பொற்பரண்சூழ்சிரபுரத்துபடோனனுமாமிடபுவன்புசன்றடிரே.

பன்னுமிதிகாசபொருவிற்டனைருசோசதையுலகிற்டவேவுண்டிச்
சன்னலினுமினியசமலாகூசகதைதனைப்படித்துக்களித்தோரெல்லாம்
பொன்னிதவழ்ப்புயலோன்ருபூம்பொழில்சூழ்சிரபுரதத்துப்பொன்னுசாமி
பின்னுமொருசதையெழுதிவிடச்சாலுவென்றுசனிந்தியம்புவாரே.

இரங்கூன்
1903வது
பிப்ரவரிமீ 5வ

To

M.R.Ry. T. M. PONNOOSAWMY PILLAI AVARGAL.

DEAR SIR,

I have read with great pleasure your novel entitled "The History of Kamalatchi." It gratifies me to think that after all the Tamil world has the happiness of welcoming a most desirable book that the Tamil literature should boast of having a fiction a tonce realistic and literary. The Tamil *Saraswati* has been much abused, of late, by the advent of highly romantic novels on the one hand and of hatefully vulgar on the other. "Kamalatchi" is a vivid narration of incidents that are probable in the every day life of the Tamilian nation written in a style which, in the words of Dr. Johnson, is simple but not coarse, elegant but not ostentatious. The plot is complex enough, and the reader is held in suspense till he reaches the last chapter of the book. The morals of the book far from being objectionable are highly praiseworthy and make the book suitable for both sexes. The discussion between the lecturer and Vijayarangam in the nineteenth chapter is a regular intellectual feast. The Lecturer's reasoning is always logical and his illustrations are apt and explanatory. The other chapters have their own merits and importance. In short it my be no exaggeration to say that your novel will afford pleasure to a man of any turn of mind intellectual, devotional or philosophical, as you have displayed the workings of all kinds of minds in all kinds of circumstances. Finally I have only to note that the fact of your book being introduced to the world by such an eminent scholar as Mr. T. Balasundaram Mudaliar Avl., is a sufficient testimony to the superior merits of your book.

Very cordially, yours,

S. ANAVARATHAVINAYAKAM PILLAI, M.A, L.T.,

Madras Christian College.

MADRAS,
23-3-03.

மஹாஸ்ரீ, தி. ட. டொன்னுசாமி பிள்ளை அவர்கள்
திவ்ய சமூகத்துக்கு.

அன்புடை ஐய,

தாங்கள் எழுதிய "கமலாக்ஷி சரித்திரம்." என்னும் நவீனகத்தை வாசித்து மிகக் களிகூர்ந்தேன். சென்ற சில வாண்டுகளாகத் தமிழ் நூல்கள் எழுதத் தலைப்பட்ட புலவர்கள் நவீன வழிகளிற் புகுந்து உண்மை நெறி பறியாது தமிழணங்குக்குத் தவறிழைத்தனரே யன்றித் தமிழ் பாஷைக்கும் நன்மை புரிந்தாரல்லர். விசேஷமாய் உலகத்து நடவாத முழுப்பொய்க்கதைகளைக் கட்டி நவீனகமிதுவென விடுத்தார் ஒரு சாரார். மற்றொரு சாரார் கதை கல்லதேனும் தமிழ்மொழியிற் சாமான்ய தேர்ச்சி யுடையவனும் வாசிக்கக் கூசும் வழுநடையில தம நூல்களை யியற்றினர். இவ்விருதிறத்தாரேயன்றி அருந்தமிழ் மொழிகளை யொருங்கு கூட்டிக் கதை நயமின்றிப் பாஷை யாடம்பரத்திற்காகத் தம்மைத் தாமே மெச்சி நூல் செய்தார் இன்னுமொருசாரார். இவை யெல்லாம் தெய்வாதீனமாய் நன்மாந்தரறிவைப் பற்றுதொழிந்தன. தங்களுடைய "கமலாக்ஷி" அத்தகைய பகுதிகளுட்படாது, உயர்ந்தவொழுக்கம் கற்பிக்கும் கதை யமைந்ததாய் எளிய இனிய தமிழ் நடையிலெழுதப்பட்டு நல்லுணர்வுடைய பண்டிதர்க்கும் நல்லுணர்வை நாடும் பாமரர்க்கும் ஸ்திரீ புருஷரென்னு மிருபாலார்க்கும் இனிமை பயந்து பயன்படுவதாகின்றது. கதையை வாசித்தறிவோர் – அது பல தலைப்பட்டு இறுதியத்தியாயத்தில் வருது முடிவெய்தும் மாட்சியையும், நிகழும விஷயங்களுளொவ்வொன்றும் தமிழ்க் குடும்பங்களில் நிகழத்தக்கவைகளே யென்னு முண்மையினையும் விபவாமற்போகார். பதினெட்டாம அத்தியாயத்திலே பிரசங்கியார்க்கும் விஜயரங்கத்துக்கும் நடக்கும் சமபாஷணை – சாஸ்திர விசாரணையினைத் தருக்க நெறியிற் பிறழாது செய்யும நன்மையினையும் அதன் உயர்வினையும் நன்கு காட்டுகின்றது. நவீனக நூல்களுள் இதனை யொத்தன இன்னும் ஒன்றிரண்டற்குமேற காண்டலரிது. இந்நூலின் சிறப்பை யிதனை விஸ்தரித்துச் சொல்லவேண்டியதுதானெற்றுக்கு? சென்னையிற் சிறந்த புலவரு ளொருவராகவிளங்கும் ஸ்ரீமான் தண்டலம்-பாலசுந்தரமுதலியார் அவர்கள் தங்கள் நூலுக்கு நூன்முக முரைத்தலே அது சாலச்சிறந்தநூல் என்பதற்குப்போதிய சான்றுகுமே.

சென்னை,
23-3-03.

இங்ஙனம்,
S. அனவரதவிநாயகம் பிள்ளை. M.A., L.T.

இருட்டில் பார்க்கும்பொழுதே குழந்தை அதிக சுதாரமாக இருக்கிறதே!
இதைக் கொல்லத் துணிந்தவர்களுடைய மனம எப்படிப்
பட்டதோ? (பெம்-பக்கம் பார்க்க)

கடவுள் துணை.

கமலாகூி சரித்திரம்.

முதல் பாகம்.

விநாயகர் துதி.

வெண்பா.

சீர்பூத்த நீடுலகிற் செல்வி கமலாகூி
போபூத்த நற்சரிதம் பேசிடவே—வர்பூத்த
அம்பிகையா வன்ற வருளோங் கரநால்வாய்த்
தும்பிமுகன் பாதந் துணை.

1—ம் அத்தியாயம்.

திருவருளை முன்னிட்டு நாம் எழுதும் இக்கதை பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பற்றியது. இங்கிலீஷ் 1830 - ம் வருடத்திற்குத் தமிழ் விரோதி வருஷம் தைமீ 10உ இரவு பத்துமணிக்கு ஆகாயவாணி வைரங்கள் பதித்த நீலவஸ்திரத்தை உடுத்திருப்பதுபோல், நீல நிறத்தைச் சொண்ட ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்து வழிப் போச்சர்களுக்கு வழிகாட்டவும், அவர்களுக்கு ஆயாஸம் தோன்றாமல் இருக்க வாயுபகவான் சிறுகாற்றுவீசி உதவிபுரியவும், வனப்பெண் பல வித புட்பங்களிலுள்ள நறுமணத்தைக் கொடுத்து உதவ எண்ணங் கொண்டிருக்கவும், அதைச்செடுக்க எண்ணங்கொண்டதுபோல் மயிலாபுரி என்கிற நகரத்தை அடுத்த காட்டிலுள்ள பெரிய பல விருக்ஷங்கள் ஆகாயத்தை மறைத்து நக்ஷத்திரங்களுடைய பிரகாசத்தைத் தடுத்துத் தங்களை அடுத்திருக்கும் இருளுக்கு உதவி புரிய எண்ணங் கொண்டிருப்பதுபோல் அடர்ந்திருந்தன. இவ்விருண்ட காட்டில்

இருவர் அதிவேகமாக நடந்து நெடுந்தூரம்போனபின் இருவரில் ஒருவர் தம்மோடு வருகிறவரைப்பார்த்து, "பெண்ணே ! இனிமேல் நாம் துரிதமாகப் போகவேண்டிய அவசியமில்லை, மெதுவாகப் போகலாம்; உன்னால் வேகமாக நடந்துவர முடியவில்லை யல்லவா?" என்று நகைத்தான்.

பெண்.—தங்களுடைய இஷ்டம்போலவே செய்யலாம், அத்தான்.

வாலிபன்.—(சிரித்துக் கொண்டே) ஆ ! ஆ ! என்ன ! அத்தானா ! அத்தான் என்ற வாய்க்கு முத்தம் கொடுக்காமல் போகலாமா ? முத்தம் கொடுப்பாய் என் கண்ணே ! நான் உன்னை இரண்டொரு தடவையில் பார்த்திருந்தும் உன்னோடு வார்த்தையாடினதேயில்லை. (என்று முத்தம் கொடுத்தான்.)

பெண்.—யான் தங்களை இரண்டொரு தடவையில் பார்த்திருப்பதாக எனக்கும் ஞாபகமிருக்கிறது.

வாலிபன்.—அங்கிலேயரைப்போல் புருடர் பெண்களோடு வார்த்தையாடி மனச்சம்மதங் சேட்டுகொள்வது நமக்குள் வழக்கமில்லை யாதலால், நம் இருவர் மனதின் சம்மதம் அறியாமலே யாவும் முடிவுபெற்றிருக்கின்றன. ஆயினும், இப்பொழுது நேரிட்ட விபத்தால் நாம் இருவரும் பேசிக்கொள்ள நேர்ந்ததைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன். ஆனதால், என் விஷயத்தில் நீ கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும்.

பெண்.—தாங்க ளிவ்விதங் சேட்பது நியாயந்தானா ? (என்று நகைத்தாள்.)

வாலிபன்.—ஏன் நியாயமில்லை ? உன்னோடு வார்த்தையாடிய சில நேரத்திற்குள் உன்னை உண்மையாக இச்சிக்கிறேனென்று கடவுளுக்குமுன் சொல்லத்துணிவேன். உன்னுடைய மனதும் அதுபோ லிருந்தால்லவா என் மனம் சந்தோஷம் அடையும் ?

பெண்.—என் கருத்தை நான் சொல்லாமலே தாங்கள் அறிந்துகொள்ளக் கூடாதா ? ஒருவர் ஒரு பெண்ணுக்கு ஓராபரணத்தைக் கொடுத்து அதை அணியும்படிச்செய்தால், ஆபரணம் கொடுத்தவரைப் பெண்விவாகம் செய்துகொள்ளவேண்டியது கடமையாகிறது. பெற்றோர்களும் பொருளையும் ஆபரணத்தையும் கவனிக்கிறார்கள். வழக்கத்திலும் பிள்ளைவீட்டார் விவாகத்துக்குப் பெண்தேடிப் பெண்வீட்டாரை அடுத்துப் பெண் கொடுக்கிறீர்களாவென்று சேட்பதும், பெண்வீட்டார் பிள்ளைவீட்டாரை என்ன ஆபரணம் போடுகிறீர்களென்றும், பெண் வீட்டார் தனவந்தராயிருந்தால் நீங்கள் என்ன ஆபரணம் போடுவீர்கள் ? என்ன சீதனத்தோடு விவாகம் செய்துகொடுப்பீர்களென்றும கேட்பதும் தங்களுக்குத் தெரியாததல்லவே. பெரும்பாலும் ஆபரணத்திற்கும் பூஸ்திதிக்கும்

ஆசைப்பட்டு மாப்பிள்ளே கிழவனுலும் இரண்டாவது மூன்ருவது நான்காவது அல்லது எத்தனேயாவது தாரமாலுலும் பெண்களேக்கொடுத்து விடுகிருர்கள். பெண்கள் கருத்தைக் கேட்டா விவாகம் முடிக்கிருர்கள் ? இல்லே. இது விஷயத்தை நன்ருயோசிக்கின் ஆபரணம் போட்டவர்களுக்கே பெண்கள் சொந்தமாகிருர்கள்.

வாலிபன்.—என் கண்மணி ! நீ சொல்வதன் கருத்து இன்னதென்று எனக்கு விளங்கவில்லே. ஆபரணங்களொன்றும் அனுப்பாமற்போன காரணத்தை யெடுத்துக்காட்டி என்மேல் குற்றஞ சுமத்தவா இவ்விதம் சொல்லத் துணிந்தாய் ? நான் ஒரு நகையும் போடக்கூடாது. எல்லாம் தானே போட எண்ணங்கொண்டிருப்பதாக உன் தந்தை சொல்லியனுப்பியதால் நான் ஆபரணம் ஒன்றும் அனுப்பவில்லே. அது விஷயத்தில் நீ கவலேகொள்ளவேண்டாம்; உனக்கு வேண்டிய ஆபரணத்தைக் கொடுக்கத் தடையில்லே.

பெண்.—தாங்கள் தங்களே மறந்து பேசுகிறீர்கள்.

வாலிபன்.—என் இன்பமே ! இன்னும் என்னே அவமானத்தி லமிழ்த்தாமல் என் விஷயத்தில் கொண்டிருக்கும் கருத்தைச் சொல்லவேண்டும்.

பெண்.—தங்களே அவமானப்படுத்த நான் எண்ணம் கொள்ளவில்லே. உலகத்தில் பெண்களுக்கென்று போடும் ஆபரணம் ஆயிரம் பதினுயிரம் பெறக்கூடியதாயிருக்கலாம். தாங்கள் எனக்களித்த ஆபரணத்தின் விலே மதிக்கத்தக்கதா ?

வாலிபன்.—ஏதோ ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறுய். நானென்ன ஆபரணத்தைக் கொடுத்தேன் ?

பெண்.—உலகத்தில் பெண்களிச்சிப்பது ஆடையாபரணமேயாலுலும், அவர்களுக்குச் சிறந்ததும் அழியா ஆபரணமுமானது சற்பு. அச்சற்பைக்காப்பாற்றிய உமக்கு என்ன கைம்மாறிருக்கிறது ! உடல்பொருளாவி என்னும் மூன்றையும் தங்களுக்குத் தத்தஞ் செய்கிறேன். தாங்களென் மேல் கிருபை கூர்ந்து அவற்றை ஒப்புக்கொள்ளவேண்டும்.

வாலிபன்.—ஆ! சற்று பேசாதிரு. இஃதென்ன சிறு குழந்தையின் அழுகுரல் சமீபத்தில் கேட்கிறது ! பெண்மணி! சற்று இவ்விடத்திலிரு. நான் பார்த்து வருகிறேன்.

என்று தன்னுடன் வந்த பெண் மறுமொழி சொல்லுமுன் காட்டுக்குள் ஓடினுன். அங்கு நிகழ்ந்ததாவது .—அக்காட்டுக்குள் குழிவெட்டிக்கொண்டிருந்த காத்தன் என்பவனுக்கும் ஒரு சிறு குழந்தைக்குக்காவலாயிருந்த சாத்தன் என்பவனுக்கும் நிகழ்ந்த சம்பாஷணை:—

சாத்தன்.—அடே காத்தா ! இந்தக்கிச்சான் தூங்குகிறதே, இதை இப்படியே புதைத்துவிட்டாலென்ன ?

காத்தன்.—உயிரோடு புதைத்தால் அது பேயாசவந்து தொந்தரை செய்யு மென்பார்களடா சாத்தா !

சாத்தன்.—பேயாசவந்து தொந்தரை செய்வதைப் பின் பார்த்துச்கொள்ள லாம். வேலையை முடித்துவிட்டு நமக்குக் கிடைக்கப்போகும் வெகுமதி யைப் பெற்றுச் செலவதே உத்தமம் ; விரைவில் குழிவெட்டு.

காத்தன்.—ஆம், இன்னும் சற்று நேரத்தில் வெட்டிவிடுகிறேன். கிச்சானை முடித்துவிட்டு வந்தால் நமக்கு ஆளுக்காயிரம் ரூபாய் கொடுப்பேனென்று சொன்னாரே ! அவர் டெயரென்ன ? அவர் பெயர் எனக்கு ஞாபகத்தில் நிற்கிறதில்லை. அவர் சொன்ன பிரகாரம் பணம் கொடுப்பாரா ?

சாத்தன்.—அடே மடையா! உனக்கு இதுவரையில் ஆயிரந்தரம் அவர் பெயரை நினைக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். ஏன் அவர் பெயரை அடிக்கடி ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறாய் ? அவர் சொன்ன சொல் பிசகார். நமக்கு ஆளுக்கு ஐந்நூறு ரூபாய் இப்பொழுது கொடுத்தலே யன்றிச் சில மாதங்களுக்குமுன் அவரால் கிடைத்த வெகுமதியையும் மறந்துவிட்டாயா ? அவர்மேல் உனக்குச் சந்தேகம் வருவதற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை.

காத்தன்.—அப்பொழுது கொடுத்தார்; இப்பொழுது கொடுக்கிறாரோ இல்லையோ ! என்னமோ பார்த்துக்கொள்ளலாம். பேச்சின் பிரகாரம் கொடுக்காமல் ஏமாற்றப் பார்த்தால் அவரையும் குழியில் வீழ்த்தவேண்டியதே !

சாத்தன் தன்னிடத்திலிருந்த விளக்கைச் சமீபத்தில் கொண்டு போய் குழந்தையைப் பார்த்தான். அக்குழந்தை தூசத்தில் புன்சிரிப்பைக் காட்டியது. ஆ ! ஆ ! சிரிக்கிறாயோ. சிரிப்பு கூடவா வருகிறது ? இன்னும் சற்று நேரத்தில் விடாது சிரிப்பாயென்று, விளக்கை அருகில் வைத்தான். அப்பொழுது வண்டொன்று விளக்கின்மேல் மோதிக் குழந்தைமேல் விழுந்து கடித்துவிட்டது. குழந்தை விழித்து வீர்வீரென்று அலறி யழுதுகொண்டிருந்தது. சாத்தன் குழந்தையை ஒயப்படுத்தச்செய்த முயற்சி யெல்லாம் பயன்படாமற்போயிற்று.

காத்தன்.—அடே ! சாத்தா ! என்னடா, மூளையானை அழவிட்டு விட்டாய் ?

சாத்தன்.—அடே! நானென்ன செய்வேன்? அது காட்டெலியை ஒட்டிவிடப் பெருஞ்சத்தம் போடுகிறது. இதோ ஒரே தடவையில் ஒயப்படுத்தி விடுகிறேன் பார்,

என்று குழந்தையை நிலத்தில் வைத்துத் தன்னிடத்திலிருந்த வாளை உறையிலிருந்து உருவி வெட்ட வோச்சினன். அவ்வாறு ஓச்சிய வெட்டு விழுமுன் குழந்தை அழுகுரலைக் கேட்டுச்சென்ற வாலி பன் தன்வாளால் சாத்தன் கையிலிருந்த வாள் விடுபடத் தட்டி விட்டுச் சாத்தனையும் தலையில் கூரில்லாத பக்கந் திருப்பி வெட்ட அவ்வடியால் சாத்தன் மரண மூர்ச்சையோடு நிலத்தில் வீழ்ந்தான். அருகிலிருந்த சாத்தன் சாத்தனை அடித்த வீரனை முன்பின் பார்க்காமல் ஓடிவந்து தன் வாளால் வெட்டினன். வாலிபன் அவன் வாளையும் தட்டிவிட்டு அவன் தலையிலும் வாளின் பின்புறத்தினல் ஓங்கியடிக்க, அவனும் நிலத்தில் சாயவே, அழுது கொண்டிருக்கும் குழந்தையைத் தூக்கி மார்போடணைத்து அழுகையைமாற்றி அவ்விடத்தை விட்டு நீங்கினன். வனத்தில் தனித்துநின்ற பெண் தன்னோடு வந்த வாலிபன் தன்னைத் தனித்திருக்க விட்டுச் சென்றனே யென்று மிக்க பயத்தோ டிருக்கையில், வாலிபன் வருகிற சந்தடியறிந்து எதிர்கொண்டு சென்றாள்.

வாலிபன்.—என்கண்மணி ! நான் சிறிதுநேரம் தாமதித்திருப்பேனுகில் இச்சிசுவின் உயிர் நீங்கியிருக்கும். அவ்விடம் இருந்த இரண்டு பாத சரில் ஒருவன் இச்சிசுவைக் கொலை செய்யப்போகும் சமயத்தில் தெய் வச் செயலால் நான் தோன்றச் சிசுவின் உயிர் தப்பியது. அப்பாவிக ளிருவரையும் காயப்படுத்தாமல் மரண மூர்ச்சையில் விட்டு வந்தேன்.

பெண்.—குழந்தையை என்னிடத்தில் கொடுங்கள் (என்று குழந்தையை வாங்கி முத்தமிட்டு) ஐயோ!இவ்விருட்டில் பார்ச்சும்பொழுதே குழந்தை அதிக சுந்தரமாக இருக்கிறதே! இதைக் கொல்லத் துணிந்தவர்களு டைய மனம் எப்படிப்பட்டதோ ? இச்சிசுவைக் கொல்லத் துணிந்த பாவிகள் யார் என்று கண்டுகொண்டீர்களா ?

வாலிபன்—பெண்மணி! நான் அவர்களை இன்னுரென்று சொல்லச் சக்தியற்றிருக்கிறேன். அவ்விடமிருந்த விளக்கின் ஒளியால் அவர் கள் எமதூதர்போல் கறுத்த மேனியும் இளம்பிராயமுமுள்ள பாதக ரென்று காணப்பட்டது. நாம் இனி இங்கு நின்றுகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை வருக. (என்றழைத்துச் சென்றான்.)

பெண்,—ஐயோ ! இஃதென்ன ! நமக்கு பின்னுல் அனேகர் ஓடிவருவது போல் சந்தடிகேட்கிறதே! அவர்களிடத்திலிருந்து எவ்வாறுதப்பி உய் யப் போகிறோம்! நாம் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் ஓடிவிட்டா லும் அல்லது ஒளித்திருந்தாலும் உத்தமம்.

வாலிபன்.—நாம் பயந்து ஓடவேண்டிய அவசியமில்லை. உன்னைக் கொண்டு போன திருடரே வேறு பலங்கொண்டு என்னோடு எதிர்க்க வருவது போல் காணப்படுகிறது. நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்; எத்தனை பேர் வந்தாலும் வரலாம். என் கைவாளுடைய பலம் இருக்கும் வரையில் உன்னருகில் ஒருவரையும் நெருங்க விடமாட்டேன்.

இவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டு போகும்பொழுது ஐந்து வீரர்கள் இவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அப்பெண் மிக்க பயங் கொண்டிருப்பதைக் கண்டு, வாலிபன் நீ அஞ்சவேண்டாம்; நமக்கு ஜெயம் சித்திக்க எல்லாம் நமக்கு அனுகூலமாக இருக்கிறது; இடமும் மரங்கள் இல்லாமல் வெளியா யிருக்கிறது; நகூத்திரங்களுடைய பிரகாசத்தால் வந்தவர்களை எமலோகம் குடிபுகுத்திவிடுகிறேன் பாரென்று வாளை உருவிக்கொண்டு வந்தவர்களோடு எதிர்த்தான்.

வந்தவர்களி லொருவர் அப்பா! என்னருமை மருமகனே! நாங்கள் உன் தைரியத்தையும் வல்லமையையும் அறிந்து கொண்டோம். நாங்கள் வரும் வழியிலே வண்டி குடைகவிழ்ந்த சமயத்தில் உதவி செய்ய வந்தவர்போல வந்து என் மகளைக் கொண்டுபோன திருடர்களை உன் வாளால் வென்று என்மகளை மீட்டுவந்த உன் வல்லமையை மீண்டும் காட்டவேண்டியதில்லை. நீ செய்த உபகாரத்துக்குப் பிரதிபல னென்ன செய்யப்போகிறேன் என்றார். மற்றொருவர் மைத்துனரே! உமக்கு என் தங்கையைக் கொடுப்பது சம்மதமில்லாதிருந்தது; இன்று உம்முடைய தைரியத்தையும் வல்லமையையும் கண்டபின் என் தங்கைக்குத் தகுந்த நாயகன் நீரே யன்றி உம்மைவிட வேறு யாரிருக்கிறார்கள் என்றார். மற்றொருவர் இப்பெண் மணிக்கு இப்புருடன் நாயகனைக் கிடைத்ததால் இவளை பாக்கியவதி என்றார். இவ்விதம் இவ்விருவர்களையும் பலவிதம் புகழ்ந்து வார்த்தை யாடிக்கொண்டே தங்க ளிருப்பிடமுற்றுக் குறித்த முகூர்த்தத்தில் இவ் விருவருக்கும் விவாகச்சடங்கை நிறை வேற்றினார்கள்.

2—ம் அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் குறிப்பித்த சம்பவம் நேரிட்டு இருபது வருடங்களாயின. இங்கிலீஷ் 1550-ம் வருடத்திற்குத் தமிழ் சௌமிய வருடம் தைமாதம் முதல் வாரத்தில் மயிலாபுரியிலே வழக்கமாகக் கூடுஞ் சந்தை கூடி ஜனங்களதிகரிப்பால் பேரிரைச்சல் உண்டாகியது. இந்த ஜனக் கூட்டத்தின் வேடிக்கையைப் பார்க்கவந்த இரண்டு வாலிபர்கள்

கமலாக்ஷி தன் முந்தாணையால முகம் கை காலெல்லாம் துடைத்து விசிறிக்கொண்டே ஓர் வண்டி கொண்டு வரும்படி கூலியாளை அனுப்பினாள். (8ம்-பக்கம் பார்க்க.)

தூரத்தில் நின்று சந்தைக்குவந்த பெண்பிள்ளைகளைப் பார்ப்பதும், ஏளனம் செய்வதும் பரியாசமாகத் தாங்களிருவரும் பேசிக்கொள்வதுமாகக் காலங்கழித்துக் கொண்டிருச்கும்பொழுது, எலுமிச்சம் பழம்போன்ற நிறமும், பரந்த முகமும், பெரிய நேத்திரங்களும், சுறுத்தடர்ந்து வளர்ந்த புருவமும், அகலமான நெற்றியும், நீண்ட நாசியும், சிறுத்த வாயும், சிவந்து சிறுத்த உதடும், கிஞ்சித்துக் கதுப்புள்ள கன்னமும், மிகவும் நீண்டிராத தாடையும், வெண்மையான முத்தை நிகர்த்த பல்வரிசையும், பருத்த தனங்களும், சிறுத்த இடையும், நீண்ட கூந்தலும், மிகவும் பருத்திராத தேகமும், பதினேழு அல்லது பதினெட்டு வயது இருக்குமென்று மதிக்கத்தகுந்த ஒரு பெண் தோன்றிக் கடைகளில் தனக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிக்கொண்டிருந்தாள். மேற் சொன்ன வாலிபரிலொருவன் மற்றவனைப் பார்த்து இப்பெண்ணைப் போல் சுந்தரமுள்ளவளை நானெங்குங் கண்டதில்லை யென்றான். மற்றவன் இவளைக்கூடிச் சுகத்தை அனுபவிப்பவனே பாக்கியவான் என்றான். அத்தருணத்தில் கடையில் சாமான் வாங்கிக்கொண்டிருந்த பெண் தோளின்மேல் சந்தைக்கு வந்த மற்றொருபெண் கையை வைத்து, கமலாக்ஷி என்றாள். அவள் திரும்பிப் பார்த்து ஆ ! வனசாக்ஷி நீயுமா இன்று சந்தைக்குத் தனித்து வந்தாய் என்றாள்.

வனசாக்ஷி.—ஆம் கமலாக்ஷி ! என் தாயார் சந்தைக்குவந்து வேண்டியதை வாங்கி வந்தார்கள். கற்பூரம் வீட்டில் இல்லாமற்போனதை நான்சொல்ல மறந்து அதை வாங்கிப்போகவந்தேன். நீ என் இன்று தனித்துச் சந்தைக்கு வந்தனை ?

கமலாக்ஷி.—என் தாயாருக் கின்று தேக அசௌக்கியமாயிருந்ததால் அவர்கள் என்னோடு வருகிறேன் என்றதையும் தடுத்து வந்தேன்.

வனசாக்ஷி.—இன்னும் சாமான்க ளதிகம் வாங்கவேண்டியதிருக்கிறதா ?

கமலாக்ஷி.—எல்லாம் வாங்கிவிட்டேன். வருக. வீட்டுக்குப் போகலாம்,

என்று மிக்க நேசமாய் வார்த்தையாடிச்கொண் டிருவரும் சந்தையைவிட்டு நீங்கினார்கள். சந்தை கூடிய இடத்துக்கு அரைமைல் தூரத்தில் ஓர் மரத்தடியிலே வாலிபத்தில் சுந்தரராக இருந்திருப்பாரென்று சொல்லத் தகுந்த ஒரு விருத்தாப்பியர் மிகவும் மெலிவுற்றும் இளைப்படைந்தும் விழுந்திருந்தார். அவரைச்கண்ட கமலாக்ஷியும் வனசாக்ஷியும் பரிதாபமுற்று விருத்தாப்பியர் அருகில்சென்று பார்த்து, ஐயா! தங்களுக்கு என்னமாயிருக்கிறது என்று மெல்லெனத்தட்டிக் கமலாக்ஷி கேட்டாள். கண்களை மூடிக்கொண்டிருந்த பெரியவர் விழித்துப்பார்த்து தண்ணீரென்றார். உடனே கமலாக்ஷி கூலியாள் தலையிலிருந்த கூடையை இறக்கி ஒரு தேங்காயையுடைத்துத் தண்ணீரை விருத்தாப்பியருச்குக் கொடு

த்தவுடன் முகமெல்லாம் வெயர்த்தது. கமலாக்ஷி தன் முந்தானையால் முகம் கை காலெல்லாம் துடைத்து விசிறிக்கொண்டே ஓர் வண்டி கொண்டு வரும்படி கூலியாளை அனுப்பினுள். கமலாக்ஷியின் எண்ணம் அனுகூலப்படக் காலியாகப்போகும் வண்டியொன்று சமீபத்தில் கிடைத்தது. மூவரும் விருத்தாப்பியரை வண்டியிலேற்றி வண்டியை மெல்லநடத்திக் கொண்டு வீட்டை நெருங்கினவுடன் கமலாக்ஷி வண்டியைவிட்டு முன்பாக ஓடி வீட்டுக்குள் நுழைந்து தன் தாயை கட்டிப் பிடித்துக்கொண்டு, அம்மா! என்னைக் கோபிக்காமல் எனக் கோர்வரம் கொடுக்கவேண்டும் என்றுள். கமலாக்ஷியைப்போல் சுந்தரமும் ஏறக்குறைய நாற்பது வயதுமுடைய தாய் செழுங்கமலம், மகளின் கன்னத்தில் முத்தமிட்டு உன்னை ஏன் கோபிக்கவேண்டும்? என்னவரங் கேட்க வந்தாய்? சொல் வாய் என் கண்மணி என்றுள்.

கமலாக்ஷி — அம்மா! சந்தையிலிருந்து திரும்பிவரும்பொழுது சாலை மரத்தடியில் ஒரு விருத்தாப்பியர் விழுந்து கிடப்பதைக்கண்டு நானும் வனசாக்ஷியும் அவரை வண்டியி லேற்றிச்கொண்டு வந்தோம். அவரை யழைத்து நமது வீட்டில் வைத்து இளைப்பாற்றி யனுப்ப இஷ்டங்கொண்டு தங்களுடைய உத்தரவைக் கேட்க ஓடிவந்தேன். தங்களுக்குச சம்மதமில்லாமற்போனால் வனசாக்ஷி தன்னுடைய வீட்டுக்கு அவரை அழைத்துக்கொண்டு போகிறதாகச் சொல்லுகிறுள்.

மகள் சொல்லிய வார்த்தையைக்கேட்ட செழுங்கமலம் விடை கொடாமல் வெளியில் ஓடிவந்து வண்டியை நிறுத்தினுள். தன் தாயாரின் குணத்தை நன்றாயறிந்த கமலாக்ஷி விருத்தாப்பியரைப் படுக்கவைக்கக் கட்டிலில் பஞ்சணை போட்டுச் சித்தஞ்செய்து தன் தாயாரிடஞ் சென்றுள். விருத்தாப்பியரைத் தன் வீட்டில் விட்டுப்போகும்படி வனசாக்ஷியைச் செழுங்கமலம் வேண்டியபடியால், அவளும் அதற்கு உடன்பட்டனள். விருத்தரை வீட்டிற் கெடுத்துக்கொண்டுபோய்க் கமலாக்ஷி அமைத்து வைத்திருந்த படுக்கையில் கிடத்தி வனசாக்ஷியும் செழுங்கமலமும் விசிறிக்கொண்டிருந்தார்கள். கமலாக்ஷி கூலியாளுக்கும், வண்டிச்சாரனுக்கும் சொடுச்சவேண்டியதைக் கொடுத்தனுப்பிவிட்டுச் சமையலறைக்குள் நுழைந்து விரைவில் கஞ்சி காய்ச்சிக் கொண்டுவந்து தன் தாயாரிடத்தில் கொடுத்தாள். செழுங்கமலம் பெரியவரைத்தூக்கி உட்காரவைத்துக் கஞ்சி குடிக்குமபடி வேண்டினுள். பெரியவர் கொஞ்சம் கஞ்சி குடித்தவுடன் இளைப்பினுல் தலையணைமேல் சாய்ந்து அயர்ந்து நித்திரைபோனுர். செழுங்கமலம் தன் மகளைப்பார்த்து, அம்மா! நீ விரைவாய்ச்சென்று வைத்தியரை யழைத்துவா என்றனுப்பினுள்.

கமலாக்ஷியும் விரைவி லழைத்துவருவதாக வாச்சளித்துச் சென்று சில நிமிஷத்தில் திரும்பிவந்தாள்.

செழுங்கமலம்.—வைத்தியரை யழைத்துவரச் சொன்னேனே, எனம்மா வந்துவிட்டாய் ?

கமலாக்ஷி.—நம்முடைய நற்சாலம் வைத்தியர் அழையாமலே நம்முடைய வீட்டை நாடிவருகிறார். இதோ அவரும் வந்துவிட்டார்.

செழுங்கமலம்.—அண்ணு ! இந்தப் பெரியவரைப் பாருங்கள். வியர்வை அதிகப்படுகிறதைப் பார்க்க எனச்குப் பயமாக இருக்கிறது.

வைத்தியர்.—(கையைப்பிடித்துப் பார்த்துக்கொண்டு) இப்பெரியவர் யார் அம்மா ?

செழுங்கமலம்.—தங்களுடைய மருமகளும் வனசாக்ஷியும் சந்தைச்குப் போயிருந்தார்கள். இப்பெரியவர் மரத்தடியில் இளைப்புற்றிருந்ததைக் கண்டு வண்டியிலேற்றிக் கொண்டு வந்தார்கள்.

வைத்தியர்.—இந்தக்கிழவிக ளிருவருமா சந்தைச்குத் தனித்துச்சென்றார்கள் ?

செழுங்கமலம்.—நான் என்ன செய்வேன் அண்ணு! எனச்கு நேற்றையதின மெல்லாம் அஜீர்ணத்தால் பேதியாய்க் கொண்டிருந்தது. நேற்று மாலை தாங்கள் கொடுத்த மருந்திஞல் சௌச்கியப்பட்டது. இன்று காலை எனக்கு அதிக பலஹீனமாக இருந்ததாலும் வீட்டில் பண்டம் எதுவும் இல்லாததாலும் இன்று தப்பிஞல் எட்டுநாள் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதாலும் கமலாக்ஷியைத் தனித்து அனுப்பினேன்.

வைத்தியர்.—அறியாப் பெண்களைச் சந்தைக்கு அனுப்புவது நன்றல்ல. இப் பெரியவருக்குச் சுரமிருப்பதோடு மிச்ச பலஹீனமும் மிருந்திருக்கிறது. நான் தரும் மாத்திரைகளை வைத்துக்கொண்டு மூன்று மணிக் கொரு தரம் கொடுத்து வந்தால் விரைவில் தேசம் சௌச்கியமாய்விடும். கஞ்சி மட்டும் அடிக்கடி கொடுத்துக்கொண்டு வரவேண்டும். இப் பொழுது விளக்குவைக்கப் போகுஞ் சமயமானபடியால், விளக்கேற்றிய பின் முதலில் மாத்திரையைக் கொடுத்து அரைமணி நேரத்துக்குப்பின் கஞ்சி கொடுப்பாயாக. அதுமுதல் அடிக்கடி கஞ்சி கொடுத்துக்கொண்டே இருப்பாயாக.

கமலாக்ஷி.—தாதா ! அம்மாள் நேற்றெல்லாம் அசௌகரியமா யிருந்தார்களா தலால், அவர்களுக்கு ஒரு தொந்தரையும் கொடுக்சாமல் நானே விழித்துக்கொண்டிருந்து தாங்கள் சொல்லிய வண்ணம் செய்கிறேன்.

வனசாக்ஷி.—உன்னோடு நானு மிருந்தால் உனச்கு உதவியாயிருச்கும் ; நான் என் தாயாரிடத்தில் சொல்லிவருகிறேன்.

கமலாக்ஷி.—நீ என்னோடிருப்பது எனக்கதிக சந்தோஷத்தைக் கொடுக்கு மென்றாலும், உன் தாயாரைத் தனியேவிட்டு இரவில் துணையின்றி வருவது உசிதமல்ல.

செழுங்கமலம்.—ஆம் வனசாக்ஷி. நானும் கமலாக்ஷியும் இருப்பதால் நீயும் வந்திருப்பது அனுவசியம். உங்களைப் போன்ற பெண்கள் இரவில் தனித்து வருவதும் போவதும் நன்றல்ல.

வைத்தியர்.—ஆம், வனசாக்ஷி, நான் உங்கள் வீட்டுக்கருகாமையில் போக வேண்டிய வேலையிருப்பதால் உன்னை உங்கள் வீட்டில் விட்டுப்போகிறேன் வருக.

என்று வைத்தியர் வனசாக்ஷியை அழைத்தார். வனசாக்ஷி கமலாக்ஷியிடத்தும் அவள் தாயாரிடத்தும் உத்தரவு பெற்றுப்போயினள். கமலாக்ஷியும் அவள் தாயும் விருத்தாப்பியர் சமீபத்தி லுட்கார்ந்து விசிறிக்கொண்டிருந்தார்கள். பிறகு செழுங்கமலம் தன் மகளை வைத்துவிட்டுத் தான் கஞ்சி சித்தஞ் செய்துகொண்டு வருவதாகப் போயினள். கமலாக்ஷி சுரம் இருக்கிறதாவென்று சட்டையை நீக்கி மார்பைத் தொட்டுப்பார்த்தாள். பெரியவர் விழித்துக் கமலாக்ஷியைப்பார்த்து அம்மா! நீ யார் ? நான் யாருடைய வீட்டிலிருக்கிறேன் ? என்று கேட்டார்.

கமலாக்ஷி.—தாதா! தாங்கள் எங்கள் வீட்டில்தானிருக்கிறீர். என் தாயாரும், நானுமே இவ்வீட்டிலிருக்கிறோம். தங்களுக்கு வேண்டியதைச் செய்யத் தடையில்லை. விடியுமுன் தாங்கள் சௌக்கியப்பட வைத்தியர் மாத்திரைகள் கொடுத்துப் போயிருக்கிறார்.

பெரியவர்.—அனுதரவாயிருக்கும் என்னை வைத்தியரைக் கொண்டாதரித்தீர்கள் ! இந்த உபகாரத்துக்கு நான் யாது கைம்மாறு செய்யப்போகிறேன் ? நீ யாரென்று கேட்டேன். அதற்கொன்றும் பதில் சொல்லவில்லை. உன் பெயரையும், உன் தாயார் பெயரையும் சொல்லுவாய், அம்மணி ! உங்களை ஆசீர்வதிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்.

கமலாக்ஷி.—தாதா ! நான் கேசவ முதலியார் புத்திரி ! என்பெயர் கமலாக்ஷி; என் தாயார் செழுங்கமலம்.

பெரியவர்.—சிறிதுநேரம் கமலாக்ஷியைப் பார்த்துப் பின்தலையணைமேல் சாய்ந்து நித்திரை போயினர்.

செழுங்கமலமும் கஞ்சிகொண்டு வந்தவுடன், பெரியவர் கண்ணைத் திறந்து தங்கள் பெயர்களைக் கேட்டு வார்த்தை யாடினரென்று சொல்லிக் கமலாக்ஷி சந்தோஷப்பட்டாள்.

செழுங்கமலம்.—பெரியவர் பலஹீனமாக இருப்பதால், அவரை வார்த்தை யாடவிடக்கூடாது. அவர் ஏதாகிலு மொன்றை நினைத்துத் துக்கப்படு வாராயின் அது அவருக்குக் கெடுதியாய் முடியும்.

கமலாக்ஷி.—நான் அவரைப் பேசும்படி கட்டாயப்படுத்தவில்லை. அவர்தாமா கக் கண்விழித்துப் பார்த்து வார்த்தையாடினார்.

இனி அவர் வார்த்தையாடா திருக்கும்படிச் செய்யவேண்டுமென்று பெரிய வரை எழுப்பி வைத்தியர் சொல்லிய வண்ணம் மருந்தும் சஞ்சியும் அடிக்கடி அவ்விருவரும் கொடுத்துக்கொண்டு வந்தார்கள்.

3—ம் அத்தியாயம்.

மயிலாபுரிக் கடைவீதிகளில் தைப்பூசத்துத் திருவிழாவைக் கருதி வெளி யூரிலிருந்து சவுளிக் கடைகளும் சன்னர் கடைகளும் புத்தகக்கடை களும் வந்து நிறைந்து அவ்வூரைச் சிறப்பாக்கின. கடைகளில் வந்து சாமான் வாங்குகிறவர்களும், வேடிக்கைபார்க்கவருகிறவர்களும் அதிக மாக இருந்தார்கள். அக்கடைவீதியில் நிறைந்திருந்தவர்களில் சந்தன நிறமும், பரந்தமுகமும், அகலமான நெற்றியும், பெருத்த கண்களும், மயிரடர்ந்த புருவமும், நீண்ட நாசியும், முத்துக்கள் போன்ற ஒழுங் கான பல்வரிசையும், புன்சிரிப்பைச்சதாகொண்டிருக்கும்வாயும், அரு ம்புகட்டி வரும் மீசையும், பருத்த தோளும், விசாலமாகிய மார்பும், நீண்ட கைகளும், ஏறக்குறைய ஐந்தரை அடிஉயரமும், இருபதுஅல் லது ஒன்றிரண்டதிகமுள்ள வயதும் கொண்டு மன்மதனிவன் என்று வியக்கத்தக்க ஒரு வாலிபன் கடைவீதியாக வரும்பொழுது ஒரு சுந்த ரபுருடன் அடிமேல்அடிவைத்துச் சந்தடிசெய்யாமல் பின்வந்து, வாலி பன் இருகண்களையும் தன்கைகளால் மூடினான். அவ்வாறு மூடப் பட்டவன் சோமசுந்தரம் என்றான். உடனே கையை எடுத்து நானென் றது உனக்கு எப்படித்தெரிந்தது விஜயரங்க மென்று கேட்டான்.

விஜயரங்கம்.—உன்னைவிட என் கண்களை மூடத்தகுந்தசினேகிதர் ஒருவரும் இல்லை ; ஆனதால் நீ என்றே மதித்தேன்.

சோமசுந்தரம்.—நீ ஏது இன்று கடைத்தெருவுக்கு வந்தது ?

விஜயரங்கம்.—சில புத்தகங்கள் வாங்கவேண்டு மென்றே வந்தேன்.

சோமசுந்தரம்.—என்ன என்ன புத்தகங்கள் வாங்கவேண்டும் ?

விஜயரங்கம்.—கம்பரிராமாயணம், வில்லிபுத்தூராழ்வார்பாரதம், திருக்குறள் முதலியனவைகளே.

சோமசுந்தரம்.—இப்புத்தகங்க ளெல்லாம் உன்னிடத்தில் இருந்ததை நான் பார்த்திருக்கிறேனே !

விஜயரங்கம்.—ஆம் ! என் தகப்பனார் இரவலாக வாங்கிக் கொடுத்திருந்தார். அவைகளைத் திரும்பக்கொடுத்துவிட எண்ணங்கொண்டு தைப்பூசத்துக் காசவந்திருக்குங் கடைசளில் எனக்குவேண்டியவைகளை வாங்கிக்கொ ள்ளும்படி உத்தர வளித்தார்.

சோமசுந்தரம்.—அந்தச் சவுளிக்கடையைப் பார்த்தாயா ? சேலம் மதுரை சரிகை வேஷ்டிகளில் அதிசவிலையுயர்ந்தவைகள் வந்திருக்கின்றனவே ; அவைகளில் ஏதாகிலும் வாங்கக்கூடாதா ?

விஜயரங்கம்.—எனக்குச் சரிகை வேஷ்டிகள்மேல் பிரியமே கிடையாது. என் தகப்பனார் எனக்கு இனமாகக் கொடுத்திருக்கும் ஆயிரம் ரூபாய் இன்னும் அப்படியே இருந்தும் அதில் எவ்வளவையும் சரிசைத் துணிக ளில் செலவிடப் பிரியமில்லை.

சோமசுந்தரம்.—உன்னுடைய தந்தையிடம் பதினாயிரம் ரூபாய் கடன் வாங்கி மதுரைக்குப்போன கண்ணப்ப முதலியார் அனேகவருடம்பேசா மலிருந்துவிடவே, அந்த ரூபாய் பதினாயிரமும் போனதென்றே மதித்து முதலில் பாதியை விட்டு மற்றைப் பாதியையாகிலும் வாங்கிவரும்படி உன்னை அனுப்ப, நீ மதுரைக்குப் போனபொழுது, கண்ணப்ப முதலி யார் உனக்கு வேண்டிய மரியாதைசெய்து வட்டியும் முதலும் சேர்ந்த தொகையைக்கொடுக்க, நீ வட்டி வேண்டுவதில்லையென்று தடுத்தும், வட்டிகொடுக்காமற்போனால் கடன்வாங்கி வட்டியில்லாமல் முதல் மட்டும் கொடுத்தான் என்று தன்னை ஒத்த வியாபாரிகள் சொல் லிக் கேவலமாக நினைப்பார்க ளென்பதாகக் கட்டாயப்படுத்த, அதைத் தடுக்கமுடியாமல் நீவட்டியும் முதலும் வாங்கிவந்ததற்கு உன் தகப்பனார் மகிழ்ந்து வட்டியாக வந்த ரூபாயில் ஆயிரம் ரூபாயை உன் சொந்தச் செலவுக்காகக் கொடுத்தாரென்றாயே, அந்த ஆயிரந்தானே ?

விஜயரங்கம்.—ஆம் ! என் தந்தை கொடுத்த ஆயிரம் ரூபாயைச் செட்டி வீட்டில் வைத்திருப்பதை யறிந்து, ஒருவருடத்திற்குப்பின் என் கணக் கில் மற்றோர் ஐயாயிரமும் கொடுத்து அதின் வரும்படியை நான் சேட்கும் பொழுதெல்லாம் தரும்படி செட்டிச்கு உத்தரவு கொடுத்திருந்தாலும் அந்த வட்டிப்பணத்தைச் செலவிட வழியொன்றும் எனக்குத் தெரிவதில்லை. என்தாயாரும் என் சட்டைப்பையில் இருபது ரூபாயை வைத்து நாள்தோறும் சட்டையை மாற்றும் பொழுது அந்த ரூபாயில் குறைந்திருக்கிறதா வென்று பார்த்து வருகிறார்கள். ரூபாய் எனக்கு எதற்கு என்று கேட்டால், கோபித்து, ஏழைகளுக்குக் கொடுக்க இஷ்டமிருந்தால் யாரிடத்தில் போய்க் கேட்பாய் என்று

சொல்லி, என்றைக்காகிலும் அதில்ஒன்று அரைகுறைந்திருந்தால் அதை ச்சரியாக்கி இருபது ரூபாய்எப்பொழுதும் என்னிடத்திலிருக்கும்படிச் செய்கிறார்கள். இப்பொழுதும் என்னிடத்தில் இருபது ரூபாய் இருக் கிறது பார் என்று எடுத்துக் காட்டினான்.

சோமசுந்தரம்.—உன் தாய்தந்தையர் உன் விஷயத்தில் காட்டும் பேரன் புக்கு அளவில்லை. இப்படி யல்லவா பெற்றவர்கள் பிள்ளையை நடத்த வேண்டும் ; உனக்கு எவ்விஷயத்திலும் வியசனங்கொள்ள ஏது இல்லை யல்லவா ?

விஜயரங்கம்.—எனக் செவ்விஷயத்திலும் மனச்சலிப் பில்லையாயினும், ஓர் சகோதரனுவது சகோதரியாவது இல்லாமற் போனதே எனக்கு நீங்கா வியசனம்.

சோமசுந்தரம்.—அது விஷயத்தைக்குறித்து நீ வியசனப்படுவது நியாய மல்ல. அவரவர்கள் வினைக்கீடாகப் புத்திரப்பேறும் இன்ப துன்பங் களும் உலகத்தில் அனுபவிக்க வேண்டியதிருக்க, அதை மறந்து வீணில் துக்கப்படுவதில் பிரயோசனமில்லை.

விஜயரங்கம்.—ஆம்! ஆம்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதென்பதுபோல, நாம் என்ன வாசித்திருந்தபோதிலும், அனுபவத்தில் அவைகளை உப யோகத்துக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்படுகிறதில்லை. பிரயத்தனப் பட்டாலும் நம்மைப் போன்றவர்களுக்கு வாசித்தவைகள் பிரயோசனப் படாமல் அறியார்போல நாம் துக்கப்படவேண்டியதா யிருக்கிறது.

சோமசுந்தரம்.—ஆம் ! அது உண்மையே. ஆயினும், அனுபவத்தில் கொ ண்டு வருவது கஷ்டமாயிருந்தாலும் நாம் முயற்சிக்க வேண்டும். உனக் கிது பரியந்தம் விவாகம் நடத்திவைக்காமல் இருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. உன் தகப்பனுர் பொருளில் குறைந்தவரா ? மயிலாபுரியி லுள்ள தனவந்தர்களில் முதல் ஜெகநாதமுதலியார் என்றும், இரண்டா வது உனது தந்தையென்றும் சொல்லுகிறார்களே !

விஜயரங்கம்.—விவாகத்தில் எனக்கு விருப்பம் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம். என் தந்தைதாய் என்னுடைய நன்மையை விரும்பி யாவுஞ்செய்து வருகிறவர்கள். அவர்கள் இஷ்டம்போல் யாவுஞ் செய்ய விடுவதே உத்தமம். எனக்கின்னும் விவாசஞ் செய்யாமலிருப்பதும் என் நன்மையைக் கோரியே இருக்கலாம். நீ ஜெகநாத முதலியாரைத் தன வந்தரில் முதல் என்றுயே, அது உண்மைதானு ? அவர் பெருங்கடன் காரர் என்று அனேசரால் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சோமசுந்தரம்.—அது ஒரு பெரிய கதை. அதை இப்பொழுது பேசச் சாவ காசமில்லை. மற்றோர் சமயத்தில் ஜெகநாத முதலியாரைக் குறித்துப்

பேசலாம். இப்பொழுது நீ விரும்பிய கடைக்குச் சமீபத்தில் வந்து விட்டோம். நமக்கு வேண்டிய புத்தகங்களே வாங்கிக்கொள்ளலாம்.

என்று இருவரும் கடைக்குள் நுழைந்தார்கள். சவுளிக்கடைகளுக் கெதிரில் சற்றேறக்குறைய இருபத்தைந்து வயதுள்ள இரண்டு வாலிபரில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து இந்தச் சவுளிக்கடைகளிலுள்ள விலையுயர்ந்த வஸ்திரங்களே யெல்லாம் கொடியில் விரித்துப்போட்டிருக்கிறதைப் பார்த்தாயா ! இரத்தினம் ?

இரத்தினம்.—ஆம் பார்த்தேன் மாணிக்கம் ! அதோ நமக்கெதிரில் காணப்படும் காசிச்சேலையில் பச்சை நிறமுள்ளதை நாம் சந்தையிற் பார்த்தபெண் மணி உடுத்திக்கொண்டிருப்பாளானால் எவ்விதம் இருக்கும் !

மாணிக்கம்.—அவளுடைய சுந்தரத்தை அதிகப்படுத்தவா காசிச்சேலை வேண்டும் என்கிறாய் ? ஒருக்காலுமில்லை. காசிச்சேலை வாங்கி அவள் கட்டுவாளானால் சேலைக்கு மதிப்பேயன்றி அவளுக்கு ஒன்றுமில்லை.

இரத்தினம்.—சேலைக்கென்ன மதிப்பு ?

மாணிக்கம்.—அவலக்ஷணமுள்ள பெண்களிடுப்பில் ஏறுமல், அச்சுந்தரமான பெண் இடுப்பில் ஏறியதே ! அப்பெண்மணி யாரென்று விசாரித்துவருவதாகச் சொன்னது முடிந்ததா ?

இரத்தினம்.—நாம் இவ்விடத்தில் நின்று அப்பெண்மணியைக் குறித்துப்பேசுவது நன்றல்ல. அதோ அந்த மரத்தடியில் போய்ப்பேசிக்கொண்டிருக்கலாம். அங்கு ஒருவரும் வரமாட்டார்கள். வருக (என்று அழைத்துச்சென்று) அப்பெண்மணி தாயின் பெயர் செழுங்கமலம். அம்மாதின் பெயர் கமலாக்ஷி.

மாணிக்கம்.—இவைகளே எப்படிக் கண்டுபிடித்தாய் ? அசாத்தியமான சரிரியங்களைச் சுலபமாகச் செய்துவிடுகிறாய் !

இரத்தினம்.—நான் வனசாக்ஷியை விவாகஞ் செய்துகொள்ள எண்ணங் கொண்டிருப்பதை அனேக நாள்களுக்குமுன் உன்னிடம் சொல்லி யிருந்தேன். அதை என் தாயாரிடத்தில் சொல்லிப் பெண்ணைப் பார்த்துப் பேசி வரும்படி சொன்னதன்பின் என் தாயார் அடிக்கடி வனசாக்ஷியையும் அவள் தாயையுங் கண்டுவருவதுண்டு. வனசாக்ஷியால் அவளோடு சந்தையிலிருந்து வந்தவளே இலகுவில் இன்னவளென்று அறிந்துகொள்ள நேரிட்டது.

மாணிக்கம்.—நாம் இன்று எல்லாக் காரியத்தையும் முடிவுபடுத்திக்கொண்டு போகவேண்டியதா யிருக்கிறது. பொழுதும் போய்விட்டது. இம்மரத்தடியிலிருக்கும் திண்ணையில் இரு (என்று இருவரும் உட்கார்ந்தார்கள்.)

இரந்தினம்.—ஆம். இன்று அது விஷயத்தைப் பேசி முடித்துப்போகவேண்டியதவசியமே. என்னசெய்யலாமென்று யோசிக்கிறாய் ?

மாணிக்கம்.—என் புத்திச்கு ஒன்றும் புலப்படவில்லை. எல்லா விஷயத்திலும் உன்னையே எதிர்பார்த்து இருக்கிறேன். உனக்கிது விஷயத்திலுள்ள அனுபோகம் எனக்கில்லை. முன்னொரு பெண்ணை உன் வலையிற் சிக்க வைத்ததைச் சொல்லுகிறேன் என்றாய். அதைச் சொல்லியபின் இது. விஷயத்தைக் குறித்து நீ யோசித்திருப்பதைச் சொல்லவேண்டுகிறேன்.

இரந்தினம்.—ஆ ! ஆ ! அதை இன்னும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாயா ? உன்னுடைய இஷ்டம்போலவே செய்வேன். மூன்று வருடங்களுக்குமுன் அக்கிராரத்துக் கருகாமையிலுள்ள வேளாளர் தெருவில் சுந்தரமான ஒரு பெண் தன் வீட்டுத் தெருவாயிற்படியில் ஒருநாள் நின்றிருக்கக்கண்டேன். அவள் என்னைக் கண்டவுடன் வீட்டுக்குள் சென்றாள். நான் அவளை மறுபடியும் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அடிக்கடி அவ்வீதி வழியேபோனாலும் தொடக்கத்தில் போகுமபொழுதெல்லாம் அவள் என் கண்ணுக்கு அகப்படாமல் ஒவ்வொருநாளில் அகப்பட்டுப் புன்னகையோடு வீட்டுக்குள் ஓடிப்போய்விடுவாள். சிலநாள் கள் பொறுத்து நாள்தோறும் என் வருகையை எதிர்பார்த்திருப்பதுபோல், வாயிற்படியில் நின்றிருப்பாள். நான் அவளைக்கண்டு நகைத்தால் அவளும் நகைப்பாள். ஒவ்வொருநாளில் நான் அவளைக் கண்டு நகைத்தால் அருவருப்போடு என்னைப் பார்த்துப்போய், மறுநாள் என்னைக் கண்டால் புன்சிரிப்போடு நின்று பார்ப்பாள். இவ்விதம் சில மாதம் கழிந்தபின், ஒரு நாள் அவ்வழியாக நான் தனித்து வரும்போது என்னோடு பள்ளியில் வாசித்த ஒருவன் என்னைக் கண்டு வார்த்தையாடிக்கொண்டே அப்பெண்மணி வசிக்கும் வீட்டுக்குள் நுழையும் பொழுது என்னையும் அழைத்தான். நான் எனக்குத் தாகமாக இருக்கிறதென்றும், வீட்டுக்குத் துரிதமாய்ப் போக விரும்புகிறேன் என்றும் சொல்ல, அவன் அதற்கென்ன நம்முடைய வீட்டில் தாகத்துக்குச் சாப்பிடலாம் என்று கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோய்த் தாகத்துக்குக் கொண்டுவந்து கொடுக்கும்படி உத்தரவு செய்தான். உடனே ஓர் தாகத்துச்செம்பு நிறைய நிறக்கப் பால்விட்ட சாப்பி வந்தது.

மாணிக்கம்.—நீ காதல்கொண்ட மாதின் வீடு என்று உனக்குத் தெரிந்திருந்தும் உன்னை அழைத்தபொழுதுபோக மனங்கொள்ளாத காரணம் யாது ?

இரந்தினம்.—நான் அப்பெண்மணியை இச்சைசொண்டு அடிக்கடி அவர்களிருக்கும் வீட்டுவழியாகச் சென்று அப்பெண்மணியைக் கண்டு நகைத்து

வந்தது, என்னை அழைத்துச்சென்ற நண்பனுக்குத் தெரிந்து என்னை அவமானப்படுத்த எண்ணங்கொண்டு அழைக்கிறனென்று முதலில் பயங்கொண்டு போக மனங்கொள்ளாமல் இருந்தேன். ஆயினும் கொடிக்குள் என் மனம் தைரியப்பட்டு அவளோடு சென்றேன். அவன் தாகத்துக்குக் கொண்டுவரும்படி சட்டளை யிட்டதும், யார்கொண்டு வந்தார்களென்று நினைக்கிறாய் ?

மாணிக்கம்,—நான் யாரென்று சொல்லுவேன். அப்பெண்மணியே கொண்டு வந்திருப்பாள்.

இரத்தினம்.—உண்மையைச் சொன்னாய். அம்மாதரசே புன்சிரிப்போடு கொண்டுவந்து கொடுத்தாள். அவள் கொடுத்த காப்பியைச் சாப்பிட்டுச் செம்பைக் கொடுக்கும்பொழுது அவள் விரல்களில் ஒன்றைச் சுரண்டினேன். அவள் புன்னகையோடு சென்றாள். நானதுமுதல் என் சினேகிதனைக் காணப்போவதுபோல் அடிச்சடி அவள் இருந்த வீட்டுக்குச் சென்று வந்தேன். ஒருநாள் மாலை என் சினேகன் இருக்கும் அறைக்குள் நான் நுழைந்து பார்த்தபொழுது என் சினேகனைக் காணமல் அவன் வருவான் என்று மேஜையின்மேல் வைத்திருந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சில நிமிஷங்களுக்குப் பின் அம்மாதரசு அவ்வறைக்குள் பிரவேசித்து என்னைப் பார்த்து நகைத்தாள். நானும் நகைத்துக்கொண்டே என் நகைக்கிறாய் என்றேன். என் தமயனும் தாயாரும் வெளியூருக்குப் போயிருக்கும் சமயத்தில், என் தமயனைத் தேடிக்கொண்டு வந்தீர் என்று நகைத்தேன் என்றாள். உன்னைத் தனியாக இவ்வீட்டில் விட்டா வெளியூருக்குப் போயிருக்கிறார்கள் என்று கேட்டதற்கு அவள் எங்களைத் தனியாகவிட்டுப் போகவில்லை. அடுத்த வீட்டுப் பெரியம்மாள் எங்களுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று சொன்னாள். நெடுநாளாகச் சமயம் பார்த்திருந்தது இன்று கைகூடியது என்று அப்பெண்மணியின் கையைப்பிடித்து முத்தமிட்டும், அவள் கன்னத்தில் முத்தமிட்டும் அவளைக் கட்டி யணைத்துப் பிடித்துக்கொண்டு முகமெல்லாம் முத்த மிட்டேன். அவள் யாராகிலும் வந்துவிடுவார்கள், விட்டுவிட வேண்டும் என்று வேண்டினாள். நான் அவளைப் பிடித்த பிடியை விட்டு உனக்குத் துணையாக விருக்கும் பெரியம்மாள் எங்கே என்றேன். அதற்கவள் அவர்கள் சமையலறையிலிருக்கிறார்கள் என்றும், நான் அவ்வறையில் எட்டுமணி பரியந்தம் இருந்தால் அவர்கள் படுக்கைக்குப் போனவுடன் தான் வருவதாக உறுதிமொழிகூறியும், நான் இருந்த அறையைப் பூட்டித்திறவுகோலைக் கொண்டுபோயினாள். நான் அதிக சந்தோஷமாகக் கொஞ்சநேரப் பொழுதையும் போக்க அவ்விடத்தி லிருந்த புத்தகங்களில் ஒன்றை எடுத்து வாசித்துக்கொ

ண்டிருந்தேன். என்மனம் அப்பெண்மணியின்மேலிருந்ததால் நான் வாசித்தது இன்னதென்று எனக்குத் தெரியாமல் போனது. சிலநேரத்தில் அவ்வரை இருண்டதால் நான் இருட்டில் உட்கார்ந்து எட்டுமணி எப்பொழுது அடிக்கு மென்று ஒவ்வொரு விநாடியையும் எண்ணிக்கொண்டிருந்த எனக்கு வேறெண்ணம் தோன்றி என்ன காரியம் செய்துவிட்டோம்! அந்தியர் வீட்டி னறைக்குள் அசப்பட்டுக்கொண்டிருக்கிறோமே! என்ன செடுதிவருமோ! யாராகிலும் நம்மைக் கண்டுபிடித்துக்கொண்டால் என்னசெய்கிறது! இவ்விடம் இருப்பது தகுதியல்லவே, ஓடிப்போவதே உத்தமம் என்று பலவித யோசனையிலிருக்கும்பொழுது, கதவு மெதுவாகத் திறக்கப்பட்டு அப்பெண்மணி தின்பண்டங்களோடு வந்து, என்னை அதிகநேரம் காக்கவைத்ததற்காகத் துக்கப்பட்டுக்கொண்டே கதவைச்சாற்றி உள்தாளிட்டு விளக்கேற்றி வைத்து என்னருகில் வந்து, நான் என்னசெய்வேன்? அவர்கள் படுக்கைக்குப் போகுமளவும் பார்த்திருந்து வந்தேன் என்றும், நீங்கள் பசியோடு இன்னும் இருக்கவேண்டாமென்றும், தான்கொண்டுவந்த பதார்த்தங்களைச்சாப்பிட ஒன்று ஒன்றாக வாயிற் கொடுத்துச் சண்டைக்காய்ச்சிக் கற்கண்டு போட்டுக்கொண்டுவந்த பாலையுங் கொடுத்து நான் வஞ்சனை யில்லாமலும் வேண்டாமென்றுசொல்லாமலும் உண்டபின் அன்றிரவெல்லாம் தன்னோடு சந்தோஷமாக இருக்கச்செய்து விடிய ஓர் ஜாமத்துக்கு முன் என்னை யெழுப்பித் தன் தமயனும் தாயும் வர ஒரு வாரஞ்செல்லும், ஆதலால் தாங்கள் இரவில் எட்டு மணிக்குமேல் வருவீரானால் என்னை இந்த அறையில் பார்க்கலாமென்று என்னைக் கட்டியணைத்து முத்தங்கொடுத்து அனுப்பினாள். அவள் சொல்லிய நேரப்படி ஒவ்வொரு நாளும் அவளுடைய வீட்டுக்குச் சென்று அவளோடு சுகித்திருந்தேன். பின் அவளுடைய தாயும் தமயனும் வந்த பின் அவ்வீட்டுக்கு அடிக்கடி போனாலும் அவளோடு தனித்திருக்கச் சாத்தியப்படவில்லை. மூன்று மாதமானபின் அவ்விடம் போயிருந்த பொழுது அப்பெண்மணி என்னை கண்டு தான் கருப்பமாயிருக்கிறபடியினால் தன்னை அழைத்துக்கொண்டு போக வேண்டினாள். நான் தக்க ஏற்பாடு செய்துவந்து அழைத்துப் போகிறேன் என்று வந்தவன் அப்படியே போகப் படைத்திருந்தேன்.

மணிநாதர்.—உன்மேல் ஆசைகொண்டிருந்தவளைப் பார்க்காமலிருக்க மனம் பொருந்தியது அதிசயம். கருப்பமாயிருந்தாளென்கிறாயே! குழந்தை பிறந்ததா? அவள் இறந்தாளா? உயிரோடிருக்கிறாளா என்றுவது விசாரிக்காமலோ இருந்தாய்?

இரந்தினர்.—அக்குடும்பம் இவ்வூரைவிட்டு அடியோடே போய்விட்டதால் அவளைக்குறித்தொன்றும் அறிய ஏதுவில்லாமற்போயிற்று.

மாணிக்கம்.—உன்னுடைய நற்காலத்தைக் குறித்துச் சந்தோஷப்பட வேண்டியதே ! நாம் கமலாக்ஷியைக்குறித்து என்ன செய்கிறது ? (என்று சொன்னவுடன் திரும்பிப்பார்த்தான்.)

இரத்தினம்.—ஏன் திரும்பிப் பார்க்கிறாய் ?

மாணிக்கம்.—யாரோவருகிற அரவம் கேட்டது. (என்று சற்றுநேரம் மௌனமாகவிருந்தான்.)

பின்பு இருவரும் சிலநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்து நீங்கினார்கள்.

4-ம். அத்தியாயம்.

மயிலாபுரி நாளுக்குநாள் சிறப்படைவதைக் கண்ட அனேகர் அவ்வூரில் குடியேறியதால் இடம்போதாமல் அவ்வூருக்கு அமையில் தூரத்திலிருந்த புன்செய் நிலத்தை யழித்து அனேக கட்டிடங்கள் கட்டப்பட்டதனாலே பெரிய பட்டணமாய் அதற்குப் புதுவரென்று பெயர்வழங்கலாயிற்று. ஒருநாள் மாலை நான்கு மணிக்கு அப்புது ஊரில் ஒரு சிறிய மச்சுவீட்டின் கதவு தட்டப்பட்டது. உடனே ஒரு கிழவி கதவைத்திறந்து ஆ ! கமலாக்ஷி அத்திபூத்ததுபோல் அதிசயப்பட எங்கு வந்தாய் ? என்று கேட்டாள்.

கமலாக்ஷி.—ஆயா ! எங்களுடைய வீட்டில் வந்திருக்கும் பெரியவருக்கு இரண்டு நாளாகச் சுரம் குறைந்து இன்று அதிகரித்திருக்கிறது. என் தாயாருக்கும் வயிற்றுப் போக்கு நின்றிருந்து மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. ஆனதால் தாதா இடத்தில் சொல்லி யழைத்துப்போக வந்தேன்.

கிழவி.—கமலாக்ஷி ! உன் தாதாவை, அடுத்ததெரு முத்துக்குமார முதலியார் மருமகனுக்குத் தேக அசௌக்கியமென்று, மத்தியானம் அழைத்துக் கொண்டு போனார்கள். இப்பொழுது மணி நாலாகிறது. விரைவில் வந்துவிடுவார். உன்னுடைய தாதா வருமளவும் அந்த மேஜையிலிருக்கும் புத்தகத்தில் ஒன்றை எடுத்து உட்கார்ந்து வாசித்துக்கொண்டிரு ; அவர் வந்தவுடன் அழைத்துக்கொண்டு போகலாம்.

கமலாக்ஷி.—ஆயா ! நான் எப்பொழுதாகிலும் வந்தால் ஏதாகிலும் ஒரு புத்தகத்தில் கிஞ்சித்து வாசிக்காமற் போனால் என்னைத் தாங்கள் விடுகிறதில்லை. இன்று என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் அவசரமாய் உட்கார்ந்து வாசிக்கவும் பேசிக்கொண்டிருக்கவும் நேரமில்லை. நான் தாதாவை விரைவில் அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

கிழவி.—நீ என்ன துரிதப்பட்டாலும் உன் தாதா வந்தபின்தானே போக வேண்டும் ? அல்லது அவர் வருகிறதற்குமுன் போகப்போகிறாயோ ?

கமலாக்ஷி—தாதா வ்ருமுன் போவதெப்படி ? மத்தியானம் போனவர் இன்னும் வராமலிருப்பதற்குக் காரணம் என்ன ? அபாயமான வியாதியாக இருக்குமோ ?

கிழவி.—எனக்கொன்றும் தெரியாது ; உன் தாதா மத்தியானம் சாப்பிட்டு வெளியில் வந்தபோது அவரைக் கூப்பிட்டார்கள். மருந்துப்பையை எடுக்க வந்தவர் சாப்பிட்டுக்கொண்டிருந்த என்னிடம் தாம் முத்துக்குமார முதலியார் வீட்டுக்குப்போய் வருவதாய்ச் சொல்லிப்போனார். நான் வெளியிலிருந்திருப்பேனேயாகில் எல்லாம் விசாரித்திருப்பேன். உன் தாதா வந்தபின் யாவு மறிந்துகொள்ளலாம். நீ அல்லியரசாணிமாலை படித்தால் உன் குரலுக்கு நன்றாயிருக்குமென்று கேள்விப்பட்டேன். சற்று நேரம் வாசித்தால் அதற்குள் உன் தாதா வந்துவிடுவார். அவர் வந்த வுடன் போகலாம்.

கமலாக்ஷி.—தங்களுக்கிஷ்டம் இருக்கிற விஷயத்தில் வாசிக்கிறேன். (அன்று மேஜையிலிருந்த புத்தகங்களில் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் இன்னும பல புத்தகங்கள் இருக்கிறதைக்கண்டு அதில் பெரிய புராணத்தை எடுத்து) ஆயா ! பெரிய புராணம வாசிக்கலாமா ?

கிழவி.—பெரிய புராணமும் வேண்டாம் ; சின்ன புராணமும் வேண்டாம். நேற்று வாங்கிவைத்த அல்லியரசாணிமாலை அங்கு இருக்கிறது ; எடுத்து அதை வாசி.

கமலாக்ஷி.—அல்லியரசாணிமாலை வாசிக்கக்கேட்பது விசேடம் என்று நினைக்கிறீர்கள். புண்ணிய சரித்திரங்களை வாசிக்கக்கேட்டால் அது நன்மையைத் தருமே !

கிழவி.—புண்ணியமும் கணணியமும எனகென்னதற்கு ? நான் இன்னும் ஒருதரம் மணை யேறப்போகிறேனு ? அல்லது பிள்ளைகள் பெறப் போகிறேனு ? ஒன்றும இல்லை, எனக்கு வேண்டியது எல்லாம் வயிற்றுக்குச் சோறும் இடுப்பிற்குச் சேலையுமே தவிர வேறென்ன வேண்டும் ? உனக்கு அப்படியல்ல ; நல்ல புருடன் வரவேண்டும். பணக்காரியாக வேண்டும். நல்ல பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனதால் நன்மையைத் தரும்படியான புத்தகங்களை நீ வீட்டில் வாசித்துக்கொண்டிருக்க வேண்டும். நான் சற்று நேரம் கேட்க அல்லியரசாணிமாலையைப் படித்துவிட்டுப்போ.

கமலாக்ஷி.—தங்களுடைய இஷ்டம்போலவே செய்வேன். எந்த இடத்திலிருந்து வாசிக்கிறது ?

கிழவி.—எந்த இடத்திலிருந்து வாசிக்கிறது எனரு கேட்கிரூய்? அர்ச்சுனன் பாம்பாய் அல்லியோடு படுத்துக்கொண்டிருக்கிரூனே அந்த இடத்தை எடுத்து வாசி.

கமலாக்ஷி.—என்ன ஆயா! அதை வாசிக்கச்சொல்லுகிறீர்கள். எனக்க தைபபடிக்க ...டமில்லை. அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை போகி ரூனே அதிலிருந்து வாசிக்கட்டுமா?

கிழவி.—நீ வீணே காலங் கழிக்கிரூய். நான் சொல்லுகிற இடத்திலிருந்து வாசிக்கிரூயா? இல்லையா?

கமலாக்ஷி.—ஆயா! சோபித்துக்கொள்ள வேண்டாம்! தங்களுக்கு இஷ்ட மான இடத்திலிருந்தே வாசிக்கிறேன். (என்று நெடுநேரம் வாசித்துப் பின் கிழவியைப்பார்த்து) ஆயா! இன்னும் தாதா வரவில்லையே. மணி ஏழரையாகிறதே.

கிழவி.—வருகிற நேரமாயிற்று. இன்னும் சற்றுநேரம் வாசி.

இந்தசமயத்தில் கதவு தட்டப்படுகிற சத்தங கேட்டது. உடனே கம லாக்ஷி ஓடிக் கதவைத்திறந்தாள். வைத்தியர் உள் நுழைந்து ஆ! கம லாக்ஷி! என்ன சமாசாரம், இந்நேரத்தில் எங்கு வந்தாய் என்று கேட்டார்.

கமலாக்ஷி.—தாதா! அம்மாவுக்கு இன்று குளிருஜுரம் அதிமாக இரு க்கிறது. என் தாயாருக்குத் திருப்ப வயிற்றுப்போக்கு உண்டாயிருக் கிறது. நான் படாழுதிருக்குப் பொழுதே வந்தும் தங்களைக் காணுத தால் தங்கள் வருகையை எதிர்பார்த்திருந்தேன்.

வைத்தியர்.—கமலாக்ஷி! நான் உன்னோடு வரவேண்டியது கட்டாயமாக இருக்கினறு முத்துக்குமார முதலியார் மருமகள் சுலோசனையை யோசித் தால் வயத்தைடையாக இருக்கிறது. நான் உடனே சென்று அவளுக்கு வேண்டியதைச் செய்யாமல் போவேனுகில் அவளை இழக்கவேண்டி யதே யாகும்.

கமலாக்ஷி.—தாதா! ஒரு உயிர் அபாயமாகப் போகவிடக்கூடாது. தங்களு டைய இஷ்டப்படியே சென்று செய்யவேண்டிய சிகிச்சையைச்செய்து வாருங்கள், நான் அது பரியந்தம் இருக்கிருக்கிறேன்.

வைத்தியர்.—கமலாக்ஷி! நீ எனக்காகக் காத்திருக்கவேண்டாம்; நான் கொடுக்கும் மருந்தைக் கொண்டுபோய் இருவருக்கும் கொடு. நான் போன காரியம் முடிவானவுடன் வருகிறேன். ஒருவேளை இராத்திரிக்கு வரத் தடையாகுமா அதிகாலையில் வருகிறேன். (என்று இரண்டு பொட் டலங்களைக் கொடுத்துத தனியாக வீட்டுக்குப்போக முடியுமா என்று கேட்டார்.)

கமலாக்ஷி.—புதுஊரிலிருந்து ஜனங்கள் அதிகம் நடந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் துணையைக்கொண்டு போகிறேன். தாங்கள் மூதலியார் மருமகளைப் பாருங்கள்.

என்று இருவரிடத்தும் விடைபெற்றுக் கமலாக்ஷி வைத்தியரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொட்டலங்களோடு சென்றாள். இரண்டையும் அடையாளமாக வைத்துக்கொண்டு போகும்பொழுது ஜனங்கள் சந்தடி ஒர்முடிவு பரியந்தம் இருந்தது புதுஊர் எல்லைச்சல சமீபத்தில் வரும்பொழுது புதுஊருக்கும் பழைய ஊருக்கும் மத்தியிலுள்ள அரைமயில் தூரத்தைக் கடந்துபோகத் துணையகப்படாமல் திகைத்து நின்றாள். இருட்டதிகமாக இருப்பதோடு சாலையிலுள்ள விருக்ஷங்கள் மிக்க பயத்தைத் தரத்தக்கவைகளாக இருந்தன. சமலாக்ஷி இயற்கையில் தைரியமுள்ளவளாயிருந்தாலும் தனித்துபோகச் சம்மதியாமல் யாராகிலும் போனால் அவர்கள் துணையைப்பற்றிப்போகலா மென்று நின்றிருந்தாள். அப்பாதையில் புதுஊருக்கு வருகிறவர்கள் சிலர் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களன்றிப் புதுஊரிலிருந்து பழைய ஊருக்குப் போகிறவர்கள் ஒருவருங் காணப்படவில்லை ; இனி இவ்விடம் நின்றுகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை : மணியோ எட்டு எட்டரையாகிறது. நாம் வைத்தியர் வீட்டுக்குச் சென்று அவர் வந்தபின் அவரை அழைத்துப் போகலாம் என்று கமலாக்ஷி நினைத்துத் திரும்பும்பொழுது, இருவர் பழைய ஊருக்குப் போகிறவர்கள் வருவதைக் கண்டு அவர்களை நெருங்கி, அண்ணா! நீங்கள் எங்கே போகிறீர்கள் ? பழைய ஊருக்குப் போகிறவர்களாயிருந்தால் நானும் வருகிறேன்; என்னை யழைத்துக்கொண்டு போய்ப் பழைய ஊரில் விட்டுவிடுகிறீர்களா ? உங்களுக்குப் பெரும் புண்ணியம் சேரும் என்றாள்.

முதல் மனிதன்.—நல்லது, அம்மா ! நாங்கள் பழைய ஊருக்குப் போகிறவர்களே. நீ எங்களோடு வந்தால் அழைத்துச்சொண்டுபோகத் தடையில்லை.

இரண்டாவது மனிதன்.—சந்தோஷமாய் வரலாம். நாங்களென்ன உன்னைத் தூக்கிக்கொண்டா போகப் போகிறோம் ? இந்த பாரத்தை எப்படி சுமப்போம் ! என்றுசொல்ல என்றாள். (கமலாக்ஷி துணையகப்பட்டதென்று அவர்களோடு சென்றாள்.)

முதல் மனிதன்.—தூக்கிக்கொண்டு போக நேரிட்டாலும் நான் தூச்சப் பயப்படமாட்டேன்.

இரண்டாவது மனிதன்.—ஆபத்துக்குப் பாவமில்லை என்ற ஆதாரத்தைக் கொண்டா ?

முதல் மனிதன்.—ஆம் ! ஆம் ! ஆபத்தில் எது செய்தால்தானென்ன அம்மா ! உன் பெயரென்ன ? நீ எங்கிருப்பது ? நீ இந்நேரத்தில் தனித்துப் போக வேண்டிய காரணமென்ன ? உனக்கு இன்னும் விவாகம் முடிய வில்லையா ?

இரண்டாவது மனிதன்.—ஓய் ! ஓய் ! நீ கேட்டகேள்விகளுக் கெல்லாம் ஏக காலத்தில் பதில் சொல்ல அந்த அம்மாளுக்குப் பத்துப்பன்னிரண்டு வாய்களா இருக்கின்றன ? ஒவ்வொன்றாய்க் கேட்டால் அதற்குத் தக்க விடையளித்துக்கொண்டு வருவார்கள்.

முதல் மனிதன்.—ஏனம்மா ! ஒவ்வொன்றாய்க்கேட்க வேண்டுமோ ?

கமலாக்ஷி.—வேண்டியதில்லை அண்ணா ! என் பெயர் கமலாக்ஷி. நாங்களிருப் பது அப்பாசாமிமுதலி தெரு. என் தாயார் தேக அசௌக்கியமா யிருப் பதால் வைத்தியர் வீட்டுக்கு வந்து மருந்துவாங்கிக்கொண்டு போகி றேன். நானும் என் தாயாரும் தனித்திருக்கிறோம்.

இரண்டாவது மனிதன்.—உனக்கு விவாகம் முடிந்ததா என்று கேட்டாரே ! அதற்கேன் ஒன்றும் பதில் சொல்லவில்லை ?

கமலாக்ஷி.—அண்ணா ! நான் என் தாயாரோடிருக்கிறேன் என்று சொன்ன தில் அதற்கு மறுமொழி அடங்கியிருக்க வில்லையா ?

முதல் மனிதன்.—அவ்வளவு தானா அர்த்தமாகச் சொல்லவேண்டிய தென்ன ?

கமலாக்ஷி.—அண்ணா ! உலகத்தில் ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் பருவம் அடைந்தகாலத்தில் அவர்களுக்கு விவாசமாவது சகஜமாயினும் பெண் பிள்ளைகள் ஆடவர்களோப்பே ல் பேசுகிறதில்லை. அது நாணத்தா லன்றி வேறல்ல. நான் என் தாயாரோடிருக்கிறேன் என்று சொன்னால் எனக்கு விவாகம் ஆகவில்லை யென்று அறிந்துகொள்வீர்களென்றே அவ்விதம் சொன்னேன்.

இரண்டாவது மனிதன்.—புத்திசாலியாகப் புசன்றதைக் குறித்து மிக்க சந் தோஷப்படுகிறோம். உனக்கு வயது அதிகமா யிருக்கும்போல் காணப் படுகிறதே ! உனக்கேன் இன்னும் விவாகம் ஆகவில்லை ?

கமலாக்ஷி.—எனக்கு விவாகத்தின்மேல் விருப்பமில்லை. என் தாயாரைத் தனிமையில் விட்டுப் போகவும் மனமில்லை.

முதல் மனிதன்.—சபாஷ் ! சபாஷ் !! நன்றாயிருக்கிறது. அதிசயப்படும்படி யான சொல் என் காதில் இன்று விழுந்தது. மீனை விரும்பாத பூனையு முண்டா ? விவாகத்தின்மேல் பெண்களுக்கிச்சை இல்லை யென்பது பெரும் பொய்.

கமலாக்ஷி.—அண்ணு ! நான் பொய் சொல்லினும் மெய் சொல்லினும் அவைகள் உங்களுக்கு நன்மையையாவது கெடுதியையாவது தரப்போகிறதில்லே. அப்பேச்சை நிறுத்திவிடுவதே உத்தமம்.

இரண்டாவது மனிதன்.—நிறுத்தவேண்டாம். பெண்களின் தாய் தந்தை பெண்களுக்கு விவாகத்தின்மேல் விருப்பமிருக்கிறதா இல்லேயா என்று அறிந்து கொண்ட பின்னே மாப்பிள்ளேயைத் தேடுகிறார்கள் ? இல்லே ! பிள்ளே ஐசுவரிய முள்ளவனுக்கு கிடைப்பானுனுல் தங்களுடைய பெண் சௌக்கியத்தோடிருப்பாளென்று எண்ணங்கொள்ளுகிறார்கள். பெண்கள் கைநிறைந்த பொன்னேப் பார்க்கிலும் கண்ணிறைந்த புருடனே வேண்டுமென்பார்கள். புருடன் சுந்தரமாகவும், இளமையாகவும், தன் வந்தனுகவும் இருப்பானுகில் பெண்ணுக்கும் பெண்ணேப் பெற்றவர்க்குக்கும் மனச்சலிப்பு இராது. என் சினேகிதரில் ஒருவன் மன்மதனே இவன் என்று சொல்லத் தகுந்த சுந்தரமுள்ளவன். அவனுக்கு வயது இருபத்திரண்டாகிறது. அவனுடைய தாய் தந்தை வைத்துப்போன பூஸ்திதி நன்செயில் இருநூறு வேலி ; புன்செயில் நானூரு ஐந்நூறு வேலி யிருக்கக்கூடும். செட்டிகள் வீட்டில் வட்டிச்சாக சொடுத்திருப்பது ஐம்பதினுயிரம். இப்புண்ணியவானுக்கும் எனக்கும் பிராண சினேகம். இவனுக்குத் தகுந்த பெண்ணேப்பார்த்து விவாகம் நடத்துவிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிறேன். ஆனதால் உனக்கும் உன் தாயாருக்கும் இஷ்டமாயிருந்தால் துரிதத்தில் விவாகத்தை முடித்து விடலாம்.

முதல் மனிதன்.—பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போலாயிற்று. அதிர்ஷ்டம் வந்தால் இப்படியல்லவா வரவேண்டும் ! அம்மா ! அண்ணனே நம் பிஞல் உன் காலம் நல்லதாக முடியும். உன் கருத்தென்ன ? என்னிடத்தில் இரகசியமாகச் சொல். (என்று கமலாக்ஷியை நெருங்கி வந்தான்.)

தூணேயென்று நம்பி வந்தவளேத் துன்பஞ்செய்ய எண்ணி இவ்விதம் பேசுகிறார்கள் என்று கமலாக்ஷி எண்ணி இனி இவர்கள் நம்மை நெருங்கி வர இடங்கொடுக்கக் கூடாதென்று விரைவாக நடந்தாள். இருவரும் அவளே விடாமல் பின்தொடர்ந்து வந்து ஏன் வேகமாக நடக்கிறாய் ? உன்மனச் சம்மதம் சொல்லாமலிருக்கிற காரணம் என்ன என்றார்கள்.

கமலாக்ஷி.—சகோதரரே ! என் தாயாருக்குத் தேக அசௌக்கியம் என்று சொல்லியிருக்கிறேன். விரைவில் சென்று மருந்து கொடுக்கவேண்டும். (என்று வேகமாகவே நடந்தாள்).

கமலாக்ஷி விரைவாக நடக்கிறதைக் கண்ட இருவரும் பின் தொடர்ந்து ஒருவன் கமலாக்ஷியைச் சரீரத்தில் இடித்து நடந்தான். இடி பட்ட

தும ஐயோ ! என்றலறினாள். மற்றவன் ஏன் கத்துகிறாய் என்று தன் கையால் வாயைப் பொத்தினான். கமலாக்ஷி கையைத்தள்ளி ஓடினாள். இருவரும் பின்தொடர்ந்து பிடிக்கக் கமலாக்ஷி திமிறிக்கொண்டு ஓடினாள். இருவரும் பின் தொடர்ந்தோடிப் பிடித்துக்கொண்டார்கள். இரவில் தனித்து அகப்பட்டுக்கொண்ட கமலாக்ஷி ஐயோ தெய்வமே ! என்னைக் காப்பாற்றுவாரில்லையா வென்று கதறினாள். கமலாக்ஷியைப் பிடித்துக்கொண்டிருந்தவரில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, மாணிக்கம் ! இவளை விட்டு விட்டால் பெருங்கூச்சல் போடுவாள் ; கைத்துண்டை எடு, இவள் வாயில் துறுத்துவிட வேண்டும் என்றான்.

மாணிக்கம்.—ஆம் ! ஆம் ! இரத்தினம், அந்த வேலையை முதலில் செய்யா மற்போனால் நம்முடைய எண்ணம் நிறைவேறாது. (என்று கமலாக்ஷியின் வாயில் ஒரு துண்டைத் துறுத்தி ஒரு துண்டால் கைகளைக்கட்டி அவளைத் தூக்கினார்கள்.)

அச்சமயத்தில் மாணிக்கத்தின் மார்பில் விழுந்த ஒரு குத்தோடு அவன் நிலத்தில் சாய்ந்தான். மாணிக்கத்தைக் குத்தியவன் யாரென்று திரும்பிய இரத்தினம் ஒரு அன்னியனைக்கண்டு கமலாக்ஷியை விட்டுத் தன் பலங்கொண்டு அன்னியன் மார்பில் குத்தினான். அன்னியன் அந்தக் குத்தைத்தடுத்து இரத்தினத்தின் மார்பிலும் குத்தி அவனையும் நிலத்தில் சாய்த்துக் கமலாக்ஷியின் வாயிலிருந்தத் துணியை எடுத்து, சட்டையும் அவிழ்த்துவிட்டு, அம்மா ! பயப்படாதே, என்று தைரியப்படுத்தி இவர்கள் கையில் எப்படி அகப்பட்டாய் என்று கேட்டான்.

கமலாக்ஷி.—அண்ணா ! இங்கு நின்றுபேசுவது எனக்குப் பயமாக இருக்கிறது. நாம் பேசிக்கொண்டே போகலாம்.

அன்னியன்.—உன்னிஷ்டம் போல் செய்யலாம். நான் இப்பாதகர்களை வண்டிப்பாதையிலிருந்து பாதையோரத்தில் போட்டுவருகிறேன். (என்று அவ்விருவரையும் பாதையோரத்தில் இழுத்துபோட்டுக் கமலாக்ஷியோடு சென்றான்).

கமலாக்ஷி.—அண்ணா ! அவ்விருவரும் இறந்தா விட்டார்கள் ?

அன்னியன்.—இல்லை இல்லை. இருவரும் மூர்ச்சையாயிருக்கிறார்கள். அவர்கள் மூர்ச்சையிலிருக்கும் பொழுது வண்டிகள் இவ்வழியில் வந்தால் இறந்து விடுவார்களென்று இருவரையும் வண்டிப்பாதையில் இல்லாமல் பாதையோரத்தில் போட்டுவந்தேன். நீ இந்நேரத்தில் அவர்கள் கையில் எப்படி அகப்பட்டாய் ? உன் பெயரென்ன ?

கமலாக்ஷி.—அண்ணா ! என்பெயர் கமலாக்ஷி. என் தாயார் தேக அசௌக்கியமா யிருப்பதால் நான் புதுஊரில் வைத்தியர் வீட்டுக்குச் சென்று மருந்துவாங்கிக்கொண்டு வரும்பொழுது துணையில்லாமல் இவர்களிடத்தில் அகப்பட்டேன்.

அன்னியன்.—இந்நேரத்தில் தனித்து வைத்தியர் வீட்டுக்குச் சென்றது ஆச்சரியமே !

கமலாக்ஷி.—நான் மாலை மாலை மணிக்கு வைத்தியரை அழைத்துவரப்போனேன். வைத்தியர் முத்துச்சுமார முதலியார் மருமகள் அபாயமான வியாதியாயிருப்பதால் அவ்விடத்திலிருந்துவந்து சற்று நேரத்திற்குமுன் என்னிடம் பருத்து திரு வள்ளுவாருக்குக் கொடுக்கச்சொல்லித் திருமபி அவ்விடத்திற்கே போய்விட்டதால் அவரை அழைத்து வர முடியாமல் போனது.

அன்னியன்.—அப்பாதகர் சிலநாள்களுக்குமுன் கடைத்தெருவுக்கு எதிர்த்த மரத்தடியில் உட்சார்ந்து உன் பெயரைச்சொல்லிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நானும் மற்ற ஒருவரும் அவ்வழியாகப்போனோம். இரவாயிருந்ததால் இன்னாரென்று கண்டுகொள்ள முடியாமல் போயிற்று. அப்பாதகர்களே இவர்களாயிருக்க வேண்டும். உன்னுடைய வீடு இன்னும் அதிக தூரத்திலிருக்கிறதோ ?

கமலாக்ஷி.—இல்லை அண்ணா ! அதோ சமீபத்தில் தெரிகிற வீடே எங்களுடையது.

செழுங்கமலம் தன் மகள் வராமலிருப்பதன் காரணம் யாதோவென்று அடிக்கடி வெளியில் வந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்திலும் வெளியில் வந்து தன் மகள் வருவதைச்கண்டு, கமலாக்ஷி ! என் இவ்வளவு நேரம் ? என்றாள்.

கமலாக்ஷி.—வைத்தியர் முத்துச்சுமார முதலியார் மருமகளுக்கு ஆபத்தாயிருக்கிறதால அவர்கள் வீட்டிலிருந்து இப்பொழுதுதான் வந்து என்னிடம மருந்து கொடுத்துத் திருமபி அவர்கள் வீட்டுக்கே போய்விட்டார். ஆனதால் நேரமானது.

அன்னியன்.—அம்மா, நான் போய் வருகிறேன்.

கமலாக்ஷி.—அண்ணா ! தாங்கள் வந்து தாசதருக்காகிலும் சாப்பிடாமல் போகலாமா ? எளியவர்கள் வீடென்று போகிறேன் என்கிறீர்கள் ?

அன்னியன்.—அப்படி நினைக்கவேண்டாம். நான் புதுஊரில் ஒருவரைப் பார்க்கப் போனவன், உன்னைக்கண்டு உன்னோடு வந்தேன். நான் மற்றோர் சமயத்தில் வந்து தாசத்துக்குச் சாப்பிடுகிறேன்.

கமலாக்ஷி.—அண்ணா ! தாங்கள் அந்த வழியாகவா போகப்போகிறீர்கள் ?

அன்னியன்.—அதற்காக யோசிக்க வேண்டாம்.

கமலாகூஷி.—அண்ணு ! தங்கள் பெயர் இன்னதென்று சொல்லாமல் போகி றேன் என்கிறீர்கள்.

அன்னியன்.—அம்மா கமலாகூஷி ! நான் இவ்விடமிருந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கச் சாவகாசமில்லை. என் பெயர் விஜயரங்கம். நான் சாலை யில் வருகிறேன். (என்று சொன்னவுடன் திரும்பிப் புதுஊரை நாடிச் சென்றான்.)

செழுங்கமலம் தன் மகளும் விஜயரங்கமும் சகோதர வாஞ்சையோடு வார்த் தையாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு தனக்கவன் இன்னனென்று தெரியாமல் தன் மகளைப்பார்த்து கமலாகூஷி ! அந்த வாலிபன் ஆர் ? உன்னோடு என் வந்தான் ? என்று கேட்டனள்.

கமலாகூஷி.—தங்களிடத்தில் அதைச் சொல்லாமல் இருப்பேனு ? முதலில் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். தங்களுக்கெப்படி இருக் கிறது ? பெரியவருக் கெப்படியிருக்கிறது ?

செழுங்கமலம்.—எனக்குச் சிறிது சௌக்கியமாயிருக்கிறது; பெரியவர்க்குச் சுரம் குறைவுபடாமல் இருக்கிறது.

கமலாகூஷி.—பெரியவரும் தாங்களும் மருந்து சாப்பிட்டபின் நாம் பேசிக் கொண்டிருக்கலாம். (என்று இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.)

5-ம் அத்தியாயம்.

விஜயரங்கம் கமலாகூஷியிடம் விடைபெற்றுக் கொண்டபின் இரவையும் நேரத்தையுங் கவனியாமல் புதுஊரை நாடிக் கமலாகூஷியை மீட்ட இடத் திற்கு வந்து, அடிபட்டு மூர்ச்சையானவர்க ளின்னும் அவ்விடத்தி லிருக்கிறார்களா என்று பார்த்தான். இருவரும் அவ்விடம் இல்லாத தைக் கண்டு இருவரும் மூர்ச்சையானவர்களே யன்றி அவர்களுக்கு யாதோர் கெடுதியும் நேரிடவில்லை யென்று தனக்குள் சந்தோஷப்பட்டுச் சில தூரம்போகச் சமீபத்தில் இருவர் வார்த்தையாடிக்கொண்டு போ வதை யறிந்து யாரோவென்று அறிய அவர்கள் பின்சென்றான்.

மாணிக்கம்.—இரத்தினம் ! அவன் யாரென்று உனக்குத் தெரியுமா ?

இரத்தினம்.—இருட்டாயில்லாமற்போனால் அவனை இன்னனென்று அறிந்து கொள்ளக்கூடும். உனக்கு முதலில் விழுந்த குத்தால் உண்டாகிய சத் தம் யாதென்று திரும்பிப் பார்த்தவுடன் அன்னியன் ஒருவன் இருப்ப தைக்கண்டு என் பலங்கொண்டு அவனைக் குத்தினேன். அந்தக்குத்து அவன் மார்பில் விழுந்திருக்குமேயானால் அவன் நம்மைப்போல் உயி

ரோடு எழுந்து வந்திருக்கமாட்டான். கமலாக்ஷியின் நல்லவேளையே அவனைக் காப்பாற்றியது.

மாணிக்கம்.—ஒளித்துவந்து என் மார்பில் குத்தியதால் என் பொறி கலங்கி அவனை இன்னனென்று அறிந்துகொள்ளாமல் நிலத்தில் சாய்ந்தேன். அப்படிக்கில்லாமற்போனால் குத்தினவனை இலேசாகப் போகவிடுவேனா!

இரத்தினம்.—அவனுடைய நற்காலம் இருள்துணைகின்றது. ஆனதால், தப்பித்துச்சொண்டு ஓடிவிட்டான். நாம் மூர்ச்சை தெளியும்வரைக்குமாவது இருந்திருப்பானகில் நமக்கு இருக்கும வல்லமை இவ்வளவென்று காட்டி யிருக்கலாம். நான் எழுந்தபொழுது பாதை யோரத்திலிருந்து எழுந்தேனே! நான் மூர்ச்சையாயிருக்குமபொழுது நீ என்னைக்கொண்டு போய் அவ்விடம் போட்டாயா ?

மாணிக்கம்.—நானும் பாதை ஓரத்திலிருந்தே எழுந்தேன். அடித்தவனே நம்மை அவ்விடங் கொண்டுபோய போட்டிருக்கவேண்டும். நாம் மூர்ச்சையி லிருக்கும்பொழுது வண்டிசள் அவ்வழி வந்திருக்குமேயானால் நம்முடைய கதி எனன ?

இரத்தினம்.—கதியென்ன ? இருவர் வேலையும் முடிந்தேயிருக்கும் ; அதற்குச் சந்தேகமா ? கமலாக்ஷியே நம்மேல் இரக்கப்பட்டு நம்மைப்பாதை ஓரத்தில் போட்டு வரும்படி சொல்லி யிருப்பாள்.

மாணிக்கம்.—ஆம் ! அந்தத் துன்மார்க்கன் நம்மை ஒளித்துவந்து அடித்தவனுதலால் அப்போர்ப்பட்ட தைரிய ஈனனுக்குத் தயாளகுணம் எங்கிருந்து வரும் ?

இரத்தினம்.—வராது. நாம் எதிர்பார்க்காம லிருந்தது அசஸ்மாத்தாய்க் கிட்டியும் தவறிப் போனதைப்பார்த்தாயா ? சைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்று என்று சொல்லுவாகளே அதுபோல், இன்று நமது சையிலசப்பட்ட சமலாக்ஷி தப்பித்துக்சொண்டு போனது எனக்குப் பெருவிசனமா யிருக்கிறது. இவ்வித சமயம் இனி எச்சாலத்தில் கிடைக்கப்போகிறது ! நான் பாவி ஒரு முத்தமாகிலும் கொடுத்தேனா ?

மாணிக்கம்.—நாம் செய்தது முற்றிலும் தப்பிதம். சிறிது முன்பாகவே சமலாக்ஷியைப் பிடித்துக்கொண்டிருப்போமாகில நம்முடைய எண்ணத்தை முடித்துக் கொண்டிருக்சலாம. நாம் வீண் பேச்சில் காலத்தைக் கழித்தோம்.

இரத்தினம்.—அவள் நம்மோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது இன்னும் சற்றுநேரம் வார்த்தையாட மாட்டாளா ! புதுஊருக்கும் பழைய ஊருக்கும் மத்தியில் உள்ள சாலை அமையிலா யிராமல ஐந்து மயிலாய் இருக்கக் கூடாதா ! என்றல்லோ நான் நினைத்திருந்தேன்.

மாணிக்கம்.—நீ அவ்விதயோசனையிலிருந்தாய். நாலேஞ இச்சுந்தரியோடு சுகிக்கப்போவது நீயேயன்றி எனக்குக்கிடைக்கப் போகிறதா என்று எண்ணியிருந்தேன். அது விஷயத்தைக்குறித்து நீ என்னை மன்னிக்கவேண்டும்.

இரத்தினம்.—ஆற்றில் போகிறது பூலோ அலலாருக்கும் சொந்தம் என்பதுபோல் உன்னைவிட்டு நான் தனித்து அநுபவிச்ச இவ்விடங் கொள்ளமாட்டேன்.

மாணிக்கம்.—இந்த நல்ல எண்ணத்திற்சாக உனக்கு வந்தனம். நாம் இனி கமலாக்ஷி விஷயத்தைக் குறித்து என்ன செய்கிறது ?

இரத்தினம்.—நாம் அவளைச் சந்தையிற் கண்டபொழுது கொண்ட ஆசை, தகுதியான இடத்திலே நல்ல சமயத்தில் தற்செயலாய் அகப்பட்டு அவளோடு வார்த்தையாடியபின் அதிகமாய் விட்டது. இனி அவள் விஷயத்தில் செய்யப்போகும் யோசனை யிலேயுள்ளதாகவே யிருக்கவேண்டும். இனி ஒருகாலத்தில் கமலாக்ஷி நமது சையில் அகப்படுவாளானல் முதலில் நமது எண்ணத்தை முடித்துப் பின் மற்றதைப் பேசவேண்டும. இன்னமும ஏமாந்து போகக்கூடாது.

மாணிக்கம்,—நமது எண்ணத்தை இன்று முடித்து அவளோடு சுகித்திருப்போமையானால் என்ன சந்தோஷத்தோடு இருப்போம் ? என்ன செய்யலாம் ? விரும்பிய காரியம் ஒரு நிமிஷத்தில் கைகூடுகிறது. அதைத் துச்சமாய் நினைத்து விட்டோம். ஒரு நூறை அவள் நமது வலையிலகப்பட என்ன செய்தாலும் செய்யலாமென்றிருக்கிறாள் ?

இரத்தினம.—அவளைக் கைப்பற்றுவது பெரும்பாடாயமல்ல. 'எண்ணித்துணிக' என்ற வாக்கின்பிரகாரம் நாம் எல்லா விஷயத்தையுங் கவனித்துச்செய்யவேண்டும். நாம் நூற்றைத்தோடு ஓர் காரியத்தைச் செய்து விட்டாலும் கமலாக்ஷியும் அவள் அம்மாளும் தனித்திருப்பதாலும் மிக எளியவர்களாதலாலும் அதைத் தடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும் நாம் செய்யும் வேலை நடச்சே செடுதியாக முடிந்தாலும் முடியும்.

மாணிக்கம்.—எந்த விஷயத்தில் செடுதியாக முடியும் என்கிறாய் ?

இரத்தினம்.—நாம் கமலாக்ஷியை இவ்விதம் செய்தோமென்று பிறர் அறிந்தால் நான் வனசாக்ஷி விஷயத்தில் போட்டிருக்கும் புள்ளி தப்பிப்போக நேரிடும. ஆனதால் நாம் சாவதானமாக யோசித்து ஓர் காரியத்தைச் செய்யவேண்டும். நாம் முன்றையுஞ்சருதாமல் பொருளைச் செலவழித்து அவர்களுக்கு ஓர் செடுதியைச் செய்தால் அவர்களுய பொருளைச் செலவழித்துத் தப்பித்துச்(கொள்ள முடியாது. பணத்தைச் செலவழித்தால் அசாத்தியமானதை யெல்லாம் சாத்தியப்படுத்திக்கொள்ளலாம்.

மாணிக்கம்.—கமலாக்ஷியின் அண்ணை பொருளின்மேல் விருப்ப முள்ளவளா யிருந்தால் சுலபத்தில் எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொள்ள லாமே ?

இரத்தினம்.—கமலாக்ஷியின் அண்ணை பொருளின்மேல் விருப்பம் அற்றவ ளென்றும் தன்மைகள் சுபாவத்தினால் மிகு மேன்மையாகப் பார்த்து வரு கிறா ளென்றுந் தெரியவில்லை ?

மாணிக்கம்.—கமலாக்ஷிக்கு பொருளின்மேல் விருப்பம் இருக்கிறதாகக் காணப்படவில்லை தெரிகிறதா ?

இரத்தினம்.—அவள் இற்றை தினமட்டும் யோசித்தபடியே தன்மையைக் கவ னித்தால அவளை தன சற்பைச் காப்பாற்றிக்கொள்ளும் விதமாகவும் நம் முடைய மனதைச சந்தோஷப்படுத்தும விதமாகவும் பேசிவந்தாளே யல் லது நான குறிப்பித்த தனவந்தனைக்குறித்து அவன் ஆரென்றாவது எங் கிருக்கிறான் என்றாவது கேட்டாளா ? ஆனதால் நம்முடைய யோசனை வேறுவிதமாய இருக்கவேண்டும.

மாணிக்கம்.—வேறு என்ன யோசித்திருக்கிறாய் ?

இரத்தினம்.—பகலில் பக்கம் பார்த்துப்பேசு, இராத்திரியில் அதுவும் பேசா தே என்பார்கள். அதைச் சுவனியாமல் நெடுநேரம் பேசிச்சொண்டிருந் தோம். யாராகிலும இதுவிஷயத்தைக் கேட்டுக்கொண்டிருந்து அவர்க ளிடத்தில் சொல்லிவிடுவார்களானால், அவர்களை முன் ஜாக்கிரதையாய் விடுவார்கள். உனக்குச் சொல்லாமலாவது உன்னுடைய யோசனை யைக் கேட்காமலாவது ஓர் காரியத்தைச் செய்யத்துணியேன். (என்று மெதுவாகப் பேசிக்கொண்டு போனார்கள்.)

இதற்குள் புதுவாரும் சமீபமாகவே வருகைகள் சந்தடியைக்கண்டு மாணிக்க மும் இரத்தினமு ஏறுபக்கி போன வுடன் விஜயரங்கம் வேறுபக் கம் திரும்பி நிற்பதாகத் தலையசி சயத்தில் கெடு தியைச் செய்யக் சகசனங் சட்டிக்கொண் டிருக்கிறான். அவர்கள் பேசினவற்றை முற்றிலும் அறிந்தாலும் முடிவில் ஏதோ ஓர் வினவுகொண்டு அவர்க ளுடைய தீர்மானத்தை இரகசியமாகப் பேசிப்போனார்கள். இதை எப் படி அறிந்துகொள்ளுகிறது. இச்சமாசாரத்தைக் கமலாக்ஷியிடத்தில் சொல்லுவோமேயானால் அவள் மிகவும்பயந்து விடுவாள். சொல்லா மற்போனாலும் கெடுதியாய் முடியும்போலிருக்கிறது. கமலாக்ஷியும் அவள் அண்ணையும் பொருளற்றவர்களாயிருந்தாலும் நன்னடக்கையைக் கைப்பற்றினவர்களாகக் காணப்படுகிறார்கள். நாம் ஏதாகிலும் உதவி செய்யலாமென்றால் வழியொன்றுங் காணப்படவில்லை. கமலாக்ஷி பட்டின் விளக்கொளியால் அவள் மிக்க சுந்தரமுள்ளவளாகவே காணப்பட்டாள். அவள் வார்த்தையும் காதுக்கு இனிமையைத் தந்தது.

நாம் தாகத்துக்குச் சாப்பிடாமல் வந்ததும் அவளுக்கு மனவருத்தமா யிருக்கிறதாகக் காணப்பட்டதால், நற்குணமுள்ளவளாகவுங் காணப் பட்டாள். நாம் அனேகமுறை அவர்கள் வீட்டுவழி போயிருக்கிறோம். ஒரு தடவையாவது கமலாக்ஷியைக் கண்டதேயில்லை. பெண்களில் இவ்வளவு சுந்தரமுள்ளவர்கள் இருப்பார்களென்று நாம் நினைக்க வில்லை என்று மனதில் நினைத்து ஓர் வீட்டின் கதவைத் தட்டினேன். உடனே கதவுதிறச்சப்பட்டு ஒருவன் வெளியில் வந்தான்.

விஜயரங்கம்.—இப்பொழுது தேகசௌக்கியம் எப்படியிருக்கிறது ?

சோமசுந்தரம்.—யாருக்கு எப்படி யிருக்கிறது என்று கேட்கிறாய் விஜயரங் கம் ?

விஜயரங்கம்.—உன் மனைவிக்கு ?

சோமசுந்தரம்.—என் பெண்சாதிக்குத் தேக அசௌக்கியமென்று நீ எவ்வி தம் அறிந்தாய் ?

விஜயரங்கம்.—எவ்விதமாகவோ அறிந்தேன். எப்படி இருக்கிறதென்று கேட்டால் அதற்கொன்றும் பதில் சொல்லாமலிருக்கிறாய்.

சோமசுந்தரம்.—இன்று மாலை எல்லாம் சந்தோஷமாக இருந்தேன். அதன் பின் மன வருத்தம் உண்டாய் விட்டது. (என்று கண்ணீர் விட்டான்.)

விஜயரங்கம்.—வைத்தியர் என்ன சொல்லுகிறார் ?

சோமசுந்தரம்.—என்மனம் மேலும் மேலும் துக்கப்படவே யாவும் சொல்லு கிறார்.

விஜயரங்கம்.—எத்தனை மணி பரியந்தம் உனக்குச் சந்தோஷத்தைக் கொடுக் கும்படியான ஸ்திதியிலிருந்தது ?

சோமசுந்தரம்.—எட்டுமணி பரியந்தம் ஆனந்தமாய் இருந்தேன்.

விஜயரங்கம்.—அதன் பின் நீ துக்கப்படும்படி நேரிட்டதைக் குறித்து நானும் துக்கப்படுகிறேன். எனக்கேன் சொல்லியனுப்பாமல் இருந்து விட்டாய் ?

சோமசுந்தரம்.—வீணில் உனக்குத் தொந்தரவு கொடுக்க மனமில்லாமலே.

விஜயரங்கம்.—உன் மனைவியை நீ இச்சித்திருந்தாயல்லவா ?

சோமசுந்தரம்.—என் தாய்தந்தை என் கருத்தை அறியாமல் எனக்குத் தேடி வைத்த நாயகியைக் கண்டவுடன் இச்சித்தேன். அம்மாதும் என்னை முற்றிலும் இச்சித்தே இருந்தாள். நாங்கள் ஒருவரையொருவர் கண்டால் எங்களுக்குண்டாகிய துன்பம் அப்பொழுதே நீங்கிவிடும்.

விஜயரங்கம்.—ஒருவர்மே லொருவர் அன்பு கொள்வது அரிதல்லவா ?

சோமசுந்தரம்.—தாய் தந்தைகள் தங்கள் பிள்ளைகளுக்கு விவாகஞ்செய்ய இருக்குங்காலத்தில் காட்டில் விலைக்கு வாங்கிவரும் மாட்டைப்போல்

ஒரு பெண்ணைக் கொணர்ந்து மணப்பந்தலில் மாப்பிள்ளைக்குக் காட்டு கிறார்களன்றி, விவாசஞ் செய்து கொள்ளுமுன் பெண்ணைக்காட்டி மாப்பிள்ளையின் சம்மதத்தை அறிந்து விவாசத்தை முடிச்கிறதில்லை. முன்பாகப் பார்த்திராத பெண்ணை மணந்தபின் நாளடைவில் ஒருவனை யொருவர் பார்க்கவும் வார்த்தையாடவும் வழக்கத்தில்வந்தால் ஒருவரை யொருவர் இச்சிக்கிறதையும் இச்சிக்காமல் போகிறதையும, விவாசம் முடிந்தபின் இந்த பெண்சாதி எனக்கு வேண்டியதில்லையென்று சொல் லுகிறதையும் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். மற்றமதஸ்தர்களைப் போல் பெண்களைக்கண்டு வார்த்தையாடி ஒருவரை யொருவர் இச்சித் தபின் விவாசம் ஆகாத குறைவால் இச்சிப்பை விலைக்குவாங்கி வைத் துக்கொள்ளவேண்டியதாய் முடிகிறது. இச்சை இயற்கையால் வருவது அரிதோ ! மற்ற மதஸ்தர்களுக்கே இது விஷயத்தில் சிறப்பு.

விஜயரங்கம்.—நாம் முற்றிலும் அது விஷயத்தை உள்துழைந்து பார்த்தால் அது சிறந்ததாசக் காணப்படாது.

சோமசுந்தரம்.—இதென்ன நீ இவ்விதஞ் சொல்லுகிறாய் ? நாசரீசம் தெரி யாத ஓர் பெண்ணைக் கொண்டுவந்தால் நாசரீசம் அறிந்த நாயகன் எவ் விதம் இச்சிப்பான் ?

விஜயரங்கம்.—இச்சையைக் குறித்து மற்றும் ஓர் சமயத்தில் பேசலாம். வீட் டில் அசௌச்கியமா யிருக்கும்பொழுது நாம் இங்கு இன்றுசொண்டிருப் பது அழகல்ல. (அச்சமயத்தில் ஒருவர் வீட்டிலிருந்து வெளியில் வந்து நான் போய் வருகிறேன் சோமசுந்தரம் என்றார்.)

சோமசுந்தரம்.—நல்லது போய்வாரும வைத்தியரே !

விஜயரங்கம்.— வைத்தியரே ! எப்படி யிருக்கிறது ?

வைத்தியர்.—இன்னவிதமாக இருக்கிறதென்று சோமசுந்தரம் சொல்லவில் லையா ?

விஜயரங்கம்.—அவர் என்ன சொன்னாலும் தங்கள் வாயால் கேட்டால் திருப் தியா யிருக்கும்.

வைத்தியர்.—இனி எள்ளளவும் பயமில்லை. சல்லா லடித்தாலும் சாவில்லை யென்று எட்டுமணிக்கே சொன்னேன்.

விஜயரங்கம்.—எட்டுமணிக்குச் சொன்னீரா ? என்ன சோமசுந்தரம்! வைத்தி யர் சொல்வது நிஜந்தானா ?

சோமசுந்தரம்.—ஆம் ! ஆம் ! (என்றே சோமசுந்தரம் அழுதுகொண்டிருந் தான்.)

6 - ம் அத்தியாயம்.

கமலாக்ஷி பெரியவரை அழைத்துவந்து தன் தாயார் அனுமதியால் தங்கள் வீட்டில் வைத்துப்பார்த்து வந்ததில் பெரியவருக்குப் பிரதமத்தில் நலி

அதிகரித்து வந்தது. கமலாக்ஷி தனித்து வைத்தியர் வீட்டுக்குச் சென்று மருந்து வாங்கிவரும் வழியில் நேரிட்ட விபத்தை வைத்தியர் அறிந்து கமலாக்ஷியைத் தனித்துத் தன் வீட்டுக்கு வரவேண்டாமென்று தடுத்து நாள்தோறும் தாமேபோய்ப் பெரியவரைப்பார்த்துவந்தார். விஜயரங்கமும் தான் வாக்களித்தவண்ணம் கமலாக்ஷியையும் அவள் அன்னையையுங் கண்டு பெரியவர் அவ்விடம் இருப்பதன் காரணமறிந்து அடிக்கடி சென்று பெரியவரைப்பார்த்து வந்தான். பெரியவர் அவ்வீட்டிற்கு வந்து இரண்டுவாரமான பின் தேகம் கிஞ்சித்துச் சௌக்கியமானதைக் கண்ட கமலாக்ஷியும் அவள் அன்னையும் மிக்க மகிழ்வுடனே பெரியவரை உபசரிப்பதில் அதிக சுவனம்வைத்து, அவருக்குத் தேகத்தில் பலம் உண்டாகும்படி வைத்தியர் சொல்லியவண்ணம் வேளைக்கு வேளை பத்தியங்கொடுத்தும் அவரோடு நயமாக வார்த்தையாடி எப்பொழுதும் அவரோடு ஒருவர் இருந்தும் வந்தார்கள். ஒருநாள் காலை பெரியவர் தன்னெதிரிருக்கும் கமலாக்ஷியைப்பார்த்து அம்மா ! கமலாக்ஷி ! நான் உங்கள் வீட்டில் வந்திருந்து உங்களுக்குப் பெருஞ் செலவை உண்டாக்கிவிட்டேன் அல்லவா ? என்று கேட்டார்.

கமலாக்ஷி.—தாதா ! தாங்கள் இவ்விதம் சொல்வது நியாயந்தானு ? (என்று கண்களில் ஜலந்தோன்ற மன்றாள்.)

பெரியவர்.—ஐயோ அம்மா ! நான் சொன்னது உனக்கு மனவருத்தத்தை உண்டுபடுத்தியதைக் குறித்து விசனப்படுகிறேன். (என்று கமலாக்ஷியின் கண்களைத்துடைத்து) உன்னுடைய நற்குணத்திற்கு என்ன கைம்மாறுக்கிறது. நான் தனவந்தனும் ஒரு குமாரனை உடையவனும் இருப்பேனுகில் உங்களைத் தனவந்தர்களாகி என்மகனுக்கே உன்னை விவாகஞ்செய்துகொள்வேன். (என்று நகைத்தார்.)

கமலாக்ஷி.—(நகைத்துச்சொண்டே) தாதா ! தாங்கள் முற்றிலும் கௌக்கிய மாய் நடமாடப் பார்ப்பதே எங்களுக்கு எல்லாச செல்வமும் உண்டானதுபோலிருக்கும். நாங்கள் தனவந்தராயிருச்சவேண்டு மென்கிற விருப்பம் எங்களுக் கிலாதிருந்தாலும் இத்தருணத்தில் நாங்களுந் தனவந்தரா இருப்போமாயின் தங்களுக்கு மிலான சுவளக்கியத்தைச் சொடுப்போமே, அஃது இல்லாமலிருக்கிறதே, என்று துக்கப்படுகிறேன்.

பெரியவர்.—கமலாக்ஷி ! நீயும உன்தாயாரும் என விஷயத்தில சாட்டும் பேரன்புக்கு அளவில்லை. பொருள் இருந்தாலும இல்லாதாற் போலுமு இப்பொழுது நடப்பதைவிட வேறென்ன செய்யமுடியும் ? நோயாளிக்குக் கஞ்சியோடு பால் விட்டுச்சொடு என்று வைத்தியர் சொல்லுவாரா

பெரியவர் செட்டியாரை யழைத்து ஒரு நாற்காலியில் உட்காரசெயது நுங்கள பெயர் என்ன விஸ்வ நாதம செட்டி ரரா ? (36ம்-பககம் பார்க்க)

ஞல் எளியவர் எவ்விதம் கொடுப்பார்? தனவந்தர் எவ்விதங்கொடுப்பார்? எல்லோரும் ஒரே விதமாகவே கொடுக்கவேண்டும். இதில் தனவந்த ராயிருந்து பலன் என்? இதை யோசியாமல் பேசுகிறாய்.

கமலாக்ஷி.—தாதா! தாங்கள் சொல்லியது உண்மையேயாயினும், பொருளி ருந்தால் தங்களுக்கு வேண்டியதை யெல்லாம வாங்கி வரலாம்.

பெரியவர்.—பொருளிருந்தால் என்னதான் செய்வாய்? நான் சாப்பிடக் கூடியவைகளும் இவ்வூரில் கிடைக்கத்தக்கவைகளுமாகிய பழவர்க் கங்கள் என் எதிரில் இருக்கும் மேஜையில் நிறைந்திருக்கின்றன. இவைகளைவிட வேறு என்னவாங்கித் தருவாய்?

கமலாக்ஷி.—தாதா! பழவர்க்கங்கள் முற்றிலும் நாங்கள் வாங்கவில்லை. வண சாக்ஷி சில வாங்கி வந்தாள். விஜயரங்கத் தண்ணன் சில வாங்கி வந் தார். (என்பெயர் என்னத்திற்கு வந்தது என்று விஜயரங்கமும் அவ் விடம்வந்து பெரியவரை வணங்கி உட்கார்ந்தான். பெரியவர் அருகில் உட்கார்ந்திருந்த கமலாக்ஷி, வாரும் அண்ணு! என்று எழுந்துபோக எத் தனித்தாள்.)

பெரியவர்.—கமலாக்ஷி! இரு. உன் அண்ணன்தானே வந்தவர். அவர் வந்த வுடன் என் எழுந்து ஓடப்போகிறாய்?

கமலாக்ஷி—ஓடவில்லை தாதா! அம்மாளைத் தமையனர் குடிக்க தாகத்துக் குக் கொண்டுவரும்படி சொல்லப்போகிறேன்.

விஜயரங்கம்.—அம்மா கமலாக்ஷி! நான் இப்பொழுதுதான் தாகத்துக்குச் சாப்பிட்டுவந்தேன். மீண் தொந்தரவு எடுத்துக்கொள்ள வேண்டாம்.

கமலாக்ஷி.—அண்ணு! தாங்கள் வரும்பொழுதெல்லாம் சாப்பிட்டு வந்தேன்! சாப்பிட்டு வந்தேன்! என்று சொல்லுகிறீர்களே யன்றி ஒருநாளாகிலும் சாப்பிடவில்லை. எளியவர்கள் வீட்டில் சாப்பிட்டு அவர்களை நஷ்டப் படுத்தக்கூடாதென்கிற கருத்தோ அறியேன்!

விஜயரங்கம்.—அம்மா! என்னைக் கோபியாமல் உன்னிஷ்டம்போல் கொண் டுவா. நான் சாப்பிடுகிறேன். நான் இரண்டு மூன்று தடவை உங்கள் வீட்டில் தாகத்துக்குச் சாப்பிட்டிருந்தும் வீணே என்மேல் குற்றஞ் சுமத்துகிறாய்.

கமலாக்ஷி சிரித்துக்கொண்டு தன் தாயாரிடம சென்று விஜயரங்கம் வந்தி ருக்கிறரென்று தெரிவித்து வந்தாள்.

விஜயரங்கம்.—அம்மா கமலாக்ஷி! உன்னிடத்தில் சில சமாசாரங்கள் சொல்ல எண்ணங்கொண்டிருக்கிறேன்.

கமலாக்ஷி.—என்ன சொல்லப்போகிறீர் அண்ணு ? தாங்கள் சொல்வதைக் கேட்கச் சித்தமா யிருக்கிறேன்.

விஜயரங்கம்.—உன் சிநேகி வனசாக்ஷியை இரத்தினம் விவாகஞ் செய்து கொள்ள எண்ணங்கொண்டு பலரிடத்தில் சொல்லித்திரிகிறான். அவன் விஷயத்தில் நான் கேள்விப்பட்டவைகள் யாவும் அவனுக்கு விரோதமாகவே காணப்படுகின்றன. ஆனதால் அவன் விஷயத்தை நன்றாய் யோசிக்கும்படி வனசாக்ஷியின் தாயாருக்குச் சொல்லியனுப்பினால் உத்தமம் என்று எனைக்கிறேன்.

கமலாக்ஷி.—இரத்தினம் என்ற புண்ணியவான் என் விஷயத்தில் செய்த கெடுதியை என் சினேகை வனசாக்ஷிக்குச் சொல்லியிருப்பதால் இது விஷயத்தை நான் சொன்னால் என்ன அபிப்பிராயப் படுகிறார்களோ என்ற பயம் அதிகமாய் இருக்கிறது.

(பயப்படவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டே வனசாக்ஷியும் எதிரில் வந்தாள்.)

பெரியவர்.—வனசாக்ஷி ! உனக்கு நூறு வயது ! இவர்கள் பேசியவைகள் யாவையும் கேட்டுக்கொண்டா இருந்தாய் ?

வனசாக்ஷி.—இல்லை தாதா ! யாரோ ஒரு புண்ணியவான் பெயரை இந்த அண்ணன் சொல்லியது முதல் கேட்டுக்கொண்டே வந்தேன்.

(அச்சமயத்தில் செழுங்கமலம் தாகத்துக்குக் கொண்டுவந்து யாவருக்கும் கொடுத்தாள்.)

விஜயரங்கம்.—அம்மா ! வனசாக்ஷி ! உன்னை இந்தவீட்டில் பார்த்தது முதல் நான் இது விஷயத்தைக் குறித்துச்சொல்ல எண்ணம் இருந்தும், இது பரியந்தம் சொல்லாமல் இருந்தேன். ஏனெனில், நூறு பொய்யையாகிலும் சொல்லி ஒரு மணத்தை முடிக்கவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். ஆனதால் அதைக்கெடுக்க ஒருவரும் துணியார். உலக வழக்கம் இவ்விதம் இருந்தாலும் இரத்தினத்தின் நடத்தையையும் அவன் எண்ணத்தையும் நான் நேரில் பார்த்தும் பலரால் கேட்டும் இருப்பதால் என் மனம் சகியாமல் இன்று தங்கை சுமலாக்ஷியிடம் சொல்லி உன் தாயாருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

பெரியவர்.—அப்பா விஜயரங்கம் ! இரத்தினம் எந்த விஷயத்தில் அபாத்திரனாயிருக்கிறான் ?

விஜயரங்கம்.—ஐயாவே ! எல்லா விஷயத்திலுமே ! அவனுடைய நடத்தை இவ்விடத்தில் இருப்பவர்கள் யாவருக்குந் தெரிந்ததே ! அவன் செட்டிகளிடத்தில் பெருந்தொகையைக் கடன் வாங்கிக் கெட்டவிஷயத்திற்

செலவழிக்கிறான். கடன்காரர்களுக் கெல்லாம் தான் ஓர் தனவந்தன் மகளை விவாகஞ் செய்துகொள்ளப் போகிறதாகவும், விவாக மானவுடன் கடன்களை யெல்லாம் கொடுத்துவிடுவதாகவும் சொல்லுகிறான்.

பெரியவர்.—அவன் யாரிடம் சொன்னான் ?

விஜயரங்கம்.—ஓர் செட்டியாரிடத்தில்.

பெரியவர்.—எந்தச் செட்டியார் ?

விஜயரங்கம்.—ஒரு பெரியகடை முதலாளி. அவர்பெயர் விஸ்வநாதம் செட்டி ?

பெரியவர்.—அந்த விஸ்வநாதம் செட்டியாரை இவ்விடம் அழைத்துவர முடியுமா ?

விஜயரங்கம்.—சற்று நேரத்திற்குள் அழைத்துவரக்கூடும். அச்செட்டியார் என்னோடு வந்து அடுத்த தெருவுக்குப்போயிருக்கிறார்.

பெரியவர்.—அவரைக் கண்டறிந்தால் யாவும் முடிவுபெறும்.

விஜயரங்கம்.—நல்லது, ஓர் நொடியில் அழைத்து வருகிறேன். (என்று விஜயரங்கம் அவ்விடத்தை விட்டு நீங்கினான்.)

பெரியவர். —அம்மா வனசாக்ஷி ! செட்டியாரைக்கண்டு விசாரித்தபின் எதையும் யோசிக்க வேண்டியதேயன்றி அதற்கு முன் எந்தத் தீர்மானமும் செய்யக்கூடாது.

செழுங்கமலம்.—ஆயிரங்காலத்துப் பயிரானதால் நன்றாயோசித்தே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் அண்ணா !

பெரியவர்.—ஆம் ! ஆம் ! அவசரப்பட்டு ஏதொன்றைச செய்தால் அதைக் குறித்துப்பின் வியசனப்பட வேண்டும். அம்மா ! வனசாக்ஷி ! உன் தாயார் பெயரென்ன ?

வனசாக்ஷி.—பூங்காவனம், தாதா !

பெரியவர். —உன் தகப்பனார் பெயரென்ன ? அவர் காலஞ் சென்று நெடு நாளாயிற்றா ?

வனசாக்ஷி.—என் தந்தையின் பெயர் கந்தசாமி முதலியார். அவர் காலஞ் சென்று நெடுநாளானதென்று என்தாயார் சொல்லுகிறார்கள். எனக்கு அவர் தெரியாது. அவர் அருணாசல முதலியாருடைய நெருங்கின சினேகிதர் என்று கேள்வி.

பெரியவர்.—அருணாசல முதலியார் என்பவர் யார் ?

வனசாக்ஷி.—அவர் இவ்வூரிலுள்ளவர்களில் மிக்க தனவந்தர்.

பெரியவர்.—அவர் எங்கிருக்கிறார் ? நான் உங்களைவிட வயது சென்றவனாதலால் என்ன என்னவோ கேட்கிறேன், கோபித்துக்கொள்ள வேண்டாம்.

வனசாக்ஷி.—கோபம் என்னத்திற்காக வரப்போகிறது ! தாங்கள் எங்கள் நன்மையைக் கருதித் சேட்பதற்குக் கோபித்துக்கொள்ளவேண்டிய காரணம் இல்லை. தாங்கள் கேட்ட அருணாசல முதலியார் உயிரோடிருப் பாராஞல் எங்களுக்கென்ன குறைவு ! எங்கள் குடும்பத்தையும் எங்கள் சிறியதாயார் குடும்பத்தையும் சேர்க்கவிடாரே !

பெரியவர்.—உன் சிறிய தாயார் இருப்பதாக எனக்கிதுபரியந்தம் சொல்ல வில்லையே ! உன்சிறிய தாயார் எங்கிருக்கிறாள் ?

வனசாக்ஷி.—என் சிறிய தாயார் தங்களுக்குத் தெரியாதா ? என் சிறிய தாயார் வீட்டில் தாங்களும் நானும் தற்காலம் இருக்கிறோம். (என்று சிரித்தாள்.)

பெரியவர்.—(சிரித்துக்கொண்டே) அருணாசல முதலியார் உன் தந்தைக்குச் சினேகரென்றாய் ; ஆனதால் அவர் உயிரோடிருந்தால் உங்களுக்கு உதவி செய்யினும் செய்வார். செழுங்கமலத் தம்மாளுக்கு என்ன காரணத்தால் உதவி செய்வார் என்று நினைக்கிறாய் ?

வனசாக்ஷி.—அருணாசல முதலியாரென்பவர் என் சிறிய தாயாரின் சகோதரர் என்று தாங்கள் சென்விப்பட்டதில்லையா ?

பெரியவர்.—இல்லை. உங்கள் குடும்பத்துக்கும் செழுங்கமலத்தின் குடும்பத்துக்கும் ஏதாகிலும் சம்பந்தமுண்டா ?

வனசாக்ஷி.—என் தந்தை வழியில் உண்டென்று என் தாயார் சொல்லியிருக்கிறார்கள்.

பெரியவர்.—அருணாசல முதலியார் இறந்துவிட்டாலும் அவருக்குப் பெண் சாதி பிள்ளைகள் சகோதரர்கள் இல்லையா ?

வனசாக்ஷி.—பெண்சாதி பிள்ளைகள் இல்லை. வேறுகாத முதலியார் என்கிற சகோதரர் ஒருவர் இருக்கிறார்.

பெரியவர்.—அவர் ஒரு உதவியும் உங்களுக்குச் செய்கிறதில்லையா ?

செழுங்கமலம்.—அண்ணு ! அவர் எங்களுக்கு உதவிசெய்யாமற் போனுல் தோஷமில்லையே ! நாங்கள் அற்ப உதவியையும் அவரிடத்திலிருந்து எதிர்பார்க்கவில்லை. எங்கள் வீட்டுக்கு வரப்போக இருந்தால் நாங்கள் சந்தோஷப்படுவோம். அவர் எங்களை யாரோ எவர்களோ என்று பார்க்கிறார்.

பெரியவர்.—கமலாக்ஷியின் தந்தையும் காலஞ்சென்று நெடுநாளாயிற்றே ? பெரியவர் கேட்டதற்குப் பதில் சொல்லுமுன் விஜயரங்கமும் செட்டியாரும் வீட்டுக்குள் வந்தார்கள். பெரியவர் செட்டியாரை யழைத்து ஒரு நாற்காலியில் உட்காரச்செய்து தங்கள் பெயர் என்ன விஸ்வநாதம் செட்டியாரா ? என்றார்.

செட்டியார்.—ஆம் ஐயா !

பெரியவர்.—தங்கள் கடைவிலாசம் என்ன?

செட்டியார்.—மயிலாபுரியிலுள்ள கடைக்கு ராவன்ஞ டாஞ காஞ வேஞ என்று பெயர்.

பெரியவர்.—செட்டியாரே! நாம் இருவரும் தனித்து வார்த்தையாட வேண்டியதாயிருக்கிறது. நாம் தோட்டத்துப்பக்கம் போய்வரலாமா?

செட்டியார்.—ஆஹா! அப்படியே செய்யலாம்.

என்று பெரியவரும் செட்டியாரும் வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள தோட்டத்துக்குள் நுழைந்தார்கள். இருவரும் நீங்கியபின் விஜயரங்கம் யாவரையும் பார்த்துப் பெரியவர் நமக்குமுன் பேச இவ்விடங்கொள்ளாமல் போனதன் காரணம் தெரியுமா? என்று கேட்டான்.

வனசாக்ஷி.—இவ்விடம் இருந்து பேசினால் என்னைச் சுட்டிக்காட்ட நேரிடுமென்றும், சேவலமான பேச்சுகள் காதில் விழுந்தால் நமக்கெல்லாம் மனவருத்தமாயிருக்குமென்றும் நினைத்தே தனித்து வார்த்தையாட அழைத்துப்போனரென்று நினைக்கிறேன்.

விஜயரங்கம்.—பெரியவர் கருத்து அவ்விதமாகவே இருக்கவேண்டும். வேறு கருத்துக்கொள்ள ஏதுவில்லை. பெரியவர் காலைமாலை வெளியில் போய் உலாவி வருகிறாரா?

கமலாக்ஷி.—சிலநாள்களாக வெளியில் போய் வருகிறார்.

விஜயரங்கம்.—பெரியவர் பெயர் என்ன என்று தெரியுமா?

கமலாக்ஷி.—ஒருநாள் பெரியவர் சட்டைப்பையிலிருந்து விழுந்த சடிதம் ஒன்று அவர் படுக்கைக்குச் சமீபத்தில் இருந்தது. அதை எடுத்துப் பெரியவரிடங் கொடுக்கும் பொழுது அக்சடிதத்தில் நடராஜமுதலியார் என்றிருந்ததைப் பார்த்து மற்றதைப் பாராக்காமல் பெரியவரிடங் கொடுத்தேன். அவர் சிரித்துக்கொண்டு என் பெயரைக் கண்டுகொண்டாயா என்றார். நான் மனவருத்தத்தோடு நிற்பதைக் கண்டு என்னை நடராஜமுதலியாரென்றே அழைக்கிறார்கள். என் பெயரைக் கண்டுகொண்டதால் நீ மனவருத்தப்படவேண்டிய காரணமில்லையே என்று நகைத்தார்.

விஜயரங்கம்.—மிக்க சந்தோஷம். அந்தையை அழைத்துவந்து வீட்டில் வைத்துப்பார்த்து வருகிறார்களே! அவர் என்ன ஜாதியோ என்று ஐயங் கொண்டிருந்தேன். அது இன்று நீங்கியது.

கமலாக்ஷி.—அவர் முகத்தைப் பார்க்கும்பொழுது நற்குண முள்ளவராகவும் உயர் குலத்தவரைப் போலவும் காணப்படவில்லையா?

வனசாக்ஷி.—ஆம்! அது உண்மையே யாயினும் யாவும் அறிந்து செய்வதே உத்தமம்.

செழுங்கமலம்.—அன்று கமலாக்ஷி பெரியவர் பெயர் நடராஜமுதலியாரென்று சொன்னவுடன் என் மனமும் சந்தோஷமடைந்தது. எச்சாதியாராக

இருக்கினும் நாம் உதவிசெய்யவேண்டியது சட்டாயமானலும் உலகத் தார்க்கும் பயப்படவேண்டியது அவசியமாக இருக்கிறது.

விஜயரங்கம்.—நான் இரத்தினத்தைக் குறித்துச் சொன்னவைகளே நம்பாமல் செட்டியாரை உரவழைத்து வார்த்தையாட எண்ணினீர்போலிருக்கிறது.

நடராஜ முதலியார்.—ஒருவேளை அவ்விதம் இருந்தாலும் இருக்கக்கூடும். உன் னைப் பெரியவருக்கு நன்றாய்த் தெரியாததால் அவர்மேல் குற்றஞ் சுமத் துவது ந்யாயமல்ல.

வனசாக்ஷி.—அதோ ! அவர்களும் வந்துவிட்டார்கள்.

நடராஜ முதலியார்.—அம்மா செழுங்கமலம், இரத்தினத்தை மீட்கும் வழி ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய நான் செட்டியாரிடத்தில் சில விஷயங்களைக் கேட்டதில் அவைகளை விசாரித்து வருகிறேன் என்று சொல்லுகிறார். ஆனதால் நாம் இன்று இரத்தினத்தின் விஷயமாக எதை யும் முடிவுபடுத்தக் கூடாது. இரத்தினத்துக்குக் கடன் அதிகமாக இல் லாதிருந்தால் அதைத் தீர்த்து அவனை நல்லவழிக்கு ஏன் கொண்டுவரக் கூடாது ? வாலிபத்தில் சேர்க்கையால் கெட்டவழியில் நடப்பது சகஜம். விஜயரங்கம், நீ என்ன யோசிக்கிறாய் ?

விஜயரங்கம்.—ஐயாவே, நான் இரத்தினத்தைக்குறித்து ஆத்திரப்பட்டுச் சொல்லியது என்மேல் குற்றமே. அக்குற்றம் நீங்க நானும் செட்டியா ருக்கு உதவியாக இன்று தாங்கள் விரும்பியதை விசாரித்துவந்து இரு வரும் சொல்லுகிறோம்.

நடராஜ முதலியார்.—வனசாக்ஷி, விஜயரங்கம் உன் விஷயத்தி லெடுத்துக் கொள்ளும் தாந்தரவுக்காக நீ சந்தோஷப்படவேண்டும்.

வனசாக்ஷி.—ஆம் ! தாதா ! என் விஷயத்தில் அண்ணன் எடுத்துக்கொள்ளும் தொந்தரவுக்குப் பதிலென்ன செய்யப்போகிறேன் ? அவருக்கு எல்லா நன்மையும் உண்டாகும்படி கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பேன்.

விஜயரங்கம்.—அம்மா ! வனசாக்ஷி, நான் செய்யப்போகும் அற்ப காரியத் தைச் சிலாகித்துப் பேசுவது அழகல்ல.

கமலாக்ஷி.—அண்ணே ! தாதாவுக்குப் போஜனை வேளையாயிற்று. தாங்களும் தாதாவோடிருந்து சாப்பிட்டுப் போகவேண்டும்.

விஜயரங்கம்.—அப்பா, கமலாக்ஷி ! நான் ஐயாவோடிருந்து சாப்பிட்டுப்போக யாதொரு தடையுமில்லை. வீட்டுக்குப் போஜனத்துக்குப் போகாவிட்டால் நான் போகுமளவும் என்தாயார் சாப்பிடாமல் இருப்பார்களென்று உனக்குத் தெரிந்திருந்தும், என்னை அவர்கள் கோபித்துக் கொள்ளவோ என்னைச் சாப்பிட்டுப்போக சொன்னாய் ?

கமலாக்ஷி.—இல்லை அண்ணே ! தங்களுடைய இஷ்டம்போல்செய்யலாம். வனசாக்ஷி ! நீயாகிலும் சாப்பிட்டுப் போகலாமல்லவா ?

வனசாக்ஷி.—எனக்கொன்றும் தடையில்லை. ஏதாகிலும் விசேடம் உண்டா ? விசேடம் ஒன்றும் இல்லையென்று கமலாக்ஷி தன் தாயைப்பார்த்து அம்மா ! நானும் வனசாக்ஷியும் போய் எல்லாம் சித்தப்படுத்துகிறோம் என்று சமையலறைக்குள் வனசாக்ஷியை அழைத்துச் சென்றாள். விஜயரங்கம் மாலையில் வருவதாக விடைபெற்று நீங்கினான்.

நடராஜமுதலியார்.—அம்மா ! செழுங்கமலம் ! விஜயரங்கத்தின் நடத்தையைச் சவனித்தாயா ? அவன் மிக்க யோக்கியனுகவும் அவன் தாய் தந்தை மேல் மிக்க சவனம் வைத்தவனுகவும் காணப்படுகிறான். இவனைப் பெற்ற புண்ணிய சிலர்கள் யாரென்று உனக்குத் தெரியுமா ?

செழுங்கமலம்.—ஆம் அண்ணு ! கவியாணசுந்தர முதலியாருடைய குமாரன் விஜயரங்கம். அவன் தாயார் பெயர் மீனுக்ஷி. அவர்கள் என் தமையனுக்குப் பின் தனவந்தரில் முதன்மையாகக் காணப்படுகிறார்கள்.

நடராஜமுதலியார்.—தனவந்தனுயிருந்தும் தன் மகனுக்கு இது பரியந்தம் விவாசஞ் செய்யாமலிருக்கிறதே ஆச்சரியம் ! விஜயரங்கத்துக்கு வயது இருபதுக்கதிகமாக இருக்கும்போல் காணப்படவில்லையா ?

செழுங்கமலம்.—விஜயரங்கத்துக்கு இன்னும் விவாசம் செய்யாமல் இருப்பதன் காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை. அது எல்லாருக்கும் ஆச்சரியத்தைத் தருகின்றது.

நடராஜமுதலியார்.—இவ்விதமான புருடன் நமது கமலாக்ஷிக்குக் கிடைப்பானுகில் நாம் அதிர்ஷ்டமுள்ளவர்களென்றே எண்ணவேண்டும்.

செழுங்கமலம்.—தனவந்தர் எளியவர் வீட்டில் பெண்கொள்ளச் சம்மதப்படுவார்களா ? சிலவேளை பெண்கொள்ளச் சம்மதப்பட்டாலும் அவர்களோடு சம்பந்தம் செய்வதும் நமக்கு நண்மையைத் தராது.

நடராஜமுதலியார்.—ஏன் நண்மையைத் தராது ?

செழுங்கமலம்.—தனவந்தர் சந்தோஷமடையும்படி நாம் சீதனம் கொடுக்கப் போகிறதில்லை. சீதனமில்லாமல் வந்த பெண்களைக் கேவலமாக நடத்துவதைப் பார்க்கிறோம். எளியவருக்கு எளியவரே பொருத்தம்.

நடராஜமுதலியார்.—ஆம், ஆம், அது உண்மையே.

செழுங்கமலம்.—அண்ணு ! எழுந்திருங்கள், நேரமாய்விட்டது ; சாப்பிட்ட பின் யாவும் பேசலாம். (என்றெழுந்தாள். பெரியவரும் எழுந்து போஜன அறைக்குள் சென்றார்.)

7-ம் அத்தியாயம்.

மயிலாபுரிக் கடைவீதி வழியாக மாணிக்கமும் இரத்தினமும் வார்த்தை யாடிக்கொண்டு வரும்பொழுது மாணிக்கம் இரத்தினத்தைப் பார்த்து இரத்தினம் ! தைமாதம் முடிந்தும் வெளியூரிலிருந்து வந்த கடைகள் இன்னும் போகாமலிருப்பதன் காரணம் யாதென்றூன்.

இரத்தினம்.—மாசிமகமும் சமீபத்தி லிருப்பதால் அந்தத் திருவிழா பரியந்தம் கடைகளிருக்கும். கடைகள் சித்திரைமாத பரியந்தம் இருந்தாலும் எனக்குச் சந்தோஷமே.

மாணிக்கம்.—கடைகள் இருந்தால் அதனால் உனக்குச் சந்தோஷம் வர வேண்டிய காரணம் என்ன ?

இரத்தினம்.—என்னுடைய விவாகத்துக்குவேண்டிய சவுளிகள் சுலபத்தில் வாங்கலா மென்பதே.

மாணிக்கம்.—விவாகத்துக்கு நாள் வைத்தாய்விட்டதா ?

இரத்தினம்.—இன்று நாள் வைத்து விடுவார்கள். அதற்காகவே பெண்வீட் டார் என்னை வரும்படி சொல்லியிருக்கிறார்கள்.

மாணிக்கம்.—நீ தனித்தா போகிறாய். மாப்பிள்ளைத் தோழன் வரவேண் டாமா ?

இரத்தினம்.—உன்னைவிட்டுத் தனித்துப்போவது எனக்குச் சம்மதமில்லை. என் மாமியார் என் கருத்தையறிந்து விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடு கள் செய்யவும் பெண்ணுக்குக் கொடுக்கப்போகும் சீதனத்தை எவ்விதம் கொடுக்கிறதென்று என்னிடத்தில் ஆராயவுமே என்னை வரச்சொல்லி யிருப்பதால் தனித்துப்போகிறேன்.

மாணிக்கம்.—சீதன விஷயம் மத்தியஸ்தரைக்கொண்டு முடிவுபடுத்திக் கொண்டால் உத்தமமாகுமே. அதைவிட்டு நீ நேரில் நின்று எனக்கு அது வேண்டாம், இதுவேண்டுமென்று சொல்லுவது அழகாயிருக்குமா?

இரத்தினம்.—அழகாயிருக்காதென்பதை அறிந்தே நான் தக்க மனிதர்களை அனுப்பிச் சொல்லும்படி செய்தேன். மத்தியஸ்தர் அங்கு ஒருவிதமாக வும் இங்கு ஒருவிதமாகவும் சொல்லி விடுவார்கள். ஆனதால் நேரில் பேசி முடிவுபடுத்திக்கொள்வதே உத்தமம் என்று தீர்மானப்படுத்தி அவர்களே என்னை வரும்படி கேட்டுக்கொண்டார்கள்.

மாணிக்கம்.—நீ நேரில் நின்று உன் மாமியாரோடு வார்த்தையாடக் கூச்சமா யிராதா ?

இரத்தினம்.—அங்ஙியர்களாயிருந்தால் மருமகன் மாமியார் எதிரிலும் மாமியார் மருமகன் எதிரிலும் நின்று வார்த்தையாட நாணப்படுவார்கள். நான் சிறுவனுயிருச்கும்பொழுது என் மாமியார் என்னைத் தூக்கி, விளையாடினவர்களாதலாலும், நானும் சிறுவனு யிருக்கும்பொழுது அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி சென்று வனசாக்ஷியோடு விளையாடி வந்தவனுதலாலும், ஒருவரை யொருவர் பார்த்து வெட்சப்பட நியாயமில்லை.

மாணிக்கம்.—வனசாக்ஷி புஷ்பவதியானபின் அவர்களுடைய வீட்டுக்குப் போகிறதில்லையோ ?

இரத்தினம்.—அடிக்கடி போகிறதில்லை. வனசாக்ஷியை விவாகஞ்செய்து கொள்ள விருப்பம் இருந்ததால் அவர்கள் வீட்டுக்கு முன்போல் போவ தில்லை.

மாணிக்கம்.—நீ சொல்லுகிற காரணத்தால் உன்மாமியார் எதிரில் நீ நின்று வார்த்தையாடத் தடையொன்றும் காணப்படவில்லை. சீதனம் என்ன விதம் கேட்சப்போகிறாய் ?

இரத்தினம்.—நிலம், ஆபரணம் எதற்கு ? நமச்குப்பணமே வேண்டுவது. ஆனதால் பணமாகக் கொடுக்கவே வேண்டியதென்று சொல்வேன்.

மாணிக்கம்.—பணமாகக் கொடுத்தாலும் பெண் பெயரால் வைப்பார்களன்றி உன்பெயரால் வைப்பார்களா ?

இரத்தினம்.—என்பெயரில் வைக்கும்படி கேட்பதும் சந்தேகத்துக் கிடந்தரும். என் பெண்சாதிபெயரில் வைக்கும்படியே சொல்லுவேன். அவள் பெயரிலானபின் அது என் பெயரிலாக நெடுநேரமா செல்லும் !

மாணிக்கம்.—உன் பெண்சாதி தன் பெயரால் உள்ளதை உன்னுடைய பெயரிலாச்கிவிட இஷ்டப்படாதிருந்தால் என்ன செய்வாய் ?

இரத்தினம்.—இதென்ன பெரும் பைத்தியச்காரனுக இருச்கிறாய் ! உதையும் குத்தும் என்னுடைய இஷ்டம்போல் நடச்சச் செய்யாவோ ? என்னை நம்பாமல் என்னோடிருந்து எப்படி வாழப்போகிறாள் ? அல்லது பண விஷயத்தில் எனச்கோர் ஆபத்து வந்தால் பணத்தைக் கொடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பாளா ?

மாணிக்கம்.—அக்காலத்தில் உதவி செய்யாம லிருந்தால் உலசம் அவளை நிந்திச்கும். உனச்குக் கடன் இருச்கிறது அவர்களுச்குத்தெரியுமா ?

இரத்தினம்.—அதைக் கண்டுசொள்ள ஒருவராலும் முடியாது. எனச்குள்ள கடனைச்குறித்து ஒருவரிடத்தும் மூச்சுவிடாதிருச்கும்படி எல்லாக் கடன்காரர்களுச்கும் சொல்லிவைத் திருக்கிறேன். விவாகம் முடிந்தால்

தங்கள் தங்களுடைய கடன் வந்துவிடுமென்கிற எண்ணத்தோ டிருப்ப வர்களாதலால் எனக்கிருக்கும் கடனை வெளிப்படுத்தித் தங்களுக்குத் தாங்களே நஷ்டப்படுத்திக்கொள்ள அவர்கள் சம்மதிப்பார்களா? ஆன தால் அது விஷயத்தில் எனக்குக் கிஞ்சித்தும் பயமில்லை. கழுத்தில் தாலி ஏறு மளவுமே இந்தச் சங்கடம். தாலி ஏறிவிட்டால் என்னைக் கை யால் பிடிக்க முடியுமா?

மாணிக்கம்.—விவாகம் ஆனவுடன் எனக்குப் பொருளுதவி செய்வதாக வாக் களித்தாயே! அதை மறந்து விடுவாயோ?

இரத்தினம்.—பேச்சுதவறும் பேதையர்போல் என்னையும் எண்ணவேண்டாம். என்னுடைய அவசரக்கடன் சில தீர்ந்தவுடன் உனக்குக் கொடுப்பேன் என்றதைக் கொடுத்துப் பின் மற்றக் காரியங்களைச் செய்வேன் என்ப தை உண்மையாக நம்பு.

மாணிக்கம்.—எந்தக்கடன் மிக்க அவசரம் என்று நினைக்கிறாய்?

இரத்தினம்.—சீட்டாட்டத்தில் தோற்றகடனே! அதை வைத்திருப்பது அழகா? எது எப்படி போனலும் அதை முதலில் தீர்த்துவிட்டா லல்ல வா நம்மை மேன்மையாக யாவரும் மதிப்பார்கள்?

மாணிக்கம்.—சீட்டாட்டத்தில் தோற்ற கடன் எவ்வளவிருக்கும்?

இரத்தினம்.—அதிகமில்லை. பொன்னிச்கு ஐந்நூறும், அன்னத்துக்கு முந்நூ றும், மீனலுக்கு நானூறும், ரூபாவதிக்கு ஆயிரமும், புஷ்பகாந்திக்கு இருநூறும், கமலத்துக்கு அறுநூறும், தனசுந்தரிக்கு எண்ணூறும், சார தாம்பாளுக்குத் தொளாயிரமும், வீணை கௌரிக்கு எழுநூறும், அழகேந் திக்கு நூறும் கொடுக்க வேண்டியதேயன்றி வேறில்லை.

மாணிக்கம்.—உனக்கிருக்கும் ஞாபசச் சத்தி யாருக்கும் இருக்காது. நீ இவ்ஷ் டங் கொண்டால் அவ்டாவதானமும் சுலபத்தில் செய்யலாம். உனச்கு இருக்கும் கடன் முற்றிலும் தாசிகளிடத்தில் இருப்பதால் அதை முத லில் தீர்த்துவிட்டே மறுவேலை பார்ச்சவேண்டும். இந்தத் தாசிகளிடத் தில் எப்பொழுதாகிலும் சீட்டாடி கெலித்து வந்திருக்கிறாயா?

இரத்தினம்.—எத்தனையோ தடவை. அவர்களிடத்தில் கெலித்ததை அவர்க ளுக்கே இனமாகக் கொடுத்துவிடுகிறதே யல்லாமல் ஒரு சாசாகிலும் கொண்டுவருகிறதில்லை. அவர்களிடத்தில் சீட்டாடிக் கெலித்துப் பணங் கொண்டுவந்தால் நம்மை என்ன நினைப்பார்கள்? அவ்விதம் செய்தால் அவமானத்தை விலைச்கு வாங்கியதுபோ லல்லவோ முடியும்? நான் காலம்போக்க அவர்களோடு சீட்டாடப் போகிறதேயன்றிப் பொருள் சம்பாதித்து வரவேண்டியதற்காகப் போகிறதில்லை.

மாணிக்கம்.—தாசிகளிடத்தில் சீட்டாடித் தோற்றதைக்கொடுத்திருக்கிறயா?

இரத்தினம்.—எனக்குச் செட்டிகளிடத்தில் இருக்கும் கடனெல்லாம் சீட்டாட்டத்தால் வந்ததேயன்றி வேறெவ்விதம் வந்தது. என் தந்தையும் என்னிஷ்டம்போல் செலவுசெய்ய ஏராளமான தனத்தைவைத்தே காலஞ் சென்றார். அவரை உலோபியென்று உலகம் சொல்லத் தேடி வைத்த பொருளே யெல்லாம், அவர் சொண்டிருந்த உலோபி யென்ற பெயர் என்னைப் பற்றாமல் என்னே யாவரும் புகழத் தாசிகளுக்கே தானம் செய்தேன்.

மாணிக்கம்.—உன் தந்தை வைத்த தனம் நீங்கினாலும் அவர் வைத்த பூஸ்திதி யிருக்கிறதல்லவா ?

இரத்தினம்.—பூஸ்திதியிருந்தால் இது பரியந்தம் தாசிகளுடைய கடன் நிற்குமா ?

மாணிக்கம்.—நீ ஒருவன் இந்த ஊரில் இல்லாமற் போனால் இந்தத் தாசிகளெல்லாம் என்ன செய்வார்கள் ? எவ்விதம் பிழைப்பார்கள் ?

இரத்தினம்.—பணத்தைப் பூதம் காத்துக்கொண்டிருப்பதுபோல், தம்மிடத்திலிருக்கும் பொருளைத் தாசிகளுக்கு அளித்து அவர்களோடு கூடி விளையாடிச் சந்தோஷத்தை யடைய அறியாத மனிதர் இருந்தென்ன பலன் ? நான் உயிரோடிருக்கும் வரைக்கும் இவ்வூரிலிருக்கும் தாசிகளுக்கு என்னாலியன்ற உதவியைச் செய்துகொண்டிருக்கவேண்டு மென்பதே என் கருத்து.

மாணிக்கம்.—உன்னுடைய கருத்தே மேலானது. உன் தாயார் இது விஷயத்தைக் குறித்து ஒன்றும் சொல்லுகிற தில்லையா ?

இரத்தினம்.—என் தாயார் என்னுடைய மனதுக்கு விரோதமாக ஒன்றையும் சொல்லார்கள். ஏதாகிலும் தடுத்தால் நான் அவர்களோடு வாயாற் பேசுகிற வழக்கம் இல்லை. கையாலும் காலாலுமே ! ஆனதால் வார்த்தையாட அஞ்சுவார்கள். நாம் வனசாக்ஷி வீட்டுக்கருகில் வந்துவிட்டோம். உன்னை இவ்விடத்தில் விட்டுப்போகவேண்டியதைக் குறித்து விசனப்படுகிறேன். நான் நாளை உன்னிடம் நல்ல சமாசாரத்தோடு வருவேன்.

என்று மாணிக்கத்துக்கு விடைகொடுத்தனுப்பி வனசாக்ஷியின் வீட்டின் கதவைத் தட்டினான். கதவு உடனே திறக்கப்பட்டுப் பூங்காவனம் வெளியில் வந்து தம்பி வருக என்றாள். இரத்தினம் புன் சிரிப்போடு வீட்டுக்குள் சென்று தனக்காகக் கூடத்தில் பாய்விரித்துத் தின்று தலையணை போட்டுத் தாம்பூலம் வைத்திருப்பதைக்கண்டு உட்கார்ந்து நான்கு பக்கமும் பார்த்தான். கூடத்தில் தனக்குப்பின்னால் இருந்த அறை பூட்டப்பட்டும் மற்ற அறைகள் பூட்டில்லாமல் மூடப்பட்டும்

இருந்ததைக்கண்டு, பூட்டிய அறையை ஒப்புக்கொள்ளவே எதிரில் சுதந்தரவாளுக உட்கார்ந்தோம். இதிலுள்ள பொருளெல்லாம் நம் முடையதல்லவா? என்று எண்ணித் தனக்கெதிரிலிருந்த பூங்காவனத் தைப் பார்த்து, மாமி, யாராரோ வருவார்கள் என்று சொல்லி யிருந் தீர்களே. ஒருவரும் வரவில்லையா? என்று கேட்டான்.

பூங்காவனம்.—தம்பி! அவர்கள் யாவரும் வருவார்கள். அவர்கள் வருமுன் நாம் இரண்டு சமாசாரத்தைப் பேசி முடிவு படுத்திக்கொள்ள வேண்டும்.

இரத்தினம்.—எந்த விஷயத்தைக் குறித்துப்பேச இஷ்டப்படுகிறீர்கள்?

பூங்காவனம்.—வேறென்னபேச்சு இருக்கிறது? எல்லாம் சீதன விஷயத் தைக் குறித்தே?

இரத்தினம்.—சீதனம் என்ற சொல் காதில் விழுந்த வுடன் இரத்தினம் முக மலர்ச்சியோடு சீதனத்தைக் குறித்து என்ன பேசவேண்டும். அது விஷ யத்தைக்குறித்து என்னிடம் பேசவேண்டிய அவசியமில்லையே. தங்க ளுடைய சருதத்தைப்போல் செய்யலாமே.

பூங்காவனம்.—நீர்சொல்லவது உண்மையே யாயினும், பெண்ணைக் கொண்டு வாழப்போகிறவர் நீரானதால் உம்முடைய சருத்தை யறிந்து ஒன்றைச் செய்தால் மனமகள் மனது எக்காலத்திலும சந்தோஷத்தோ டிருக்கு மென்று நினைக்கிறேன்.

இரத்தினம்.—மாமி! நான் சொல்வதைக் கிஞ்சித்து கவனிக்கவேண்டுகிறேன். நான் சீதனத்துக்கு ஆசைப்பட்டு தங்கள் மகளை விவாகம் முடிக்க நினைத்தவன் அல்ல. நான் வனசாக்ஷியைக் குறித்துத் தங்களுக் கெதி ரில் புகழ்வது முகஸ்துதியாசக் காணப்படும. அப்படித் தோன்றினு லும் சொல்ல வேண்டியது கட்டாயமாக இருக்கிறது. வனசாக்ஷியின் வனப்பு நாளுக்கு நாள் விருத்தியாகி வருகிறதைக் கண்ட என் மனம் என்ன சந்தோஷப்படுகிறது! சுந்தரமான முகமும், பெருத்த கண்க ளும், மையிட்டதுபோலுள்ள இரண்டு புருவங்களும், நீண்ட நாசியும், பவழக்கிண்ணத்தில் மூத்துக்களைப்பதித்ததுபோல் உள்ளவாயும், சிறுத்த இடையும், பொன்னிற முகமும், கால் தொடுங் கூந்தலும், நயவசன மும், நற்குணமும் நிறைந்த பெண்ணுக்குச் சீதனமும் வேண்டுமா?

பூங்காவனம்.—சீதனமும் அவசியமாகக் காணப்படாமற் போனலும், எனக் கிருக்கும் ஆஸ்தியை நான் யாருக்குக் கொடுக்கப் போகிறேன்! நிலத் தை விற்றால ஐம்பதினாயிரத்துக்குக் குறையாமல் வரும். வீடுகளிலும் கடைகளிலும் சற்றேறக்குறைய இருபதினாயிரந்தேறும். செட்டிகளிடத் தில் வட்டிக்குக் கொடுத்திருப்பது முப்பதினாயிரம், ஆக ஒரு இலக்ஷமாகி றது. இது என் மகளை விவாகஞ செயதுகொள்ளப்போகும் உமக் கே சொந்தமாயிருக்கும். வேறொருவர் அதைக் கைப்பற்ற முடியாது

இரத்தினம்.—மாமி! என் தந்தை எனக்கு வைத்துப்போன நிலத்தால் உண்டாகும் தொந்தரவு அனேகம். ஆனதால் அதை விற்றுவிட யோசித்திருக்கிறேன். அதை வைத்துச்சொண்டிருப்பதால் வருவார் போவார் அனேகம். வந்தவர்களிடம் வார்த்தையாடி யனுப்புவதே பெருந்தொல்லை. நிலத்தை விற்றுப் பணத்தைச் செட்டிகளிடம் வட்டிச்சுக் கொடுத்துவிட்டால் வரும் வட்டியால் நாம் சதா சந்தோஷத்தோடிருக்கலாம். காசுச்சு எட்டு சட்டிகள் வாங்கி சட்டியொன்று எட்டு காசுச்சு விற்றாலும் வட்டியாசாதென்ற பழமொழி யொன்று வட்டியைச் சிலாகித்துப் பேசுகிறது. உழுதவன் கணக்குப் பார்த்தால உழக்கு தானும் மிஞ்சாதென்னும் பழமொழி உழவைத் தாழத்திப்பேசுகிறது.

பூங்காவனம்.—ஆம், அது உண்மையே! நானும் நிலத்தை விற்றுவிடலாமா?

இரத்தினம்.—அது தங்களுடைய இஷ்டம். என்னால் நிலத்தைட்போய் பார்க்கவும் அதற்கு வேண்டியதைச் செய்யவும் முடியாது. அது விஷயத்தில் என்னை மன்னிக்கும்டி வேண்டுகிறேன்.

பூங்காவனம்.—தம்பி! சோபித்துச்சொள்ளவேண்டாம். உண்மை யோசிச்சாமல் நிலதைவிற்றுப் பணத்தை இராமசாமி செட்டியிடம் வைத்திருக்கிறேன். நான் விற்றுவிட்டதைக் குறித்து நீர் சோபிச்சப் போகிறீர் என்று நிலத்தை விற்றுவிடலாமா என்று சேட்டேன். நான் செட்டி வீட்டில் வைத்திருச்சும பணத்துக்காசப் பத்திரம் இன்னும் எழுதி வாங்கவில்லை. உமது கருத்தை யறிந்து உமது பெயருகே பத்திரத்தை எழுதச் சொல்லலாமென்று நினைத்திருக்கிறேன். உமச்கு அது விஷயத்தில் ஏதாகிலும் ஆக்ஷேபனையுண்டா?

இரத்தினம்.—என்பெயரால் என்னகாரணத்திற்கு வாங்கவேண்டும்? வனசாக்ஷியின் பெயரில் இருந்தால் உத்தமமல்லவா?

பூங்காவனம்.—பெண்கள் கோர்ட்டுக்கு நாட்டுச்சுப் போகப்போகிறவர்களா? ஆண்பிள்ளைகள் பெயரில் இருப்பதே உத்தமம்.

இரத்தினம்.—விவாகம் ஆனபின் தானே பத்திரம் எழுதவேண்டும்?

பூங்காவனம்.—ஏன் அப்படி? இப்பொழுதே எழுதினால் என்ன தப்பிதம்? உம்மை நம்பாமலா இருக்கிறோம்? வனசாக்ஷிக்குச் சீதனமே வேண்டுவதில்லை யென்ற உம்மை நம்பாமல் யாரை நம்புகிறது?

இரத்தினம் தனக்கின்றே நற்காலம் வந்துவிட்டதென்றும் பணத்தை எந்தெந்த விஷயத்தில் செலவிடுகிறதென்றும் சற்றுநேரம் யோசித்து, மாமி! நான் சொன்ன சொல்லை அபத்தமென்று நினைக்கவேண்டாம். தாங்கள் வனசாக்ஷியைச் சீதனமில்லாமல் எனக்குக் கொடுத்தால்

நான் மிக்க பிரியமாக ஒப்புக்கொள்ளுவேன். தாங்கள் சட்டாயப் படுத்துகிறதால் தடைசொல்ல வகையில்லாமலிருக்கிறேன் என்றான்.

பூங்காவனம்.—எல்லா நற்குணங்கள் நிறைந்து பொருளைக் கிஞ்சித்தும் கவனியாமல் என் பெண்ணை விரும்பும் நீர் எங்களுக்குக் கிடைத்தது எங்கள் தவப்பயனே. உம்முடைய பெயரில் பத்திரம் எழுதச்சொல்லத் தடையில்லையே ?

இரத்தினம் அடங்காச் சந்தோஷத்துடன் தங்கள் இஷ்டம்போல் யாவும் செய்யலாம் என்றான். அத்தருணத்தில் பூங்காவனத்தம்மாள் எங்கே என்று ஒரு செட்டியார் வீட்டுக்குள் வந்தார்.

பூங்காவனம்.—ஆரையா என்னைத்தேடுகிறது ? இங்கு இரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிற இடத்தில் தடைசெய்ய வந்தீர்.

செட்டியார்.—அமமா! கோபித்துக் கொள்ளவேண்டாம். நான் தங்களுக்கோர் கெட்ட சமாசாரம் கொண்டுவந்ததைக் குறித்துத் துக்கப்படுகிறேன்.

இரத்தினம்.—கெட்ட சமாசாரமா ? என்ன கெட்ட சமாசாரம் ? விரைவில் சொல்லும்.

பூங்காவனம்.—என்ன சொன்னீர்? நீர் யார் ? என்னைத் தேடியா வந்தீர் ? என்ன கெட்ட சமாசாரம் ? சொல்லும். சொல்லும்.

செட்டியார்.—அம்மா ! இவர்முன் எவ்விதம் சொல்லத் துணிவேன் ?

பூங்காவனம்.—சொல்லும் செட்டியாரே ! அவரே என் மருமகனைக் போகிறவர். ஒன்றும் யோசியாமல் நீர் கொண்டுவந்த கெட்ட சமாசாரத்தைச் சொல்லும்.

செட்டியார்.—ஐயோ அம்மா ! நான் எவ்விதம் சொல்லத் துணிவேன் ? சந்தோஷமாய் இருக்கும் மனதைக் கெடுக்கலாமா ?

இரத்தினம்.—இவர் பெரும் பைத்தியக்காரர்.

பூங்காவனம்.—செட்டியாரே! நீர் சொல்லாமல் காலதாமஸஞ் செய்வதே எங்களுக்குத் துன்பத்தைத் தருகிறது.

செட்டியார்.—அம்மா! இராமசாமி செட்டியார் தெரியுமா ?

பூங்காவனம்.—ஆம் ! அவர் தெரியும். அவருக்கென்ன ? அவர் இறந்து போய் விட்டாரா ?

செட்டியார்.—அவர் இறந்தால் ஒரு துன்பமும் இல்லையே.

பூங்காவனம்.—பின் என்னதான் அவரைக் குறித்துச் சொல்லப்போகிறீர் ? வீணே வார்த்தைகளை விர்த்திபண்ணுகிறீர்.

செட்டியார்.—அவருடைய கடைகள் எல்லா ஊரிலும் இருப்பது தங்களுக்குத் தெரியுமா ?

பூங்காவனம் —தெரியும். அதனால் நான் துக்கப்படக் காரணம் என்ன ? அந்தக்கடைக்கு முதல் அதிகம். ஆனதால் எல்லா ஊரிலும் கடைகள் உண்டு.

இரத்தினம்.—செட்டியாரே ! நீர் இரண்டொரு வார்த்தையில் முடிக்காமற் போனால் துன்பப்படுவீர்.

செட்டியார்.—ஐயா! தாங்கள் துக்கத்தை எதிர்கொண்டழைக்க இஷ்டங் கொண்டால் நான் என்ன செய்கிறது ! கல்கத்தாவிலுள்ள இராமசாமி செட்டியாருடைய கடை முறிந்துவிட்டதால் எல்லா ஊரிலும் உள்ள கடைகள் முறிந்துவிட்டன. இவ்வூரிலுள்ளவர்கள் அவர் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுக்கச் சொல்லி நெருக்கினதால் தம் கையிலிருந்த பத்திரங்கள் நகைகள் மற்றவைகளைக் கொடுத்து ஒட்டாண்டியாய் உட்கார்ந்திருக்கிறார். அவர் கையில் காலணுவுக்கும் வழியில்லை.

இச் சமாசாரத்தைக் கேட்ட பூங்காவனம் " ஐயோ ! என் செய்வேன் ! என்னுடைய நிலத்தை யெல்லாம் விற்று ஐம்பதினாயிரமும், வட்டிக்காக மூப்பதினாயிரமும் கொடுத்ததோடு அவரை நம்பி நகைகளையுங் கொடுத்துவிட்டேனே ! ஐயோ மகளே ! ஐயோ தம்பி ! இனி என்ன செய்யப்போகிறேன் ! மகளே ! மகளே ! " என்று ஓவென்றலறினாள். தாயாரின் அழுகுரலைக் கேட்ட வனசாக்ஷியும் அவ்விடம் வந்து திகைத்து நின்றாள்.

இரத்தினம்.—செட்டியாரே ! இவர்கள் நகைகளை ஒருவருக்குக் கொடுக்க நியாயம் இல்லை யல்லவா ?

செட்டியார் —இராமசாமி செட்டியாரிடம் இருந்த பெட்டிச் சாவியை வாங்கிப் பெட்டியைத் திறந்து அதிலடங்கி யிருந்தவைகளை யாவரும் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

நகைகளாவது மிகுந்திருக்காவா என்று எண்ணிய இரத்தினத்தின் எண்ணம் குலைந்து மருண்டு நின்றான்.

வனசாக்ஷி —அம்மா! என் துக்கப்படுகிறாய் ?

பூங்காவனம்.—ஐயோ ! மகளே ! உன்னை அனுதையாக விட்டுவிட்டேன். நாம் நம்பி நம்முடைய பொருளை யெல்லாம் வைத்திருந்த செட்டிகடை முறிந்துவிட்டதாம். நான் பாவி பத்தஞ்சு வேறொருவரிடத்தில் கொடுத்திருக்கக் கூடாதா ! இனி நாம் என்ன செய்கிறது ? நான் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் செய்துகொண்டேனே! மகளே! ஒரு நொடியில் உன்னை ஒன்றும் இல்லாதவளாக ஆக்கிவிட்டேனே ! இனியொரு கூண

மும் உயிரோடிருக்கத் துணியேன். (என்று மகளைக்கட்டிக்கொண்டு அலறினாள்.)

வனசாக்ஷி.—அம்மா! தாங்கள் நிலங்களை விற்க எண்ணங்கொண்டு தெரி வித்தபொழுதே தடுக்க உத்தேசம். தங்களுடைய மனதுக்கு வருத்தம் வரப்போகிறதென்றே மௌனமாயிருந்தேன். (என்று அழுதாள்.)

பூங்காவனம்.—அம்மா! நீ யழவேண்டாம். இதோ உன் அத்தான் உன்னைக் காப்பாற்றுவார், நானும் உன் நிழலில் இருப்பேன். தம்பி, இனி உம்மை விட்டால் எங்களுக்குத்திக்கில்லை, எங்களைக் காப்பாற்றவேண்டிய கட மை உம்முடையதாய்விட்டது. (என்று இரத்தினத்தின் கையைப்பிடித் தாள்.)

இரத்தினம்.—(கையை விடுவித்துக்கொண்டு) என்ன சொன்னாய்? தங்களுக் கிருந்த நிலத்தை வைத்துக் காப்பாற்றிக்கொள்ள வகையில்லாமலும் ஒருவருடைய யோசனையையும் கேட்காமலும் விற்று எல்லாம் செட்டிக ளுக்கு அழுதுவிட்டபின் உங்களைவைத்துக் காப்பாற்றவா வரவேண் டும்? சபாஷ்! நன்றாயிருக்கிறது! நான் அன்னசத்திரம் கட்டிவைத்திரு ந்தால் வருகிறவர்களை யெல்லாம் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். கையிலோர் காசுக்கும் வழியில்லாத பெண்சாதிகள் ஆயிரக்கணக்காய்ச் சம்பாதித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட பெண்சாதியைக் கட்டிக் கொண்டு திண்டாட்டப்பட நான் உங்கள் வீட்டுக்கு வரவில்லை போ போதும் உங்கள் உறவு நான் போகிறேன். (என்று எழுந்தான்.)

பூங்காவனம்.—ஐயோ தம்பி! 'வனசாக்ஷிக்கு சீதனம் இல்லாமற் கொடுத் தால் மகிழ்வோடு விவாகம் செய்துகொள்ளுவேன், எனக்கு சீதனம் வேண்டியதில்லை' என்று அவள் அழகைப்புகழ்ந்து பேசினீரே! இப் பொழுது எங்களைக் கைவிடப் பார்க்கிறீரே! (என்று மீண்டும் கையைப் பிடித்தாள்.)

இரத்தினம்—இந்தக் குரூபியையா புகழ்ந்தேன்? பொருளிழந்தால் அழகு எங்கிருந்து வரும்? என் கையைவிட்டு வழிவிடு, நான் போகவேண்டும்.

வனசாக்ஷி—அத்தான்! நான் குரூபியாயிருந்தாலும் அதைக் சவனிக்காமல் நாம் சிறுபொழுதில் விளையாடிக் கொண்டிருந்த நேசத்தை யோசித்து எங்களைக் காப்பாற்றவேண்டும்.

இதை எல்லாம் பார்த்திருந்த செட்டியாரும், ஐயா! இந்த சமயத்தில் இவர்களுக்குத் தைரியம் சொல்லாமல் போகிறது நியாயமா? என்றார்.

இரத்தினம்.—ஓய் செட்டியாரே! உமக்கும் பைத்தியமா? இவ்விதமான பெண்சாதிகள் எத்தனை வேண்டுமென்றாலும் அகப்படும். வழி விடுங் கள் நான் என் காலத்தை வீணில் கழிக்க இவ்விடம் வந்தேன்.

(அத்தருணத்தில் விஸ்வநாதம் செட்டியார் வீட்டுக்குள் நுழைந்தார்.)



எனை தொல்லுகிறதடா படுபாவி ! இப்பிசாசை அப்பாழுஞ்சு மீண்டுமென்றேன்.

(60ம-பக்கம் பார்க்க)

பூங்காவனம்.—(விஸ்வநாதம் செட்டியாரைப் பார்த்து) செட்டியாரே, நான் இனி என்ன செய்யப்போகிறேன். (என்று அழுதாள்.)

விஸ்வநாதம் செட்டியார்.—அம்மா, நீ சந்தோஷமடைய நல்ல சமாசாரங் கொண்டுவந்தேன். இராமசாமி செட்டியார் கடை மூறியவில்லை. வந்த மின்தபால் தப்பானது. உங்களுடைய ரூபாய் எண்பதினாயிரத்தையும் யாரிடம் கொடுப்பதென்று கேட்டுவரச் சொன்னார். நகைகள் யாவை யும் என்னிடம் பெட்டியோடு கொடுத்துவிட்டார்.

பூங்காவனம்.—செட்டியாரே, எங்கள் வயிற்றில் பாலை வார்த்தீர்.

இரத்தினம்.—ஆம் செட்டியாரே, என் பொன் மாமியின் துக்கத்தைப் பார்க் கச் சகிக்கவில்லை, அவர்கள் துக்கத்தைப் போக்கவே பலவற்றைச் சொன் னேன். மாமி ! நான் சொன்னவைகளையெல்லாம் உண்மையென்றே நம்பியிருந்தீர்கள் ! (என்று சிரித்தான்.)

பூங்காவனம்.—அப்பா, உனக்குச் சிருப்பும் ஒரு கேடா ! நீ போக அவசரப் பட்டவன் போய் வா. உனக்குக்கொடுக்கும் பெண்ணை ஒரு குளங்குட் டையில் தள்ளிவிடலாம். போ, போ, நேரமாய்விட்டது, ஐயோ பாவம் ! உன் காலத்தை வீணுய்க்கழிக்க நேர்ந்ததல்லவா ?

வனசாக்ஷி.—குரூபியைத்தேடி இவ்வளவுதூரம் என்வந்தாய் ! அந்த மூஞ்சிக் கிந்த மஞ்சளா என்றவிதம் முடிந்தது, போ, போ.

இரத்தினம்.—வனசாக்ஷி ! நான் செப்பியது தப்பிதமாசக் காணப்படின் மன் னிக்கவேண்டும்.

பூங்காவனம்.—அடே இரத்தினம் ! நீ இந்த வீட்டைவிட்டுப் போகக் கால தாமதம் செய்தால் முற்றிலும் அவமானப்படுவாய். (என்று பூட்டியிருந்த கதவைத்திறந்தாள்.)

கதவு திறக்கப்பட்டவுடன் அறைக்குள் இருந்தவர்கள் நகைத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள். அவர்களில் ஒரு பெண் ஓடி வன சாக்ஷியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, வனசாக்ஷி ! நான் சொன்னது முற்றிலும் உண்மையாசக் கொண்டாயா என்றாள். இழிவு உண்டாகு மென்று கடைக்கண் பார்வையாச, வனசாக்ஷியைப் பிடித்திருக்கும் பெண்ணைப் பார்த்துச்சொண்டே இரத்தினம் நீங்கினன்.

வனசாக்ஷி.—கமலாக்ஷி! உன் சொலலை முதலில் அவமதித்ததைக் குறித்து மன்னிக்கவேண்டும். என்னை அந்த வஞ்சகன் கையில் ஒப்பிச்காமல் காப் பாற்றிய உங்களுக்கு என்னசெய்யப் போகிறேன். (என்று மற்றவர்களைப் பார்த்துச் சொன்னாள்.)

விஜயரங்கம், நடராஜமுதலியார், செழுங்கமலம், இவர்களும் வெளியில் வந்தார்கள்.

செழுங்கமலம்.—பூங்காவனம், நாங்களிருந்த அறையின் கதவை ஏன் பூட்டியிருந்தாய் ?

பூங்காவனம்.—இரத்தினம் எதாகிலும் நினைத்துக் கதவைத்திறந்து விட்டால் நம்முடைய எண்ணம் கைகூடாதென்றே பூட்டியிருந்தேன்.

விஜயரங்கம்.—செட்டிகள் இருவரும் தாங்கள் கைக்கொண்ட வேலையைச் சரியாக முடித்தார்கள்.

பெரியவர்.—பூங்காவனம், நீயும் உன்மகள் வனசாக்ஷியும் அழுததைக் கேட்டு உண்மையாக அழுதீர்களென்றே நினைத்தேன்.

ஆம், ஆம், அவர்கள் கண்ணில் தண்ணீரென்பதுமட்டும் வரவில்லை. (என்று செட்டியார் சொன்னதைக்கேட்ட யாவரும் சிரித்தார்கள்.)

விஸ்வநாதம் செட்டி.—கமலாக்ஷி யம்மாளுக்கு இந்த யோசனை வந்தது ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

பெரியவர்.—அதற்கென்ன தடையா ?

7-A அத்தியாயம்.

புதுஊரில் ஓர் பெரியவீட்டில் அறைக்குள் உட்கார்ந்திருந்த இரண்டு வாலிபர் சில புத்தகங்களைப்பார்த்து அவைகளை வைத்துவிட்டு ஒருவர் மற்றவரைப்பார்த்து, சோமசுந்தரம் ! என்னைப்பெரும் யோசனையில் அமிழ்த்திவிட்டாய். உன் மனைவி முற்றிலும் சுகப்படுவாளென்று அறிந்தபின்னும் நீ விசனப்பட்டுக்கொண்டதன் காரணம் எனக்குக் கிஞ்சித்தும் புலப்படவில்லை. முற்றிலும் சௌக்கியமானபின் கேட்க வேண்டுமென்றிருந்தேன். உன்மனைவி சௌக்கியமாய் எத்தனை நாளாகிறது ?

சோமசுந்தரம்.—முற்றிலும் சௌக்கியமாய் ஏழெட்டுநாளாகிறது. விஜயரங்கம், என் சருத்தையறிந்தால் நீயும் என்னைபோடு துக்கப்படுவாய் என்பதற்குச் சந்தேகமில்லை. அதைக்குறித்துப் பின் பேசலாம். ஒருநாயகன் ஒரு நாயகியைக் கண்டு வார்த்தையாடி மனச்சம்மதப்பட்டு விவாகஞ் செய்துகொள்வது உத்தமம் என்று நான் சொல்லியதைத்தடுத்து நம்முன்னோர்கள் கருத்தே மேலான தென்றுரையே ! அதை எனக்கு விளங்கச்சொல்ல வேண்டும்.

விஜயரங்கம்.—சோமசுந்தரம், அன்று யாக்களித்தவண்ணம் எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். நான் கேட்பதற்குத் தக்க விடைகொடுத்து வரவேண்டும். பெண்களை யார் தேடிப்பார்த்து விவாகம் முடித்துக் கொள்ளவேண்டுமென்கிறாய் ?

சோமசுந்தரம்.—புருடரே பெண்ணைத்தேடி அவள் குணமறிந்து ஒருவனை ஒருவர் இச்சித்தபின் விவாகஞ்செய்து கொள்ளுதலே உத்தமம் என்று நினைக்கிறேன்.

விஜயரங்கம் —என் புருடரே பார்க்கவேண்டும்? வேறொருவர் அவருக்காகப்பார்த்தால் திருப்தி இல்லையா?

சோமசுந்தரம்.—எவ்விதம் திருப்தியாகும்? பெண்ணை நேரிற்கண்டு இச்சித்தபின் விவாகம் முடிக்கவேண்டுமென்பதல்லவா கருத்து?

விஜயரங்கம்.—ஒருவாலிபன் தான் மணந்துகொள்ளத் தகுந்த முறையிலுள்ள ஒரு சௌந்தரியமுள்ள பெண்ணைக்கண்டதும் முதல்பார்வையில் என்ன எண்ணுவான்?

சோமசுந்தரம்.—கண்டவுடன் அவள் சுந்தரமுள்ளவளென்றும், அம்மாதை மணம்புரிய வேண்டுமென்றும் மனங்கொள்ளுவான்.

விஜயரங்கம்.—நீ அவசரப்பட்டு ஒன்றும் சொல்லவேண்டாம். அச்சுந்தரியின் குணத்தை யறிந்தபின் விவாகஞ்செய்ய மனங்கொள்ளுவானு? குணத்தை யறியாமுன்னம் விவாகஞ்செய்ய எண்ணங் கொள்ளுவானு?

சோமசுந்தரம்.—குணத்தை யறிந்தபின்தான்.

விஜயரங்கம்.—குணத்தை யறிவதெவ்விதம்?

சோமசுந்தரம்.—அம்மாதோடு வார்த்தையாடியே.

விஜயரங்கம்.—அம்மாது சுந்தரம் இல்லாதவளாய் இருந்தாலோ?

சோமசுந்தரம்.—அம்மாதிடம் நெருங்கப்போகிறதில்லை.

விஜயரங்கம்.—அப்பொழுது என்ன முடிவானது? சுந்தரமானபெண்ணை நாயகன் முதலில் விரும்புவான் என்று முடிந்தது. இனி குணத்தைக் குறித்து யோசிக்கலாம். ஒருமாதின் குணத்தை அறிவதெவ்விதம்?

சோமசுந்தரம்.—அவளோடு நெருங்கி வார்த்தையாடினால் அறியலாம்.

விஜயரங்கம்.—நீ ஒருவருடன் வார்த்தையாடினால் அவருடைய குணம் இவ்விதம் என்று சொல்ல முடியுமா?

சோமசுந்தரம்.—ஏன் முடியாது? சிலநாள் பழகினால் குணத்தையறிந்து அவள் இவ்வித நடத்தையுள்ளவளென்று சொல்லக்கூடும்.

விஜயரங்கம்.—நீ ஒரு துன்மார்க்கனாயிருந்தும் ஒரு தனவந்தனுடைய பெண்ணை விவாகஞ்செய்து பொருள்தேடிக் கொள்ளவேண்டு மென்கிற விருப்பம் உனக்கிருக்குமாகில் நீ ஒரு தனவந்தன் மகளைச் சந்தித்து வார்த்தையாடும்பொழுது உன்னை எவ்விதங்காட்டிக் கொள்ளுவாய்?

சோமசுந்தரம்.—என்னையோர் சற்புத்திரனென்று அம்மாது நினைக்கும்படி நடிப்பேன்.

விஜயரங்கம்.—ஏன் அப்படி நடிக்கவேண்டும் ?

சோமசுந்தரம்.—யோக்கியனுக நடித்துக்காட்டாத விஷயத்தில் அம்மாது என்னைச் சேர்ப்பாளா ? என்னோடு வார்த்தை யாடுவாளா ? என்னை மணம் புரிவாளா ?

விஜயரங்கம்.—நீ மறைத்துக் காட்டும் துர்க்குணம் எது பரியந்தம் வெளி வராதிருக்கும் ?

சோமசுந்தரம்—மறைத்து வைத்திருக்கும் துர்க்குணம் மறைத்த விதமே ஒழிந்து போகிறதில்லையா ?

விஜயரங்கம்.—நாம் இங்கு சற்புத்திரரைக் குறித்துப் பேசவில்லை. துர்ப் புத்திரரைக் குறித்தே பேசுகிறோம். ஆனதால் அந்தத் துர்க்குணம் எது பரியந்தம் வெளிவராதிருக்கும் என்பதைச் சொல்லவேண்டும்.

சோமசுந்தரம்.—கோரிய காரியம் முடிவாகு மளவும் வெளிவராது. காரி யம் முடிவானால் வெளிவரும்.

விஜயரங்கம்.—உன் துன்மார்க்க குணத்தைக்கண்ட உன் நாயகி என்ன சொல்லுவாள் ?

சோமசுந்தரம்.—மோசம் போனேம். நம்மை ஏமாற்றி விட்டான் என்று துக்கப்படுவாள்.

விஜயரங்கம்.—இவ்விதமாகப் பெண்களுள்ளும் தமது துர்க்குணத்தை ஒழித் துச் சற்புத்திரியாசக் காட்டும் மாதரும் இருப்பார்களா ?

சோமசுந்தரம்.—புருடரில் துன்மார்க்கர் இருப்பதுபோல, ஸ்திரீகளிலும் துன்மார்க்கிகள் உண்டு. எப்படி இல்லையென்று சொல்லத் துணிய லாம் ?

விஜயரங்கம்.—புருடரும் முன் சொன்னவிதம் பெண்களால் ஏமாற்றப்பட் டால் என் செய்வார்கள் ?

சோமசுந்தரம்.—அவர்களும் துக்கத்தை அனுபவிக்க வேண்டியவர்களே !

விஜயரங்கம்—இதனால் குணத்தை யறிந்தபின் வதுவை செய்துகொள்ள லாமென்ற கோட்பாடு கிலகுலைந்ததல்லவா ? இனி அதனால் உண் டாகும் நன்மையையும் கெடுதியையுங் குறித்து யோசிக்கலாம்.

சோமசுந்தரம்.—குணக்கேடிருந்தாலும் ரூபவதியாய்த் தேடிக்கொள்வது பிரயோசனந்தானே ?

விஜயரங்கம்.—நீ சொல்வதுபோல் புருடனே ஒருபெண்ணைத் தேடிக் கொள்வதில் வரும் இலாபம் சௌந்தரியம் என்று ஒன்றைக் கண்டு பிடித்தோம். ஒரு புருடன் ஒரு பெண்ணைக்கண்டு சினேகித்து இரு வர் மனதும் சமமதப் பட்டபின் தவறுமல விவாகம் செய்து கொள்ளு கிறார்களா ?

சோமசுந்தரம்.—எல்லாம் எப்படி கிறைவேறும்? இருபக்கத்துத் தாய்தந்தை யர் உண்மையைக் கேள்விப்பட்டு, மோகவலையிற் சிக்கியவர்களுக்குக் காணப்படாத தூர்க்குணத்தைத் தாங்கள் கண்டு தடுத்துவிடுகிறார்கள். மரணத்தாலும் தடைபடுகிறது.

விஜயரங்கம்.—தூர்நடத்தையைக் கிஞ்சித்து மறியாத சுகுணர்களைக் குறித்து நாம்பேசவில்லை. ஆனதால் அவர்கள் நம்மேற் கோபிக்காமலிருக்க வேண்டுகிறேம். பிள்ளையும் பெண்ணும் ஒரு மனதாகியபின் அவர்கள் சிநேகம் நெருங்கி இரகசியத்தில் பெண்சாதியாகவும் மணந்த புருடனைப் போலவும் இருக்கிறார்கள். இவர்கள் மனது ஒருமைப்பட்டபின் தாய் தந்தை தடுத்தாலும் பலனில்லாமற் போகிறது. அதனலுண்டாகுங் கெடுதியை விரிக்கிற் பெருகுர். ஒருமைப்பட்டபின் விவாகம் ஆகாமற் போனல் பெண்ணின் கதியென்ன? இவ்விரகசியத்தை வேறொரு நாயகன் அறிந்தால் அவளை விரும்புவானு? அல்லது வேறொருநாயகன் அவளைக்கண்டு வார்த்தையாடினல் மறைத்துச் சொல்லவேண்டியது கடமையல்லவா? விவாகம்முடியுமுன் அவள் தாயாவதாயிருந்தால் அதைத் தடுத்துக் கொள்ளக் கொடுந் தொழிலைச் செய்யத்துணிகிறுள் அல்லவா?

சோமசுந்தரம்.—தான் இச்சித்திருந்த நாயகன் தன் சற்பை அழித்து நீங்கினலும், தன் தாய் தந்தை அல்லது புருடனல் விலக்கப்பட்டாலும் தெய்வச் செயலாய் நாயகன் உயிர் துறந்தாலும் பெண்களுக்குப் பெருந்துக்கமே!

விஜயரங்கம்.—புருடர் தாமே பெண்பார்த்து விவாகஞ்செய்து கொள்ளலாம் என்று சொல்வார்களுக்குள்ளும், பிள்ளையும் பெண்ணும் ஒருவரை யொருவர் இச்சித்தபின் தாய் தந்தையருடைய சம்மதமில்லாமல் விவாகம் முடிகிறதில்லை. ஆனதால் தாமே பெண்பார்த்து விவாகம் செய்து கொள்ளலா மென்கிற வழக்கம் அவர்களிடம் கிலகிற்காமல் போலியாய் முடிகிறதல்லவா?

சோமசுந்தரம்.—யோசிக்கின் அவ்விதமாகவே காணப்படுகிறது.

விஜயரங்கம்.—ஒருநாயகனை இச்சித்தபின் அவனை விவாகஞ்செய்து கொள்ளா மென்கிற சம்பந்தனையைக் கைக்கொண்ட ஓர் நாயகி தான் இச்சிக்காத நாயகனை விவாகஞ் செய்து கொள்ளுகிறுளா? நாயகனும தான் இச்சிக்காத நாயகியை விவாகஞ் செய்துகொள்ளுகிறுனு?

சோமசுந்தரம்.—அவர்களுடைய விவாகம் பெரும்பாலும் தேவஸ்தலத்தில் நடந்தேறுவதால் இச்சிக்காத நாயகனை இச்சிக்கிறேனென்று பெண்ணும, இச்சிக்காத பெண்ணை இச்சிக்கிறேனென்று பிள்ளையும் எப்படி சொல்லுவார்கள்?

விஜயரங்கம்.—இச்சிக்காத நாயகன் மட்டுமல்ல. பாட்டனைப்போல் இருக்கும் ஒரு கிழவனைத் தாய்தந்தையர் தொந்தரவால் தன் மனதுக்கு விரோதமாகத் தேவஸ்தலத்தில் ஒரு பெண் ஒப்புக்கொள்ளுகிறுள். புருடனும் தாய் தந்தையர் தொந்தரவால் தனக்குச் சம்மதமில்லாத ஒரு பெண்ணை ஒப்புக்கொள்ளுகிறுன் என்று வாசித்ததில்லையா ?

சோமசுந்தரம்.—பெரும் பணக்காரரா யிருந்தால் நம்மவர்களுள்ளும் பணத்துக்காசைப்பட்டுக் கிழவனுச்குச் சிறுபெண்களைக் கொடுக்கிறதில்லையா?

விஜயரங்கம்.—ஆம் ! அது தாய் தந்தையருடைய குற்றத்தால் அவ்விதம் முடிகிறதை நான் இல்லையென்று மறுக்கவில்லை. நாம் முதலில் ஒரு பக்ஷத்தை முடித்துச்கொண்டு நமது பக்ஷத்தைப் பின்பேசலாம். நான் இது பரியந்தம் சொல்லிவந்ததில் அவர்களுக் கனுகூலமானதை ஒழித்துவைத் திருக்கிறேனு ?

சோமசுந்தரம்.---ஒன்றுங் காணப்படவில்லை.

விஜயரங்கம்.—இனி நம்முன்னோர்கள் செய்திருக்கும் முறைமையைக் குறித்து யோசிக்கலாம். நமக்குப் பெண்தேடி விவாகத்தை முடித்து வைப்பது நமது தாய் தந்தையரே. விவாகம என்றால் அது இன்ன தென்று அறியாத சிறு பிராயத்தில் விவாகம் முடிந்துவிடுகிறது. நாம் சகோதரர் சகோதரிகளோடு விளையாடி ஒருவரை யொருவர் நேசிப்பதுபோல் சிறு பிராயத்தில் விவாகம் முடிந்த சிறுவர்களும் நேசித்துப் பருவமடைந்தால் அவர்கள் ஒருவரை யொருவர் நேசித்திருக்கக் சேட்ட வேண்டுமா ?

சோமசுந்தரம் —குழந்தைப்பருவததில் விவாகம் முடிப்பதும் அதனால் வருங் கெடுதியும் பார்த்துச் சகிக்கக்கூடியதா ?

விஜயரங்கம்.—எந்த விஷய த்தில்?

சோமசுந்தரம்.--பால்குடித்துப் பல் தேயுமுன் சிறுவர்களுக்கு விவாகஞ்செய்வதால் வருங்கெடுதியை அறியார்போல் கேட்கிறுய் ! விவாகம் முடிந்தவுடன் பிள்ளை இறந்தால் பெண்ணின் கதியென்ன ? பெண்ணுக்கு மணத்தைத் தந்ததால் வந்த இலாபந்தானென் ? அவள் தன் காலத்தை யெல்லாம் கைம்பெண்ணையிருந்து கழிக்க வேண்டியவளே யன்றி என்ன சுகத்தை அனுபவித்தவளாகிறுள் ?

விஜயரங்கம்.—வாலிபதசை அடைந்தபின் விவாகமுடிந்து அன்றிரவே மாப்பிள்ளை இறந்தால் பெண்ணின் கதியென்ன ? இரண்டும் ஒன்றே அல்லவா ? அவரவர்கள் வினைக்கீடாக நடப்பதைத் தடுக்க யார் வல்லவர் ?

சோமசுந்தரம்.—நீ முன் சொல்லிய வண்ணம் சிறு பிராயத்தில் விவாகமாவது பிராமணர்களுக்குள்ளும் தனவந்தர்களுக்குள்ளும் நடப்பதேயன்றி எளியவருள் அதிகமாய் நடப்பதைக் காண்கிலோம். அவர்களுக்கு இச்சை எப்படி யுண்டாகும் ?

விஜயரங்கம் —நம்மவர்களுக்குள்விவாகம் நடப்பது நெருங்கிய பந்துக்களுக் குள்ளன்றி அன்னியர்களுக்குள்ளல்ல. பிள்ளையின் பெண்ணின் தாய் தந்தையர் சிறு பிராயத்தில் குறிப்பிட்டு வருவதேயன்றிப் பிள்ளை யின் பெண்ணின் குணத்தையும் நடத்தையையும் நாளடைவில் கவனித்தும் வருகிறார்கள். பிள்ளையும் பெண்ணும் சந்திக்கும்படி நே ரிட்ட காலத்தில் தங்கள் மனச்சம்மதத்தைச் சிறு பிராயத்தில் சேட்டுக் கொள்ளுகிறார்கள். மற்ற சிறுவர்களால் இதோ உன் புருடன், இதோ உன் பெண்சாதி யென்று சாட்டும்பொழுது உண்டாகும் குறிப்பினால் சிறுவர்கள் சம்மதத்தைத் தாய் தந்தையரும் மற்றவர் களும் அறிந்து கொண்டு, விவாகம் ஆகுங்காலம் சமீபித்தபோது பெண்ணின் பிள்ளையின் சினேகிதர்களால் அவர்கள் கருத்தை யறிந்து விவாகத்தை முடிக்கிறார்கள். சம்மதம் இல்லாததைக் கண்டால் விவா கத்தை முடிக்காமல் வேறு பெண் தேடியாவது வேறு நாயகனைத் தேடி யாவது முடிக்கிறார்கள்.

சோமசுந்தரம்.—நீதெல்லாம் நீ சேர்த்துச் சொல்லுகிறதே யன்றி எங்கு அவ் விதம் நடக்கிறது ? முதலாவது, ஒருபெண் அந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம் வேறு மாப்பிள்ளையைப் பாருங்களென்று சொல்லுவாளா ? தாய் தந்தைக்கு அடங்கிய பிள்ளை எனக்கு அந்த பெண் வேண்டாம், வேறு பெண் பார்த்து விவாகஞ் செய்யுங்களென்று சொல்லுவானு ?

விஜயரங்கம்.—நீ சொல்லும் விதம் சொல்லாமல் புருடனைச் சம்மதிக்காத பெண் எனக்கு விவாகம வேண்டாம் ; நான் எந்த மதிலேறி குதிக்கி றேன் ? எனக்குக் கலியாணஞ் செய்யப் பந்தல்போட்டால் அன்றே ஓர் குளத்தில் குட்டையில் விழுந்துவிடுவேன் என்றும், பிள்ளை எனக்குக் கலியாணம் முடித்துவைக்க யாரிடத்தில் சொன்னேன், எனக்குக் கலி யாணம் என்றால் அன்றே தேசாந்தரம் போய்விடுவேன் என்றும் சொல் லுகிறார்கள் என்பதையாகிலும் கேட்டிருக்கிறயா ?

சோமசுந்தரம்.—சிரித்துக்கொண்டே ஆம் ! ஆம் ! கேட்டிருக்கிறேன். பந் துக்களுக்குள் நடக்கும் விவாகம் சிறப்புடையதாயினும் காட்டிற் சென்று மாட்டை விலைக்கு வாங்கி வருவதுபோல் ஒரு பெண்ணைக் கொண்டு வருகிறார்களே, அதற்கென்ன சொல்லப்போகிறாய் ?

விஜயரங்கம்.—அன்னிய சம்பந்தம் அபூர்வம் என்று முன்னதாகவே சொல் லியிருக்கிறேன். அன்னியர்களிடத்தில் பெண் தேடுவோர் படுங் கஷ் டத்தைச் சுருக்கிச் சொல்லவே பையனுக்குப் பெண் கொண்டுவரப் பத் துச் செருப்பு தேய்ந்ததென்று சொல்லும் வார்த்தை உமது காதில் விழு ந்திருக்கிறதா ? பத்துச் செருப்பு எப்படித்தேயும் ? எத்தனை தடவை பெண் வீட்டுக்குப் போயிருப்பார்கள் ! பெண்ணின் குணத்தையும் நடத்

தையையும் நேரிலும் மற்றவர்களாலும் அறிய அல்லவா அனேக முறை போகிறார்கள் ? பெண்ணை மிகச் சவனித்துப் பார்க்கிறார்கள். சவனித்துப் பார்க்கிறார்களென்றதில அனேகம் அடங்கி யிருக்கிறது ; அதைக் குறிப்பிக்க மனமில்லை.

சோமசுந்தரம்.—மனம் இவ்வாததைச் சொல்லச் சட்டாயப்படுத்தவில்லை. அன்னியர்களிடத்தில் பெண்கொண்டு வருகிற சவ்டத்தைச் சொன்னயேயன்றிக் கொண்டுவந்த பெண்ணின்மேல் இச்சை யெவ்விதம் உண்டாகுமென்று சொல்லவில்லை. ஆனதால் அன்னியர்களிடத்தில் உண்டாகும் சம்பந்தத்தால் இருவருக்கும் இச்சை உண்டாகாதென்று தெரிகிறது.

விஜயரங்கம் —அவசரப்பட்டு அவ்விதம் சொல்லவேண்டாம். அன்னிய சம்பந்தத்தில் ஒன்றுகூடிய பெண்ணும் பிள்ளையும் தாங்கள் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தோடு ஒருவரிடத்தும் வார்த்தையாடாமல் இருப்பதாலும், அவர்கள் விவாகத்துக்கு முன் ஒருவரை இச்சித்திராததாலும், இச்சையைக் கொள்ளும் இடம் வெறுமையாய் இருப்பதாலும் அழுக்கில்லாத வஸ்திரத்தில் சாயம் ஏறுவதுபோல் பெண்ணும் பிள்ளையும் அன்னியமாக இருந்தாலும் பெண்சாதி புருடன் என்ற முறையோடு ஒருவரை யொருவர் கண்டவுடன் இச்சிக்க இடம் உண்டாகிறது. தாய் தந்தையர் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் இச்சையை உண்டாக்க இருவரையும் அலங்கரித்து ஒருவரை யொருவர் பார்க்கும் படி செய்கிறார்கள்.

சோமசுந்தரம்.—நீ சொல்வது நியாயமாகவே காணப்படுகிறது. இன்னும் இது விஷயத்தைக்குறித்து ஏதாகிலும சொல்லப்போகிறாயா ? நெடு நேரம் இதைக்குறித்து வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.

விஜயரங்கம்.—அதிகம் இல்லை. தாமே ஒரு பெண்ணைக்கண்டு வார்த்தையாடி இச்சித்தபின் விவாகத்தை முடித்துச்கொள்ளலாம் என்று சொல்லுகிறவர்கள் நம்மைப்போலத் தாய்தந்தை சொல்லுக்குச் கட்டுப்படவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் சௌந்தரியத்தை நேரிலறிகிறார்கள். நாமும் நேரிலறிகிறோம். பெண்ணின் பிள்ளையின் குணத்தை அவர்கள் தாய் தந்தையரா லறிவதுபோல் நாமும் தாய் தந்தையரால் அறிகிறோம். அவர்கள் பணத்தைக் கருதித் தங்கள் பெண்ணையோ பிள்ளையையோ கொடுப்பதுபோல் நமது தாய் தந்தையரும் கொடுக்கிறார்கள். அவர்களில் விவாகத்துக்கு முன் பெண்ணைக் கண்டு வார்த்தையாடி இருவரும் தனித்து உலாவப்போகிறதுபோல் நம்மவர்களில் இல்லை. அவர்களில் ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொள்

ஞகிறேன் என்று வாக்களித்த பின் விவாகத்துக்கு முன் நேரிடுங் கெடுதிகளும், விவாகஞ் செய்துகொள்ளுகிறேன் என்ற வாக்குறுதி யைக்கொண்டு அவளே வேறொருவர் விரும்பாத விதஞ்செய்து அவளே விட்டு விடுகிறதும், நம்முன்னோர் செய்திருக்கும் ஏற்பாட்டினால் உண் டாக மாட்டாமையால் நம்மவர்களிடத்தில் அத்தீமைகள் இல்லை. முடி வில் சொல்லுமிடத்து நன்மையான குணம் இருபக்சத்திலும் இருக்கி றது. தீயகுணம் நம்மவர்களிடம் இல்லையென்று நன்முய் விளங்குகி றது. பொருள்மேல் விருப்பங்கொண்டு பெண்ணின் பிள்ளையின் மன துக்கு விரோதமாகச் செய்வது நம் முன்னோருடைய கோட்பாடல்ல. அதை நிறுத்தி நம்முன்னோர் கொண்ட கருத்தோடு நடப்போமானால் எல்லா விஷயத்திலும் மேன்மை உண்டாகும்.

சோமசுந்தரம்.—விஜயரங்கம் ! இது விஷயத்தில் நான் கொண்டிருந்த சந் தேகத்தை நீக்கி நம்மவர்கள் கோட்பாடே சிலாக்கியமென்று எளிதில் அறியச்செய்த உனக்கு அனேக வந்தனம்.

விஜயரங்கம்.—நம் முன்னோர் செய்திருக்கும் ஏற்பாடுகள் அனேகம் பார் வைக்குக் குற்றத்தைத் கொண்டதுபோல் காணப்படினும், அவற்றின் கருத்தை உள்துழைந்து பார்க்கில் அவை மேன்மையானவைகளென் றே காணப்படும். நேற்று இரத்தினம் விஷயத்தில நடந்த வேடிக்கை ஏதாகிலும் கேள்விப்பட்டதுண்டா ?

சோமசுந்தரம்.—இரத்தினத்தின் விஷயத்தைக் குறித்து ஒன்றும் விசேட மாகக் கேள்விப்படவில்லை. அவன் வனசாக்ஷியை விவாகம் செய்யப் போகிறான் என்று எப்பொழுதுங் கேள்விப்பட்டதுபோல் நேற்றுங் கேள்விப்பட்டேன். ஏதாகிலும் விசேஷம் உண்டோ ?

விஜயரங்கம்.—ஆம். உண்டு. இரத்தினமும் மாணிக்கமும் கமலாக்ஷிக்குக் கொடுத்த தொந்தரவை உனக்குச் சொல்லிய பின் இரத்தினத்தைக் குறித்துக் கவனித்து வந்தேன். இரத்தினம் வனசாக்ஷியின் தாயிட மிருக்கும் பொருளைக் கொள்ளை கொள்ளவே விவாகம் முடிக்க எண்ணங் கொண்டிருப்பதைக் கண்டு கமலாக்ஷி மூலமாக வனசாக்ஷியிடம் சொன் னபோது அவள் ஐயப்பட்டதாகக் காணப்பட்டது. கமலாக்ஷி வீட்டி லிருக்கும் நடராஜ முதலியார் விஸ்வநாதம் செட்டியாரை நேரிற் கண்டு வார்த்தையாடியபோது நான் சொன்னவைகள் உண்மையாகக் காணப் பட்டபடியால் கமலாக்ஷி இரத்தினத்தை அவமானப்படுத்த ஓர் வழி இருக்கிறதென்றும் அதை இவ்விதம் முடிக்க வேண்டுமென்றுஞ் சொன் னள். அவள் கருத்தை யறிந்தபின் யாவரும் அவளுடைய புத்திக் கூர் மையைக் குறித்து வியப்படையவேண்டியதா யிருக்கிறது. விஜயரங்கம் இரத்தினத்தின் விஷயத்தில் நடந்த யாவும் சொல்லிமுடித்தான். அத்

தருணத்திலே சமையலறையில் சந்தடிசேட்டு, சோமசுந்தரம்! அதென்ன இரைச்சல்? யாரோ சோபமாய்ப் பேசுகிறதுபோல் கேட்கிறதென்று விஜயரங்கம் சேட்டான்.

சோமசுந்தரம்.—அது வழக்கமாய்வரும் சப்தமே யன்றி தூதனம் அல்ல. சமையல் அறையில் சடுங்கோபமாய்ப் பேசிக்கொண்டிருப்பது என் தாய்-பேச்சியாயி அம்மாள். என் தாயோடு மற்றொருவர் பேசுவது என் தங்கை-காளியாயி அம்மாள். இவ்விடம் நின்று சாளரத்தின் வழியாகப் பார்த்தால் யாவும் தெரியும். (என்று சாளரத்தைக் காட்டினான்.)

சோமசுந்தரம் குறிப்பிட்ட இடத்தில் நின்று சமையல் அறைச்சுள் நடப்பதை விஜயரங்கம் பார்த்துக்கொண்டிருந்தான்.

காளியாயி.—அம்மா! மஞ்ஞன்மணி அரிசி அரித்த இடத்தைப் பார்த்தீர்களா? எத்தனை அரிசிகள் சிந்திக் கிடந்தன; நாலைந்துக்குக் குறையாதே! அவைகளைப் பொறுக்கிப்போட்டால் இவளுக்கு என்ன சேடு?

பேச்சியாயி.—இவளுக்குக் கேடு வந்து சொண்டுபோகப்போகிறது. அன்றைக்கே போய் விடுவாள் என்று சந்தோஷமாயிருந்தேன். போகாமல் எழுந்து உட்கார்ந்து கொண்டாளே!

மஞ்ஞன்மணி.—அத்தை! நான் அரிசியரிக்கும்பொழுது என் கண்ணுக் ககப் படாமல் ஒன்றிரண்டு விழுந்ததோ என்னவோ நான் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவைகளை எடுத்துக்கொள்ளாமல் வருவேனு? அந்தக் குற்றத்தை மன்னிக்க வேண்டுகிறேன்.

பேச்சியாயி.—அடி, உனக்குக் கண் தெரியாமலா நின்று தூழாவுகிறாய்?

காளியாயி.—அடி! அடி! என்ன சொன்னாய்? அம்மா! இவள் சொல்வதைக் கேட்டீர்களா? அடி! எத்தனை அரிசி இருந்ததென்று சொன்னாய். நாலரிசிகளை எறிந்துவிட்டு வரவில்லையா? அவைகளை ஒரு பிச்சைக்காரனுக்குப் போடக்கூடாதா?

மஞ்ஞன்மணி.—மச்சி! நான் வேண்டுமென்று எறிந்துவந்தேன்?

காளியாயி.—அடி! நீ இல்லையென்று சத்தியம் பண்ணுவாயா?

மஞ்ஞன்மணி.—மச்சி! சத்தியம் என்று நீங்கள் வாயில் வரலாமா?

காளியாயி.—அம்மா! அம்மா! கேட்டுக்கொண்டீர்களா? நீங்களும் அப்பாவும் உயிரோடு இருக்கும் பொழுதே எனக்குப் புத்தி கற்றுக்கொடுக்கப் பார்க்கிறாளே! உங்களுக்குப் பின் இந்த வீட்டில் அடியெடுத்து வைக்கவும் யோக்கியதை இருக்குமா?

மஞ்ஞன்மணி.—மச்சி! நான் ஒன்றும் குற்றமாகச் சொல்ல வில்லையே!

பேச்சியாயி.—அடி ! தட்டு ! பேசாதே ! புழுக்கைக்கு வாய் நீளமாய் விட்டது. பயலுக்குத் தலையணை மந்திரம் போட்டு உன் சொற்படி நடக்க வைத்துக்கொண்டாயே ! அதுபோல எங்களையுமா மேய்க்கப்பார்க்கிறாய் ?

காளியாயி.—அம்மா ! இவள் விஷயத்தில் எவ்வளவு பொறுமை காட்டி வருகிறேன் ! இந்தக் கழுதை அதை நினைக்கிறாளா ? அடியே ! நான் சொல்லி விடட்டா ? சொல்லி விடட்டா ? உனக்கு ஐயோ என்றால் ஆறு மாதத்துப் பாவம் பின்தொடரும். அம்மா ! இவள் அம்மியில் மிளகாய் வைத்தரைத்தாளே, அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா ?

பேச்சியாயி.—எனக்கெப்படித் தெரியும் என் கண்மணி ! இந்தக் கழிச்சலில் போவாள் என்ன செய்தாள் ?

காளியாயி.—இவள் மிளகாய் அரைத்துக் கொண்டிருக்கும் பொழுது இவள் எண்ணம் எவன்மே லிருந்ததோ ? என்ன நினைவிலிருந்தாளோ ? அனியாயமாக மிளகை யெல்லாம் சிந்திவிட்டாள்.

மனோன்மணி.—மச்சி, ஒரு மிளகுதானே கீழே விழுந்திருந்தது ?

பேச்சியாயி.—ஏண்டி ! ஒரு மிளகுதான் சும்மா வந்ததோ ! உன் அப்பன் வீட்டிலிருந்தா வந்தது. (என்று தாடையில் அடித்தாள். மனோன்மணி அடிபட்டவுடன் ஒன்றுஞ் சொல்லாமல் திரும்பிச் சென்று மிளகாயை அம்மியில் வைத்து அரைத்துச்சொண்டிருந்தாள்.)

காளியாயி.—இன்று தெருவில் சாணம் தெளித்தாளே என்னமா யிருந்தது பார்த்தீர்களா ? எல்லாம் சட்டியு முட்டியுமா யிருந்தது. அதைக்காட்டி இப்படித்தானு சாணந் தெளிக்கிறதென்றேன். அதற்கவள் பார்த்தப் பார்வையை நினைக்கப் பயமாக இருக்கிறது !

பேச்சியாயி.—ஆம், ஆம், நீ ஒரு பயலாயிருந்தால் வேறு விதம் பார்ப்பாள் !

காளியாயி.—அம்மா, அப்பா வாங்கிக்கொடுத்த சட்டுபுடவை ஒன்றை எலிக்குக் கொடுத்துவிட்டாள். சாமான் அறையில் சாமான்களைக் காட்டும் மேலுமாகச் சிந்திவிடுகிறதால் வீட்டில் எலிகள் அதிகரித்து விட்டன.

பேச்சியாயி.—இக்கோவேறிக் கழுதையைக் கொண்டுவந்தபின் நம்முடைய வீட்டில் எலிகள் ஒன்றையும் வைக்கவிடமாட்டோம் என்கின்றன.

என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது காளியாயி அம்மாள் திடுதிடென ஓடிப்போய் வடித்த கஞ்சிச் சட்டியைத் தூக்கிக்கொண்டுவந்து, அம்மா, இதைப் பாருங்கள் கையை விட்டுக் காட்டுகிறேன் என்று கஞ்சியில் கையைவிட்டு இரண்டு மூன்று சாதத்தைத் தடவி எடுத்துக் காட்டினாள். பேச்சியாயி அம்மாளுக்கு அதிக கோபம் உண்டாகி அடி துன்

மார்க்கி என்னை ஒட்டாண்டியாய் ஆக்கவா இங்குவந்தாய்? உன்னப்பன் ஆத்தாள் இப்படித்தானு வேலை கற்றுச்கொடுத்தார்களென்று மகளிடத்திலிருந்த கஞ்சிச் சட்டியைப் பிடுங்கி மனோன்மணி தலையில் போட்டு உடைத்தாள். அறைக்குள்ளிருந்து சன்னல் வழியாகப் பார்த்திருந்த விஜயரங்கம் வெளியில்போக ஓடினான். சோமசுந்தரம் ஓடிப்போய்ப் பிடித்துக்கொண்டு வெளியில் போகவேண்டாம்; மற்ற வேடிக்கையையும் இவ்விடம் இருந்தே பார் என்றான். சட்டி உடைந்து மனோன்மணியின் தலை முகம் தேகமெல்லாம் கஞ்சியால் நனைந்து அழுதுகொண்டிருந்தாள். அப்போது முத்துக்குமார முதலியார் என்ன என்று வந்தார்.

பேச்சியாயி.—என்ன சொல்லுகிறதடா படுபாவி! இப்பிசாசை அப்பொழுதே வேண்டாம் என்றேன். என் பேச்சைக் கேட்காமல் கொண்டுவந்து என் குடியைக் கெடுக்க நீயும் இருந்தாயே தோஷி. (என்று சன்னத்தில் இடித்தாள்.)

முத்துக்குமார முதலியார்.—உனக்கு என்ன சொன்னபோதிலும் புத்திவருகிறதில்லையா? (என்று மருமகள் தலையில் உதைத்தான்.)

காளியாயி.—புத்திநான் கற்பிக்கிறேன். (என்று துடைப்பத்தால் காலந்தடி மனோன்மணி தலையில் அடித்தாள்.)

சன்னல் வழியாகப் பார்த்திருந்த விஜயரங்கம் சோமசுந்தரத்தின் முகத்தைப் பார்த்தான். அவன் கண்ணீர் சோரவிட்டு நிற்பதைக்கண்டு, சோமசுந்தரம்! இதென்ன அநியாயம் என்றான்.

சோமசுந்தரம்.—விஜயரங்கம் நான் என்ன செய்வேன்! இத்துன்பங்களை அனுபவிப்பதைவிட அவள் இறந்தால் என்மனம் அதிக சந்தோஷத்தை அடையும். சில நாள்களுக்கு முன் என் தாயும் தந்தையும் தங்கையும் சேர்ந்து அடித்த அடியால் அவள் இறந்தாள் என்று அடங்காச் சந்தோஷத்தோடிருந்த என்னைத் துக்கத்தில் அமிழ்த்த வைத்தியர் தோன்றி அவளுக்கு உயிர்கொடுத்துப் போனார்.

8—ம். அத்தியாயம்.

சோமசுந்தரம் வீட்டில் நடந்த அக்கிரமங்களைப் பார்த்துவந்த விஜயரங்கம் தன் அறையிலே மஞ்சத்தில் படுத்தும் நித்திரை கொள்ளாமல் ஐயோ! ஒரு சற்புத்திரியை என்ன பாடு படுத்துகிறார்கள்! மனோன்மணிக்கு ஒருவர் துணையுங் காணப்படவில்லையே! சோமசுந்தரம் தன் தாய் தந்தைக்கஞ்சி ஒன்றும் செய்யாமலிருக்கிறான். அவன் தந்தை யாவரிலுங்

கொடியவனுகக் காணப்படுகிறார். தங்கையோ ! அடிக்கடி கோள்மூட்டத் தயாராக இருக்கிறாள். தாய் பத்திரகாளி சொரூபத்தோடு யாதொரு காரணமும் இல்லாமல் புருஷனையே அடிக்கிறவளா யிருந்தால் மருமகளை வதைக்கக் கேட்கவேண்டுமா ? சோமசுந்தரம் தன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு வெளி ஏறினால் உலகம் நிந்திக்கும் என்பதற்சையமில்லை. எது எப்படி முடிந்தாலும் மனைவிமணியைத் தன் பத்தினிலிருந்து நீக்கிவிட வேண்டியது சட்டாயம். அம்மாதைப் பெற்றவர்களிடம் அனுப்பினால் உத்தமம் என்று நினைத்தாலும் உண்மையை அவர்களிடம் சொல்லாமல் விட்டு வந்தால் பெண்மேல் தோஷங்கண்டு விட்டுப்போனதாக எண்ணுவார்கள். இது விஷயத்தில் நாமே பிரயத்தனப்பட்டுச் செய்யலாம் என்றால் அதற்கவன் ஒப்புச்கொள்ளுவானே இல்லையோ என்று தனக்குள் அனேகமாக யோசித்து, எனக்கு விவாகமாகாதது ஓர் விஷயத்தில் அனுகூலமாகக் காணப்படுகிறது. நம்முடைய தாய் தந்தைகளை அவர்களுக் கொப்பிட்டா சொல்லுகிறது. நமக்கு வருபவளை அவர்கள் மேன்மையாக வைத்துக்கொண்டிருப்பார்கள் என்று துணிந்து சொல்லலாம். நாம் நம்முடைய சருத்தை இன்னும் தெரிவிக்காமலிருக்கிறோம் என்று பலவித யோசனை செய்து கொண்டிருக்கும்பொழுது, அடுத்த அறையில் சயனித்திருக்கும் கலியாணசுந்தர முதலியாரும மீனாக்ஷியம்மாளும் பேசுங்குரல் கேட்டது. விஜயரங்கம் படுத்திருக்கும் அறைக்கும் தாய் தந்தையர் படுத்திருக்கும் அறைக்கும் மத்தியிலுள்ள சுவர் அதிக உயரம் இல்லாததால் அவர்கள் பேசும் வார்த்தை ஒவ்வொன்றும் விஜயரங்கத்துக்குக் கேட்டுக்கொண்டிருந்தது.

கலியாணசுந்தர முதலியார்.—மீனாக்ஷி! விஜயரங்கத்துக்கு வேண்டிய செலவுக்காக எதாகிலும் பணங்கொடுத்து வருகிறாயா ?

மீனாக்ஷியம்மாள்.—விஜயரங்கத்தின் செலவை யோசிக்கில் அவன் நமக்குப் பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணுவான் போல் காண்கிறது. (என்று சிரித்தாள்.)

கலியாணசுந்தர முதலியார்.—மெதுவாகப்பேசு. அவன் விழித்துக்கொண்டிருக்கக்கூடும்.

மீனாக்ஷியம்மாள்.—என்ன மணி என்று நினைக்கிறீர்கள் ? மணி பன்னிரண்டுக்கு அதிகமாகிறதே ! இது பரியந்தமா விழித்துக்கொண்டிருப்பான் ?

கலியாணசுந்தர முதலியார்.—ஒருவேளை விழித்துக்கொண்டிருக்கக் கூடுமென்று நினைத்தேன். நீ என்ன சொன்னாய் ? அதிக செலவு செய்கிறாய் ?

மீனாக்ஷியம்மாள்.—ஆம் ! சென்ற வாரம் எல்லாம் ஒன்றரையணு செலவு செய்திருக்கிறான். இப்படி செலவு செய்தால் நாம் என்ன செய்கிறது. (என்று மறுபடியும் சிரித்தாள்.)

கலியாணசுந்தர முதலியார்.—அவனுக்குக் கையில் காசில்லாததால் செலவு செய்ய வசையில்லை போல் காண்கிறது.

மீனாக்ஷியம்மாள் —நான் நாள்தோறும் அவன் சட்டையை மாற்றி வைக்கும் பொழுது சட்டைப்பையில் இருபது ரூபாய் இருக்கும்படி நான் பார்க்கிறது வழக்கம். எப்பொழுதாகிலும் குறைந்திருந்தால் அதைப் பூர்த்தியாக்கி வருகிறேன். அதில் பத்து ரூபாய் ஒரு நாளையில் செலவானதை நான் பார்க்கவில்லை. "ஏனப்பா ! உன் சட்டைப்பையில் இருக்கும் ரூபாய் அப்படியே இருக்கிறது. செலவு செய்யப் பயப்படுகிறாயா ?" என்றால் சிரிக்கிறான். நான் இன்னும் என்ன செய்யவேண்டும் ?

கலியாணசுந்தர முதலியார்.—உன் கதை அது. இனி என் கதையைக்கேள். இனிவராதென்று எண்ணியிருந்த கடனை மதுரைக்குப்போய் கண்ணப்ப முதலியாரிடம் வாங்கி வந்த தொகை முதலில் பதினையிரம், வட்டியில் மூவாயிரம். அதில் ஆயிரம் ரூபாய் அவனிடம் கொடுத்து உன்னிடம்போல் செலவு செய்துகொள்ளென்றேன். அவன் அதை வாங்கிக் கொண்டுபோய் செட்டி வீட்டில் வட்டிக்குக் கொடுத்துவிட்டான். அதைக் கேள்விப்பட்டு ஆயிரம் ரூபாய்க்காக வரும் வட்டியைச் செலவு செய்ய இஷ்டங் கொண்டிருக்கிறான் என்று எண்ணி ஆயிரம் ரூபாய்க்காக என்ன வட்டி வரப்போகிறது. அது போதாதென்று நானும் ஐயாயிரம் அந்தக்கணக்கில் கொடுத்து வட்டியை விஜயரங்கம் சேட்டும் போது கொடுக்கச்சொலலி யிருந்தேன். அதுவிஷயம் எப்படி யிருக்கிறதென்று செட்டியைக் சேட்டதில், வட்டியும் முதலும் அப்படியே யிருக்கிறதென்றும், அதில் ஒரு காசாகிலும் வாங்கவில்லையென்றும் சொன்னார். இவனையன்றி நமக்கு வேறு பிள்ளை இலலை. இந்த ஆஸ்தியை எல்லாம் என்ன செய்யப்போகிறான். அவன் தன் பிள்ளைகளுக்கு வைத்துப்போக வேண்டியவன்தானே ?

மீனாக்ஷியம்மாள்.—ஆம், ஆம், பிள்ளைகளுக்குத்தான் வைத்துப் போகப்போகிறான். அவனுக்கு வயது இருபதுக் கதிகமாயும் விவாகம் செய்து வைக்காமலிருக்கிறீர்கள். என் இன்னும் உன் மகனுக்குக் கலியாணம் செய்யாமலிருக்கிறீர்கள் என்று என்னைக் கேட்பவர்களுக்கு மறுமொழி சொல்ல என் மனம் கூசுகிறது.

கலியாணசுந்தர முதலியார்.—உன்னைக் கேட்பவர்களுக்குச் சொல்லுஞ் சமாதானம் சரியல்லாததால் மனம் கூசுகிறதென்றாய். என்னைக்கேட்ப

வர்களுக்கு நான் சொல்லும் சமாதானம் சரியல்லவென்று நான் துக்கப் படுகிறேன்.

மீனாக்ஷியம்மாள்.—என் இருவரும் துக்கப்படவேண்டும்? ஒரு பெண்ணைத் தேடி அவனுக்கு விவாகத்தைச் செய்துவிட்டால் எல்லாரும் சந்தோஷ மாக இருக்கலாமே!

கலியாணசுந்தர முதலியார்.—நான் என்ன செய்வேன். நான் பார்க்காத இடம் எல்லாம் பார்த்தேன். கேட்காதவர்களை எல்லாம் கேட்டேன்.

மீனாக்ஷியம்மாள்.—விஜயரங்கத்தைப் பார்த்தால் பெண் கொடுக்கமாட்டேன் என்றும் சொல்லுவார்களா? அவன் அழகில் குறைந்தவனா? நமக்கு ஆஸ்தியில்லையா? வீணே கதை சொல்லுகிறீர்கள்.

கலியாணசுந்தர முதலியார்.—நீ பைத்தியக்காரியாக இருக்கிறாய். நமக்குப் பந்துக்களில் அவனை அறியாதவர்கள் யார்? எல்லாம் தெரிந்தவர்களே. அனேகர் நம்முடைய வீட்டுக்கு வராமலிருப்பதை அறியாயா? நம் முடைய நெருங்கிய பந்துக்களே எங்காகிலுங்கண்டால் அவர்கள் முகத் தைத் திருப்பிக்கொண்டுபோவதை அனேகமுறை உன்னிடம் சொல்லி இருக்கிறேன். விஜயரங்கத்தைக் கருதியல்லவா அவர்களை எல்லாம் வெறுத்தேன். உன்னுடைய தமையனை நேற்றுக் கடைத்தெருவில் கண் டேன். என் வீட்டுக்கு வரவில்லை என்று நான் கேட்டதற்கு என்ன சொல்லியிருப்பானென்று நினைக்கிறாய்?

என்று மெதுவாகச் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகளைக் கேட் டிருந்த விஜயரங்கம் எழுந்து உட்கார்ந்து என் காதில் என்ன விழுந் தது? இது உண்மைதானா? ஆ! கடவுளே! என்று பெருமூச்சுவிட்டு, இனி ஒருக்ஷணமும் என் தாய் தந்தையைத் துக்கத்தில் வைத்திருப்பது தகாதென்று எழுந்து தலையணையின் கீழிருந்த சாவியை எடுத்துப் பெட்டியைத்திறந்து தான் போட்டிருந்த சடுக்கன் மோதிரங்களை வைத் துப் பூட்டி, அன்று போட்டிருந்த சட்டையில் சாவியை வைத்துச் சட்டையில் இருந்த ரூபாயில் ஒரு ரூபாய் எடுத்துக்கொண்டு, கட்டி யிருந்த வஸ்திரத்தோடு ஓர் அங்கவஸ்திரத்தைப் போட்டுக்கொண்டு, கதவை மெதுவாகத் திறந்து வெளியில் வந்து நின்று, நாம் நம்முடைய தாய் தந்தையை விட்டுப் பிரிய நேரிட்டதே என்று துக்கப்பட்டுக் கண் ணீர் ததும்ப சிலநேரம் நின்று, நாம் அவசரப்பட்டுத் தாய் தந்தைகளை விட்டுப்போவது நன்றல்லவென்று வீட்டுக்குள் நுழையப் போனவன் நம்மை மேன்மையாகப் பார்க்கும தாய் தந்தைக்குத் துக்கத்தைக் கொ டுத்துக் கொண்டிருக்கவா வீட்டுக்குள் நுழையப் போகிறேன்? மகன்

தாய்தந்தைகளைச் சந்தோஷப்படுத்துவதை விட்டு அவர்களைத் துன் பத்தில் அழுத்துவது அடுக்காது என்று திரும்பினன். காலையில் நம் மைக் காணவிட்டால் துக்கப்படுவார்களே அதற்கு என்ன செய்கிற தென்று மனத்தான். பின் தன்னைத்தானே தைரியப்படுத்திக்கொண்டு தாய் தந்தைகளுக்குச் சதா துக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற பிள்ளை சமீபத்தில் இருந்தென்ன பலன்? என்று துணிந்து வீட்டை விட்டு நீங்கி எந்த இடத்திற்குப் போவதென்று உத்தேசிக்காமல் மேற் காகப்போகும் பாதையாகச் சென்றான். மணியும் இரண்டானதால் ஊர் முற்றிலும் சந்தடியடங்கியிருந்தது. காவற்காரர்கள் மட்டும் அங்கும் இங்கும் காணப்பட்டு விழயரங்கத்தை எங்கு போகிறாய் என்று கேட்க, அவன் அவசரமாக ஒரு இடத்திற்குப் போகவேண்டுமென்று அவர்களை நெருங்கி வார்த்தையாடாமல் சென்று, நாம் என்ன வேலைசெய்துவந் தோம், நம்முடைய சினேகனிடம் நம்முடைய கருத்து இன்னதென்று தெரிவிக்காமல் வந்ததை அவன் அறிந்தபின் நம்மை மிகக் கேவலமாக நினைக்க இடமாய் விட்டதே! சோமசுந்தரம் பெருந்துக்கத்திலிருக்க அதனோடு நம்முடைய துக்கத்தைச் சேர்க்காமல் வந்து விட்டதும் நன் மையாகக் காணப்படுகிறது. அல்லாமலும் பெரியவரிடத்தும் கமலாக்ஷி யிடத்தும் நாம் சொல்லாமல் வந்தது நம்மேல் குற்றமாயினும் அவர்களி டம் சொல்லாமல் வந்தது நாம் கொண்ட கருத்துக் கனுகூலமானது. அவர்களிடம் பயணம் சொல்லிக்கொள்ளுவோமே யானால் சுலபத்தில் நமக்கு உத்தரவு கொடுக்கமாட்டார்கள். அவர்கள் சொல்லும் நியாயத் திற்குக் கட்டுப்படாம லிருந்தால் நம்மைக் கேவலமாக நினைக்க இடந் தரும். அவர்கள் வார்த்தையைத் தட்டாமல் ஊரிலிருப்போமாகில் தாய்தந்தைக்குத் துக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். நாம் வராதிருப்பதைக் கமலாக்ஷி அறிந்து விசனப்படாமலிருக்காள். நம்முடைய ஊழ்வினை நம்மைத் தள்ளிக்கொண்டுபோகிறதால் அதைத் தடங்கல்செய்ய யாரால் முடியும் என்று தனக்குள் பலவாறாக நினைத் துத் துக்கப்பட்டும், அதற்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டும் வழிநடந்து, அருணோதயத்துக்குள் பத்துமயில் வந்து விட்டதாக மைல் கற்களால் அறிந்து எந்த ஊருக்குப்போகலாம் என்று யோசித்துக் கொண்டே வழிநடந்தான். தான வீட்டைவிட்டுப் புறப்பட்டது முதல் தனக்குள் உதித்த கேள்விகளுக்கெல்லாம் சமாதானம் தோன்றினா லும் தான் எந்த ஊருக்குப் போகிறதென்று தனக்குள் தோன்றிய கேள்விக்குமாத்திரம் பதில சொல்ல அறியாமல் காலைக்கடனை முடித் துக்கொண்டு எட்டுமணி பரியந்தம் நடந்தபின், வெயிலாலும் எப் பொழுதும் நடந்த வழக்கமில்லாமல் அதிக தூரம் நடந்த சிரமையா லும் களைத்துக் கஷ்டத்தோடு நடப்பதை யறிந்த வழிப்போக்கர் அநே

என்னை மன்னிக்கவேண்டும் என்னால் ஓடி வரமுடியாததால் மெதுவாக நடந்து தங்களைப் பார்க்க வந்தேன். (68ம்-பக்கம் பார்க்க.)

கர் இவனைக் கவனிக்கநேரிட்டது வழிப்போக்கரில் ஒருவன் நெருங்கி தம்பி ! நீ எந்த ஊருக்குப் போகவேண்டும்? அதிக சஷ்டத்தோடு நடக்கிறாயே, உனக்குத் தேக அசௌக்கியமோ? என்றான். அதற்கு விஜயரங்கம், அண்ணா ! நான் தஞ்சாவூருக்குப் போகவேண்டும். வெயிலால் எனக்குக் கஷ்டமாக இருக்கிறதேயன்றி எனக்குத் தேக அசௌக்கியம் இல்லை என்று வார்த்தையாடிக்கொண்டு பதினைந்துமணி பரியந்தம் வழி நடந்தபின் அன்னியன் விஜயரங்கத்தைப் பார்த்து, தம்பி ! நீ தஞ்சாவூருக்குப் போகவேண்டும் என்றால் வழிக்குக் கட்டுசாதமாவது தின்பண்டங்களாவது உன்னிடத்தில் காணப்படவில்லையே ? உன்னைப் பார்த்தால் தனவந்தர் பிள்ளை போலவும், ஏதோ மனவருத்தத்தால் வெளிப்பட்டது போலவும் காணப்படுகிறது. சாப்பாடில்லாமல் உன்னால் நடக்கமுடியாது. நான் வேளாளர் குலம். உன்னைப்பார்த்தாலும் அப்படியே காணப்படுகிறது. என்னிடத்திலிருக்கும் கட்டமுதை இருவரும் புசித்துப் பின் நடக்கலாம் வாவென்று கையைப்பிடித்து இழுத்தான்.

விஜயரங்கம்.—அண்ணா ! நீர் ஒருவருக்சென்று கொண்டு வந்ததை இருவர் பங்கு போட்டுக்கொண்டால் ஒருவருக்கும் திருப்தியாகாது. நீரே சென்று சாப்பிட்டு வரலாம். நீர் வரும் பரியந்தம் இவ்விடத்தில் இருக்கிறேன். நீர் வந்த பின் இருவரும் போகலாம்.

என்று சொல்ல, அவ்வன்னியன் தம்பி ! நான் கொண்டுவந்த கட்டுசாதத்தைப் பார். வழியில் யாருக்காகிலும் பிரயோசன மாகுமென்றே அதிகமாகக் கொண்டுவந்தேன். நீ என்னோடு வந்து சாதத்தைப்பார்த்து இருவருக்கல்ல இது நால்வருக்காகும் என்று கண்டால் சாப்பிடலாம். அப்படியில்லாமற் போனால் நீ சாப்பிடாமல் வந்துவிடலாம் வாவென்று அன்னியன் விஜயரங்கத்தைக் குளக்கரைக்கு அழைத்துச்சென்று, இருவரும் புசித்ததுபோக மற்றச் சாதத்தை மூட்டையாகக் கொண்டு மாலை பரியந்தம் வழிநடந்து ஓர் சத்திரத்தை அடைந்தார்கள். சத்திரத்திலிருந்த பிராமணன் விஜயரங்கத்தைப் பார்த்து, இவன் ஓர் தனவந்தன் பிள்ளைபோல் காணப்படுகிறான் என்று எண்ணி, ஐயா ! நீர் யார் ? எங்கிருந்து வருகிறீர் ? உமது பெயரென்ன ? என்றான்.

விஜயரங்கம்.—சுவாமி ! நான் மயிலாபுரியிலிருந்து வருகிறேன். என் பெயர் விஜயரங்கம். இன்றிரவை இச்சத்திரத்தில் நானும் என் சினேகரும் கழித்துப் போகலாம் என்று எண்ணிவந்தோம். ஏதாகிலும் ஆகாரபானை உண்டோ என்று கேட்டான்.

சத்திரத்துப் பிராமணன்.—மகாராஜனே இருக்கலாம். ஒரு ஆக்ஷேபனையு மில்லே. நீர் அதிக தூரம் நடந்திருப்பதாக எண்ணிக் சேட்டதே யன்றி வேறொன்றுமில்லே.

விஜயரங்கம்.—அதிக தூரம் நடக்கவில்லே. மயிலாபுரியிலிருந்து வந்தது அதிக தூரமா ?

சத்திரத்துப் பிராமணன்.—மூப்பத்தைந்து மைல் உம்மைப் போன்றவர்க ளுக்கு அதிகமல்லவா ?

என்று சிரித்துக் கொண்டே அன்னியனுக்கும் விஜயரங்கத்துக்கும் இடங் காட்டிச் சத்திரத்துக்குள் சென்றான். விஜயரங்கமும் அன்னியனும் சிலநேரம் பேசியிருந்து பின் விஜயரங்கம் நித்திரைபோனான். இரவு எட்டு மணிக்குச் சத்திரத்துப் பிராமணன் விஜயரங்கத்தை எழுப்பிக் கட்டாயப்படுத்தி அன்னியனோடு அழைத்துச் சென்று உணவளித்து உபசரித்து அனுப்பினான். விஜயரங்கம் பிராமணனைத் தனித்தழைத் துத் தான் கொண்டு வந்த ஒரு ரூபாயை எடுத்து, ஐயரே ! என்னிடத் தில் தற்காலம் அதிகமில்லே, ஆனதால் இதைப் பெற்றுக்கொள்ளும் என்று வேண்டினான்.

சத்திரத்துப் பிராமணன்.—முதலியாரே ! உம்முடைய தயவிருந்தால் அது வே போதுமானது. இக்காலத்தில் இல்லாமற் போனாலும் மற்றொரு காலத்தில் பெற்றுக்கொள்ளுகிறேன். இப்பொழுதொன்றும் எனக்கு வேண்டியதில்லே. நான் பணத்துக் சாசைப்பட்டவனென்று நினைக்க வேண்டாம். என்னை மன்னிக்க வேண்டும்.

என்று வேண்டி அவர்களுக்கும் படுக்கை தயார் செய்து கொடுத்தான். சத்திரத்தில் இருந்த பிராமணர்கள் விஜயரங்கத்துக்குச் சத்திரத்துப் பிராமணன் செய்யும் உபசரணையைக் கண்டு ஆச்சரியப் பட்டுக்கொண் டிருந்தார்கள். விஜயரங்கம் தன்னோடிருக்கும் அன்னியனைப் பார்த்து, அண்ணா ! இந்தச் சத்திரத்துப் பிராமணனைத் தனித்து அழைத்துப் போய்ப் பணம் கொடுத்தேன். அவன் வாங்காமல் நம்மை உபசரித்துப் படுக்கை முதலானதுங் கொடுத்துப் போய்விட்டது ஆச்சரியமாக இருக் கிறதென்றான்.

அன்னியன்.—பணம் வேண்டாம் என்ற பிராமணனே இன்றுதான் நான் கண் டேன். இதற்குமுன் சத்திரத்துப் பிராமணனே உனக்குத் தெரியுமா ?

நான் அந்தப் பிராமணனே அறிந்தவன் அல்ல என்று இருவரும் சிலநேரம் பேசியிருந்து நித்திரை போய்னர். விஜயரங்கம் நல்ல நித்திரையிலிருக் கும்பொழுது, அன்னியன் எழுப்பி, தம்பி ! வண்டி கட்டுகிறார்கள்;

அவர்களோடு போனால் நமக்கு வழிநடையில் வருத்தம் தோன்றாது. எழுந்திருக்க இஷ்டமா? என்று கேட்டான்.

விஜயரங்கம்.—ஆம் அண்ணா! இதோ வந்தேன்; ஐயரெங்கே? அவரிடத்தில் படுக்கையை ஒப்பித்து விடவேண்டுமே!

சத்திரத்துப் பிராமணன்.—நான் இங்கிருக்கிறேன். நீங்கள் க்ஷேமமாகப் போகலாம்.

விஜயரங்கமும் அன்னியனும் வண்டிகளோடு இரவெல்லாம் நடந்து விடிய ஒரு ஜாமத்துச்சுமுன் அன்னியன் விஜயரங்கத்தைப் பார்த்து, தம்பி! நீ க்ஷேமமாய்ப் போய்வரலாம். நான் இவ்வழியாகத் திரும்பும் வண்டிகளோடு செல்லவேண்டும் என்று சுட்டிக காட்டினான்.

விஜயரங்கம்.—அண்ணா! நீர் என் விஷயத்தில் காட்டிய பக்ஷத்தை மறவேன், போய்வாரும்.

என்று தனக்கு வழியிலகப்பட்ட சினேகனைப் பிரிந்து மற்ற வண்டிகளோடு பின் சென்று பொழுது விடியும் சமயத்தில் வண்டிகள் வண்டிபேட்டைக்குள் நுழைவதைச்சண்டு, இனி வண்டிசள் துணை வேண்டுவதில்லை என்று நடந்து, நம்முடைய வினை நம்மை எங்கு கொண்டு போகிறதோ தெரியவில்லை; நேற்று வெயிலால் கஷ்டப்பட்டாலும் கால்கள் நோகவில்லை; இன்று இரண்டு துடைகளும் அதிகம் நோகின்றன; பாதங்கள் பூமியில் வைக்க முடியவில்லை; நாம் என்ன செய்கிறது? எவ்விதம் இந்தப் பிரயாணத்தை முடிக்கப்போகிறோம் என்று துக்கப்பட்டு, தானே தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு தான் இவ்வித கஷ்டத்தோடு வழி நடப்பதைத் தன் தாய் தந்தை நேரில் பார்த்தால் சகிப்பார்களா என்று நினைத்து, அடிக்கடி உட்கார்ந்து இளைப்பாறி மாலை மூன்று மணி பரியந்தம் நடந்து, இனி தன்னால் அதிக தூரம் நடக்கமுடியாதென்று எண்ணிச் சத்திரம் சமீபத்தில இருப்பதாக வழிப்போக்கரால் அறிந்து அதிக கஷ்டத்தோடு நடந்து போகும்போது, சவாரி வண்டியொன்று அதிக வேகமாய் வருவதைக்கண்டு வண்டிக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்று வண்டியைப் பார்த்தான். அதில் ஒர் தனவந்தன் இடுப்பிலிருந்த வெள்ளிப் பொடிச் சிமிழைக் கையில் எடுத்துத் திறந்து மூக்குப்பொடி எடுத்துக்கொண்டு சிமிழை மடியில் சொருகப் போனபோது கைதவறிக் கீழே வெள்ளிச் சிமிழ் விழுந்தது. உடனே வண்டியை நிறுத்தத் தனவந்தன் கட்டளையிட்டும் கொஞ்சதூரம்போய் வண்டி நின்றது. விஜயரங்கம் ஒடிச சிமிழை எடுத்து வண்டியிலிருக்கும் தனவந்தனிடம் கொண்டுபோய்க் கொடுக்க மெதுவாகச் சென்று தனவந்தனிடம் சிமிழைத்தந்து, ஐயா! என்னை மன்னிக்கவேண்டும், என்னால்

ஓடிவர முடியாததால் மெதுவாக நடந்து தங்களைப் பார்க்க வந்தேன்.

தனவந்தன்.—ஆம்! ஆம்! நீர் சிலதூரம் ஓடிப்பார்த்துப் பின் உம்மால் ஓட முடியாமல் மெதுவாக வருவதை நான் பார்த்திருந்தேன். உமக்கு நான் கொடுத்த தொந்தரவை நீரல்லவா மன்னிக்கவேண்டும்? நீர் இன்னும் அதிக தூரம் போகவேண்டுமோ? நான் சமீபத்திலிருக்கும் சத்திரத்துக் குப் போகிறேன். அது பரியந்தம் வண்டியில் வரலாம், ஏறிக்கொள் ளும். (என்று வேண்டினான்.)

விஜயரங்கம்.—ஐயா! நானும் அந்தச் சத்திரத்திற்கே போகிறேன். தாங்கள் சௌக்கியமாய் உட்கார்ந்திருப்பதைக் கெடுக்க மனமில்லை. நான் மெது வாக நடந்து வருகிறேன். தாங்கள் போகலாம்.

தனவந்தன்.—நாலைந்து பேர் உட்கார்ந்து போகும் வண்டியில் இருவர் உட் கார்ந்துபோக இடம் போதாமற் போய்விடுமா? ஏறி உட்காரும்.

என்று கையைப் பிடித்திழுத்து உட்காரவைத்து வண்டியை ஓட்டும்படி உத்தரவளித்து, நீர் எங்கிருந்து வருகிறீர்? உமது பெயரென்ன? என்று கேட்டான்.

விஜயரங்கம்.—நான் மயிலா புரியிலிருந்து வருகிறேன். என் பெயர் விஜய ரங்கம்.

தனவந்தன்.—மயிலா புரியிலிருந்தா வருகிறீர்? எப்பொழுது மயிலாபுரியை விட்டுப் பிரயாணப்பட்டீர்?

விஜயரங்கம்.—நேற்றுக் காலை.

தனவந்தன்.—நேற்றுக் காலையிலிருந்து இது பரியந்தம் அறுபத்தைந்துமைல் நடந்திருந்தால் கால்கள் நோகாமலிருக்குமா? ஐயோ! பாவம்! இளம் பிள்ளை! எங்கு போகவேண்டும்?

விஜயரங்கம்.—சென்னைக்கு அல்லது தஞ்சாவூருக்குப் போகலாம் என்றி ருக்கிறேன்.

தனவந்தன்.—நீர் போகவேண்டிய இடத்தைத் தீர்மானித்துக்கொள்ளாமலா பிரயாணப்பட்டீர்? தஞ்சை ஒருபக்கமும் சென்னை மற்றோர் பக்கமு மாக இருக்கின்றனவே!

விஜயரங்கம்.—ஏதாகிலும் உத்தியோகம செய்யலாம் என்று போகிறதால் எந்த ஊருக்குப் போகிறதென்ற எண்ணம் தீர்மானத்திற்கு வராமலே பிரயாணப்பட்டேன்.

தனவந்தன்.—உம்மைப்பார்த்தால தனவந்தன் பிள்ளைபோல் காணப்படுகிற தே! உமக்குத் தாய் தந்தை இல்லையா?

விஜயரங்கம்.—இருக்கிறார்கள். அவர்கள் உத்தரவு இல்லாமலே வெளி ஏறினேன்.

இதற்குள் வண்டி சத்திரத்தண்டை வந்து நின்றது. சத்திரத்திலிருந்த சிலர் ஓடிவந்து வண்டியிலிருந்த இருவருக்கும் கைலாகு கொடுத்து இறக்கிவிட்டு, வண்டியிலிருக்கும் திண்டு, கைப்பெட்டி முதலிய சாமான்களை எடுத்துக்கொண்டு போனார்கள். தனவந்தன் சத்திரத்துக்குள் நுழைந்தவுடன், அண்ணுமலை என்றழைத்தான். ஒருவன் ஓடிவந்து ஐயா ! என்று எதிரில் வணக்கத்தோடு நின்றான். விரைவில் வெந்நீர் வைத்து என்மேலுடு வண்டியில் வந்தவருக்குக் கால்சளை உருவி அவருக்கு வேண்டியதைச் செய்து அவருடைய தேகவலியை நீக்குங்கள். அவர் ஓர் தனவந்தன் பிள்ளை. கால் நடையாக அதிக தூரம் நடந்து விட்டார். சாக்கிரதையாகப் பாருங்கள் என்றான்.

அண்ணுமலை.—எஜமான்மார் ஊருக்குப்போக எத்தனை நாள் செல்லும் ? தங்களுக்கும் தங்களுடைய சினேகருக்கும் வேண்டியவைகளைச் சேகரித்துக் கொள்ளக் கேட்கிறதால் என்னை மன்னிக்கவேண்டும்.

தனவந்தன்.—நாளையதினம் காலை ஊருக்குப்போக உத்தேசித்து வந்தேன். ஆயினும் என்மேலுடுவந்த வாலிபனைக்கருதி இரண்டொருநாள் இருக்கும்படி நேரிடுமென்று நினைக்கிறேன். சத்திரத்திலுள்ள வேலைக்காரர் களெல்லாம் எப்படி இருக்கிறார்கள் ?

அண்ணுமலை.—நெல்லைக் களஞ்சியத்தில சேர்ப்பதால் யாவரும் அந்த வேலையிலிருக்கிறார்கள்.

தனவந்தன்.—இந்த வருஷத்து வேளாண்மை எப்படி ?

அண்ணுமலை.—எந்த வருஷத்திலும் இவ்வளவு விளைவு இல்லையென்று யாவரும் சொல்லுகிறார்கள்.

தனவந்தன்.—கார்பாரி போனது முதல் எனக்கு அலைச்சல் அதிகமாய் விட்டது. எதையும் நேரிலிருந்து பார்க்க முடியவில்லை. நீ விரைவில் சென்று வாலிபன் விஷயத்தில் நான் சொல்லியதைச் செய்.

சத்திரத்திலுள்ள வேலைக்காரர்கள் வெளியில் நின்ற விஜயரங்கத்தையழைத்துச் சென்று அவன் கைகால்கள் வலி நீங்கவேண்டியதற் கேற்ற சிகிச்சை செய்து போஜனமளித்தபின், அண்ணுமலை விஜயரங்கத்தைப் படுக்கை அறையில கொண்டுபோய் விட்டுச் சயனித்துக்கொள்ளச் சொன்னான்.

விஜயரங்கம்.—கட்டில் மெத்தை எனக்குவேண்டாம். பாயொன்றிருந்தால் போதுமே !

அண்ணுமலை.—ஐயாவே ! எஜமான் தங்களே இக்சட்டிலின் மேல் படுத்துக் கொள்ளச் சொல்லும்படி உத்தரவு அளித்திருக்கிறார். தாங்கள் மறுப் பது நியாயமல்ல.

விஜயரங்கம்.--அப்பா உன் பெயரென்ன ? உன் எஜமான் பெயரென்ன ? அவர் இச்சத்திரத்தில் இடும் கட்டளையைக்கேட்டு நீ நடப்ப தென்ன காரணம் ?

அண்ணுமலை —ஐயா ! என் பெயர் அண்ணுமலை ; எஜமான் பெயர் இன்ன தென்றும், அவர் இந்த சத்திரத்துக்குச் சொந்தக்காரர் என்றும் நீர் அறி யாமல் போனது அதிசயமாசக் காணப்படுகிறது. அவர் பெயர் வெங் கடாசல முதலியார் என்று அறியாமல் அவருக்கு எப்படி சினேகமானீர்?

விஜயரங்கம்.—அப்பா அண்ணுமலை ! நான் வரும் வழியில் அவரைக் கண் டதே யன்றி அவர் இன்னரென்று இதற்குமுன் அறிந்தவனல்ல. முன் பின் அறியாத என்னை இவ்வளவு உபசரணை செய்து மேன்மையாக நடத்துகிறவருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் !

அண்ணுமலை.—ஐயா ! தாங்கள் அதிக சிரமத்தோடு நெடுந்தூரம் நடந்து வந் திருப்பதால் தங்களுடைய தேகத்துக்கு அதிக சோர்வு இருக்கும், உம் மோடு நெடுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருப்பது கூடாது. எஜ மான் கண்டாலும் கோபிப்பார். தாங்கள் படுத்து நித்திரை செய்யுங்கள் யாவும் சாவகாசமாய்ப் பேசலாம்.

என்று விடைபெற்றுச் சென்றான். விஜயரங்கம் கட்டிலிற் படுத்துக்கொ ண்டு. விளக்கொளியால் அவ்வறையிலிருந்த அலமாரியில் அனேக புத்த கங்கள் இருப்பதைக்கண்டு தன்னுல் எழுந்து பார்க்கச் சக்தி யில்லாமல், காலையில் பார்க்கலாம் என்றும், தான் தாய் தந்தையரை விட்டு வந்த தோடு, தன் சினேகன் சோமசுந்தரம் பெண்சாதி படும் துன்பத்தைக் கண்டும் அத்துன்பம் நீங்க யாதொரு நன்மையும் செய்யாமலும் வந்து விட நேரிட்டதே என்று பரிதாபப்பட்டு, அதிக தூரம் நடந்துவந்த இளைப்பால் நித்திரை போனான். மறுநாள் காலை எட்டு மணிக்கு விஜ யரங்கம் படுத்திருக்கும் அறைக்குள் வெங்கடாசல முதலியார் வந்து, தம்பி விஜயரங்கம் ! இன்னும் தூக்கமா ? மணி எட்டாகிறது, எழுந் திருக்க வில்லையா ? என்றார். விஜயரங்கம் எழுந்து, அண்ணு ! தங்க ளுக்குப் பெருந்தொந்தரவைக் கொடுத்தேன். சாதாரணமாக நான் காலையில் எழுந்திருப்பது வழக்கமாயிருந்தும் இன்று அதிக நேரம் தூங் கிவிட்டேன் என்று சொல்ல, இருவரும் சென்று காலைக்கடனை முடித் துச் சத்திரத்துக்கு வந்து காலைப்போஜனம் உண்டபின் வெங்கடாசல

முதலியார் விஜயரங்சத்தைப் பார்த்து நீர் நேற்றும் அதற்கு முந்தின நாளும் அதிக தூரம் நடந்துவந்த இளைப்பு நீங்கச் சற்றுநேரம் படுத்துக் கொள்ளும். நான் வெளியில் போய்வருகிறேன் என்றார். விஜயரங்கம் எனக்குப் பசலில் படுத்துறங்கும் வழக்கமில்லை. ஆகேஷபனை இல்லாத விஷயத்தில் நானும் கூடவருகிறேன் என்றான்.

வேங்கடாசல முதலியார்.—தம்பி, உம்மை அழைத்துப்போக எனக்கு ஆகேஷபனை இல்லை. இன்று நடக்காமல் இருப்பீரேயானால் உமது கால்வலியெல்லாம் நீங்கிவிடும். தூங்க முடியாமற் போனால் நீர் படுத்திருந்த அறையில் இருக்கும் புத்தகங்களில் இஷ்டமானதை எடுத்து வாசித்துக்கொண்டிரும்.

என்று வெளியிற் சென்றார். விஜயரங்கமும் இன்று நடக்காம லிருந்தால் கால்வலி முற்றிலும் நீங்கிவிடும். நாளைப் பிரயாணப்பட அனுகூலமாயிருக்குமென்று அறைக்குள் சென்று அலமாரியில் இருந்த புத்தகங்களில் ஒன்றை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தாலும், அவன் மனம் வெவ்வேறு விஷயங்களில் பிரவேசித்திருந்ததால் தான் வாசித்தது இன்னதென்று அறியாமல் நெடுநேரம் போக்கினான். அண்ணுமலை அச்சமயத்தில் வந்து, ஐயா! சாப்பாடு சித்தமாயிருக்கிறது. தங்களை எஜமான் அழைத்துவரச் சொன்னரென்றான். விஜயரங்கம் தான் வாசித்திருந்த புத்தகத்தை வைத்து அண்ணுமலையோடு சென்று வெங்கடாசல முதலியாருடன் போஜனமுண்டு மற்றோர் அறையில் இருவரும் தாம்பூலம் போட்டுக் கொண்டிருக்கும்பொழுது விஜயரங்கம் வேங்கடாசல முதலியாரைப் பார்த்து, அண்ணு! தாங்கள் என் விஷயத்தில் பெருந்தொந்தரவு எடுத்துச்சொண்டீர்கள். தாங்கள் என் விஷயத்தில் காட்டின அன்பை மறவேன். நான் நாளையதினம் காலை பிரயாணப்பட எண்ணங்கொண்டிருக்கிறேன். உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

வேங்கடாசல முதலியார்.—தம்பி விஜயரங்கம்! நேற்று உம்மோடு பேசும் பொழுது நீர் உம்முடைய தாய்தந்தைமேல் மனவெறுப்பால் வெளிப்பட்டவராகக் காணப்பட்டது. நீர் போகவேண்டிய இடம் இன்னதென்று முதலில் அறிந்து கொள்ளாமல் பிரயாணப்பட்டு வந்திருக்கிறீர் இவ்விதமாகப் போக எண்ணங்கொண்டிருக்கும் உம்மை அனுப்புவது ந்யாயமல்ல. நீர் என் சகோதரனைப்போல் எப்பொழுதும் என்னோடிருக்கலாம். நீர் எங்குப் போகவேண்டிய திலலை.

விஜயரங்கம்.—அண்ணு! தங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாகச் சொல்லேன். ஆயினும் நான் இனி ஒருவருக்குப் பாரமாக இருக்கக் கூடாதென்று வெளிப்பட்டேன். நான் சொன்ன எண்ணத்தை மீலை மீறுத்தாமல் தங்களுக்குப் பாரமாக இருப்பது எனக்குப் பிரியமில்லை,

ஆனதால் நான் சொல்வதைக் குற்றமாகக் கொள்ளாமல் எனக்கு உத்தரவு கொடுத்தனுப்ப வேண்டுகிறேன்.

வேங்கடாசல முதலியார்.—தம்பி! எனக்குப் பாரமாயிருக்கப் போகிறேன் என்று சொல்வது தவறு. எனக்கிருக்கும் பொருளைச் செலவழிக்க வழி யில்லாமல் இந்தச் சத்திரங் கட்டிவைத்திருக்கிறேன். நீர் மூன்று கொண்ட சருத்தை மேலே நிறுத்தவேண்டுமென்று சொல்வதைத் தடுக்க எனக்கும் பிரியமில்லை. ஆனதால் நான் சொல்வதைச் சற்றுக் கவனித்துக்கேளும். என் குடும்பத்துக்கும் என் ஸ்திதிக்கும் காப்பாளியாக இருந்து காரியம் பார்த்துவந்தவர் காலஞ்சென்றது எனக்குப் பெருங் கஷ்டத்தைக் கொடுக்கிறது. உமக்கு இஷ்டம் இருந்தால் நீர் அந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். நானும் மூன்று சொன்னது போல் என்னோடு பிறந்த சகோதரனைப்போல் உம்மைப் பார்த்து வருவேன். உம்முடைய கருத்தென்ன? சொல்லவேண்டும்.

விஜயரங்கம்.—அண்ணா! தாங்கள் என்னை இன்னனென்றும், என் குணமும் செய்கையும் இன்னவையென்றும் அறியா முன்னம் என்மேல் அன்புகாட்டி நன்மையைச் செய்ய எண்ணங் கொண்டிருப்பதற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? தாங்கள் என்மீது கிருபை கூர்ந்து ஓர் வரங் கொடுப்பீரானால் தாங்கள் இட்ட கட்டளைப் பிரகாரம் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். நான் கேட்கும் வரம்கொடுக்கத் தடை படின் எனக்கு என்ன நன்மை வருவதாயினும் அதை விட்டுப்போக வேண்டியது அவசியமாக இருக்கிறது.

வேங்கடாசல முதலியார்.—தம்பி! என்னவரம் வேண்டும்? நீர் நியாயமானதைக் கேட்பீரே யன்றி நியாயம் அல்லாததைக் கேட்கமாட்டீர். அது எதுவாக இருந்தாலும் கொடுக்கத்தடையில்லை. உமக்கிஷ்டமானதைக் கேட்கலாம்.

விஜயரங்கம்.—அண்ணா! நேற்று என்னைக் கண்டபொழுது என் தந்தை பெயர் என்ன என்று கேட்டீர். நான் அதற்கு கிதுபரியந்தம் பதில் சொல்லவில்லை யல்லவா?

வேங்கடாசல முதலியார்.—உம்முடைய தந்தை பெயரைச்சொல்ல இஷ்டம் இல்லாதிருந்தால் சொல்லவேண்டாம். உம்முடைய தந்தை பெயரை மற்றொரு முறை கேட்கவேண்டாம் என்ற வரந்தானே கேட்கப் போகிறீர்? நான் கேட்காமல் இருக்கிறேன் என்று வாக்களிக்கிறேன். அது விஷயத்தில் நீர் கவலை கொள்ளவேண்டாம்.

விஜயரங்கம்.—அண்ணா! தந்தை பெயரைச்சொல்லவே பிள்ளை பிறக்கிறான். என் தந்தை பெயரைத் தங்களிடத்தில் சொல்லத் தடையில்லை. நான்

இக்கிருப்பது அவருக்குத் தெரியாமல் இருச்சவேண்டும். அவருச்குத் தெரிவிக்க வில்லை என்ற வரம் ஒன்று கிடைத்தால் போதுமானது.

வேங்கடாசல முதலியார்.—தப்பி ! நீர் என்னேடிருட்டதை என்னல் உமது தந்தை அறிந்து சொள்ளமாட்டார், உம்முடைய தந்தையின் பெயரை எனச்குச் சொல்லவேண்டுவதில்லை. நீர் சுசமாய் என்னேடிருச்சலாம்.

விஜயரங்கம்.—அண்ணு ! என் விஷயத்தில் பேரன்பு சாட்டிய தங்களிடத்தில் என் தந்தை பெயரை மறைத்து வைத்திருப்பது நியாயமா ? என் தந்தை பெயர் சலியாண சுந்தர முதலியார்.

வேங்கடாசல முதலியார்.—என்ன ? என்ன? சலியாண சுந்தர முதலியாரா? எந்த சலியாண சுந்தர முதலியார் ?

விஜயரங்கம்.—அண்ணு ! என் தந்தை பெயரைக்கொண்டு வேறொருவர் மயிலாபுரியில் தனவந்தராக இருப்பதை அறியேன்.

வேங்கடாசல முதலியார்.—உம்முடைய தாயார் பெயரென்ன ?

விஜயரங்கம்.—என் தாயார் பெயர் மீனாக்ஷியம்மாள்.

விஜயரங்கம் தாம் தந்தை பெயர்களைக் சேட்டவுடன் வேங்கடாசல முதலியார் எழுந்துபோய்விட்டார். விஜயரங்கம் காரணம் அறியாமல் அவர் வந்த பின் சென்றார் என்று யோசித்துச்சொண்டிருச்கும் பொழுது, அண்ணுமலை வந்து ஐயா ! உம்முடைய தந்தையின் சூதையும் உம்முடைய சூதையும் அறிந்து சொண்டதாசவும், உம்முடைய இவ்விடம்போல் போகவேண்டிய இடத்திற்குப் போசலாம் என்றும் என் எஜமான் உத்தரவு சொடுத்தார் என்று விஜயரங்சத்திடம் சொன்னன்.

விஜயரங்கம் —நான் என்ன சூது செய்தேன் ? என் தந்தை என்ன சூது செய்தார் ? எஜமான் எங்கே ?

அண்ணுமலை.—ஐயா ! உம்மிடத்தில் சொல்லவேண்டியதை என்னிடத்திற் சொல்லி உமச்குத் தெரிவிச்ச உத்தரவு செய்து எஜமான் வண்டி ஏறித் தம்முடைய ஊருச்குச் சென்றார். நீர் இன்றிரவு இங்கிருந்து நாளைய தினம் சாலையில் உமச்கிஷ்டமான இடத்திற்குப் போசலாம்.

விஜயரங்கம்.—நானும் என் தந்தையும் செய்த சூது இன்னதென்று சொல்லாமல் போய்விட்டது நியாயமல்ல. இவ்விதமான அபிப்பிராயங் சொண்டவருடைய சத்திரத்தில் இனிமேல் இருப்பதும் அழசல்ல. (என்று சொல்லிச்சொண்டே சத்திரத்தை விட்டு நீஙகினன்.)

9-ம் அத்தியாயம்.

சோமசுந்தரம் தன் அறையில் நெடுநேரம் மௌனமாக உட்சார்ந்திருந்து தன் கண்களில் தாரை தாரையாக நீரை வடியவிட்டுப் பின்வருமாறு பேசலுற்றான்:—இனி என் துக்கத்தை ஆற்ற ஆரிருக்கிறார்கள்! உடலிரண்டும் உயிரொன்றுமாக இருந்த பிராணசினேகன் ஒரு வார்த்தையாகிலும் என்னிடம் சொல்லாமல் போய்விட்டான். இன்று வந்துவிடுவான், நாளை வந்துவிடுவான் என்று எட்டுநாளைக் கழித்துவிட்டேன். தேடாத இடமில்லை. இனி எங்குபோய்த் தேடுவேன்! என்ன செய்வேன்! எவ்விதம் உயிரோடு இருப்பேன்! ஓ! விஜயரங்கம் உன்னை எப்பொழுது காணுவேன்! ஐயோ! உன் தாயார் உன் விஷயத்தில் படுந்துக்கத்தை நீ நேரில் நின்று பார்க்க முடியுமா? உன் சட்டையில் வைத்துப்போன சாவியால் உன் பெட்டியை உன் தாய் திறந்து சடுக்கன், மோதிரம், அரைஞாண் இவைகளைக் கண்டு கொண்ட துக்கத்தைக் குறிக்க முடியுமா? நீ உன் ஆபரணங்களையெல்லாம் வைத்துவிட்டு ஒரு ரூபாய்மட்டும் எடுத்துச்சொண்டு போனையென்று அழுது அன்னம் தண்ணீர் ஒன்றுமில்லாமல் இருக்கிறாளே! உன் தந்தை என் மகனெங்கே, எங்கு போனான், கொண்டு வாருங்கள். என் மகனை எப்பொழுது பார்க்கப்போகிறேன் என்று படுத்த படுக்கையைவிட்டு எழுந்திருச்சாமல் அழுத வண்ணமாக இருக்கிறாரே! தாய் தந்தைகளைத் துச்சத்தில் அழுத்தி நீ போய்விட்டது தருமமா? தாய் தந்தைகள் மேல் அதிக பற்றுள்ளவனென்று உன்னை மதித்திருந்த நடராஜ முதலியாரும் துக்கப்படுகிறாரே! சமலாக்ஷியும் அவள் அன்னையும், வனசாக்ஷியும் அவள் அன்னையும் நினைத்து நினைத்துத் துக்கப்படுகிறார்களே! யாவரையும் உனச்சாசத் துச்சப்படவிட்டு நீ போன காரணம் யாது? உன் சருத்து இன்னதென்று ஓர் வரியாகிலும் எழுதியனுப்பக்கூடாதா? ஐயோ! என் மனைவி படும் கஷ்டத்தைக் கணடு சகிக்சாமல் துச்சப்பட்டாயே! பரோபசார சிந்தையைக் சொண்ட நீ யாவரையும் துக்சத்தில் விட்டு நீங்கினையே! இது நியாயந்தானா? மற்றவர்களைக் குறித்து நான் நினைக்சாமலிருந்தாலும் நீ பிறந்தது முதல் உன்னை மேன்மையாக வளர்த்துவந்த உன் தாய் தந்தையர் படுங்கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்க முடியாமல் இருக்கிறதே! யாதொன்றுக்கும் சவலை சொள்ளாமல் செல்வப் பிள்ளையாச இருந்து இப்பொழுது என்ன சஷ்டப்படுகிறாயோ! சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாயோ! உன் கையில் ஏராளமாசப் பொருளிருக்க அவைகளில் சொஞ்சமாகிலுங் சொண்டுபோசாமல் யாருடைய வீட்டில் சாப்பாட்டுக்கு ஏக்கத்துடன் நிற்கிறாயோ! நீ சொண்டுபோன ஒரு ரூபாய் என்ன பிரயோசனத்தைக் சொடுக்கும்? செட்டி வீட்டி

விருச்சும் பணத்தைத் தொடச்கூடாதென்ற சருத்தென்ன ? என்று தனச்குள் எண்ணுது எல்லாம் எண்ணி அழுது, ஒரு வேளை விஜயரங்சம் இன்று வந்திருந்தாலும் வந்திருச்சக் கூடும். நாம் போய்ப் பார்த்து வருவதே உத்தமம் என்று சண்சலைத் துடைத்துச்சொண்டு விஜயரங்சத்தின் வீட்டுச்குப்போனான். சோமசுந்தரம் வெளியிற் போகிறதைக் சண்ட அவன் தங்கை சாவியாயி தன் தாயிடம் ஓடி அம்மா ! மனேன்மணியை வந்து பாருங்சள். அவள் இத்தனே நேரம் எங்கு இருந்தாள் என்று சேளுங்சள். அண்ணன் தனித்திருச்கும் அறையில் இவளுச்குப் பசலில் என்ன வேலை. அண்ணனிடம் வருவார் போவார் இருக்க மாட்டார்சளா ? இவள் அண்ணனேடு இருப்பதைக் சண்டால் என்ன சொல்லுவார்சள் ? எல்லாவற்றையும் அடுப்பிலும் துடுப்பிலும் வைத்துவிட்டு அண்ணனிடத்தில் போய்க் சொஞ்சவும் குலாவவும் இதுதானு நேரம்? அவர் இவளுடைய சங்சடத்தைச் சகிச்ச மூடியாமல் வெளியிற் போனபின் ஒன்றும் அறியாதவள்போல் இருக்கிறாள் ; வந்து பாருங்சள். (என்று சையைப்பிடித்து இழுத்துவந்தாள்.)

பேச்சியாயி.—ஆம் ! ஆம் ! நானும் அனேக தடவையில் பார்த்திருச்கிறேன் (என்று மருமசளே எட்டி புதைத்து) எங்கடி ! துடைப்பச்சட்டை ! இது தேவடியாள் வீடா ? பயலோடு இவ்வெல்லாம போடுகிற குசுகுசு மந்திரம் போதாதென்று பசலிலுமா போடப்போனாய் ! (என்று மறுபடியும் உதைத்தாள்.)

மனேன்மணி.—சாரணம் ஒன்றும் அறியாமல், அத்தை ! நான் எங்கு போயிருந்தேன் ? நான் எங்குப் போசவில்லையே ! அடுப்பில் வெண்ணெயை வைத்து உருக்கிக் கொண்டிருக்கிறேனே ! நான் இதை விட்டுப்போக மூடியுமா ? என்னே வீணே ஏந்திச்கிறீர்சள்.

காளியாயி.—அம்மா ! இவளுச்குப் பேச்சு அதிசமாய்ப் போய்விட்டதைக் சவனித்தீர்களா ?

பேச்சியாயி.—பயலைக் கையில் போட்டுக்சொண்டதால் தைரியம் உண்டாகி நாம் எது சொன்னலும் ஒன்றுச்கு நூறு சொல்லுகிறாள்.

மனேன்மணி.—அத்தை ! நான் தங்களோடு எதிர்த்து வார்த்தையாடுகிறதில்லையே ! நான் என்னுடைய வேலையைச் செய்துகொண்டு இருந்தேன். மச்சியின் வார்த்தையைச் சேட்டு தாங்சள் என்னை உதைத்தீர்சள்.

காளியாயி.—கேட்டீர்களா ! கேட்டீர்களா ! என்னைக் குண்டுணி யென்று சொல்லாமற் சொல்லிவிட்டாள். அடி பாதகி ! நான் குண்டுணிதாண்டி! கோள் சொல்லி உன்னைத் துறத்திவிட்டு நான் இருந்து வாழப்பார்ச்கிறேன் அல்லவா ? என்னைக் கோள்சொல்லி என்று.சொன்னதைக் சேட்டு

டும் கிற்கிறீர்களே! உங்களுக்குத் தருமந்தானு? (என்று முகத்தில் அறைந்துகொண்டு அழுதாள்.)

பேச்சியாயி.—என் செல்வமே! உன்னைச் சோல்சொல்லி என்று சொன்ன வாய் என்னபாடு படப்போகிறது பார்!

என்று மனோன்மணியைச் கீழேதள்ளித் துடைப்பம் எங்கே எங்கே என்று தேடக் காளியாயி எடுத்துச்சொண்டுவந்து சொடுத்தாள். அதை வாங்கி முகத்திலும் வாயிலும் தலையிலும சை சலிக்க அடித்து, அடி பாதகி! உன்னை இந்த வீட்டில் வைத்துக் சொண்டிருப்பது தகாது. புருடனிடத்தில் வாழ்ந்து அயர்ந்து சிலநாள் தாய்வீடு போயிருக்கலாமென்று வந்திருச்கும் பெண்ணைக் காணவிடாமல் அடிக்கிற துன்மார்க்கி! இனியொரு நிமிஷமும் இந்த வீட்டில் இருச்சச்கூடாது, போய்விடு. நீ போகாமல் இருப்பாயேயானுல் உன்னைக் கொல்லாமல் விடேன், எனறு எழுந்து நின்ற மனோனமணியைத் தள்ளி இடுப்பில் உதைத்தாள்.

மனோன்மணி.—அத்தை! தங்களுடைய ஆக்ஞைகளுக்செல்லாம் உட்பட்டு இருச்கும் என்னை வீட்டைவிட்டுப் போகச் சொல்கிறீர்களே நான் எங்கு போவேன்? என்னை என்ன செய்யினும் செய்யுங்கள். என்னை வீட்டைவிட்டுப் பே கச் சொலலாமல இருப்பது உங்களுக்குப் புண்ணியமாகும.

பேச்சியாயி.—அடி துன்மார்க்கி! உனச்குப் போகவ இடமில்லை! நீ போகாமல் இருப்பாயேயானுல் உன் உயிரை இழப்பது நிச்சயம்! எனச்குக் கோபம் வருமுன் போய்விடு.

காளியாயி.—அடி! உன் மாப்பிள்ளைகள் எத்தனைபே நிருக்கிறார்கள்? அவர்கள் வீட்டுச்கு இரவில் போக வழிதெரிந்தவளுச்குப் பகலில் போகவா வழி தெரியாது! என் தாயார் உன்னை வீட்டை விட்டுப் போகும்படி சொல்லியும் இன்னும் என் நின்று சொண்டிருக்கிறாய்? போகிறாயா? இல்லையா? உனச்கு வெட்சம மானம் இல்லையா? நீயும ஒரு பெண் பிள்ளையா? நீ கெட்டாயே! உன்னை வைத்துப் பெண்சாதியாக ஆள்கிறானே அவனைச் சொல்லவேண்டும்! என்று காறி முகத்தில் உமிழ்ந்தாள்.

பேச்சியாயி.—அவளுச்கு வெட்சம் ஏது! மானம் ஏது!, இருந்தால் பகலில் மாப்பிள்ளையோடு சொஞ்சப்போவாளா? அடி வேசி! உன் துர்நடத்தையை அறிந்தபின் உனச்காகப் பரிந்து பேசுவோர் ஒருவரும் இல்லை. அதவா மிஞ்சி யாராகிலும வந்தால் அவர்களுச்கும் அந்தத் துடைப்பச்கட்டை பூசையே! போகாமல் ஏன் கிற்கிறாய்? இன்னும் உதை வேண்டுமோ?

என்று பிடித்துத்தள்ளினுள்.

மதுரவாணி.—என்னைத் தனித்து விளக்கேற்றும் நேரத்தில் போகச்சொல்வது தருமமா ? தங்கள் மகனே என்தாய் வீட்டில் விட்டு வரும்படி அனுப்பினால் தங்கள் உத்தரவுக் கடங்கிப்போகிறேன். தனித்து என்னைத் துறத்துவது தருமமல்ல.

காளியாயி.—அம்மா ! அம்மா ! பார்த்தீர்களா ! இவள் அண்ணனையும் இழுத்துச்சொண்டு போக எண்ணுகிறாள். இவள் எல்லா மாயவித்தையுஞ் சற்றவளாக இருக்கிறாள்.

பேச்சியாயி.—மூல வித்தை ஒன்றுதானு மதரியும் ? எல்லா மாயவித்தையுஞ் சற்றவள். அடி ! உன் மாப்பிள்ளையா உனக்குத் துணையாக வரவேண்டும் ! மாப்பிள்ளையைத் துணைசொண்டுபோனால் வழியில் அவனுக்குக் குசுகுசு மந்திரம் போட்டு எங்கேயாகிலும் இழுத்துக் கொண்டு போய் விடலாம என்ற யோசனையா கொண்டாய் ? அடி, உனக்கு இந்த யோசனையைக் சற்றுக்கொடுத்தவர் ஆரடி ? உன் மாப்பிள்ளையா கற்றுக்கொடுத்தான் ? அடி, உன் எண்ணம் இங்கு பலிக்காது. வீணில் உயிரை இழக்காமல் போய்விடு.

வெளியில் போயிருந்த முத்துக்குமார முதலியார் அச்சருணத்தில் வந்து தன் மனைவியையும் மகளையும் பார்த்து இதென்ன ? எந்நேரமும் இந்தக் கழுதையோடு ஏன் வாதிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்.

பேச்சியாயி.—அடா படுபாவி ! நான் அச்சாலத்தில் இவள் நமக்கு வேண்டாம். வேறொரு பெண் பார்த்துக்கொள்ளலாம் என்று சொனன என் வார்த்தையைத்தள்ளி, இவளைக் கொண்டுவந்து, என் குடிக்குத் தீங்கை உண்டாக்கினாய் ! என் வார்த்தையைக் கேட்டிருந்தால் இந்தத் துன்பமெல்லாம் வருமா ? அவளுக்குச் செய்கிற ஆக்கினைகளெல்லாம் உனக்குச் செய்தால் என் மனங்குளிரும். இந்தத் துன்பமெல்லாம் வேண்டாம். நீ வீட்டை விட்டுப்போய்விடடி என்றால் தன் மாப்பிள்ளை துணைவந்தால் போகிறேன் என்கிறாள். நீயே போய் அவளைக் கேட்டுக்கொள்ளடா படுபாவி !

என்று தூர நின்றாள்.

முத்துக்குமாரமுதலியார்.—(மருமகளைப்பார்த்து) என்ன சொன்னாய் ? உன் மாப்பிள்ளையா உனக்குத் துணைவரவேண்டும் ? சபாஷ் ! நன்றாயிருக்கிறது ! உனக்குத்துணையுமா வரவேண்டும்? ஒரு விநாடியில் இந்த ஊரை மூன்று சுற்று வருவாயே ! வேண்டாம். நன்றாயிருக்கிற தேசத்தைக் கெடுத்துக்கொள்ளவேண்டாம் ; போய்விடு. முதலில் உன்னைப்பார்த்த பொழுது வேண்டாம் என்ற புண்ணியவதியின் சொல்லைக்கேட்காமல்

நானே காரணமாக இருந்து யாவருக்கும் பெருந்துன்பத்தை உண்டாக்கினேன். என்னைக் கடுகடுத்து ஓர் வார்த்தையாகிலும் சொல்லாத என் பிரிய மனைவி உன்னுலல்லவா என்னைக் சோபிக்க நேர்ந்தது !

பேச்சியாயி ஓடித் தன் நாயகனைச்சட்டிப் பிடித்துக்கொண்டு என் கண்ணே! இந்தப் படுபாவி நம்முடைய வீட்டுக்கு வந்தபின் தங்களை அடிச்சடி ந்திக்கும்படி நேரிட்டதே என்று அழுதாள்.

காளியாயி.—அப்பா ! பிறர் அறியாத நம்முடைய நற்குணமெல்லாம் இவளால் மறைந்து வெளியாருக்கு வேறுவிதமாகக் காணப்படுகிறது. நாம் வேறொருவரை நிந்திப்பதற்குச் காரணம இல்லையே. (என்று அழுதாள்.)

முந்துத்தமாழுலியார்.—மருமகளைப்பார்த்து, அடிதுன்மார்க்கி ! உன்னால் என் மகனுங் செட்டான். என் பிரியமனைவியும் அருமை மகளும் துக்கப்பட்டழ நேரிட்டது. இனியொரு கூணமும் நீ இந்த வீட்டில் இருக்கக்கூடாது. உன்னிஷ்டப் பிரகாரம் உன் மாப்பிள்ளையைக் கண்டால் அழைத்துக்கொண்டுபோ ; வெளியிற்போய்விடு. (என்று கடுகடுத்துச் சொன்னர்.)

மனேன்மணி.—மாமா ! தாங்களும் என்னைப் போகும்படி சொல்லுகிறீர்களே! நான் எங்குபோவேன் ? எனக்கு உங்களை விடயாரிருக்கிறார்கள். நான் இன்றுமுதல் இந்த வீட்டில் வேலைக்காரியாக இருந்து வேலைகளைச் செய்து என் காலத்தைக் கழிக்கிறேன். என்னுடைய குற்றங்களை மன்னித்துக் காப்பாற்றுங்கள்.

என்று காலைப்பிடித்து ழுவென்றலறினுள்.

காளியாயி.—அம்மா ! தாங்கள் சொன்ன விதம் மாயம் செய்கிறதைப் பார்த்தீர்களா ?

பேச்சியாயி.—எல்லா மாயவித்தையிலும் தேரியவளாச்சே ! தன் மாப்பிள்ளை வரும்வரைக்கும் இந்த வித்தையைச் செய்து கொண்டிருந்தால் மாப்பிள்ளை வந்தபின் அவனுக்குப் போடவேண்டிய மந்திரத்தைப் போட்டு அவனை யழைத்துக்கொண்டு ஓடிப்போக எண்ணங் கொண்டிருப்பது நமக்குத் தெரியாமலா இருக்கிறது ?

முந்துத்தமாழுலியார்.—அந்த எண்ணம் பூர்த்தியாவதை நான் பார்க்கிறேன். அடிலீலி ! உன் எண்ணம் இங்கு யாவருக்கும் நன்றாய் விளங்கியது. உன் ஜாலவித்தையை என்னிடத்திற் காட்டவேண்டாம். நீ வீட்டைவிட்டு இந்த க்ஷணமே போகவேண்டும்.

என்று உதைத்துத் தள்ளிக்கொண்டுபோய்ப் புறக்கடைவாயிற்படிக்கு வெளியில் விட்டுவந்தார். காளியாயி போகிறவளைச் சும்மாவிடக் கூடாதென்று ஓடிப்போய் நெடுந்தூரம் தள்ளிச்சொண்டுபோய்விட்டு, திரும்பிவந்தால் கல்லால் அடிப்பேன் பாரென்று பெரியகல் ஒன்றை எடுத்துக் காண்பித்தாள். புறக்கடைப் பாதையில் ஜனங்கள் ஒருவரும் இல்லாததால் தன் செய்கை வெளிவர ஏதுவில்லை என்று தனக்குள் மகிழ்ந்து வீட்டின் வாயிற்படியில் வந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். மீனாக்ஷி-காப்பாற்றும்படி தன்மாமனாரைக் கேட்டுக்கொண்டதற்கு வெளியில் தள்ளிவிட்டார். அவர்மகளும் நெடுந்தூரம் தள்ளிக்கொண்டு வந்துவிட்டு, திரும்பினால் கல்லால் அடிப்பேனென்று பயமுறுத்தினாள். நாம் என்செய்கிறது ! தனிவழியாகப் புருடன் உத்தரவில்லாமல் தாய்வீடு போகலாமா? போகக்கூடாதே ! அவர்கள் நம்மைத் துறத்தினாலும் நாம் வீட்டைவிட்டுப் போகக் கூடாது. நாம் வீட்டுக்குத் திரும்பிப்போவதே உத்தமம் என்று வீட்டின்பக்கம் திரும்பி இரண்டடி எடுத்துவைத்தாள். காளியாயி மீனாக்ஷி வருவதைக்கண்டு பெரிய கல்லால் அடித்தாள். தெய்வச்செயலால் அது மீனாக்ஷிமேல் படாமல் தப்பியது. மீனாக்ஷி வீட்டுக்குள் போகலாம் என்ற எண்ணத்தைவிட்டு இனி வீட்டுக்குள் நுழையவிடார்கள். நாம் மரணத்துக்குப் பயப்படாமல் சென்றால் கல்லடியால் சைகாலே ஊனப்படுத்திச்சொண்டு பெருங்கஷ்டப்படும்படி நேரிடும். வரும்விதி இராத்தங்காது என்றிருப்பதால், நாம் அனுபவிக்க வேண்டியதை நாமே அனுபவிச்சவேண்டும. நம்முடைய நாயகனும் அவர்களிடத்தில் பெருந்துன்பத்தை நம்மால் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். நாம் அவ்விடம் இல்லாமற்போனால் அவரை மேன்மையாக நடத்துவார்கள். நமக்கு என்ன துன்பம் வந்தாலும் வரட்டும். நம்முடைய நாயகன் சுகத்தோடு இருக்கிறார் என்று சேள்விப்பட்டால் அது ஒன்றே எல்லாத் துன்பத்தையும் நீக்கிவிடும். நாம இன்னும் காலதாமசஞ் செய்யாமல் மயிலாபுரிக்குப் போய்விடவேண்டும். முற்றிலும் இருள் மூடினால் சவ்டமாச இருக்கும் என்று எண்ணிப் பின்னும் நாயகனை விட்டுப்பிரிந்து போகிறகாலம் வந்தாலும் அவனைப் பார்க்சக் கொடுத்துவைக்காமல் போனது என்ன தீவினைப்பயனோ ! அது எந்த ஜென்மத்தில் செய்ததோ ! நம்மை நாயகனிடத்திலிருந்து பிரிக்க எண்ணங் கொண்டதைவிட்டு, அவர் இருக்கிறவிடத்தில் நம்மைக் கொன்றிருந்தால் அவர்களுக்குப் பெரும் சண்ணியமாச இருக்குமே ! நாம் மாமி மாமன், நாத்தி இவர்களால் துன்பப்பட்டு நாயகனைக் கண்டு துன்பத்தையெல்லாம் இன்பமாக அனுபவித்திருந்தோம். பிராணநாயகனை விட்டுப்பிரிய நாள் வந்ததே என்று அழுது நாயகனோடு இருக்கவேண்டிய காலம் இன்றோடு முடிவானதால் இனி அவரைப் பார்க்சப்போகிறதில்லை.

தாயார் வீட்டுக்குப்போனால் அங்கு யாரிருக்கிறார்கள்? தமையன் வீட்டை விட்டுப்போய் அனேக வருடங்களாயின. தமக்கை நம்மைவிடகிர்ப்பாக்கியமாய்த் தன் புருடன் கூத்தியார்வீடே கதியென்றிருப்பதால் துன்பத்துக்கஞ்சித் தான் வசிக்கும் இடம் ஒருவருக்கும் தெரியாமல் இருக்கிறான். தமையன், சகோதரி இவர்களுடைய கதி இவ்விதமிருக்க, நாம் எங்குபோகிறது ? ஆரைப்போய் அணுகுவோம் ! நம்முடைய தலைவிதி இவ்விதமாக முடிந்ததே ! என்று கண்களில் நீர் தாரை தாரையாய் வடியச்சென்றாள்.

மனோன்மணி தனித்துப் போவதைத் தூரத்திலிருந்து கண்ட சோமசுந்தரம் இதென்ன ? நமது நாயகிபோல் காணப்படுகிறதே ! அவள் இந்நேரத்தில் தனித்துப்போக வேண்டிய காரணம் என்ன ? அவளோ ! அல்லது வேறுரோ ! நாம் முகத்தைப்பார்க்காமல் தூரத்திலிருந்து யோசிப்பது சரியல்ல ; நெருங்கிப் பார்ச்சலாம் என்று எண்ணினவன், நாம் என்னவேலை செய்யப்போகிறோம் ? அன்னிய ஸ்திரீயாயிருந்தால் நம்மைக் கேவலமாக நினைப்பாளே. நாம் நெருங்காமலே அறியவேண்டுமென்று மனோன்மணியைப் பின் தொடர்ந்து சென்றான். இருட்டாகுமுன் சாலையைக் கடந்துவிட வேண்டுமென்று விரைவாக நடக்கும் மனோன்மணிக்கு எதிராகத் தலையில் சரிகை தலைக்குட்டை கட்டிச்சொண்டும், நீண்ட சொச்சாய்ப் போட்டுச்சொண்டும், பட்டணத்துச்குட்டை தோளில் அணிந்துசொண்டும், நீண்ட மீசையுடைய சுந்தரமான ஓர் புருடன் வந்து மனோன்மணியைப்பார்த்து, இந்நேரத்தில் தனித்து எங்கு போகிறாய் ? என்று கேட்டுத் திரும்பி அவளோடு பின்தொடர்ந்தான்.

மனோன்மணி.—ஐயா ! நான் அவசரமாசப் பழைய ஊருச்குப் போகிறேன்.

சோமசுந்தரம் அவள் துக்சத்தோடு சொல்லிய குரலால் அவள் யாரென்று அறிந்துகொள்ளாமல் பின் தொடர்ந்து, வார்த்தையாடுவதால் நன்றாயறிந்து கொள்ளலாம் என்று நெருங்கித் தொடர்ந்துபோனான்.

அன்னியன்.—நீ இந்நேரத்தில் தனித்து அவசரமாய்ப் போகவேண்டிய காரணம் என்ன ? உன்னைப்போன்ற வயதுள்ள பெண்கள் தனித்துப் போசலாமா ? (என்று சிரித்தான்.)

மனோன்மணி.—ஐயா ! நான் அவசரமாசப் போகவேண்டியிருப்பதால் நான் இன்று உமச்குப் பதில் சொல்ல நேரமில்லை. என்னை மன்னியும். (என்று விரைவாக நடந்தாள்.)

அன்னியன்.—நீ அவசரமாசப் போகிறதைத் தடுக்சவில்லை. நீ தனித்துப் போவதைப் பார்த்து என்மனம் சகிக்காமல் உனச்குத் துணையாக வருவதை அறியவில்லையா ! என்ன அவசரம் ? எங்கு போகவேண்டும் ?

உன்னையும் இத்துன்மார்க்கனையும் எம்லோகம் குடிபுகத்தவேண்டியது
அவசியமாயினும் தன் நாயகனே விட்டுச் சோரநாயகனே இசைந்ததுப்
போகிறவள் படுந்துன்பம் உன்னைப்போன்ற புருஷத்துரோகிகள்
அறிய உன்னை விட்டு விடுகிறேன் (83ம்-பக்கம் பார்க்க.)

மனோன்மணி.—என்னைப்போன்ற வயதுள்ள பெண்கள் தனித்துப் போகக்கூடாதென்றாலும் அவசரமான காரியம் ஏதாகிலும் நேரிட்டால் போகவேண்டியது தானே ! எனக்குத் துணைவேண்டியதில்லை. தாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போகலாம். என்னைத்தடுத்து வார்த்தை யாட வேண்டாம். (என்று நடந்தாள்)

அன்னியன்.—பெண்மணி ! நீ அவசரப்பட்டுப் போவதிற் பிரயோசனம் இல்லை. உன் சுந்தரமான முகத்தையும் உன் நயவசனத்தையுங் கேட்டுப் பின்தொடராத ஆண்மகனும் உலகத்திலிருப்பானோ ? உன்னைத் தனியாக விட்டு நான் வேறிடத்திற்குப் போக எண்ணங்கொள்ளேன் ! தேடப் போன மருந்து காலில் அகப்பட்டதுபோல் நீ அகப்பட்டாய். என் துணையை விட்டுப்போவது அழகல்ல. நீ மிக மனவருத்தத்தோடு போகிறதாகக் காணப்படுகிறது. உன் துக்கத்தை மொடியில் ஆற்றிவிடு வேன். அருகில் வந்து என் கையைப் பிடித்துக்கொள்.

மனோன்மணி.—ஐயா ! அன்னிய மாதரைக் கண்டு இவ்விதமான வார்த்தை களைச் சொல்லுவது நியாயமல்ல. அல்லாமலும், ஆதரவற்ற பெண் பிள்ளை தனிவழியாகப் போவதைக்கண்ட ஓர் ஆண்பிள்ளை பின் தொடர்ந்து துணைவருகிறேன் என்றும், கையைப் பிடித்துக்கொள் என்றும் சொல்வது வீரத்தன்மையா ? பேடித்தன்மையா ?

அன்னியன்.—மாதே ! அன்னிய மாதரின் கருத்தை யறியாமல் ஒன்றைச் சொல்வது குற்றமாயினும், ஆதரவற்ற பெண் தனிவழியாகத் துணை யில்லாமல் போவதைச்சண்டும் அவளுக்கு உதவிசெய்யாமலிருப்பது கொடுமையினும் கொடுமையல்லவா ? நீ உன்னை ஆதரவற்றவளென்று நினைக்க வேண்டாம். இனி நான் உனக்கு வேண்டியதைச் செய்யச் சித்த மாயிருக்கிறேன். நான் உனக்குத் துணையாக வந்தபின் உனக்குத் துக் கம் இருக்கவேண்டிய அவசியமில்லை. வேறொருவர் கண்டு உன்னைக் கொண்டுபோகுமுன் நீ என் கண்ணில் அகப்பட்டது நம்முடைய நற் காலம் என்று நினைக்க வேண்டும். என் கண்மணி ! என்னருகில் வரத் தடைசெய்யாதே. (என்று நெருங்கினான்.)

மனோன்மணி.—ஐயா ! பெண்கள் மனதை அறியாமல் அவர்களிடம் தங்கள் இவ்விடம்போல் பேசுவது நியாயமல்ல. நான் உம்முடைய எண்ணத் திற்கு உடன்பட்டு வரத்தகுந்தவளென்று நினைக்கவேண்டாம். நான் என் புருஷனைத் தெய்வமாக எண்ணி அவருடைய சந்தோஷமே எனக் குச் செல்வமாகவும், அவருடையதுக்கமே எனக்கு வறுமையாகவும், அவ ரே எனக்கு எல்லாச்சுற்றமும் பற்றும் என்பதாகவும் நினைத்து அவரை விட்டுப் பிரியாமலிருந்து வினைப்பயனால் பிரிந்து போகும் என்னைக் கே வலமாக மதித்துப்பேசுவது தருமம் அல்ல. நீர் சகோதரியோடு பிறக்க

வில்லையா ? சீர் என்னோடு வருவதைவிட்டுப் போகவேண்டிய இடத் திற்குப்போம். என்னைத் தொடர்ந்து வராமலிருப்பது உமச்குப் புண் ணியமாகும்.

அன்னியர்.—பெண்ணே ! நீ என்னை விட்டுப்போக எண்ணவேண்டாம். ஆதரவற்று என்சையில் அசப்பட்ட உன்னை நான் விட்டுப் போவேன் என்று நினைக்கவும் வேண்டாம். நீ என்னோடு வந்தால் உன்மனம் சந்தோ ஷம் அடையும் என்பதற் சையமில்லை. நீ என் குணத்தை யறிந்தபின் உண்மையாக என்மேல் இஷ்டங்கொள்ளுவாய். வீணே காலம் போச்சு கிறுய். ஒருவரும் இவ்வழி வராமுன் என் கைச்குள் வந்துவிடு. உன் துச்சம் உன்னைவிட்டு நீங்கவேண்டியதற்கு ஏதுவானதைச் செய்வேன். (என்று கையைப் பிடிக்க நெருங்கினன்.)

மனோன்மணி.—தூரமாக நில்லும். பெண்களுக்கு எது இருந்தாலும் இல்லா மற் போனலும் அவர்களுக்கு இருக்கவேண்டியது கற்பு. அதைப் பிறர் அபகரிக்க விட்டு உயிர் தாங்கி உலகில் பெண் என்கிற பெயர்கொண்டு வசிப்பதைவிட உயிரைவிட்டுப் பிணம் என்கிற பெயரைத் தாங்குவதே மேன்மை. என் சற்பழியுமுன் என்னுயிரை விட்டுவிடுவேன் என பதை உண்மையாக நம்பும். வீணாக ஓர் பெண் பழியைத் தேடிக் கொள்ளவேண்டாம் என்மேல் கொண்ட அபிப்பிராயத்தை விட்டுப் போவதே உமக்சழகு. உயிரோடிருக்கும் என்னைப் பிணமாகப்பார்க்க எண்ணங்கொள்ள வேண்டாம்.

தனிவழியாகப் போகிறவள் தன் மனைவியோ அல்லது வேறு யாரோ என் றும், அவளைக் குரலால் அறியலாம் என்று பின்தொடர்ந்துவந்த சோ மசுந்தரம்-அவள் முதலில் துச்சம்மேலிட்டு அன்னியனிடம் பேசிய குரலால் அவள் தன்மனைவியென்று அறிந்து கொள்ளாமல், இருவரு க்கும் சம்பாஷணை முற்றியபொழுது, போகிறவள் தன் மனைவியே, இவளைப் போன்ற பதிவிரதை உலகத்தில் இருப்பது அரிது ; தன் னுடைய பதிவிரதா தர்மத்தைக் சாப்பாற்ற மாமன், மாமி, நாத்தி இவர்களால் நேரிட்ட கொடுமையைச் சகித்துக் காளியோடுபிறந்த மூளி இவனென்று நம்மைவெறுச்காமல் நமச்குச் சந்தோஷம் உண்டா கும்படி நடந்துவந்தாள். இப்புண்ணியவதியை நமது தாய் தந்தை ஏன் வெறுச்கிறார்களோ அறியேன் ! நமது தங்கையும் இவளுச்குத் துன் பம் விளைவிச்கவேண்டுமென்று சங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறாள். நாம் ஏதாவது ஒன்று சொல்லுவோமேயானுல் பெண்சாதிபோட்ட தலையணை மந்திரத்தால் பரிந்து வருகிறானென்று, நாம் இல்லாத வே ளையில் அவளை அதிகமாய்த் துன்பப்படுத்துவார்கள். அதை நம்முடை

யமனேவியால் அறியாமற் போனலும் அடுத்த வீட்டாரால் அறிந்திருக் கிறோம். நாம் உலக நிந்தனைக்குப் பயந்திருப்பதால் நமது மனேவிக்கு எல்லாவித துன்பமும் உண்டாகிறது. இனி உலகநிந்தையைச் சவ னிக்காமல் இவளுக்குத் துணே நின்று இன்றுமுதல் வேறுவிதம் நடத் தவேண்டும், என்று தனசகுள் தீர்மானித்துச்சொன்று மனேன்மணி யின் மனக்களிக்க அவள் அறியாமல் அவளைக் கட்டிப்பிடித்துக் கொள் ளவேண்டுமென்று பதுங்கிவரும்பொழுது, மனேன்மணியோடு வார்த் தையாடிக்கொண்டிருந்த அன்னியன் – பெண்ணே ! நீ சொல்லிய வைகளைக் கேட்டேன். நீ கொண்ட கருத்து நன்றேயாயினும் உன் காதில் இரகசியமாகச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டபின் உன் இஷ்டம்போல் நடச்சலாம் ; நான் உன் மனதுக்கு விரோதமாகப் பலவந்தம் செய்யேன் என்று தெருங்கி மனேன்மணி காதில் சில வார்த்தைகளைச் சொன்னன். அன்னியன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட மனேன்மணி அவனைக் கட்டிப் பிடித்துச்சொண்டு முகத்தி லும் கன்னத்திலும் அடிக்கடி முத்தமிட்டாள். அன்னியன் அதிக மகிழ்வோடு மனேன்மணியைக் கட்டியணைத்து முத்தங்கொடுத்தான்.

தன்மனேவியைச் சந்தோஷப்படுத்த எண்ணங்கொண்டு பதுங்கிவந்த சோம சுந்தரம் அன்னியன் ஆலிங்கனத்திலிருக்கும் மனேன்மணியைப்பார் த்து, அடி ! துன்மார்க்கி ! நீ சொன்னவைகள் யாவையும் உண்மை யென்று நம்பி மோசம் போக இருந்தேனே ! தெய்வமே உண்மையை வெளிப்படுத்திக் காட்டியது. உனனேபும் இத்துன்மார்க்கனேயும் எம லோகம் குடிபுகுத்தவேண்டியது அவசியமாயினும், தன் நாயகனே விட்டுச் சோரநாயகனே இச்சிதுப் போகிறவள படுந்துன்பம் உன் னேப்போன்ற புருஷத்துரோகிகள் அறிய உன்னே விட்டுவிடுகிறேன். உன் முகத்திலும் விழிக்கலாமா! என்று கோபப் பார்வையோடு இரு வரையும் பார்த்துத் திருமபிச் சென்றான்.

மனேன்மணி.—ஆ ! என்பிராண ஆதாரமே ! நான் மோசம்போனேன். (என்று நிலத்தில் விழுந்து மூர்ச்சையாயினள்)

அன்னியன் மனேன்மணிக்கு வேண்டிய உபசாரம்செய்து மூர்ச்சைதெ ளியவைத்துக் கன்னத்தில் முத்தங்கொடுத்து, என்சுண்மணி ! கை கலச்சவேண்டியது அவசியமாயிருந்தும் அதுதப்பி நமச்சலுகூலமாய் முடிந்ததென்று மனேன்மணி காதில் சிலவசனங்களைச் சொல்ல, அவள் சிரித்துக்கொண்டு தனனியனேச்சுடி முத்தமிட்டு, என்னே எங்கு அழைத்துப்போக எண்ணங்கொண்டிருக்கிறாய் ? நாம் இனி புருடனும் பெண்சாதியுமாக இருக்கலாம் வாரும், என்று சிரித்தாள்.

அன்னியன்.—என் கண்மணி ! உன் இஷ்டத்துக்கு விரோதம் செய்யேன் என்று முன்னதாகவே சொல்லியிருக்கிறேன். அதைத் தவறி நடவேன். இது சத்தியம்.

என்று இருவரும் வண்டிப் பேட்டைக்குச் சென்று வண்டி குடிக்கூலிக் குப்பேசி ஜாமத்தில் மற்றவண்டிகள் போகும்பொழுது தாங்கள் அந்த வண்டியையும் அவைகளோடு விடும்படி தீர்மானப்படுத்தித் தின்பண்டங் களை வாங்கி இருவரும் உண்டு வண்டியில் சயனித்துக்கொண்டார்கள்.

சோமசுந்தரம் தன் மனைவியைவிட்டுப் போகும்பொழுது நாம் மனோ மணி பதிவிரதத்தில் சிறந்தவள் என்று எண்ணிய சில வினாடிக்குள் அன்னியனை ஆலிங்கனஞ் செய்து கொண்டாளே! இது அதிசயமாகவே காண்கிறது ! அன்னியன் மந்திரவாதியாய் இருப்பானோ ? மந்திரவாதி யாய் இருந்தாலும் காதில் ஓதின உடன் பலித்துவிடுமா ? ஒரு தேள் கொட்டினால் அதன் விஷம் இரங்க எத்தனை தடவை மந்திரிக்கிறார்கள். அன்னியன் மனோன்மணி காதில் சொல்லியது ஒரு சொல் அல்லது இரண்டாக இருக்கவேண்டும். இது மந்திரத்தால் மூடிந்ததென்று சொ ல்ல மனந்துணியவில்லை. ஒரு வார்த்தையில் அவள் மனதைத் திருப் பிய அன்னியன் சாமர்த்தியமே சாமர்த்தியம் ! பெண்களை இவ்விதம் மயக்கிவிடுகிறார்களல்லவா ? தான் பதிவிரதையாயிருந்தால் தேவடி யாள் தெருவில் குடியிருக்கலாகாதா ? என்று பழமொழி இருக்கிறது. நாம் எண்ணியமாதிரி மனோன்மணி நன்னடக்கை யுள்ளவளாக இருப் பாளாகில் அன்னியனை இச்சித்து அவனோடு போகச் சம்மதிப்பாளா ? அவள் வெளிவேஷம் போட்டாளேயன்றி வேறொன்றுமல்ல. அந்தப் பாதகியை மிக்க மேன்மையாக நினைத்திருந்த நம்முடைய மனதைப் புண்ணாக்கிவிட்டாள் ! என்று சலனத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான். தமையன் வந்ததை யறிந்த காளியாயி அவனிடம் ஓடி, அண்ணா ! இந்த அலியாயமுண்டா ? இன்று அண்ணியவர்கள் அம்மாளைப் பலவகையா சத் திட்ட, நான் அம்மாளை ஏன் திட்டுகிறாய் ? என்று கேட்டதற்கு, அடி ! நீ உன் மாப்பிள்ளை வீட்டைவிட்டு இங்குவந்து எத்தனைநாள் இரு க்க யோசித்திருக்கிறாய் ? உங்களுக்கு ஆக்கிக்கொட்ட நான் உட்கார்ந் திருக்கிறேனா ? உன் ஆத்தாளுக்காகப் பரிந்துபேசவா வந்தாய் ? நீ தொலையாமல் இன்னும் இங்கிருந்தால் உனக்குக் கெட்ட காலம் என்று னை. உன்னைப்போல் நான் என் தாய்வீட்டில் போயிருக்கிறேனா ? உனக்கு வெட்கம் மானமில்லையா ? நாயே ! பேயே ! என்று இன்னும் சொல்லாத வார்த்தைகள் அனேகஞ் சொல்லித் திட்டினார்கள். இவை களை அப்பா கேட்டுக்கொண்டே வந்து நான்குநாள் தாய்வீடு வந்திருக்கும் பெண்ணை இப்படித் திட்டுவது தருமந்தானா ! என்றார். ஐயோ! அண்

ணு ! நான் என்ன சொல்லுவேன் ! அப்பாவி பேசினபேச்சு கணக் கில்லை. அப்பா அப்படியே மலைத்து நின்றுவிட்டார்கள். அம்மாளுச்சு மனம் கேட்காமல், என்னடி மலைண்மணி ! இவ்விதம் பேசுகிறாய் ? யார் என்ன சொன்னபோதிலும் பேசாதிருப்பவள் இன்று முன்பின் பார்க்காமல் பேசுகிறாய். உனக்கென்ன பேய்பிடித்ததா ? எனறார்கள். அதற்கு அண்ணியவர்கள் எட்டி நெஞ்சில் உதைத்துக் கீழே தள்ளி இனி ஒரு நிமிஷமும் இந்த வீட்டில் இருக்கமாட்டேன் என்று புறக் கடைக் கதவைத்திறந்து, நான் கூப்பிடக்கூப்பிட வெளியில் சென்றார் கள். நான் விடாமல் பின் தொடர்ந்து, அண்ணியம்மா! அவசரப்பட்டுப் போகவேண்டாம். ஒரு வயது பெண் தனிவழியே போனால் அவளைச் சாதியில் சேர்த்துக் கொள்ளார்கள் என்று கையைப் பிடித்து வீட்டுக்கு வாவென்று இழுத்தேன். அதற்கு அண்ணியவர்கள் அவனும்கெட்டான் அவனுடைய வீடும்கெட்டது. அவனுக்குப் போடுகிற முன்தானையை ஒரு இழி குலத்தானுக்குப் போடுவேன் என்று என்னையும் உதைத்துத் தள்ளி நடந்தார்கள். எனக்குண்டான நோயையும் பார்க்காமல் பின் தொடர்ந்து வருவதைக்கண்டு கல்லுங்கட்டியுங் கையில் எடுத்துக்கொ ண்டு வந்தால் தலையை உடைத்துவிடுவேன் என்று காட்டினார்கள். நான் அதற்கும் பயப்படாமல் பின் தொடர்ந்து வருவதைக்கண்டு கல்லாலடித் தார்கள். அந்த அடி என் மார்பில்பட்டது. பின் நடந்ததொன்றும் தெரியாமல் கண்களைத் திறந்து பார்த்தபொழுது வீட்டுக்குள் ஒரு பாயில் படுத்திருக்கக் கண்டு எழுந்து, அண்ணியம்மாள் எங்கே ? என்றேன். அப்படுபாவி போய்விட்டாள் என்று அம்மா அழ, நான் அழ, அப்பா அழ, பெருங்கோரமாயிருந்தது. அண்ணு ! என்னை உதைத்ததையும் கல்லால் அடித்ததையும் தாங்கள் பார்த்திருந்தால் பழி உண்டாயிருக்கும். அதை எந்த தெய்வமோ தடுத்துவிட்டது தாங்கள் வீட்டிலிருந்த பொ ழுது இவ்விதம் நடந்து தாங்களும் கோபத்தால் எதாகிலும் ஒன்றைச் செய்து விடுவீர்களானால் நாம் எல்லாரும் கோர்ட்டுங்கையுமாய் இருப்ப தோடு தங்களையும் இழக்கும்படி நேரிடுமே. யாரை எது செய்தாலும் சொன்னாலும் பார்த்துக்கொண்டிருப்பீர். என்னை ஒருவர் ஒன்று சொல் லி விட்டால் தங்களுக்கு மனம் தாளாதென்று எனக்குத்தெரியும். அவ் விதமானாலும் இன்று அண்ணியவர்கள் என் விஷயத்திற் செய்ததை மனதில் வைக்காமல் தாங்கள் விரைவில் சென்று அண்ணியை அழைத்து வாருங்கள். ஒரு பேயைத்தேடிப் பெண்சாதியாகக் கொண்டால் அதை வைத்து ஆளவேண்டியது கொண்டவர்கள் கடமையாதலால், அண்ணியவர்கள் நெடுந்தூரம் போகுமுன்னம் அழைத்துவாருங்கள். அண்ணியில்லாமல் வீடு எங்கும் பாழாக இருக்கிறது. அண்ணு ! என்று கண்களில் நீர் வடிய அழுதாள்.

காளியாயின் குணத்தை நன்றாய் அறிந்திருந்தாலும் மனோன்மணியின் துர் நடத்தையை நேரில் கண்டுவந்த சோமசுந்தரம்-காளியாயி இன்று சொல்வது உண்மையாக இருக்கக்கூடும்; மனோன்மணிக்கு நாள் தோறும் இவர்கள் தொந்தரவு கொடுத்திருந்தாலும் வீட்டை விட்டுத் துரத்த எண்ணங்கொள்ளார்கள்; நெடுநாள் இவர்களிடத்தில் துன்பப் பட்டுத் தன்னால் சகிக்கமுடியாமல் அவள் இன்று துணிந்து காளி யாயி சொன்ன வண்ணம் செய்திருக்கவேண்டும்; எப்பொழுதும் கொடுமையைச் செய்துவந்தவள் இன்று நம்மை வருந்தி அழைத்து வரும்படி சொல்லுகிற சூது இன்னதென்று தெரியவில்லை என்று எண்ணி, அம்மா காளியாயி! தனிவழியாகச் சென்ற ஓர் மாதை அழைத்துவந்து வைத்துக் குடித்தனம் பண்ணினால் பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்! நம் இனத்தாரும் நம்மைக் கேவலமாக நினைப்பார்கள். ஊரார் நம்மை இகழ நான் ஒரு காரியத்தைச் செய் யமாட்டேன்; நீ என்னை மன்னித்து அம்மாளுக்கும் அப்பாவுக்கும் வேண்டியதைச் செய்து கொண்டிருப்பதே நலம் என்று விடை கொடுத்தான்.

காளியாயி.—அண்ணு! அண்ணு! தாங்கள் இப்படி சொல்வது தருமமா? ஏதோ கோபத்தால் வீட்டை விட்டுப்போனால் அதைக் குற்றமாகக் கொண்டு தள்ளி விடலாமா?

சோமசுந்தரம்.—அம்மா காளியாயி! புருடன் விஷயத்தில் பெண்சாதி செய் யுங் குற்றங்களில் மன்னிக்கத் தகுந்ததும் மன்னிக்கத் தகாததும் உண்டு. ஆனால் அவள் இன்று செய்திருக்குங் குற்றம் மன்னிக்கத் தகுந்ததல்ல.

காளியாயிக்குத் தன் தமையன் சொல்லியது சந்தோஷமாக இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், அண்ணு! தங்களுக்குத் தெரியாத யோசனை என்ன இருக்கிறது? அண்ணியவர்கள் வீட்டை விட்டுப் போனபின் என் மனம் ஒன்றையும் நாடவில்லை யென்று வீட்டுக்குள் சென்றாள்.

10-ம். அத்தியாயம்.

நடராஜ முதலியாரும் செழுங்கமலமும் கமலாக்ஷியும் உட்கார்ந்து வார்த் தையாடிக் கொண்டிருக்கும்பொழுது நடராஜ முதலியார் செழுங்கம லத்தைப்பார்த்து, அம்மா செழுங்கமலம்! நீ அருணைசல முதலியார் சகோதரி என்று வனசாக்ஷியால் சொல்லப்பட்டபின், உன்னுடைய தாய் தந்தைகளால் நூறு வேலி நிலம் உனக்குச் சீதனமாய்க் கொடுக் கப்பெற்றாய் என்று வெளியாரால் கேள்வியுற்றேன். அது உண் மையா?

கமலாக்ஷி.—தாதா ! எங்களுக்கு நூறுவேலி நிலம் சொந்தமாக இருந்தால் நாங்கள் பெருந்தனவந்தராய் இருப்போமே ! என் மாமாவும் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவாரே ! எங்களிடத்தில் பணமில்லாத குறை வாலல்லவா எங்கள் வீட்டை எட்டிப்பார்க்காமல் இருக்கிறார்.

சேழங்கமலப்.—அண்ணு ! என் விவாகத்துக்குமுன் என் தாய்தந்தையர் தங்களுக்குப்பின் என்ன நடக்குமோ வென்று அவர்கள் இருக்கும் பொழுதே நூறுவேலி நிலத்தை என்பெயருக்குப் பட்டா முதலானதும் செய்திருந்தார்கள். எனக்கு விவாகம் முடியுமுன் என்னைப்பெற்றோர்கள் இறந்ததால் அவர்களுடைய கருத்துக்கு விரோதம் வராமல் என் விவாகத்தை என் தமையனார் அருணாசல முதலியார் முடித்துவைத்து நிலத்தைச் சீதனமாகக் கொடுத்துக் காலம்சென்றார். நூறு வேலி நிலத்தின் வரும் படியை நானும் என் புருடனும் செலவழிக்க வழியில்லாமல் ரூபாய் பதினேயாயிரம் செட்டியிடம் சேர்த்து வைத்திருந்தோம். கமலாக்ஷி பிறந்தவுடன் இரண்டு வேலி நிலம் விலைக்குவந்தது. அதைக் கமலாக்ஷி பெயருக்கு வாங்கினேன். நிலம் வாங்கிய சிலநாள் பொறுத்து என் தமையன் ஜெகநாத முதலியார் என்னிடம் வந்து, அம்மா ! நம்முடைய அண்ணன் இறந்துபோனபின் அவருடைய ஆஸ்தி எல்லாம் என்னைச் சேர வேண்டியதால் அது விஷயத்தைக்குறித்து நியாயஸ்தலத்துக்குப் போக வேண்டியதாயிருக்கிறது ; அதை முடிவு படுத்திக்கொள்ளப் பணம் வேண்டியது ; செட்டிகளைக் கேட்டால் முன்பின் பார்க்கிறார்களாகையால் உன்னிடம் வந்தேன் என்றார். நான் என்ன செய்யவேண்டு மென்று கேட்டதற்கு, ஒன்றும் வேண்டியதில்லை ; சடலாக இருபதினாயிரம் ரூபாய் கொடுத்தால் மூன்று மாதத்தில் கொடுத்து விடுகிறதாகப் பத்திரம் எழுதித்தருகிறேன் என்றார். என்னிடத்தில் இருபதினாயிரம் இல்லையே. இருந்தது பதினேயாயிரம், அதில் நாலாயிரத்துக்குக் குழந்தை பெயரில் நிலம் வாங்கிவிட்டேன் ; ஆயிரத்துக்கு நகைகள் செய்து விட்டேன். மிகுந்திருக்கும் பதினாயிரத்தை வாங்கிக்கொள்ளுங்கள். எனக்குப் பத்திரம் வேண்டுவதில்லை ; தங்களிடத்திலா பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளவேண்டும் ? என்றதற்கு அவர் பதினாயிரம் போதாது ; எந்த செட்டியிடம் பணம் இருக்கிறதென்று பெயரைக் கேட்டுக்கொண்டு போய், மறுநாள் நான் சொன்ன செட்டியையும் ஓர் பிராமணனையும் அழைத்து வந்தார். எனக்குச் செட்டியார் எழுதிக்கொடுத்திருந்த பத்திரத்தைச் செட்டியாரிடம் கொடுத்துப் பணத்தை என் தமையனிடம் தந்து விடும்படி சொல்லிச் செட்டியாரை அனுப்பிவிட்டபின், என் தமையன் தன்னோடு வந்த பிராமணனிடம் இருந்த ஒரு பத்திரத்தை வாங்கி இதிலும் ஒரு கையெழுத்து போடு என்றார். அது எதற்காக, என்று கேட்க, அவர்-' உன்னுடைய நிலத்தை இந்த ஐயரிடத்தில் பதினாயிரத்

துக்கு ஒற்றியாக வைத்திருக்கிறதென்று எழுதிய பத்திரம் - இவரிடத்தில் நான் வாங்கிச்கொள்ளப்போகும் பதினாயிரத்துக்கு வட்டியில்லாமல் நிலத்தின் வருஷ்படியை நான் பணம் கொடுக்கும்வரையிலும் அனுபவித்துக் சொள்ளுகிறதென்றும், மூன்று மாதத்துக்குள் பணத்தைக் கொடுத்துவிட்டால் ரூபாய் நூற்றைம்பதைப் பதினாயிரத்தே டு கொடுக்கிறதென்றும் இந்த வருடத்துப் பலனை நீயே அனுபவித்துச்சொள்ளுகிறதென்றும் எழுதியிருக்கிறது ; நான் இரண்டொரு மாதத்தில் உன் நிலத்தைத் திருப்பிச்கொடுத்து விடுகிறேன் ; ஒன்றும் யோசியாமல் கையொப்பம் இடு" என்ரூர். நான் மூன்பின் யோசியாமல் கையொப்பம் வைத்தேன். என் தமையன் வாக்களித்த வண்ணம் நான் கையொப்பம் இட்டபத்திரம் இன்னும் வரவில்லை. வருடக்கணக்கைப்பார்த்தால் பதினாறு பதினேழாகின்றன.

கமலாக்ஷி.—அம்மா ! ஈதெல்லாம் என்னிடத்தில் என் சொல்லவில்லை ?

செழுங்கமலம்.—வீணில் உனக்கேன் துக்கத்தை உண்டாக்க வேண்டுமென்று சொல்லாதிருந்தேன்.

நடராஜ முதலியார்.—அம்மா செழுங்கமலம் ! நீ சொல்லியது ஆச்சரியமாக இருக்கிறது. உன் புருடனுக்குத் தெரியாமலா இவ்வளவையும் நடத்தினாய் ?

செழுங்கமலம்.—அண்ணா ! என்பொல்லாத காலத்தால் என்நாயகன் அப்பொழுது மதுரைக்குப் போயிருந்தார். அவரை யோசித்து எந்தக் காரியத்தையுஞ் செய்ய முடியாமற் போயிற்று. என் நாயகன் வந்தபின் யாவும் என்னால் அறிந்து என்னைக் சோபித்துக் குழந்தையையும் கவனிக்காமல் போய்விட்டார்.

நடராஜ முதலியார்.—உன் நாயகனுக்குப் பொருள் பூமி இல்லையா ?

செழுங்கமலம்.—என் நாயகனுக்குப் பொருள் பூமியனேகம் உண்டு. என் நாயகனுடைய சகோதரன் தன் மைத்துனியைத் தன் சகோதரனுக்கு விவாகஞ் செய்விக்க எண்ணங்கொண்டிருந்ததால் என்னைத் தன் சகோதரன் மணமுடிக்கும் விஷயத்தில் சம்மதப்படாமலும், தன் எண்ணத்துக்கு விரோதமாக நடப்பதால் விவாகத்துக்கு வருகிறதில்லையென்றும் பூஸ்திதியில் ஒன்றும் கொடுக்கப்போகிறதில்லை யென்றும் சொல்வதை அறிந்து என் நாயகன், தனக்குப் பூஸ்திதி வேண்டியதில்லை யென்று எழுதிக்கொடுத்துவிட்டு அவரை விவாகத்துக்கு வரும்படி செய்தார். ஆனதால் என் நாயகன் பாகமெல்லாம் அவர் தமையனைச் சேர்ந்தது.

நடராஜ முதலியார்.—உனக்குச் சொந்தமாகிய நிலத்தை ஒற்றிவைத்துப் பணம் வாங்கிய உன் தமையனுக்குப் பொருள் பூமி இல்லையா ?

செழுங்கமலம்.—என் தந்தை எனக்கு நூறுவேலியை ஒதுக்கி மற்ற நிலத்தையும் மற்றத்தனத்தையும் இருபங்காக்கி என் சகோதரர் இருவருக்குங் கொடுத்துக் காலஞ் சென்றபின், என் சகோதரரில் இளையவர் தம் முடைய பூஸ்திதியை விற்றும் பொருளைவிற்றும் வீண்செலவு செய்வதையறிந்து என் மூத்தசகோதரன், விற்கும் நிலத்தை மற்றவர்களைக் கொண்டு விலைக்குவாங்கித் தன் பூஸ்திதியோடு சேர்த்துக்கொண்டார். ஜெகநாதமுதலியார் கையிலிருந்த யாவற்றையும் தாசிகளுக்கழித்துவிட்டுத் தான் புத்திஹீனமாய்ச் செய்துவிட்டதாகத் தன் தமையன் அருணசல முதலியார் காலில் விழ, அவர் சகோதரவாஞ்சையால் ஆதரித்து விவாக முதலானதும் செய்வித்துத் தம்மோடு வைத்துக் கொண்டார்.

நடராஜமுதலியார்.—அருணசலமுதலியார் இறந்தபின் அவருக்குச் சந்ததியில்லாததால் அவருடைய ஆஸ்தியெல்லாம் சகோதரனைச் சேரவேண்டியதுதானே ? அது இன்னும் அவனைச் சேராமலிருப்பதன் காரணம் என்ன ?

கமலாக்ஷி.—தாதா வக்கீல்களைப்போல் கேட்கிறீர்கள். (என்று சிரித்தாள்.)

செழுங்கமலம்.—(சிரித்துக்கொண்டு) அறியாத சிறுவர்களைப்போல் பெரியவர்களும் பேசுவார்களா ? (என்று மகளுக்குச்சொல்லி) அண்ணு ! என் தமையன் அருணசலமுதலியார் இறந்ததை நியாயஸ்தலத்தில் நிரூபிக்க முடியாமற்போன காரணத்தால் நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது.

நடராஜமுதலியார்.—அருணசலமுதலியார் பெரிய தனவந்தன் என்று கேள்வி. அவர் இறந்தால், சாவுக்கு ஒருவரும் வந்திரார்களா ? சாவுக்கு வந்தவர்களைச் சாக்ஷியாகக் கொண்டால் ஜெகநாத முதலியார் பக்ஷம் சேரத் தடையில்லையே !

செழுங்கமலம்.—அண்ணு ! தாங்கள் சொல்லுவது உண்மையேயாயினும் என் தமையன் இவ்வூரில் இறந்திருந்தால் ஒரு கஷ்டமும் அவருக்கிராது. அவர் வெளியூருக்குக் கப்பலேறிப்போய் அங்கு இறந்ததால் அதை நிரூபிக்கக் கஷ்டமாக இருக்கிறது.

நடராஜமுதலியார்.—தன் சகோதரனுக்கு விவாகம் முடித்துவைத்த அருணசலமுதலியார் பெண்சாதி இல்லாமலா இருந்தார் ?

செழுங்கமலம்.—அவருக்குப் பெண்சாதியில்லையென்று சொல்லவில்லையே! அவருக்கும் எனக்கும் ஒருநாளையில் விவாகம் முடிந்தது. விவாகம் முடிந்ததும் ஒருவனையொருவர் பார்க்குமுன்னம் என்னை என்நாயகன் ஊருக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார். அவ்விடம் போன மூன்றும்நாள் நான் புஷ்பவதியானேன். நான் புஷ்பவதியான இலக்கி

னம் என் சகோதரனுக்கு ஆகாதென்று சோதிடர் சொன்னதால் அவ ரையும் அவர் பெண்சாதியையும் பார்க்க மனங்கொள்ளாமல் பெருந்துக் கத்தோடிருந்தேன். பின் என் சிறிய தமையனுக்கு விவாகம் என்று அழைத்துவரும்படி சொல்லியனுப்பினர்கள். அப்பொழுது நான் எட்டு மாதம் கர்ப்பம் ஆனதால் வண்டியில் ஏறிப்போவது கூடாதென்று தடுத் துவிட்டார்கள். என் நாயகன் விவாசத்துக்குப் போயிருந்தார். அவனா என் தமையன் ஜெகநாதமுதலியார் பொருளற்றவன் என்று சேவலப் படுத்தியதால் என்னை அவர்கள் வீட்டுக்கு அனுப்புகிறதில்லை யென்று தீர்மானப்படுத்திக்கொண்டு வந்துவிட்டார். அதுமுதல் அவர்கள் வீட் டுக்குப் போகாமலிருந்துவிட்டோம். அதனால் என் தமையனையும் அவர் மனைவியையும் பார்க்கக் கொடுத்துவைக்காத பாவியானேன். நான் பிரச வித்த இரண்டாம் மாதத்தில் என்தமையன் அருணாசலமுதலியார் கப்ப லேறிப்போனவர் இறந்ததாகவும், அவர் மனைவி மூன்றுமாதத்துக் சர்ப் பத்தோடு இறந்ததாகவும் கேள்விப்பட்டேன். அவர் இறக்க நானே காரணமாக இருந்தேன்.

நடராஜமுதலியார்.—அவர் இறக்க நீ காரணமாக இருந்தது எவ்விதம் ?

செழுங்கமலம்.—நான் அசுபமான இலக்கினத்தில் புஷ்பவதியாகாமலிருந் தால் அவர் என் இறக்கப்போகிறார் ?

நடராஜமுதலியார்.—அம்மா ! அவர் உனக்குமுன் பிறந்தவரா ? பின் பிறந்த வரா ? "பேரிழவின்பமோடு பிணிமூப்புச்சாக்காடென்னு மாறு மூன் கரு விற்பட்டது." என்றிருப்பதால், ஒவ்வொருவரும் தாய்வயிற்றிற் சருவி லமையும்பொழுதே எல்லா இன்ப துன்பமும் அமைக்கப்படுகின்றன என்றிருக்க, அது உன்னால் வந்ததென்றும், என்னால் வந்ததென்றும் பிள்ளைபிறந்தான் அப்பனைக்கொன்றான், மருமகள் வந்தாள் மாமனுனைப் பயணங்கூட்டிவிட்டாள், அவன் கொடிசுற்றிப்பிறந்தான் மாமனைக் கொன்றான் என்று, ஒருவர் இறந்தால் வேறொருவர்மேல் பழி ஏற்றுவது போல் நீயும் உன்னால் உன் தமையன் இறந்தார் என்று சொல்லுகிறாய். இது அறியாமையேயன்றி வேறல்ல.

செழுங்கமலம்.—அண்ணா ! தாங்கள் சொல்வது உண்மையே யாயினும் யாவ ரும் தங்களைப்போல் நினைக்கவில்லையே !

நடராஜமுதலியார்.—அறியாமையால் சொல்வதை நாம் சமனிக்கவேண்டிய அவசியமில்லை. ஜெகநாதமுதலியாருக்கு விவாகம் நடந்தகாலத்தில் கர்ப் பம் என்றபோது அப்பொழுது பிறந்தவளா கமலாக்ஷி ?

செழுங்கமலம்.—இல்லை அண்ணா ! கமலாக்ஷி மூன்றவது குழந்தை. மூத லாவதும் இரண்டாவதும் பிறந்திறந்தன.

நடராஜமுதலியார்.—அம்மா ! பதினாயிரம் ரூபாய்க்காக நூறுவேலி நிலத்தை ஒற்றிவைக்கலாமா ? அந்த பதினாயிரத்தை யாரிடத்திலாவது வட்டிக்கு வாங்கி ஒற்றிக் கடனைத் தீர்த்துவிட்டால் வட்டிக்கடனை இரண்டொரு வருடத்தில் தீர்த்துவிடலாமே ! அதை ஏன் செய்யக்கூடாது ?

செழுங்கமலம்.—அது விஷயத்தை யோசித்து அநேகமுறை என் தமையனைக் கண்டுசொன்னதில், அவ்விதம் செய்தால் தனக்குப் பெரிய அவமானம் வினையும் என்றும், சிலநாள் பொறுத்துக்கொண்டால் நிலத்தை மீட்டுக் கொடுத்து விடுகிறேனென்றும் சொல்லுகிறார். காலஞ்சென்ற என் தமையன் நிலத்தின் வரும்படியைத் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள் வாங்கிவந்தார்கள். சில மாதங்களாகத் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டவர்களை நீக்கிச் செட்டிகளில் இருவரை நியமித்திருப்பதாகவும் அவர்கள் வாரத்தைத் தண்டல் செய்வதோடு மூன் சேர்ந்திருந்த தொகையையும் தாங்கள் ஒப்புக்கொண்டதாகவும் கேள்வி ; ஆனதால் இனி என் தமையன் என்நிலத்தை வாங்கிக்கொடுக்கத் தடைசெய்ய மாட்டார் என்று எண்ணுகிறேன்.

நடராஜமுதலியார்.—செட்டிகளைத் துரைத்தனத்தார் நியமித்தகாரணம் தெரியுமா ?

செழுங்கமலம்.—ஆம் தெரியும்! அதிக செலவு நேரிடாத வகைக்கு என் தமையன் கேட்டுக்கொண்டதே காரணம்.

நடராஜமுதலியார்.—அம்மா செழுங்கமலம் ! இன்று வீண்காலம்போக்கி நெடு நேரம் அலுவசியமான விஷயங்களைப்பேசிக்கொண்டிருந்தோம். விஜய ரங்கத்தின் தாய் தந்தை அகியாயமாக மரணம் அடைந்துபோவார் கள்போல் காணப்படுகிறதே ! நீ கவனித்தாயா ?

செழுங்கமலம்.—ஆம் அண்ணா ! மீனாக்ஷி சாப்பிடாமல் எந்நேரமும் தன் மகனை நினைத்து அழுகிறாள். அவள் நாயகனும் " மகனே ! மகனே உன்னை என்று காண்பேன் ?" என்று சொன்ன விதமாக இருக்கிறார். அவர்களுக்கு உண்டாகிய துக்கத்தைக் கண்டபின் விஜயரங்கத்தின் மேல் எனக்கு நல்ல அபிப்பிராயமில்லை.

நடராஜமுதலியார்.—நான் கலியாணசுந்தர முதலியாரைப் பார்க்கப்போன பொழுது தன்மகன் விஜயரங்கம் வருமளவும் அவ்விடம் வந்திருக்க வேண்டினார். நீங்கள் உத்தரவு கொடுத்தால் சிலநாள் அங்கு போயிருக்கி றேன். நான் தைமாதம் மத்தியில் உங்கள் வீட்டுக்கு வந்தேனுகையால் இன்று பங்குனிமாதம் பத்துத்தேதி யாகிறபடியினாலே ஏறக்குறைய நான் இங்குவந்து இரண்டுமாதம் ஆகிறது.

செழுங்கமலம்.—அண்ணா ! தாங்கள் இந்த வீட்டுக்கு வந்தபின் எங்களுக்கு மனம் சந்தோஷமாக இருக்கிறது. தாங்கள் எங்களை விட்டுப்போவீர்க

ளாகில் உண்மையாக எங்களையும் விஜயரங்கத்துத் தாய்தந்தையரோடு பயணங்கூட்டி அனுப்பவேண்டிவரும். ஆனதால் அதை நன்றாய் யோசித்துச் செய்யுங்கள்.

கமலாக்ஷி.—தாதா ! தாங்கள் எங்களை விட்டுப் போகவில்லையென்று சொன்னாலொழிய தங்கள் பாதங்களை விடேன். (என்று இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டாள்.)

நடராஜமுதலியார்.—ஒரு காசுக்கும் பிரயோசனமில்லாத என்னை இருக்கும்படி கட்டாயப்படுத்துகிறீர்கள். இங்கு இருக்கவேண்டாம், எங்கேயாகிலும் போவென்றால் என்னசெய்வதென்று துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எனக்கு நற்காலம் வந்ததுபோல் காணப்படுகிறது. உங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாக நான் எங்கும் போகவில்லை, காலைவிடு, கமலாக்ஷி !

அத்தருணத்தில் வைத்தியர் வீட்டுக்குள் வந்து, என், அம்மா ! கமலாக்ஷி ! உன்னைக் கட்டிக் கொள்ளும்படி தாதாவை வேண்டியா காலைப்பிடித்துக் கொண்டாய் ? (என்று சிரித்துக்கொண்டே உட்கார்ந்தார்.)

கமலாக்ஷி.—ஆம் ! தாதா ! தாங்களும் ஒரு வாலிபமான பெண் அகப்படவில்லை யென்று துக்கப்படுகிறீர்களல்லவா ? (என்று சிரித்தாள்.)

வைத்தியர் —நான் ஒருபெண்ணைக் கட்டிக்கொள்ளக் கூடாதா ? நான் கிழவனாய்விட்டேன் என்றே நினைக்கிறாய் ? எனக்கின்னும் வயது இரட்டையில் மூப்பதாக வில்லையே !

நடராஜமுதலியார்.—வைத்தியரே ! நீர் இந்தப்பக்கம் வருவது அபூர்வமாய்ப் போய் விட்டதே !

வைத்தியர்.—ஆம் முதலியாரே ! என்ன செய்கிறது. வேலை அதிகமானதால் வரச்சாதியப்படவில்லை. முத்துக்குமார முதலியார் பெண்சாதி பேச்சியாயி கதி இன்னதென்று தெரியுமா ?

செழுங்கமலம்.—ஒன்றும் தெரியாது, என்ன சங்கதி ?

வைத்தியர்.—" அரசன் அன்று கேட்பான் ; தெய்வம் நின்று கேட்கும்." என்ற பழமொழி மாறிவிட்டது. இக்காலத்தில் அரசன் நின்று கேட்கிறான் ; தெய்வம் அன்றே கேட்கிறது. பேச்சியாயியும் அவள் மகளும் சேர்ந்து சில வாரங்களுக்குமுன் மனோன்மணியை அடித்துப் பிரேதம் போல் அவளை மூர்ச்சையாக்கிவிட்டார்கள். அக்காலத்தில் அவள் மாண்டு போயிருப்பாள். தெய்வச் செயலால் தப்பித்துக்கொண்டாள். மாண்டுபோயிருந்தால் ஆத்தாளும மகளும் ஊசலாட வேண்டிவருமே என்று எண்ணமலிருந்தவர்கள் பின்னும் முத்துக்குமார முதலியாரைத் துணையாகக்கொண்டு அவளை அடித்துத் துரத்திவிட்டார்கள். மனோன்மணி வீட்டைவிட்டுச் சென்ற அன்றே பேச்சியாயி நாக்கில் பிளவை

யொன்று உண்டானதோடு ஒருகாலும் ஒருகையும் எடுக்க முடியாம லிருக்கின்றன. அவளுக்குச் சௌக்கியமாகும் என்று நான் நினைக்க வில்லை.

சேழுங்கமலம்.—மனோன்மணியை அடித்துத் துறத்திவிட்டார்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் ?

வைத்தியர்.—அடுத்த வீட்டுக்காரரால் யாவும் அறிந்தேன். மனோன்மணி பட்ட கஷ்டத்தைச் சொன்னால் நீங்கள் யாவரும் அதிக துக்கப்படுவீர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. சமலாக்ஷியைக் கட்டிக்கொடுத்தால் மாமி நாத்தி உள்ள இடத்தில் கொடுக்கவேண்டாம். தாய் தங்கை இல்லாத மாப்பிள்ளை அகப்படாமற்போனால் பெண் நமது வீட்டிலேயே இருக் கட்டும். இதைச் சொல்லிப்போகவே இவ்விடம் வந்தேன். நான் அவசர மாய்ப் போகவேண்டும். (என்று எழுந்தார்.)

விஸ்வநாத செட்டியாரும் அத்தருணத்தில் வீட்டுக்குள் நுழைந்து, வைத் தியர் அவசரமாகப் போகிறவர்போல் காணப்படுகிறது. என்னவோ மாமிநாத்தி என்றது என்காதில் விழுந்தது என்று அருகிலிருந்த நாற் காலியில் உட்கார்ந்தார்.

வைத்தியர்.—ஆம் செட்டியாரே ! அது சாவகாசமாகப் பேசவேண்டும். இப் பொழுது எனக்குச் சாவகாசமில்லை. (என்று வைத்தியர் விடைபெற்றுச் சென்றார்.)

விஸ்வநாத செட்டியார்.—ஐயா ! விஜயரங்கத்தின் சமாசாரம் ஏதாகிலும் தெரியுமா ? அதை அறிந்துபோகவே இவ்விடம் வந்தேன்.

நடராஜ முதலியார்.—ஒன்றும் தெரியவில்லை. அவனுடைய தாய்தந்தைகள் படுந்துயரத்தைப் பார்க்க முடியவில்லை.

விஸ்வநாத செட்டியார்.—ஏன் துயரப்படுகிறார்கள் ? விஜயரங்கம் எங்காகி லும் சினேகிதர்களோடு போயிருப்பான். பிள்ளை சிலநாள் பிரிந்தால் துக்கப்படுவது உங்கள் ஜாதியாரில் அதிகமாகக் காணப்படுகிறது. செட் டிகளுக்குள் அவ்வித வழக்கமில்லை. பிள்ளை கப்பல் ஏறினால் மூன்று வருடத்திற்குக் குறையாமல் இருந்து வருகிறான். அதனால் நாங்கள் துயரப்பட்டுக் கொண்டா இருக்கிறோம் ?

நடராஜ முதலியார்.—செட்டியாரே! நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்குள்ள வழக்கம் யாவும் எங்களுக்குப் புதிதாகவே காணப்படுகின்றன. பிள்ளை களுக்கு விவாகம் முடித்து அவர்களை வேறுவைத்து விடுகிறார்கள். மாமி யார் தன் மருமகளை வைத்து ஆள வகையில்லாமல் அவள் இஷ்டம் போல் தனிக்குடித்தனம் செய்ய விட்டுவிடுகிறாள். உலக அனுபோக மில்லாத சிறுவர் கெட்டவழியிற் செல்ல இடங்கொடுக்கும் என்று எண் ணுகிறார்கள். புருடன் தன் பெண்சாதியோடு மற்றவர்களுக்கு

முன் பேசவிடாதிருக்கிறார்கள். புருடன் பெண்சாதியோடு சயனித்துக் கொள்ளத் தடைப்படுத்துகிறார்கள். புருடன் பெண்சாதிமேலும், பெண் சாதி புருடன் மேலும் பட்சம் கொள்ளாதிருக்க வழிதேடுகிறார்கள். ஒரு பதார்த்தம் தம் சகோதரரில் ஒருவர் அதிசமாய் வாங்கிவந்தால் அதைப் பங்குபோட்டுத் தங்கள் தங்கள் விலாஸத்தை ஓலைத்துண்டுகளில் எழுதிச் சிறு குழந்தையைக்கொண்டு ஒவ்வொரு பங்கிலும் ஒவ்வொரு விலாஸம் போடுவித்து விலாசப்படி எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் சகோதரப் பற்றில்லாது போய்விடுகிறதென்று நினையாதிருக்கிறார்கள் தன்பெண்சாதிக்கு அசந்தர்ப்பமாயிருந்தாலும் அவள் தாய் வீடு போயிருந்தாலும் அக்காலத்தில் சகோதரன் வீட்டில் சகோதரன் சாப்பிட்டால் மனைவி வந்தவுடன், எத்தனை வேளை சாப்பிட்டார் என்று கேட்டு அதற்கு அரிசியளந்து கொடுத்துவிடுகிறார்கள். ஒரு சகோதரன் குழைந்தைக்கு விவாகம் நடந்தால் அவனைச்சேர்ந்த மாமன் மாமி மைத்துனர் மற்றவர்களும் வருகிறதேயன்றி, மற்றச் சகோதரர்களுடைய பெண்சாதிகளைச் சார்ந்தோரை அழைப்பது பணச்செலவென்று வர வழைக்காதிருக்கிறார்கள். ஒரு சகோதரன் வீட்டில் நடச்சும் விசேடத்தில் மற்றச் சகோதரர்களுடைய பெண்சாதிகளை முறைபோட்டு வேலைசெய்ய விடுகிறார்கள். விசேடம் நடச்சும் சகோதரன் வீட்டிலுள்ள தட்டு முட்டு சாமான்களை எடுத்தாளவேண்டியதேயன்றி மற்றச் சகோதரர்களுடைய வீட்டுச் சாமான்களைத் தொடாமல் இருக்கிறார்கள். செட்டியாரே ! இவைகள் மட்டுமல்ல. இன்னும் இதுபோல அனேகம் நடக்கின்றன. ஆனதால் உங்களுச்குள் பற்று குறைவாகிறதென்றே இவைகளைச் சொன்னேன். தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது.

கமலாக்ஷி.—அம்மா! நாட்டுக்கோட்டைச் செட்டிகளுடைய வழக்கம் எல்லாம் தாதாவுக்குத் தெரிந்திருக்கிறது, பார்த்தீர்களா ? (என்று சிரித்தாள்.)

சொழங்கமலம்.—அண்ணன் உண்மைதான் சொன்னார். பெரிய தனவந்தர் தங்கள் மகளை விவாகஞ்செய்துகொடுத்தால் தங்கள் பெண்களுச்குப் பெருந்தொகையைச் சீதனமாகக் கொடுக்கிறார்களா ? இல்லையே !

வில்வநாத செட்டியார்.—அம்மா ! செட்டிகளுடைய வழக்கத்தைப் பார்க்கிறவர்களுக்கு அது புதிதாகவே காணப்படும். அவர்கள் சருத்தைக் கவனித்து உள் நுழைந்து பார்த்தால் அவர்கள் செய்வது யாவும் உத்தமம் என்றே தெரியவரும்.

நடராஜ முதலியார்.—செட்டியாரே ! உங்களுடைய வழக்கத்தை நீங்களே மேன்மையாகப் பேசுவதில் பலன் ஒன்றுமில்லை. உங்களுச்குள் இருக்கிற வழக்கம் எல்லாம் குற்றமாகக் காணப்படுகிறதால் எல்லா மேன்மையும் எங்களுக்கே என்று நன்றாய் விளங்குகிறது.

விஸ்வநாத செட்டியார்.—ஐயா! எங்களுடைய கருத்தை யறிந்தபின் மேன்மையும் தாழ்வும் சொல்லவேண்டியதே யன்றி அதற்குமுன் சொல்வது உசிதம் அல்லவே!

நடராஜ முதலியார்.—என்ன சொல்லப்போகிறீரோ? பார்ச்சலாம். உங்களுடைய கருத்தைச்சொல்லுங்கள். அதைக்கேட்டபின் யோசிச்சலாம்.

விஸ்வநாத செட்டியார்.—பிள்ளைகளுக்கு விவாகமானவுடன் அவர்களை வேறு குடித்தனம் செய்ய வைக்கிறோம் என்பது உண்மையே! பெற்றோர்களுக்குப் பின் பிள்ளைகள் வெவ்வேறு குடும்பமாகிறது யாவருக்கும் வழக்கமாதலால், பெற்றோரிருக்கும் பொழுதே அவர்களை வேறு பிரித்து வைப்பதால் மாமி நாத்தி மைத்துனன் இவர்களால் உண்டாகும் துன்பம் நீங்குகிறது. ஏககுடும்பமாகப் பிள்ளைகளை யெல்லாம் வைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் மனச்சலிப்பு உண்டான பின் வேறுகிறதைவிட முன்னமே வேறுவது உத்தமம். மனச்சலிப்பு உண்டாகுமுன் வேறு குடும்பமானால் சகோதரர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இருக்கும் அன்பு நீங்க நியாயமில்லை. மாமியார் தன் மருமகளை வைத்தாளச் சக்தியில்லை என்றீர். ஒரு குடும்பத்தை நடத்துவது சடினமா? நாலைந்து குடும்பங்களை ஒரே வீட்டில் வைத்து மேல் பார்ப்பது கஷ்டமா? ஆளுந்திறமை அதிகம் எதற்குவேண்டும்? மருமகளைக் கெட்ட வழியில் விடாமல் மாமியார் பார்த்துக்கொள்ளுவதால் ஆளுந்திறமை மிஞ்சினவர்கள் நாங்களென்று வெளிப்படையாய்க் சாணப்படுகிறது. செட்டிகள் மற்ற ஜாதியாரைப்போல் உள்ளூரிலிருந்து உத்தியோகம் செய்யாமல் வெளியூருக்குப்போய்ப் பொருள் தேடவேண்டியதாலும், வெளியூருக்குச் சென்றால் அவர்கள் மூன்று வருடம் இருந்து வரவேண்டுமென்கிற ஏற்பாடு இருப்பதாலும், அவர்கள் தொழில் விருத்தியடைய வேண்டியதாலும், பெண்சாதியோடு கூச்சமின்றிப் பேசவிடுகிறதில்லை. பெண்சாதிக்கும் புருடனுக்கும் உண்டாகிற அன்பைக் கிஞ்சித்தும் குறைக்காமவிருந்தால் வெளியூருக்குச் செல்லும் தொழில் குறைவுபடும் என்பதற்குச் சந்தேசமுண்டா? ஸ்திரீகளோடு படுத்து நித்திரை செய்வது கூடாதென்றும் ஸ்திரீகளுடைய சுவாசத்தில் விஷமிருக்கிறதென்றும் அச்சுவாசம் புருடர்மேல் படக்கூடாதென்றும் முன்னோர்கள் தடுத்திருக்க, அவ்வாக்கைக் கைக்கொள்ளா திருப்பவர்மேல் குற்றஞ் சுமத்தாமல், கைக்கொண்டவரை ஸ்திரீகளோடு படுத்துறங்குகிறதில்லை யென்று குற்றஞ்சுமத்தத் துணிந்தீர்! வெவ்வேறு குடும்பமாக இருக்கும் சகோதரர்களின் பெண்சாதிகளுக்குள் சச்சரவு வராமலிருக்க, ஒரு பதார்த்தத்தை ஒருவர் வாங்கிவந்தால் தாங்கள் சொல்லியதுபோல் பங்கு போட்டு, அவர் அதிகம் எடுத்துக்கொண்டார், எனக்குக் கொஞ்சம்

கிடைத்தது என்று குறைகூறுவண்ணம் சீட்டெழுதிப்போடச் செய்து அதிர்ஷ்டத்தின்மேல் பழிபோட்டு எடுத்துச்சொள்ளுகிறோம். ஒரு வருக்குக் கிஞ்சித்து அதிகமாய்ப்போனால் பெண்களுக்குள் சண்டை வருகிறதை இவ்வழக்கம் தடுக்கிறதென்று தாங்கள் நினைக்கவில்லையே! சில அசந்தர்ப்பங்களில் ஒரு சகோதரன் மற்றொரு சகோதரன் வீட்டில் சாப்பிட்டால் சாப்பிட்ட வேளைகளை எண்ணி அரிசி கொடுப்பதும் குற்றமாகக் கொண்டீர். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் செய்யும் தருமத்தை நன்று யறிந்த தாங்கள் இவ்விதம் சொல்வது ஆச்சரியத்தைத் தருகிறது! பெண்டுகளுக்குள் எப்பொழுதாகிலும் மனச்சலிப்பு வந்தால் வேறு வழியில் குற்றஞ்சொல்ல ஏது இல்லாததால், உன் புருடனுக்கு எத்தனை தடவையில் சாப்பாடு போட்டிருக்கிறேன் ? என்று சொல்லிக் காட்டாமல் இருக்க அவ்விதம் அரிசிகொடுத்து விடுகிறோம். ஓரகத்திகளுக்குள் சண்டை நேரிட்டுச் சகோதரர்களுக்கு மனச்சலிப்பு வராமல் தடுப்பதைத் தாங்கள் வேறுவிதமாக எண்ணுகிறீர்கள். ஒரு சகோதரன் வீட்டில் ஒரு விசேடம் நடந்தால் மற்றச் சகோதரர்களுடைய பெண் சாதிகளின் சுற்றத்தாரை வரவழைக்காமல் இருப்பது உண்மையே! பணச்செலவைக் கருதி அவர்களை வரவழைக்காமல் இருக்கிறோம் என்பது பிசகு. விசேடத்துக்கு வருகிறவர்கள் அதிகமானால் அவர்களுத் திருப்தியுண்டாக நடப்பது மிகவுங் கடினம். தன் வீட்டில் நடக்கும் விசேடத்திற்குத் தன் பெண்சாதியைச் சார்ந்தவர்கள் மட்டும் வருவார்களானால் அவர்களைக் கவனித்து அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைக் குறைவற நடத்தி அனுப்பக்கூடும். மற்றச் சகோதரர்களுடைய பெண்சாதிகளைச் சார்ந்தவர்களும் வருவார்களேயானால் அவர்களுக்கு நடக்கும் மரியாதையில் கிஞ்சித்துக் குறைவுபடும் பட்சத்திலே அவர்கள் அணுவை மலையாக்கிச் சகோதரர்களுக்குள் மனச்சலிப்பை உண்டாக்கி விடுவார்களென்று பயங்கொண்டு அவர்களை வரவழைக்கிறதில்லை. இது வழக்கத்திலிருப்பதால் அவர்களும் தங்களை வரவழைக்காமற் போவதைக் குற்றமாகக் கொள்ளுகிறதில்லை. ஒரு விசேடகாலத்தில் சம்பந்திகளுக்குத் தாம்பூலம் கொடுப்பதில் அவருக்கு மூந்தி கொடுத்தார்கள், எனக்குப் பிந்தி கொடுத்தார்களென்று உங்களுக்குள் மனச்சலிப்பு உண்டாகிறதைப் பார்த்திருக்கும் தங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லையே ! ஒரு விசேடத்திற்குச் சினேகிதர்களையும் அன்னியர்களையும் அதிகம் வரவழைப்பதால் பணச்செலவைச் சுருக்கப் பார்க்கிறோம் என்ற தங்கள் கருத்து நிலைநிற்கவில்லை. சகோதரர்களுடைய பெண்சாதிகள் முறைபோட்டு வேலைசெய்கிறார்கள் என்பதும் உண்மையே ! அதன் கருத்தைக் கவனித்துப் பார்த்தால் அது மேன்மையானதாகவே காணப்படும். சகோதரர்களுடைய பெண்

மாமா அவர்கள் நம்மை மறந்துவிட்டார்களென்றே நினைத்திருந்தேன். உட்காந்து காப்பி சாப்பிடுங்கள் என்று காப்பி கொடுத்தாள் (114ம்-பக்கம் பார்க்க)

சாதிகளில் இவள் இன்று மிளகாய் அரைக்கவேண்டும், அவள் கறிகாய் அறியவேண்டும், மற்றவள் சாதம் வடிக்கவேண்டும் என்றும், முதல்நாள் மிளகாய் அரைத்தவளே மறுநாள், கறிகாய் அறியச்சொல்லியும், கறிகாய் அரிந்தவளைச் சாதம் வடிக்கச் சொல்லியும், சாதம் வடித்தவளே மிளகாய் அரைக்கச்சொல்லியும் நடத்துவோமேயானால் கஷ்டமான வேலையை யாவரும் செய்யவேண்டிவரும். அதனால் ஒருவர்மேல் ஒருவருக்கு முகச்சுளிப்புவர நியாயமிராது. ஒரு சகோதரன் மற்றச்சகோதரன் வீட்டுச் சாமான்களே யெடுத்து உபயோகிக்கையில் அவைகள் கைதவறி உடைந்தாலும் காணமற்போனாலும் பெண்டுகளுக்குள் சச்சரவு வரும் என்றே அவைகளே எடுத்தாளுகிறதில்லை. நாங்கள் செய்யும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நியாயத்தைக் கருதி இருக்கிறதே யொழிய போதுமான நியாயமில்லாமலிராது.

நடராஜ முதலியார்.—செட்டியாரே! தாங்கள் இதுபரியந்தம் சொல்லியது ஏறக்குறைய நியாயத்தை ஒட்டியதாகக் காணப்படினும், ஓர் தனவந்தன் தன் பிள்ளைகளே வெவ்வேறு குடும்பமாகவைத்து அவர்களுடைய வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தை அவர்கள் பற்றெழுதி அதற்கு வட்டிபோடுதலோ மேலானது ? இந்த வழக்கம் மிகவும் கேவலமானதாகக் காணப்பட வில்லையா ?

விஸ்வநாத கோட்டையார் —அவ்வழக்கத்தின் கருத்தை விளங்கச் சொல்வின் அது சிலாக்கியமானதென்பீர். ஒருதனவந்தனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்து, அவர்களில் ஒருவன் தகப்பன் சொத்தைவாங்கி வீண் செலவு செய்வானேயானால் பின்னால் சகோதரர்களுக்குப் பாகமாகும் பொழுது நஷ்டப்படவேண்டியவர்கள் யார் ? ஒவ்வொருவரும் வாங்கும் பணத்தைப் பற்றெழுதிக்கொண்டு வட்டிபோட்டுக் கொள்ளுவார்களேயானால் அதிகமாகப் பணம் வாங்கிச் செலவு செய்யப் பயப்படுவார்கள். பற்று வழி அதிகப்படுத்திக்கொள்ளுகிறவன் பாகம் குறைந்துபோகிறது. ஒருவன் தன் பாகத்துக்காக வரும் தொகைக்கு அதிகமாய்க் கேட்டாலும் கொடுப்பதில்லை. இந்த ஏற்பாட்டினால் மற்றச் சகோதரர்கள் நஷ்டம் அடைய நியாயமில்லை. ஒரு சகோதரன் அதிகமாய் வாங்காதிருப்பதைக் கண்ட மற்றவன் யோசித்து வீண்செலவு செய்யாதிருப்பான். வீண்செலவு செய்யாதிருந்தால் பொருள்சேரும், புகழுண்டாகும், நல்லவர் எண்ணிக்கையில் சேர்வான். இவ்வளவு நன்மை அதனிடத்தில் இருக்கிறதைப் பார்த்தீர்களா ? (என்று சிரித்தார்.)

நடராஜ முதலியார்.—ஓர் தனவந்தன் தன்மகளே ஒருவருக்கு விவாகஞ்செய்துகொடுத்தால் என்ன சீதனங்கொடுக்கிறான் ? இருநூறு மூன்நூறு வராகந்தானே ! நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் செலவழித்து விவாகஞ் செய்கிறவன் கொடுக்கும் சீதனம் இதுதானா ?

விஸ்வநாத செட்டியார்.—இருநூறு வராகன் என்றே வைத்துக்கொள்ளலாம். பெண்ணின் புருடனுக்கு ஆஸ்தியை அதிகரிக்க இருநூறு வராகன் கொடுக்கவில்லை. அது பெண்ணுக்கே கொடுத்தது. அப்பெண் ஓர் குழந்தையைப் பெறுமுன் இறப்பாளாகில் அந்தப் பணத்தோடு அப்பெண் சொண்டுவந்த எல்லாச் சாமான்களையும் நகைகளையும் அப்பெண். தாய்வீட்டுக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்பெண் குழந்தைபெறுவாளாகில் அந்தப் பிள்ளைக்குத் தன் தாயார் வீடு கொடுத்த சீதனப்பணம் சொந்தமாகிறது. பிள்ளைகளுக்கு வயது இருபதாகுமுன் இருநூறு வராகன் என்னும் சீதனப்பணம் ரூபாய் பதினாயிரத்துக் கதிகமாகிறது. பணத்தைச் செட்டிகளிடம் வட்டிக்குக் கொடுத்தால் அது நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாயானால் ஆறுவருடத்திலும், மூக்கால் ரூபாய் வட்டியானால் எட்டு வருடத்திலும் இரட்டிக்கிறது. இதை நீங்கள் கவனிக்கிறதில்லை. சீதனம் கொண்டுவந்தவள் குழந்தை பெறுமுன் விதவையானால், தகப்பனால் போடப்பட்ட நகைகளேவிற்றுச் சீதனப் பணத்தோடு சேர்த்து வட்டிக்கு வைத்து வரும் வட்டியை வாங்கிச் செல்வப் பிள்ளைபோல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். புருடன் வீட்டார் பணக்காரராயிருந்தால் தங்கள் பெண் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப் பொருளுதவி செய்து மற்றச் சகோதரர்களுடைய பெண்சாதிகளைப்போல் அவளுக்கும் எல்லாச்சுதந்தரத்தையும் உண்டாக்கிவிடுவார்கள்.

நடராஜ முதலியார்.—செட்டியாரே! சீதனப்பணம் வட்டியால் அவ்வளவு பெரிய தொகைக்கு வரும் என்று நான் கினைக்கவில்லை. பெண்களைக் கட்டிக்கொடுத்தபின் தாயார் வீட்டுக்கு வந்தால் அவர்கள் யாருடைய வீட்டில் இருப்பார்கள் ?

விஸ்வநாத செட்டியார்.—பெண்கள் எப்பொழுதும் தாயாரோடு இருப்பார்களே யன்றிச் சகோதரர்கள் வீட்டோடு இருக்கமாட்டார்கள். தாயாரிழந்த காலத்தில் தமக்கிஷ்டமான சகோதரர் வீட்டில் இருப்பார்கள்; ஆனதால் எங்களுடைய பெண்களுக்கு நாத்திகளின் கொடுமை இல்லை.

நடராஜ முதலியார்.—செட்டியாரே ! இன்று உம்மால் அநேக விஷயங்களை அறிந்தேன். எனக்கு விரோதமாகக் காணப்பட்டவையெல்லாம் நன்மையாக முடிந்தன. செட்டிகளுக்குள்ள வழக்கத்தை மற்றச் சாதியாரும் கைக்கொண்டால் நன்மையாக இருக்கும் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும், நாட்டுக்கோட்டைச் செட்டிகள் வியாபார விஷயத்திலும் இவ்விதம் கவனத்தைச் செலுத்தி நடத்தாத குறைவால் தாங்கள் "கொண்டு விற்று" வருவதனால் தங்களுக்குத் தாங்களே கெடுதல் செய்து கொள்ளுவதேயன்றி வியாபாரம் செய்யும் ஊரையும் கெடுத்து விடுகிறார்கள். அதை நீக்கிவிட்டால் அவர்களை யாவரும் மேன்மையாக மதிப்பார்கள்.

விஸ்வநாத செட்டியார்.—என்ன காரணத்தால் அவ்விதம் சொல்லுகிறீர்? கொண்டு விற்று வருவதால் ஊர் கெட்டுப்போகிற தெவ்விதம்? பணம் இல்லாதவர்களுக்குப் பணங்கொடுத்து அவர்களைப் பணந்தேடிச் சுகமாக இருக்கும்படி செய்வதாலோ ஊர் கெட்டுப்போகிற தென்கிறீர்? (என்று நகைத்தார்.)

நடராஜ முதலியார்.—செட்டிகள் பல ஊருக்குத் தங்கள் கூட்டாளிகளை அனுப்பிப்பணம் வட்டிக்குக் கொடுத்து வாங்கும்படி செய்வதால், கூட்டாளிகள் தங்களுக்குள்ள மூதலேவைத்து வட்டிக்குக் கொடுத்து வாங்காமல் வங்கியிலும் (சாவகாரியிடத்தில்) செட்டிகளுக்குக் கடன் கொடுக்கும் செட்டிகளிடத்திலும் தவணைக்குக் கடன் வாங்கி முதலாளிகளுக்கு அதிக இலாபத்தைக்காட்டிப் பரிசுபெற வியாபாரத்தைப் பெருக்கச் செய்கிறார்கள். முதலாளி "கடையை ஒடுக்கு" என்றால் நல்ல இனத்திலிருந்து தண்டலுத் தாங்கள் வாங்கிய கடன்களுக்குக் கொடுத்துவிட்டு, வராத கடனைத் தங்களுடைய மூதலுக்கு வைத்துக் கொள்ளுகிறார்கள். தங்களுக்குள்ள மூதலேமட்டும் வைத்து வியாபாரம் செய்வார்களானால் அதை நல்ல இனத்திற் கொடுக்கலாம். அதனால் கெடுதல் ஒன்றும் நேரிடாது.

விஸ்வநாத செட்டியார்.—ஐயா! தாங்கள் சொல்லிய வண்ணம் தங்கள் மூதலேமட்டும் வைத்து வியாபாரம் செய்தால் உத்தமம். அப்படிமூதலாய் இருந்தால் அதனாலே வரும் இலாபம் கூட்டாளியின் சம்பளத்திற்கும் அவனுடைய செலவுக்கும் போதாதென்றே கடன் வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். ஆயினும் இதனால் ஊர் கெட்டுப்போக நியாயமில்லை.

நடராஜ முதலியார்.—செட்டிகளிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யும் செட்டிகளும் இனத்தில் கொடுப்பவர்களைப்போல் தாமும் இலாபத்தை அதிகமாகத் தங்கள் முதலாளிகளுக்குக் காட்ட, பணப்பிரியம் இல்லாதசாலத்தில் வட்டியைக் கூட்டிவிட்டு வங்கியில் கடன் வாங்கி அதிக வட்டிக்கு இனத்தில் தருபவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அவர்கள் அதை வாங்கி இனத்தில் வட்டியை உயர்த்திக் கடன் கொடுக்கிறார்கள். இவ்விதம் செய்கிற வியாபாரத்தால் இலாபம் அடைகிறவர்கள் யாரென்று நினைக்கிறீர்?

விஸ்வநாத செட்டியார்.—செட்டிகளுக்குக் கடன் கொடுக்கும் செட்டிகளும் இனத்தில் கொடுக்கும் செட்டிகளும இலாபம் அடைகிறார்கள். அதற்குச் சந்தேகப்படவேண்டிய காரணம் இலலேயே!

நடராஜ முதலியார்.—பார்வைக்கு நீர் சொல்வதுபோல் காணப்படுகிறது. செட்டிகளிடத்தில் கடன் வாங்கிய இனங்கள் உயர்ந்த வட்டியைக் கொடுக்கச் சக்தியற்று அனேகர் ஓடிப்போவதையும் கொடுக்கச் சக்தியில்லையென்று கோர்ட் ஆதரவைப்பெறுவதையும் பார்க்கிறோம். இனம் நஷ்டமடைந்

தால் கடன் கொடுத்த செட்டிகளும் நஷ்டம் அடையவேண்டியதல்லவா? அவர்கள் நஷ்டமடைந்தால் அவர்களுக்குக் கடன்கொடுத்த செட்டிகளும் நஷ்டம் அடையவேண்டியதல்லவா?

செழுங்கமலம்.—அண்ணு! செட்டிகள் மட்டும் நஷ்டம் அடைகிறார்கள் என்றீர்களே! வாங்கிக்காரர் நஷ்டம் அடையமாட்டார்களா? செட்டிகளுக்குள் வட்டியை உயர்த்திக் கொடுப்பவர்கள் இருப்பதுபோல வட்டியைக்குறைத்துக் கொடுப்பவர்களும் இருப்பார்கள் அல்லவா?

நடராஜ முதலியார்.—வாங்கிக்காரர் ஏன் நஷ்டம் அடைகிறார்கள்? செட்டிகளைப்போல் அவர்கள் வாய்ச்சொல்லை நம்பியா செட்டிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள்? இல்லே! இல்லே! தக்க கடைகளின் கூட்டாளிகள் கையொப்பம் பெற்றுலொழியக் கடன் கொடுக்கமாட்டார்கள். ஆனதால் அவர்களுக்கு எப்பொழுதும் நஷ்டம்வராது. நகரத்தாரில் ஒருவன் வட்டியைக்கூட்டிக் கடன் கொடுத்தானென்று கேள்விப்பட்டவுடன் அன்று செட்டிகள் வீடெல்லாம் அந்த வட்டியே நடக்கிறது. நாள்தோறும் அவர்கள் விசாரித்துக்கொள்வது வழக்கம். ஆனதால் செட்டிகள் வீட்டில் கடன் கொடுப்பவர்கள் வட்டியை உயர்த்திலுல் அவர்களுடைய தயவை எதிர்பார்த்திருக்கிற அனேகர் அவர்களுக்கு உதவியாகநிற்கிறார்களே யன்றி வட்டியைக் குறைத்துக்கொடுக்கத் துணியார்கள். ஊரிலுள்ள ஜனங்கள் அதிக வட்டி கொடுக்கச் சக்தியில்லாமல் கெட்டுப் போவதையும் அதலுல் செட்டிகள் நஷ்டம் அடைவதையும் யோசித்தால் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொண்டதோடு ஊரையும் கெடுத்து விடுகிறார்களென்று தோன்றுகிறது. இலாபம் அடைகிறவர்கள் யாரென்று இப்பொழுதாகிலும் தெரிகிறதா செட்டியாரே?

விஸ்வநாத செட்டியார்.—வாங்கிக்காரரே இலாபம் அடைகிறார்களென்று நன்றாய் விளங்குகிறதோடு அவர்களுக்கு இலாபம் தேடிக்கொடுக்கச் செட்டிகள வட்டிக்குச் கொடுக்கத் தோன்றினாளென்றும் காணப்படுகிறது. நான் இது விஷயத்தை யெல்லாம் நகரத்தாருக்குத் தெரிவித்து வீணில் வட்டியை உயர்த்தவேண்டாமென்று சொல்லுகிறேன். (என்று நகைத்தார்.)

நடராஜ முதலியார்.—நீர் ஒருவர் சொன்னுல் உம்முடைய வார்த்தை ஏலாது, ஊரிலுள்ள முதலாளிகளே இது விஷயத்தைக்குறித்து யோசிக்கவேண்டும். நாம் வீணில் நெடுநேரம் இதுவிஷயத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். கையில் ஒரு மூட்டை வைத்துக்கொண்டிருக்கிறீரே, அதில் என்ன இருக்கிறது?

விஸ்வநாத செட்டியார்.—இது நகைப்பெட்டி. சென்னையிலிருந்து ஒருவர் விற்று அனுப்பும்படி நகைகளை அனுப்பியிருக்கிறார். பார்க்க இஷ்ட

மிருந்தால் பார்க்கலாம். (என்று பெட்டியைக் கட்டியிருந்த துண்டை அவிழ்த்தார்.)

நடராஜ முதலியார்.—நான் என்ன நகை வாங்கப்போகிறேன்! செழுங்கமல மும் கமலாக்ஷியும் வாங்குவார்கள் ; எடுத்துக்காட்டும் பார்க்கலாம.

கமலாக்ஷி.—தாதா ! அவைகளை ஏன் எடுக்கச்சொல்லுகிறீர்கள்? இங்கு நகைகள் வாங்கவேண்டியவர்கள் இல்லை.

செழுங்கமலம்.—ஆம் அண்ணு ! வாங்குகிறதாயிருந்தால் பார்க்கலாம். கை யில் காசில்லாதிருக்கும்பொழுது அவைகளைப்பார்ப்பதில் பலன் என்ன?

விஸ்வநாத செட்டியார்.—அம்மா ! நகைகளைப் பார்க்கிறவர்க ளெல்லாம் வாங்கிவிடுகிறார்களா ? நீங்கள் நகைகளைப் பார்க்கிறதால் அவைகள் குறைந்து போகா.

என்று பெட்டியைத்திறந்து, மோராமாலை, வைரக்கம்மல், வைரமூக்குத்தி, வைரபுலாக்கு, இரத்தின ஜடைபில்லை, தங்கத்தில் கெம்பு இழைத்த ஒட்டியாணம், கெம்பட்டிகை, சரட்டட்டிகை, வைர மோதிரங்கள், சீல் மோதிரங்கள் எல்லாம் இருக்கின்றன, யாவையும் பாருங்கள் என்று, ஒன்றொன்றாக எடுத்துக்காட்டிப் பெட்டியில் வைத்துக்கொண்டார். அந்த நகைகளைச் செழுங்கமலமாவது கமலாக்ஷியாவது எடுத்துப்பார்க் காததைக் கண்டு, ஏனம்மா! தொட்டால் ஒட்டிக்கொள்ளும் என்று பயப் படுகிறீர்கள் ? என்று கேட்டார்.

செழுங்கமலம்.—செட்டியாரே ! தாங்கள் கொண்டுவந்த நகைகளில் ஒன் றையாவது வாங்குகிறதாயிருந்தால் அதை எடுத்துப் பார்க்கலாம். இவை களைப்போல் என்னிடத்திலிருந்த நகைகளை விற்றும், இன்னும் இருக் கிற இரண்டொன்றையும் விற்க நேரிடுமோ என்று எண்ணங்கொண்டி ருக்கும் எங்களுக்கு வேறு நகைகள் எதற்கு ? வாங்குகிறதாயிருந்தால் பணத்திற்கு எங்குபோவேன்? எனக்கு யார் கடன் கொடுக்கப்போகி றார்கள் ?

விஸ்வநாத செட்டியார்.—தங்களுக்குக் கடன் வேண்டுமானால் என்ன தொ கை கேட்டபோதினும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். எந்த எந்த நகைகள் வேண்டும் சொல்லுங்கள். (என்று பெட்டியிலிருந்த நகைகளை மீண்டும் எடுத்துக் கீழே வைத்தார்.)

செழுங்கமலம்.—செட்டியாரே ! நான் கடன்பட்டு நகைகளை விலைக்கு வாங் கித் தங்களிடத்தில் அந்த நகைகளை அடைமானம் வைத்து வட்டி கொ டுத்து வருவது மிக்க சிலாக்கியமே !

விஸ்வநாத செட்டியார்.—அவ்விதம் செய்கிறவர்கள் இல்லே என்ரு நினைக் கிறீர்கள் ? அனேகர் அவ்விதம் செய்கிரூர்கள். அவ்வழக்கம் இருந்தா லும் நான் உங்களே அடைமானம் வைக்கச்சொல்லிக் கேட்கவில்லே.

செழுங்கமலம்.—ஒன்றும் அடைமானம் இல்லாமல் கடன் கொடுக்கிறதா யிருந்தாலும் நகைகள் வாங்குகிற விஷயத்தில் கடன் கொடுப்பீர்களே யன்றி வேறு விஷயத்திற்குக் கேட்டால் கொடுப்பீர்களா ?

விஸ்வநாத செட்டியார்.—எந்த விஷயத்துக்குக் கேட்டாலும் கொடுக்கத் தடையில்லே. எவ்வளவு வேண்டும் ? ஐந்நூரு ? ஆயிரமா ?

செழுங்கமலம்.—செட்டியாரே ! எனக்குக் கடனுகப்பணமும் வேண்டாம். நகையும் வேண்டாம்.

விஸ்வநாத செட்டியார்.—அம்மா ! கடன் கொடுக்க இஷ்டங்கொண்டதை அறிந்த பின் வேண்டாம் என்றதற்கு ஏது காரணம் ? இப்பெருந் தொ கையைக் கொடுக்கப் பயப்படுவேனென்று எண்ணினீர்களோ ?

செழுங்கமலம்.—செட்டியாரே! நீர் சொல்லும் ஆயிரம் ஐந்நூறு எனக்குப் போதாது. எனக்கு வேண்டியது பதினுயிரம் ரூபாய். அந்தப்பெருந் தொகையைக் கொடுக்க முடியுமா ?

விஸ்வநாத செட்டியார்.—ஆத்தே ! பதினுயிரமா ? பதினுயிரம் எதற்கு ?

செழுங்கமலம்.—இதற்கு என்று அண்ணன் சொல்லுவார்கள். அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

விஸ்வநாத செட்டியார்.—ஐயா ! தாங்கள் இது பரியந்தம் ஒன்றும் சொல்லா மல் இருந்தீர்கள். செழுங்கமலத்தம்மாள் கேட்கும் பதினுயிரம் எதற்கு ?

நடராஜ முதலியார்.—பதினுயிரம் இதற்கென்று சொல்லுகிறேன். அந்த மோராமாலேயைக் காட்டுங்கள்.

விஸ்வநாத செட்டியார்.—இந்த மோராமாலே ஆயிரத் தைந்நூறுக் கதிகம் போகாது. (என்று எடுத்துக் கொடுத்தார்.)

நடராஜ முதலியார் மோராமாலேயை வாங்கிக் கமலாக்ஷி கழுத்தில் போட்டு கமலாக்ஷி ! இது உனக்கு நன்ருயிருக்கிறது, போட்டுக்கொள் என்று நகைத்தார்.

கமலாக்ஷி கழுத்திலிருந்த மோராமாலேயைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு, தாதா! தங்கள் மகனுக்கென்னைக் கட்டிக்கொள்ளப் போகிறீர் களே ! அப்பொழுது இந்த மோராமாலேயைமட்டும் அல்ல, இந்தப் பெட்டியிலடங்கிய நகைகளே யெல்லாம் தாங்கள் சந்தோஷமடைய அணிந்து கொள்ளுகிறேன் என்று சிரித்துச்சொண்டே மோராமாலே யைச் செட்டியாரிடம் கொடுத்தாள்.

நடராஜ முதலியார்.—அம்மா ! செழுங்கமலம் ! உன்மகள் என்னைக் கேலி செய்வது உன் காதில் விழுந்ததா ? செட்டியாரே ! தங்களுடைய காதிலும் விழுந்ததா ? என்னை எப்பொழுதும் கேலி செய்யவில்லையென்று சொல்லும் பொழுது நீங்கள் இருவரும் சாக்ஷி சொல்லவேண்டும்.

கமலாக்ஷி.—தாதா ! சாக்ஷிகள் வேண்டியதில்லை ; நான் சொல்லியதை அல்லவென்று மறுத்தால் அல்லவா சாக்ஷிகள் வேண்டும் ?

---

11 - ம் அத்தியாயம்.

இரண்டு வேலி நிலத்தை உடையதாகி வாழை, கமுகு, தென்னை முதலிய நிரம்பவுற்றுப் பலவித புஷ்பச்செடிகளும் மரங்களும் அடர்ந்து அழகைக்கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு தோட்டத்தின்மத்தியில் பார்ப்பவர் கண்களைக் கவரும்படியான ஓர் அரண்மனையில் தூண்டாவிளக்குகளால் பிரகாசித்த ஓர் அறையிலே ஒருபுருடன் சோபாவில்சாய்ந்து கொண்டு ஏதோ ஒன்றை நினைத்து அசைவற்றிருக்கும்பொழுது, அவ்வறையின்கதவு மெதுவாகத்திறக்கப்பட்டு ஓர் வாலிபன் உள் நுழைந்து, பிரபு ! குப்புசாமி ஐயர் தேவரீரைப் பார்க்கவேண்டியதாகத் தேவரீருடைய அனுமதிபெற்று வரும்படி என்னைக் கேட்டுக்கொண்டார் என்றான்.

வீட்டுக்கு எஜமான் வந்தவாலிபனைப்பார்த்து, என்ன சொன்னாய் நாகபூஷணம் ! இந்நேரத்தில் என்னைப் பார்க்கவேண்டிய அவசியம் என்ன ? இன்னும் சற்றுநேரத்தில் இவ்விடம் யார் வரப்போகிறார்கள் உனக்குத் தெரியாதா ? என்றான்.

நாகபூஷணம்.—பிரபு ! யாவும் தெரியும். வந்த பிராமணன் தேவரீரிடத்தில் இரண்டொரு வார்த்தையாடிப் போவது மிக்க அவசியம் என்கிறதால் தேவரீருடைய உத்தரவைக் கேட்க வந்தேன்.

வீட்டுக்கு எஜமான்.—விரைவில் வரச்செய், எனக்கு அவகாசமில்லை.

எஜமான் உத்தரவைப் பெற்றுக்கொண்டு நாகபூஷணம் நீங்கிச் சிலவிநாடிக்குள் ஓர் பிராமணனை அறைக்குள்கொண்டுவந்து விட்டு நீங்கினான்.

குப்புசாமி ஐயர்.—ஆசீர்வாதம் ! ஜெகநாத முதலியார் ! நான் இந்நேரத்தில் உம்மைத் தேடி வந்ததைக்குறித்து மன்னிக்கவேண்டும்.

ஜெகநாத முதலியார்.—ஏதாவதொன்று அவசியமாகக் காணப்பட்டாலொழிய நீர் வரமாட்டீர். என்ன செய்தி ?

குப்புசாமி ஐயர்.—உம்முடைய தங்கையின் நிலத்தை என் பெயருக்கு ஒற்றியாக எழுதிவைத்திருக்கிறீர்களே அதைக் குறித்துப் பேசவே வந்தேன்.

ஜகந்நாத முதலியார்.—ஓய் ஐயரே ! அந்த விஷயத்தைக் குறித்துப் பேச இதுதானு சமயம் ? போம். போம். சாவகாசத்தில் பேசலாம். எனக்கிப்பொழுது சாவகாசமில்லை.

குப்புசாமி ஐயர்.—ஐயா ! வெள்ளம் வருமுன் அணைபோட்டுக்கொள்ள வேண்டும் என்பதை நினையாமற் பேசுகிறீர். அந்தப் பத்திரத்தை நாம் இன்னும் வைத்துக்கொண்டிருப்பது கெடுதியாக முடியும்போல் காணப்படுகிறது.

ஜகந்நாத முதலியார்.—ஓய் ஐயரே ! அப்பத்திரத்தை என் கையிலிருந்து வாங்க ஒருவராலும் முடியாதென்று உமக்கிதுபரியந்தம் ஆயிரந்தரம் சொல்லியிருந்தும் அதைக்குறித்து நான் மறுபடியும் தலையை உடைத்துக் கொள்ளவா இந்நேரத்தில் வந்தீர் ?

குப்புசாமி ஐயர்.—நீர் சொன்னவைகளை நான் மறக்கவில்லை. இத்தருணத்திலும் முன் சொன்னவிதம் சொன்னால் உமக்குக் கெடுதியாக முடியுமென்றுந் பயதே இந்நேரத்தில் உம்மைத் தேடிவந்தேன்.

ஜகந்நாத முதலியார்.—நிலத்தை நாம் வைத்துக் கொண்டிருப்பது கெடுதியாக முடியும் என்று நினைப்பது என்ன காரணம் ? எனக்குச் சாவகாசமில்லை விரைவில் சொல்லும்.

குப்புசாமி ஐயர்.—நிலத்தின் வரும்படியை நாளது பரியந்தம் நீரே அனுபவித்து வரவும், வெளிக்கு நானே சுதந்தரவாளியாகக் காட்டிவந்ததில் ஏதாகிலும் உமக்குத் துரோகம் செய்திருக்கிறேனு ?

ஜகந்நாத முதலியார்.—ஐயரே ! ஒருவரும் இலவசமாகச் செய்யவில்லை. பத்திரம் எழுதிய் பொழுது உமக்கு ஆயிரம் ரூபாய் கொட்டவில்லையா ? அதன்பின் மாதச் சம்பளமாய் நூறு நூறுசக் கொடுக்கவில்லையா ? உமக்குக் கொடுத்ததை வேறொருவருக்குக் கொடுத்தால் இதைச்செய்யார்களா ? போதும் போதும் உம்முடைய யோசனை. போய்வாரும்.

குப்புசாமி ஐயர்.—ஐயா ! கோபித்துக்கொள்ளவேண்டாம். உமக்கு ஓர் கெடுதியைச்செய்ய நினைத்து நான் இங்குவரவில்லை. இன்று நடந்ததை யறிந்தால் என்னைக் கோபிக்கமாட்டீர்.

ஜகந்நாத முதலியார்.—ஐயரே ! எனக்குச் சாவகாசமில்லை என்பதை நன்றாயறிந்தபின் உம்முடைய கருத்து இன்னதென்று சொல்லாமல் வீணில் காலங் கழிக்கிறீர். நீர் நாளைவந்தால் யாவும் சாவகாசமாய்ப் பேசலாம்.

துப்புசாமி ஐயர்.—நாளையதினம் பேசி முடிவு செய்யச் சாவகாசம் இருக்குமாகில் இந்நேரத்தில் உம்மை ஏன் தேடிவருகிறேன்? பத்திரத்தின் சமாசாரம் அதிகதூரம் போயிருக்கிறது.

ஜகநாத முதலியார்.—ஒய்! ஒய்! நீர் என்னை விடமாட்டீர் போல் காணப்படுகிறது. விரைவில் இரண்டொரு வார்த்தையில் சொல்லி முடியும். எனக்கோர் அவசரமான வேலையிருக்கிறது. என்னை அதிக நேரம் உம்முடைய வேலையில் வைத்துக்கொள்ளவேண்டாம்.

துப்புசாமி ஐயர்.—ஐயா! நொடியில் முடித்துவிடுகிறேன். சற்று நேரத்திற்கு முன் சீனிவாஸ ஐயங்கார் என்னைக் கூப்பிட்டார்; நான்போய் என்கூப்பிட்டீர்? என்று கேட்டேன். அவர் உட்காரும் என்றார். நான் உட்கார்ந்தேன்.

ஜகநாத முதலியார்.—ஒய்! ஒய்! போதும் போதும். போனதும் உட்கார்ந்ததும் சாவகாசத்தில் பேசிக்கொள்ளலாம். நீர் நாளை காலையில் வாரும்.

துப்புசாமி ஐயர்.—ஐயா! நீர் அதிக அவசரப்படுகிறீர். எதாகிலும் அவசியமாக இன்றிரவில் நடத்த உத்தேசித்திருந்தால் அதை மற்றொருநாளைக்கு வைத்துக்கொண்டு நான் வந்திருக்கும் வேலையை முதலில் முடித்தால் உமக் கனுகூலமாகும்.

ஜகநாத முதலியார்.—என்ன சொன்னீர்? நான் இன்றிரவிற்காக வைத்திருக்கும் விஷயத்தை மாற்றி வைத்துக்கொள்ளவா சொல்லுகிறீர்? சபாஷ்! சபாஷ்! நன்றாய் இருக்கிறது! நீர் என் வீட்டிலிருந்து என்னை உம்முடைய உத்தரவுக் கடங்கி நடக்கச் சொன்ன தைரியம் உமக்கு ஆர் கொடுத்ததோ தெரியவில்லை! வீணில் நீர் அவமரியாதை படுமுன் போய் விடுகிறது உத்தமம்.

துப்புசாமி ஐயர்.—ஐயா! உம்முடைய வீட்டில் வந்து அதிகாரம் செய்யவாவது அவமரியாதையடைந்து போகவாவது நான் இவ்விடம் வரவில்லை. உம்முடைய நன்மையைக் கருதிச் சொன்னதை நீர் குற்றமாகக்கொள்ள வேண்டாம். நாளை உமக்குக் கெடுதியாக முடிந்தால் எல்லாருக்கும் துன்பமுண்டாகும். ஆனதால் பொறுமையோடு நான் சொல்வதைக் கேளும். நான் சீனிவாஸ ஐயங்கார்வீட்டில் அறைக்குள்போய் உட்கார்ந்தவுடன் அவர் எல்லோரையும் அனுப்பிவிட்டு நான் உட்கார்ந்திருந்த அறையின் கதவை மூடி உள்தாப்பாள் போட்டு என்னருகில் உட்கார்ந்து, என்னை உமக்குத் தெரியுமா? என்று கேட்டார். ஆம், நெடுநாளாய் உம்மையறிவேன். நானும் இன்னனென்று உமக்குத் தெரியுமா? என்றேன்.

ஜகநாத முதலியார்.—ஐயரே ! மணி ஒன்பதாய்விட்டது. என்னுடைய காலத்தை இவ்விதம் போக்கிக்கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தால் என்ன சொல்லுவார்கள் ? என்மேல் நெடுநாளாகக் கொண்டிருக்கும் நல்ல அபிப்பிராயம் எல்லாம் கெட்டுப்போக நீர் காலதாமசஞ் செய்து கொண்டிருக்கிறீர். இரண்டொரு வார்த்தையில் என் முடித்துவிடக் கூடாது ?

குப்புசாமி ஐயர்.—ஐயா ! நடந்ததை விவரமாகச் சொல்லாமற் போனால் உமக்கு நன்மாய் விளங்காதென்று நடந்த விதம் சொல்லுகிறேன். நான் அவ்விதம் சொன்னவுடன், சீனிவாஸ ஐயங்கார் என்னைப்பார்த்து, ஐயரே ! நீர் எனக்குத்தெரியும், நான் உமக்குத்தெரியும். ஆனதால் நம்மிருவருக்குள் இரகசியம் வேண்டாம். உண்மையைப் பேசும். நீர் செழுங்கமலத்தம்மாளிடம் நிலத்தை ஒற்றிக்கு வாங்கினீரே ! எத்தனை ரூபாய் கொடுத்து ஒற்றிக்கு வாங்கினீர் ?" என்று கேட்டார். நான் பதினாயிரம் கொடுத்து ஒற்றிக்கு வாங்கினேன் என்றேன். பத்திரம் எவ்விதம் எழுதிக்கொண்டீர் ? என்று கேட்டார். செழுங்கமலத் தம்மாள் அவசர நிமித்தமாகக் குப்புசாமி ஐயரிடம் ரூபாய் பதினாயிரம் பெற்றுக்கொண்டதால் இந்த ரூபாய் பதினாயிரம் கொடுக்கும் வரைக்கும் செழுங்கமலத்தம்மாளுக்குச் சொந்தமாகிய நிலத்தை ஒற்றியாக வைத்திருப்பதால் நிலத்தின் மாசூலைக் குப்புசாமி ஐயராவது அவரது உத்தரவு பெற்றவர்களாவது வசூல் செய்துகொள்ளலாம். பணம் வாங்கிய மூன்று மாதத்திற்குமுன் பணத்தைக் கொடுத்துவிட்டால் வட்டிக்காக நூற்றைம்பது கொடுத்து மாசூலை ஒப்புக்கொள்ளுகிறதென்று அந்த அம்மாள் சம்மதித்துக் கையெழுத்து போட்டு எழுதிக்கொண்டோம் என்றேன். அதற்கு அவர் பத்திரத்திற்கண்ட பதினாயிரம் ரூபாயை அந்த அம்மாளிடம் கொடுத்தீரா ? என்று கேட்டார். நான் அந்த அம்மாளிடம் கொடுக்கவில்லை. அந்த அம்மாள் உத்தரவு பிரகாரம் அவள் தமையனிடம் கொடுத்தேன் என்றேன். தமையனிடம் கொடுக்கும்படி சொல்லியதற்கு எழுத்து மூலமாக ஆதாரம் இருக்கிறதா ? என்றார். எழுத்து மூலமாக ஆதாரம் இல்லாமற்போனாலும் வாங்கிக்கொண்டவர் சாகும் சொல்ல எக்காலத்திலும் சித்தமாய் இருக்கிறார் ; அவர் இல்லை என்று சொல்லுங்காலத்திலல்லவா எல்லா ஆதாரமும் வேண்டும் ? என்றேன். ஜகநாத முதலியாரிடம் ரூபாய் பதினாயிரம் கொடுத்தேன் என்றீரே ! அந்த ரூபாய் உமக்கேது ? என்றார். ஐயங்காரே ! இதென்ன நீர் கேட்பது ஆச்சரியத்தைத்தருகிறது. நான் சம்பாதித்து வைத்திருந்த ரூபாய் பதினாயிரத்தைக்கொடுத்தேன். அது எங்கிருந்து வந்ததென்று நீர் கேட்டால் அது இவ்விதம் வந்ததென்று நான் சொல்லவேண்

டிய அவசியமில்லையே என்றேன். பதினாயிரம் ரூபாய் பத்திரம் பிறந்த மூன்று நாளைக்கு முன் உம்மை ஐம்பது ரூபாய்க்கு வாரண்டில் பிடித்துக்கொண்டுபோனபொழுது, உம்மிடத்தில் ஒரு காசுமில்லை, மாதம் மூன்று ரூபாய் வீதம் கொடுக்கத் தீர்மானம்வேண்டும் என்று நியாயஸ்தலத்தில் தீர்மானம் பெற்றுவந்தீரே, அது உமக்கு ஞாபகம் இருக்கிறதா ? அந்த ஸ்திதியிலிருந்த நீர் பதினாயிரம் கடன் கொடுத்திருக்கிறதாகச் சொல்லுகிறீர். பதினாயிரம் கொடுத்தது உண்மையென்று நீர் சாதிக்கிற விஷயத்திலே நியாயஸ்தலத்தில் சொல்லிய தப்பு வாக்கு மூலத்திற்காக நீர் தண்டனையடைய வேண்டிவரும். சொல்லிய வாக்கு மூலமே உண்மையென்றால் செழுங்கமலத்தம்மாளிடம் எழுதி வாங்கியது தப்புப்பத்திரமாகி நீரும் ஜெகநாத முதலியாரும் தண்டனை யடைய வேண்டியவர்களாக வேண்டும். நீரே நன்றாய் யோசித்துப்பாரும். உலகம் நிந்தித்து உங்களை அவமானப்படுத்துமுன் உண்மையைச் சொல்லி விடுவீரோயின் உம்மையும் ஜெகநாதமுதலியாரையும் ஒன்றும் செய்யவில்லை ; என் வார்த்தையை நம்பும் என்றார். நான் பேசாமல்—

ஜெகநாத முதலியார்.—நீர் பேசாமல் இவ்விடம் வந்துவிட்டதே சிலாக்கியம்.

துப்புசாமிஐயர்.—ஐயோ! நான் பேசாமல் இவ்விடம் வரவில்லையே ! அவர் என் வாய்ச்சொல்லால் எல்லா உண்மையையும் அறிந்துகொண்டார். நான் செய்துவந்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

ஜெகநாத முதலியார்.—ஐயரே ! பேதை மதியால் நீர் யாவும் சொல்லிவிந்தாலும் அதற்காக நீர் பயப்படவேண்டாம். சிவிவாஸ ஐயங்கார் வக்கீலாய் இருப்பதால் நீர் பயப்பட்டீர். அவர் அறிந்த சட்டங்கள் நமக்கு தெரியாமற் போகவில்லை. அவர் உம்முடைய வார்த்தையைக் கேட்டு ஒன்றும் செய்யமுடியாது. அவரிடத்தில் சொல்லியவைகளை நாளை நீர் சொல்லவில்லை என்றால் என்ன செய்யமுடியும் ? இதற்கா பயந்தீர் போம். போம். உம்மைப்போல அற்பகாரியக்களைக் கண்டஞ்சுவோரை நான் எங்குங் கண்டதில்லை. (என்று சிரித்தார்.)

துப்புசாமி ஐயர்.—சுருங்காக உம்முடைய தீர்மானத்தைச் சொல்லிவிட்டீர். சிவிவாஸ ஐயங்கார் என்வாக்கால் யாவும் அறிந்தபின் என்னைப்பார்த்து, ஐயரே ! நீரும் ஜெகநாதமுதலியாரும் செழுங்கமலத்தின் நிலத்தை அபகரித்து அவளுடைய சுகத்தைக் கெடுத்தீர்கள். நீர் இப்பொழுது என்னிடம் சொன்னதை நாளை ஒருக்கால் மறுத்தால் என்செய்வதென நான் செய்திருக்கிற உபாயம் இன்ன தென்று உமக்குத் தெரியுமா ? என்றார். எனக்கெப்படித் தெரியும்? என்றேன். ஆனால் வாரும், பாரும் என்று அவ்வறையிலிருந்த படுதாவைத் தூக்கினார். ஐயோ ! நான் என்ன சொல்லுவேன்! படுதாவின் பின்னாலிருந்த மூன்று நாற்காலியில் மூன்று

பேர் உட்கார்ந்து நான் சொல்வதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந் தார்கள். அவர்களே யாரென்று நினைக்கிறீர் ?

ஜகந்நாத முதலியார்.—யார் அங்கு வரப்போகிறார்கள் ? அவருடையவேலைக் காரர்களாயிருக்கக்கூடும்.

துப்புசாமி ஐயர்.—அவ்விதம் இருந்தால் நான் பயப்பட நியாயமில்லையே அங்கிருந்தவர்களில் இருவர் கோர்ட் உத்தியோகஸ்தர்களும், ஒருவர் அரங்க ராவ் அவர்களுமே !

ஜகந்நாத முதலியார்.—ஆ! ஆ! மூட்டாள் பார்ப்பான். என்னவேலை செய்து விட்டீர் ! எல்லாக்காரியங்களையுங் கெடுத்துவிட்டீரே ! இனி என்ன செய்கிறது ! நம்முடைய இரகசியம் வெளிக்கு வந்து விட்டதே ! ஐயோ ! என்மேல் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்த அரங்கராவ் அவர்களுக்குக் கெட்ட அபிப்பிராயம் உண்டாகும்படி செய்துவிட்டீர். இனி கோர்ட் வியாச்சியமும் நமக்கனுகூலமாக முடியுமென்று எவ்வி தம் சொல்லுகிறது! மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கயதுபோல் உம்மைத் துணைகொண்டு மோசம் போனேன். வெண்ணெய் திரளும் பொழுது தாழி யுடைந்தது போலானதே ! கோர்ட் வியாச்சியம் எனக் கனுகூலமாக முடியப்போகும் சமயத்தில் இந்த இரகசியத்தை வெளி யில் கொட்டிவிட்டீரே ! (என்று தலையில் கையை வைத்துக்கொண்டு சோபாவில் சாய்ந்தார்.)

துப்புசாமி ஐயர்.—ஐயா ! எல்லாம் கெட்டுப்போய் விட்டதென்று நீர் கவலை கொள்ளவேண்டாம். நியாயாதிபதி அரங்கராவ் அவர்கள் உம்மை மேன் மையாகவே நினைத்திருக்கிறார். நீர் ஏதாகிலும் ஓர் காரணத்தைக் கொண்டு இவ்விதம் செய்திருக்கவேண்டுமேயன்றிச் செழுங்கமலத்தின் நிலத்தை யபகரிக்க எண்ணங்கொண்டு செய்திருக்கமாட்டீர். இன்னும் சில நாளையில் அருணசல முதலியார் சொத்தெல்லாம் உம்மைச்சேரப் போவதால் நீர் ஒருவர் சொத்தை அபரிக்க எண்ணங் கொள்ளவேண் டிய அவசியமில்லை என்று நினைத்து அவர் என்னைப்பார்த்து, ஐயரே ! இவ்விடத்தில் நடந்த யாவும் வெளிவரா தென்றும் செழுங்கமலத்தின் நிலத்தை ஒரு விநாடியும் காலதாமசஞ் செய்யாமல் அவளிடம் கொடுத்து நாளை ஜகநாதமுதலியாரை என்னிடம் வரும்படி சொல்லுமென்றும் என்னை அவர் அனுப்பினார். ஆனதால் காலம் போக்காமல் உம்மைத் தேடி இந்நேரத்தில் வந்தேன்.

ஜகந்நாத முதலியார்.—ஐயரே ! முதலில் நீர் துக்கத்தைக் கொடுத்தாலும் முடிவில் சந்தோஷமான சமாசாரத்தை உரைத்தீர். அரங்கராவ் அவர் கள் தயவிருந்தால் போதுமானது. மற்றவர்களைக் கருதவேண்டிய

அவசியமில்லை. அவர் சொல்லிய விதம் செய்தால் நமது காரியம் அனு கூலப்படத் தடையொன்றுமில்லை. எந்த நியாயாதிபதியாகிலும் எனக்கு விரோதமாகத் தீர்மானஞ் சொல்ல முடியுமா ?

துப்புசாமி ஐயர்.—எவ்விதம் முடியும்! அருணசல முதலியார் இறந்தது யாவருக்கும் தெரிந்ததே ! அவர் பெண்சாதி பூரண கர்ப்பத்தோடு ஓடி விட்டது ஒருவருக்கும் தெரியாதோ ?

ஜகநாத முதலியார்.—ஓய்! ஓய்! என்ன காணும் உளறுகிறீர். மெதுவா கப் பேசும். யாராகிலும் நாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தால் நமக்குக் கெடுதியாக முடியுமென்று நினைக்கவில்லையா ? (என்று சொல் லிக் கதவைத் திறந்து பார்த்து ஒரு மனிதன் தூரத்தில் போவதைக் கண்டு) யார் அங்கு போவது ? (என்று கேட்டார்.)

நாகபூஷணம் ஓடிவந்து பிரபு! தேவரீரைப்பார்க்கவேண்டுமென்று ஓரன் னியன் இவ்விடம் வந்தான். இந்நேரத்தில் தேவரீரைப் பார்க்கமுடி யாதென்று சொல்லியனுப்பிவிட்டேன் என்றான்.

ஜகநாத முதலியார்.—வந்தவன் தன்பெயர் இன்னதென்று சொன்னானா?

நாகபூஷணம்.—தன்பெயரைச் சொன்னால் தெரியாதென்றும், தன்னைப் பார்த்தால் இன்னவனென்று அறிந்துகொள்ளக் கூடுமென்றும் சொன் னான்.

ஜகநாத முதலியார்.—அவன் என்ன விஷயமாக வந்தான் என்று கேட்க வில்லையா ?

நாகபூஷணம்.—தேவரீரிடத்தில் யாசகார்த்தமாய் வந்ததாகச் செப்பினான்.

ஜகநாத முதலியார்.—யாசகத்துக்கு வர நல்ல சமயம் பார்த்து வந்தான். ஒருவரையும் உள்ளே விடவேண்டாம்.

என்று அறைக்குள் வந்து, ஐயரே ! நீரென்ன என்தமையன் பெண்சாதி பூரண கர்ப்பத்தோடு ஓடிவிட்டாள் என்று சொன்னீரே ! அவள் கர்ப் பத்தோடு இறந்தாள் என்று உம்மிடத்தில் அனேக முறை கூறியிருக்க நீர் அவள் ஓடிவிட்டாள் என்று சொன்னீரே? இதை யாராகிலும் கேட் டால் கோர்ட் வியாச்சியம் எவ்விதம் முடியும் ?

துப்புசாமி ஐயர்.—ஐயா ! நாம் இருவரும் தனித்திருந்ததால் அவ்விதம் சொன்னேன். வேறொருவர் முன்னிலையில் அவ்விதம் சொல்லுவேனா?

ஜகநாத முதலியார்.—"பகலில் பக்கம் பார்த்துப்பேசு, இரவில் அதேனும் பேசாதே" என்பதைக் கவனித்துப் பேசவேண்டும். அரங்கராவ் அவர் கள் மனம்போல் நாம் நடப்பதே உத்தமம். நான் கொடுக்கும் பத்திரத்

தை நீரே கொண்டுபோய் என் தங்கையிடம் கொடுத்துப் பத்திரத்துக் குச் சேரவேண்டிய தொகையை என்னிடம் பெற்றுக் கொண்டதாகச் சொல்வதோடு, நாளை நான் வந்து பார்ப்பதாகவும் சொல்லும். (என்று இருப்புப் பெட்டியைத் திறந்து பத்திரத்தைக் கொண்டுவந்து கொடுத் தார்.)

"உம்முடைய இஷ்டம்போல் செய்கிறேன்" என்று குப்புசாமிஐயர் விடை பெற்றுப் பத்திரத்தோடு சென்றார். அரங்கராவ் அவர்கள் கட்டளைப் பிரகாரம் நாம் நடந்தது நம்முடைய வரும்படியைச் சூனியமாக்கி விட்ட தென்று அவர் அறிந்தால், உடனே நம்முடைய தமையன் சொத்து நமக் குச் சேரும்படி தீர்மானஞ் செய்துவிடுவார் என்ற நம்பிக்கையோடு ஜெக நாத முதலியார் இருக்கும்பொழுது, நாகபூஷணம் சதவைத் திறந்து, அவர்கள் வந்துவிட்டார்கள்அழைத்துக்கொண்டு வருகிறதா? என்றான்.

ஜெகநாத முதலியார்.—நாகபூஷணம், நீ இன்று பெரும்பைத்தியக்காரனாய் விட்டாய். நான் அவர்களுக்காக நெடுநேரம் காத்துக்கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? அவர்களை வெளியில் நிறுத்தியா வைத்தி ருக்கிறாய்? அவர்கள் என்ன நினைத்துக்கொள்ளுவார்கள்? விரைவில் அழைத்துவா.

நாகபூஷணம் நீங்கியபின் தனக்கு அனேக வருடங்களாகப் பெரியதொகை யைக் கொடுத்துவந்த பத்திரம் நம் கையிலிருந்து போய்விட்டதே! நாளைவரும் பலாப்பழத்தைவிட இன்று கிடைத்த களாப்பழமே மே லென்றிராமல் பத்திரத்தைக் கொடுத்துவிட்டோமே! இனி நம்முடைய செலவுக்கென்ன செய்யப்போகிறோம் என்கிற எண்ணத்தால் துக்கத் தோடிருந்த ஜெகநாத முதலியார் ஒருவாறு சந்தோஷத்தை வலுவந்தத் தால் வரவழைத்துக் கொண்டிருக்கும்பொழுது, இரண்டு சுந்தரமான பெண்கள் வருவதைக்கண்டு, எதிர்சென்று இருவரையுங் கட்டித் தழுவி என்னை நெடுநேரம் என் கார்த்திருக்கச் செய்தீர்கள்? என்கண்மணிக ளே! என்று இருவரையும் முத்தமிட்டார்.

முதல் பெண்.—நான் நெடுநேரம் பாலாமணிக்காகக் காத்திருந்ததால் என் மேல் தப்பிதமில்லை.

பாலாமணி.—தாங்கள் எங்கள் இருவருக்கும் செய்து கொடுத்திருந்த ஒட்டி யாணங்களில் என் ஒட்டியாணத்தின் கொக்கி வளைந்து கொண்டதால் அதைத் தட்டானிடம் கொடுத்திருந்தேன். அவனால் நேரமானதே யன்றி ரூபாவதி சொல்வதுபோல் என்னால் நேரமாகவில்லை.

ஜெகநாத முதலியார்.—நீங்கள் முன்னேரத்தில் வந்து விடுவீர்களென்றே சாப்பாடு முதலானதும் சித்தஞ் செய்ய உத்தரவளித்திருந்தேன். இப் போது சித்தஞ்செய்யச் சொல்லுகிறதா?

நபாவதி.—நாங்கள் சாப்பிட்டே வந்தோம். ஆயினும் தங்களுடைய மனம் சந் தோஷமடைய உட்கார்ந்து எழுந்திருக்கிறோம்.

ஜகநாத முதலியார்.—பாலாமணி ! நீ என்ன சும்மா இருக்கிறாய் ?

பாலாமணி.—உங்கள் மூத்தமனைவி சொல்லும்பொழுது நான் என்னசொல்ல இருக்கிறது ? (என்று சிரித்தாள்.)

நபாவதி.—மூத்த மனைவியின்மேல் நாயகனுக்கு ஆசை குறைவுபட்டு இளைய வள்மேல் அன்பு அதிகரிப்பது சகஜமா யிருப்பதால், தங்களுடைய அன் புக்காசைப்பட்டுப் பாலாமணி இளையமனைவியாக எண்ணங்கொண் டாள். அதனால் தங்களுடைய அன்பு பாலாமணிமேல் அதிகமாயிருக்கிற தென்று சொல்லாமலே விளங்குகிறது. அதைப் பாலாமணியும் ஒப்புக் கொண்டாள்.

பாலாமணி.—நான் இளைய மனைவியாக இருப்பது உனக்குச் சம்மதம் இல் லாத விஷயத்தில் நானே மூத்தமனைவியாக இருக்கிறேன். நீயே இளைய மனைவியாக இருந்து அத்தான் அன்பைக் கைக்கொள். (என்று நபாவதி யைப் பார்த்துச் சொன்னாள்.)

நபாவதி.—நாயகன் அன்பிருந்தால் பிரயோசனமில்லை. அதிகாரம் இருந் தால் போதுமென்று மூத்தமனை விக்குண்டாகிய சர்வ அதிகாரத்தையும் நீயே ஒப்புக்கொள்ளவா பார்க்கிறாய் ?

பாலாமணி.—தலைக்குப்போட்டால் நபாவதி காலுக்குத் திருப்புவாள் காலுக்குப்போட்டால் அதைத் தலைக்குத் திருப்புவாள். அவளைப் பேச்சில் வெல்ல யாரால் முடியும் !

நபாவதி.—அத்தான் ! அத்தான் ! என்னை ஓர் மூடச்சிறுக்கி யென்று பாலா மணி குறிப்பித்ததைப் பார்த்தீர்களா ?

ஜகநாத முதலியார்.—பாலாமணி அவ்விதம் சொல்லவில்லையே ! எப்பொ முது சொன்னாள் ?

பாலாமணி.—அத்தான்! பார்த்துக்கொள்ளுங்கள். தங்களுக்கு முன்னிலையி லேயே என்மேல் பழிபோடுகிறாள். இவ்விதமாகவே என்மேல் அடிக் கடிக் குற்றம் சுமத்துகிறாள்.

நபாவதி.—அத்தான்! நான் பழிபோடுகிறதையும் குற்றம் சுமத்துகிறதையும் சற்றுக் கவனித்துப்பாருங்கள். காலுக்குப்போடுகிறது செருப்பு ; தலைக் குப்போடுவது குல்லாய் இவைகளை மாற்றிப்போடுவோர் யார்? தலைக் குப் போடும் குல்லாயைக் காலில் போட்டும், காலில் போடும் செருப் பைத் தலையில் போட்டும் இருப்பவனைத் தாங்கள் கண்டால் தாங்கள் என்ன சொல்லுவீர்கள் ? அவர்களை மூடரிலும் பெரு மூடர் என்று சொல்லமாட்டீர்களா ?

பாலாமணி.—ரூபாவதி! உன்னோடு வார்த்தையாடி வெல்ல என்னால் முடியாதென்று முன்பே அத்தானிடம் சொல்லியிருக்கிறேன். நான் பேச வில்லை. வாயை மூடிக்கொண்டேன்.

ரூபாவதி.—நான் பெரும்பட்டி. என்னோடு பேசுவது தகாதென்றே வாயை மூடிக்கொண்டாய்?

பாலாமணி.—இதேது! பெரிய வம்பாய் முடிந்தது. நான் பேசுகிறேன். அம்மா!

ரூபாவதி.—நீ பேசினால் அதற்குத்தக்கவிடைசொல்ல என்னால் முடியாதென்றே பேசத்துணிந்தாய்? நான் கிழச்சிறுக்கி; நீ அப்படியில்லாது சிறிய பெண்ணாயிருக்கிறாயென்பதை என் அத்தானுக்குக் குறிப்பித்துக் காட்டவா என்னை "அம்மா" என்றழைத்தாய்?

ஜகநாத முதலியார்.—ஏதேது! உங்களிருவரையும் சற்று நேரம் பேசவிட்டால் வீண்சண்டை உண்டாகும்போல் காணப்படுகிறது.

என்று இருவரையும் தழுவிக்கொண்டு சாதம் பரிமாறி யிருக்கும் அறைக்குள் அழைத்துச்சென்று உட்காரவைத்து நாம் மூவரும் ஒன்றாய் இருந்து சாப்பிடலாமா? என்றார்.

ரூபாவதி.—நான் இவளோடு உட்கார்ந்து சாப்பிடமாட்டேன்.

பாலாமணி.—நானும் இவளோடு உட்கார்ந்து சாப்பிடமாட்டேன்.

ஜகநாத முதலியார்.—நீங்கள் இருவரும் இன்னும் கோபமாயிருந்தால் எனக்கும் சாப்பாடுவேண்டாம்.

ரூபாவதி.—தங்களைப் பட்டினியாயிருக்கும்படி செய்யவா நாங்கள் வந்தோம்? வேண்டாம். வேண்டாம். நாங்களும் சாப்பிடுகிறோம்.

பாலாமணி.—அத்தானைப் பட்டினியாகப்போட்டு நாம் உயிரோடிருக்கவா? எல்லாம் ஒன்றாயிருந்து சாப்பிடலாம்.

ஜகநாதமுதலியார் சந்தோஷமடைந்து பெரிய இலையொன்று போடச் செய்து மூவரும் ஒன்றாய் இருந்து ரூபாவதியும் பாலாமணியும் தங்கள் எச்சிலை ஜகநாதமுதலியாருக்கு ஊட்டவும், தாசிகளுடைய வாயை எவரும் துப்பும் தம்பலப்பாத்திரத்திற்கு ஒப்பிட்டிருப்பதை நினையாமல், அவர்களுடைய எச்சிலை அமுதமாக உண்டு, தம்முடைய எச்சிலை அவர்களுக்குகொடுத்து விளையாட்டோடு போஜனத்தையுண்டபின், இருவரையும் சற்றுநேரம் பாடும்படிசெய்து, பின் பல விதகேளிக்கையில் இரவைக்கழித்தார். பொழுது நன்றாய் விடியுமுன் இருபெண்களும் ஜகநாதமுதலியாரிடம் விடைபெற்றுப் போகும்பொழுது ரூபாவதி பாலாமணியைப்பார்த்து நாம் இராத்திரி

இதை யார் எழுதியிருப்பார்கள் (128ம-பககம பார்சக)

பேசியதைக்கண்டு முதலியார் உண்மையாகச் சண்டைபோட்டுக் கொண்டோமென்றே நினைத்திருந்தார்.

பாலாமணி.—ஆம் ! ஆம் ! அதை நான் சண்டுகொண்டே எனக்குக் கோபம் அதிகம் உண்டானதுபோல் பேசினேன். இன்று அவர் அடிக்கடி பெரு மூச்சுவிட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தாயா ?

நபாவதி.—தூண்டிற்காரனுக்கு மிதப்பைமேல் கண்ணில்லாமல் வேறிடத் தில் போகுமா ? அவர் சந்தோஷமாயிருந்தால் நான் ஒன்றுங் கேளா மல் வந்திருப்பேனே ? அவருடைய தமையன் பூஸ்திதியெல்லாம் அவரைச் சேரப்போகிற பிரஸ்தாபம் அதிகமாக இருக்கிறது. ஆடு கொழுக்கிறதெல்லாம் இடையனுக்கு இலாபம் என்பதுபோல முதலி யார் கையில் பொருள் அதிகப்பட்டால் நமக்கு இலாபமே !

பாலாமணி.—ஆம் ! ஆம் ! ஆளுக்கோர் ஐம்பது வேலியாவது தட்டிக்கொள் ளவேண்டும். முதலியாருக்குக் கொஞ்சம் சாராயம் கொடுத்துவிட்டு, எதில் கையொப்பம் வைக்கச்சொன்னாலும் தடைசெய்யார்.

நபாவதி.—நீ பெரும் பைத்தியக்காரி ! நம்முடைய வாக்கைக் குருவாக்காக எண்ணும் முதலியாருக்குச் சாராயமேன் ? அவர் சாராயங் குடித்தால் சூதாடுமிடத்திற்கு ஓடிவிடுவாரேயன்றி நம்மோடு நெருங்கி வார்த்தை யாடார்.

பாலாமணி.—முதலியார் என் தாயாரை வைத்திருந்தபொழுது அளவற்ற திரவியத்தை என் தாயாருக்குக் கொடுத்ததாக என் தாயார் சொல்லி யிருக்கிறாள்.

நபாவதி.—ஆம் ! உங்களுடைய வீட்டில் கொள்ளைபோகாமலிருந்தால் நீ பெரும் பணக்காரியாக இருந்திருப்பாய்.

பாலாமணி.—ஆம் ! என்னசெய்கிறது ! என் தாயார்தேடிய சொத்துக்கள் அவளோடு தொலைந்தன. நம்மவர்களில் அநேகர் முதலியாராலும் சூதாடி இரத்தினத்தாலும் பொருள் தேடிக்கொண்டார்களென்று கேள்வி.

நபாவதி.—சூதாடி இரத்தினம் இப்பொழுது எங்குங் காணப்படவில்லையே. அவன் சமாச்சாரம் ஏதாகிலும் தெரியுமா ?

பாலாமணி.—அவன் ஓர் தனவந்தன் மகளை விவாகம் செய்துகொள்ளவேண் டிய ஏற்பாடுகள் பண்ணி அது தவறினபின் கடன் அதிகப்பட்டு வெளி வராமல் இருப்பதாகக் கேள்வி. அவனும் முதலியாரைப்போல் பெரிய மடையனேயன்றி வேறல்ல.

இவ்விதம் நபாவதியும் பாலாமணியும் வார்த்தையாடிக்கொண்டு அவரவர் வீடு சேர்ந்தார்கள்.

காலை எட்டுமணிக்கு நடராஜமுதலியாரும் செழுங்கமலமும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்பொழுது கமலாக்ஷி அவர்களுக்குக் காப்பிகொண்டு வந்து கொடுத்தாள். அத்தருணத்தில், அம்மா! செழுங்கமலம்! என்றழைத்துக்கொண்டு, ஜெகநாதமுதலியார் வீட்டுக்குள் வந்தார். செழுங்கமலம் தமையனைப்பார்த்து, அண்ணா! வாருங்கள்! எங்களுக்கு நற்காலம் பிறந்ததென்று காட்டத் தாங்கள் இவ்வளவுதூரம் வந்தீர்கள், உட்காருங்கள், என்று ஒரு நாற்காலியைக் கொண்டுவந்துபோட்டாள்.

கமலாக்ஷி.—மாமா அவர்கள் நம்மை மறந்துவிட்டார்களென்றே நினைத்திருந்தேன், உட்கார்ந்து காப்பி சாப்பிடுங்கள். (என்று காப்பி கொடுத்தாள்.)

ஜெகநாத முதலியார்.—நான் சாப்பிட்டுவந்தேன்; ஆயினும் உன் கையால் கொடுப்பதைத் தடுக்கேன். (என்று வாங்கி உண்டு) நான் இதுபரியந்தம் வராமலிருந்ததன் காரணம் நீங்களே அறிந்திருக்கக்கூடும்.

செழுங்கமலம்.—தங்கள் கருத்தை எவ்விதம் அறியக்கூடும் அண்ணா? தங்கள் கருத்தை யாரிடத்திலாவது சொல்லியனுப்பியிருந்தால் அறிந்து கொள்ளக்கூடும்.

நடராஜமுதலியார் அவ்விடம் இருப்பதைக்கண்ட ஜெகநாத முதலியார் போகச் சம்மதப்படாமல் தம் தங்கையையும் கமலாக்ஷியையும் பார்த்து, உங்களிடத்தில் தனித்துப் பேசவேண்டியதால் வீட்டுக்குள் வாருங்கள் என்று அழைத்துச்சென்று, அங்கு உட்கார்ந்திருக்கும் கிழவன் யாரென்று கேட்டார்.

செழுங்கமலம்.—அண்ணா! அவர் ஒரு பரதேசி. அவர் பாதையில் கலைத்து விழுந்திருந்ததைக்கண்டு கமலாக்ஷி அழைத்து வந்தாள். அதுமுதல் அவர் நம்முடைய வீட்டில் இருக்கிறார்.

ஜெகநாத முதலியார்.—அவர் என்னகுலம்? உங்களுக்குத் தெரியுமா?

செழுங்கமலம்.—அவர் பெயர் நடராஜமுதலியார் என்பதால் அவர் நம்முடைய குலமாகவே இருக்கவேண்டும்.

ஜெகநாத முதலியார்.—அவர் முதலியார் என்று எப்படித்தெரியும்? அவர் சொன்னதை நம்பியா முதலியார் என்கிறாய்?

செழுங்கமலம்.—ஆம் அண்ணா! அவர் பொய் எதற்காகச் சொல்லவேண்டும்.

ஜெகநாத முதலியார்.—அவரைத் தரிந்தவர்கள் இந்த ஊரில் யாராகிலும் இருக்கிறார்களா?

செழுங்கமலம்.—ஒருவரையும் காண்கிலோம். அவர் எக்குலத்தவராயிருந்தாலும் நமக்கென்ன? நாம் கொள்ளப்போகிறோமா? கொடுக்கப்போகி

ரோமா? ஒன்றும் இல்லே. ஆதரவற்றிருப்பவர்களே ஆதரிப்பது பெரும் புண்ணியமே என்று நினைத்து அவரை உபசரித்து வருகிறோம்.

ஜெகநாத முதலியார்.—அவரை ஆதரிக்காமல் துறத்திவிடென்று சொல்லுவார் ஒருவரும் இல்லே. நான் இவ்விடம் வந்தபொழுது நான் இன்னு னென்று அறிந்தும், எழுந்து மரியாதை செய்யாமல் இருந்தது அசங்கியமாக இருக்கிறது. மற்றொருசாலத்தில் என்னைக் கண்டால் தக்கமரியாதை செய்யும்படி அவருக்குச் சொல்லிவையுங்கள். நான்கு பெரிய மனிதரோடு இருக்கும்பொழுது என்னைக் கண்டு மரியாதை செய்யாமலிருந்தால் அது எனக்கு மிக்க அவமானமாயிருக்கும். நேற்று இரவு எத்தனை மணிக்குக் குப்புசாமி ஐயர் பத்திரம் கொண்டு வந்தார்?

செழுங்கமலம்.—எந்த பத்திரம?

ஜெகநாத முதலியார்.—எந்த பத்திரமா! இராத்திரி சொண்டுவந்து கொடுத்தது இன்ன பத்திரம் என்று அறியாமலா வாங்கிவைத்துக் கொண்டாய்?

செழுங்கமலம்.—எந்த பத்திரத்தை வாங்கிவைத்துக் கொண்டேன்? யார் கொண்டுவந்து கொடுத்தது? இஃதென்ன தாங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!

ஜெகநாத முதலியார்.—உன் கிலங்களே ஒற்றிவைத்த பத்திரத்துக்கு நேற்று நான் பணங்கொடுத்துத் தீர்த்துவிட்டுப் பத்திரத்தை உன்னிடம் கொடுத்துவிடும்படியாயும், அச்சடன் இருந்தால் நான் இவ்விடம்வர ஒவட்கமாயிருந்ததாயும் சொல்லும்படி அனுப்பியிருந்தேன். அவர் இன்னும் கொண்டுவந்து கொடுக்காமலிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது! இராத்திரி நேரமாய்விட்டதால் காலையில் கொண்டுபோய்க் கொடுக்கலாம் என்று நினைத்திருக்கிறார்போல் காணப்படுகிறது. அவரை யழைத்துக்கொண்டு வருகிறேன். (என்று வெளியிற்போக எத்தனித்தார்.)

செழுங்கமலம்.—பத்திரத்துக்கொன்றும் அவசரமில்லே. தாங்கள் இன்று இங்கிருந்து சாப்பிட்டுப்போகலாம் அண்ணு.

கமலாக்ஷி.—ஆம் மாமா! சாப்பிட்டுபோகலாம்.

சாப்பாட்டுக்கென்ன! நான் போய்வருகிறேன், என்று நடராஜ முதலியார் இப்பொழுதாகிலும் மரியாதைசெய்கிறரா பார்க்கலாம் என அவரைப் பார்த்துக்கொண்டே ஜெகநாத முதலியார் சென்றார்.

செழுங்கமலம் நடராஜ முதலியாரிடம் வந்து, அண்ணு! இப்பொழுது இங்கு வந்தவரே என் தமையன் ஜெகநாத முதலியார்.

நடராஜ முதலியார்.—ஐயோ அம்மா! என்ன காரியம் செய்துவிட்டாய்! எனக்கொரு வார்த்தை சொல்லக்கூடாதா? நான் அவருக்கு ஒரு மரியா

தையும் செய்யவில்லையே ! அவர் என்னைக் கேவலமாக நினைத்துக் கொள்ளுவாரே ! நான் அவர் விஷயத்தில் பெரும் அபராதியானேன். (என்று துக்கப்பட்டார்)

செழுங்கமலம்.—தாங்கள் அவரை இன்னுரெனக் கண்டுகொள்வீரென்றே சொல்லாமல் இருந்தேன். தாங்கள் மரியாதை செய்யாமற் போனதால் தோஷம் இல்லை. அவர் எங்கள்மேல் தயவாய் நிலத்தைத் திருப்பி விட்டதாகவும், பத்திரத்தை இராத்திரியே கொண்டுபோய்க் கொடுக் கும்படி சொன்னதாகவும், பத்திரம் வந்து சேராததால் ஆளை அழைத்து வருகிறதாகவும் சொல்லிப்போயிருக்கிறார்.

கமலாக்ஷி.—அம்மா ! மாமாவின் வார்த்தையை நம்புவது கூடாது.

நடராஜ முதலியார்.—ஜெகநாத முதலியார் அனுவசியமாகப் பொய் சொல்ல வேண்டிய காரணம் தோன்றவில்லை.

கமலாக்ஷி.—செட்டியார் நமக்குப் பணங்கொடுப்பதாகக் கேள்விப்பட்டுப் பத்திரக்காரன் ஒடிப்போய்விட்டான் ; அவன் வந்தபின் வாங்கிக் கொடுக்கிறேனென்று சொல்லுவதற்கு அஸ்திவாரம்போட எண்ணி இங்கு வந்திருக்கக்கூடாதா ?

நடராஜ முதலியார்.—கமலாக்ஷி சொல்லுகிறதும் உண்மையாக முடிந்தாலும் முடியக்கூடும். நாம் அவசரப்பட்டு எந்தத் தீர்மானமும் செய்யக்கூடாது. எல்லாம் போகப்போகப் பார்த்துக்கொள்ளலாம்.

செழுங்கமலம்.—நாம் செட்டியாரிடத்தில் சடன்சேட்டது அவருக்கு எப் படித் தெரியும் ?

நடராஜ முதலியார்.—அம்மா! உன் தமையன் வார்த்தையை நம்பி நாம் வார்த் தையாடிக் கொண்டிருப்பதில் ஒரு பலனுமில்லை. வேறு விஷயத்தில் நமது கவனத்தைச் செலுத்தலே உத்தமம். (என்று அவர்கள் எண்ணத் தை வேறு விஷயத்தில் மாற்றி வார்த்தையாடிக்கொண்டிருந்தார்.)

ஜெகநாத முதலியார் வந்துபோன இரண்டுமணி நேரத்திற்குப்பின் நாக பூஷணம் செழுங்கமலத்தை யழைத்து, அம்மா ! குப்புசாமி ஐயர் இன் னும் அகப்படவில்லையென்றும், அவரைக் கண்டுபிடிக்க வேண்டிய முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் தங்களிடம் சொல்லி வரும்படி எஜமான் உத்தரவளித்தார் என்றான்.

செழுங்கமலம்.—அப்பா நாகபூஷணம் ! எனக் கதுவிஷயத்தில் மனச்சலிப் பில்லை. என் தமையனைச் சந்தோஷமாக இருச்சும்படி சொல். (என்று நாகபூஷணத்தை அனுப்பினாள்.)

12-ம் அத்தியாயம்.

நடராஜ முதலியாரும் செழுங்கமலமும் கமலாக்ஷியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது வைத்தியர் வந்து அம்மா, செழுங்கமலம்! உன் தமையன் ஜெகநாத முதலியார் இவ்விடம் வந்து போனதாகக் கேள்விப்பட்டேன், அது உண்மையா? என்று கேட்டார்.

நடராஜமுதலியார்.—எப்பொழுது கேள்விப்பட்டீர்? வைத்தியரே! இத்தனை நாள் பொறுத்து அதைக்கேட்க வந்தது ஆச்சரியமாக இருக்கிறது!

வைத்தியர்.—பெரியவரே! நான் கேள்விப்பட்டு நெடுநாளாயிற்று. நோயாளிகள் நால்வரைப் பார்த்து வருவதால் எனக்குக் கிஞ்சித்தும் சாவகாசப்படவில்லை. ஆனதால் இவ்விடம் வரத்தடைப்பட்டிருந்தது.

செழுங்கமலம்.—ஆம்! அண்ணு! அண்ணன் இவ்விடம் வந்து என்னுடைய நிலத்துக்காகக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்த்துவிட்டுப் பத்திரத்தை என்னிடம் கொடுத்துவிடும்படி பிராமணனை அனுப்பியதாகச் சொல்லிப், பத்திரம் வந்து சேர்ந்ததா என்று என்னைக் கேட்கவந்தார். நான் பிராமணனையும் பார்க்கவில்லை, பத்திரமும் கிடைக்கவில்லை என்ற பின், அவனைக் கொண்டுவருவதாகச் சென்றவர் மாதம் மூன்றாகியும் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை.

வைத்தியர்.—ஜெகநாத முதலியார் சொல்வது உண்மையாக இருக்கக்கூடும். சில மாதங்களாய் அவருடைய செலவு அதிகம் குறைந்துவிட்டதாக அனேகர் சொல்லுகிறார்கள். உன்னுடைய நிலத்தின் வரும்படி அவர் கையிலிருக்கும் பொழுது அவர் செலவுக்குக் கஷ்டப்படாமலிருந்து இப்பொழுது பிரயாசைப்படுகிறதாகக் கேள்வி.

நடராஜ முதலியார்.—நிலத்தை ஒற்றிவைத்து விட்டால் நிலத்தின் வரும்படி ஜெகநாத முதலியாருடைய செலவுக்கு எவ்விதம் உபயோகமாகும்? ஒற்றிவாங்கிய பிராமணன் அல்லவா வரும்படியை அனுபவிக்கவேண்டும்?

வைத்தியர்.—அந்த சமாச்சாரம் உங்கள் பரியந்தம் இன்னும் எட்டாமலா இருக்கிறது? ஒப்புச்சூப் பிராமணன்பெயரால் ஒற்றியாக எழுதிக் கொண்டதேயன்றி, எல்லா வரவு செலவும் ஜெகநாத முதலியாரே பார்த்து வந்ததாக அனேகர் சொல்லுகிறார்கள். பிராமணனும் ஏதோ பெற்று மாசூலை வசூல் செய்து அவரிடம் கொடுத்துவந்தானும்.

கமலாக்ஷி.—தாதா சொல்லுகிறது உண்மையாய் இராமற்போனால், அம்மாள் பதினாயிரம் கொடுத்து நிலத்தை மீட்டுக்கொள்ளுகிறே னென்று மாமாவுக்குச் சொன்னபொழுது தடைசெய்ய நியாயமில்லை அல்லவா?

நடராஜ முதலியார்.—தன் செலவைக் கருதியே நிலத்தை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். கமலாக்ஷி சொலவது முற்றிலும் நியாயமாகவே காணப்படுகிறது.

ரெங்கமலயர்.—பிராமணன் ஊரிலில்லாமல் போவானுகில் நிலத்தின் மாசூலை இப்பொழுது யார் வாங்குவார்கள் ?

நடராஜ முதலியார்.—மாசூலை அநேக வருடம் பிராமணனே தண்டல் செய்துவந்ததால், அவன் பெண்சாதி பிள்ளைகள் வசூல் செய்யக்கூடும்.

வைத்தியர்.—மாசூலைப் பிராமணரிடமாவது அவன் இனத்தாரிடமாவது கொடுக்கச்கூடாதென்று வக்கீல் மூலமாக ஜெகநாத முதலியார் தடை செயதிருக்கிறதாகக் கேள்வி. ஆனதால், பிராமணன் நேரில் வந்து தன் சுதந்தரத்தை விரும்பிக்காமல் மாசூலை ஒருவரும் பெற்றுச்கொள்ள முடியாது.

நடராஜ முதலியார்.—ஐயா வைத்தியரே ! அது எப்படியானலும் ஆகட்டும். நற்காலம் வரும்பொழுது தானே வரும். அது விஷயத்தைக் குறித்துப் பேசுவதால் செழுங்கமலத்துக்குச் சஞ்சலமாக இருச்கும். ஆனதால் அந்தப் பேச்சை நிறுத்தி முத்துக்குமார முதலியார் பெண்சாதிச்கு இப்பொழுது எப்படி யிருச்கிறதென்று சொல்லவேண்டும்.

வைத்தியர்.—முத்துக்குமார முதலியார் பெண்சாதியைக் குறித்துத்தானே கேள்விப்பட்டீர்? அவருடைய சமாச்சாரம் ஒன்றும் எட்டவில்லையா? பேச்சியாயி அம்மாள் தன் மருமகள் விஷயத்தில் செய்த கொடுமையை உலகத்தில் யாவரும கேட்டுப் பயங்கொண்டு, இனி மருமகள் விஷயத்தில் கொடுமை செய்பவர்களெல்லாம் தன்னைப்போல் துன்பப்பட்டுச் சாகவேண்டுமென்று சாகுகிகாட்டுதல்போல், இன்னும் உயிரோடிருந்து எல்லா நரக வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறள். முத்துச்குமார முதலியாரும் தன் பெண்சாதி வார்த்தையைக் கேட்டு மருமகளை அடிச்சடி உதைத்துக்கொண்டிருந்த காலில் சிறிய சிரங்கொன்று உண்டாகி உள்ளுச்குள் சதையைத்தின்று கொண்டுபோய் இப்பொழுது எலும்பும் நரம்புமட்டும்தெரிகின்றன. காலை வெட்டி வைத்தியம் செய்தால் ஒரு வேளை குணமாகும் என்றேன். அதற்கு அவர் சம்மதிச்சவில்லை. அவர்களிருவரும் இவ்வித துன்பப்படுவதைக் கண்டவர்கள் அவர்களுக்காகப் பரிதாபப்படாமல், மருமகள் வதையால் இந்தத் துன்பத்தை அனுபவிக்கிறார்களென்று அவர்களுக்கெதிரிலேயே சொல்வதோடு, யாராகிலும் மருமகளைத்திட்டினலும் அடித்தாலும் முத்துச்குமாரமுதலியார் சதியையும் அவர் பெண்சாதியின் சதியையும் நினைத்துக் கொள்ளுங்கள் என்றும் அவர்களை உதசரிச்கிறார்கள். மனேன்மணி தன் மாமனார் மாமியாரிடத்தில் பட்ட கஷ்டத்தைவிட ஆயிரமடங்கு அதிக

தன்பத்தை முத்துக்குமார முதலியாரும் அவர் பெண்சாதியும் அனுப விக்கிறார்கள். அவர் செழுங்கமலத்தைப் பார்க்கவேண்டுமென்று என்னை அழைத்து வரும்படி சேட்டுக்கொண்டார். நானும் ஒப்புக்கொண்டுவந் தேன். இனி செழுங்கமலத்தின் இஷ்டத்தை அறியவேண்டியதே.

செழுங்கமலம் —நான் வரத்தடையொன்று மில்லை. எப்பொழுது அழைத் துப்போகிறீர்கள் ?

வைத்தியர்.—அதைச்சுறிக்க முடியவில்லை. நான் கலியாண சுந்தர முதலி யார் வீட்டுக்குப் போகிறேன். அங்குபோனால் அவர் எப்பொழுது என் னைப் போகும்படி சொல்லுகிறாரோ தெரியவில்லை. அவர் வீட்டிலிருந்து வந்தவுடன் உன்னை அழைத்துப்போகத்தடையில்லை.

நடராஜ முதலியார்.—ஐயா வைத்தியரே ! நீர் வருமளவும் சாத்துக்கொண்டி ருப்பதிற் பிரயோசனமில்லை. நானும் செழுங்கமலமும் பார்த்துவருகி றோம். நேரமிருந்தால் அப்படியே கலியாணசுந்தர முதலியார் வீட் டுக்கு வருகிறோம்.

வைத்தியர்.—அது நல்லயோசனை. மணி பதினொன்றாகிறது. நானும் போய் வருகிறேன்.

செழுங்கமலம்.—அண்ணா ! நாம் சாப்பிட்டுப்போவதே உத்தமம். வந்து சாப் பிட அதிக நேரமாய்விடும்.

நடராஜ முதலியார்.—ஆம் அம்மா! கமலாக்ஷி! எங்களுக்குச் சாப்பாடுபோட்டு விடு. நாங்கள் வருமளவும் என்ன செய்யப்போகிறாய் ?

கமலாக்ஷி.—ஏதாகிலும் வாசித்துக்கொண்டிருக்கிறேன். யாவும் சித்தமா யிருக்கிறது ; எழுந்திருங்கள். (என்று கை கால் சுத்திசெய்துகொள்ள ஜலங்கொடுத்து இருவருக்கும் வட்டித்து நின்றாள்.)

இருவரும் சாப்பிட்டுக் கமலாக்ஷியைப் பத்திரமாக இருக்கச்சொல்லி முத் துக்குமார முதலியார் வீடு சேர்ந்தார்கள். சோமசுந்தரம் வெளியிலிரு ந்து வீட்டுக்குள் போகும்போது நடராஜ முதலியாரும் செழுங்கமலமும் தங்கள் வீட்டுக்கு வருவதைக்கண்டு எதிர்சென்று அழைத்துத் தன் தந்தை படுத்திருக்கும் அறையில் விட்டான்.

முத்துக்குமார முதலியார் நடராஜமுதலியாரையும் செழுங்கமலத்தையும் பார்த்து, ஐயா ! ஊம் ஊம். அம்மா ! ஊம். ஊம். வாருங்கள். ஊம். ஊம் உட்காருங்கள். ஊம். ஊம். ஐயோ ! அப்பா ! ஊம். ஊம். என் கால்வலி ஊம். ஊம் பொறுக்க ஊம். ஊம். முடியவில்லையே ! ஊம். ஊம். நான் என்ன ஊம். ஊம். செய்யப்போகிறேன்! ஊம். ஊப். அந்தப்பாவி ஊம் ஊம். என்காலை. ஊம். ஊம். அறுத்துவிட ஊம். ஊம். சொல்லுகிறானே!

ஊம். ஊம். என்கால் போனபின் ஊம். ஊம். என்ன செய்வேன்! ஊம். ஊம். ஐயா! நான் ஊம். ஊம். பிழைத்துக்கொள்ளுவேனு? ஊம். ஊம். அம்மா செழுங்கமலம்! ஊம். ஊ ர். என்னைப் பேசவிடாமல் ஊம். ஊம். இந்த நோய் காலைத் தூளைத்துக்கொண்டிருக்கிறது. ஊம். ஊம்.

நடராஜ முதலியார்.—ஐயா! தாங்கள் விரைவில் சொஸ்தப்படுவீர். ஒன்றுக்குங் கவலைகொள்ளவேண்டாம். சோமசுந்தரம்! பெரியவருக்குத் தேக அசௌக்கியமாக இருக்கிறதென்று இன்று வைத்தியரால் கேள்விப் பட்டதேயன்றி இதற்குமுன் தெரியாது. கால் இப்பொழுது எப்படி இருக்கிறது?

சோமசுந்தரம்.—அப்பாவுக்குக் குதிக்காலில் கொப்புளங்கண்டு அது உள்ளுக்குள் வீனைகொண்டு கண்டச்சதை பரியந்தம் தின்றுகொண்டுவந்து விட்டது. முழங்கால் பரியந்தம் எடுத்துவிட்டால் உத்தமமென்று யாவரும் சொல்லுகிறார்கள். அப்பா சம்மதிக்கவில்லை.

முத்துக்குமார முதலியார்.—காலையா அறுக்கப்பார்க்கிறீர்கள்! ஊம். ஊம். அது மட்டும்வேண்டாம். ஊம். ஊம். எனக்கு வினாவில் சௌக்கியமாய் விடும். ஊம். ஊம். அந்தக் கழுதையை உதைத்தபொழுதே ஊம். ஊம். குதிக்கால் நொந்தது. ஊம். ஊம். என்னவோ நோகிறதென்றிருந்தேன். ஊம். ஊம். அது பெருந்தொந்தரவைக் கொடுத்துவிட்டது. ஊம். ஊம்.

அச்சமயத்தில் காளியாயியும் அவ்விடம்வந்து செழுங்கமலத்தைப் பார்த்து வாருங்கள் என்றாள்.

செழுங்கமலம்.—அம்மா காளியாயி! அண்ணனுக்குச் சாப்பாடு ஏற்றுக் கொள்ளுகிறதா?

காளியாயி.—கோச்சாடு நோக்காடுதான். சாப்பாடு எப்போதும் போலவே. வழக்கம்போல் கிழவனுக்குச் சாப்பிட என்னசேடு! ஒரு படியரிசி சமைத்துப்போட்டாலும் விழுங்கி என் குடியைக்கெடுக்க இருக்கிறான்.

சோமசுந்தரம்.—அப்பா சாப்பிடுகிறதனாலேயா உன்குடிகெட்டுப்போகிறது?

காளியாயி.—என் குடியைக் கெடுக்காமல் வேறு யார் குடியைக்கெடுக்கக் கிழச்சாவான் இருக்கிறான்! ஒரு நாளைக்கு மூன்றுதரம் முறம் முறம் நான் வாரிக்கொட்டுகிறேனு வேறு யாராகிலும் வந்து வாரிக்கொட்டுகிறார்களா? உன் பெண்சாதி வீட்டைவிட்டுப் போனவுடன் நான் உன்னிடம் வந்து அவளை அழைத்துவர வேண்டியதற்கு, என் குடியைக் கெடுக்க நீயும் மாட்டேன் என்றாய்.

இனி இவ்விடம் காளியாயி இருந்தால் சகோதரனுக்கும் சகோதரிக்கும் வார்த்தை வளருமென்று காளியாயியின் கையைச் செழுங்கமலம் பிடித்து, உன் தாயார் எங்கிருக்கிறார்கள்? பார்த்து வரலாம் வாவென்று

இருவரும் சென்றார்கள். காளியாயி ஓர் அறைக்கெதிரில் நின்று இந்த அறையில் அவள் படுத்துக்கொண்டு என் உயிரை வதைத்துக் கொண்டிருக்கிறாள்; சாதம் சாப்பிடாமல் கஞ்சி குடிப்பதால் அடிக்கடி ஒருபடி அம்மாளுக்கு எடுத்து ஊற்றவும், அப்பாவுக்கு முறம் முறம் வாரி எடுக்கவும், மற்றவர்களுக்கு அவித்துக் கொட்டவும் இவர்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன்; இவள் மருமகளைப் படித்தின பாட்டாலும் பேசிய பேச்சாலும் நாக்கில் பிளவை புறப்பட்டதோடு கால்கை உதவாமலும் போயின. எனக்கேனம்மா இந்த வில்லங்கம்! கிழவனும் கிழவியும் மாண்டால் இவர்களுடைய ஆஸ்திபை எனக்கா கொடுக்கப் போகிறார்கள்? எல்லாம் அவனைச் சேரப்போகிறது. நான் இவர்களுக்காகக் கஷ்டப்படுவதில் ஒரு பிரயோசனமும் இல்லை. இந்தக் கிழநாறி அந்தக் கிழப்பையலிடம்பேசி ஏதாகிலும் கொடுக்கச் சொல்லுவாள் என்று எண்ணினாலும் இவளுடைய வாயடைந்து போய்விட்டது. நான் தோட்டிவேலை செய்து கஞ்சி குடிக்கவா இவர்கள் வீட்டுக்கு வந்தேன்? என்று தன் குறைகளைச் சொல்லி, எனக்கிங்கிருக்க மனமில்லை, நாளையே என் மாமியார் வீட்டுக்குப் போகிறேன்; இவர்கள் இருந்தால் என்ன! இறந்தால் எனக்கென்ன! நான் செய்கிறவேலை யெல்லாம் செய்த பின்னும் அண்ணனுக்கு முழுநீளம் கோபம் வருகிறது என்று அழுதாள்.

காளியாயி தன் தந்தைதாய் விஷயத்தில் கொண்டிருக்கும் அருவருப்பைச் செழுங்கமலம் கண்டு, அம்மா காளியாயி! நீ உன் தாய் தந்தைமேல் கோபம்கொள்ளலாமா? கோபங்கொள்ளுகிறதாக இருந்தாலும் அவர்கள் பாயும் படுக்கையுமா யிருக்கும்பொழுது அதை வெளிக்குக் காட்டலாமா? தாய் நலியாயிருக்கும் பொழுது விலகிய வஸ்திரத்தை எடுத்து மூடத் தன் மகள் அருகில் இருக்கவேண்டுமென்று உலகில் சொல்லுவார்களே? அதை நினையாமல் இவ்விதம் பேசுவது அழகா? என்று பேச்சியாயி அம்மாள் அருகில் உட்கார்ந்து, அண்ணி! தங்களுக்கெப்படி இருக்கிறதென்றாள். பேச்சியாயி அம்மாள் பேச வகையில்லாமல் வாயையும் கையையும் காலையும் ஒரு கையால் காண்பித்துப் பேசாமலிருந்தாள். செழுங்கமலம் கஞ்சி சாப்பிட்டீர்களா என்று கேட்டாள். அதற்குக் காளியாயி, கஞ்சியா! மணிக்கொருதரம் அரைப்படி குடிப்பாள், ஒருபடி கறந்து வைப்பாள் என்றாள். மகள் சொல்வதைக் கேட்ட பேச்சியாயி அம்மாள் கண்களில் நீரை வடிய விட்டாள். காளியாயி பேசுவதைக் கேட்க்கச் சகியாமல் செழுங்கமலம் அவ்விடத்தைவிட்டு நடராஜ முதலியார் இருக்கும் இடம் வந்து, அவ்விடம் நின்றிருந்த சோமசுந்தரத்தைப்பார்த்து, அப்பா! இத்தருணத்

தில் உன் மனைவியையும் அனுப்பிவிட்டாய்; மனோன்மணி இருந்தால் உதவியாயிருக்காதா ? என்றாள்.

சோமசுந்தரம்.—அத்தை ! நான் என்ன செய்வேன் ! எல்லாம் தங்களுக்குத் தெரிந்ததே ! எனக்கு மனோன்மணியின்மேல் கொண்டிருக்கும் வெறுப்பைக் கவனியாமல் அவளுடைய தாய் வீட்டுக்கு ஒருவனை அனுப்பி அவளை அழைத்துவரச் சொன்னபோது, அவன் அவளுடைய தாய் வீட்டில் இல்லையென்று வந்தான். அவளுக்குத் தாய் தகப்பன் இல்லாதது தங்களுக்குத் தெரியும் அல்லவா ? அவளுடைய சகோதரி சிந்தாமணியையாவது கண்டு கேட்கச் சொல்லலாம் என்றால் அவள் புருடனுக்குப் பயந்துபோன இடம் தெரியவில்லை. அவள் தமையன் சிவப்பிரகாசமும் சில வருடங்களுக்குமுன் வீட்டைவிட்டுப் போனவன் எங்கிருக்கிறனென்று அறிந்து சொல்லுவாரில்லை.

நடராஜ முதலியார்.—உன்னுடைய உத்தரவில்லாமலா மனோன்மணி போய்விட்டாள் ?

சோமசுந்தரம்.—என் உத்தரவின்றியே அவள் போய்விட்டதைக் குறித்து எனக்கு வியசனமில்லை. அவள் வீட்டை விட்டுப்போனது எனக்கதிக சந்தோஷமே ! அவள் இங்கிருந்து என்தாய் தந்தை தங்கை இவர்களால் பட்ட பாட்டை நினைத்தால் என் கர்ப்பம் கலங்குகிறது. ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகத் தள்ளிவந்தாள். இந்தத் தீங்கெல்லாம் என் தங்கையால் வந்ததேயன்றி மற்றவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவது நியாயமல்ல. என்தாய் தன் மகள் சொல்லைக்கேட்டும் என் தந்தை தன் மனைவியின் சொல்லைக் கேட்டும் கொடுமையைச்செய்து மனோன்மணியைத் துறத்திவிட்டார்கள். தந்தையும் தாயும் இனி பிழைக்கமாட்டார்கள், தமையன் தயவைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று காளியாயி அம்மாள் மனோன்மணி விஷயத்தில் செய்யவேண்டியதை யெல்லாம் குறைவற முடித்துவிட்டு இப்பொழுது அவளுக்காகப் பரிதாபப்பட்டுத் தன்னை மிக்க பரிசுத்தமுள்ளவளென்று பார்க்கிறவர்கள் எண்ணப் பேசுகிறாள்; அவள் எண்ணம் எதுவாக இருந்தாலும், தாய் தந்தை மேல் மனவெறுப்பைக் காட்டாமலிருந்தால் இத்தனியில் என் தங்கையை என் குல தெய்வமென்றே எண்ணுவேன். மனோன்மணி மூவரிடத்தும் துயரப்பட்டிருந்தாள். இப்பொழுது நாங்கள் மூவரும் காளியாயி அம்மாளிடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறோம். விதியை வெல்ல எவராஸ் முடியும் ! என்று துக்கப்பட்டான்.

செழுங்கமலம்.—தம்பி ! உன் தந்தை தாய் மருமகள் விஷயத்தில் செய்த கொடுமையைக் காளியாயி கண்டு சகியாமல் தன் தாய்தந்தைமேல் அருவருப்பைக் கொண்டிருக்கிறாள் என்றே எண்ணினேன்.

சோமசுந்தரம்.—என் தந்தையும் தாயும் மருமகளைக் கொடுமையாக நடத்து கிறவர்களாயிருந்தாலும் என் தங்கை இவ்விடம் வராமலிருந்தால் மலை ன்மணி வீட்டைவிட்டுப்போக நேரிடாது. மலைன்மணிமேல் பரிதா பங்காட்டிப் பேசுவதெல்லாம் என்னை ஏமாற்றவேயன்றி வேறல்ல.

நடராஜ முதலியார்.—யாராகிலும் ஒரு ஆளைச் சிலநாளைக்கு வைத்துக்கொண் டால் இந்தத் தொந்தரவு இராதே ? அல்லது அண்டை அயலாரையா வது உதவிக்காக கூப்பிட்டுக் கொள்ளக்கூடாதா ?

செழுங்கமலம்.—புஷ்பவதியான பெண் எனக்குக் கால்கட்டா யில்லாமற் போனால் சில நாள் இவ்விடம் இருந்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொண்டிருப்பேன். இத்தருணத்தில் அவர்களுக்கு உதவி செய் யாமற் போவதைக் குறித்துத் துக்கப்படுகிறேன்.

சோமசுந்தரம்.—அத்தை ! உங்களுக்குள்ள அசௌகரியம் எனக்குத் தெரி யாததல்ல. அடுத்த வீட்டு அம்மாள் மனவெறுப்போடு ஒரு நாள் வந் திருந்தார்கள். அவர்கள் மறுபடியும் எட்டிப்பார்க்காமலிருக்க என்தங்கை மனம் போனபடி அவர்களைப் பேசினாள். இவ்விதமான குணமுள்ள தங்கையை வைத்துக்கொண்டு நான் யாரைப்போய்க் கூப்பிடுவேன் ! கேட்டசம்பளம் கொடுக்கலாமென்று ஒரு ஆளைத்தேடி திரிந்தாலும் ஒருவரும் அகப்படவில்லை. நான் என்ன செய்வேன் !

செழுங்கமலம்.—அண்ணா ! சலியாணசுந்தர முதலியார் வீட்டுக்குப் போக வேண்டும் என்றீர்களே ! போகவேண்டாமோ ?

நடராஜ முதலியார்.—ஆம். அம்மா ! போகவேண்டும். சோமசுந்தரம் ! ஆள் அகப்பட்டால் அனுப்புகிறோம். உன் தகப்பனார் ஸ்திதியை செய்வதால் அவரை யெழுப்பிச் சொல்லிக்கொள்ள இஷ்டமில்லை. நாங்கள் இரண் டொரு நாளையில வருகிறோம் என்று அவர் எழுந்தபின் சொல்லிவிடு. (என்று சோமசுந்தரத்திடமும் காளியாயி இடமும் விடைபெற்று வீட் டை விட்டு வந்தார்கள்.)

செழுங்கமலம்.—அண்ணா காளியாயியை என்ன தவம் செய்து பெற்றார்க ளோ தெரியவில்லை !

நடராஜ முதலியார்.—அம்மா ! எல்லாத் துர்க்குணமும் அவளிடத்தில் குடி கொண்டிருக்கின்றன. இவளுக்கென்ன தண்டனை கடவுள் விதிப்பா ரோ தெரியவில்லை !

செழுங்கமலம்.—சோமசுந்தரம் சற்புத்திரனாகக் காணப்படுகிறான். அவ னுக்குத் தன் பெண்சாதிமேல் வெறுப்புண்டாயிருக்கிறதுபோல் தோன் றுகிறது. காரணம் தெரியவில்லை.

புருடன் உத்தரவில்லாமல் போனதே அவனுக்கு வெறுப்பாயிருக்கலா மென்று நடராஜமுதலியார் சொல்லி மற்றும் பலபேச்சுகள் பேசிக் கொண்டே சலியாணசுந்தரமுதலியார் வீட்டுக்குள் நுழைந்தார்கள். மீனு க்ஷியம்மாள் செழுங்கமலத்தைச்சண்டவுடன், அம்மா! என் மகன் இன் னும் வரவில்லையே! நான் என்ன செய்யப்போகிறேன்! என்று அழுதாள்.

செழுங்கமலம்.—ஏனம்மா அழுகிறாய்? உன்மகன் வந்து விடுவான். அழ வேண்டாம். (என்று மீனுக்ஷியம்மாளுடைய கண்களைத் தன் முந்தானை யால் துடைத்தாள்.)

நடராஜமுதலியார் மற்ற அறையில் வைத்தியரோடு வார்த்தையாடிக் கொண்டிருந்த சலியாணசுந்தரமுதலியாரைக் கண்டவுடன் அவர் ஐயா! உட்காருங்கள். விஜயரங்கம் என்னை அநாதரவாக விட்டுப்போய்விட் டான். இனி நான் உலகில் உயிரோடிருந்தென்னபலன்! அவனைவிட் டுப்பிரிந்து மூன்றுமாதத்துக்சதிகமாயும் நான் இன்னும் உயிரோடிருக்கி றேனே! என்னைப்போல் கடின சித்தமுள்ளவர்கள் உலகில் இருப்பார் களா! என்றழுதார்.

நடராஜமுதலியார்.—ஐயா, நீர் எல்லாம் தெரிந்தவர். விஜயரங்கம் சிறுபிள் ளைத்தனமாய் முன் பின் யோசியாமல் உங்களைத் துக்கத்தில் விட்டுச் சென்றான். சென்றவன் எங்கிருக்கிறானென்று நாம் தேடிப்பார்ப்பதை விட்டு எக்காலத்திலும் துக்கத்திலிருப்பது நியாயமல்ல. விஜயரங்கம் சமிக்கயோக்கியன். நற்குணமுள்ளவன். ஒருவருக்குக்கெடுதல் செய் யக் கனவிலும் எண்ணுதவன். தாய் தந்தைமேல் அதிக அன்புள்ளவன். வினைப்பயனால் சில நாள் உங்களைவிட்டுப் பிரிந்திருக்கிறான். அவனுக்கு யாதொரு துன்பமும் அணுகாது. அவனுக்காக என் துக்கப்படுகிறீர்கள்? நீர் உமது மனைவிக்குத்தைரியம் சொல்லி அவர்களுடைய துக்கத்தை மாற்றுதல் அழகு. எல்லா நற்குணமும் நிறைந்த விஜயரங்கம் தகுந்த காரணமில்லாமல் உங்களை விட்டுப்போயிரான். ஆனதால் அவனைக் கண்டு பிடிக்கவேண்டிய முயற்சியே செய்யவேண்டும். அது விஷயத் தில் ஏதாகிலும் செய்தீரா?

கலியாணசுந்தர முதலியார்.—நான் அனேகரைப் பலவிடங்களுக்கு அனுப் பித்தேடிப்பார்த்து வரச்சொன்னதில், சிலர் வந்து அவன் எங்கும் காணப்படவில்லை என்றார்கள். எங்களைவிட்டுச் சென்ற விஜயரங்கம் உயிரோடிருப்பானுகில் இது பரியந்தம் ஒருகடிதமும் எழுதாமல் இருப் பானு? அல்லது தேடிப்போனவர்கள் பார்வையில் அகப்படமாட்டானு? அவன் இறந்துவிட்டானென்றே நினைக்கிறேன். (என்பதாகச்சொல்லிக் கண்களிலிருந்து நீரை உதிர்த்துக் கொண்டிருந்தார்.)

நடராஜமுதலியார்.—ஐயா ! விஜயரங்கம் இறந்துவிட்டானென்று சொல்ல என்மனம் துணியவில்லை. அவன் கடிதம் எழுதாமலும் தன் விஷயத்தை யறிய ஒரு சங்கதியும் உங்களுக்கு எட்டவிடாமலும் இருப்பதை யோசித்தால் அவன் முக்கியமான விஷயத்தைக் கருதிப்போயிருக்கிறவனைக் காணப்படுகிறது. எவ்விதமென்றால்-விஜயரங்கம் செழுங்கமலத்தம்மாள் வீட்டுக்கு வந்தகாலத்தில் அவனைச் சாப்பிட்டுப்போக வேண்டினால், தன்னுடைய தாயார் தானின்றிச் சாப்பிடார்களென்றும் அவர்களைக் காத்திருக்கவிட்டுத் தான் சாப்பிடக்கூடாதென்றும் வந்து விடுவான். உம்மைக்குறித்துப் பேசும்பொழுதெல்லாம் உம்மைவிட உத்தமர் உலகத்திலிருப்பது சஷ்டம் என்று சொல்லுவான். தாய் தந்தை மேல் அதிக அன்பைக்கொண்டவன் வீட்டைவிட்டுப் போகும்பொழுது ஒரு ரூபாய் மட்டும் எடுத்துக்கொண்டுபோன குறிப்பு தாய் தந்தை மேல் வேறுப்பாகப் போனதைக் காட்டவில்லை. வெறுப்பிருந்தால் அந்த ஒரு ரூபாயையும் எடுக்காமல் போயிருக்கவேண்டும். கெட்ட விஷயத்தை நாடிச் சென்றிருப்பானே என்று யோசித்தால் அதற்கும் இடம் கொடுக்கவில்லை. அவ்வித எண்ணம் இருந்தால் தன் கையில் அகப்பட்டதை யெல்லாம் கொண்டுபோயிருக்கவேண்டும். நாம் முக்கியமாக இரண்டு விஷயங்களைக் கவனித்து அதன் கருத்தை அறியவேண்டியதாயிருக்கிறது. அவைகள் எவையெனில்:—முதலாவது-ஒரு ரூபாய் மட்டும் எடுத்துப்போனதும், இரண்டாவது-கடிதம் எழுதாமல் இருப்பதுமே.

ஒருரூபாய் எடுத்துக்கொண்டுபோன விஷயத்தை யோசித்துப்பார்க்கலாம். ஒரு ரூபாய் நெடுநாளைக்கு வேண்டியதைக் கொடுக்காததால் அந்த ரூபாயைக் கைக்கொண்டது ஓரடையாளமாகவும் ஆபத்தில் உதவுமென்பதாகவுமே கைக்கொண்டதாகக் காணப்படுகிறது. தாய்தந்தையின் பொருள் தனக்கு ஆபத்தில் உதவவேண்டுமென்று கருதியதால் அவர்கள்மேல் கோபங்கொண்டு போனதாக நினைக்கலாமா ? நினைக்கக் கூடாது. இரண்டாவது-கடிதம் எழுதித் தான் இந்த இடத்திலிருக்கிறேன் என்று தெரிவிக்காமற்போனது உங்கள்மேல் பேரன்பைக் கொண்டிருக்கிறதைக் காட்டுகிறது. எவ்விதமெனில் விஜயரங்கம் கடிதம் எழுதித் தான் இன்ன இடத்திலிருக்கிறேனென்று தெரிவித்தாலும், தன்னிருப்பிடத்தை யறிவிக்காமல் கடிதம் எழுதினாலும் தபாலாபீஸ் முத்திரையால் இன்ன இடத்தில் இருக்கிறானென்று கண்டு அழைத்துக்கொண்டு போய்விடுவார்களென்றும், தான் அவர்களைக் கண்டால் உடன் செல்லத் தடைசெய்ய முடியாது கட்டாயம் போகவேண்டியதால் தெரிவிக்காமலிருப்பதே நன்றென்றும் எண்ணியிருக்கிறதைக் காட்டுகிறது. இவ்விரண்டு விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது விஜயரங்கம்

கடிதம் எழுதாததால் தாய் தந்தைகளுக்கு அடங்கினவனென்றும், அவர்கள் துணையை விரும்பியதால் ஒரு ரூபாய் கொண்டு போனனென்றும் விளங்கக் காட்டுகிறது. தாய் தந்தைகள் துணையை விரும்பியவன் அவர்களை விட்டுப்போவது அழகல்லவே! அவ்விதம் விட்டுப் போனதற்குக் காரணம் யாதென்று யோசித்தால், விஜயரங்கம் தன் தாய் தந்தைகளோடு இருப்பதில் அவனுக்காவது அவனைப் பெற்ற உங்களுக்காவது மனச்சலிப்பிருக்கிறதென்று காட்டுகிறது. அந்த மனச்சலிப்பை ஒழித்து விடுதல் நலமென்று அவன் வீட்டைவிட்டுப் போனதால், அவன் உங்களோடு இருப்பது உங்களுக்கே மனச்சலிப்பிருக்கிறதென்று வெளிப்படையாக இருக்கிறது. இதை யோசித்தறியாமல் நாம் அவன் பிரிவைப்பற்றித் துன்பப்படுவது நன்மையைத் தராது.

இதைக்கேட்டுக் கலியாணசுந்தர முதலியார் வைத்தியரால் தன் மனைவியை வரவழைத்து, மீனாக்ஷி! நாம் விஜயரங்கம் விஷயத்தில் நினைக்காததையெல்லாம் பெரியவர் சொல்லுகிறார். நமக்குண்டாகிய மனச்சலிப்பால் நம்மை விட்டு விஜயரங்கம் நீங்கினனென்று சொல்வதைக் கேட்டாயா? என்றார்.

மீனாக்ஷியம்மாள்.—ஐயா! ஐயா! என்ன சொன்னீர்கள்? எங்களுக் குண்டாகிய மனச்சலிப்பாலோ எங்களை விட்டு நீங்கினான்! ஐயோ! மகனே! அடா செல்வமே! ஏன் அவ்விதம் என்னிடத்தில் சொல்லாமல் பெரியவரிடத்தில் மட்டும் சொல்லிப் போனாய்! (என்று வயிற்றைப் பிசைந்துகொண்டு அழுதாள்.)

நடராஜமுதலியார்.—அம்மா! என்னிடத்தில் உன் மகன் ஒன்றும் சொல்லிப் போகவில்லை. விஜயரங்கத்தின்மேல் வீணாய்க் குற்றஞ் சுமத்தவேண்டாம்.

கலியாணசுந்தர முதலியார்.—மீனாக்ஷி! நம்முடைய விஜயரங்கம் பெரியவரிடத்தில் ஒன்றும் சொல்லவில்லை. அவரே அவ்விதம் சொல்லுகிறார்.

மீனாக்ஷியம்மாள்.—நாங்கள் விஜயரங்கம் விஷயத்தில் மனச்சலிப்பு கொண்டிருக்கிறோமென்று தங்களுக்கு எப்படித்தெரியும்?

நடராஜ முதலியார்.—நீங்கள் அவன் விஷயத்தில் மனச்சலிப்போடு இருப்பதும் இல்லாததும் எனக்குத் தெரியாது. விஜயரங்கம் ஒரு ரூபாயைக் கைக்கொண்டு போனதையும் அவன் கடிதம் எழுதாமலிருப்பதையும் யோசித்தால் உங்களுக்கு மனச்சலிப்பிருக்கிறதைக் காட்டுகிறது.(என்று சொல்லிக் கலியாணசுந்தர முதலியாருக்குச் சொல்லிய நியாயங்களையெல்லாம் மீண்டும் எடுத்துக்கூறினார்.)

மீனாக்ஷியம்மாள்.—ஐயா! விஜயரங்கம் துன்மார்க்க வழியில் நடந்தால் அவன் விஷயத்தில் எங்களுக்கு மனச்சலிப்பிருக்கவேண்டும். அவன்

அவ்விதம் நடக்காமலிருக்க நாங்கள் அவன் விஷயத்தில் சலிப்படையக் காரணம் வேறு என்ன இறுக்கிறது!

நடராஜமுதலியார்.—அம்மா! நான் அதை எவ்விதம் அறிவேன்? உலகவழக்கத்தை யோசித்தால் அவனுக்கு விவாகம் முடியவில்லையென்ற துக்கம் பெற்றோருக்கு இருக்கக்கூடும்.

மீனாக்ஷியம்மாள்.—(தன்நாயகனைப்பார்த்து) பெரியவருக்கும் நமக்குண்டாகிய எண்ணத்தைப்போ லிருக்கிறது பார்த்தீர்களா!

வைத்தியர்.—விஜயரங்கத்தைக் கண்டுபிடித்து அவனுக்கு விவாகம் முடித்து விட்டால் ஒருவரும் துன்பப்படவேண்டியதில்லை. நானே விஜயரங்கத்தைக் கொண்டுவந்து சேர்க்கிறேன். இனித் துக்கத்தைவிட்டுச் சந்தோஷமாக இருங்கள்.

செழுங்கமலம்.—(மீனாக்ஷியைப்பார்த்து) அம்மா! இனிமேல் நீங்கள் சந்தோஷமாக இருக்கலாம். வைத்தியர் விஜயரங்கத்தைக் கொண்டுவருகிறேன் என்றபின் உங்களுக்குக் கவலை யிருக்கவேண்டிய அவசியமில்லையே.

வைத்தியர்.—அம்மா செழுங்கலம்! நான் விஜயரங்கம் எங்கிருந்தாலும் கண்டுபிடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன். உன்மகளை விஜயரங்கத்துக்குக் கொடுக்கிறயா?

செழுங்கமலம்.—(சிரித்துக்கொண்டு) அண்ணா! நாங்கள் எளியவர்கள். தனவந்தர் எளியவர்கள்வீட்டில் பெண் கொள்ளச் சம்மதியார். அல்லாமலும், விஜயரங்கமும் கமலாக்ஷியும் அண்ணன் தங்கை என்கிற முறைவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வைத்தியர்.—முறைவைத்துக் கொண்டதால் தோஷம் ஒன்றுமில்லை. நான் விவாகம் செய்துகொள்ளுமுன் என் பெண்சாதியை சின்னயி என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தேன். விவாகப்பேச்சுநடக்கவே, சின்னயி என்ற முறை பறந்துபோய்விட்டது.

செழுங்கமலம்.—சிறிய தாயாரையா விவாகஞ்செய்து கொண்டீர்கள்? நான் அந்த அண்ணியைப்பார்த்தால், மகனேக்கட்டிக்கொண்டாய் என்று கேலி செய்யாமல்விடேன். (என்று சிரித்தாள்.)

அதுசேட்டு, என்தாய்வழியில் அவள் சிறிய தாயார் முறையாகவேண்டும். தாய்முறையோ நாய்முறையோவென்று, தசப்பன்வழியைப் பார்த்து விவாகஞ்செய்துகொண்டேன் என்பதாகக் கலியாணசுந்தரமுதலியாருக்கும் அவர் பெண்சாதிச்சும் நகைப்பை யுண்டாக்க வேடிக்கையாக வைத்தியர் பேசிக்கொண்டிருந்தார்.

13-ம் அத்தியாயம்.

நடராஜமுதலியாரும் செழுங்கமலமும் முத்துக்குமாரமுதலியார் வீட்டுக்குப் போனபின் கமலாக்ஷி தனித்து வீட்டிலிருந்து வாசித்துக்கொண்டிருக்கும்பொழுது சிறுவன் ஒருவன் வீட்டுக்குள் ஓடிவந்து கமலாக்ஷியம்மாள் என்பவள் யாரென்றான். கமலாக்ஷி என் தம்பி கேட்கிறாய்? நான்தான் கமலாக்ஷி என்பவள் என்று சொன்னவுடன் கடிதம் ஒன்றைக் கையில் கொடுத்தான். கடிதத்தை வாங்கிப்பார்த்து, இதையார் கொடுத்தது என்று கேட்கச் சிறுவனைத் தேடிப்பார்த்து அவன் இல்லாததைக்கண்டு, இதை யார் எழுதியிருப்பார்கள்? நமக்குக் கடிதம் எழுதத் தகுந்தவர்கள் ஒருவரும் இல்லையே! நம்மை அவமானப்படுத்த இக்கடிதத்தை யாராகிலும் எழுதி அனுப்பியிருக்கவேண்டும். இதைப் பிரித்து வாசிக்காமல் கிழித்தெரிவதே உத்தமம் என்று கிழிக்கப்போனவள் அதைக்கிழிக்காமல் ஒருவேளை நம்முடையமாமன்பத்திரத்தைக் கொண்டோடிய பிராமணனைக்குறித்து எழுதியிருக்கக்கூடும்; ஆனதால் வாசிக்காமல் கிழித்தெறிவது உத்தமமல்லவென்றும், மாமன் எழுதினால் நமது தாயாருக்கு எழுதியிருக்கவேண்டுமேயன்றி நமக்கு எழுத நியாயமில்லையே! இக்கடிதத்தை வைத்திருந்து தாயார்வந்தபின் வாசிப்பதே நலம் என்றும் எண்ணி, நாம் நினைத்ததுபோல் நம்முடைய மாமனிடத்திலிருந்து வராமல் முதலில் நினைத்தவிதம் நம்மை அவமானப்படுத்த எவராவது எழுதியிருந்தால் நாம் துக்கப்படுவதோடு நம்முடைய தாயாரையும் துக்கத்துக்கு உடன்படுத்த வேண்டிவருமே! நாமே முதலில் பிரித்துப் பார்த்து வேண்டியதைச் செய்வதே உத்தமம் என்று சிந்தித்துக் கொண்டே கடிதத்தைப் பிரித்தாள். அதில் அடியிற் கண்டவிதம் எழுதியிருந்தது:—

சிரஞ்சீவி சௌபாக்கியவதி கமலாக்ஷி யம்மாளுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

இரத்தினம் என்பவன் வேறு விதமாக வனசாக்ஷியை மோசம் செய்ய எண்ணங்கொண்டு யாவும் சித்தஞ்செய்து விட்டான். அதைத் தடுத்துக்கொள்ள அவர்களால் முடியாது. அதை உனக்குத் தெரிவித்தால் இரத்தினத்தின்எண்ணத்தைக் கெடுத்துவிடலாமென்று நினைக்கிறேன். அது இன்னதென்று அறிந்தபின் நான் கடிதத்தில் எழுதாமல் விட்டது நியாயமென்று எண்ணுவாய். உங்களுடைய வீட்டில் வெளியார் ஒருவரும் இல்லாதிருந்தால் இக்கடிதம் கொண்டு வரும் சிறுவனிடம் சொல்லியனுப்பவும். உடனே அவ்விடம் வருகிறேன். வெளியார் முன்வர எனக்குப் பிரியமில்லை. நான் இன்னும் சிலநாள் என் தாய்தந்தையர் பார்வையில் அகப்படாமலிருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதன் காரணத்தை நேரில் சொல்லுவேன். உன்னிடத்திலிருந்து பதில் வரும்வரவும்

ஐயா அம்மா ! இது என்ன ? சமஸ்கிருதமா ? இல்லை ! (பக்கம் 1)

புது ஊர்ப்பாதைக்கு எதிர்த்த தோப்பிலிருக்கிறேன். நாம் இரத்தினத்தின் தீச்செய்கையைக் கவனியாதிருந்தால் இன்றிராத்திரி வனசாக்ஷி மோசம் போய்விடுவாள். அதன்பின் நாய்வாய் வைத்த சட்டியை நாய்க்கே வைத்துவிடும் வழக்கம்போல் செய்யவேண்டிவரும். உடனே பதில் சொல்லி யனுப்பவும்.

மயிலாபுரி. } இப்படிக்கு
உன் பிரிய சகோதரன்,
விஜயரங்கம்.

கமலாக்ஷி இக்கடிதத்தை வாசித்து வீட்டைவிட்டு வெளிப்பட்டுச் சில தூரம் சென்று அங்கும் இங்கும் சிறுவனைத்தேடிக்கொண்டு, சிறுவன் காணப்படவில்லையே! நாம் யாரிடத்தில் பதில்சொல்லியனுப்புகிறது; காலதாமதமானால் காரியம் மிஞ்சிவிடும்போல் காணப்படுகிறது. நாமும் விஜயரங்கத்தண்ணன் நிற்கும்இடத்திற்குச்சமீபத்தில் வந்துவிட்டோம். நாமே சென்று அவரை யழைத்துப்போவதே உத்தமம். அவர் இருக்கும் இடத்திற்குப்போக நமக்குப் பயம் வரவேண்டிய காரணம் ஒன்றும் இல்லையே! என்று கடிதத்தில் குறிப்பிட்ட தோப்புக்குள் சென்றாள். தோப்பில் ஒருவரும் இல்லாததைக்கண்ட கமலாக்ஷி நாற்பக்கமும் சுற்றிப்பார்த்து மாடுகள் பூட்டிய வண்டி யொன்று சமீபத்தில் நின்றிருப்பதைக்கண்டு விஜயரங்கம் வண்டிக்குள்ளிருக்க வேண்டுமென்று வண்டிக்கருகில் வந்து அண்ணா என்றாள். உடனே மறத்திற் பதுங்கியிருந்த இருவர் ஓடிவந்து கமலாக்ஷியைப் பிடித்து அவள் வாயை மூடி வண்டியில் தூக்கிப்போட்டு ஒருவன் துணையாக வண்டியிலேறித் தன் குத்துவாளை யுருவி கமலாக்ஷி நெஞ்சில் வைத்து வாயைத்திறந்தால் உன்னைப் பிரேதம் ஆக்கிவிடுவேன் என்று பயமுறித்தினான். மற்றவன் வண்டியின் இருபக்கத்தையும் திரையால் மூடி வண்டியிலேறி மாடுகளை வேகமாக நடத்தினான். கமலாக்ஷி திகைத்துப் பட்டப் பகலில் இவ்விதம் செய்கிறவர்களும் உண்டா? என்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, வண்டி ஓட்டுகிறவன் அடே சாத்தா! குருவி எப்படியிருக்கிறது? என்று கேட்டான்.

சாத்தன்.—அடே! காத்தா! என் கையில் அகப்பட்ட குருவியும் தப்பிப் போகுமா? மணி பன்னிரண்டாய் இருந்தாலும் பலர் நடமாடுகிற இடமாயிருந்தாலும் நம்முடைய காலம் நற்காலமாக இருந்தால் நமக்கு ஒரு அபாயமும் நேரிடாது. (என்று சொல்லியபின் கமலாக்ஷியைப்பார்த்து) வண்டி காட்டுக்குள் வந்துவிட்டது. இனி கத்தினாலும் அழுதாலும் பிரயோசனம் இல்லை. ஏதாகிலும் தொந்தரவு செய்தால் வாயில் துணியை

அடைத்துக் கையும் காலையும் சட்டி உருட்டிவிடுவேன். (என்று குத்து வாளை உறையிற் போட்டுக்கொண்டான்.)

கமலாக்ஷி.—அடா பேயே ! என் உயிருச்சஞ்சி உங்களுக்குப் பயப்படுவேன் என்று எண்ணவேண்டாம். என்னை வண்டியில் போட்டுக்கொண்டு போகும்படி சொன்னவர் யார் ? விஜயரங்கத்தண்ணன் எங்கே ?

சாந்தன்.—அடே காத்தா! இந்தப்பெண் என்னைப் பேய் என்றது உன் காதில் விழுந்ததா ?

காந்தன்.—நாம் இருவரும் அந்தப் பெண்ணைப்போல் சிவப்பாய் இல்லாமல் கறுப்பாய் இருப்பதால் நம்மைப் பேயென்று கூப்பிட்டாள். (என்று சிரித்தான்.)

சாந்தன்.—ஏ பெண்ணே ! உன்னை மரியாதையாகக் கொண்டுபோக வேண்டுமென்கிற கட்டளை எங்களுக்கிருப்பதால் நீ யென்னைப் பேய் என்று சொன்னதற்குப் பொறுத்துக்கொண்டேன். எந்த விஷயத்தைக் குறித்து எங்களைக் கேட்டாலும் பதில் ஒன்றும் கிடைக்கமாட்டாது. ஆனதால் நீ யொன்றும் பேசாமலும் கேட்காமலும் இருப்பதே அழகு.

கமலாக்ஷி.—நீங்கள் ஒருவருடைய சொல்லுக்கடங்கி எல்லாவற்றிற்கும் துணிந்து பட்டப்பகலில் கொண்டுபோகிறவர்கள் பணத்துக்காசைப் பட்டன்றி வேறொன்றைக்கருதி இராது. நீங்கள் என்னைக்கொண்டு போய், குறித்த இடத்தில் சேர்த்துப் பரிசுபெறுவதைவிட இவ்விடத்திலேயே என் நகைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு என்னை விட்டு விடுங்கள். அது உங்களுக்குப் புண்ணியமாகும். நீங்கள் என் விஷயத்தில் செய்ததை நினையாமல் உங்களை எக்காலமும் புகழ்ந்து கொண்டிருப்பேன்.

சாந்தன்.—உன்னிடத்தில் கைக்கூலி பெற்று உன்னை விடுவோம் என்கிற எண்ணம் உனக்கிருந்தால் அதை விட்டுவிடு. நாங்கள் ஒருவருக்கு ஒரு காரியத்தைச் செய்கிறோம் என்று ஒப்புக்கொண்டபின் அதை முடிக்காமல் அதற்கு விரோதமாகப் பணத்துக் காசைப்பட்டுச் செய்யமாட்டோம்.

கமலாக்ஷி சாந்தனோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது அவனை எப்படி விட்டுத் தப்புவது என்று தனக்குள் யோசித்து, வண்டியிலிருந்து குதித்து ஓடுவதே உத்தமம்; மார்க்கத்தில் ஒருவரும் இல்லாமற் போவார்களா ? வழிப்போக்கரால் உதவி பெறலாம் என்று எண்ணிச் சமயம்பார்த்துக் கொண்டிருந்து, அப்பா ! நான் போட்டிருக்கும் நகைகள் மூந்நூறு நானூறுக்குக் குறையாதே. இவைகளை என் வேண்டாம் என்கிறீர்கள் ? நகையின்மேல் உங்களுக்கு விருப்பம் இல்லாமற்போனாலும் புண்ணியத்தைக் கருதியாவது செய்யக்கூ

டாதா ? என்று சொல்லும்பொழுது, சாத்தனுச்குத் தும்மல் வந்து தலேயை இரு கையாலும் பிடித்துக்கொண்டு குனிந்தான். கமலாக்ஷி இதைவிட நல்ல சமயங்கிடைக்காதென்று சாத்தனே வண்டியில் தள்ளி விட்டு வண்டியிலிருந்து குதித்து ஓடினுள். சாத்தன் உடனே குதித்துச் சற்றுநேரத்தில் ஓடிக் கமலாக்ஷியைப் பிடித்துக்கொண்டான். சாத்தனும் வண்டியைநிறுத்தி ஓடிச் சாத்தனுக்கு உதவிசெய்து கமலாக்ஷியைத்தூக்கிக்கொண்டு வரும்பொழுது " பாவிகள் என்னைக் கொல்லுகிறார்கள் " என்று சதறினுள். அவள் கதறியது ஒரு பிரயோசனத்தையும் தராமற் போயிற்று. கமலாக்ஷியைத் தூக்கிக்கொண்டு வந்த சாத்தன் அதிக கோபத்தோடு கமலாக்ஷியை வண்டியில் விட்டெறிந்தான். வண்டியில் வைக்கோல்போட்டு அதன்மேல் சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்ததால்கமலாக்ஷிச்குத்தேகத்தில் அடிபடாவிட்டாலும் தலேகுத்துக்காலில் பட்டதால் மூர்ச்சையாய் விழுந்ததுபோல் தோன்றினுள். சாத்தனும் வண்டியிலேறிப்பார்த்து இவள் செய்ததற்குத் தக்கதண்டனேபெற்றுள், நமக்கு வேறெருரு தொந்தரவும் கொடுக்காமல் மூர்ச்சையாயினுள் என்று, காத்தன் வண்டியோட்ட, சாத்தன் முன் உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்து, அடே காத்தா ! இவள் நம்மை ஏமாற்றப் பார்த்தாள் பார்த்தாயா ! என்ருன்.

காத்தன்.—நீ வண்டியில் விட்டெறிந்ததைப்பார்க்க எனச்குப் பயமாகவே இருந்தது. அவள் இறந்தால் நாம் நெடுநாள் சமயம் பார்த்ததும் அனேக தந்திரங்கள் செய்ததும் நல்ல காலத்தினுல் இன்று செய்த யோசனே கைகூடியது பிரயோசன மில்லாமற் போய்விடும் என்றே எண்ணினேன்.

சாத்தன்.—வண்டியில் வைக்கோல் போட்டிருப்பதால் அடி படாதென்றே விட்டெறிந்தேன். அடி படும் என்று நான் நினேக்கவில்லே. ஆயினும் பட்ட அடியால் மூர்ச்சையானுள். அது நமக்கனுகூலமே. மூர்ச்சை தெளிய நெடுநேரம் செல்லும். இவள் சொல்லியபடி நகைகளேப் பெற்றுக்கொண்டு துரத்திவிட்டால் நன்ருயிருக்காதல்லவா ?

காத்தன்.—அவ்விதம் செய்தால் நம்மை யார் நம்புவார்கள்? ஒருவரும் நம்பாமற்போனுல் நமக்குப் பிழைப்பேது ? பிழைப்பில்லாமற்போனுல் நம்முடைய பெருஞ்செலவுச்கு என்ன செய்வோம் ! வாலிப முதல் சம்பாதித்ததை வீண்செலவு செய்யாமல் சேர்த்து வைத்திருந்தால் பெரும் பணக்காரராயிருக்கக் கூடுமே !

சாத்தன்—கப்பலேறிப்போய்ச் செய்து வந்த காரியத்திற்சாகக் கிடைத்த பொருள் கொஞ்சமா ? இரண்டாவது – குழந்தையை மூடித்துவிடக் கிடைத்த தொகையும் கொஞ்சமல்ல. மற்ற விஷயங்களில் தேடியதும் சிறு தொகையல்லவே ! (என்று பெருமூச்சு விட்டான்.)

காந்தன்.—அடே சாத்தா ! அந்தக் குழந்தையைக் கொண்டுபோய் முடித்து விடப் போலேமே. அது எத்தனே வருடத்திற்கு முன்னல் என்று உனக்கு ஞாபகம் இருக்கிறதா ? அதனல் நமக்கு நல்ல இலாபம் கிடைத்தது. நான் முதலில் அவரை நம்பவேயில்லே. அவர் பெய ரென்ன ? அவர் பெயர் எனக்கு ஞாபகத்தில் நிற்கிறதில்லே.

சாத்தன்.—அவர் பெயரை நினைக்கவேண்டாம் என்று உனக்கு அனேக முறை சொல்லியிருக்கிறேன். எத்தனே வருடம் என்று எனச்கு நன் ருய் ஞாபகம் இருக்கிறது. கப்பலேறிப்போய்ச் செய்துவந்த வேலேக் குப்பின் அது நடந்தது. அது முடிந்து இருபது வருடத்திற் கதிகமாகி றது. கீச்சானே முடித்துவிட்டோம் என்றுவாங்கிய பணத்தை நாம் இருவ ரும் கலியாணம் செய்துகொண்டோம். ஒரு வருடத்திற்குப் பின் என் மகன் பிறந்தான். மறு வருடத்தில் உன் மகள் பிறந்தாள். அவர்கள் இரு வருக்கும் கலியாணம் முடிந்து ஐந்துவருடமாகிறது. அந்தக் கணக்கைப் பார்த்துக்கொள்.

காந்தன்.—கீச்சான் இறந்துவிட்டான் என்றே அவர் இன்னும் நினைத்திருக் கிறூர்.

சாத்தன்.—கீச்சானே உயிரோடு விட்டுவிட்டோம் என்று அவருக்குத் தெரிந் திருந்தால் நம்மைக் காணும்பொழுதெல்லாம் நாம் கேட்பதைக் கொடுத் துக்கொண்டு வருவாரா ?

காந்தன்.—கீச்சானுக்கு ஆயுள் கெட்டியானதால் தப்பித்துக்கொண்டது.

காந்தன்.—அடர்ந்த காட்டில் நல்ல இருட்டிலே இரவு பத்து பதினெரு மணி நேரத்தில் கீச்சானேக் கொல்லப்போகும் சமயத்திலே ஒருவன் வந்து கைவாளேத் தட்டிவிட்டு நம்மை மூர்ச்சையாக்கிக் குழந்தையைக் கொண்டுபோனதென்றல், ஆயுள்கெட்டி என்று மட்டுமா சொல்கிறது! சாமி பலமும் இருந்ததென்றே சொல்லவேண்டும். குழந்தையைக் கொண்டுபோனவனே நான் பார்க்காமல் அடிபட்டதால் அவன் இன்ன னென்று எனக்குத் தெரியாது. நீ நன்ருய் அவனேப் பார்த்து எதிர்த் தவனுயிற்றே. அவன் இன்னனென்று உனக்குத் தெரியுமா ? என்று கேட்டபொழுது பார்த்தால் சொல்லக்கூடும் என்ருய். அவனே எங்கா கிலும் பார்த்திருக்கிறூயா ?

காந்தன்.—நான் இரண்டுமூன்று தடவையில் பார்த்திருக்கிறேன்.

சாத்தன்.—எப்பொழுது பார்த்திருக்கிறூய் ?

காந்தன்.—குழந்தையை விடுவித்துக் கொண்டுபோன இரண்டு வருடத்திற் குப்பின் பார்த்ததோடு, நெடுநாள் பார்க்காமலிருந்து, போன வருடத் தில் இரண்டு தடவையில் பார்த்தேன். அவன் எனக்குச் சமீபமாக வந்தும் என்னே இன்னனென்று கண்டுகொள்ளவில்லே. அவன் என்

னைக் கண்டுகொள்ளாமற் போனது எனக்கதிக சந்தோஷமாக இருந்தது. நம்மிடத்திலிருந்து விடுபட்டுப்போன குழந்தையின் சங்கதி ஒன்றும் தெரியவில்லை. அது இறந்ததோ அல்லது உயிரோடிருக்கிறதோ !

காத்தன்.—அது சாகப்போனது தப்பியதால் அது உயிரோடிருக்குமென்றே எண்ணுகிறேன்.

காத்தன்.—அது உயிரோடு இருப்பதால் நம்முடைய எஜமானனுக்கு ஏதாகிலும் கெடி உண்டாகுமா ?

சாத்தன்.—இவளுக்கு மூர்ச்சை தெளிகிறதுபோல் காணப்படுகிறது. அந்தப் பேச்சை நிறுத்து. நாம் பேசுவது இவள் காதில் விழுந்தால் மோசம் வரும்.

சாத்தனும் காத்தனும் பேசிக்கொண்டிருந்ததை நிறுத்தியபின் கமலாக்ஷி கண்ணை விழித்துப்பார்த்து அருகில் சாத்தன் இருப்பதைக்கண்டெழுந்து உட்கார்ந்தாள்.

சாத்தன்.—என்னை ஏமாற்ற முயன்றது என்ன பிரயோசனத்தைத் தந்தது ? இனி அவ்வித முயற்சி செய்வாயேயானால் இப்பொழுது கண்ணைத் திறந்து எழுந்து உட்கார்ந்ததுபோல் எப்பொழுதும் கண்ணைத் திறக்காமலிருக்கச் செய்துவிடுவேன். உனக்கிஷ்டமானால் படுத்துக்கொள், நான் நடந்துவருகிறேன். வழிப்போக்கர் திருடர்களுக்குப் பயந்து இம்மார்க்கம் போவது அரிது. யாராகிலும் ஒருவரிருவர் வருவதைக்கண்டு கூக்குரலிட்டாலும் அவர்களைத் துணைசொள்ள முயன்றாலும் நான் முன் சொன்னவிதம் இந்தக் குத்துவாள் உன் உதிரத்தைக் குடித்துவிடும். (என்று சொல்லி இறங்கி நடந்து வந்தான்.)

கமலாக்ஷியைச் சாத்தன் வண்டியில் விட்டெறிந்தபொழுது தலையில் அடிபட்டதாயினும் அவள் தன்னை முற்றிலும் மறந்திராமல் சாத்தனுக்கும் காத்தனுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு வந்து நாசியில் ஈ யொன்று நுழைய அதனால் அவர்கள் சம்பாஷணை நின்றுவிட்டதை யறிந்து சன்னலைத் திறந்து எழுந்து, இக்காதகக் கொலைத் தொழிலில் கைதேறியவர்கள் கையிலகப்பட்டுக்கொண்டோம் என்று எண்ணுதலை யெல்லாம் எண்ணித் துக்கப்பட்டுக்கொண்டு அவர்களைப் பார்க்கவாவது அவர்களோடு வார்த்தையாடவாவது மனதில்லாமல் உட்கார்ந்து காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தாள். அவர்கள் சூரியன் அஸ்தமித்தவுடன் வண்டியை ஓர் மரத்தடியில் நிறுத்திக் கமலாக்ஷியை இறங்கும்படி செய்து அதிசதூரம் போகவிடாமல் உலாவிவரச் செய்து பின் வண்டியிலேற்றிச் சில தின்பண்டங்களைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள். அவள் தனக்கு வேண்டியதில்லை என்று வண்டியிற்

படுத்துக்கொண்டபின் அவர்கள் மாடுகளுக்கு வைக்கோல் போட்டும் சமீபத்திலிருந்த குட்டையில் ஜலமகுடிக்கவைத்தும் இரவு பத்துமணிக்கு வண்டியில் மாடுகளைப்பூட்டி யோட்டி இரவெல்லாம் சென்று காலையில் ஒரு பெரிய வீட்டுக் கெதிரில் வண்டியை நிறுத்தினர்கள். வீட்டுக்குள்ளிருந்த ஒரு பெண்பிள்ளை வண்டிவந்து நின்றதை யறிந்து வெளியில்வந்து, என் அப்பா! உங்கள் காரியத்தைமுடித்து வந்தீர்கள் போல் காணப்படுகிறதே, என்ன சங்கதி? என்றாள்.

சாந்தன்.—அம்மா சுந்தரம்! நாங்கள் எடுத்தகாரியங்கள் அனேகம் உனக்குத் தெரிந்திருக்கின்றன. எதில் நாங்கள் அபஜயப்பட்டு வந்தோம்? எங்களுடைய புள்ளி ஒருபோதும் தப்பாது; வண்டியிலிருக்கும் பெண்ணை அழைத்துக்கொண்டு போய் அவளுக்கு வேண்டியதைச் செய். அவள் நேற்று மத்தியானத்திலிருந்து வண்டியில் உட்கார்ந்தே இருக்கிறாள்.

சாத்தன் சொல்லியதைக்கேட்ட சுந்தரம் வண்டிக்கருகில் சென்று, அம்மா இறங்கு என்று கமலாக்ஷியை வண்டியிலிருந்து இறக்கி வீட்டுக்குள் அழைத்துச் சென்று கமலாக்ஷியின் கலேதீர உபசாரஞ் செய்தாள். கமலாக்ஷி நெடுநேரம் உட்கார்ந்திருந்ததனாலே சற்று உலாவினால் தன் கைகால் வலி நீங்கும் என்றதைக் கேட்ட சுந்தரம் அம்மா! உன் னிஷ்டப்படி நான் நடக்க வேண்டுமானால் என்னிஷ்டப்படி நீயும் நடக்கவேண்டுமே என்றாள்.

கமலாக்ஷி.—உன் இஷ்டப்படி நான் என்ன செய்யவேண்டும்?

சுந்தரம்.—நானும் உன்னைத்தவர நீ சம்மதப்படவேண்டும். நீ தனித்து உலாவிவர முடியாது. நீ என்னை ஏமாற்றிப்போய்விடலாம் என்ற எண்ணம் கொண்டிருக்கின் அதை ஒழித்துவிடு. காத்தனும் சாத்தனும் சமீபத்திலிருக்கிறார்கள். நீ எங்குபோனாலும் கொண்டுவந்து விடுவார்கள்.

கமலாக்ஷி.—அம்மா! என் சம்மதமில்லாமல் என்னைக்கொண்டுவந்து இவ்விதம் சொல்லுவது தருமமா?

சுந்தரம்.—அடியம்மா! அந்தக் கேள்வி யெல்லாம் என்னைக்கேட்க வேண்டாம். உன்னைக்கொண்டு வந்தவர்களைப் போய்க்கேள். எனக்கொன்றும் தெரியாது. நீ உலாவவேண்டுமானால் போகலாம் வா. (என்று கமலாக்ஷியின் வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குப பின்புறத்திலுள்ள தோட்டத்துக்குள் அழைத்துச் சென்றாள்.)

கமலாக்ஷி.—ஐயோ அம்மா! இது என்ன? சமாதி யொன்று வீட்டுக்கருகில் இருக்கிறதே!

சுந்தரம்.—அம்மா! சமாதி உன் கண்ணுக்குக் காணப்பட்டது நன்மையே! சில வருடங்களுக்கு முன் உன்னைப்போலொருபெண் என்னிடத்தி

லிருந்து தப்பித்துக்கொண்டு ஓட முயன்றவள் அதில் தூங்குகிறாள். நீயும் அவளோடு படுத்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டாம்.

கமலாக்ஷி.—ஏ! படுபாவிகளா! இவ்விதத்தொழிலில் கைதேறிய உங்களைக் கடவுள் தண்டிக்காமல் விடுவாரா? நீங்கள் மீளாநரகத்திற்கு ஆளாக வேண்டியவர்களே!

சுந்தரம்.—எங்களைச் சபிக்கவா இவ்விடத்திற்கு வந்தாய்? நீ உலாவினது போதும், வா. (என்று கையைப்பிடித்து இழுத்துச்சொண்டு வந்து வீட்டில் விட்டு) உன் கோபத்தை யடக்கிக்கொண்டு இருக்காமற் போனால் வீணில் துன்பப்படுவாய்.

கமலாக்ஷி.—உன் பயமுறுத்துதலுக்கு அஞ்சினவளென்று நினைக்க வேண்டாம். உயிருக்கு மிஞ்சின ஆக்கினை என்ன இருக்கிறது? நான் எப்பொழுது உங்கள் கையிலகப்பட்டேனோ அப்பொழுதே என் உயிர் என்னுடைய தல்லவென்று எண்ணிவிட்டேன்.

சுந்தரம்.—உன் கதைகளையும் உன் எண்ணத்தையும் நிறுத்தி வைத்து நான் கேட்பதற்குப் பதில் சொல். ஏதாகிலும் சிறிது சாப்பிடுகிறாயா? வேண்டாமா?

கமலாக்ஷி.—எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. (என்று கோபமாகச் சொன்னாள்.)

உனக்கு ஒன்றும் வேண்டியதில்லை என்றால் உன்னைப் புரிசாலம்பிடித்து ஊட்டுவோர் ஒருவருமில்லை என்று சுந்தரம் சொல்லும் பொழுது சாத்தன் வீட்டுக்குள் வந்து, அம்மா சுந்தரம்! இந்தப் பெண்ணுக்கு ஏதாகிலும் கொடுத்தீர்களா? என்றான்.

சுந்தரம்.—அப்பா! அவள் ஒன்றும் வேண்டியதில்லை என்கிறாள்.

சாத்தன்.—சாப்பிடாமற் போனால் நாம் என்ன செய்யலாம்? மாடுகள் வந்து விட்டன. இனிக் காலதாமசம் செய்வது பிரயோனமில்லை. இந்தப்பெண்ணை அழைத்துவாருங்கள். (என்று வெளியில் வந்து வண்டி கட்ட உத்தரவு செய்தான்.)

சாத்தன் உடனே வண்டியைக் கட்டினான். சுந்தரமும் கமலாக்ஷியை அழைத்து வந்து வண்டியிலேற்றித் தானும் வண்டியிலேறி உட்கார்ந்தாள். மாடுகள் வேகமாய் அன்று பகலெல்லாம் ஓடி இரவு எட்டு மணிக்கு ஒரு வீட்டருகிற் போய் நின்றது. உடனே சுந்தரம் இறங்கி கமலாக்ஷியை இறக்கி வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போனாள். வீட்டுக்குள் இருந்த ஓர் பெண் விளக்கோடு ஓடி வந்து இவர்களுக்கு வழி காட்டி மேல்மெத்தையில் ஓர் அறையில் கொண்டு போய் விட்டுக் கட்

டிலிற் படுத்துக்கொள்ளச் சொல்லுங்கள் என்று ஒரு குத்து விளக்கு ஏற்றிவைத்துத் தின்பண்டங்கள் சிலவற்றைக் கொண்டுவருகிறேனென் றென்று சென்று சில நிமிஷங்களுக்குப்பின் ஓர் தட்டில் பழ வர்க்கங்களும் பலவிதமிட்டாய்களும் ஒருசெம்பில் பாலும் ஒருசெம்பில் ஜலமும் கொண்டுவந்து வைத்துச் சாப்பிடச்சொல்லுங்கள் என்றாள். சுந்தரம் கமலாக்ஷியைப் பார்த்து, அம்மா ! நீ உன் சொந்த வீடு சேர்ந்தாய். நீ இவ்வீட்டுக்கு எஜமானி. உன்னிஷ்டம் போல் யாவும் செய்யலாம். நாங்கள் யாவரும் நீ சொல்வதைக் கேட்டு நடக்கச் சித்தமாயிருக்கிறோம். உனக்கு வேண்டியதைச் சொல்லலாம். இந்தத் தட்டிலிருக்கும் தின்பண்டங்கள் இஷ்டமில்லாதிருந்தால் வேறென்ன வேண்டுமென்றாலும் அதைக் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்றாள்.

கமலாக்ஷி.—நான் இந்த வீட்டுக்கு எஜமானி யென்பதும் நான் சொல்வது போல் நீங்கள் நடப்பீர்க ளென்பதும் உண்மைதானே ?

சுந்தரம்.—அது விஷயத்தில் உனக்குச் சந்தேகம் வேண்டாம். உண்மையைச் சொன்னதன்றி வேறொன்றையும் சொல்லவில்லை.

கமலாக்ஷி.—அது உண்மையாக இருக்குமாகில் நான் சொல்வதைப் போல் செய்யுங்கள். சதவைத்திறந்து வழி விட்டு என்னைப் பின் தொடராதிருங்கள். நான் வெளியில் போகவேண்டும். (என்று எழுந்து நின்றாள்.)

சுந்தரம்.—அது ஒன்று நீங்கலாக எது சொன்ன போதிலும் கேட்கச் சித்தமாக இருக்கிறோம்.

கமலாக்ஷி.—நான் இவ்வீட்டுக்கு எஜமானி என்பது போய்ச் சிறைப் பட்டவளென்று நன்றாய் விளங்குகிறதே. தெய்வமே ! என்தலை விதி இவ்விதமாகவா இருந்தது! என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள். சுந்தரம் அவ்வீட்டிலிருந்த பெண்ணைப் பார்த்து, அம்மா மனோரஞ்சிதம் ! நாம் இவ்வறைக்குள் இருப்பதால் நமது எஜமானிச்சுத் துக்கம் அதிகப்படுகிறது. நாம் சற்று விலகி இருப்போமானால் உத்தமம்.

என்று இருவரும் வெளியில் வந்து அவ்வறையின் கதவை வெளியிற் பூட்டிக் கொண்டு நீங்கினார்கள். சாத்தன் மனோரஞ்சிதத்தினிடம் வந்து அம்மா, மனோரஞ்சிதம் ! எங்களுக்கு இட்டவேலையை முடித்து விட்டோம். எஜமான் எப்பொழுது வருகிறதாகச் சொல்லியனுப்பினார் ? நாங்கள் காலையிற் போகலாமல்லவா? என்றான்.

மனோரஞ்சிதம்.—இரண்டுநாள் பொறுத்து எஜமான் வருகிறதாகவும் அது பரியந்தம் உங்களை இங்கிருக்கும்படியாகவும் சொல்லி அனுப்பியிருக்கிறார். உங்களுக்குச் சாப்பாடு முதலானதும் தயாராக இருக்கிறது. வந்துசாப்பிடுங்கள்.(என்று சுந்தரத்தோடு சமையலறைக்குள் சென்றாள்.)

கமலாக்ஷி தன்னை ஓர் அறையில் விட்டுப்பூட்டிச் சென்றபின், நாம் வீணில் துக்கம் மேற்கொண்டு அழுவதால் பிரயோசனமில்லை. புலி கூட்டில் அகப்பட்டுக் கொண்டதுபோல் இவர்களிடத்தில் அகப்பட்டுக்கொண் டோம். நாம் இவர்களிடத்திலிருந்து தப்பிக்கும் வழியொன்றுங் காண் ப்படவில்லை. வரும்விதியைத் தடுக்க யாவராலும் முடியாது என்று எழுந்து தான் அடைபட்டிருக்கும் அறையைக் கவனித்துப்பார்த்தாள். அறை பதினேந்தடி சதுரத்துக்குக் குறையாமலிருப்பதையும், இருப்புக் கம்பிகளால் மூடப்பெற்ற மூன்று ஜன்னல்கள் மூன்றடி உயரத்திலிரு ப்பதையுங் கண்டு ஒரு பலகணியைத் திறந்து பார்த்ததில் இருட்டில் ஒன்றும் காணப்படாததால் ஜன்னலை மூடிக்கொண்டு, அவ்வறையின் ஓர் பக்கத்தில் போட்டிருந்த பெரிய மேஜைமேல் விலை உயர்ந்த நாட் டுச் சேலைகளும் பச்சை காசிச் சேலை ஒன்றும் மத்தாப்பு இரவிக்கை களும் பாவாடைகளும் தாவணிகளும் இருப்பதைப் பார்த்துத் தனக் குள் அடங்காக் கோபமாகி இத் துஷ்மாக்கர்களுடைய எண்ணந்தா னென்ன ? விலை உயர்ந்த சேலைகளை என் பார்வையில் வைத்துவிட் டால் அவைகளைப் பார்த்தவுடன் ஆசைகொண்டு இவர்கள் எண்ணம் போல் நடப்பேன் என்றோ என் பார்வையில் யாவும் வைத்திருக்கிறார் கள் ? இவர்களுடைய எண்ணம் என்ன முடிவுக்கு வருகிறதோ பார்க்க லாம் என்று திரும்பித் தின்பண்டங்களிருந்த தட்டைப்பார்த்து, நாம் பசியால் இருப்பது நன்றல்ல வென்று இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டபின் சுத்த ஜலம் குடித்துத் தன் முந்தானையைக் கீழே விரித் துப் படுத்துக்கொண்டு, தன்னுடைய தாயார் என்ன நினைப்பாளோ ? பெரியவர் என்ன நினைப்பாரோ ? வீட்டின் கதவுகளை மூடிக்கொண்டு வராமல் இப்படுபாவிகள் கையில் அகப்பட்டுக்கொண்டோமே ! நம் மைக் கொண்டுவரும்படி சொல்லியவர் இன்னரென்று தெரியவில்லை யே என்று சிலநேரம் அழுது, பின் கடவுளை நம்பியவர்களுக்கு எக்கா லத்திலும் கெடுதிவராதென்று வாசித்திருக்கிறோம், அவரே நம்மைக் காப்பாற்றுவார் என்று கடவுளைத் தியானித்ததுக்கொண்டிருக்கும் பொ ழுது, கதவு திறக்கப்பட்டுச் சுந்தரமும் மனோரஞ்சிதமும் அறைக்குள் வந்து, அம்மா சாப்பிட்டாய் விட்டதா ? என்றார்கள்.

கமலாக்ஷி.—ஆம் சாப்பிட்டாய்விட்டது. (என்று படுத்துக்கொண்டே பதில் சொன்னாள்.)

மனோரஞ்சிதம்.—சுந்தரம்மா ! இதைப் பார்த்தீர்களா ! நான் கொண்டுவந்து வைத்த தின்பண்டங்களைத் தொடாமல் இரண்டு வாழைப்பழம் மட்டும் சாப்பிட்டிருக்கிறார்கள். பாலும் அப்படியே இருக்கிறது. எஜமான்

இதை யறிந்தால் நாம் கவனிக்காமல் பட்டினியாய்ப்போட்டோம் என்று நம்மைக் கோபிப்பாரே ! இத்தத் தொல்லைக்கு நாம் என்ன செய்கிறது ?

கமலாக்ஷி.—உங்கள் எஜமான் கோபித்துக்கொள்ளுகிற காலத்தில் உங்கள் மேல் தப்பிதம் இல்லை என்று நான் சொல்லிவிடுகிறேன். அது விஷயத் திற்காக நீங்கள் கவலை கொள்ளவேண்டாம்.

சுந்தரம்.—அம்மா ! எங்கள் மேல் அன்புகொண்டு எங்களுக்கு ஓர் கெடுதியும் வராமலிருக்க எண்ணங்கொண்ட தங்களை இரண்டு நாள் பட்டினியாகப் போட்டிருப்பது நியாயமா ? எங்கள் எஜமானியாகிய தாங்கள் ஏதாகி லும் சிறிது சாப்பிட்டால் எங்களுக்கும் சந்தோஷமாக இருக்கும்.

கமலாக்ஷி.—நான் உங்களுக்கு எஜமானி யென்று மறுபடியும் சொல்லுகிறீர் கள். அது உண்மையா என்று மற்றொருதரம் பரிக்ஷித்துப் பார்க்கிறேன். எஜமானி சொற்படி நீங்கள் நடப்பது உண்மையானால் நீங்கள் என்னைத் தொந்தரை செய்யாமல் தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு போய் விடுங்கள்.

மனோரஞ்சிதம் சுந்தரத்தைப் பார்த்து, ஏனம்மா ! நம்மூடைய எஜமானி யின் சாமர்த்தியத்தைக் கண்டுகொண்டீர்களா ? நம்மை ஒரு சொல்லால் அடக்கிவிட்டார்கள். இனி எஜமானி மனதுக்கு விரோதமாக ஒன்றும் செய்யக்கூடாதென்று தின்பண்டங்களை எடுத்துப் போனாள்.

சுந்தரம் கமலாக்ஷி யருகில் உட்கார்ந்து, அம்மா ! கட்டிலில் படுத்துக் கொள்ளாமல் தரையில் படுத்துக்கொள்ளலாமா ? உன்னுடைய மிருது வான தேகம் வருந்தாதா ? என்றாள்.

கமலாக்ஷி.—அம்மா ! என் விஷயத்தில் நீங்கள் கொண்ட அன்பை மறக்க மாட்டேன். நான் உயிரோடு இருக்குமளவும் அந்தக் கட்டிலில் படுக்க மாட்டேன். என்னைத் தொந்தரை செய்யவேண்டாம். என் தேகம் எல் லாம் நோகிறது. என்னை வருத்தாமல் இருப்பது உங்களுக்குப் புண் ணியமாகும்.

சுந்தரம்.—அம்மா ! உன்னுடைய இஷ்டம்போல் யாவும்செய்யலாம் ; நானும் இந்த அறையில் படுத்துக்கொள்ளலாமா ? அது விஷயத்திலும் ஆக்ஷே பனை உண்டா ?

கமலாக்ஷி.—நான் இரவெல்லாம் விழித்துக்கொண்டிருக்க வேண்டும் என் கிற அபிப்பிராயம் உனக்கிருந்தால் இவ்வறையில் நீயும் படுத்துக்கொள் ளலாம்.

சுந்தரம்.—அம்மா ! இதென்ன அநியாயம் ! என்னை நம்பாமல் இவ்விதம் சொல்லுகிறாய். என்மேலுனக்கு நம்பிக்கை உண்டாக நான் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் ?

கமலாக்ஷி.—என்னைத் தனியாகவிட்டு நித்திரை செய்யச்சொல்வதே !

உன்னிஷ்டப் பிரகாரம் தனியாகப் படுத்துக்கொள்ளென்று சுந்தரம் அறையை விட்டு நீங்கினாள். கமலாக்ஷி எழுந்து உள்தாப்பாளிட்டுப் படுத்து நெடுநேரம் தன் தாயாரை நினைத்து அழுது பின் கடவுளைத் தியானித்துக்கொண்டே நித்திரை போயினாள். விடிந்தபின் கதவுதட்டுகிற சப்தத்தால் எழுந்து கதவைத் திறந்தாள்.

மனோரஞ்சிதம்.—அம்மா ! காலைக்கடனை முடித்துக்கொள்ள வருகிறீர்களா ? அல்லது இன்னும் படுத்திருக்கப் பிரியமா ?

ஆம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கமலாக்ஷி மனோரஞ்சிதத்தோடு சென்று காலைக்கடனை முடித்துக்கொண்டு, தனக்காக விட்டிருந்த அறைக்குள் சென்று சாளரத்தைத் திறந்து பார்த்தாள். கமலாக்ஷிக்கு இருந்த தைரியம் முற்றிலும் நீங்கப் பெரிய தோட்டத்துக்கு மத்தியிலிருக்கும் வீட்டில் தன்னைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதைக் கண்டாள். இனி இவ்வீட்டிலிருந்து உயிரோடு போகப்போகிறதில்லை. நமக்கு ஆயுள் முடிந்ததால் நாம் இவ்விடத்தில் வந்திருக்கிறோம். நாம் என்ன ஸ்திதியிலிருந்து இறந்தோம் என்று நமது தாயார் அறிய இடமில்லாமற் போனதல்லவா ? நம்முடைய நிலையை அறியாத வனசாக்ஷி என்ன நினைப்பாள் ! விஜயரங்கத்தண்ணன் வீடுவந்து சேர்ந்தபின் நாம் வீட்டைவிட்டுப் போய்விட்டோம் என்று கேள்விப் பட்டால் கேவலமாக நினைப்பாரே ! பெரியவரும் நாம் புத்தியீனத்தால் ஒரு காரியத்தைச் செய்துவிட்டோம் என்றல்லவா நினைப்பார் ! என்று அழுதாள். தெய்வமே ! என் நடத்தையைப் பலர் கேவலமாக நினைக்க நான் இரகசியத்தில் மாளவா என் தலைவிதி இருந்தது ! ஐயோ! நான் வெளிமனிதரால் உதவியடையலாம் என்றிருந்தேனே ! ஒன்றும் இல்லாமற் போனதே ! என்று கண்களில் நீர்வடிய நிற்கும் பொழுது, மனோரஞ்சிதம் தின்பண்டங்களோடு அறைக்குள் வந்து, கொண்டு வந்ததை கமலாக்ஷிக்கு எதிரில் வைத்து, அம்மா ! இவைகளில் ஏதாகிலும் இப்பொழுது சாப்பிடுங்கள். சாப்பாடு விரைவில் சித்தஞ் செய்கிறேன். சாப்பாடு சித்தமாகும் பரியந்தம் சும்மாவிருப்பது நன்றல்ல என்றாள். கமலாக்ஷி வாழைப்பழத்தில் இரண்டு சாப்பிட்டு ஜலங்குடித்து, எனக்குச் சாப்பாடு வேண்டியதில்லை ; அடிக்கடி வந்து என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம். இவைகளை என் எதிரில் வைக்கவேண்டாம். எடுத்துக்கொண்டு போய்விடு என்றாள்.

கமலாக்ஷியின் கருத்தை யறிந்தபின் மனோரஞ்சிதம் போகாமல் நின்று, எங்களுக்குத் தீங்கை யுண்டாக்கவே இவ்விதம் சொல்லுகிறீர்கள் என்றாள். கமலாக்ஷி கோபப்பார்வையோடு மனோரஞ்சிதத்தைப் பார்த்தவுடன் அவள் வேறொன்றும் சொல்லாமல் தின்பண்டங்களைக் கொண்டுபோய்விட்டாள். கமலாக்ஷிக்கெதிரில் சுந்தரமாவது மனோரஞ்சிதமாவது வந்தால் அவள் அதிக கோபங்கொள்வதைக் கண்டு அவர்கள் எதிரில் அடிக்கடி வராமல் இருந்தார்கள். மறுநாள் கமலாக்ஷி காலைக்கடனை முடித்துக்கொண்டு இரண்டு வாழைப்பழம் உண்டு தண்ணீர் குடித்து நின்றுகொண்டிருக்கும்பொழுது, சுந்தரம் வந்து அம்மா ! இன்று எஜமான் வருவாரே ! நீ குளித்துத் தலைவாரி நல்ல சேலை யொன்று கட்டிக்கொண்டிராமல் இவ்விதம் இருந்தால் எங்களைக் கோபிக்கமாட்டாரா ? என்றாள்.

கமலாக்ஷி.—எஜமான் என்பது யார் ? அவர் இன்னாரென்று சொல்லக் கூடாதா ?

சுந்தரம் கமலாக்ஷியின் முகத்தைப்பார்த்து எஜமான் இன்னாரென்று அறியாமலா இதுபரியந்தம் இருக்கிறாய் ? இதை யார் நம்புவார்கள் ?

கமலாக்ஷி.—நான் சொல்வதை உண்மை என்று நீ நம்பினால் எனக்கு இலாபம் ஒன்றும் இல்லை. நம்பாமற்போனால் நஷ்டம் உண்டென்றுங் காணப்படவில்லை. என்னை மோசமாகக் கொண்டுவந்ததே யன்றி என் சம்மதத்தைப் பெறவில்லை.

சுந்தரம்.—நீ சம்மதத்தோடு வரவில்லை என்றதைக் கண்டுகொண்டேன். மோசஞ்செய்து உன்னை அழைத்துவராமல் எவ்விதம் வந்திருக்கக் கூடும் ? நானதைக்குறித்துப்பேசி உனக்குத் துக்கத்தை யுண்டு பண்ண வரவில்லை. உன்னைக் கொண்டுவரச் சொன்னவர் இன்னாரென்று நீ அறியாமற்போனது ஆச்சரியமாக இருக்கிறது. நானே அவர் இன்னாரென்று சொல்வதுங் கூடாது. (என்று சொல்லும்பொழுது கதவு தட்டுகிற சப்தங்கேட்டு) இதோ அவரும் வந்துவிட்டார். நேரில்கண்டுகொள்.

என்று சுந்தரம் சொல்லும் பொழுது அறைக்குள் ஒருவன் நுழைந்தான். அவனைக்கண்ட கமலாக்ஷி திகைத்து நின்றாள். சுந்தரம் வெளியிற் சென்றான்.

வந்தவன்.—கமலாக்ஷி ! உன்னைக் கொண்டுவரும்படி செய்தவன் நான் என்று நினைத்திருப்பாயா ?

கமலாக்ஷி.—இந்த அற்பத்தொழிலைச் செய்யத் தகுந்தவரென்று உம்மை நான் நினைக்கவில்லை.

வந்தவன்.—உன்னைக்கண்டதும் உன்மேல் ஆசைகொண்டதும் உன்னை இவ்விடத்திற்குக் கொண்டுவரும்படி செய்ததும் உனக்கு ஆச்சரியமாக இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. உன் அழகைக் குறித்து ஒரு நாளைக்கு முன் கேள்வியுற்றிருந்தேன். நேரிற் பார்த்தபின் யாவும் விளங்கின. இரத்தினமும் அவன் சினேகனும் புது ஊரிலிருந்து வரும் பொழுது உன்னைக் கொண்டுபோக எத்தனித்ததும், விஜயரங்கத்தால் விடுபட்டதும், அது முதல் விஜயரங்கம் உங்கள் வீட்டுக்குப் பெரிய வரைப்பார்க்க வருவதுபோல் உன்னைப் பார்த்துப்போவதும், விஜயரங்கமும் நீயும் யோசித்து வனசாக்ஷியை இரத்தினத்துக்குக் கிட்ட விடாமற் செய்ததும், முடிவில் விஜயரங்கம் ஒடிப்போனதும் நான் அறியாத வையல்ல. அவமானம் அடைந்ததை எண்ணி உன்னை எவ்விதமாவது கைப்பற்ற வேண்டுமென்று நினைத்திருந்த இரத்தினத்தின் எண்ணத்தைக்கெடுத்து நான் கொண்டுவந்தது என்மேல் குற்றமா ?

கமலாக்ஷி.—என்னை இவ்விடம் கொண்டுவரும்படி செய்தவன் இரத்தினம் என்றே எண்ணியிருந்தேன்.

வந்தவன்.—இரத்தினமா ? அவனுக்கு இவ்விடத்தில் வீடேது. இந்த வீடு என்னுடையதென்று உனக்குத் தெரியாதா ? உன்னை மண முடிக்க எண்ணியதால் இனி இந்த வீடு உனக்குச் சொந்தமாய்விட்டது.

கமலாக்ஷி.—இந்தக் கெட்ட எண்ணம் உமக்கிருந்தால் உம்மை உலகம் என்ன சொல்லும் !

வந்தவன்.—என்மேல் குற்றம் சொல்ல ஒருவன் துணிவானா ! ஜெகநாத முதலியார் என்றால் இவ்வூரே நடுங்கும். நான் ஒருவருக்குப் பயந்தவனென்று நினைத்திருக்கிறாயா ?

கமலாக்ஷி.—எங்களை முன் ஏமாற்றியது போதாதென்று பிராமணன்மேல் பழிபோட்டு எங்கள் வீட்டுக்கு வந்தீர். உமது பெண்ணைப்போலிருக்கும என்னை மணமுடிக்க எண்ணங்கொண்டீர். இவையெல்லாம் உமக்கழகா ?

ஜெகநாத முதலியார்.—அழகோ அழகல்லவோ என்று என் விஷயத்தில் சொல்லுவோர் ஒருவரும் இல்லை. நான் குப்புசாமி ஐயரிடமாகப் பத்திரத்தை அனுப்பியது உண்மை. நீ என்னோடு வாழப்போகிறவளாதலால் நான் சொல்வது பொய்யென்றும் மெய்யென்றும் பின்னுலறிவாய். என் தமையன் ஆஸ்தியெல்லாம் விரைவில் என்னைச் சேரப்போகிறது என்று உனக்குத் தெரிந்ததே. என்னைப்போன்ற தனவந்தனை நீ விவாகஞ் செய்து கொண்டால் உன்னைப் பழிப்பவர்களார் ?

கமலாக்ஷி.—மாமா! தாங்கள் ஒன்றும யோசியாமல் பேசுவது நன்றா? நம்மவர்களில் விவாகம் நடக்க வேண்டியிருந்தால் பெண்ணும் பிள்ளையுமாக

வார்த்தையாடி முடிவு படுத்திக் கொள்ளுகிறதா ? அல்லது தாய் தந்தை யார் மூலமாக முடிவுபடுத்திக் கொள்ளுகிறதா? நம்மவர்கள் வழக்கத்தைக் கைக்கொள்ளாமல் அங்கிலேயரைப்போல் பேசத்துணிந்தீரே ! இஃ தென்ன காரணம் ?

ஜகநாத முதலியார்.—கமலாக்ஷி ! நம்மவர்களுக்குண்டாகிய வழக்கத்தை நான் மறந்தவனல்ல. நான் உன் தாயாரைக்கண்டு என் கருத்தைத் தெரி வித்தால் அவள் அதற்கிணங்க நடப்பாளென்று நான் நினைக்கவில்லை. முதல் தாரம் இருக்கும்பொழுது இரண்டாந்தாரம் எதற்கு என்பாள். உன் தாயாருக்குச் சொந்தமாகிய நிலத்தை ஒற்றிவைக்கும்படி செய்து அதை மீட்டுக் கொடுக்காமற் போனதால் என்மேல் கோபமாக இருக்கி றாள். நிலவேளை ஒப்புக்கொண்டாலும் உங்கள் வீட்டில் வந்திருக்கும் கிழவனிடம் யோசனை கேட்பாள். அக்கிழவன் எனக் கனுகூலமாகச் சொல்வானென்று நினைக்கவில்லை. நாம் அன்னியராய் இருப்போமாகில் நம்மூன்னோர்கள் வழக்கப் பிரகாரம் நடக்கவேண்டும். சொந்தத்தில் யாவும் நடப்பதால் அவ்வழக்கத்தைக் கருதாமல் விட்டு உன் கருத்தை யறிவதே முக்கியம் என்று எண்ணினேன்.

கமலாக்ஷி.—மாமா ! என்னைத்தாங்கள் விவாகஞ்செய்து கொள்ள இஷ்டம் கொண்டிருப்பது உண்மையாயின் என்னை என் தாயாரிடம் சேர்த்துப் பின் வேண்டியதைப் பேசவேண்டும். எனக்கு மோசமாகக் கடிதம் எழுதி ஆள்களை விட்டுக் கொண்டுவரும்படி செய்து என்னைச்சிறைப் படுத்தி என் கருத்தைச் சொல் என்று கேட்பது அழகல்லவே.

ஜகநாத முதலியார்.—கமலாக்ஷி! நான் செய்துவிட்ட விஷயத்தைப்பற்றிக் குற்றஞ்சுமத்திப் பேசுவது ஒரு பிரயோசனமுந் தராது. இனி அது விஷயத்தைக் குறித்துப்பேசவேண்டாம். நீ என் கையில் தனித்து அகப்பட்டிருக்க இந்தச் சமயத்தை நன்றாய் உபயோகிக்காமல் விட்டு விடுவேனென்று எண்ணவேண்டாம். நமக்கு விவாகமானபின் உன் தாயார் வீட்டுச்சுப் போகத் தடைசொல்லேன். அதற்கு முன் உன்னை விட்டு விட்டு ஏமாந்து போவேன் என்று நினைக்கவேண்டாம். விரை வில் உன் சம்மதத்தைச் சொல்வது உத்தமம்.

கமலாக்ஷி.—என்னை என்ன சொல்லச் சொல்லுகிறீர் ?

ஜகநாத முதலியார்.—என்னை விவாகம் செய்துகொள்ள இஷ்டமா ? இல் லையா ? என்றே சொல்லக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கமலாக்ஷி.—இல்லை என்றால் என்ன செய்யப் போகிறீர் ?

ஜகநாத முதலியார்.—உன் கற்பைக் கெடுத்து வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளப் போகிறேன்.

கமலாக்ஷி.—மாமா! தாங்கள் இவ்விதம் சொல்வது அடாது. தாங்கள் எனக்குத் தகப்பன்போலிருந்தும் இந்தக் கெட்ட நினைவு கொண்டிருப்பதை அறிந்தால் தங்களை யார் மதிப்பார்? தாங்கள் தனவந்தர் என்ற பெருமையும் இல்லாமற் போய்விடுமே! நானு தங்களுக்கு நற்புத்தி சொல்வது? என்னை என் தாயார்வீட்டில் கொண்டுபோய் விடும்படி செய்துவிடும். உம்முடைய கருத்தை எவரிடமும் நான் சொல்லவில்லை.

ஜகநாத முதலியார்.—கமலாக்ஷி, என் கருத்தைப் பிறர் அறிந்தால் பயந்து விடுவேன் என்ற எண்ணினாய்? நான் கொண்ட கருத்தை மாற்றுவேன் என்று நினைக்கவேண்டாம். என்னை விவாகஞ் செய்துகொள்ள உடன் படுவாயாகில் உனக்கு நன்மையுண்டாகும். நானும் விவாகத்துக்கு வேண்டியதைச் சித்தப்படுத்தி விரைவில் விவாகம் முடியச்செய்வேன். தடை சொல்வாயேயானால் நான் முன்சொன்னவிதம் உன்னை வைப்பாட்டியாக வைத்துக்கொள்ள நேரிடும்.

கமலாக்ஷி.—நீர் சொல்வதை யெல்லாம் சகித்து நெடுநேரம் கேட்டிருந்தேன். போதும். போதும். இனி அப்பேச்சை என்னிடம் பேசினால் அவமானம் அடைவீர். மரியாதையோடு போய்விடும்.

ஜகநாத முதலியார்.—என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்? நானு அவமானம் அடைவேன்? அவமானத்தை யாரடையப் போகிறார்கள் பார்.

என்று கமலாக்ஷி கையைப்பிடித்தான். கமலாக்ஷி சையிலிருந்து திமிறி விடுவித்துக்கொண்டு அவ்வறையிலிருந்த மேஜைக்கொரு பக்கத்தில் ஜகநாத முதலியாரைவிட்டு அவருக்கெதிரில் நின்றுகொண்டு, நீர் தூரத்திலிருந்து பேசாமல் சமீபத்தில் வந்தது உம்முடைய வல்லமையா அல்லது இறுமாப்பா? மீசை நரைத்த கிழவனான பின்னும் அறியாத பெண்ணைக் கொண்டுவரச்செய்து கொடுமையாகப் பேசுவது கூடாதென்ற புத்தி உமக்கில்லாமற் போனது அதிசயம்! என்றாள்.

ஜகநாத முதலியார்.—கமலாக்ஷி! நீ என் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய்! எனக்குக் கோபம் உண்டாகும்படி நடக்கவேண்டாம். (என்று, மேஜை யகலமாய் இருந்ததால் எட்டிப் பிடித்துக்கொள்ள முடியாமல் மேஜையைச் சுற்றிவந்தார்.)

கமலாக்ஷி.—இனி நான் உமது கையில் அகப்படுவேன் என்று நினைக்க வேண்டாம். நீர் எத்தனைநாள் இந்த மேஜையைச்சுற்றி வந்தாலும் நானும் சுற்றிக் கொண்டே உமது கையிலகப்படாமல் இருப்பேன். (என்று மேஜையைச் சுற்றிக்கொண்டே இருந்தாள்.)

ஜெகநாத முதலியார்.—வேண்டாம் கமலாக்ஷி! நீ எத்தனை நேரம் சுற்றி வந்தாலும் உன்னை விடமாட்டேன். எனக்குக் கோபம் வருமுன் என்னிஷ்டப் பிரகாரம் நடந்துகொள். வேண்டாம். வேண்டாம்.

கமலாக்ஷி.—கோபம் வந்தால் என்ன செய்துவிடுவாய்? துன்மார்க்கா! காட்டிலுள்ள வீட்டில் ஒருத்தியைப் புதைத்து வைத்திருப்பதுபோல் இவ்விடத்தில் என்னைப் புதைத்து விடப்போகிறாய். வேறென்ன செய்ய முடியும்? படுபாவி!

கமலாக்ஷி குறிப்பிட்டுச் சொல்லியதைக் கேட்டுத் திகைத்துச் சில நேரம் நின்று பின் கமலாக்ஷியைப்பார்த்து, நீ இவ்விஷயத்தை நன்றாய் யோசித்துச் சொல்ல மூன்று நாள் தவணை கொடுத்திருக்கிறேன். அதற்குள் யாவையும் நன்றாய் யோசித்துப் பார்த்து உனக்கு வரும் கெடுதியைத் தடுக்க என்னை விவாகஞ் செய்துகொள்வதே உத்தமம் என்று நீ கண்டால் உடன்படு, அல்ல வென்றால் என் வைப்பாட்டியாக இருக்கவேண்டியது கட்டாயம் என்று திரும்பினான்.

கமலாக்ஷி.—மூன்று நாள் அல்லது மூன்று வருடம் சென்றாலும் உன் இஷ்டத்திற்கு உடன்படுவேனென்று நினைக்கவேண்டாம். இது உண்மையென்று நம்பு.

ஜெகநாத முதலியார் கமலாக்ஷி சொல்வதை நின்று கேட்காமல் சுந்தரம் இடத்திற்கோடி, சுந்தரம்! கமலாக்ஷிக்குத் தோட்டத்திலுள்ள சங்கதி எவ்விதம் தெரிந்ததென்றார். சுந்தரம் தோட்டத்திலுள்ள சங்கதி ஒன்றும் தெரியாதென்று, நடந்ததைச் சொன்னதன்மேல் சந்தேகம் நீங்கி கமலாக்ஷிக்கு அதிகம் தெரிந்திருக்கிறதென்றே பயந்தேன்; நீ இன்னும் மூன்று காலையில் எனக் கிணங்கும்படி செய்யவேண்டும். உன்னை எல்லா விஷயத்திலும் நம்பியிருக்கிறேன். நான் நாலாம் நாள் காலையில் வருகிறேன் என்று போஜனமுண்டு அவ்வீட்டை விட்டு நீங்கினார்.

இரண்டாம் பாகம்.

14-ம். அத்தியாயம்.

ஜகநாத முதலியார் கமலாக்ஷிக்குக் கொடுத்த தவணையில் இரண்டு நாள் கழிந்து மூன்றும் நாள் பகலாகியும் கமலாக்ஷி ஒருமுடிவுக்கும் வராமல் பெருங்கவலையோடு, என்செய்கிறது ! நாளை அத்துன்மார்க்கன் வந்து விடுவான் ; அவனைத் தப்பிக்கும் வழி யொன்றும் காணப்படவில்லை யே ! நாம் இந்தப் பிராயத்தில் இறக்கவேண்டுமென்கிற விதி இருப்ப தாகக் காண்கிறது. அவ்விதம் விதி இருந்தால் அதைத் தடுக்க முடி யுமா ? ஐயோ ! இக்காதகன் தன் முதிர்ந்த வயதில் கொண்ட பெண் சாதியைக் கூழுக்கழத் தாயார் வீட்டில் விட்டுத் தான் தேவடியாள் வீடே கதியென்று இருப்பது போதாதென்று நம்மையும் கற்பழிக்கக் கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிறான் ; இவன் இவ்விதஞ் செய்வா னென்று கனவிலும் நினைக்கவில்லையே ! இரத்தினமே இத்தீத்தொ ழிலைச் செய்ய முயன்றவனென்று எண்ணியிருந்தோம்; அவனை நல்ல வலுக்கி நடுவில் இவன் மூளைத்தான் ; இவ்வறையை விட்டு வெளி யிற்போனால் அக்காதகிகள் இருவரும் பின்தொடருகிறார்கள் ; என் செய்வோம் ! கடவுளே ! அப்பாதகன் என்னைக் கற்பழிக்குமுன் நான் இறக்கத்துணை செய்யவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தாள். அக்காதகனால் நாம் இறந்தோம் என்ற சமாசாரமும் நம்முடைய தாயாருக் கெட்டாமல் போய்விடுமே ! என்று துக்கப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது, சுந்தரம் அறைக்குள் வந்து, அம்மா ! நீ ஒரு வார மாக இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாயே! ஒன்றிரண்டு அதிகமாய்ச் சாப்பிடென்றாலும் கோபிக்கிறாய் ; நாளை முதலியார் வந்தால் நான் என்ன சொல்லுகிறது ? வீணில் என்னைக் கோபிப்பாரே ! என்றான்.

கமலாக்ஷி.—அடி, கொடும்பாவிகளா ! நீங்கள் கைக் கொண்டதொழில் மே லானதென்று நினைக்கிறீர்கள் ? இதைவிட ஈனமான தொழில் உல கத்தில் வேறொன்றிருக்கிறதா ? எத்தனை உயிரை உங்களுக்கு இரை யாக்கிக் கொள்ளுகிறீர்கள்? நான் இண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டு வந்தது பெருங்குற்றமாய் முடிந்ததைக்கண்டு துக்கப்பட்டுக் கொண்டிரு க்கும்பொழுது, அதிகமாகச் சாப்பிடவில்லை என்ற குற்றஞ் சுமத்துகிறாய்;

நான் ஒன்றும் சாப்பிடாமல் இருந்திருப்பேனேயாகில் இது பரியந்தம் இறந்திருக்கக் கூடுமே ! அது தப்பி விட்டதே என்றிருக்கும் என்னை ஈனத்தொழிலுக்காளாக்கப் புத்தி கற்பிக்கவந்தாய், போதும் ! போதும்! உன்சொல் கேட்டு உன் சொற்படி நடக்கும் துன்மார்க்கிகளுக்கு உன் புத்தியைப் போதித்தால் பிரயோசனமாகும், என்னிடத்தில் அது பிரயோசனப்படாது. (என்று துக்கத்தோடும் அதிக கோபத்தோடும் சொன்னாள்.)

சுந்தரம் யாவும் கேட்டிருந்து பெருமூச்சுவிட்டு, அம்மா ! இவ்வளவுதானா ? இன்னும் ஏதாகிலும் சொல்லப்போகிறாயா ? என்றாள்.

கமலாக்ஷி —நான் என்ன சொன்னபோதிலும் உங்களுடைய ஈனத்தொழில் உங்களைவிட்டு நீங்கப்போகிறதில்லை. செவிடன் காதில் சங்கு ஊதியது போல் அது பிரயோசனப்படாது. வீணில் என்னை வருத்தாமல் போவாயேயானால் அது உனக்குப் பெரும்புண்ணியமாகும்.

சுந்தரம்.—அம்மா ! நீ மனவெறுப்போடு பேசுவதைக் கேட்டுப்போவது சரியல்ல. நாளை முதலியார் வருவாரே ! அதற்கென்ன செய்யப்போகிறாய் ?

கமலாக்ஷி.—முதலியார் நாளை வருவதைத் தடுக்க என்னால் முடியுமா வருகிறவர் சுகமாய் வரலாம். என்னை நன்றாய்ப் பார்க்கலாம். என்னோடு வார்த்தை யாடலாம். நான் பேசாமல் இருப்பதைக்கண்டு போகலாம். அதற்குத் தடையொன்று மில்லை.

சுந்தரம்.—முதலியாரைக் கண்டு வார்த்தையாடாமல் எவ்வளவு நேரம் இருக்கக்கூடும் ?

கமலாக்ஷி.—இரண்டொரு நாளே !

சுந்தரம்.—அதன்பின் வார்த்தையாடுவாயல்லவா ?

கமலாக்ஷி.—இரண்டொரு நாளானால் என்னருகில் வரத்துணியார்.

சுந்தரம்.—என் வரத்துணியார் ? வரத்துணியாதவரா இவ்வளவு தொந்தரை எடுத்துக்கொண்டிருக்கிறார் ?

கமலாக்ஷி.—நாற்றம் எடுத்தபின் ஒருவரும் அருகில் நெருங்கார்.

சுந்தரம்.—என்ன நாற்றத்தை அறிந்தால் ஒருவரும் நெருங்கார் என்கிறாய் ?

கமலாக்ஷி.—பிணம் நாற்றங்கொண்டால் அதை எடுத்துப் புதைப்பதைவிட்டு வீட்டில் வைத்து அழகு பார்ப்பார்களா ?

சுந்தரம்.—எந்தப்பிண நாற்றம் ?

கமலாக்ஷி.—என் பிண நாற்றமே. நாளைக்காலையில் என்னைப் பிணமாகக் கண்டால் உங்கள் முதலியாராவது நீங்களாவது என்ன செய்யப்போகிறீர்கள் ? அந்தக்காட்டில் உள்ள வீட்டில் ஓர் பிணத்தைப் புதைத்து வைத்திருப்பதுபோல் இந்தக்காட்டிலுள்ள வீட்டிலும் ஓர் பிணத்தைப் புதைக்க வேண்டியதே !

சுந்தரம்.—அம்மா ! உன்னைச்சாகவிட்டுப் பார்த்துக்கொண்டிருக்கவா நாங்கள் உனக்குத் துணையாக இருக்கிறோம் ? உன் உயிரைப் போக்கிக் கொள்ள நாங்கள் வழியொன்றும் வைக்கவில்லையே யென்று நீ கவனிக்கவில்லையா ?

கமலாக்ஷி.—உயிரைப் போக்கிக்கொள்ள வழியும் வேண்டுமா ? சற்றுநேரம் மூச்சை அடக்கிக்கொண்டிருந்தால் எல்லாம் அடங்கிவிடும் என்பதை அறியாயா ?

சுந்தரம்.—அம்மா கமலாக்ஷி! உன்னுடைய கற்பு நிலையை நன்றாயறிந்தேன். நான் இவ்வீட்டில் இருக்கும் வரைக்கும் உனக்கோர் கெடுதியும் வராது. இனி என்னை நம்பி உனக்கு வேண்டியதைச் சொல். அதைச் செய்யத் தடை செய்யமாட்டேன்.

சுந்தரம் தன்னைப் பெயர்சொல்லி அழைத்ததோடு, ஓர் சினேகியைப்போல் பேசினாளே ! இவள்கருத்து இன்னதென்று நன்றாய் அறியவேண்டுமென்று கமலாக்ஷி யோசித்து, அம்மா! எனக்கு நன்மையைச் செய்ய எண்ணங்கொண்டிருப்பது உண்மையானால் நான் விரைவில் மரணம் அடையக் கிஞ்சித்துப் பாஷாணம் வரவழைத்துக் கொடுத்தால் உண்மையாக எனக்கு உதவிசெய்ய வந்தவளென்று உன்னை எண்ணுவேன் என்றாள்.

சுந்தரம்.—அம்மா கமலாக்ஷி ! நீ மரண மடையவா நான் உனக்கு உதவி செய்யவேண்டும் ? நீ மரண மடையவேண்டிய வில்லங்கம் ஒன்றுமில்லை. இன்றிரவில் உன்னை வெளியில் அனுப்பிவிடுகிறேன். அதற்குச் சித்தமாயிரு. நான் மறுபடியும் வருகிறேன். (என்று நீங்கினாள்.)

சுந்தரம் செல்லியதைக் கேட்ட கமலாக்ஷி அவள் சொல்லியது யாவும் உண்மை தானா ? நான் கனவு காண்கிறேனா ? என்புத்தி என்சுவாதீனத்தில் இல்லாததால் நான் பலவாறாக எண்ணுகிறேன். சுந்தரமாவது என்னை இந்தச்சிறையிலிருந்து விடுவிக்கப் போகிறதாவது என்னென்னவோ என் காதில்விழுந்தது. ஒன்றும் என் ஞாபகத்துக்கு வரவில்லையாயினும் அவள் இன்றிரவிலே வெளியில் அனுப்பிவிடுகிறேன் என்றது மட்டும் ஞாபகத்திலிருக்கிறதே என்று மாலை பரியந்தம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, சுந்தரம் வந்து அம்மா கமலாக்ஷி! சித்தமாக இருக்கிறாயா ? என்று கேட்டாள்.

கமலாக்ஷி.—உண்மையாகப் பேசுகிறாய் என்று எப்படி நம்புவேன் ? எனக் காசைகாட்டி மோசம் செய்ய இந்தயோசனை செய்கிறாயேயன்றி வேறு ல்ல. உன்னை நம்பமாட்டேன்.

சுந்தரம்.—என்னை நம்பாமற்போனால் போகட்டும். நான் காத்தனையும் சாத் தனையும் முதலியாரிடம் அனுப்பிவிட்டேன். தோட்டக்காரனையும் வைத்தியனை அழைத்துவரும்படி அனுப்பப்போகிறேன். தோட்டக்கா ரன் வருமுன் உன்னைப் புதைத்துவிடுவோம். நீ கூடமாகப் போய் விடலாமல்லவா ?

கமலாக்ஷி.—என்னைப் புதைத்தபின் நான் கூடமாகவா போகவேண்டும்? நான் முதலிலிருந்து உன் வார்த்தையை நம்பாமற்போனது நியாயமே! (என்று துக்கப்பட்டாள்.)

சுந்தரம்.—அம்மா கமலாக்ஷி ! இன்னும் உன்னைச் சந்தேகத்தில் வைத்துக் கொண்டிருப்பது அழகல்ல. நீ தோட்டத்திலிருந்த அரளியின் வேரைத் தின்று மரணவேதனைப்படுகிறாய் என்று காத்தனையும் சாத்தனையும் முத லியாரிடம் சொல்லும்படி அனுப்பிவிட்டேன். தோட்டக்காரனிடமும் அது போலவே சொல்லி, வைத்தியன் யாராகிலும் அகப்பட்டால் அழைத்துவரும்படி அனுப்பப்போகிறேன். அவன்போனவுடன் நீ உனக் கிஷ்டமான இடத்திற்குப் போய்விடு. தோட்டக்காரன் வருமுன்னம் ஒரு குழிவெட்டி ஒரு கட்டையில் சேலையைச் சுற்றிப் புதைத்துவிடுகி றோம். இதுதான் நீ தப்பிக்கும்வழி. நீ கட்டிக்கொண்டிருக்கும் சேலை யை அவிழ்த்துவைத்து வேறொரு சேலையைக் கட்டிக்கொள். (என்று ஓர் பழைய சேலையைக் கொண்டுவந்து கொடுத்தாள்.)

கமலாக்ஷி.—அம்மா ! நீ சொல்லுவதுபோல் செய்தால் என் குலதெய்வம் என்றே உன்னை எண்ணுவேன். நான் உயிரோடிருக்கு மளவும் இந்த உபகாரத்தை மறவேன். மனோரஞ்சிதம் உன் கருத்துக்கு உடன்படு வாளா ?

சுந்தரம்.—மனோரஞ்சிதமும் உன்மேல் பரிதாபங் கொண்டிருக்கிறாள். கற் பைக் கைவிடாதவர்கள் விஷயத்தில் யாவருக்கும் அன்பு உண்டாகும். அவர்கள் எல்லாம் பொல்லாங்கிலிருந்து நீங்கிச் சுகத்தையடைவார்கள். இது சத்தியம் என்று நம்பு. நான் உன்னிடத்திலிருந்து பேசிக்கொண் டிருக்கச் சாவகாசமில்லை. (என்று நீங்கினாள்.)

சுந்தரத்தின் நற்குணத்தை யறியாமல் அவளை அநியாயமாகத் தூஷித் தோம். நாம் கடவுளே கதியென்று நம்பியிருந்ததால் கடவுளே சுந்த ரத்தின் மனதைத் திருப்பினார்போல் காணப்படுகிறதென்று கமலாக்ஷி கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள். மணி எட்டானவுடன் சுந்தரமும் மனோரஞ்சிதமும் சில தின்பண்டங்களோடு கமலாக்ஷி யிடம் வந்து சாப்பிடும்படிக் கட்டாயப்படுத்தினார்கள். கமலாக்ஷி

அம்மமார்களே ! நீங்கள் எனக்குச் செய்யப்போகும் உதவி எல்லாச் சாப்பாட்டைவிட மிஞ்சினது என்று இண்டு வாழைப்பழத்தைச் சாப்பிட்டு எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை என்றபின், சுந்தரம் கமலாக்ஷி கையைப்பிடித்துக் கனமாயிருக்கும் பையொன்றைக் கையிற்கொடுத்து நீ இதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வேண்டினள்.

கமலாக்ஷி.—அம்மா ! எனக்குப் பணம் எதற்கு ? நான் வீடுபோய்ச் சேர்ந்தால் எனக்கு வேண்டியதிருக்கிறது. நீங்கள் என் விஷயத்தில் செய்தது போதாதென்று பணத்தையும் வாங்கிக்கொண்டு போகலாமா !

சுந்தரம்.—அம்மா கமலாக்ஷி ! நீ உன்வீட்டுக் குடனேபோனால் இரகசியம் வெளிவரும். அதனால் நாங்கள் இருவரும் உயிரிழக்கவேண்டும். ஒரு மாதமாவது மறைந்திருந்தால் நாங்கள் அதற்குள் வெளிப்பட்டு விடுவோம். நீ இறந்துவிட்டாய் என்று எங்களாலறிந்த உன் மாமன் உன்னைக்கண்டாலும் எங்களை ஒன்றும் செய்யமுடியாது. எங்கள் உயிரைக் காப்பாற்ற நீ ஒருமாதம் மறைந்திருக்க வேண்டியதால் இதை ஒப்புக்கொள்ளுவ தவசியம் அல்லவா ?

கமலாக்ஷி.—அம்மா ! என் உயிரைக் காப்பாற்றிய உங்களை அந்தப் படுபாவி கையில் ஒப்படைப்பேனா ? உங்கள் இஷ்டம்போல் ஒருமாதம் என் தாய் வீடு போகாமல் இருக்கிறேன். நீங்கள் எனக்குக் கொடுக்கும் பணத்தை ஒரு காலத்தில் பெற்றுக்கொள்ளுகிறேனும் என்று வாக்களித்தால் நான் இந்தப் பையைப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

சுந்தரம்.—அம்மா ! உன்னிஷ்டம் போலவே செய்யலாம், வா. (என்று கமலாக்ஷியை அழைத்துவந்து வெளியில்விட்டு) அம்மா ! இந்த இருட்டில் உன்னைத் தனியாய்ப் போகும்படி அனுப்புவது அடாதென்று இருவரும் கமலாக்ஷியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுது, அம்மா! நீவழி படுந் தெய்வமே உனக்குத் துணையாய்விற்கும் ; நீ மேற்காகக் கொஞ்ச தூரம் சென்றால் சாலையொன்று காணப்படும். சாலையைச் சேர்ந்தால் பின் உனக்கிஷ்டமான வழிபோகலாம், போய்வா. கமலாக்ஷி ! (என்று விடைகொடுத்து அனுப்பினர்கள்.)

கமலாக்ஷி.—அம்ம மார்களே ! எனக்கு இருதாயைப்போலிருந்து என்கற்பைக் காப்பாற்றி விட்டீர்கள். உங்களைக் கடவுள் கைவிடார். நான் போய் வருகிறேன்.

என்று இருவரிடமும விடைபெற்றுச் சுந்தரம் குறிப்பிட்ட வழியாகச் சென்று சாலையை அடைந்தாள். அச்சாலை மரங்களின் அடர்ச்சியால் இருண்டு பயத்தைக் கொடுக்கத்தக்கதா யிருந்ததால், கமலாக்ஷி

தன் காலில் ஏதாவது தட்டுப்பட்டால் பயந்தும் கறுப்பாக ஏதாவது இருக்கக்கண்டால் அச்சப்பட்டும் இந்த இருட்டில் தான் தனித்துப்போவதை எண்ணித் துக்கப்பட்டும் நடக்கும்போது, தான் தன்னுடைய மாமன் கையிலிருந்து விடுபட்டது தெய்வச்செயலே! இந்தப் படுபாவிக்கு அவன் தமையன் ஆஸ்தியெல்லாம் சேரப்போகிறதென்கிறார்களே! ஐயோ! அவ்விதம் முடிந்தால் அனேக கற்புடைய பெண்களுக்குக் கெடுதியாக முடியுமே! தன் தங்கையின்மகள் என்று கிஞ்சித்தும் எண்ணமல் என்னைக் கற்பழிக்க முயன்றவன் அன்னியரை விட்டு விடுவானு? இந்தத் துன்மார்க்கன் தன் தமையன் இறந்த காலத்தில் ஆறு மாதம் ஒருவர் கண்ணுக்கும் தட்டுப்படாமல் துக்கத்தில் இருந்ததாக என் தாய் சொல்லியது உண்மையாக இருக்குமா? இவ்வித கடினசித்த முள்ளவனுக்குத் துக்கமும் வருமா? அடா படுபாவி! என் தாய்க்குச் சொந்தமாகிய நிலத்தின் வரும்படியை உன் துர்ச்செய்கைக்கு உதவியாக வைத்துக்கொண்டு உனக்கு நிலங்கொடுத்தவளது மகள் விஷயத்திலும் தீனமையைச்செய்ய அவ்வரும்படியையே உபயோகப்படுத்தினாய், உனக்கு நன்றியேது? நாணம் ஏது? விஜயரங்கத்தண்ணன் எழுதியது போல் கடிதம் எழுதத்துணிந்த நீ வேறென்ன செய்யமாட்டாய்? என்றும், தான் அந்த பாவிகையிலிருந்து விடுபட்டும் உடனே தாய்வீடு போகத் தடைப்பட்டதே என்செய்கிறது? எங்கு போகிறது? யாரிடத்தில் போயிருக்கிறது? என்றும் எண்ணிப் பசியாலும் களையாலும் நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பாலும் தள்ளாடிச் சென்றுக் கல்லிடறி அம்மாடி! என்று விழுந்தாள். விழுந்தவள் எழுந்து கால் விரலில் அடிபட்டதென்று கண்டு விரலைத் தடவிப்பார்த்து நகம் பெயர்ந்து போனதால் நோகிறதென அறிந்து, சேலையில் கொஞ்சம் கிழித்து விரலைச் சுற்றிக் கட்டிக்கொண்டு என்செய்கிறது! படவேண்டியதை யெல்லாம் பட்டனுபவிக்க வேண்டியதே; பசியால் காதடைக்க விரலில் கல்தடுக்க நடக்க முடியாமல் தடைபட்டாலும் நான் நடக்க வேண்டியது கட்டாயம், ஆயினும் சற்று உட்கார்ந்து போகலாம் என்று சிலநேரம் உட்கார்ந்தாள். அப்பொழுது கல்தட்டும் சத்தங் கேட்டு யாரோ வருகிறதுபோல் காணப்படுகிறதே என்று எழுந்து சாலையைவிட்டு ஒதுங்கி நடந்தாள். உடனே வெளிச்சம் உண்டாகி ஒருவன் தன்னெதிருக்கும் மற்றவனைப்பார்த்து, அடா கறுப்பா! யாரோ வருகிறதுபோல் இருக்கிறதென்று சக்கிமுக்கி போட்டுச் சுருந்தை கொளுத்தச் சொன்னையே! ஒருவரு மில்லையே! வீணில் ஏன் வெளிச்சத்தை யுண்டாக்கச் சொன்னாய்? என்றான். அதற்குக் கறுப்பன் நான் ஆள்வரும் சந்தடி கேட்காமல் சொல்லவில்லையடா வீரா. சுருந்தை என்னிடங்கொடு. நீ குருட்டுப்பயல். உனக்குப் பகலில் பசு

மாடுதெரியாது. இரவில் எருமை மாடா தெரியப்போகிறது என்று சுளுந்தை வாங்கித் தூக்கிப்பிடித்து, அதோ பார்த்தாயா ? பாதையை விட்டு ஒருத்தி காட்டுக்குள் நுழைந்துபோகிறாள். என்று இருவரும் ஓடி கமலாக்ஷியை மறித்து, நீ யார் ? எங்குபோகிறாய் ? போகாதே, நில் என்றார்கள்.

கமலாக்ஷி.—ஐயா ! நான் ஓர் பரதேசி ; எங்காகிலும் சென்று பிழைக்கலாம் என்று போகிறேன். என்னை ஏன் மறுக்கிறீர்கள் ?

வீரன்.—எல்லா நகைகளும் போட்டுக்கொண்டு போகிறவளா பரதேசி ? போட்டிருக்கும் நகைகளைக் கழற்றி எங்களிடம் கொடுத்துப்போகலாம். சீக்கிரமாகக் கழற்றிக்கொடு.

கறுப்பன்.—இவள் விழிக்கிறாளடா, எண்டி என்ன உதைவேண்டுமா? அல்லது காதை அறுக்கவேண்டுமா ?

கமலாக்ஷி.—ஐயா ! தடை செய்யவில்லை ! இதோ பெற்றுக்கொள்ளுங்கள். (என்று தான் போட்டிருந்த நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள்.)

வீரன்.—அடே ! இவள் நம்மை ஏமாற்றப்பார்க்கிறாள். கையில் காலில் கழுத்தில் இருந்ததெல்லாம் கொடுத்தவள் மூக்குத்தியின் விலை அற்பமென்று அதைக்கொடுக்க இவளுக்கு மனம் வரவில்லை ! எண்டி அதைக்கொடுக்க மனமில்லையா ?

கமலாக்ஷி.—ஐயா ! அதை மறந்துவிட்டதே யல்லாமல் கொடுக்க மனமில்லாமல் அல்ல. (என்று மூக்குத்தியையுங் கழற்றிக்கொடுத்தாள்.)

கறுப்பன்.—இவ்வளவு நகைகளைப் போட்டுக்கொண்டு வந்தவள் வழிச்செலவுக்கு ஒன்றுங்கொண்டு வராமலா வந்திருப்பாய் ! மடியிலிருப்பதையும் கொடுத்து விட்டு நீ மகாராஜியாகப் போகலாம்.

வீரன்.—அடே கறுப்பா ! அகப்பட்ட நகைகளைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்ததால் மடியிலிருப்பதை நினைக்காமல் மறந்தேன். நல்ல வேளையாய் ஞாபகப்படுத்தினாய்.

மடியிலிருக்கும் சுந்தரம் கொடுத்த பையையுங் கொடுத்துவிட்டால் என்ன செய்கிறதென்று கமலாக்ஷி யோசித்துக் கொண்டிருப்பதைக் கறுப்பன் கண்டு, எண்டி ! என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறாய் ? நாங்களே உன் சேலையை அவிழ்த்து எடுத்துக்கொள்ள வேண்டுமா ? என்றான்.

அச்சொல்லைக் கேட்ட கமலாக்ஷி திடுக்குற்றுப் பயந்து ஐயா ! இதோ பையைக் கொடுத்தேன்; பெற்றுக்கொண்டு எனக்கு ஏதாகிலும் செலவுக்குக் கொடுங்கள். என்கையில் இதைவிட வேறொருகாசும் இல்லை என்று பையைக் கொடுத்தாள். சறுப்பன் பையைவாங்கி அவிழ்த்து வீரா ! எல்லாம் ரூபாயடா ! என்று எண்ணிப் பார்த்து ஐம்பது ரூபாய் இருக்கிறதடா என்றான்.

கமலாக்ஷி.—ஐயா ! என்னிடத்தில் ஒரு காசாகிலும் இல்லை. ஒன்றிரண்டு என்னிடம் கொடுத்தால் உங்களுக்குப் பெரும் புண்ணியமாகும்.

கறுப்பன்.—அடி பைத்தியக்காரி ! யானை வாயிற்போன கரும்பு திரும்புமா ? உன் சேலையை அவிழ்த்து உன்னைப் பரிசோதனை செய்யவேண்டியது கட்டாயமாக இருந்தும் உன் சொல்லை நம்பி விட்டுவிடுகிறோம். போய்ப் பிழைத்துக்கொள். வாடா வீரா ! இன்று நாம் நரிமுகத்தில் விழித்து வந்தோம். (என்று இருவரும் சென்றார்கள்.)

தன்னிடம் இருந்தவைகளையெல்லாம் பறிகொடுத்த கமலாக்ஷி அவர்கள் போகும் வழியைப் பார்த்திருந்து, தெய்வமே ! இனி என்ன செய்யப் போகிறேன் ! என்று அழுதுகொண்டே சாலைவழி இரவெல்லாம் நடந்து காலை நாலுமணிக்கு அதிக தூரத்தில் வெளிச்சத்தைக் கண்டு தைரியம்கொண்டு, அவ்விடம்போனால் யாராகிலும் இருப்பார்கள், அவர்களுடைய உதவியைப்பெறலாம் என்று வெளிச்சம் இருக்கும் இடத்திற்குப் போகும்பொழுது, " பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்" என்றபடி அடிபட்ட விரலில் அடிக்கடி அடிபட்டு விழுந்தும் பின் எழுந்து நடந்தும் நடக்க முடியாமல் உட்கார்ந்தும் வெளிச்சம் சமீபமாகிறதால் மெதுவாகப் போய்விடலாம் என்று அதிக கஷ்டப்பட்டு வெளிச்சத்திற்குச் சமீபமாக வந்து பார்த்து, ஆ ! கடவுளே ! இதைப்பார்க்கவா அதிக கஷ்டத்தோடு இவ்விடம்வந்தேன். வீட்டுக் கருகாமையில் யாராகிலும் குளிர்காய்ந்து கொண்டிருப்பார்கள் ! என்று வந்தால் இங்கு பிணம் வெந்துகொண்டிருக்கிறதே! என்று சுடுகாட்டைவிட்டு நெடுந்தூரம்சென்றபின், சிலவீடுகள் இருப்பதைக்கண்டு மகிழ்வுகொண்டு ஒரு வீட்டின் கதவைத்தட்டி, அம்மா என்று கூப்பிட்டாள். அவ்வீட்டில் பதில் ஒன்றுங் கிடைக்காததால் அவ்வீட்டை விட்டு மற்றொரு வீட்டின் கதவைத்தட்டிக் கூப்பிட்டாள். வீட்டுக்குள்ளிருந்து ஒருவர் யார் அங்கே ? என்று கேட்டார். அதற்குக் கமலாக்ஷி ஐயா ! நான் ஓர் ஏழை, சற்றுநேரம் உங்கள் வீட்டில் படுத்திருந்து போக இடந்தரவேண்டும், இது பெரும் புண்ணியமாகும் என்றாள். வீட்டுக்குள்ளிருந்தவன் ஏழையா ! கீழையா ! போபோ, இங்கு இடமும் இல்லை கிடையும் இல்லை என்றான். அவ்வீட்டை விட்டு மற்றோர் வீட்டின் கதவைத்தட்ட அந்தச் சத்தத்தைக்கேட்டுச் சில நாய்கள் குலைத்து வருவதைக்கண்டு கமலாக்ஷி தன் கால்விரல் உபத்திரவத்தையும் பார்க்காமல் ஓடியும் நாய்கள் துரத்திக் கொண்டுபோய் மேல்விழுந்து சேலையைக்கிழித்ததோடு விடாமல் பின் தொடர்ந்து வருவதைக்கண்டு பயந்து ஓடி ஒரு கிராமத்தை யடைந்து ஒரு வீட்டின் தெருத்திண்ணையில் படுத்துக் கண்ணை

மூடினாள். கண்ணை மூடிய சில நிமிஷங்களுக்குப்பின் அவ் வீட்டின் கதவு திறக்கப்பட்டு ஒரு கிழவி வெளியில் வந்து, ஆரடி அங்கு படுத்துக்கொண்டிருப்பவள்? சீ! எழுந்துபோ! நன் நாய் மெழுகி வைத்திருக்கும் இடத்தைக் கெடுக்கவந்தாள்; இனி அந்த விடத்தையும் மெழுகவைத்தாள்; இந்தக் கழுதைகளுக்கு என்ன சொன்னபோதிலும் கேட்காமல் திண்ணையில் படுத்துக்கொள்ளுகி நூர்கள். எண்டி போகிறாயா? அல்லது சாணைச்சட்டியிலுள்ளதை உன்மேல் ஊற்றுகிறதா? என்றாள். கமலாக்ஷி உடனே எழுந்து அம் மா! நான் போய்விடுகிறேன், உங்களுக்கந்த வருத்தம் வேண்டிய தில்லை என்று கடைத்தெரு வழியாக நடந்தாள். சூரியன் உதயமாகுந் தருணத்திலே கடைத்தெருவில் ஒரு பெண்பிள்ளை தோசை சுட்டுக் கொண்டிருக்கும் இடத்திற்குச்சென்று, அம்மா! ஒருதோசை கொடு க்கிறாயா என்றாள். அவள் எத்தனை காசுக்கு வேண்டும் என்று கேட் டாள்.

கமலாக்ஷி.—அம்மா! என்னிடத்தில் காசிருந்தால் நான் ஒன்றுக்கும் கவலை கொள்ளவேண்டியதில்லை. என்னிடம் இருந்ததை எல்லாம் திருடர் கையில் கொடுத்துவிட்டேன். எனக்கிரண்டொருதோசை கடனாகக் கொடுத்தால் ஒன்றுக்கு நாலாக அதன் விலையைத்தந்துவிடுகிறேன். நான் பட்டினியாக இருக்கிறேன்; கொடுத்தால் உனக்குப்பெரும் புண்ணிய மாகும்.

தோசைக்காரி.—நீ கெட்டிக்காரி! பொழுதுஎங்கே விடிந்தது? இங்கே கடன் வாங்க வந்தாய்! உன்னை முன்னறிவேனு பின்னறிவேனு! உனக்குக் கடன் கொடுத்துக் கணக்கெழுதிவைக்சவா! போடி போடி பைத்தியக் காரி! நான் கடன் கொடுத்துக் கடன் கொடுத்து என் தலை மொட்டை யாய் விட்டது.

அவ்விடத்தில் நிற்பதில் பிரயோசனமில்லையென்று கமலாக்ஷி ஓர் பழக் கடைக்குப்போய் நின்று கடைக்காரனைப்பார்த்து, ஐயா ஒருதுட்டு க்கு வாழைப்பழம் கடனாகக்கொடுங்கள். என்கையில் காசு கிடைத் தவுடன் கொடுத்துவிடுகிறேன். நான் அதிக பசியாக இருக்கிறேன் என்றாள்.

கடைக்காரன்.—அம்மா! வாருங்கள். உங்களுக்குக்கடன் கொடுக்காமல் பின் யாருக்குக் கடன் கொடுக்கப்போகிறேன்! எத்தனை ரூபாய்க்கு வேண்டும்? வண்டிகொண்டுவந்தீர்களா. (என்று பரிஹாசமாகப்பேசி னான்.)

கடைக்காரர்கள் காசுவாங்காமல் ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். நாம் வீ ணில் அவர்களை அடுத்துக்கேட்பது நமக்கவமானமேயன்றி ஒன்றும் பிரயோசனமில்லை, என்று கமலாக்ஷிபோகும்போது, ஒரு பழக்

கடைக்காரன் எலி கடித்தபழங்களை எடுத்து எறிவதைக்கண்டு அவை களை எடுத்துக்கொள்ளலாமா என்று எண்ணியவுடன் கண்களில் ஜலம் வடிய, நமக்கிந்த கதியா வந்தது ! இத்தருணத்தில் நம்முடைய தாய் பார்த்தால் உயிர்தரிப்பாளா ? நமது பிராணசினேகி வனசாக்ஷி கண்டால் சகிப்பாளா ? விஜயரங்கத்தண்ணண் கண்டால் மனம் பொறுப்பாரா ? பெரியவர் பார்த்தாலும் சகியாரே ! என்று அழுது, நாம் இனிக்கடைத்தெருவில் இருப்பது பிரயோசனமில்லை, அக்கிர காரத்துக்குச் சென்றால் ஒரு கவளம் அன்னம் கிடைக்காதா என்று கடைத்தெருவைவிட்டுக் கஷ்டத்தோடு நடந்து ஒரு கால்வாயை அடுத்துக் காலைக்கடனைமுடித்து அக்கிரகாரத்திற்சென்று ஒவ்வொரு வீட்டிலும் போய் நின்றாலும் அன்னங்கேட்க வெட்கப்பட்டு அந்த வீட்டில் கேட்கலாம், அடுத்தவீட்டில் கேட்கலாம், இந்த வீட்டில் கேட்கலாம், இதற்கடுத்த வீட்டில் கேட்கலாம் என்று திரிந்து ஒவ் வொரு வீடாய்ப் பார்த்துவருவதைக் கண்ட பிராமணன் ஒருவன் கமலாக்ஷியை அழைத்து,அம்மா ! நீ யாரைத் தேடுகிறாய்? எங்காகிலும் சிரார்த்தம் உண்டா ? யாரை அழைத்துப் போகப்பார்க்கிறாய் ? நான் வருகிறேன், யார் வீட்டில் சிரார்த்தம் ? என்றான்.

கமலாக்ஷி.—ஐயாவே ! நான் ஒருவரையும் தேடவில்லை. எனக்குப்பசி அதி கமாயிருப்பதால் என்பசியைத் தணித்துக்கொள்ளலாம் என்று வந்தேனி றேன். எனக்கு ஓர் கவளம் அன்னங்கொடுக்கும்படி உத்தரவளித் தால் புண்ணியமாகும். என்னுடைய பசியை இந்த வேளையில் தணியுங் கள். தங்களுக்கு அனேக நமஸ்காரம் செய்கிறேன். (என்று கெஞ்சிக் கும்பிட்டாள்.)

பிராமணன்.—காலையில் நமக்கேதாகிலும் கிடைக்குமா என்று நினைத்து உன்னைக்கூப்பிட்டுக் கேட்ட தோஷத்திற்காக என் மடியில் கைபோடப் பார்க்கிறாய். உனக்கு இலைபோட்டுப் பரிமாற ஒருவரும் இல்லை. போ போ. (என்று தூரத்தினான்.)

கமலாக்ஷியை அழைத்து ஒரு பிராமணன் போசிக்கொண்டிருப்பதைத்தூர த்தி லிருந்து பார்த்திருந்த ஒரு பிராமணஸ்திரீ கமலாக்ஷி வரும் பரி யந்தம் பொறுத்து அவளையழைத்து, அம்மா ! என்ன வேண்டும் ? யாரைத்தேடுகிறாய் ? என்றாள்.

கமலாக்ஷி.—தாயே! எனக்குப் பசி காதடைக்கிறது. கண் பஞ்சடைகிறது. என்கையில் ஒரு காசுமில்லை. ஒரு கவளம் அன்னம் நீங்களாவது போட் டால் உங்கள் குடும்பத்துக்குப் புண்ணியமாகும். என்னால் நடக்கவும் சக் தியில்லை.

பிராமணஸ்திரீ.—அடி ! உன்னைப்பார்த்தால் மணலிற் பிடுங்கிய வள்ளிக் கிழங்குபோலிருக்க உனக்கென்னகேடு ! எங்காகிலும் கூலிக்குக் குத்தக்

கூடாதா ? பிராமணர் வீட்டில் ஆளாக இருந்து பாத்திரங்கள் துலக்கக் கூடாதா ? போபோ. எங்கள் வீட்டில் அன்னம் இல்லை.

கமலாக்ஷி.—அம்மா ! தங்கள் வீட்டில் ஆளாக இருந்து இட்டவேலையைச் செய்கிறேன். என்பசியைத் தணியுங்கள்.

பிராமணஸ்திரீ.—அடி ! எனக்கு ஆளும் வேண்டாம் ; தோளும் வேண்டாம். வேண்டியவர்கள் வீட்டைத் தேடிப்போ. (என்று தன் வீட்டுக்குள் நுழைந்தாள்.)

அக்கிரகாரத்தில் பசியைநீக்கிக்கொள்ளலாம் என்றுநம்பிவந்தபோது நம்மைக்கண்டு ஒருவரும் மனமிரங்க வில்லையே ! ஆ ! தெய்வமே ! நான் இனி என் செய்வேன் ! எங்குபோய் நிற்பேன் ? யாரை அடுத்துக் கேட்பேன் ! என்று தெருத்தெருவாய்த் திரிந்து கொண்டிருந்தாள்.

ஒரு இடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த சிலவாலிபரில் ஒருவன் கமலாக்ஷியைச்சுட்டி, அடே ! அதோ அங்கு போகிற பெண்பிள்ளையைப் பார்த்தீர்களா ? என்ன சுந்தரமாக இருக்கிறாள் ! என்றான்.

ஒருவன்.—பிச்சை எடுக்கப்போகிறவர்கள் எல்லாம் உனக்குச் சுந்தரமாகவே காணப்படுவார்கள்.

மற்றொருவன்.—ஏன் ! அவளை அழைத்துவந்து தலைமுழுக்காட்டி நகைகள் போட்டு நல்ல வஸ்திரத்தைக் கொடுத்தால் சுந்தரமாக இருக்காளா ?

வேறொருவன்.—அடே ! ஒரு மரப்பொம்மைக்கு இரண்டொரு நகைகள் போட்டு ஒரு துணியைக் கட்டினால் அதுவும் அழகாகவே யிருக்கும். அவள் கட்டியிருக்கும் கிழிந்த சேலையையும், கழுத்தில் காதில் ஒன்றும் இல்லாததையும், அலங்கோலமாக இருக்கும் தலைமயிரையும் பார்த்தால் அவள் ஒரு பிச்சைக்காரியாகவே காணப்படுகிறது. அவள் வாய்மொழியைக் கேட்டால் உண்மையை அறியலாம்.

என்று அவளருகிற் சென்று, ஏ குட்டி ! நீயாரைத் தேடுகிறாய் ? என்றான். மற்றொரு வாலிபனும் நெருங்கி என்னையா தேடுகிறாய் ? என்றான். இருவர்சென்று கேட்டதைக்கண்ட மற்ற வாலிபரும் ஓடி கமலாக்ஷியைச் சுற்றி நின்று, என்னோடு வருகிறாயா ? என்று ஒருவன் கேட்பதும், வேறொருவன் இல்லை என்னோடு வர எண்ணங்கொண்டிருக்கிறாள் என்று ஏளனமாகப்பேசுவதுமாயிருந்த சமயத்தில் ஓர் அன்னியன் அவ்விடம் வந்து, என்னடா செய்கிறீர்கள் ? வழியிற்போவோரைத் தொந்தரை செய்வதா உங்களுக்குவேலை ? நான் சேவகரைக் கூப்பிடவா ? என்றான். சேவகர் என்று சொன்னவுடன் வாலிபர் பயந்து பலபக்கத்திலும் போய்விட்டதைக்கண்ட அன்னியன் கமலாக்ஷியருகிற் சென்று அம்மா ! நீ யாரைத்தேடுகிறாய் ? எங்குபோக வேண்டும் ? என்றான்.

கமலாக்ஷி.—அண்ணு ! நான் ஒருவரையும் தேடவில்லே. நான் இராத்திரி தனியாய் ஒரிடத்திலிருந்து வரும்பொழுது நான் போட்டிருந்த நகைக ளையும் ஒரு புண்ணியவதி கொடுத்த ரூபாயையும் திருடர்கள் வசம் கொடுத்து என் பசியைத் தணித்துக்கொள்ளத் தெருத்தெருவாய் திரிந் தும் ஒரு கவளம் அன்னமும் கிடைக்கவில்லே. (என்று துக்கத்தோடு சொன்னுள்.)

கமலாக்ஷி சொல்லியதைக்கேட்ட அன்னியன் கண்களில் நீர் ததும்பச் சில நேரம் மௌனமாயிருந்து பின் கமலாக்ஷியைப் பார்த்து, பெண்கள் சொல்லே நம்புவது கூடாதாயினும், நீ பசியால் வருந்துகிருயென்று கேட்டபின் ஒருதவியும் செய்யாமற்போவது நியாயமல்ல வென்று சொல்லி ஒரு ரூபாய் தன் மடியிலிருந்து எடுத்துக் கொடுத்து உன் பசியை யாற்றிக்கொள்ளென்று திரும்பினுன்.

கமலாக்ஷி.—அண்ணு ! நான் இந்த இடத்திற்குவந்து அதிககஷ்டத்தை அனுபவித்தும் என்பசியைத் தணித்துக்கொள்ள வகையில்லாமலிருந்த தால், நான் பசியினுல் இறப்பேன் என்றே நினைத்திருந்தேன். இத்த ருணத்தில் என் உயிரைக் காப்பாற்றினீர். இதை எளிதில் மறக்காமல் என் ஆயுள் காலமெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பேன்.

கமலாக்ஷி சொல்லிக்கொண்டிருப்பதை அன்னியன் நின்று கேட்காமல் போனபின், கமலாக்ஷி தனக்குக் கிடைத்த ஒரு ரூபாயை ஒரு இலக்ஷ மாக மதித்து, கடைக்குச் சென்று, காலணுகொடுத்துத் தோசைவாங் கிச் சாப்பிட்டு ஒரு சல்லிக்கு மோர்வாங்கிக் குடித்துத் திருப்தியடை ந்து, இந்த ஒரு ரூபாயை நாம் ஒரு மாதம் வரைக்கும் வைத்திருக்க வேண்டியதால் அதிகமாகச் செலவு செய்யக்கூடாதென்று கடைத் தெருவை விட்டுப்போகும்பொழுது, ஓர் பெரிய விருக்ஷத்தின் சமீபத் தில் ஓர் வைக்கோற் போர் இருக்கவும் அதற்கருகில் வீடில்லாமல் இருப்பதையும் கண்டு சற்றுநேரம் அவ்விடம் போய் உட்கார்ந்திருக்க லாம் என்று வைக்கோற் போரிடம் சென்று வைக்கோற் போற் மரத்தின் நிழலி லிருந்ததால் சற்றுப் படுத்திருக்கலாம் என்று படுத் தாள். அதிகநேரம் நடந்து வந்ததாலும் எட்டுநாள் சாப்பிடாமலிரு ந்து பசி நீங்கச் சாப்பிட்ட களேயாலும் கமலாக்ஷி படுத்து நன்ருய்த் தூங்கிக்கண் விழித்துப்பார்த்து, ஆ! இஃதென்ன இருட்டாய்விட்ட தே! காலேயில்படுத்தவள் இரவு பரியந்தமா தூங்கினேம்! இவ்விருட் டில் சென்று படுக்க இடம் தேடுகிறதைவிட இந்த வைக்கோற்போர் மேலானதாக இருக்கிறது, ஊர் அரவமும் அடங்கிவிட்டது என்று நன்ருய்ப்போர்த்துக்கொண்டு படுத்து நித்திரையில்லாமல் விழித் துக்கொண்டிருக்கும் பொழுது, யாரோ ஒருவர் வருகிற சந்தடிகேட்டு அரவம் ஒன்றும் செய்யாமல் இருந்தாள். கமலாக்ஷி படுத்திருந்த

வைக்கோற்போருக்கு எதிராக ஒருவன் நின்று பெருமூச்சுவிட்டு, ஆ! கடவுளே! என்னை என் இன்னும் உயிரோடுவைத்திருக்கிறீர்! நான் பெற்றோரை விட்டுவர மனமில்லாமலிருந்தும் என்பொருட்டு அவர்கள் தங்கள் இனத்தாரால் அவமானம் அடைந்து அதனால் தின் பப்படுகிறார்களென்று அறிந்த பின்னும், என்னுடைய நன்மையைக் கருதி அவர்களோடு இருப்பது அழகா? பெற்றபிள்ளையை விட மேலாக நடத்திவந்தவர்களை என் விருத்தாந்தம் என்ன என்று கேட் டிருந்தால் அவர்கள் சொல்லத் தடைசெய்யார்கள். நான் யாருக்குப் பிறந்தேனென்றும் அவர்களிடத்தில் எப்படி வந்தேனென்றும் அறி யாமலிருந்து காலம் கழித்து வந்த என்னை மிகவும் புத்திசாலி யென்று சொல்லிக்கொள்வது உலகில் கறுப்பாட்டை வெள்ளாடு என்று சொல்வது போலிருக்கிறது; நான் இன்ன ஜாதியான் என்ற றிந்துகொள்ளாமல் கமலாக்ஷியை விவாகஞ்செய்துக்கொள்ள எண் ணங்கொண்டு என் தாயாரை அனுப்பிப் பெண் கேட்கும்படிச் சொல்ல வேண்டுமென்று எண்ணி யிருந்தேனே! என் போலும் பேதை இருப்பார்களா? ஆ! கமலாக்ஷி நான் என்தாய் தந்தை யையும் சினேகனையும் விட்டுப்பிரிந்தகாலத்தில் உன்னை நான் மறந்தவனல்லன். உன்னை விவாகஞ்செய்ய எண்ணியிருந்தது போல் முடிந்திருந்தால், நீ எந்நாளும் தாய் தந்தை இன்ன ரென்று அறியாத ஒருவனுக்குப் பெண்சாதியானேனும் என்று துக்கங் கொண்டிருப்பாயே! அது தப்பியது தெய்வச்செயலே யன்றி வே றல்ல. ஐயோ! நான் உங்கள் வீட்டுக்கு வருங்காலத்தில் என்னை அண்ணாவென்று அழைக்கும்பொழுது எனக்குள் சிரித்து அண்ணன் என்றிவள் தற்காலம் அழைக்கிறாளே! நம்முடைய தாயார் பெண் கேட்டு அவளுடைய தாயாரும் ஒப்பினால் அப்பொழுது என்ன என்று கூப்பிடுவாள் பார்க்கலாம் என்றிருந்தேனே! அந்த எண்ணம் எவ் விதம் போனது! ஆ! ஆ! நான் இன்னும் இரண்டொரு நாள்களுக்குப் பின் என் இரகசியத்தை அறிந்திருக்கக் கூடாதா? அப்படி முடிந்திருந் தால் கமலாக்ஷி என்னை அண்ணன் என்று அழைப்பதை விட்டு அத் தான் என்று அழைப்பதைக்கேட்டாவது சந்தோஷப்பட்டிருப்பேனே! ஆ! கமலாக்ஷி! உன்னை விவாகஞ்செய்துகொள்ள எண்ணங்கொண் டிருந்தாலும் நான் என் பிறப்பின் குற்றத்தை யறிந்தபின் உன்னை மோசஞ்செய்து விவாகமுடிக்க என்மனம் எழாது. உன்னைக்கண்டு ஆசை கொண்டு விவாகம் செய்துகொள்ளலாம் என்றிருந்த எண்ணம் தவறியதால் இனி வேறொரு பெண்ணை விவாகஞ் செய்துகொள் ளேன். உன்னைக்கண்டு அண்ணன் தங்கை என்ற முறையோடு வார்த் தையாடினால் அதுவே போதுமென்றிருக்கிறேன். நீ என்னை அண்

ஞவென்று கூப்பிடும்பொழுது பெரியவர் என் அந்தரங்கக் கருத்தை யறிய என்னைப்பார்த்து வந்தார். அவர் என் கருத்தைத் தெளிவாயறி யாமலிருக்கவே காட்டிவந்தேன். நான் செய்ததும் எண்ணியதும் பாழாயினவா! ஆ! கமலாக்ஷி! நீயாவது என் சினேகன் சோமசுந்தர மாவது என்னை வளர்த்து வந்தவர்களாவது நான் இன்ன இடத்தில் இருக்கிறேன் என்று அறிந்தால் என்னை அழைக்க வருவீர்களே; அப்பொழுது தடைசொல்லாமல் உங்களோடு போகவேண்டியவ னைதால் நான் இருக்கும் இடத்தைத் தெரிவிக்காமல் இருக்கிறேன். நான் என்ன கஷ்டப்பட்டாலும் சாப்பாட்டுக்கே அலைந்தாலும் என் னால் என் செவிலித்தாயும் தகப்பனும் அவமானமடைய இடங்கொடு த்து அவர்களோடு போயிரேன். இவன் தாய் தகப்பன் இன்னார் என்றுசொல்ல வகையற்றவன். என்ன குலத்தாளை என்று பலர்பேச நான் அவ்வூரி லிருப்பதும் அழகல்ல. நான் எங்கு போனாலும் என் னுடைய ஊழ்வினை என்னை இன்னும் துன்பத்தில் அழுத்திக்கொண் டிருக்கிறது. என் எஜமானுடைய பெண்சாதி என் விஷயத்திற் செய்வது அடாத காரியமாக இருக்கிறது. இதைத்தடுத்துக்கொள்ள இந்த சுவர்ணபுரியை விட்டுப்போக வேண்டியவனாயிருக்கிறேன் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்தவன் சற்றுநேரம் மௌனமாயிருந்தான். அத்தருணத்தில் வேறொருவர் அவ்விடம் வந்து தம்பி விஜயரங்கம்! உன்னை எங்கெங்கு தேடுகிறது? இங்கு என் வந்தாய்? என்றதற்கு, அக்காள்! வீட்டில் அதிக ஒடுக்கமாயிருந்ததால் இவ்விடம் வந்தேன் என்றான்.

வந்தவள்.—தம்பி! நாமிருவரும் தனித்திருக்கும்பொழுது என்னை அக்காள் என்று கூப்பிட்டால் எனக்குக்கோபம் வரும். என்னை என்பெயர் சொல்லிக் கனகாம்புஜம் என்று அழைப்பாயேயானால் நான் அதிக சந்தோஷமடைவேன்.

விஜயரங்கம்.—அக்காள்! தாங்கள் சொல்வது தருமம் அல்ல. நான் வயிற் றுச்சோற்றுக்கு வேலைசெய்ய வந்தவனைத் தங்களுடைய நாயகன் அன் பாய் நடத்திவருகிறார். அவர் விஷயத்தில் அபசாரஞ் செய்வது அடாது என்று தங்களுக்கனேகமுறை சொல்லியிருந்தும் அதைக்கவனிக்காமல் பேசுகிறீர்கள். தங்களை அக்காளென்று அழைத்தபின் தங்களை என் னோடு பிறந்த சகோதரியைப்போல் எண்ணியிருக்கிறேன். அது விஷ யத்தில் சந்தேகங்கொள்ளாமல் தாங்கள் கொண்ட கருத்தை நீக்கிவிடு வதே உத்தமம்.

கனகாம்புஜம்.—தம்பி! உன் பழைய கதைகளை இன்னும் என்னிடத்தில் சொல்லவேண்டாம். அவைகளைக் கேட்டுக் கேட்டு என்காது செவிடாய் விட்டது. என் புருடன் எப்பொழுது வீட்டை விட்டுப்போவாரென்று

இந்தப்படுபாவி உன்மேல் தீரா மோகங்கொண்டிருப்பதாக கேட்டிருந்தேன். (160ம-பக்கம் பார்க்க)

வழி பார்த்திருந்தும் அது கைகூடிய காலத்தில் நீ தடைசெய்துகொண்டிருக்கிறாய். மணி பத்துக்கதிகமாகிறது. வீட்டுக்கு வா. (என்று கையைப் பிடித்திழுத்தாள்.)

விஜயரங்கம்.—(கையை விடுவித்துக்கொண்டு) அக்காள்! நான் தங்கள் வீட்டிலிருப்பது தங்களுக்குச் சம்மதமில்லாதிருக்குமாகில் வேறெங்கேயாகிலும் போய்விடுகிறேன்.

கனகாம்புஜம்.—கரும்பு தின்னக் கைக்கூலி கேட்கவா பார்க்கிறாய்? நீ என்னை விட்டுப்போகச் சுலபத்தில் முடியுமென்று நினைக்கிறாயா? அந்த எண்ணத்தைத் தற்காலம் விட்டு விட்டு என்னோடு கூடி எனக்குச் சுகத்தைக் கொடுத்தபின் உனக்கென்மேல் இஷ்டமில்லாதிருந்து வேறொரு மாதைத் தேடவிருப்பமிருந்தால் அப்பொழுது உன்னிஷ்டம் போல் செய்யலாம்; அதற்குமுன் நீபோய் விடுகிறேன் என்பது பிரயோசனப்படமாட்டாது. நான் உன்னிடத்தில் கூச்சம் விட்டுப் பேசியதால் என்னைக் கட்டியணைத்து ஒருமுத்தங்கொடு. (என்று நெருங்கினாள்.)

விஜயரங்கம்.—அக்காள்! என்னை நெருங்கி வரவேண்டாம். தாங்கள் சொல்வதும் செய்வதும் தெய்வத்துக்கடுக்காது. தங்களுடையவீட்டை விட்டு இந்நேரத்தில் இவ்வளவு தூரம் வந்து பேசிக்கொண்டிருப்பதை யாராகிலும் பார்த்தால் தங்களை என்னவென்று நினைப்பார்கள்! வீட்டுக்குப் போங்கள். இவ்விடத்திலிருந்து இம்மாதிரியான பேச்சைப் பேசுவது அழகல்ல.

கனகாம்புஜம்.—நான் வீட்டை விட்டு இவ்வளவு தூரம் வந்ததால் யாதொரு தோஷமும் இல்லை. இராக்காலத்திலே வைக்கோற்போரிடத்தில் யார் வரப்போகிறார்கள்? நான் இவ்விடத்தில் நின்று வார்த்தையாடும்படி நீயே கட்டாயப்படுத்துகிறாய். நான் உன்மேல் ஆசைகொண்டு சொல்வதையெல்லாம் கேட்டு உள்ளுக்குள் சந்தோஷப்படுவது எனக்குத் தெரியாமற்போனதென்று நினைக்கவேண்டாம். நீ பெருந்திருடன் என்று எனக்கு நன்றாய்த்தெரியும். உனக்கென்மேல் ஆசையில்லாமற்போனால் அன்று உன்னைக் கட்டியணைத்து முத்தங்கொடுத்தேனே! அப்பொழுது நீ என்ன செய்தாய்! அதை மறந்து விட்டேன் என்று நினைக்கிறாய். உன் எண்ணத்தை நான் அறிந்து கொள்ளவில்லையா? நான் முத்தங் கொடுக்கும்வரையிலும் சும்மாவிருந்து முகத்தை எடுத்துக்கொண்டபின் என்னைத் திமிறிக்கொண்டு போவதுபோல் நடித்தாயே! ஆ! ஆ! உன் சூதை இது பரியந்தம் நான் அறியவில்லை என்றே நினைத்திருந்தாய்! நான் உன்னைவிடச் சூதறிந்தவளென்று இன்று கண்டு கொண்டாயா? (என்று சிரித்தாள்.)

விஜயரங்கம்.—அக்காள்! தாங்கள் முற்றிலும் தங்களை மறந்தே பேசுகிறீர்கள். நான் வேறுபக்கம் திரும்பித் தாங்கள் வருவதைப் பார்க்காதிருந்த

பொழுது அடிமேல் அடிவைத்துச் சந்தடி செய்யாமல் எனக்குப் பின்னால் வந்து கட்டிப்பிடித்து முத்தமிட்டால் நான் எப்படி விடுவித்துக் கொள்ளுவேன்! உடனே திமிறினால் தாங்கள் கீழே விழுந்து அடிபட்டுத் தங்களுக்குக் கெடுதியுண்டாகுமேயெனப் பயந்திருந்ததை அறிந்தும் நான் உம்முடைய தீச்செய்கைக்கு உடன் பட்டதாக எண்ணி என்மேல் குற்றஞ்சுமத்துவது தங்களுக்கு நன்மையைத்தராது ; நான் தங்களுக்கிந்த ஆசையைவிட்டு விட மூன் வேண்டினது போல் இப்பொழுதும் வேண்டுகிறேன்.

அச்சமயத்தில் ஒருவன் கமலாக்ஷி படுத்திருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் வந்து கமலாக்ஷி அவ்விடம் இருப்பதைக் கவனிக்காமல் நின்றான்.

கனகாம்புஜம்.—இன்னும் என்ன சொல்லப்போகிறாய்?

விஜயரங்கம்.—என் மனதிலிருப்பது இன்னதென்று தாங்கள் கண்டுகொள்ளக்கூடும். அதை நான் விளங்கச் சொல்லவேண்டிய அவசியமில்லை. வீணில் இவ்விடத்தில் நின்று காலங்கழிக்கிறீர்கள்; தங்களை நினைத்து நினைத்து என்றும் துன்பத்திலிருப்பது அழகா? நான் சந்தோஷத்தோடிருக்கும்படி செய்ய மனங்கொள்ள லாகாதா? என் கவலையை நீக்கி விட்டால் தங்களை எந்நாளும் புகழ்ந்துகொண்டிருப்பேன்; நான் உண்ணும் உணவு என் உடம்பில் ஒட்டாமலிருக்கிற காரணம் இதைவிட வேறென்ன இருக்கிறது!

கனகாம்புஜம்.—தம்பி! உன்னை இன்னனென்று அறியாமல் உன் சொல்லை நம்பி அழைத்துவந்து மேலாக நடத்தி வருபவரது மனைவியின் மனம் பதற நடக்கவேண்டாம். நான் சொல்வதைக்கேள். வீணில் துன்பப் படுவாய்.

விஜயரங்கம்.—தாங்கள் என்ன சொன்னபோதிலும் எனக்கென்ன துன்பம் நேரிட்டாலும் நான் கொண்ட கருத்தை மாற்றேன்.

அத்தருணத்தில் மறைவாய்நின்று கேட்டிருந்தவன் சென்று விஜயரங்கத்தின் முதுகில் குத்தி, அடா! பாதகா! என்ன சொன்னாய்? உனக்கென்ன துன்பம் நேரிட்டாலும் நீ கொண்டகருத்தை மாற்றமாட்டாயா? என்று மறுபடியும் ஓர் குத்து குத்தி உனக்கு வேண்டிய மரியாதையை செய்து அனுப்புகிறேன் வாவென்று தள்ளிக்கொண்டு போகும் பொழுது, கனகாம்புஜத்தைப் பார்த்து, இந்தப்படுபாவி உன்மேல் தீராமோகங்கொண்டிருப்பதைக் கேட்டிருந்தேன். வெளிக்கு வந்த உன்னைப் பின்தொடர்ந்து வந்தான் என்று நன்றாய் விளங்குகிறது. நானிந்தத்துன்மார்க்கன் குணத்தை யறியாமல் வீட்டுக் கழைத்துவந்தது என்மேல் தப்பிதமே! என்னால் இப்பாதகனிடம் நீ அவமானமடைய நேர்ந்தது. என் தப்பிதத்தை மன்னிக்கவேண்டும், கனகாம்புஜம்! வாவென்று தன் பெண்சாதியையும் அழைத்துச் சென்றான்.

கனகாம்புஜமும் விஜயரங்கமும் பேசியிருந்ததை முதலிலிருந்து முடிவுபரியந்தம் கேட்டிருந்த கமலாக்ஷி துடிதுடித்து ஆ! தெய்வமே! இதென்ன அநியாயம்! பழியொருபக்கம்! பாவம் ஒருபக்கமாகச் சேர்ந்தது! ஐயோ! விஜயரங்கத்தண்ணன் மறைத்துப் பேசியது அவர்மேல் சந்தேகத்தைக்கொடுத்துவிட்டதே! விஜயரங்கத்தண்ணன்மேல் பழியேற்ற மத்தியில் வந்து நின்று சில வார்த்தைகளேமட்டுங்கேட்டுத் தன் பெண்சாதியை மேன்மையாகமதித்து அழைத்துக்கொண்டு போனானே! குற்றமற்றவரைக் குத்திக்குத்திக் கொண்டுபோன கொடுமைக்கு என்ன செய்கிறது! நான் சென்று உண்மையைச் சொன்னால் என் வார்த்தையை நம்புவார்களா? ஐயோ கொடும்பாவியாகிய என்னைவிவாகம் செய்துகொள்ள விருப்பம் கொண்டிருந்தவருடைய எண்ணத்தை யறிந்தவுடன் அவருக்கு இந்தத்துன்பம் வரவும் அதைப் பார்த்துச் சகித்திருக்கும் என்போல் பழிகாரி உலகத்தில் இருப்பாளா! ஐயையோ! நான் என்னசெய்வேன்! என்று அழுது அண்ணா! என் தீவினைப் பயனால் நான்படாதபாடு படுகிறேன். நீரும் என்போல் துன்பத்தை அனுபவிக்கவா இருந்தீர்! இந்தக் கண்காக்ஷியைக் கண்டறியவா இவ்விடம் வந்தேன்! அத்துன்மார்க்கர்களாகிய இரத்தினமும் மாணிக்கமும் என்னைக் கொண்டுபோக எத்தனித்த பொழுது அவ்விருவருடைய வல்லமையும் அடக்கி என்னை விடுவித்தீரே! அந்த வல்லமை இப்பொழுது இல்லாமலா போய்விட்டது! எஜமான் என்றும் உமக்கு ஆபத்தில் ஆதரித்தவரென்றும் எண்ணிவிட்டுவிட்டீர் போல் காணப்படுகிறது! ஐயோ! என்காதில் விழும்படி அடிக்கடி குத்தினானே! வழியில் எத்தனை அடி அடித்தானே! வீட்டுக்குக் கொண்டுபோனபின் என்ன செய்தானே! தன்னால் இச்சிக்கப்பட்டவன் அடிபடுகிறானேயென்று கனகாம்புஜம் சிறிதாவது மனத்தில் ஓர் உதவியும் செய்யாமல் நின்றானே! இஃதென்ன அநியாயம்! குற்றமற்றவரைக் கொடுமையாக நடத்துவதை நான் பார்த்திருப்பது தகாது. என்னுடைய சொல்லை நம்பினாலும் நம்பாமற்போனாலும் நான் சென்று உண்மையைச் சொல்லவேண்டியது கடமையென்றெழுந்து, அவர்கள் போனவழியை நிதானத்தாலறிந்து நடந்து ஒருவீட்டுக்கருகில் கல்தடுக்கி விழுந்து மூர்ச்சையானாள்.

15-ம் அத்தியாயம்.

இலக்ஷ்மிபுரம் என்கிற கிராமத்தில் ஒரு மச்சுவீட்டுக்குள் ஓர் அறையில் ஒரு பெண்படுத்திருக்க அவளருகில் ஒரு புருடன் உட்கார்ந்து சில நேரம் அவள் தூங்குகிறதைப் பார்த்திருந்து மெதுவாக அவன் தேகத்தில் கையைவைத்துத் தடவிக்கொடுத்துக் காளியாயி! இன்னுமா தூக்கமா? மணி எட்டாகிறதே! எழுந்திருக்கவில்லையா? என்றான்.

காளியாயி கண்களே விழித்துப் பார்த்து மணி எட்டானுல் என்ன! பத்தானுல்தா னென்ன? என்று சேலையை இழுத்துப் போர்த்துக் கொண்டாள்.

புருடன்.—காளியாயி! உன்னுடைய தாய்தந்தை இறந்து எல்லாச் சடங்கு களும் முடிந்தும் நீ இவ்விடம் வந்தபின் தூங்கிக்கொண்டு வருவார் போ வாரோடு வார்த்தையாடாமல் இருப்பது அழகல்லவே! யாவரும் இறக்க வேண்டியவர்களே! நீ அதிக துக்கப்படுவதிற் பலனென்ன? எழுந்து குளித்துத் தாகத்துக்குச் சாப்பிடு.

காளியாயி.—ஐயா! வருக. இத்தனே நாள் இல்லாத சிரத்தை இன்று எங்கிருந்து வந்தது? உங்களுடைய வார்த்தையைக் கேட்டா நான் எழுந் திருக்கவேண்டும்? குளிக்கவேண்டும்? தாகத்துக்குச் சாப்பிடவேண்டும்? ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று அறியீரா? போதும் உமது உபசரணே. நான் அக்காலத்தில் ஆள்மேல் ஆள்அனுப்பி என்னே அழைத்துப்போக வாருங்கள் என்றபொழுது எட்டிப்பார்க்க மனம் வராமல், இப்பொழுது எங்கிருந்து வந்தீர்கள்? என் தாய்தந்தை யைக் குறித்து வியசனப்படுவது கூடாதென்ரு புத்தி சொல்லவந்தீர்! ஐயா! போதும் போதும்! உம்முடைய புத்தியைக் கொண்டுபோய் வே ண்டியவர்களுக்குக் கொடுக்கலாம். எனக்கு வேண்டாம். எனக்கிருக் கும் புத்தியை உம்மைப்போல் இருக்கும் ஆயிரம் பேருக்குக் கொடுக்க முடியும். நான் எழுந்து உட்கார்ந்து வருகிறவர்களோடெல்லாம் இழவு கொடுக்கவா இருக்கிறேன்? ஆத்தாள் செத்தாலென்ன அப்பன் செத்தா லென்ன? நான் ஏன் அவர்களுக்காக அழவேண்டும்? அவர்கள் ஆஸ்தி யை எடுத்துக்கொள்ளுகிறவர்கள் அழட்டும். தாங்களெழுந்து போக லாம். இப்பொழுதுதான் கண்கள் சோர்வடைந்து தூங்கத் தொடங்கி னேன். அதைக்கெடுக்க வந்தீர்.

புருடன்.—காளியாயி! இரவெல்லாம் தூங்காமல் இப்பொழுதா தூங்கப்போ கிறுய்? உன்னே அழைத்துப்போகும்படி ஆள் அனுப்பிய காலத்தில் என் வேலே அதிகமாய் இருந்ததாலும், நீயும் உன் தாய் தந்தையும் சேர் ந்து மஞ்சன்மணியைத் துரத்திவிட்டபின் உன் தாய் தந்தை மரிக்க இருக்கும்பொழுது அவர்களுக்கு யாதொரு துணேயும் இல்லாமலிருக்க விட்டு உன்னே அழைத்துவந்தால் ஊரார் கேவலமாகப் பேசுவார்க ளென்று நான் நினைத்தாலும் வரா ல் இருந்தேன். அது விஷயத்தில் என்மேல் குற்றமிருந்தாலும் மன்னிக்கவேண்டும்.

காளியாயி.—அடா படுபாவி! என்ன சொன்னுய்? மஞ்சன்மணியை வீட் டைவிட்டு நானுமா துரத்தினேன்? கொண்ட பெண்சாதிமேல் குற்றம் சொல்லும் கொடும்பாவி! என்மேல் பழியேற்ற எண்ணங்கொண்டிரு ந்த உன்னே வாரிக்கொண்டு போகார்களா! ஊரில் வருகிற வாந்திபேதி

உனக்கு வராதா ! நீ நன்றாய் இருப்பாயா ! நீயே என் தலைமாட்டுக் கொள்ளியாயிருந்து என்னைத் தூற்றிவைக்க இருக்கிறாயே! சண்டாளா!

என்று படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்து தலைமயிரை விரித்துப்போட்டுத் தாய் தந்தையர்மேல் ஒப்பாரி சொல்லி அழுதாள்.

புருடன்.—காளியாயி ! நீ என் அழுகிறாய் ! அழவேண்டாம். இவ்வூரில் அனேகர் என்னிடம் வந்து " உன் பெண்சாதி மனைன்மணியைத் துரத்திவிட்டாளென்று சொல்லுகிறார்களே !" அது உண்மையா என்று கேட்டதால், நெருப்பில்லாமற் புகை எழாதென்றெண்ணி உன்னிடம் சொன்னேன். இதற்காக வருத்தப்படவேண்டிய காரணமில்லை !

காளியாயி.—நான் மனைன்மணியைத் துரத்தினேன் என்று எந்தத்தேவடியாள் சொன்னாள் ? எந்தக் கொடும்பாவி சொன்னான் ? அவர்களை என் முன் கொண்டுவா ? அவர்களுக்குப் புத்தி வரும்படி இந்தத்துடைப்பத்தால் அடிக்கிறேன். நீ அவர்களைக் கொண்டு வராமல் என்னெதிரில் நின்றிருப்பாயேயானால் இதனால் உன்னை அடிப்பேன் பார். (என்று அருகிலிருந்த துடைப்பத்தை எடுத்தாள்.)

புருடன்.—காளியாயி ! ஊராரைக் கோபித்துப் பேசுவது அழகல்ல ! அவர்கள் கேள்விப்பட்டது உண்மையாவென்று கேட்டார்கள். அவர்கள் என்னைக் கேட்டதுபோல் உன்னை நான் கேட்டேன். குற்றம் என்மேல் இருப்பதால் என்னை மன்னிக்கவேண்டும்.

காளியாயி.—அடா நாயே ! நீயும் மனிதனென்று என் பிறந்தாய் ? வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று உண்மையை அறியாமல் எவ்விதம் பேசலாம் ? இந்தப்புத்தி உனக்குக் கற்றுக்கொடுத்தவர் யார் ? உன் ஆத்தாளா ? உன் அப்பனா ? உன்னையும் உனக்குப்புத்தி கற்றுக்கொடுத்தவர்களையும் இந்தத்துடைப்பத்தால் அடிக்காமல்விடேன். (என்று துடைப்பத்தை எடுத்துக்கொண்டு எழுந்தாள்.)

சமீபத்திலிருந்தால் அடிவிழும் என்று பயந்து புருடன் தூரமாக நின்று காளியாயி ! நான் செய்தது குற்றம், அதைமன்னி, என்று கேட்டபின் கோபங்கொள்வது புத்திசாலிகளுக்கழகல்லவே ! நீ கோபத்தைவிட்டுக் கையில் இருப்பதைக் கீழேபோடு. (என்று வேண்டினான்.)

காளியாயி.—அடா, சண்டாளா ! உன்னை அடிக்காமல் என்கோபம் தீராதடா. (என்று நெருங்கினாள்.)

அவ்விடம் நின்றிருந்தால் அடிபடவேண்டியதாக நேரிடுமென்று புருடன் ஓடினான். காளியாயி அவனைவிடாமல் பின் தொடர்ந்து தெருவாயிற்படிவரையில் சென்று, நல்லது, உன்னைப்பார்த்துக்கொள்ளுகிறேன் என்று வீட்டுக்குள் வந்து சமையலறைக்குள் நுழைந்து, இந்தப் பாழும் வீட்டில் வேலைகளெல்லாம் அப்படியே கிடக்கின்றன ; அப்பாடா என்று சில நாள் அங்கிருந்தவளை இன்னும் சிலநாள் விட்டு

வைக்கக் கூடாதென்று இங்கு புழுக்கைவேலைசெய்ய அழைத்துக் கொண்டுவந்து விட்டார்கள். இந்தச்செம்பைத்துலக்கி எத்தனை நாளானதோ! நான் வந்து துலக்குவேன் என்றல்லோ வைத்திருக்கிறார்கள் என்று செம்பைக்கையில் எடுத்தாள். அருகிலிருந்த அவள் மாமியார் அம்மா, காளியாயி! காலையிலெழுந்து தெருவில் சாணம் தெளித்துக் கோலமிட்டுப் பாத்திரங்களையெல்லாம் துலக்கிச் சட்டிப் பானைகளை யெல்லாம் கழுவி அடுப்பங்கரைமெழுகி அடுப்புப் பற்ற விட்டு உலை வார்த்துவைத்து மிளகாய் அரைக்கிறேனே! செம்பு துலக்கவில்லையென்று சொல்லுகிறாயே என்றாள்.

காளியாயி.—ஆம்! ஆம்! நீ செய்தவேலைகளெல்லாம் தெரியாமலா இருக்கின்றன? தெருவில் தெளித்தசாணம் கட்டியும் முட்டியுமாக இருக்கிறது. போட்டிருக்கும் கோலத்தைப் போவாரும் வருவாரும் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அடுப்பிலுள்ள சாம்பலை அள்ளி எறியாமல் அடுப்பைப் பற்றவைத்துவிட்டாய்! நன்றாய்க்கழுவி உலையூற்றிவைத்திருக்கிறேன் என்ற பானையில் நேற்றுவடித்த கஞ்சிப் பற்று அப்படியே இருக்கிறது. அடுப்பங்கரை மெழுகியபின் அதில் ஒரு கோலம் போட்டால் என்ன குறைந்துப்போகும்? அம்மியில் வைத்தசைக்கும் மிளகாய் பாதி கீழே விழுந்திருக்கிறது. போதும் போதும் நீ செய்த வேலை! எழுந்துபோ, என்னால் முடிந்தால் செய்துகொள்ளுகிறேன். முடியாமற்போனால் அவைகள் அப்படியே கிடக்கட்டும்.

காளியாயின் மாமியார் தன் மருமகள் சொல்லுவதுபோல் மிளகாய் அம்மியின்கீழ் விழுந்திருக்கிறதோ என்று பார்த்து நசுக்குண்ட மிளகாயின்தோல் ஒன்றிருப்பதை எடுத்துப்போட்டுக்கொண்டு மிளகாய் அரைத்துக்கொண்டிருந்தாள்.

காளியாயி.—காலையிலெழுந்து முடியாத வேலைகளையெல்லாம் முடித்து வைத்தவள் ஒரு செம்பு தண்ணீர் சுடவைத்துக்கொடுத்துப்பின் உலை வார்த்துவைத்தால் என்னகெட்டுப்போகும்? நான் இங்குவந்தது ஒவ்வொருவருக்கும் துக்கமாகவே இருக்கிறது.

மாமியார்.—நீ வந்தநாள் முதல் காலையிலெழுந்து குளிக்காததால் வெந்நீர் வைக்கவில்லை.

காளியாயி.—எழுந்துவராமல் எப்பொழுதும் படுத்துக்கொண்டிருப்பாளென்று பார்த்தாயோ? நான் எத்தனை நாள் படுத்திருந்தாலும் உனக்குச்சம்மதந்தானே! நான் எழுந்திருக்கவேண்டும், குளிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் வெந்நீர் வைத்திருக்கமாட்டாயா?

மாமியார்.—அம்மா காளியாயி ! உலைக்கு வார்த்து வைத்திருக்கும் தண்ணீர் கொதிக்கிறதுபோலிருக்கிறது. அதை விளவினுல் ஒரு அண்டா வெந் நீராகும். அதை ஊற்றிக் குளித்தபின் வேறு உலை வார்த்து வைக்கி றேன். (என்று எழுந்து விளவிக்கொடுத்தாள்.)

காளியாயி.—கால்கழுவப் போதாத தண்ணீரில் தலைமுழுகச் சொல்லுகிறாய்! நல்லது அம்மா ! நான் ஆதரவற்றவளானேன். ஆளுக்கொருபக்கம் என் னைப்படுத்தவேண்டிய பாடுகளையெல்லாம் படுத்துங்கள்.

என்று மாமியார் தன்னுடைய கைகால்களைப் பிடித்துத் தேய்க்கக் குளித் துக், கட்டிக்கொண்டு குளித்த சேலையை அப்படியே போட்டுவிட் டுப் போய்த் தலைமயிரை உலர்த்திக்கொண்டு தெருவாயிற்படியில் நின்றிருந்தாள். மாமியார் தன் மருமகள் கட்டிக் குளித்த சேலை அப்படியே கிடந்தால் அவளுக்குக் கோபம் வருமென்று பயந்து அதைப்பிழிந்து உலரப்போட்டுச் சாதம் வடித்து மருமகளிடத்தில் சென்று, அம்மா, காளியாயி ! என்னகறி செய்கிறதென்று கேட்டாள்.

காளியாயி.—நான் வந்தநாளாய் என்னைக் கேட்டுக்கொண்டா கறி செய் தாய் ? போ, போ, உனக்கிஷ்டமான கத்தரிக்காய் புளிக்குழம்பும், உருளைக்கிழங்குபுட்டும், புடலங்காய்ப் பொரியலும், வாழைத்தண்டும் பச்சைப்பருப்பும் கூட்டமுதும் செய்துகொள். நான் இந்த வீட்டுப் புழுக்கையானதால் என்னை ஏன் கேட்கவேண்டும் !

மாமியார் மருமகள் இஷ்டத்தை யறிந்து அவள் சொல்லிய கறிவகைகளைச் செய்திருந்தாள். காளியாயி தெருவாசலில் நின்றே தன்னை யறிந்த வர்களிடம் வார்த்தையாடிக்கொண்டே பொழுதைப் போக்கினுள்.

காளியாயின் மாமனுர் சமையலறைக்குள் சென்று, அன்னபூரணி ! நான் காலையிலெழுந்து குளத்தில் நீராடி வந்தபின் நெடுநேரம் வாசித்துக் கொண்டிருந்துவிட்டேன் ; எனக்குச்சாப்பாடு போடுகிறுயா ? எனக்குப் பசி யதிகமாக இருக்கிறது என்று கேட்டார்.

அன்னபூரணி.—காளியாயிக்குச் சாப்பாடு போட்டபின் உங்களை அழைத்துப் போடுகிறேன். நீங்கள் இன்னும் சற்றுநேரம் இருங்கள்.

அன்னபூரணி புருஷன்.—காளியாயி சாப்பிட நேரம் செல்லும். எனக்குப் பசி யதிகமாயிருப்பதால் எனச்கு முன் போட்டுவிடு. (என்று உட்கார்ந்தார்.)

அன்னபூரணி தன் புருஷனுக்கு அன்னம் வட்டித்து அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது காளியாயி சமையலறைக்குள் வந்து, பார்த்தீர்களா ! எல்லாரும் சாப்பிட்டபின் ஏதாகிலும் மிருதியிருந் தால் பார்த்துக்கொள், இல்லாமற் போனுல் சட்டிப்பானையைக் கழு

விச் சாப்பிடென்று என்னே விட்டுவிட்டார்களே ! நானும் ஆதரவற்ற வளானேன் ! தெய்வமே ! எனக்கிந்த விதியா விதித்தாய் ! என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதாள். அத்தருணத்தில் அவள் புருஷன் சமையலறைக்குள் வந்து தன் தாயாரைப்பார்த்து, காளியாயி ஏனம்மா, அழுகிறாள்? என்றான்.

அன்னபூரணி.—ஒன்றும் விசேடம் நடக்கவில்லே அப்பா பஞ்சநாதம் ! உன் தகப்பனுருக்குப் பசி அதிகமென்றதால் அவருக்குச் சாப்பாடு போட்டேன். அதற்கு உன் பெண்சாதி எல்லாரும் சாப்பிட்டபின் பானையைக் கழுவிய தண்ணீரைச் சாப்பிடத் தன்னே விட்டார்கள் என்று அழுகிறாள்.

பஞ்சநாதம் தகப்பன்.—இன்று காளியாயி எழுந்து வெளியில் வந்ததை நான் அறியாமற்போனதால் எனக்குச் சாப்பாடு போடென்றேன்.

பஞ்சநாதம்.—காளியாயி! நீ செய்வதை அண்டை அசலில் அறிந்தால் என்ன சொல்லுவார்கள் ? அப்பா சாப்பிட்டபின் நீ சாப்பிட்டால் என்ன கெட்டுப்போனது ? வீணில் எல்லாருக்கும் தொந்தரவு கொடுப்பது உனக்கு அழகாயிருக்கிறதா ?

காளியாயி.—அடா படுபாவி ! நீ காலையில் என்னே அடித்தது போதாதென்று இப்பொழுதும் அடிக்கவந்தாய் ! வாடா ! அடியடா ! நான் பழிபோட்டு விடுகிறேன். (என்று அருகிற்கிடந்த கட்டையொன்றை எடுத்து அடித்தாள்.)

அடித்த அடி தன்மேல் விழாமல் பஞ்சநாதம் தட்டிவிட்டுக் காளியாயின் கையிலிருந்த கட்டையைப் பிடுங்கி எறிந்து இது உனக்கு நன்மையைத் தராதென்றான்.

தன் கையிலிருந்த கட்டைபோனபின் அவள் தன்புருடன் தலேமயிரை எட்டிப்பிடித்துக் கொண்டாள். பஞ்சநாதம் தன் தலேமயிரை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்துகொண்டிருக்க, அவன் தாய்-அடி ! என்னடி புருடன் தலேமயிரைப் பிடித்துக்கொண்டாய் ! தலேமயிரை விட்டுவிடடி! என்று காளியாயி கையிலிருந்த தலேமயிரை விடுவிக்கமுயன்றாள். அடி நீயுமா வந்து என்னே அடிக்கவருகிறாய் ? என்று மாமியார் தலேமயிரை இழுத்துக் கீழே போட்டு உதைத்தாள். இவைகளேப் பார்த்திருந்த காளியாயின் மாமனுர் உன் புருடன் தலேமயிரை விட்டுவிடு என்று காளியாயின் கையைப் பிடித்தார். அடா, கிழவா ! நீயுமா வந்தாய் ! என்று மாமனுர் கன்னத்தில் அறைந்தாள். பஞ்சநாதம் தன் தலேமயிரை விடுவித்துக்கொண்டு காளியாயியைப் பிடித்துத்தள்ளித் தன் தாயைத்தூக்கி உபசரித்தான். மாமனுர் மருமகளிடம் பட்ட

மாமியார்.—அம்மா காளியாயி ! உலேக்கு வார்த்து வைத்திருக்கும் தண்ணீர் கொதிக்கிறதுபோலிருக்கிறது. அதை விளவினுல் ஒரு அண்டா வெந் நீராகும். அதை ஊற்றிக் குளித்தபின் வேறு உலே வார்த்து வைக்கி றேன். (என்று எழுந்து விளவிக்கொடுத்தாள்.)

காளியாயி.—கால்கழுவப் போதாத தண்ணீரில் தலேமுழுகச் சொல்லுகிறாய்! நல்லது அம்மா ! நான் ஆதரவற்றவளானேன். ஆளுக்கொருபக்கம் என் னேப்படுத்தவேண்டிய பாடுகளேயெல்லாம் படுத்துங்கள்.

என்று மாமியார் தன்னுடைய கைகால்களேப் பிடித்துத் தேய்க்கக் குளித் துக், கட்டிக்கொண்டு குளித்த சேலேயை அப்படியே போட்டுவிட் டுப் போய்த் தலேமயிரை உலர்த்திக்கொண்டு தெருவாயிற்படியில் நின்றிருந்தாள். மாமியார் தன் மருமகள் கட்டிக் குளித்த சேலே அப்படியே கிடந்தால் அவளுக்குக் கோபம் வருமென்று பயந்து அதைப்பிழிந்து உலரப்போட்டுச் சாதம் வடித்து மருமகளிடத்தில் சென்று, அம்மா, காளியாயி ! என்னகறி செய்கிறதென்று கேட்டாள்.

காளியாயி.—நான் வந்தநாளாய் என்னைக் கேட்டுக்கொண்டா கறி செய் தாய் ? போ, போ, உனக்கிஷ்டமான கத்தரிக்காய் புளிக்குழம்பும், உருளேச்சிழங்குபுட்டும், புடலங்காய்ப் பொரியலும், வாழைத்தண்டும் பச்சைப்பருப்பும் கூட்டமுதும் செய்துகொள். நான் இந்த வீட்டுப் புழுக்கையானதால் என்னே ஏன் கேட்கவேண்டும் !

மாமியார் மருமகள் இஷ்டத்தை யறிந்து அவள் சொல்லிய கறிவகைகளேச் செய்திருந்தாள். காளியாயி தெருவாசலில் நின்றே தன்னே யறிந்த வர்களிடம் வார்த்தையாடிக்கொண்டே பொழுதைப் போக்கினுள்.

காளியாயின் மாமனூர் சமையலறைக்குள் சென்று, அன்னபூரணி ! நான் காலேயிலெழுந்து குளத்தில் நீராடி வந்தபின் நெடுநேரம் வாசித்துக் கொண்டிருந்துவிட்டேன் ; எனக்குச்சாப்பாடு போடுகிறுயா ? எனக்குப் பசி யதிகமாக இருக்கிறது என்று கேட்டார்.

அன்னபூரணி.—காளியாயிக்குச் சாப்பாடு போட்டபின் உங்களே அழைத்துப் போடுகிறேன். நீங்கள் இன்னும் சற்றுநேரம் இருங்கள்.

அன்னபூரணி புருஷன்.—காளியாயி சாப்பிட நேரம் செல்லும். எனக்குப் பசி யதிகமாயிருப்பதால் எனக்கு மூன் போட்டுவிடு. (என்று உட்கார்ந்தார்.)

அன்னபூரணி தன் புருஷனுக்கு அன்னம் வட்டித்து அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது காளியாயி சமையலறைக்குள் வந்து, பார்த்தீர்களா ! எல்லாரும் சாப்பிட்டபின் ஏதாகிலும் மிகுதியிருந் தால் பார்த்துக்கொள், இல்லாமற் போனுல் சட்டிப்பானேயைக் கழு

ஓரறை போதுமானதென்று கைகழுவித் தெருத்திண்ணையில்போ யுட்கார்ந்தார். பஞ்சநாதம் தன் தாயை அழைத்துப்போய் வேறோர் அறையில் விட்டு, அம்மா! இனி ஒரு நிமிஷம் காளியாயியை இந்த வீட்டில் இருக்கவிடேன். அவளே வெளியில் தள்ளிக் கதவைச் சாத்தி வருகிறேனென்று கோபமாகத் திரும்பினான். உடனே அவன் அன்னை தன் மகன் கையைப்பிடித்துக்கொண்டு, அப்பா, பஞ்சநாதம்! அறியாதவள்மேல் கோபங்கொள்ளலாமா? அவள் பெற்றோரைப் பறி கொடுத்துவிட்டதால் அவளுக்கு ஒருவரும் ஆதரவில்லை யென்று அவள் விஷயத்தில் கொடுமைசெய்து துரத்தி விட்டோம் என்பதா கப் பார்க்கிறவர்களெல்லாம் சொல்லுவார்களே! அதை நினைத்துப் பார்க்கவேண்டாமா? அவள் அவ்விதம் செய்தாள், நான் இவ்விதம் செய்தேன் என்று கேவலமாக முடியுமே! இன்று அவளுக்கு அதிக பசியாயிருந்ததால் தனக்குச் சாப்பாடு விரைவில் போடவில்லை என் றழுதாள். சாப்பாடு போடவில்லை யென்று அழுகிறவர்கள் யார்? சிறு குழந்தைகளல்லவா? சிறு குழைந்தையைப்போல் ஒன்றைச்செய்தால் அதைக்குற்றமாகக் கொள்ளலாமா? நாலே பெண்ணுக்கேமாறிய பெரும்பாவி! என் வயிற்றிற் பிறந்த பெண்களை இருந்து இவ்விதம் செய்தால் அவளைத் துரத்திவிட எண்ணங்கொள்ளுவாயா? நான் காளியாயியைப் பெற்ற பெண்ணைப்போல் பார்த்துவருவதால் அவ ளும் என்னைச்சொந்த தாயைப்போல் எண்ணிச்செல்வத்தோடு பேசுகி ருள். அதைக்குற்றமாகக் கொள்ளக்கூடாதென்று தன் மகனுக்குச் சமாதானம் சொல்லிச் சமையலறைக்குள் சென்றாள். பஞ்சநாதத் துக்கு வந்த கோபம் அவன் தாயார் சொல்லியவைகளைக் கேட்டுச் சிறிது அடங்கினாலும், தன் தகப்பனை அடித்தாளே! அவளை வீட் டில் வைத்திருப்பது அடாதென்று வெளியிற் போனவன் தன் தந்தை திண்ணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அப்பா! இது என்ன அநியாயம்! இப்படிப்பட்டவளை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பது தகுமா? என்றான்.

பஞ்சநாதம் தந்தை.—என்னடா! அறியாதவள் என்னவோ செய்துவிட்டா ளென்று கோபத்தோடு பேசுகிறாய்? நீ சாப்பிட்டாயா? காளியாயி சாப் பிட்டாளா? கோபமாக இன்னும் சாப்பிடாமல் இருக்கிறாளோ என் னவோ தெரியவில்லையே! நான் சற்றுநேரம் பொறுத்துச்சாப்பிட்டிருந் தால் அவளுக்குக் கோபம் வந்திராதே! என்னால் அவளுக்குக் கோபம் வரும்படி நேரிட்டது. (என்று துக்கப்பட்டார்.)

பஞ்சநாதம்.—அப்பா! வீட்டுக் குடித்தனத்தைப் பார்க்க வந்த மருமகள் மாமனாரைக் கிழவா என்று அழைப்பது அழகா? இவளைத் துரத்திவிட

வேண்டுமென்று என் தாயாரிடம் சொன்னபோது அவர்கள் என் இஷ்டத்திற்கு உடன்படா திருக்கிறார்கள். இந்தக்கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை.

பஞ்சநாதம் தந்தை.—அப்பா, பஞ்சநாதம்! காளியாயி எனக்குப் பௌத்திரி முறையாக வேண்டியதால் அவள் சிறுகுழந்தையா யிருக்கும்பொழுது சிலவேளை என் பெயர் சொல்லி, சதானந்தமுதலியா ரென்றும் கிழவா என்றும் அழைப்பதுபோல் இப்பொழுதும் கிழவா என்றாள். அதற்காக நான் கோபங்கொள்ள வில்லையே!

பஞ்சநாதம்.—தங்களை அவமரியாதையாகக் கூப்பிட்டது தோஷமில்லை என்றாலும் கன்னத்தில் அறைந்ததைக் கவனிக்க வேண்டியதில்லையா!

சதானந்த முதலியார்.—விளையாட்டுக்கு என்னைக் கன்னத்தில் தட்டியதா தப்பிதம்? நீ பெரும் பைத்தியக்காரன். காளியாயி அறியாத குழந்தை, அவளுக்கு என்னதெரியும்? ஒரு பிள்ளை இரண்டு பிள்ளை பெற்றபின் யாவும் தானே அறிந்து கொள்ளுவாள். பொம்மையை வைத்து விளையாடும் பெண்ணை நாம் கொண்டுவந்து உலக வழக்கமெல்லாம் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று எண்ணுவது கூடாதே. அவள் இன்னும் சாப்பிட்டாளோ இல்லையோ? (என்று வீட்டுக்குள் சென்றார்.)

தன் தாய்தந்தையர் காளியாயியின் துர்க்குணத்தை நீக்க இடம்கொடாமலிருகிறார்களை யென்று துக்கப்பட்டுப் பஞ்சநாதமும் வீட்டுக்குள் போனபொழுது, தன் தாயாரும் தந்தையும் காளியாயியைச் சாப்பிட வேண்டிக்கொண்டிருப்பதைக் கண்டு, காளியாயி! உன் இஷ்டம் போல் நடக்கவிட்டு உன்னைச் சாப்பிட வேண்டுவோர் கருத்துக்கு உடன்படாமல் இருப்பது நன்றல்ல; சாப்பிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்து என்றான்.

காளியாயி.—நீங்கள் மூவரும் சேர்ந்து முன் அடித்தது போதாதென்று இப்பொழுதும் அடிக்கவா வந்தீர்கள்? அடித்துக் கொல்லுங்கள், நான் திக்கற்றவளானேன் தெய்வமே! (என்று அழுதாள்.)

அன்னபூரணி.—அப்பா பஞ்சநாதம்! நீ கூடத்தில் போய் இரு. அங்கு உனக்குச் சாப்பாடு கொண்டுவருகிறேன். இங்கு ஒருவரும் கூப்பிடவில்லை, போ (என்று, மகனை அனுப்பி, மருமகளைப்பார்த்து) அம்மா, காளியாயி! நீ சாப்பிடாமல் இருந்தால் உன் தேகத்துக்கு உஷ்ணமுண்டாகி அஜீரணம் நேரிடக்கூடும். (என்று புருடனும் பெண்சாதியும் மருமகளை வேண்டி அன்னம் வட்டித்துச் சாப்பிட உபசரித்தார்.)

* * * * * * *

ஒரு சுந்தரபுருடன் இரவு பத்து மணிக்கு ஒரு கிராமத்தை யடைந்து கடைத்தெருவாக வரும்பொழுது, அனேக கடைகள் மூடப்பட்டும் சில கடைகள் மூடப்போகிறதையும் கண்டு, நாம் இன்னும் சில நிமிஷங்கள் தாமதமாய் வந்திருப்போமாஞல் நமக்கு ஒன்றுங் கிடைக்காமற் போய்விடும் ; நாம் வெறுங்கையோடு போவது அழகல்லவென்று, மூடப்படாத கடைகளில் பழவர்க்கங்கள் சிலவற்றையும் மிட்டாயும் வாங்கிச் சந்தோஷத்தோடு கடைத்தெருவைவிட்டு வேறொரு தெரு வழியாகச்சென்று எங்கும் அரவம் அடங்கிவிட்டதென்று கண்டு, இருட்டால் வீடு அடையாளம் தெரியாமல் நிதானித்து நின்று நின்று பார்த்துப்போகும்பொழுது, காலில் ஏதோ தட்டுப்பட்டதால் தடுமாறி விழப்போனவன் ஒருவாறு தப்பித்துக்கொண்டு காலில் தட்டுப்பட்டது என்னவென்று பார்த்து, ஐயோ ! இது என்ன ! நடக்கிற வழியில் ஒரு பெண்பிள்ளை விழுந்து கிடைக்கிறாளே ! என்றான். அம்மார்க்கத்தில் எதிராக வந்த ஒருவன் இவன் சொல்லியதைக் கேட்டு ஓடிவந்து பார்த்து, ஒரு பெண்பிள்ளை அலங்கோலமாகக் கிடைப்பதைக்கண்டு நாசியில் கைவைத்துப்பார்த்து உயிரிருக்கிறது; என் கையில் தட்டுகிறது என்னவென்று தெரியவில்லையே என்பதாக, அருகிலிருந்த வீட்டின் கதவு திரக்கப்பட்டிருப்பதைக் கண்டு, வீட்டுக்குள் ஓடி சில நிமிஷத்தில் வெளிச்சத்தோடு ஒரு வாலிபனை அழைத்து வந்தான். விளக்கோடு வந்தவன் தெருவில் விழுந்திருக்கும் பெண்ணைப்பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு, நின்றிருந்த வனைப்பார்த்து, நீர் எப்பொழுது வந்தீர் ? இது என்ன அநியாயம் ! என்றான். நான் இப்பொழுது தான் வருகிறேன். என் காலில் தட்டுப்பட்டதால் என்னவென்று பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது இந்த அண்ணன் உம்மை அழைத்துவந்தார். நாம் தெருவில் வைத்துக்கொண்டு வார்த்தையாடுவது நன்றல்லவென்று பாதையில் விழுந்திருந்த பெண்பிள்ளையை வீட்டுக்குள் கொண்டுபோய் படுக்கவைத்து வீட்டிலுள்ளவர்களை அழைத்து வந்தபோது, ஒரு பெண்பிள்ளை படுத்திருக்கும் பெண்ணைப்பார்த்து, ஐயோ அம்மா ! நான் என்ன சொல்வேன் மகளே ! இது என்ன அநியாயம் ! என்று நிலத்தில் விழுந்து மூர்ச்சையாயினள். பெரியவர் ஒருவர் வந்துபார்த்து மலைத்து நின்று இது என்ன அநியாயம். அப்பா ! நீ விறைவிற்சென்று வைத்தியனை அழைத்துவாவென்று விளக்கோடு வந்த வாலிபனை அனுப்பினர். நானும் அவரோடு செல்கிறேன் என்று அன்னியனும் நீங்கினன். மிட்டாயும் பழங்களும் கொண்டுவந்தவன் பெரியவரைப்பார்த்து, மாமா ! இதென்ன அநியாயம் ! இவ்விதம் முடிந்ததற்குக் காரணம் தெரியவில்லையே ! நான் இந்நேரத்தில் வந்தது இந்தக் கொடுமையைப்பார்க்கவா ? என்றான்.

பெரியவர்.—அப்பா சோமசுந்தரம்! காளியாயி சாப்பிட்டுத் தெருத்திண்ணையில் உட்கார்ந்து ஓர்கிழவியோடு பேசிக்கொண்டிருந்தாள். ஏதோ பேசிக்கொண்டிருக்கிறாள், சற்றுநேரத்தில் புருடனேடுபோய்ப்படுத்துக்கொள்ளுவாளென்று எண்ணி நான் என்னுடைய படுக்கை அறைக்குள் சென்றேன். காளியாயிக்குப்பின் நடந்தது ஒன்றும் தெரியாது.

என்று, காளியாயியின் முகம் தலை தேகமெல்லாம் இரத்தம் கிறைந்திருப்பதைக் கண்டு சோமசுந்தரத்தோடு உதவியாகத் துடைத்துப் பரிதபித்துக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் காளியாயியின் புருடன் பஞ்சநாதம் அன்னியனை அனுப்பிவிட்டு வைத்தியரோடு வீட்டுக்குள் வந்தான். வைத்தியர் காளியாயியின் தலையில் பட்டிருக்குங் காயங்களைப் பார்த்து மருந்துபோட முடியாதென்று தலைமயிரையெல்லாம் கத்தரித்து மொட்டையாக்கி ப்ளாஸ்திரி போட்டும், முகத்திலும் மார்பிலும் இருக்கும் பெருங்காயங்களைத் தைத்தும் வேண்டியதைச் செய்துகொண்டிருந்தார். மருமகள் இரத்தத்தில் மூடப்பட்டிருப்பதைக் கண்ட அன்னபூரணியம்மாள் மூர்ச்சைதெளிந் தெழுந்து, அப்பா சோமசுந்தரம்! உன் தங்கை இந்த ஸ்திதியி லிருப்பதைப் பார்க்கவா வந்தாய்? ஐயோ! என் அருமை மகளை இவ்விதம் செய்தவர்கள் யாரென்று தெரியவில்லையே! அவளோடு முன்னேரத்தில் பேசியிருந்த கிழவியைக் கூப்பிடுங்கள். அவளைக் கேட்டால் யாவும் தெரிந்துகொள்ளலாம் என்றாள். பஞ்சகாதமும் தன் தாயார் சொல்வதைக்கேட்டு, ஆம்! ஆம்! கிழவியின் ஞாபகம் எனக்கு வராமற்போய்விட்டது. நான் படுக்கைக்குப் போகும்பொழுது காளியாயியும் கிழவியும் உட்கார்ந்து இரகசியமாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இரகசியப்பேச்சு முடிவான பின் காளியாயி படுத்துக்கொள்ளும் அறைக்குள் போய்விடுவாளென்று நான் கதவை மூடிப்படுத்துக்கெண்டேன். நான் இக்கிழவியைப்பார்த்து வருகிறேனென்று வெளியில் வந்தவன் வீட்டுக்கருகில் வரும் சில சேவகரைக்கண்டு தனக்குச் சினேகமான சேவகனொருவனையழைத்து, இந்நேரத்தில் எங்கு கும்பலாகப்போகிறீர்கள்? என்று கேட்டான்.

சேவகன்.—இன்று அநியாயமான கொலையொன்று நடந்துவிட்டது. ஒரு கிழவியையும் ஒரு வாலிபனையும் கொலைசெய்து ஒரு பெண்பிள்ளையை அநேக இடங்களில் வெட்டி ஓடிய இருவர் அகப்பட்டார்கள். விசாரித்ததில், ஒரு பெண்பிள்ளைக்கு இரண்டு சோரநாயகர்க ளிருந்தார்களென்றும், அவர்களில் ஒருவனோடு அந்தப் பெண்பிள்ளை கிழவியின் துணையினால் சென்று சந்தோஷமாக இருக்கும்பொழுது மற்றவன் பார்க்க மனந்தாளாமல் மூவரையுங் கொன்றுவிட ஆள்களை அனுப்பியபோது அவர்கள் கிழவியையும் புருடனையுங் கொன்று பெண்பிள்ளையையும்

வெட்டினுர்களாம். வெட்டுப்பட்ட பெண்பிள்ளே ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் ஒடிவிட்டாளென்று அவளேத் தேடித்திரிகிறேம். பிரேதங்கள் இரண்டையும் வைத்திய சாலேக்கும் குற்றவாளிகள் இருவரைச் சிறைச்சாலேக்கும் அனுப்பிவிட்டோம். நான் நின்று பேசிக் கொண்டிருக்கச் சாவகாசமில்லே. என்னேடு வந்தவர்கள் நெடுந் தூரம் போய்விட்டார்கள். (என்று ஒடினுன்.)

சேவகன் சொல்லிப்போனதைக் கேட்ட பஞ்சநாதம் திகைத்துநின்று பின் வீட்டுக்குள் சென்று சோமசுந்தரத்தைத் தனித் தழைத்துப்போய்த் தான் சேவகனுல் கேள்வியுற்றதைச் சொல்லித் துக்கப்பட்டான்.

சோமசுந்தரம்.—அத்தான் ! நீர் ஏன் துக்கப்படுகிறீர்? நமக்கிருவருக்கும் ஒரேவிதமான விதி விதித்திருக்கிறது. உம்முடைய நாயகி சோரநாய கனேடு சுகத்தை அனுபவித்து வெட்டுப்பட்டாள். என் பெண்சாதி சோரநாயகனேடு சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிருள். ஆனதால் உம்மைவிட நான் கிர்ப்பாக்கியன் அல்லவா ?

பஞ்சநாதம்.—அத்தான் ! மனேன்மணிமேல் குற்றஞ் சொல்வது அடாது. அவள் பதிவிரதைகளிற் சிறந்தவளென்று நான் எண்ணியிருக்கிறேன்.

சோமசுந்தரம்.—நீர் சொல்வதுபோல் இருந்திருப்பாளேயாகில் அவளே இக் காலத்தில் எவ்வளவு மேன்மையாக வைத்திருப்பேன் ! அப்பாவி என் கண்முன் ஒரு அன்னியனேக் கட்டியணைத்து முத்தங்கொடுத்தபின் அவளேக் குறித்து நாம் பேசவேண்டியதென்ன இருக்கிறது ? (என்று நடந்த வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்லிமுடித்து) நான் இது பரியந்தம் ஒருவரிடமும் அவள் துர்நடத்தையைக்குறித்துச் சொல்லாதிருந்தும் இன்று உம்மிடத்தில் சொன்னேன்.

பஞ்சநாதம்.—நீர் நேரில் பார்க்காமல் ஒருவரால் கேள்விப்பட்டீர் என்று சொல்லுவீரானுல் நான் நம்பமாட்டேன். மனேன்மணியின் நடத்தை அவ்விதமானுல் வேறு யாரை நம்பலாம் ! ஆனுல், இவ்வளவுக்கும் காரணமாக நின்றவள் காளியாயி. இவ்விஷயத்தைப் பலரால் கேள்விப்பட்டு அவளேக்கேட்டதால் என்னே அடித்துத் துரத்தினுள். பெண் சாதிகளே அடிப்பவர்களே உலகம் கேவலமாக நினேப்பதால் அவளேவிட்டுச் சென்றேன். என் தந்தை அவளுக்குமுன் சாப்பிட்டுவிட்டாரென்று யாவருடைய மனதையும் புண்ணுக்கிவிட்டாள். நான் உலகோருடைய பார்வைக்குப் பெண்சாதியைக் கொண்டிருக்கிறேனேயன்றி உண்மையில் நாங்கள் புருடனும் பெண்சாதியுமாக இருந்ததில்லே யென்றுல் வேறென்ன சொல்ல இருக்கிறது !

சோமசுந்தரம்.—என் தங்கை விஷயமாக நான் கேட்பதெல்லாம் எனக்குப் பெருந் துக்கத்தைக் கொடுக்கிறதாக இருக்கிறது. அவள் அடிக்கடி புருடன் வீட்டுக்குப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டுத் தன்னுடைய புருடன்மேலிருக்கும் அன்பால் அவ்விதஎண்ணங்கொண்டாளென்றே நினைத்திருந்தேன்.

பஞ்சநாதம்.—என்மேலுள்ள அன்பால் இவ்விடம் வரப் பிரியம் கொண்டாளென்றும் அல்லது வேறு எண்ணத்தால் இவ்விடம்வரத் தரிதப்பட்டாளென்றும் இப்பொழுது நன்றாய் விளங்கவில்லையா ?

சோமசுந்தரம்.—அவர்கள் விஷயமாகப் பேசுவதை நிறுத்திவிடலாம். கிழவியோடு வெட்டுண்டவன் இன்னனென்று அறிந்துகொண்டீரா ?

பஞ்சநாதம்.—அவன் விஷயத்தைக்குறித்து ஒன்றுங்கேட்கவில்லை. பொழுது விடிந்தால் யாவும் அறியலாம். நம்முடைய பெண்சாதிகளால் வந்த அவமானம் நமக்குத்தெரிந்திருந்தாலும் பலர் அதையறிந்து நம்மைத் தலை இறங்கச் செய்யுமுன்னம் அதைத் தடுத்துவிடவேண்டும். ஆதலால் நான் இப்பொழுதே சென்று அதற்கு வேண்டியதைச் செய்துவருகிறேன். நீர் வீட்டிலிருந்து காளியாயிக்கு வேண்டியதைச் செய்துகொண்டிரும்.

சோமசுந்தரம்.—நானும் உம்மோடு வரக்கூடாதா ?

பஞ்சநாதம்.—நீர் என்னோடு வந்தால் வீட்டில் உள்ளவர்களும் மற்றவர்களும் சந்தேகங்கொள்ளுவார்கள். நான் தனித்துச்சென்று எல்லா வேலையையும் முடித்து வருகிறேன்.

என்று சோமசுந்தரத்தை அழைத்துப்போய்க் காளியாயி இருக்கும் அறையில் விட்டுப் பஞ்சநாதம் தன்னறைக்குள் சென்று பெட்டியைத்திறந்து ஒரு பையை எடுத்துக்கொண்டு வெளியிற் சென்றான்.

சோமசுந்தரம்.—(வைத்தியரைப் பார்த்து) ஐயா ! காளியாயி அம்மாளுக்கு எப்படியிருக்கிறது ?

வைத்தியர்.—வெட்டுக்காயம்பட்டால் இருபத்தொருநாள் சுரம்வராமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். காயங்கள் அதிகமாயிருக்கின்றன. உதடும் காதும் அறுப்புண்டதைத் தைத்துவிட்டேன். மார்பில் உள்ள வெட்டை யோசித்தால் பயமாயிருக்கிறது. எல்லாம் ஆயுள் பலமேயன்றி நாம் என்ன செய்ய இருக்கிறது ?

நெடுநேரம் பொறுத்துப் பஞ்சநாதம் வீட்டுக்குவந்து வைத்தியருக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு அன்றிரவைத் துக்கத்தோடு கழித்தான். பொழுது விடிந்தவுடன் சோமசுந்தரம் காலைக்கடனை முடிக்கச்சென்று அனேக இடங்களில் ஜனங்கள் கும்பல் கும்பலாய் நின்று பேசிக்

கொண்டிருப்பதைக்கண்டு துக்கத்தோடு செல்வதைப்பார்த்த சிலர் வந்து, அண்ணு ! எப்பொழுது வந்தீர்கள் ? என்று கேட்டு, அவன் தாய் தந்தை காலஞ் சென்றதைப்பற்றித் துக்கங் கொண்டாடினர்கள். சோமசுந்தரம் அவர்களிடம் வார்த்தையாடியபின், ஒருவன் அண்ணு ! இராத்திரி கொலை நடந்ததைக் கேள்விப்பட்டீர்களா ? இது என்ன அசியாயம் ! பத்து பதினேரு மணி நேரத்தில் இந்த ஊருக்கு வந்த மூவரில் இருவரை இரண்டு திருடர்கள் வெட்டிக் கொலைசெய்து அவர்களிடத்தி லிருந்தவைகளை யெல்லாம் கொள்ளை கொண்டு ஓடும் பொழுது சேவகர் அவர்களைப் பிடித்துவந்து சிறைச்சாலையில் வைத் திருக்கிறார்கள்.

சோமசுந்தரம்.—கொலையுண்டவர்கள் இவ்வூராரா ? வெளியூராரா ?

முதல் மனிதன்.—அவர்களைக் கண்டுகொள்வது முடியாததாக இருக்கிறது. வெட்டுகள் அதிகம் முகத்தில் விழுந்திருப்பதால் ரூபம் தெரியாமற் போய்விட்டது.

இரண்டாவது மனிதன்.—இறந்தவர்களோடு வந்த பெண்பிள்ளை வெட்டுக் குப் பயந்து தான் போட்டிருந்த நகைகளைக் கழற்றிக் கொடுத்து ஓடி விட்டாளென்கிறார்களே ! அது உண்மைதானு ?

முதல் மனிதன்.—அவள் ஓடிப்போனது உண்மையல்லாமற் போனால் திரு டர் கையில் நகைகள் எப்படி இருக்கக் கூடும் ? இறந்தவள் வயது சென் றவள். அகப்பட்ட நகைகள் இளம்பிராயமுள்ள பெண்கள் போடத் தகுந்தவைகள்.

இரண்டாவது மனிதன்.—என்னென்ன நகைகள் அகப்பட்டன ?

முதல் மனிதன்.—கெம்பு பதித்த கம்மல், தங்கக்காப்பு, சரட்டட்டிகை, கொப்பு, வைர மூக்குத்தி, பொன் மணிகள், கால்காப்பு, இன்னும் சில சில்லரை நகைகளே.

மூன்றவது மனிதன்.—ஓடிப்போனவள் நல்ல உபாயம் செய்தாள். தன்னு டைய நகைகள் மேல் ஆசை வைத்துக் கொடுக்காமலிருந்தால் அவளும் இருவரோடு இறக்கவேண்டிவரும்.

தன்னோடு பேசிக்கொண்டிருந்தவர்களிடம் விடை பெற்றுச் சோமசுந்தரம் நீங்கித் தனக்குள் சந்தோஷப்பட்டு நாம் இப்பொழுது கேட்டதெல்லாம் புதிதாகவே இருக்கிறது. நம்முடைய மைத்துனன் தன்னைக் காப்பாற் றிக் கொண்டதோடு நம்மையும் காப்பாற்றினனென்று காலைக்கடனை முடித்து வீடு சேர்ந்து தான் கேள்விப்பட்டதை யெல்லாம் தன் மைத் துனனிடம் சொல்லி இனி காளியாயியால் நேரிட்ட அவமானம் நம்மை ஒன்றும் செய்யாதென்றான்.

பஞ்சநாதம்.—அத்தான்! நம்முடைய நற்காலத்தால் அப்பாதகர் கையிருப்பில் நகைகளும் பணமும் இருந்தன. அதனால் நமக்கெல்லாம் அனுகூலமாய் முடிந்தது. இனி காளியாயியை ஒருவரும் தேடவேண்டிய காரணமும் இல்லை.

சோமசுந்தரம்.—குற்றவாளிகளை எப்பொழுது விசாரிப்பார்கள்?

பஞ்சநாதம்.—கொலைக்கேஸுகள் எல்லாம் இவ்விடத்தில் முடிவு பெரு; எல்லாம் உங்களுருக்கே போகவேண்டும். இவ்விடத்து நியாயாதிபதி விசாரித்து அங்கு அனுப்பிவிடுவார்.

சோமசுந்தரம்.—காளியாயி எப்படியிருக்கிறாள் பார்த்தீரா?

பஞ்சநாதம்.—ஐயோ அவளைப் பார்க்க மனம் சகிக்கவில்லை. அவள் தலை மொட்டையாகி உதடு கிழிந்து காது மூளியாய்த் தன்னுடைய இலக்ஷணத்தைப் பறிகொடுத்து அவலக்ஷணத்தைக் கைக்கொண்டிருக்கிறாள்.

சோமசுந்தரம்.—வைத்தியர் காலையில் வந்தவர் என்ன சொன்னார்?

பஞ்சநாதம்.—காளியாயி பிழைத்துக் கொள்ளுவாளென்று நம்பிக்கையாய்ச் சொல்லமுடியாதென்றாலும், உடனே இறக்கமாட்டா ளென்பதை மட்டும் தைரியமாகச் சொல்லுகிறார்.

சோமசுந்தரம்.—அவள் செய்த கொடுமையின் பலனை அனுபவிக்கவா இன்னும் உயிரோடிருக்கவேண்டும்? இப்பொழுது இறந்தால் அவள் அதிக துன்பப்பட வேண்டியதில்லையே!

பஞ்சநாதம்.—என்தாயும் தந்தையும் மருமகளுக்காக அதிக துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சோமசுந்தரம்.—உம்முடைய தாய் தந்தைக்குக் காளியாயியின் நடத்தையைச் சொன்னீரா?

பஞ்சநாதம்.—அதை அவர்களுக்குச் சொல்லலாமா? நாம் இருவரும் அவமானத்தால் துக்கமடைந்திருப்பது போதாதென்று அவர்களையும்சேர்த்துக் கொள்ள வேண்டுமோ? நான் இரகசியத்தை வெளிவிடாமல், காளியாயி வெளியில் வெட்டுப்பட்டதை வெளியார் அறிந்தால் வீட்டில் வைக்க விடார்களே! வைத்தியசாலைக்கு அனுப்பிவிட நேரிடுமே! ஆனதால் காளியாயி வியாதியா யிருக்கிறாளென்று கேட்பவருக்குச் சொல்லி விடுதல் நலம் என்றதால், அவர்களும் ஒப்புக்கொண்டு ஒருவருக்கும் சொல்லக்கூடா தென்றிருக்கிறார்கள்.

சோமசுந்தரம்.—நல்ல யோசனை செய்தீர்.

பஞ்சநாதம்.—அத்தான்! நீர் இராத்திரியும் சாப்பிடாமல் படுத்துக்கொண்டீர். வாரும் தாகத்துக்குச் சாப்பிடலாம். (என்று சோமசுந்தரத்தைச் சமையலறைக்குள் அழைத்துச்சென்றான்.)

16-ம் அத்தியாயம்.

கமலாக்ஷி விழித்துப்பார்த்துத் தான் ஓர் அறையில் கட்டிலின்மேல் படுத்திருப்பதைக் கண்டு, பாதையில் விழுந்த நம்மை இங்கு யார் கொண்டு வந்தது? என்று எழுந்து உட்கார்ந்தாள். அருகிலிருந்த இருவர் வந்து கமலாக்ஷியைப் பிடித்துக்கொண்டு, அம்மா! என்ன வேண்டும்? கஞ்சி குடிக்கிறயா? என்று கேட்டார்கள்.

கமலாக்ஷி.—அம்மா! நான் எங்கிருக்கிறேன்? நான் கனகாம்புஜத்தின் வீட்டுக்குப் போகவேண்டுமென்று துரிதமாக நடந்து கிழிந்தசேலை காலில் மாட்டிக்கொண்டு விழுந்தவள் இங்கு படுத்திருக்கிறேன். நெடுநேரம் தூங்கிவிட்டேன் போல் காணப்படுகிறது. மணி பத்துக்கதிகமாய் விட்டதா?

கமலாக்ஷி யருகிலிருந்த இரு பெண்பிள்ளைகளிள் மூத்தவள் கமலாக்ஷியின் தலை மயிரை யொதிக்கித் தேகத்தைத் தடவிக்கொடுத்து, அம்மா! இன்னும் மணி பத்தாகவில்லை என்றாள்.

கமலாக்ஷி.—பத்தாகவில்லையே! என்னுடைய நல்ல அதிர்ஷ்டமே என்னை விரைவில் எழுப்பி விட்டது. அம்மா! நான் கனகாம்புஜத்தின் வீட்டுக்கு அவசரமாய்ப் போகவேண்டும். அவள் வீடங்கே? அவள் வீட்டைக்காட்டும்படி செய்தால் உங்களுக்குப் பெரும் புண்ணியமாகும். (என்று எழுந்தாள்.)

மூத்தவள்.—அம்மா! எழுந்து நிற்கவேண்டாம். விழுந்து விடுவாய். உட்கார்ந்து கொஞ்சம் கஞ்சிகுடி. அம்மா! மரகதம்! கஞ்சிகொண்டுவா!

கமலாக்ஷி.—அம்மா! காலையில் எனக்குப்பசி யதிகமாக இருந்து ஒரு புண்ணியவானால் ஒரு ரூபாய் பெற்று அதை மாற்றி ஒரு பைசாவுக்குத் தோசையும் ஒரு காசுக்கு மோரும் வாங்கிச்சாப்பிட்டேன். அதனால் எனக்குப் பசியில்லாமலிருக்கிறது. கனகாம்புஜத்தின் வீடு அதிக தூரமோ?

மூத்தவள்.—மகளே! இன்னும் உனக்குப் பசியுண்டாக வில்லையா! எட்டு நாள் பட்டினியிருந்தமா உனக்குப் பசியுண்டாகவில்லை?

கமலாக்ஷி.—அம்மா என்ன சொன்னீர்கள்? நான் எட்டு நாள் பட்டினியிருந்தது உங்களுக்கு எப்படித்தெரியும். நான் ஒருவரோடும் சொல்லவில்லையே!

மாகதம்.—தாயாரம்மா! இதென்ன அலியாயம்? எட்டுநாள் பட்டினியாயிருந்தவளே நாமும் எட்டு நாள் பட்டினியாய்ப் போட்டு வைத்திருந்தோமே! ஐயோ! இதற்கென்ன செய்கிறது! அம்மா! இன்னும் தடை செய்யாமல் இந்தக் கஞ்சியைக் குடிக்கவேண்டும். எங்களுக்கு தெரிந்திருந்தால் சங்கிலாவது வைத்து வார்த்திருப்போமே!

என்று இருவரும் கமலாக்ஷியைக் கட்டாயப்படுத்திக் கஞ்சிகொடுத்தார்கள்.

தாயாரம்மாள்.—எட்டுநாள் பட்டினியிருந்தது நமக்குத் தெரியாமற்போனதே! (என்று துக்கப்பட்டாள்.)

கமலாக்ஷி.—அம்மா! நான் எத்தனை நாள் அசௌக்கியமாயிருந்தேன்? என்னை முன் பின் அறியாதவர்களாயிருந்தும் என்னைக் காப்பாற்றினீர்களே! உங்களுக்கென்ன செய்யப்போகிறேன்! (என்று கண்ணீர் உதிர்த்தாள்.)

தாயாரம்மாள்.—அம்மா! நீ வீட்டுக்கெதிரில் விழுந்து தலையில் காயம்பட்டு இரத்தம்வடிய மூர்ச்சையாய் விழுந்திருப்பதைக் கண்டு உன்னைக்கொண்டுவந்து இவ்விடம் சேர்த்து எட்டுநாளாகிறது. நீ கஞ்சிகுடித்ததால் உனக்குக் களையாக இருக்கும். சற்றுநேரம்படுத்து உறங்கினால் உத்தமம். சுரமும் நின்றுவிட்டது. இனி ஒன்றுக்கும் பயமில்லை என்று வைத்தியரும் சொல்லிப்போனார். படுத்துக்கொள்ளம்மா. (என்று வேண்டினாள்.)

கமலாக்ஷி.—அம்மா! எனக்கு மூற்றிலும் சொக்கியமாகி விட்டதுபோல் காணப்படுகிறது. நான் சனகாம்புஜத்தின் வீட்டுக்குப் போகவேண்டியது அவசியமாயிருத்தது. அது தப்பிப்போய்விட்டதே! விஜயரங்கத் தண்ணனை என்னசெய்தார்களோ! நான் என்னசெய்வேன் தெய்வமே! (என்றழுதாள்.)

மாகதம்.—அம்மா! நீ ஏன் அழுகிறாய்? கனகாம்புஜத்தையும் விஜயரங்கத் தண்ணனையும் நீ மறச்சவில்லை. தூக்கத்திலும் உனக்கு ஜன்னி பிறந்திருந்த பொழுதும் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்ததால், உன்னை அவர்கள் அறிவார்களென்று அவர்களை அழைத்துவரப்போன என் தமையன் கனகாம்புஜம் தன் புருஷனோடு ஸ்தல தெரிசனைக்குப் போனதாகவும் விஜயரங்கத்தண்ணன் தன் ஊருக்குப் போய்விட்டதாகவும் கேள்விப்பட்டு வந்தார். (என்று சிரித்தாள்.)

கமலாக்ஷி—எனம்மா சிரிக்கிறாய்? அவர்கள் ஊரைவிட்டுப்போனது எனக்குத் துக்கசரமாயிருக்கிறதே. (என்று வருத்தப்பட்டாள்.)

தாயாரம்மாள்.—அம்மா கமலாக்ஷி! உன்பெயர் இன்னதென்று நீ எங்களுக்குச்சொல்லுமுன் உன்பெயரையும் விஜயரங்கத்தண்ணன் சமாசாரத்

தோடு மற்ற சமாசாரங்களையும் நாங்கள் அறிந்துகொண்டிருப்பதைச்குறித்து நீ ஆச்சரியப்படவேண்டாம். எல்லாம் உன் வாய்ச்சொல்லால் அறிந்ததேயன்றி வேறுவகையால் அறியவில்லை; நீ விஜயரங்கத்தை அண்ணன் முறையாக அழைத்துக்கொண்டிருந்தாலும் விஜயரங்கம் உன் விஷயத்தில் வேறுவித எண்ணங்கொண்டிருப்பதையும், அந்த எண்ணம் உனக்கு அருவருப்பைக் கொடாமலிருக்கிற தென்பதையும் அறிந்ததால் நீ விஜயரங்கத்தை அண்ணன் என்று சொன்னதைக்கேட்ட மரகதம் நகைத்தாள்.

கமலாக்ஷி.—(புன்சிரிப்போடு) அம்மா! என்னென்ன உளறினேன். வெளியார் யாராகிலும் கேட்டிருந்தார்களா?

மரகதம்.—அம்மா! நீ சொன்னதையெல்லாம் நாங்கள் இருவர் தவிர வேறொருவரும் கேட்கவில்லை. நீ அதுவிஷயத்தில் கவலையற்றிருக்கலாம்.

தாயாரம்மாள்.—அம்மா கமலாக்ஷி! எட்டுநாள் சுரத்தால் வாதைப்பட்டு உணர்ச்சியொன்றுமில்லாமலிருந்து இன்று எழுந்து உட்கார்ந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பது யுக்தமல்ல. ஒருவேளை கெடுதியாக முடிந்தாலும் முடியும். உனக்கு முற்றிலும் சௌக்கியமானபின் நீ சொன்னவைகளையெல்லாம் சொல்லுகிறோம். படுத்து நித்திரைசெய். (என்று கட்டாயப்படுத்தினாள்.)

கமலாக்ஷியும் தான் எட்டு நாள் நோயாயிருந்து எழுந்தவுடன் நெடுநேரம் வார்த்தையாடினால் பொல்லாங்கு விளையுமென்பதற்குச் சந்தேகமில்லை, படுத்துறங்குவதே உத்தமமென்று படுத்துறங்கிக் காலையில் முற்றிலும் சௌக்கியப்பட்டவள் போல் எழுந்தாள். தாயாரம்மாளும் மரகதமும் கமலாக்ஷியை அழைத்துப்போய்க் காலைக்கடனை முடிப்பித்து ஆகாரம் கொடுத்துப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு வாலிபன் அவ்விடம்வந்து கமலாக்ஷியைப்பார்த்துச் சரீரசௌக்கியம் எப்படியிருக்கிறது அம்மா என்று கேட்டான். கமலாக்ஷி ஆச்சரியத்தோடு அந்த வாலிபனைப்பார்த்து, ஐயாவே! அன்று நான் பசியால் வருந்திச் சில வாலிபரால் அவமானம் அடையுந்தருணத்தில் உதவிசெய்து என்னைக் காப்பாற்றிய புண்ணியவானே! இப்புண்ணியவதிகளுடைய பேருதவியால் எனக்குச் சௌக்கியமாக இருக்கிறது. நான் இவ்விடத்திலிருப்பதைத் தாங்கள் எவ்விதம் அறிந்தீர்கள்?

மரகதம்.—அம்மா! இவரே என் தமையன் சொக்கலிங்கமுதலியார். தாயாரம்மாள் எனக்குச் சிறியதாயாராக வேண்டும். நீயும் என் தமக்கையாக வேண்டும். (என்று நகைத்தாள்.)

சொக்கலிங்கமுதலியார்.—அம்மா! அன்று உன்னைக் கண்டபொழுது நான் செய்த கொடுமையை நினைக்க நினைக்க என் உடல் துடிக்கிறது. நீ பசியால் வருந்தி வீடில்லாமல் அலைந்து பாதையில் விழுந்து மூர்ச்சையாகி நெடுநாள் சுரத்தில் கஷ்டப்பட நேரிட்டதற்கு நானே காரணமாக இருந்தேன். (என்று தன் கண்களைத்துடைத்தான்.)

கமலாக்ஷி.—அண்ணா! இதென்ன தாங்கள் இவ்விதம் சொல்லுகிறீர்கள்! என் வினைப்பயனால் நான் அனுபவிக்கவேண்டியதை அனுபவித்துக் கொண்டிருக்க அது தங்களால் நேர்ந்ததென்று சொல்வது நியாயமா?

சொக்கலிங்கமுதலியார்.—அம்மா கமலாக்ஷி! நான் உன்னைக் கண்டபொழுது வீட்டுக் கழைத்துக்கொண்டு வந்திருந்தாலும் உன்னிடத்தில் கொடுத்த ஒரு ரூபாயைவிடப் பத்து இருபது கொடுத்திருந்தாலும் நீ இவ்வளவு சங்கடப்பட நியாயமில்லையே! நான் கொடுத்தது ஒரு ரூபாயே யானதால் அதை மாற்றி நான்கு தம்படிகளைச் செலவுசெய்து மற்றவைகளைப்பத்திரமாக வைத்திருந்தாய். ரூபாய் அதிகமாகக் கொடுத்திருந்தால் வயிறு நிரம்ப எங்காகிலும் சாதம் சாப்பிட்டிருக்கமாட்டாயா? வீடில்லாமல் தெருத்தெருவாய்த் திரிந்து பாதையில் விழுந்து தலையில் அடிபட்டு அதனால் சுரம்வராதிருக்கும் அல்லவா? அல்லாமலும் உன் மனம் வருந்தும்படியாகவும் பேசினேன். (என்று துக்கப்பட்டான்.)

கமலாக்ஷி.—அண்ணா! என்விஷயத்தில் பேருதவியைச்செய்து இவ்விதம் சொல்லுவது அழகல்ல. நான் நான்கு தம்படி செலவுசெய்தது தங்களுக்கெப்படித் தெரிந்தது?

மரகதம்.—அக்காள்! தங்கள் முன்தானையில் ஒரு முடிச்சிருக்கக்கண்டு அவிழ்த்து அதில் ஒரு காகிதமும் நான்கு தம்படிகள் குறைய ஒரு ரூபாயும் எடுத்து என் தமையனிடம் கொடுத்தேன். (என்றுசொல்லித் தன் தமையனைப்பார்த்து) அண்ணா! இந்த அக்காள் மனவருத்தம் அடைய என்ன சொன்னீர்கள்?

சொக்கலிங்கமுதலியார்.— (மரகதத்தைப்பார்த்து) ஏதோ மதியீனமாக ஒன்றைச் சொன்னேன். அதை மீண்டும் சொல்லப்பிரியமில்லை. அம்மா கமலாக்ஷி! யாரென்றறியவே உன்னிடத்திலிருந்தெடுத்த கடிதத்தை வாசித்தேன்.

தாயாரம்மாள்.—அந்தக் கடிதத்தில் உன்பெயர் கமலாக்ஷி என்று அறிந்தோம்.

கமலாக்ஷி.—அண்ணா! அந்தக்கடிதத்தை வாசித்ததில் தோஷமில்லை. அக்கடிதத்தின் சமாசாரத்தைத் தாங்கள் விரும்பும்பொழுது விளங்கச்சொல்லத்தடையில்லை.

சொக்கலிங்கழுதலியார்.—அதை எனக்கறிய இஷ்டமில்லே. உனக்கு முற்றிலும் சௌக்கியமானபின் அது விஷயத்தைக்குறித்துப் பேசலாம். அம்மா மரகதம்! நம்மை யழைத்துப்போக அப்பா ஆளனுப்பியிருக்கிறார்கள். எப்பொழுது போகலாம்?

மரகதம்.—அண்ணு! இந்த அக்காளே இந்த ஸ்திதியில் எப்படி அழைத்துக் கொண்டு போகிறது? வண்டியில் போனால் தேகம் அலண்டு மீண்டும் சுரம்வந்தால் என்ன செய்கிறது? அதை முக்கியமாகக் கவனிக்க வேண்டியதில்லேயா?

கமலாக்ஷி.—அண்ணு எனக்குத் தேகம் முற்றிலும் சௌக்கியமாய் விட்டது. நான் இன்னும் உங்களுக்குப் பாரமாக இருப்பது நியாயமல்ல; உத்தரவு கொடுத்தால் நான் போய் வருகிறேன். நீங்கள் யாவரும் என் விஷயத்திற் செய்த உபகாரத்தை எக்காலத்திலும் மறவேன்.

சொக்கலிங்கழுதலியார்.—அம்மா! அன்று நான் கொடுமையாகப் பேசினேனென்று எங்களே விட்டுப்போக யோசித்தாய்! உன்னே அனுப்பிவிட நாங்கள் எண்ணங்கொள்ளவில்லே. எங்கள் பாட்டனுருக்குத் திவசமானதால் கிராமத்தில் இருக்கும் எங்கள் தாய் தந்தை வரும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். ஆனதால் போகவேண்டியது அவசியமாக இருக்கிறது. என் தங்கையும் தாயாரம்மாளும் போனபின் நீ தனித்து இவ்விடத்தில் இருப்பதும் கூடாதானதால் நீயும் என் தங்கையோடு போகவேண்டும். நீ எங்களேவிட்டுப் போகிறேனென்று சொல்லுவது எங்களேத் துன்பத்தில் அழுத்தும். உன்னே நான் தங்கை யென்று எண்ணியதால் நீ உன் அண்ணன் சொல்லேத் தட்டி நடக்கவும் கூடாது. என்னுடைய சொல்லேக்கேட்டு நடந்தால் உண்மையான தங்கை என்றே எண்ணுவேன். நாளே காலேயில் பிரயாணப்பட்டுச் சென்றால் பத்து மணிக்குள் கிராமத்திற்குப் போய்விடலாம்.

மரகதம்.—அண்ணு! காலேயிற் பிரயாணப்பட்டுப்போனால் பத்துமணி பரியந்தம் என்னசெய்யப்போகிறோம்? அதற்கு முன்னம் போய்விடலாமே!

சொக்கலிங்கழுதலியார்.—அம்மா! நீ சொல்வது உண்மையே! தங்கை கமலாக்ஷி வருவதால் வண்டி தாமதமாகப் போகவேண்டும். தேகத்தை அதிரவிடக்கூடாது. ஆனதால் பத்துமணி செல்லும் என்றேன். நான் கடைகளில் சில வாங்கவேண்டியிருப்பதால் அவைகளே வாங்கி வருகிறேன். (என்று கமலாக்ஷியின் கருத்தைக் கேட்காமல் நீங்கினார்.)

தாயாரம்மாள்.—அம்மா கமலாக்ஷி! தம்பி சொக்கலிங்கம் சொன்னதைக் கேட்டிருந்தாயே. உன் சம்மதம் எப்படி?

கமலாக்ஷி.—என் உயிரைக் காப்பாற்றினவர்கள் சொல்வதைத் தடுத்து நடப்பது நியாயமா ? நீங்கள் சொல்வதுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

அடுத்த நாள் சொக்கலிங்கம் சொன்னவிதம் பத்து மணிக்கு வண்டியொன்று ஓர் சிறிய கிராமத்துக்குள் போகும் பொழுது ஒரு குழந்தை பாதையில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருப்பதை வண்டிக்காரன் கண்டு வண்டியை நிறுத்திக் குழந்தையை எழுந்து போகும்படி சொன்னான். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்து ஒரு பெண்பிள்ளையோடி வந்து குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு, இராஜாமணி! வண்டிச் சக்கரத்தில் அகப்பட்டுச் சாகவா வண்டிகள் போகும் பாதையில் உட்கார்ந்து விளையாடி யிருந்தாய் ! நான் எல்லாச் சுகத்தையும் விட்டு எனக்காதாரமாக உன்னை வைத்திருக்கிறேன். நீயும் இறந்தால் அதன் பின் உலகத்தில் நான் இருந்தென்ன பலன் ! என்று குழந்தையோடு வீட்டுக்குள் சென்றாள். வண்டிக்குள்ளிருந்த கமலாக்ஷி மரகதத்தைப் பார்த்து, அம்மா ! அந்த வீட்டுக்குள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போனவள் யார் ? அதிக சுந்தரமாக இருக்கிறாள். குழந்தையும் அவளைப்போல் சுந்தரமாக இருக்கிறதே என்றாள்.

மரகதம்.—குழந்தையை எடுத்துக்கொண்டு போனவள் என் அத்தைமகள். அவளை உரித்துக்கொண்டு வந்திருக்கும் குழந்தை அவளுடையதே !

கமலாக்ஷி.—நாம் வண்டிக்குள்ளிருப்பதைப் பார்க்காததால் நம்மோடு வார்த்தையாடாமல் போய்விட்டாள். நாமும் கூப்பிட்டு வார்த்தையாடாமல் வந்து விட்டோமே ?

மரகதம்.—நாம் கூப்பிட்டு வார்த்தையாடிக்கொண்டிருந்தால் காலதாமதமாகும். உன்னைக் காலையிலிருந்து இது பரியந்தம் பட்டினியாக வைத்திருப்பதே தப்பிதம். இன்னும் இவ்விடத்தில் பேசிக்கொண்டிருப்பது தகுதியல்ல.

கமலாக்ஷி.—அம்மா மரகதம் ! எனக்குப் பசியில்லை. எனக்காக நீங்கள் தாமதப்பட்டுப் போகவேண்டாம். வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்.

தாயாரம்மாள்.—நீங்கள் இருவரும் பேசி முடிவுக்கு வருமுன் வண்டி அதிக தூரம் வந்துவிட்டது. அதோ நம்முடைய வீடும் தெரிகிறது.

சில நிமிஷத்தில் வண்டி வீட்டுக்கருகிற்போய் நின்றது. உடனே மூவரும் இறங்கி வீட்டுக்குள் சென்றார்கள். வீட்டுக்குள்ளிருந்த மரகதத்தின் தாய் கமலாக்ஷியைப்பார்த்து, அம்மா கமலாக்ஷி ! உனக்குத் தேகம் சௌக்கியமாய் விட்டதா ? நீ அசௌக்கியமாயிருக்கிறதாகச் சொல்லி யனுப்பியதைக் கேட்டுத் துக்கப்பட்டிருந்தோம் என்று அதிக

அன்போடு பேசினாள். பெரியவர் ஒருவர் வந்து இந்தப் பெண்தானே கமலாக்ஷி! கெடுநாள் தேக அசௌக்கியமாயிருந்ததால் அதிக இளைப்பைக் காட்டுகிறது. அம்மா! கமலாக்ஷி! நீ நாட்டுப்புறத்தில் இருந்தால் விரைவில் தேகம் புஷ்டியடையும். எப்பொழுதும் எங்களோடு இருக்கிறாயா? என்று கேட்டார்.

கமலாக்ஷி.—அப்பா! தங்களுடைய இஷ்டம்போலவும் அம்மாளுடைய இஷ்டம் போலவும் செய்கிறேன். (மரகதத்தின் தாயைப்பார்த்து) அம்மா எனக்கு முற்றிலும் சௌக்கியமாய்விட்டது.

மரகதம்.—அம்மா! எங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்?

மரகதத்தின் தாயி.—மகளே! உங்களுக்கு வேண்டியதெல்லாம் செய்து வைத்திருக்கிறேன். ஆமைவடை மோர் குழம்பும் இருக்கிறது. (என்று சிரித்தாள்.)

மரகதம்.—அம்மா! எனக்கு மோர் குழம்பு என்றால் தலை நடுக்கமென்று அதைச் சொன்னீர்கள்! அக்காளுக்கு அது பிரியமாய் இருக்கக்கூடுமே!

தாயாரம்மாள்.—கமலாக்ஷிக்கு இப்பொழுது மோர் குழம்பு கொடுக்கலாமா? போன சுரம் திரும்பினால் என்ன செய்கிறது!

கமலாக்ஷி.—அம்மா! இனி சுரம் எனக்கு வராது. எனக்கு சுரம் வந்த காரணத்தை அவகாசமாய்ச் சொல்லுகிறேன். மோர் குழம்பை இன்று சேர்த்தே பார்க்கவேண்டும். (என்று யாவரும் சமையலறைக்குள் நுழைந்தார்கள்.)

மரகதத்தின் தாயி.—மரகதம்! அண்ணன் எப்பொழுது வருகிறதாகச் சொன்னான்?

மரகதம்.—நாளை காலையில் வருவதாகச் சொன்னார்.

என்று மரகதம் சொல்லி யாவருக்கும் வட்டித்துப் போஜனமுண்டு திவசத்துக்கு வேண்டியதைச் செய்து கொண்டிருந்தார்கள். மறுநாள் காலையில் சொக்கலிங்கம் வந்து தன் பாட்டனுடைய திவசத்துக்காக வந்திருந்தவர்களை உபசாரம் செய்து சாப்பிடவைத்துத் தாம்பூலம் உதவி அவர்கள் யாவருக்கும் விடைகொடித்து அனுப்பியபின், தானும் அன்று மாலையே கிராமத்தை விட்டு நீங்கினான். திவசத்துக்கு வந்த பெண் பிள்ளைகள் கமலாக்ஷியைக்கண்டு வார்த்தையாடியும் மரகதத்தினிடம் கமலாக்ஷியைக்குறித்து விசாரித்தும் போனார்கள். தாயாரம்மாள் அக்கிராமத்தாரோடு நெருங்கி வார்த்தையாடாமல் தனித்திருப்பதைக்கண்ட கமலாக்ஷி அருகில் சென்று, அம்மா! தாங்கள் ஏன் தனித்த இடந்தேடி இருக்கிறீர்கள்? என்றாள்.

தாயாரம்மாள்.—நான் இக்கிராமத்துக்கு அடிக்கடி வருகிறதில்லே. ஆனதால் என்னே அறிந்தவர்கள் சிலரே. அறியாதவர்களிடம் பேச எனக்குச் சம்மதமில்லாமையால் தனித்திருந்தேன்.

கமலாக்ஷி.—அம்மா! நாம் நேற்று வரும் வழியில் கண்ட குழந்தையின் தாயை மரகதம் அத்தைமகள் என்ருளே! அவள் இங்கு வரவில்லே போல் காண்கிறது. அவள் வந்திருந்ததைத் தாங்கள் பார்த்தீர்களா?

தாயாரம்மாள்.—அம்புஜத்தையா! அவள் என் இங்கு வரப்போகிருள்?

கமலாக்ஷி.—ஓர் விசேடமான காலத்தில் சொந்த பந்துக்களே வரவழைக்காமல் அன்னியரை மட்டும் வரவழைக்கலாமா?

தாயாரம்மாள்.—விசேடத்திற்குச் சொந்த பந்துக்களே வரவழைக்க வேண்டியது அவசியமே! அம்புஜம் மரகதத்துக்கு அத்தைமகளாயினும் அவள் விஷயம் உனக்குத் தெரியாமலிருப்பதால் அவள் இன்று வராமற்போனது உனக்குப் புதுமையாகத் தோன்றுகிறது. நாம் இங்கிருந்து பேசுவது நன்றல்ல. வா. (என்று வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள தோட்டத்துக்குள் அழைத்துச்சென்று) அம்புஜத்தின் விஷயத்தைக் குறித்து நீ அறியவேண்டியது அவசியமா?

கமலாக்ஷி.—அவசியம் இல்லே. மரகதம் அத்தை மகள் என்று சொன்னதால் அவள் வராமலிருந்ததைக்கேட்க நேரிட்டதேயன்றி வேறல்ல. எனக்கொருவருடைய இரகசியத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்கிற விருப்பமில்லே.

அப்போது, என்ன இரகசியத்தை அறியக்கூடாதென்ருய்? என்று சிரித்துக்கொண்டு மரகதம் எதிரில் வந்து நின்ருள்.

கமலாக்ஷி.—அம்மா மரகதம்! இன்று உன் அத்தைமகள் இங்கு வராமற் போனதைக் குறித்து நம்முடைய சிறிய தாயாரைக் கேட்டேன். அவர்கள் அதை அறிய வேண்டியது அவசியமோ? என்ருர்கள். நான் அவசியம் இல்லே என்றேன்.

மரகதம்.—அம்மா! நேற்றுவண்டிக்கு எதிர்ப்பட்டகுழந்தையைத் தூக்கிக்கொண்டு போன அம்புஜம் என் தந்தையின் சகோதரிமகள். அவளுக்குநாலே ந்து வயதாயிருக்கும்பொழுது என் தாயும் தந்தையும் அழைத்துவந்து எங்களோடு சேர்த்து அவளேயும் வளர்த்து வந்தார்கள். நானும் என் சகோதரனும் அம்புஜமும் கூடிவிளையாடவும் ஒன்ருய்உட்கார்ந்துசாப்பிடவும் வாசிக்கவும் இருந்ததால் ஒருவர்மேல் ஒருவருக்கு அன்பு அதிகரித்திருந்தது. சற்றுநேரம் ஒருவர் மற்றவரை அறியாமல் எங்காகிலும்சென்றிருந்தால் காணுதவரைத் தேடித்திரிவது வழக்கமாக இருந்தது.

எங்களைப்போன்ற சிறுவர்கள் எங்களோடு வந்து விளையாடும் பொழுது பொம்மைக்கு கலியாணம் செய்வதுபோல என் தமையனையும் அம்புஜத்தையும் உட்காரவைத்துக் கலியாணம் செய்வார்கள். அம்புஜம் உண்மையான மணப்பெண்போல உட்கார்ந்திருப்பாள். சிறுவர்கள் கலியாண வாழ்த்து, ஏசல்கள்பாடி பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பாலும் பழமுங் கொடுத்து மகிழ்வார்கள். நாங்கள் விளையாடுவதை எங்கள் தாய்தந்தை கண்டால் வேடிக்கை பார்த்து நின்று சிரித்துக்கொண்டு போய்விடுவார்கள். யாராகிலும் என் தமையனைக்கூப்பிட்டு நீயாரை விவாகஞ்செய்து கொள்ளப்போகிறாய் என்றால், அம்புஜத்தைக் கட்டிக்கொள்ளப் போகிறேன் என்பார். அம்புஜம் உன்னைக் கட்டிக்கொள்ளமாட்டேன் என்கிறாளே என்று விளையாட்டுக்குச் சொன்னால் என் தமையன் அம்புஜத்திடம் ஓடி "அம்புஜம்! என்னைக் கட்டிக்கொள்ள மாட்டேன் என்று சொன்னது உண்மையா?" என்று கேட்பார். அம்புஜம் "அத்தான்! நான் அவ்விதம் சொல்லவில்லை. உங்களையே கட்டிக்கொள்ளுவேன்." என்று கட்டிப் பிடித்துக்கொள்ளுவாள். எங்களுக்கு இவ்வித விளையாட்டோடு வயதேறியது. அம்புஜம் பக்குவமடையுங்காலச் சமீபத்தில் எங்களுடைய அத்தைவந்து தன்மகளை அழைத்துப்போகிறேனென்று எங்கள் தாய்தந்தைக்குத் தெரிவிக்கவே, அவர்கள் சம்மதப்பட்டிருப்பதை என் சகோதரன் அறிந்து அம்புஜத்தின் தாயிடம் சென்று, அத்தை! நான் அம்புஜத்தைக் கட்டிக்கொள்ளப் போகிறேன்; அம்புஜத்துக்கும் என்னை விவாகம்செய்துகொள்ள இஷ்டமிருக்கிறது; உங்களுடைய இஷ்டம் என்ன என்று கேட்டார். அதற்கு எங்கள் அத்தை, அப்பா! நீ மஹாராஜனுக அம்புஜத்தைக் கட்டிக்கொள்ளென்று சிரித்துத் தன் தமையனிடமும் தன் தமையன் பெண்சாதியினிடமும் என் தமையன் சொல்லியதைச் சொல்லிச் சந்தோஷத்தோடிருந்து அம்புஜத்தை அழைத்துச் சென்றார்கள். அம்புஜம் எங்களை விட்டுப்போக இஷ்டமில்லாமல் துக்கத்தோடு சென்றாள். அம்புஜம் தன் தாயார் வீடுசென்ற சில நாளையில் புஷ்பவதியானாள். அவள் ருதுவான இலக்கினத்தின் பலனை எண்ணி ஒருவரிடத்திற்குப் பின் விவாகம் செய்யலாமென்று எண்ணியிருந்தார்கள். ஒருவருடம் முடிவாகும் சமயத்தில் சிலர் என் தந்தையிடம் வந்து வீட்டில் பெண்ணைவைத்துப் பிள்ளைக்கு விவாகம் செய்தால் பார்ப்பவர்கள் சேவலமாய்ப் பேச இடமுண்டு என்றார்கள். அதைக் கேட்டு, ஆம் அது உண்மையே! என் மகளுக்கும் மகனுக்கும் விவாகம் ஒன்றாய் முடித்து விடலாமென்று எங்கள் அத்தையைப் போய்ப் பெண் கேட்டபோது அவள் வீட்டில் அம்புஜத்தின் அக்காளை வைத்து இளைய பெண்ணுக்கு விவாகம் செய்யலாமா! உங்களுக்கிஷ்டமாயிருந்தால் பெரிய பெண்ணை விவாகம் செய்துகொள்ளுங்கள் என்றாள். என்

தமையன் அம்புஜத்தை விவாகம் செய்து கொள்ள எண்ணங்கொண்டிருந்ததையறிந்த என் தாய்தந்தை உன் பெரியமகளுக்கு விவாகமான பின் உன் மகளுக்கும் மகனுக்கும், என் மகனுக்கும் மகளுக்கும் முறையே விவாகம் செய்யலாம். உன் பெரிய பெண்ணை நான் கொள்ள நினைத்தாலும் விவாகம் முடிக்க நியாயமில்லை. எவ்விதம் என்னில் நான் வீட்டில் பெண்ணை வைத்துக்கொண்டு உன் பெரியபெண்ணை என் மகனுக்கு எப்படி செய்யலாம்? முன் பெண்ணுக்கு விவாகம் முடிந்தபின் பிள்ளைக்கு விவாகம் செய்யவேண்டும். ஆகையால் நீ உன் இரு பெண்ணுக்கும் விவாகமானபின் உன் மகனுக்கு விவாகம் செய்ய வேண்டும். ஒருவருக்கு அவ்வழக்கம் உண்டு மற்றவருக்கு இல்லை என்று சொல்லக்கூடாது. ஆகவே, உன் பெரிய மகளை விவாகம்செய்து கொடுத்தவுடன் மற்றவர்களுக்கு ஒரே முகூர்த்தத்தில் விவாகம் முடிக்கலாமென்று தீர்மானப் படுத்திவந்த ஆறுமாதத்தில் அம்புஜத்துக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறதென்று கேள்விப்பட்டோம். என்தாய் அதை முற்றிலும் நம்பாமல், அம்புஜத்தின் கல்வி யென்ன! அதற்கேற்ற அவளுடைய குணம் என்ன? அம்புஜமாவது பிள்ளைபெறுகிறதாவது! என்று தான் நேரில் பார்த்து வராமல் ஒருவர் சொல்லையும் நம்பேன் என்று சென்றவர்கள் திரும்பிவந்து, தன்நாத்தனார் தன் பிள்ளைகளோடு வெளியூருக்குப்போயிருக்கிறாளென்று கேள்விப்பட்டு வந்தேனென்பதாகச் சொன்னார்கள். நானும் என் தாயும் தந்தையும் அம்புஜத்தின் விஷயத்தில் கேள்விப்பட்டது உண்மையாக இராதென்றேஎண்ணியிருந்தோம். என் தமையனும் அம்புஜத்தைக் கேவலமாக அவசரப்பட்டு ஒன்றும் சொல்லக்கூடாதென்றும் நாம் நேரில் பார்த்தபின் அவள்மேல் குற்றஞ் சுமத்தவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டிருந்தார். சில மாதங்களுக்குப்பின் நானும் என் தமையனும் என் தாயாரும் இந்தக் கிராமத்துக்கு வரும்பொழுது நேற்று நாம் கண்டவிடத்தில் அம்புஜம் குழந்தையோடு நிற்பதைப் பார்த்து நாங்கள் கொண்ட ஆச்சரியத்திற்கு அளவில்லை. அம்புஜம் ஒரு பிள்ளையை பெற்றுக்கொண்டிருந்தாலும் யாவருங்காணுன்றதே எங்களுக்கு அதிக வெறுப்பைக் கொடுத்தது. அம்புஜத்துக்கு இருந்த கல்வி அவளுக்கு நன்மையைத் தருவதைவிட்டுத் தீமைக்கு உதவி புரிந்ததுமன்றி அவளுக்குத் தைரியமும் கொடுத்து நிற்கச் செய்ததென்று என்தமையன் சொல்லி, அதுமுதல் பெண்கள்மேல் வெறுப்பு கொண்டு, தனக்குக் கலியாணம் வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டதேயன்றி, இந்தக் கிராமத்துக்கு அவர் அடிக்கடி வராமலும், வந்தாலும் இரவு தங்காமலும் போய்விடுகிறார். அம்புஜத்தோடு நாங்கள் ஒருவரும் வார்த்தையாடுகிறதில்லை. இந்தத் தூர்நடத்தையால் கெட்ட அம்புஜத்தை நாங்கள் திவசத்துக்கு வரவழைக்காமல் விட்டது தப்பிதமா?

கமலாக்ஷி.—அம்மா மரகதம்! நேற்று நாம் வரும்பொழுது அம்புஜத்தையும் அவள் குழந்தையையும் பார்த்ததுமுதல் அவள்மேல் எனக்கு ஞாபகம் இருந்ததால் அவள் என் வரவில்லை என்று கேட்டதற்கு ஒரு பெரிய கதையைச் சொல்லிமுடித்தாய். நம்முடைய தமையன் விவாகம் வேண்டாமென்றாலும், உனக்கு விவாகம் இன்னும் முடியவில்லையே! எப்பொழுது முடிக்க யோசித்திருக்கிறார்கள்?

மரகதம்.—அக்காள்! நீ அந்தரங்கத்தில் எப்படி விஜயரங்கத்தண்ணனை இச்சித்திருக்கிறாயோ, அதுபோலநான் என்'அத்தைமகனை இச்சித்திருக்கிறேன். அவர்தம் தங்கையின் நடத்தையால் எங்களைப்பார்க்க வெட்கிப்போய்விட்டதால் நான் வேறொருவனை விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படாமல் எனக்கும் விவாகம் வேண்டியதில்லை யென்று சொல்லிவிட்டேன்.

கமலாக்ஷி.—நான் விஜயரங்கத்தண்ணனை இச்சித்திருப்பது உனக்கு எப்படித்தெரியும்?

மரகதம்.—தாயாரம்மா! அக்காள் கேட்பதற்குப்பதில் தாங்களே சொல்லவேண்டும்.

தாயாரம்மாள் சிறித்து, அம்மா கமலாக்ஷி! நீ வியாதியாயிருந்தபொழுது வாய் பிதற்றியதில் அனேகம் சொன்னாய் என்றும், அதைச் சாவகாசத்தில் சொல்லுகிறேன் என்றும் கூறியிருந்தபிரகாரம் இப்பொழுது ப்ரஸ்தாபிக்கிறேன். மரகதம் யாவும் அறிந்தவளாதலால் அவள் வீட்டுக்குள்சென்று வீட்டுவேலையைப்பார்க்கவேண்டும். (என்று மரகதத்தை வீட்டுக்குள் அனுப்பிக் கமலாக்ஷியை மரஞிழலில் உட்காரவைத்து) உனக்கென்ன சொல்ல வேண்டும்? (என்றாள்.)

கமலாக்ஷி—நான் வியாதியாக இருந்தபொழுது என்னசொன்னேன்? அதில் ஒன்றிரண்டு அறியவேண்டுமென்பதே என் கருத்து.

தாயாரம்மாள்.—விஜயரங்கம் உன்னை அந்தரங்கத்தில் இச்சித்திருந்ததும், அவன் தன்னைப் பெற்றோரென்று எண்ணியிருந்தவர்கள் தன்னைவளர்த்தவர்களாக முடிந்ததும், தன்னை எக்குலத்தானென்று அறியாமல் அவர்கள் வளர்த்து வருவதனாலே தங்களுடைய பந்துக்களால் அவமதிப்புண்டாகித் துக்கத்தோடிருப்பதை அறிந்து அவர்களைவிட்டு விஜயரங்கம் நீங்கினனென்றும், பெற்றோரையறியாத விஜயரங்கம் எக்குலத்தானாலும் அவனை விவாகம் செய்துகொள்ள உனக்கு இஷ்டம் உண்டென்றும் உன் கருத்தைக் காட்டினாய்.

கமலாக்ஷி.—அம்மா! நான் இவ்விதம் சொல்லும்பொழுது சொக்கலிங்கத்தண்ணன் இருந்தாரா?

தாயாரம்மாள்.—அம்மா! நானும் மரகதமும் கேட்டிருந்தோம். வேறொரு வருக்கும் ஒன்றும் தெரியாதென்று அன்று மரகதம் சொன்னதை மறந்து விட்டாயா?

கமலாக்ஷி.—மறக்கவில்லை. நான் விஜயரங்கத்தண்ணனைக் கண்டதுமுதல் அவர் கருத்தையறியும்வரையில் அவரைச் சகோதரனாகவே எண்ணியிருந்தேன். தற்செயலாய் நான் படித்திருந்த வைக்கோல் போருக்கெதிரில் நின்று அவர் கருத்தை வெளியிட்டதைக் கேட்டவுடன் எனக்கில்லாமலிருந்த உணர்ச்சியொன்று உண்டானதுபோல் காணப்பட்டது. அது அவரை நினைக்கும்பொழுதெல்லாம் தோன்றுகிறது; அது இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

தாயாரம்மாள்.—உனக்குண்டாகிய உணர்ச்சி இன்னதென்று சொல்ல முடியவில்லையென்பது அதிசயமாக இருக்கிறது.

கமலாக்ஷி.—அதிசயம் ஒன்றுமில்லை. கமக்கனேகம் தெரிந்ததாக நம்முடைய மனம் கண்டுகொண்டாலும் அதைப் பிறரறியச் சொல்லுவதற்குச் சக்தியில்லாமற் போகிறது. எவ்விதமெனில்—ஒருவர் நம்மைச் சர்க்கரையின் உருசி எவ்விதமென்றால் இனிப்பு என்று சொல்லிவிடலாம். இனிப்பு எப்படியிருக்கிறதென்றால் என்ன சொல்லுகிறது! அது ஓர் விதமாக இருக்கிறதென்றுவது வேறொரு பொருளைக் காட்டி அதுபோல வென்றுவது சொல்லவேண்டும். அதுபோலவே எனக்கிருக்கிறது. அது இவ்விதமென்று உவமித்துக் காட்டமுடியாததால் சொல்ல முடியவில்லை. விஜயரங்கத்தண்ணனுக்கு எல்லா நற்குணங்களும் நற்செய்கைகள் யாவும் நிறைந்திருப்பதால் பார்க்கிறவர்கள் அவர் விஷயத்தில் நல்ல அபிப்பிராயம் கொள்ளுவார்களேயன்றிக் குற்றஞ் சொல்லார்கள். ஆயினும் அவர் விவாகஞ்செய்துகொள்ள எண்ணங்கொண்டிருந்து அடிக்கடி எங்கள் வீட்டுக்குவந்தவர் ஒருநாளாகிலும் என்னோடு சிரித்து வார்த்தையாடாமல் சகோதர பாவனையாகவே இருந்தார். இவ்விதமான குணமுள்ளவரை என்னவென்று சொல்லலாம்! இவரைப் பெற்றவளே பெரும் பாக்கியவதி! தங்களுக்கு அவர் பிள்ளையாக இருப்பாராயின் உங்களுக்கு வேறு ஆஸ்தியும் வேண்டுமா? அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமானது. நாள் எட்டானாலும் பசியெடுக்காது. அவர் என்னை விவாகஞ் செய்ய எண்ணங்கொண்டிருப்பது முடியாத காரியம். இவ்வித எண்ணங்கொண்டதால் அவரும் நானும் இறக்குமளவும் விவாகம இல்லாமல் இருக்க வேண்டியதே!

தாயாரம்மாள்.—அம்மா! எனக்கு அவ்விதமான குணமுள்ள பிள்ளை கிடைக்கப் போகிறதா! நான் பிள்ளையற்ற பெரும்பாவி யானேனென்று சில நேரம் துக்கத்தோடிருந்து, அம்மா! கமலாக்ஷி! நீ விஜயரங்கத்தைக்குறி

த்து அதிக மேன்மையாகப் பேசினாய். அவன் உன்னை விவாகஞ்செய்ய எண்ணங் கொண்டதால் விஜயரங்கமும் நீயும் விவாக மில்லாமலிருக்க வேண்டுமென்றாயே! அது இன்னகாரணமென்று தெரியவில்லை.

கமலாக்ஷி.—அம்மா! விஜயரங்கத்தண்ணன் ஒரு காலத்தில் என் சற்பைக் காப்பாற்றினார். அவர் என்னை விவாகஞ் செய்துகொள்ளாத விஷயத்தில் வேறொரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளுகிறதில்லை யென்கிற எண்ணத்தோடு இருப்பதால் அவரை அவ்விதமாகவே இருக்கவிட்டு நான் வெறொரு நாயகனோடு வாழ்தல் அழகாகுமா? அவர் குலம் இன்னதென்று அறியாததால் என் தாயார் என்னை அவருக்குக் கொடுக்கச் சம்மதியார்கள். ஆனதால் நானும் விவாகத்தை வெறுத்தால் அவர் எனக்குச் செய்த உபகாரத்துக்குப் பிரதி செய்ததுபோலும். அன்றியும், அந்த உபகாரத்தை நான் மறக்கவில்லையென்றும் தெளிவாய் விளங்கும்.

தாயாரம்மாள்.—அம்மா கமலாக்ஷி! நீ வியாதியாயிருந்து நீயே பேசிக் கொண்டிருந்தபொழுது, இரத்தினம் என்பவன் உன்னைத் தூக்கிக் கொண்டுபோக எத்தனித்த தருணத்தில் விஜயரங்கம் காப்பாற்றினனென்றும், ஜெகநாதமுதலியார் உன்னைக்கொண்டு போகும்படி செய்தகாலத்தில் என்னென்னவோ நடந்தனவென்றும் சொல்லி வந்ததிலே ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. காத்தனும் சாத்தனும் பிள்ளையைக் கொண்டுபோய் வெட்டவில்லையென்றாய். யாருடைய பிள்ளையை வெட்டவில்லையென்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஜெகநாத முதலியார் உன்னை உன் தாயார் வீட்டிலிருந்து நீக்கினார் என்றாய். இவைகளை மரகதம் அறிய இஷ்டங்கொண்டு உன்னைக் கேட்கும்படி சொன்னாள். உனக்கு அவைகளைச்சொல்ல இஷ்டமுண்டா?

கமலாக்ஷி.—மரகதம் அறிய இஷ்டங்கொண்டிருந்தால் அவள் என்னை என் கேட்கக்கூடாது? மரகதத்தை அனுப்பிவிட்டு நாம் தனித்துப் பேசிக் கொண்டிருப்பது நியாயமல்லவே!

தாயாரம்மாள்.—மரகதத்துக்கெதிரில் ஏதாகிலும் சொல்லக் கூச்சப்படுவா யென்றும், நான் உன் தாயைப்போலிருப்பதால் என்னிடம் சொல்ல வெட்கப்படாயென்றும் என்னைக் கேட்கும்படி சொன்னாள்.

கமலாக்ஷி.—ஒரே வயது பெண்கள் கூடிப்பேசும்பொழுது கூச்சம் விட்டுப் பேசுதலும், வயது சென்றவர்களுமுன் பேசும்பொழுது கூச்சத்தோடு பேசுவதும் சகஜமாயிருக்கத் தாங்கள் மாற்றிச்சொன்னீர்கள். நாம் மூவருமாக இருந்து வார்த்தையாடுவதே மேன்மை. நானே மரகதத்தை அழைத்து வருகிறேன். (என்று ஓடி மரகதத்தை அழைத்து வந்தாள்.)

தாயாரம்மாள்.—மரகதம்! உன்னை விட்டுப்பேசச் சம்மதமில்லை என்று கமலாக்ஷி உன்னை அழைத்துவந்தாள்.

கமலாக்ஷி.—அம்மா மரகதம்! நீ என்னிடத்தில் அறியவேண்டியதை நேரில் கேட்காமல் அம்மாளைவிட்டு என் சேட்கச்சொன்னாய்? உன்னிடத்தில் சொல்ல இஷ்டங்கொள்ளாமல் வேறு யாரிடத்தில் சொல்லப் போகிறேன்! நீ அறியவேண்டியவைகளைக் கேட்டால் சொல்லத் தடையொன்றுமில்லை.

மரகதம்.—அக்காள்! காத்தனும் சாத்தனும் கொலைசெய்யக் கொண்டுபோன பிள்ளையைக் கொலைசெய்ய வில்லை யென்றாயே! அது யாருடைய பிள்ளை யென்று அறியவே கேட்கச்சொன்னேன். (என்று சிரித்தாள்.)

கமலாக்ஷி.—அம்மா மரகதம்! நீ அறிய இஷ்டங்கொண்டது அதுவல்ல; விஜயரங்கத்தண்ணனைச்குறித்தே அறிய விரும்பினாய். ஆயினும் என் விஷயத்தில் விகழ்ந்த யாவும் சொல்லுகிறேன்.

என்று நடராஜ முதலியார் தங்களுடைய வீட்டுக்கு வந்ததும், அவருக்காக வைத்தியர் வீட்டுக்குப் போனதும், வழியில் இரத்தினத்தால் அவமானமடைய நேரிடுந் தருணத்தில் விஜயரங்கம் உதவிசெய்ததும், அதுமுதல் விஜயரங்கம் வீட்டுக்கு அடிக்கடி போனதும், இரத்தினத்தின் பேராசையிலிருந்து வனசாக்ஷி மீட்க விஜயரங்கம் துணைன்று இரத்தினத்தை அவமானப்படுத்தியதும், விஜயரங்கம் தங்கள் வீட்டுக்கு வராமல் ன்றதும், அவர் வராமையை நடராஜ முதலியார் விசாரித்துவந்து விஜயரங்கம் ஊரைவிட்டுப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டு வந்து சொல்லியதும், விஜயரங்கம் எழுதியதுபோல் கடிதம் கிடைத்ததும், தான் வெளிப்பட்டதும், தான் மூர்ச்சையாயிருப்பதாகக் காத்தனும் சாத்தனும் பேசிக்கொண்டிருந்து றுத்தியதும், சுந்தரத்தையும் சமாதியையுங் கண்டதும், பின் ஜெகநாத முதலியாரைக் கண்டதும், சுந்தரத்தின் உதவியால் வெளிப்பட்டதும், திருடர் சையில் யாவும் ஒப்படைத்ததும், வழியில் அனுபவித்ததும், சொக்கலிங்க முதலியாரால் ஒரு ரூபாய் பெற்றதும், வைக்கோற்போரில் படுத்துறங்கியதும், தற்செயலாய் விஜயரங்கத்தின் கருத்தை அறிந்ததும், பாதையில் கல் தடுத்து விழுந்ததுமாகிய இவை யாவும் சொல்லிமுடித்து, அம்மா! நீ இன்னும் அறியவேண்டியது எதுவாகிலும் இருக்கிறதா? என்றாள்.

மரகதம்.—அக்காள்! நீ அடிக்கடி கனகாம்புஜத்தின் வீட்டுக்குப்போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாயே, அது விஷயம் ஒன்றும் சொல்லவில்லையே!

கமலாக்ஷி.—அம்மா மரகதம்! அது ஒரு இரகசியமான சங்கதி. அதை நான் சொல்வது நியாயமல்ல. என்னுடையசங்கதி எதுவானாலும் சொல்லத்

தடைசெய்யேன். வேறொருவரைப்பற்றிய விஷயத்தை நாம் பேசுவது அழகல்ல. அதைக்குறித்தும் சொல்லாமலிருக்கிறதைக் குறித்து மன்னிக்க வேண்டுகிறேன்.

தாயாரம்மாள்.—அம்மா கமலாக்ஷி! நீ வாய் பிதற்றியபொழுது அனேக சங்கதிகளைச் சொன்னாலும், இப்பொழுது நீ சொல்லக்கூடாதென்று கூறுகிற சங்கதி அப்பொழுது வரவில்லையே! இது அதிசயமாக இருக்கிறது. என் மரகதம்! நீ என்ன நினைக்கிறாய்?

மரகதம்.—ஆம்! அக்காள்! நீ உன்னை மறந்திருந்த காலத்திலும் அது வெளிவராமற்போனது ஆச்சரியமே! காத்தனும் சாத்தனும் கொலைசெய்யக் கொண்டுபோன குழந்தை யாரென்றும், கொலைசெய்யத் தூண்டியவன் யாரென்றும் விளங்கச் சொல்லவில்லையா?

கமலாக்ஷி.—அவர்கள் அது விஷயத்திற் பேசிக்கொண்டிருப்பதை முடிவு படுத்தவே, என் நாசியில் ஈ யொன்று நுழைய, அதனால் கொலைசெய்யத்தூண்டினவன் இன்னானென்று அறியமுடியாமற்போய்விட்டது. அவர்கள் சொல்லிய வருஷக் கணக்கையும் பின் விஜயரங்கத்தண்ணன் சொல்லியதையும் சவனித்துப்பார்த்தால் அந்தக் குழந்தை விஜயரங்கத் தண்ணனாகவே இருக்கவேண்டுமென்று எண்ண இடம் தருகிறது.

அத்தருணத்தில் தாயாரம்மாள் மூர்ச்சையாகி நிலத்தில் சாய்ந்தாள். அறு நிலிருந்த இருவரும் உபசரித்துத் தண்ணீர் கொடுத்து மூர்ச்சையைத் தெளியவைத்தார்கள். தாயாரம்மாள் மூர்ச்சை தெளிந்து எனக்கு வழக்கமாக வரும் மயக்கம் நல்ல சமயத்தில் வந்ததென்று எழுந்து வீட்டுக்குள் சென்று படுத்திருந் தெழுந்தாள். விளக்கேற்றும் சமயத்தில் வீட்டுக்கு வெளியில் ஒரு பெண்பிள்ளை வந்து நின்று தாயாரம்மாளைக் கூப்பிட்டாள். அதைக் கேட்ட கமலாக்ஷி தாயாரம்மாளை யார் தேடுகிறதென்று வெளியில் வந்தாள்.

வந்த பெண்பிள்ளை.—தாயாரம்மாளை நானே தேடுகிறேன். அந்த அம்மாளிடத்தில் ஒரு சமாசாரம் சொல்லவேண்டும்.

தன்னை ஒரு பெண்பிள்ளை தேடி வந்திருக்கிறாளென்றறிந்த தாயாரம்மாள் வெளியில் வந்து நான்தான் தாயாரம்மாள்; என்னிடத்தில் என்ன சொல்லவேண்டும்? என்றாள். வந்த பெண்பிள்ளை தாயாரம்மாள் அருகிற் சென்று இரகசியமாக சிலவற்றைச் சொன்னாள். தாயாரம்மாள் எப்பொழுது? என்றாள். வந்தவள் காலைமுதல் என்றாள். தாயாரம்மாள் நான் உன்னோடு வரத்தடையில்லையென்று வந்தவளிடம் சொல்லிக் கமலாக்ஷியை அழைத்துக்கொண்டு வீட்டைவிட்டுச் சென்றாள்.

17-ம் அத்தியாயம்.

தாயாரம்மாளும் சமலாக்ஷியும் ஒரு பெண்பிள்ளையோடு சென்று ஒரு வீட்டுக்கெதிரிற்போய் நின்றார்கள். சமலாக்ஷி அவ்வீட்டைப் பார்த்து, அம்மா! இது அம்புஜத்தின் வீடல்லவா என்று கேட்டாள்.

தாயாரம்மாள்.—ஆம் கமலாக்ஷி! அம்புஜத்துக்குக் காலையிலிருந்து பேதியாகிறதால் நம்மை அழைத்துப்போகிறாள். பேதியாகிற விடத்தில் போக உனக்குப் பயமிருந்தால் நீ இங்கே நிற்கலாம். நான்போய் அம்புஜத்தைப் பார்த்து வருகிறேன்.

கமலாக்ஷி.—எனக்கு அது விஷயத்தில் பயமில்லை. எங்கு பதுங்கியிருந்தாலும் ஆயுள் முடிந்தால் யமன் கண்டு பிடித்துக்கொண்டு போய்விடுவான். மரகதத்துக்கு ஓர் வார்த்தை சொல்லியிருந்தால் அவளும் வந்திருப்பாளே! சொல்லாமல் வந்துவிட்டோமே!

தாயாரம்மாள்.—எல்லாம் அறிந்த பின்னும் நாம் அதை நினைக்கலாமா? மரகதத்துக்கு வர இஷ்டமிருந்தாலும் அவள் தாய்தந்தையார் உத்தரவு கேட்டே வரவேண்டும். அவர்கள் தடைசெய்தால் அவர்களுக்குச் சமாதானம்சொல்லி அழைத்துவரவேண்டும். நாம் தீவிரமாக வரவேண்டியதாயிருந்தால் மரகதத்தைக் குறித்துப் பின் யோசித்துக் கொள்ளலாமென்று உன்னை அழைத்து வந்தேன் வா. (என்று வீட்டுக்குள் சென்றாள்.)

வீட்டுக்குள் பாயில் படுத்திருந்த அம்புஜம் வந்தீர்களா! உட்காருங்கள் என்றாள்.

தாயாரம்மாள்.—அம்மா அம்புஜம்! எத்தனை தடவை பேதியானது? இப்பொழுது எப்படியிருக்கிறது?

அம்புஜம்.—அம்மா! பேதி பத்துதடவைக்கு அதிகமாய்விட்டது. வாந்தியும் ஐந்தாறு தடவை ஆயிற்று. ஒருமணிநேரமாக ஒன்றும் இல்லை. ஆயினும் வாந்திவருகிறதுபோலிருக்கிறது. உங்களிடத்தில் ஒரு உபகாரத்தைப் பெற்றுக்கொள்ளவே உங்களை வரவழைத்தேன். மரகதம் வந்திருந்தால் உத்தமமாக இருக்கும். என் மாமன் மாமி அனுப்பமாட்டார்கள். என் செய்வேன்! என்னுடைய காலம் இவ்விதமாக முடிந்தது. நான் இறந்தபின் இக்குழந்தையை என்தமக்கை வருமளவும் காப்பாற்றக் கேட்டுக் கொள்ளவும், ஒருவேளை என்தமக்கையும் காப்பாற்றாமல் கைவிடுவாளாஞல் நீங்களே காப்பாற்றவேண்டுமென்று உங்களைக்கேட்டுக் கொள்ளவும் வரவழைத்தேன். நீங்கள் என் வேண்டுகோளுக்கு இரங்கினால் நான் சந்தோஷத்தோடு இறப்பேன். (என்று சொல்லிக் களைத்துச் சிலநேரம் மூர்ச்சையா யிருந்தாள்.)

கமலாக்ஷி தங்களை அழைத்துவந்த பெண்பிள்ளையினிடம் சில மருந்து தினுசுகளைச் சொல்லி அதைக் கஷாயம்போட்டு உடனே கொடுக்கும்படி சொல்லி அம்புஜம் மூர்ச்சைதெளிந்ததைக் கண்டு, அம்மா அம்புஜம்! நீ கேட்டுக்கொண்டதைச் செய்யத் தாயாரம்மாளால் முடியுமென்று நான் நினைக்கவில்லை. காரணம் உனக்குத் தெரிந்திருக்கிறது. நீ கேட்டுக்கொண்டது தாயாரம்மாளால் முடியாமற்போனாலும் நான் உன்னுடைய குழந்தையைக் கைக்கொண்டு காப்பாற்றுகிறேன். அந்தக் குழந்தையைக்குறித்து நீ கவலைப்படவேண்டாமென்று வாக்களித்தாள்.

அம்புஜம்.—அம்மா கமலாக்ஷி! நீ என்னை அறியாதவளாயிருந்தாலும் நீ செழுங்கமலத்தம்மாள் மகள் என்று எனக்குத்தெரியும். நீ வனசாக்ஷி வீட்டுக்குப் போகும்பொழுது அனேக முறை பார்த்திருக்கிறேன். உன் சொல்லை நம்பினேன். இனி நான் கவலையில்லாமல் இறக்கலாம். ஆயினும் நான் இந்த வயதில் இவ்விதமாக இறப்பேனென்று நினைக்கவில்லை.

தன்னை அறிவேனென்று தன்னுடைய தாயார் பெயரையும் தன் சினேகியின் பெயரையும் சொன்னவுடன் கமலாக்ஷி ஆச்சரியப்பட்டு, அம்மா அம்புஜம்! நீ என்னை எப்படி அறிவாய்? உன்னைப் பார்த்திருப்பதாக என் ஞாபகத்திற்கு வரவில்லையே.

அம்புஜம்.—அம்மா கமலாக்ஷி! அது விஷயத்தைக் குறித்துப் பேசச்சக்தியில்லை. ஆயினும், ஆசைக்கோர் அளவில்லை யாகையால் வேறொரு உபகாரம் உங்களிடத்தில் பெற்றுக்கொள்ள ஆசை தூண்டுகிறது. சொல்லச்சொன்னால் சொல்லுகிறேன்.

தாயாரம்மாள்.—அம்புஜம்! எங்களால் முடிகிறதாயிருந்தால் செய்யத்தடையில்லை. உன்மனதில் இருப்பதைச் சொல்லலாம்.

அம்புஜம்.—அம்மா! நான் சொல்வதைக்கேட்டு என்னை நிந்திக்கவேண்டாம். என்னுடைய தீவினையால் நான் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவித்தேன். ஆயினும் என்னுடைய ஆன்மா என்னைவிட்டு நீங்கும்போது ஒரு பற்றுமில்லாமல் நீங்கவேண்டுமென்பதே என் சருத்தாதலால், எனக்கு இவ்வுலகத்திலுண்டாகிய ஆசையெல்லாம் நீங்கினாலும் ஒரு ஆசை மட்டும் என்னைவிட்டு நீங்காமலிருக்கிறது. அந்த ஆசையை நீக்கிக்கொண்டு இறக்கவேண்டுமென்கிற எண்ணம் இருப்பதால், அது நீங்க நீங்கள் உதவி செய்யவேண்டும்.

கமலாக்ஷி.—அம்மா அம்புஜம்! உன் மனதில் இருப்பதை வெளியிட்டால் எங்களால் இயன்றதைச் செய்து உன் இஷ்டத்தை நிறைவேற்றுகிறோம்.

அம்புஜம்.—அம்மா கமலாக்ஷி! நான் சிறுபொழுது விளையாட்டில் என் அத்தாளோடு சொல்லிக்கொண்டிருந்தது அனேகம். அவைகளில் ஒன்றை இன்று பூர்த்தியாக்கினேனென்று மெய்ப்பித்துவிட்டால் நான் பற்றற்றவளாவேன். நீங்களிருவரும் ஏதாகிலும் ஒரு உபாயஞ்செய்து என் ஆன்மா நீங்குமுன் கடைசியாக நான் என் அத்தானைப் பார்க்கும்படி அவரை அழைத்து வரவேண்டும். இந்த ஆசையைப் பூர்த்திசெய்யப் பிரார்த்திக்கிறேன்.

கமலாக்ஷி அம்புஜத்தின் வேண்டுகோள் அசாத்தியமானதாக இருக்கிறதே! என்று சில நேரம் யோசித்திருந்து, அம்மா அம்புஜம்! நான் உன் அத்தானை அழைத்துவருகிறேன், என்று தாயாரம்மாளோடு எழுந்தாள்.

அம்புஜம்.—அம்மா கமலாக்ஷி! நீ என்விஷயத்தில் பெரும் பிரயாசை எடுத்துக்கொள்ளப் போகிறாய். அது பிரயோசனமடைந்து வரும்பொழுது நான் இறந்திருக்கக்கண்டால் என் கைப்பெட்டியிலிருக்கும் கடிதத்தையெடுத்து என் அத்தானிடம் கொடுக்கவேண்டும்.

தாயாரம்மாளும் கமலாக்ஷியும் வீட்டுக்குவந்தபின் மரகதத்தை அழைத்து அம்புஜம் இருக்கும் ஸ்திதியையும் அவள் விருப்பத்தையும் சொல்லி இத்தருணத்தில் அவள் எண்ணத்தை நிறைவேற்றவேண்டியது அவசியமானதால், நமது தமையனை வரவழைக்க வேண்டும். உன் கருத்து என்ன என்று கேட்டார்கள்.

வினைவழியைத்தள்ளி நடக்க ஒருவராலும் முடியாது. அவள் இறக்கப் போகும்பொழுது விரும்பியதைச் செய்யாமற் போவது பெரும்பாதகமாய் முடியும். நான் என் தாயாரிடத்தில் சொல்லி என் தமையனை வரவழைக்கச்செய்கிறேனென்று மரகதம் ஓடினாள். தாயாரம்மாளும் கமலாக்ஷியும் பின்சென்று மரகதத்தின் தாய் உடன்படாமல் இருப்பதைக்கண்ட கமலாக்ஷி அவள் மனங்கனிய அனேக நீதிகளைச் சொன்னாள். மரகதத்தின் தாய் கமலாக்ஷி பேசுந்திறமையைக்கண்டு தன் புருடனிடம் அழைத்துச்சென்று கமலாக்ஷி சொல்வதைக் கேளுங்களென்றாள். பெரியவர் கமலாக்ஷியைப் பார்த்து அம்மா கமலாக்ஷி! என்ன சொல்லப்போகிறாய்? என்றார்.

கமலாக்ஷி.—அப்பா! உலகில் ஒருவர் நோயாயிருந்தால் அவருக்கு வைத்தியரால் மருந்து கொடுத்து சௌக்யப் படுத்துகிறோம். மருந்துக்குத் தக்கவிதமாக வைத்தியரும் பத்தியம் ஏற்படுத்துகிறார். வைத்தியர் சொல்லிய பத்தியத்தை விட்டு நாம் வேறொன்றைக் கொடுக்கலாமா?

பெரியவர்.—அம்மா கமலாக்ஷி! நீ எதற்காக இந்தக்கேள்வி கேட்கிறாயோ தெரியவில்லை. நீ கேட்பதற்குப் பதில் சொல்லியே பார்க்கவேண்டும்,

நோயாளியின் நன்மையைக் கருதி வைத்தியர் சொன்னதால் அவ்வண்ணமே பத்தியங்கொடுக்கவேண்டும்.

கமலாக்ஷி.—நோயாளி சொஸ்தமடையானென்று வைத்தியர் உண்மையாகக் கண்டபின் நோயாளிக்கு இஷ்டமானதைக் கொடுங்களென்றால் அப்பொழுது என்ன செய்கிறது ?

பெரியவர்.—நோயாளி பிழைக்கமாட்டானென்று கண்டபின் அவனைப் பத்தியத்தில் வைப்பதில் பிரயோசனமில்லை. அவன் இஷ்டப்பட்டதைக் கொடுக்கவேண்டியதே !

கமலாக்ஷி.—அப்பா ! தங்களை இன்னும் ஒன்று சேட்கவேண்டும். அனேகரைத் துன்பத்தி லழுத்திய கொலபாதக னொருவனைக் கொலைசெய்ய உத்தரவானபின் அவன் இறக்க இரண்டொரு நாளுக்குமுன் தனக்கு இன்ன வஸ்துவின்மேல் விருப்பமிருக்கிறதென்றுவது தனக்குரிய மனிதரைப் பார்க்கவேண்டுமென்றுவது கேட்டால் துரைத்தனத்தார் என்ன செய்கிறார்கள் ?

பெரியவர்.—அனேகரைக்கொன்ற கொலபாதகனுக்கும் அவன் இறக்கப் போகிறபடியால் இஷ்டப்பட்டதைப் பூர்த்திசெய்தே அவனைக் கொல்லுகிறார்கள்.

கமலாக்ஷி.—அப்பா ! கடைசியாக ஒன்று கேட்டபின் என் கருத்தைச்சொல்லுவேன். நாம் இறக்குங் காலத்தில்-அதாவது-ஆன்மா உடலைவிட்டு நீங்கும்பொழுது நினைத்த உருவைக் கடவுள் கொடுக்கிறரென்கிறார்களே ! அது உண்மையா ?

பெரியவர்.—அம்மா கமலாக்ஷி ! நீ முன் கேட்டவைகளுக்குப் பதில் சொல்லியதுபோல் இதற்குச் சொல்லமுடியாது. ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் வினைக்கீடாக ஜன்மம் கிடைக்குமேயன்றி வினைக்குமாறாக ஜன்மம் வராது.

கமலாக்ஷி.—வினைக்குமாறாக ஜன்மம் வராதென்பது உண்மையே ! வினைக்கீடாக எண்ணம் உதிக்குமல்லவா ?

பெரியவர்.—ஆம் ! வினைக்கீடாகவே எண்ணம் உதிக்கும்.

கமலாக்ஷி.—உதித்த எண்ணத்திற்சேற்க உடல் கடவுள் கொடுப்பாரல்லவா?

பெரியவர்.—வினைக்கீடாயுதித்த எண்ணத்தைப்போல் உடல் கிடைக்கிறதென்றே யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

கமலாக்ஷி.—அப்பா ! தாங்கள் அங்கும் இங்கும் சுற்றிப்பார்த்து முடியாமல் நேராசப்பதில் சொல்லிவிட்டீர்கள். ஆன்மா உடலைவிட்டு நீங்கும் பொழுது நினைத்த உருவைக்கடவுள் கொடுக்கிறரா ? என்ற வினவுக்கு

வினைத்த உருவே கிடைக்குமென்றே விடைகொடுக்கவேண்டும். எவ் விதமெனில்-எவருக்கும் வினைக்கு மாறுக எண்ணம் உதிக்காததால் உதித்த எண்ணம்போல் உடல் கிடைக்குமென்றே சொல்லத் தடை யொன்றுமில்லை.

பெரியவர்.--அம்மா கமலாக்ஷி! நீ சொல்வது நியாயமே!

கமலாக்ஷி.—அப்பா! தாங்கள் ஒப்புக்கொண்டபின் என் கருத்தைச் சொல்ல வேண்டியதே! வைத்தியர் முடிவில் இஷ்டப்பட்டதைக் கொடுக்கிறார். துரைத்தனத்தாரும் இறக்கிறவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய் கிறார்கள். ஆன்மா உடலிலிருந்து நீங்கு முன்னம் கொண்ட எண்ணத் தைக் கடவுள் பூர்த்தி செய்கிறார். ஒருவர் இறக்கும் தருணத்தில் ஒன் றை விரும்பினால் நாம் என்ன செய்கிறது?

பெரியவர்.—அவர்களுடைய வேண்டுகோள் பிறருக்கு ஒரு கெடுதியையும் தராதாயின் அவர்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதே முறைமை.

கமலாக்ஷி.—அப்பா! எங்களுடைய குடும்பத்துக்கு அவமானத்தை விளை வித்ததோடு, எனக்கும் பல முறைகளில் கெடுதி செய்துவந்த என் பெ ரிய தந்தையின் மகள் இறக்க இருக்கிறதாகவும், என்னைப் பார்க்க ஆவல் கொண்டிருப்பதாகவும் நான் இக்ராமத்திலிருப்பதையறிந்து சொல்லி யனுப்பினாள். நான் தங்களுடைய உத்தரவை எதிர்பார்த்திருக்கிறேன்.

பெரியவர்.—அம்மா கமலாக்ஷி! அவள் வாழ்நாளெல்லாம் தொந்தரை கொ டுத்திருந்தாலும் சாகுந்தருணத்தில் உன்னைப்பார்க்கவேண்டுமென்றால் நீ போய்ப் பார்ப்பதே மேன்மை. "நீர் இழிய வெய்தவடுப்போல மாறு மே சிரொழுகு சான்றோர் இனம்." என்று பிரமாணமிருக்கிறது. யோ சித்துப்பார்.

கமலாக்ஷி.—அப்பா! தாங்கள் சொல்வதுபோல் செய்யத் தடையில்லை. ஆயி னும் நான் தனித்து எப்படிப் போகிறதென்றே யோசிக்கிறேன்.

பெரியவர்.--தாயாரம்மாளையும் மரகதத்தையும் அழைத்துப் போகலாம்.

கமலாக்ஷி.—அண்ணனை அழைத்துக்கொண்டு போவது உத்தமமென்று நினைக்கிறேன்.

பெரியவர்.—சொக்கலிங்கம் இங்கிருந்தால் அழைத்துக்கொண்டு போகலாம். அவன் இல்லையே!

கமலாக்ஷி.—அண்ணன் இருந்தால் அவரை எங்களோடு அனுப்பத் தங்களு க்கு ஆட்சேபனை உண்டோ?

பெரியவர்.—ஆட்சேபனை என் உண்டாகும்? உன் பெரிய தந்தையின் மகன் எங்கிருக்கிறான்?

கமலாக்ஷி.—அவள் இக்கிராமத்தில் நெடுநாளாக இருக்கிறதாகக் கேள்வி.

பெரியவர்.—இக்கிராமத்தில் நான் அறியாதவர்கள் இல்லே. அவள் பெயர் என்ன ?

கமலாக்ஷி.—அப்பா ! அவள் பெயரைச் சொன்னுல் தாங்கள் கோபிப்பீர்கள்.

பெரியவர்.—சாகப்போகிறவள்மேல் கோபம் என் வரும் ?

கமலாக்ஷி.—அப்பா ! அவள்பெயர் அம்புஜம்.

பெரியவர்.—என்ன சொன்னுய் அம்புஜமா ? எந்த அம்புஜம் ?

கமலாக்ஷி.—தங்களுடைய சகோதரியின் மகள்.

பெரியவர்.—அம்புஜத்தைப் பார்க்கவா என்மகனே அழைத்துக்கொண்டு போக யோசித்தாய் ! அந்த எண்ணத்தை விட்டுவிடு. அவளால் என் குடும்பம் எக்கதியானதென்று நீ யறிந்திருந்தால் இவ்விதம் சொல்லத் துணியமாட்டாய். அவள் கொடிய துன்மார்க்கி !

கமலாக்ஷி.—அப்பா ! அம்புஜம் மரிக்குந்தருணத்திலிருக்கிருள். இது பரியந்தம் இறந்தாளோ உயிரோடிருக்கிருளோ தெரியவில்லே. அவள் இறக்குமுன் அண்ணனைக் கடைசியாகப்பார்த்து உயிரைவிட்டால் தனக்கு உலகபற்று இல்லாமற்போகுமென்று நினைக்கிருள். தாங்கள் முன் சொன்ன விஷயங்களே யோசித்து அண்ணனே அனுப்பவேண்டும். "நீர் கிழியவெய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்ருேர் சினம்."என்ற வாக்கைத் தாங்களும் மறக்காமல் இருக்கவேண்டும். (என்று சிரித்தாள்.)

பெரியவர் சிரித்துக்கொண்டு அம்மா கமலாக்ஷி ! நீ அறியாதவளாயிருந்தும் என்னே ஏமாற்றிவிட்டாய் ! அம்புஜத்தின் விஷயத்தில் என் மனதைத் திருப்ப அனேகம் சொன்னுய். அவள் விஷயத்தில் எனக்கு மனமில்லையாயினும் உன்மனம் சந்தோஷமடைய நான் ஒப்புக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. சொக்கலிங்கம் கிராமத்தைவிட்டுப் போய்விட்டானே அதற்கென்னசெய்யலாம் ?

கமலாக்ஷி.—அப்பா ! அண்ணனே விரைவில் அழைத்துவரத் தாங்கள் உத்தரவு செய்யவேண்டும்.

பெரியவர்.—அம்மா ! நான் மறுத்தொன்றும் சொல்லாமலிருக்க, என்னே எப்பக்கத்திலும் கட்டுப்படுத்திவிட்டாய். (என்று வண்டிக்காரனைக் கூப்பிட்டுச் சொக்கலிங்கத்தை ஊரிலிருந்து அழைத்துவரும்படி உத்தரவளித்தார்.)

வண்டிக்காரன்.—ஐயா இன்னும் ஊருக்குப்போகவில்லே. அவருடைய சினேகர் வீட்டிலிருக்கிருர். என்னைப் பத்து மணிக்கு வண்டிகொண்டுவரும்படி உத்தரவுசெய்திருக்கிருர். நான் விரைவில் அழைத்துவருகிறேன்

பெரியவர்.—அம்மா கமலாக்ஷி! உன் எண்ணம் எப்பக்கத்திலும் பூர்த்தியாகிறது. நீங்கள் சென்று சித்தமாக இருங்கள். (என்று அனுப்பிவிட்டுத் தன் பெண்சாதியைப் பார்த்து) அம்மணி! கமலாக்ஷியின் சாமர்த்தியத்தைப்பார்த்தாயா? என் மனதைத்திருப்பிவிட்டாள். அம்புஜத்துக்கு என்னசெய்கிறது உனக்குத் தெரியுமா?

அம்மணி கேள்விப்பட்டதைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

தாயாரம்மாளும் மரகதமும் கமலாக்ஷியைப்பார்த்துப் பெரியவர் மனதைத் திருப்ப அதிக பிரயாசை எடுத்துக்கொண்டாய் என்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது, சொக்கலிங்கம் வீட்டுக்குள் வந்து தன் தங்கையைப்பார்த்து, அம்மா மரகதம்! அப்பாவும் அம்மாளும் என்னை என் அழைத்தார்கள்? என்றான்.

மரகதம்.—அண்ணா! தாங்கள் அம்மாளால் அறிந்துகொள்வதே உத்தமம்.

தன் தாயாரிடம் சென்ற சொக்கலிங்கம் சிலநிமிஷத்தில் திரும்பிவந்து, அம்மா சமலாக்ஷி! என்னை அழைத்துவரச்சொன்னது எதற்கென்று மரகதத்தைகேட்டால் அவர்கள் தாயாரைப்போய்க் கேட்கச்சொன்னதும், தாயாரைப்போய்க்கேட்டால் தங்கை சமலாக்ஷியைக் கேள் என்கிறதும் வேடிக்கையாக இருக்கிறது. நீ யாரைப்போய்க் கேட்கச் சொல்லப்போகிறாய்? (என்று நகைத்தான்.)

கமலாக்ஷி.—அண்ணா! நான் ஒருவரிடத்தும் தங்களை அனுப்பவில்லை. நானே சொல்லுகிறேன். தங்களை வரவழைத்தகாரணத்தைச் சொல்லுமுன் நான் இரண்டொரு கேள்விகள் கேட்டு அதற்குப் பதில் கிடைத்த பின் சொல்ல வேண்டுமேயொழிய அதற்குமுன் சொல்லமுடியாது. (என்று சிரித்தாள்.)

சொக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! என்னை என்ன கேட்கப்போகிறாய்? அம்மாள் என்னை வரவழைத்தது எதற்காக? கெட்டசமாசாரம் சொல்லவா? அல்லது நல்ல சமாசாரம் சொல்லவா? அதை முதலில் சொல்ல வேண்டும்.

கமலாக்ஷி.—அண்ணா! அது நல்லதென்றும் கெட்டதென்றும் சொல்லமுடியாது. நான் தங்களால் அறியவேண்டியதை அறிந்தபின் சொல்லுகிறேன். ஆனதால் நான் கேட்பதற்குப்பதில் சொல்லவேண்டும். அதாவது — நான் தங்களை அறிந்தவளாயிருந்து தங்கள் விஷயத்தில் ஒரு கெடுதியைச் செய்தால் தாங்கள் என்னை எவ்விதம் நடத்துவீர்கள்?

சொக்கலிங்கம்.—அந்தக் கேள்வி என்னத்திற்கு அம்மாள் என்னை ஏன் வரவழைத்தார்கள்? அதைத் தெரிவித்துப்பின் நீ கேட்க இவ்விடங்கொண்டதைக் கேட்கலாம்.

கமலாக்ஷி.—அண்ணா! நான் கேட்பவைகளுக்குப் பதில் கிடைக்குமுன்னம் அதைச் சொல்ல முடியாமலிருக்கிறதைக் குறித்து வியசனப்படுகிறேன். தங்கள் விருப்பத்தின்பிரகாரம் நடக்காமல் தடைசெய்வதைக் குறித்து என்னை மன்னித்து நான் கேட்டதற்குப் பதில் சொல்லவேண்டும்.

சோக்கலிங்கம்.—அம்மா! உன் கருத்து அவ்விதமிருந்தால் நான் பதில் சொல்ல வேண்டியது அவசியம். ஒருவரை யொருவர் அறிந்து சினேகமா யிருப்பவர்கள் கெடுதியைச் செய்வார்களானால் அவர்களுடைய சினேகத்தை விட்டு அவர்களை அன்னியரைப்போல் பார்க்கவேண்டியதே முறைமை.

கமலாக்ஷி.—அண்ணா! நான் என்னைக் குறித்துக் கேட்ட கேள்விக்குத் தாங்கள் அதைப் பொதுவாக்கிப் பதிலுரைத்தீர்; நான் தங்கள் விஷயத்தில் ஒரு காலத்தில் கெடுதியைச் செய்து மற்றொரு காலத்தில் தங்களை அடித்து, அண்ணா! நான் அறியாமற் செய்ததை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் என்ன செய்வீர்கள்?

சோக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! கெடுதலை செய்தவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்க, நன்மையைச் செய்யாமற்போனாலும் மன்னிக்கவேண்டியது கடமை என்பதற்குச் சந்தேகமில்லை.

கமலாக்ஷி.—அண்ணா! தாங்கள் பொதுவகையாகச் சொல்லாமல் தங்களுடைய கருத்தைமட்டும் சொல்லவேண்டும்.

சோக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! என்னுடைய கருத்தும் அதுவே எனக்குக் கெடுதியை ஒருவர் செய்து பின் என்னை அடித்து, செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று கேட்டால் தடை சொல்லாமல் மன்னிப்பேன்.

கமலாக்ஷி.—அண்ணா! தாங்கள் நன்றாய் யோசித்துச் சொல்லவேண்டும்; நானே தங்கள் விஷயத்தில் செய்வது சகிக்க முடியாத கொடுமையாக இருந்தாலோ?

சோக்கலிங்கம்.—என் உயிருக்கே நீ உலை வைத்திருந்து, நான் இந்த எண்ணங்கொண்டிருந்தேன். அது என்மேல் குற்றம். அந்தக் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று கேட்டால் உன்னை மன்னித்து விடுவேன். (என்று கைகுலுக்கினான்.)

கமலாக்ஷி.—அண்ணா! உயிருக்குத் தீங்கைத்தேடுவது பெரிய குற்றமல்ல. அதை விட்டுத் தங்களுடைய ஆயுள் காலமெல்லாம் துன்பமடைய ஒன்றைச்செய்து அதனால் துன்பத்தை அனுபவித்திருக்கும் தங்களை அடித்துச் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று கேட்டால் அப்பொழுது மன்னிக்க மனம் வருமா?

சொக்கலிங்கம்.—நான் ஒருவரைக்குறித்தும் பேசவில்லை. என் வரைக்கும் பேசுகிறேன். நான் செய்தது குற்றம், அதை மன்னிக்கவேண்டுமென்று கேட்டால் தடை சொல்லாமல் மன்னிப்பேன். என்னை அழைத்துவரச் சொன்னது எதற்காக? அதை இப்பொழுதாகிலும் சொல்லக்கூடாதா?

கமலாக்ஷி.—அதைச் சொல்லவே இந்தக் கேள்விகளெல்லாம் வருகின்றன. தங்களுடைய ஆயுள் காலமெல்லாம் நான் தங்களைத் துன்பப்படவிட்டு நான் சாகுஞ்சமயத்தில் என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். என்ன வேலை?

சொக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! அதை வெவ்வேறு விதமாகத் திருப்பிக் கேட்க வேண்டிய அவசியமில்லை. எனக்குக் கெடுதியைச் செய்தவர்கள் சாகும் தருணத்தில் ஒருவரை விட்டு மன்னிப்பு கேட்டுவரும்படி அனுப்பினால் நான் நேரில் சென்று அவர்கள் மனம் ஸந்தோஷமடையச் செய்து வருவேன். வேறென்ன கேட்கப்போகிறாய்?

கமலாக்ஷி.—வேறொன்றும் இல்லை. தாங்கள் சொல்லியது உண்மைதானா?

சொக்கலிங்கம்.—அது விஷயத்தில் சந்தேகம் கொள்ளவேண்டிய காரணமென்ன?

கமலாக்ஷி.—காரணம் ஒன்றும் இல்லை. தாங்கள் சொல்லிய வண்ணம் செய்வீரா என்ற சந்தேகம் ஒன்று மத்தியில் உண்டானதேயன்றி வேறொன்றுமில்லை.

சொக்கலிங்கம்.—சந்தேகம் கொள்ளாமல் என்னை அழைத்த காரணத்தைச் சொல்ல இன்னும் காலம்போக்கவேண்டாம். நீ எதற்காக இவைகளையெல்லாங் கேட்டாயோ தெரியவில்லை.

கமலாக்ஷி.—அண்ணா! தாங்கள் இவ்வளவுசொல்லியபின் வாக்குத் தவறமாட்டீர். நான் முக்கியமாக அம்புஜத்தைக் குறித்துப் பேசவே இவைகளையெல்லாம் கேட்டேன்.

சொக்கலிங்கம்.—யாரைக்குறித்துப் பேச? அம்புஜத்தைக் குறித்துப்பேசவா! அவள்பேச்சு இங்கு எதற்கு வருகிறது? அவள் பேச்சு எதாகிலும் இருந்தால் அதை என்காதில் போடவேண்டாம். (என்று வெளியிற் போக எத்தனித்தான்.)

கமலாக்ஷி.—அண்ணா! தாங்கள் இதுவரையில் சொன்னவைகளெல்லாம் சர்க்கரை இனிப்பென்று வட்டில் எழுதிவைத்துக்கொண்டது போலாயினவேயன்றி, உண்மையாகக் காணப்படாமற் போனதைக் குறித்து வியசனப்படுகிறேன்.

சொக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! அம்புஜம் என் விஷயத்தில் செய்ததை அறிந்தால் என்னை மிந்திக்கமாட்டாய்.

கமலாகுமி —அம்புஜம் தங்கள் விஷயத்தில் செய்தகுற்றம் தங்கள் மனதில் வேரூன்றியிருப்பதால், அதையொட்டிப்பேசி இல்லாததை உண்டென்று ஸ்தாபிக்கவேண்டிய அவசியமில்லை; அதை வெட்டிப்பேசிய தங்களுக்கு நியாயத்தைக்காட்டவேண்டும். அம்புஜம் தங்கள் விஷயத்தில் செய்த குற்றம் என்ன? அவள் தங்களை விவாகஞ்செய்து கொள்ளுகிறேனென்று சொல்லி அவ்வாக்கினின்றும் தவறினாளே! அதுதானே குற்றம்! நாம் சிறுவர்களாயிருந்தபொழுது அனேகம் செய்தோம். அனேகம் சொன்னோம். அவைகளை வயதேறியபின் கண்டு முன்செய்தவைகளும் சொன்னவைகளும் தப்பிதமென்று தள்ளி விடுகிறோம். சிறுபொழுது சொன்னதை நிலைநிறுத்தவேண்டுமென்பது நியாயமா? சிறுபொழுதில் ஒருவனை விவாகஞ் செய்துகொள்ளுகிறேனென்று பெரியவளானபின் தனக்குச் சம்மதமில்லாமற்போனாலும் இருபக்கத்துத் தாய் தந்தையாரால் தடைபட்டாலும் சிறுபொழுதில் கொண்ட எண்ணம் நிறைவேற நியாயமில்லை. ஆனதால், அம்புஜம் வாக்குத்தவறியதில் குற்றமுள்ளவளென்று காணப்படவில்லை.

சொக்கலிங்கம்.—அம்புஜம் என்னை விவாகம் செய்துகொள்ளாதது குற்றமாயிராமற்போனாலும், தன்னுடைய துர் நடத்தைக்கு அடையாளமாக ஒரு பிள்ளையைப்பெற்றுவைத்திருக்கிறாளே! அது ஒன்றுபோதாதா! வேறெருரு குற்றமும் செய்யவேண்டுமா? அவளுடைய நடத்தையை அறிந்த அவள் தாயாரும் இறந்தாள். அவள் தமையனும் தேசாந்தரம் போனான். இதை அல்லவென்று எப்படிவெட்டிப் பேசப்போகிறாயோ பார்க்கவேண்டும்!

கமலாகுமி.—அண்ணா! தாங்கள் அறியாததை நான் என்னசொல்லப்போகிறேன்! அம்புஜம் குழந்தையைப் பெற்றுவைத்திருப்பது அவளை மேன்மையாக்குகிறதேயன்றித் தாழ்வையுண்டாக்கவில்லையென்று எனக்குக் காணப்படுகிறது. எவ்விதமெனில்-விபசாரத்திலே கைதேறியவளுக்குக் கருப்பம் உண்டானால் அவள் உலகத்தை வஞ்சிக்கக் கருவை அழிப்பதையும், பெற்றபிள்ளையை யெறிந்துவிடுவதையும்கண்டும் கேட்டுமிருக்கிறோம் அவ்விதகொடுமை ஒன்றும்செய்யாமல் குழந்தையை அன்போடு வளர்ப்பதை யோசித்தால், தான் மதிமோசத்தால் சற்பழிந்தவளென்று விளங்குகின்றது. உலகத்தை வஞ்சிக்க எண்ணங் கொள்ளாமல் தங்கள் வீணையை நொந்திருப்பவர்கள் எல்லாப் பாவச்செய்கைகளுக்கும் பயப்படுவார்களாதலால், அவர்களைக் கண்டு பரிதாபப்படாமல் கோபங்கொள்வது நியாயமல்லவே! தாங்கள் அவள்மேலிருக்கும் கோபத்தைவிட்டு யோசித்தால் உண்மைவிளங்கும். தாங்கள் சற்றுநேரத்திற்குமுன் சொல்லிய வாக்குத்தத்தினின்றும் தவறி மற்றவர்கள் வாக்கு தவறினார்களென

ன்று குற்றஞ் சாட்டுதல் நியாயமா? (என்று நகைத்தாள். அவ்விடத்தில் நின்று கேட்டிருந்த தாயாரம்மாளும் மரகதமும் நகைத்தார்கள்.)

சொக்கலிங்கமும் நகைத்து, அம்மா கமலாக்ஷி! நீ பேசுந் திறமையை நான் நேரில் புகழ்வதிற் பிரயோசனமில்லை. அம்புஜத்தின் விஷயத்தில் என்ன சொல்லப்போகிறாய்? நான் என்ன செய்யவேண்டும்?

கமலாக்ஷி.—அண்ணா! அம்புஜம் இது பரியந்தம் உயிரோடிருக்கிறாளோ அல்லது இறந்தாளோ தெரியவில்லை. அவளுக்கு வாந்திபேதி கண்டு மூடிவுக்கு வந்திருக்கிறாள். நானும் தாயாரம்மாளும் பார்த்துவந்தோம். தங்களுடைய உத்தரவில்லாமல் அவள் வீட்டுக்குப்போன குற்றத்தை மன்னித்து அவள் வீட்டுக்குத் தாங்கள் வரவேண்டும். அவள் கடைசியாகத்தங்களைப்பார்த்துவிட்டு இறக்கவேண்டுமென்கிறாள். இந்த உபகாரம் எங்களுக்காகவாவது செய்யவேண்டும்.

சொக்கலிங்கம்.—அம்மா! நான் எதற்காக அங்கு வரவேண்டும்?

கமலாக்ஷி.—அம்புஜம் செய்த குற்றத்தை மன்னிக்கும்படித் தங்களை நேரில் கேட்டுக்கொள்ள எண்ணங் கொண்டிருக்கிறாளென்று நினைக்கிறேன்.

சொக்கலிங்கம்.—என் விஷயத்தில் செய்த குற்றத்தை நான் மன்னித்ததாக நீங்களே சென்று சொல்லிவிடுங்கள். அவள் இருக்கும் வீட்டுக்குப்போக என் மனம் எழவில்லை.

கமலாக்ஷி.—அண்ணா! "செய்வினை திருந்தச்செய்" என்ற வாக்குப் பிரகாரம் தாங்கள் நேரிற்கண்டு சொன்னால் அவள் சந்தோஷத்தோடு இறப்பாள். முன் தாங்கள் சொல்லிய வாக்குக்கு விரோதம் சொல்லாமல் எங்களோடு வரவேண்டும். விளைவில் போகாமற்போனால் அம்புஜத்தை உயிரோடு பார்க்க முடியாது.

சொக்கலிங்கம்.—எல்லாருடைய இஷ்டமும் அவ்விதமிருப்பதால் நான் இன்னும் தடை செய்துகொண்டிருப்பதிற் பிரயோசனமில்லை. போகலாம் வாருங்கள். (என்று எழுந்து நடந்தான்.)

மரகதம் தமையனுக்கு அஞ்சிப் பின் நின்றாள். கமலாக்ஷி அதிக மகிழ்வாய்த் தாயாரம்மாளோடு பின் தொடர்ந்து சென்றாள். சொக்கலிங்கம் அம்புஜத்தின் வீட்டருகிற்சென்று உள்ளுக்குப் போகாமல் வெளியில் நின்றிருப்பதைக் கமலாக்ஷி கண்டு, அண்ணா! சற்று இங்கிருங்கள்! பார்த்து வருகிறேனென்று ஓடி அம்புஜத்தைப்பார்த்து, அம்மா எப்படியிருக்கிறது? உன் அத்தானை அழைத்து வருகிறதாவென்று கேட்டாள். அம்புஜம் பேசச் சக்தியற்றுப் படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்து, அத்தான்வந்தாரா! என்று சந்தோஷப்பட்டு அத்தான்! வினைவில் வாருங்கள் என்று சக்தி யெல்லாம் சேர்த்து உரத்துக் கூப்பிட்

டழைத்தாள். சொக்கலிங்கம் தன் மனதுக்கு விரோதமாகக் கமலா கூியின் பலவந்தத்திஞல் வந்தோமென்று அம்புஜத்தின் அருகிற் போய் நின்ருன். அம்புஜம் சொக்கலிங்கத்தின் கால்களைப் பிடித் துக்கொண்டு அத்தான்! அத்தான்! தங்களுக்கு வழி தெரிந்ததா? நான் இறக்கும் சமயத்திலா என்னைப்பார்க்க வந்தீர்கள்! ஐயோ! ஒரு நாள் முன் வரக்கூடாதா! நான் பாவி. எதையுங்கொடுத்து வைக்க வில்லை. அத்தான்! தாங்கள் முதலில் என்னை எவ்வளவு இச்சித் திருந்தீரோ அவ்வளவுக் கதிக வெறுப்பை என் முடிவில் உண்டாக் கிக் கொண்டேனல்லவா? நான் என்ன செய்வேன்? என் வினைப் பயனை நானே அனுபவிக்க வேண்டியதால் ஒருவரை நோவதிற் பிர யோசன மில்லையென்று அழுது மூர்ச்சையாஞள். சொக்கலிங்கம் அம்புஜத்தின்மேல் அதிக வெறுப்பைக் கொண்டிருந்தாலும் அவள் மீலை தவறிய பின்னும் தன் விஷயத்தில் கொண்டிருந்த அன்பு குறை யாமலிருப்பதைக் கண்டு அவளைப் படுக்கவைத்துத் தன் கண்களில் நீர்வடியத் துக்கப்பட்டுக் கொண்டிருந்தான். சில நிமிஷங்களுக்குப் பின் அம்புஜம் விழித்துப்பார்த்து, அத்தான்! தங்களைப் பார்க்காமல் இறந்து விடுவேனென்ற பயம் எனக்கதிகமாயிருந்தது, நான் தங்க ளைப் பார்த்துவிட்டதால் என் கலி தீர்ந்துவிட்டது. இனி இறப்புக்கு அஞ்சேன். அத்தான்! தங்களிடத்தில் சில சமாசாரங்கள் சொல்ல வேண்டுமென்று தங்களை அழைத்து வரும்படி கமலாகூி யம்மாளைக் கேட்டுக்கொண்டேன். அவைகளைச் சொல்ல எனக்குச் சக்தியில்லா மலிருக்கிறது. அம்மா கமலாகூி! நான் அத்தானிடம் என் மனதி லிருப்பதைச் சொல்லுமுன் இறந்து விடுவேனுஞல், முன் உன் னிடத்தில் சொல்லிய கடிதத்தை எடுத்து என் அத்தானிடத்திற் கொ டுத்து விடவேண்டும். அத்தான்! தாங்கள் அக்கடிதத்தைச் சாவகா சத்தில் வாசித்துப் பார்க்கவும். அக்கடிதத்தில் என் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அத்தொந் தரவைத் தங்களுக்குக் கொடுக்காமல் கமலாகூி யம்மாள் ஒப்புக்கொ ண்டாள். ஒருவேளை கடவுளுக்குப் பிரியமிருந்து நான் இறக்குமுன் சிறிதுசக்தி கொடுப்பாராயின். நானே சொல்லுவேன். நான்முன் னதாக இரண்டு வரங்களைத் தங்களிடத்தில் பெற்றுக்கொள்ளவேண் டும். நான் இறக்குந் தருணத்தில் தடை செய்யாமல் அவைகளைக் கொடுக்கவேண்டும். (என்று வேண்டினுள்.)

சொக்கலிங்கம்.—அம்புஜம்! நீ என்விஷயத்தில் செய்த குற்றம் பெரியதாயி னும் இத்தருணத்தில் நீ விரும்பியதைக் கொடுக்கத் தடைசெய்யேன்.

அம்புஜம்.—அத்தான்! இப்பாதகியின்மேல் மனமிரங்கியதற்காக அநேக நமஸ்காரம் செய்கிறேன். நான் கேட்ட வரங்கள் இரண்டிலே நான்

தங்கள் விஷயத்தில் செய்த குற்றத்தை மன்னிப்பதொன்றும், நான் இற க்கும் வரையில் என்னை விட்டு நீங்காமல் இருப்பதொன்றுமே !

சொக்கலிங்கம்.—அம்புஜம் ! இங்கு வருமுன் கமலாகூஷியம்மாள் சேட்டுக் கொண்டபடி உன் குற்றங்களை மன்னித்துவிட்டேன். மற்றதும் உன் னிஷ்டம்போல் செய்வேன்.

அம்புஜம்.—அம்மா கமலாகூஷி ! என் முடிவு காலத்தில் என்னைக் கேட்காமல் எனக்கு வேண்டியவைகளைச் செய்து முடித்தாய். என் பிள்ளையையும் காப்பாற்றுகிறேனென்று வாக்களித்தாய். இந்த உபகாரங்களுக்குக் கைம்மாறுக என்ன செய்யப்போகிறேன் ! என் உயிருள்ள பரியந்தம் இந்த உபகாரங்களை மறவேனென்று சொல்ல என்மனம் கூசுகிறது.

கமலாகூஷி.—என் மனம் கூசுகிறதென்கிறாய் ?

அம்புஜம்.—நான் இன்னும் எவ்வளவுநேரம் உயிரோடிருக்கப் போகிறே னென்று நினைத்தே மனம் கூசுகிறது.

கமலாகூஷி.—அம்மா அம்புஜம் ! யாவரும் ஒரு நாளைக்கு இறக்கவேண்டிய வர்களே ! நான் சொல்லிப் போடச்சொன்ன கஷாயம் இது. இதைக் குடித்துவிடு. (என்று வீட்டிலிருந்து பெண்பிள்ளை கொண்டுவந்ததை வாங்கிக் கொடுத்தாள்.)

அம்புஜம்.—அம்மா கமலாகூஷி ! அதைக் குடித்தவுடன் வாந்தி எடுக்கவேண் டும். வாந்தியெடுக்க என்னால் முடியவில்லை. நீ சொல்வதையும் தடுக் கப் பிரியமில்லை. (என்று எழுந்து உட்சார்ந்து வாங்கிக் குடித்தாள்.)

கமலாகூஷி.—வாந்தி நிற்கவே இதைக்கொடுத்தது. (என்று நெஞ்சைத் தட வி க் கொண்டிருந்து சில நிமிஷங்களுக்குப் பின் ஆகாரம் கொடுத்துப் படுக்கவைத்தாள்.)

அம்புஜம் சற்றுநேரம் படுத்திருந்தெழுந்து உட்கார்ந்து, அத்தான் ! நான் தங்கள் விஷயத்தில் குற்றம் செய்யாதிருந்தால் இவ்விதமான மர ணம் எனக்கு வராதல்லவா ?

சொக்கலிங்கம்.—அம்புஜம் ! முடிந்துபோனதைக்குறித்து யோசிப்பதாற் பிரயோசனமில்லை. இன்னும் சற்றுநேரம் படுத்திருந்தால் நன்மையாக இருக்குமென்று நினைக்கிறேன்.

அம்புஜம்.—அத்தான் ! எனக்குப் படுத்திருக்க இஷ்டமில்லை. தாங்கள் என் னருகில் உட்கார்ந்து கையைக் கொடுங்கள். (என்று கையைப் பிடித் துக் கண்களில் ஒத்திக்கொண்டு) இந்த கரம் என்னை விட்டுநீங்க என்ன பாவம் செய்தேன் ! என்மேல் குற்றமில்லாமலிருந்தால் நீங்குமா ? நான் மரணமடைய இருக்கும்பொழுது யாவரும் வருவார்களே ! தெய்வமே !

ஆ! என் கண்மணி! இத்தனைநாள் உண்மையை அறிந்துகொள்ளாமல் உன் விஷயத்தில் கொடுமையா யிருந்த பாவியாகிய என்னைப் பார்க்கக் கூடாதென்று கண்களை மூடிக்கொண்டாய்?

(204ம்-பக்கம் பாருங்கள்.)

நான் என் பெண்ணைப்பிறந்தேன்! இந்தத் துன்பங்களை அனுபவிக்கவா? (என்று அழுதாள்.)

கமலாக்ஷி.—அம்மா. அம்புஜம்! நீ துக்கப்படுவதிற் பிரயோசனமில்லை. அண்ணன் சொல்லிய வர்ணனம் சற்றுநேரம் படுத்துக்கொள்.

அம்புஜம்.—எனக்குப் படுக்க இஷ்டமில்லை. நான்சொல்வதை நீங்கள் மூவரும் கேட்டு இரகசியத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நான் தேடிக்கொண்ட அவமானத்தைச் சொல்லாமல் இறந்தால் எனக்கு ஆறுதலை உண்டாகாது. அத்தான்! தங்களுடைய கை என் மடியிலிருக்கட்டும். (என்று கையைப் பிடித்து மடியில் வைத்துக்கொண்டு, கமலாக்ஷியைப் பார்த்து) அம்மா! நான்பிறந்து ஐந்து வயதானபின் என் மாமன் வீட்டில் வளர்ந்து என்தாயார் வீட்டில் பருவமடைந்தேன். நான் பருவமடைந்தபின் என் தமச்சைக்கு விவாகம் ஆகாததால் எனக்கு விவாகமாகாமல் இரண்டு வருடங்கள் தடைபட்டிருந்தது. நான் தாய், தமையன், தமக்கையுடன் இருந்த ஊரில் ஒரு வாலிபன் எங்கள் வீட்டு வழியாக நாள்தோறும்போகும்போது என்னைப்பார்த்து நகைத்து வந்தான். சிலநாள்களுக்குப்பின் அவனை என் தமையன் வீட்டுக்கு அழைத்து வந்து தாசத்துக்குக் கொடுக்கும்படி சொன்னார். அதுமுதல் அவன் அடிக்கடி வீட்டுக்கு வருவது வழக்கமாகி என் தாயார் தமையன் இல்லாத காலத்தில் வந்திருந்து அன்றிரவை எங்கள் வீட்டில் போக்கிச் சென்றான். அப்பாதகனால் பிள்ளையொன்று என் கையிலிருக்கச் சம்மதித்திருந்த பெரும்பாதகியாகிய என்னை மன்னிக்கத்தகுமா? (என்று அழுதாள்.)

கமலாக்ஷி.—அம்மா அம்புஜம்! ஊழ்வழி மனஞ்செலுமாகையால் வியசனப்படுவதிற் பலன் ஒன்றும் இல்லை.

அம்புஜம்.—அத்தான்! தாங்கள் என்னை மன்னித்தேன் என்றாலும் அது மனப்பூர்த்தியாக வந்திருக்குமென்று நான் நம்பவில்லை.

சொக்கலிங்கம்.—அம்புஜம்! அடித்தடித்து அதைக்கேட்பது யாவருக்கும் துன்பத்தைத் தருகின்றது. அவைகளையெல்லாம் மறுத்து. நீ சற்று நேரம் படுத்துறங்கினால் உத்தமமாயிருக்கும்.

அம்புஜம்.—என் பிரியமான அத்தான்! தங்களுக்குள்ள கோபத்தை யடக்கி வெளிசகுக் காட்டாமல் பேசுவதை நன்றாயறிந்தேன். தாங்களும் மற்றவர்களும் என் விஷயத்தில் எண்ணியதுபோல் நான் குற்றம் செய்தவளல்ல. இந்தக் குழந்தையும் என்னுடையதல்ல. இந்த இரகசியத்தைத் தங்களிடம் சொல்லாமலிருந்த குற்றத்தை மன்னிக்கவே தங்களைக் கேட்டுக்கொண்டேன். என் தலையணையின் கீழிருக்கும் சாவியை யெடுத்

துப் பெட்டியைத் திறந்து தங்கள் மேல்விலாசத்துக்குள்ள கடிதத்தை வாசித்துப்பாருங்கள். (என்று படுக்கையிற் சாய்ந்து கண்களை மூடினான்.)

சொக்கலிங்கம் விரைவாய் எழுந்து கடிதத்தைக் கைக்கொண்டு வாசித்து, ஆ! என் கண்மணி! இத்தனை நாள் உண்மையை அறிந்துகொள்ளாமல் உன் விஷயத்தில் கொடுமையாயிருந்த பாவியாகிய என்னைப் பார்க்கக்கூடாதென்று கண்களை மூடிக்கொண்டாய்? என்று அம்புஜத்தின்மேல் சாய்ந்து மூர்ச்சையானான்.

அந்தச்சமயத்தில் சொக்கலிங்கம் சொல்லியதைக் கேட்டுக்கொண்டேவெளியிலிருந்து வந்த ஒரு பெண்பிள்ளை தூரத்திலிருந்தே அம்புஜத்தின் அருகிலிருப்பவர்களைப் பார்த்துப் பயந்து, என்னைக் காட்டிக்கொடுத்து அவமானத்தில் அழுத்தவா எண்ணங்கொண்டிருந்தாய்? அடி அம்புஜம்! உன்னை யமலோகம் குடிபுகுத்தி விடுகிறேனென்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தவள் வாயற்படி தடைப்பட்டு விழுந்தாள். அவள் சொல்வதைக்கேட்டுப் பின்தொடர்ந்து வந்த இருவரில் ஒருவன் ஓடிவந்து தூக்கி வாயிலும் நாசியிலும் இரத்தம் வருவதைப் பார்த்துத் தன்னோடு வந்தவரை யழைத்து, ஐயா! கனகாம்புஜம் மோசஞ்செய்து விட்டுப் போய்விட்டாள்போல் காணப்படுகிறதே! கைநாடியைப் பாருங்கள் என்று அவளைத் தன்னோடு வந்தவரிடம் விட்டுக் கனகாம்புஜம் சொல்லிக்கொண்டுவந்த தன்கருத் தென்ன வென்று வீட்டுக்குள் நுழைந்தான். அங்கு சொக்கலிங்கம் அம்புஜத்தின் அருகில் கையிலோர் காகிதத்தோடு விழுந்திருப்பதைக்கண்டு இக்காகிதம் அவள் சொல்லியதற்குக் காரணமாக இருக்குமோவென்று அக்கடிதத்தைப் பிடுங்கி வாசித்தான். அதில் அடியிற் கண்டவிதம் இருந்தது :—

என் உயிருக்குயிரான அத்தான் அவர்களுக்கு,

அனேக நமஸ்காரம்.

நான் எழுதிய சில புன்மொழிகளை வாசிக்கப் பிரார்த்திக்கின்றேன். நான் சிறுபொழுது முதல் தங்களை வதுவைசெய்து கொள்ளுகிறே னென உறுதியாகச் சொல்லியபின் வேறதப்பினேனென்று கண்டதால் இனிப் பெண்பிள்ளைகளை நம்பக்கூடாதென்றும் வேறொரு பெண்ணை விவாகஞ்செய்து கொள்ள எண்ணமில்லை யென்றும் சொல்லுவதாகக் கேள்விப்பட்டேன். இவ்வித எண்ணம் தாங்கள் கொண்டிருப்பது நியாயமல்ல. நிலைதவறிய ஒரு பெண்ணை அத்தாக்ஷியாகக்கொண்டு உலகிலுள்ள சற்புத்திரிகளையெல்லாம் தூஷிப்பது தருமமா? தாங்கள் உலகத்திலுள்ள பெண்களையெல்லாம் வெறுக்கக் காரணமாக இருந்த பெரும்பாவியாகிய நான் உயிரோடிருக்குமளவும் தங்களுக்குப்பெண்

கள்மேல் வெறுப்பு இருக்குமென்பதை யோசித்து என் உயிரை விட்டு விட எண்ணங்கொண்டேன். நான் இறந்தபின் தங்களுக்கு இக்கடி தம் கிடைத்தால் எனக்காகத் துக்கப்படாமல் தங்களுடைய எண்ணத் தைமாற்றி ஒருபெண்ணை விவாகஞ்செய்து உலக இன்பத்தை அனுப விக்கத் தங்களை நமஸ்கரித்துக்கேட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் பெண்கள் விஷயத்திற்கொண்ட அபிப்பிராயம் மாறுமல் விவாகஞ் செய்து கொள்ள மாட்டீர்களென்று கண்டதால் உண்மையைச் சொ ல்லத்துணிந்தேன். தாங்கள் பெண்கள்மேல் அவ்வித எண்ணங் கொள்ளாமல் வேறொரு பெண்ணை விவாகம் செய்திருந்தால் என்னு டைய இரகசியத்தை வெளியிட்டிரேன். என்மேல் கொண்டிருந்த அபிப்பிராயம் தவறெனத் தாங்கள் கண்டபின் தங்களைத் தாங்கள் வெறுத்துக்கொண்டு எனக்காகத் துக்கப்படாமல் நான் விட்டுப்போன குழந்தையை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தங்களை வதுவைசெய்து கொள்ளுகிறேனென்று உறுதியாகச் சொல்லி என் தாய் வீடுபோனபின் நான் புத்தி யறிந்து என் தமக்கையோடிருக்கும் பொழுது, ஒரு வாலிபன் அடிக்கடி எங்கள் வீட்டு வழியாகப்போவ தும் என் தமக்கையைப் பார்த்து நகைப்பதுமாக இருக்க என் தமக்கை யும் அவனுடைய எண்ணம் விருத்தியடையச் செய்துவந்தனள். சில சமயத்தில் நான் தெருவாயிற்படியில் நிற்பதைக்கண்டால் நான் வேறு என் தமக்கைவேறென்று கண்டுகொள்ளாமல் அவன் நகைப்பான். நான் அவனுடைய எண்ணத்திற்கு இடங்கொடுக்காமல் அருவருப்பை க்காட்டுவதைக்கண்டு அஞ்சிப்போவான். ஒருநாள் என்தமையன் அவனை வீட்டுக்குள் அழைத்துவந்து தன் அறையில்விட்டு எங்களிடம் வந்து, ஒருவன் வந்திருக்கிறான், அவன் என்னோடு பள்ளியில் வாசித் தவன், அவன் பெயர் இரத்தினம், அவனுக்குத் தாகசாந்திக்குக் கொடுத் தனுப்புங்கள் என்று சொல்லிப்போனார். அவன் வீட்டுக்குள் வரும் பொழுது பார்த்திருந்த என் தமக்கை நிறக்கப்பால்விட்டு ஒரு செம்பு காப்பிதானே கொண்டுபோய்க்கொடுத்தாள். பால்விட்டிருந்த காப்பி யில் பால்விடும் பொழுதே எனக்குச் சந்தேகந் தோன்றி என் தமக்கையிடம் ஏதாகிலு சொல்லவேண்டுமென்று எண்ணியும் அவள் கோபிப்பாளென்று பயந்து பேசாமலிருந்தேன். இரத்தி னம் தாகசாந்திக்குச் சாப்பிட்டுப் போனது முதல் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். என் தமையனும் தாயாரும் அத் தான் சாபாபதி முதலியார் வீட்டுக்குப் போயிருந்த பொழுது இரத்தி னம் வந்து அன்றிரவை நான் அறியாமல் என் தமக்கையோடு கழித் துச் சென்று அவர்கள் திரும்பி வருமளவும் அடுத்தடுத்து இரவில் வந் துபோனான். இரண்டு மூன்று மாதமானபின் என் தமக்கை கருப்ப

மாயிருந்ததையும் நடந்த விருத்தாந்தத்தையும் என்னிடம் சொல்லி யழுதாள். நான் பரிதாபப்பட்டு ஒருவித உதவியும் செய்ய வழியில் லாமலிருந்தேன். பின்னிரண்டொரு மாதத்தில் என் தாயாருக்கு உண்மை வெளிப்பட்டுப் போனதால் ஏதோ மருந்துகள் வாங்கிக் கொடுத்தும் பிரயோசனப்படாமல் என்னையும் என் தமக்கையையும் அல்லூர் என்ற கிராமத்துக்கு அழைத்துப்போவதாக என் தமையன் தருமலிங்க முதலியாரிடம் சொன்னதில் அவர் காரணத்தை யறிந்து துக்கத்தோடு எங்களை விட்டுச்சென்றார். என் தாயார் மகன் தன் னைவிட்டுப் போன துக்கத்தோடு அல்லூரில் எங்களை அழைத்துப் போய் வைத்திருந்தார்கள். சில மாதத்தில் என் தமைச்சைக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. என் தமக்கைக்கு நேரிட்ட கதியை யோசித்துத் துக்கத்திலிருந்த நானும் சுரத்திற் படுத்தேன். நா ளுக்கு நாள் சுரம் அதிகப்பட்டு எனக்கு ஜன்னிபிறந்து மூன்று மாதம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்ததை வைத்தியர்கள் கண்டு இனி பிழைக்கமாட்டேன், நான் இஷ்டப்பட்டுக் கேட்டதைக் கொடுங்க ளென்று வைத்தியர்கள் கைவிட்டபின் மூத்தமகள் சற்பழிந்தாள், இளையவள் சாகப்போகிறாள்; சாகப்போகிறவள் தலையில் பழியேற்றி விட்டால் மூத்தமகளைக் காப்பாற்றிவிடலாமென்று, நான் வியபசாரத் தால் குழந்தையைப் பெற்றேனென்று பெயருண்டாக்கி எனக்குத் துணையாக ஒருகிழவியை வரவழைத்து வைத்துவிட்டு மூத்தமகளோடு சென்று அவளுக்கு விவாகத்தை முடித்துவைத்து என்னை வந்து பார் த்தார்கள். என் தாயார் என்னைச் சுரத்தோடு கைவிட்டுப் போன பின் நாங்களிருந்த மைலாபுரியிலிருந்து வந்த வைத்தியர் ஒருவர் என்னைப்பார்த்துத் துக்கப்பட்டு எனக்கு ஔஷதங்கொடுத்துச் சொஸ் தப்படுத்திப் போயிருப்பதை யறிந்து, குற்றம் செய்தவளை மேன்மை யாக்கிக் குற்றமற்றவளை அபராதியாக்கித் துன்பத்தில் அழுத்திவிட் டேனே என்று துக்கத்தோடு சில நாளையில் இறந்தார்கள். என் தாயார் கதியை என் தமக்கைக்குத் தெரிவித்தவுடன் அவள் தன் புரு ஷனோடு வந்து வேறிடத்திலிருந்து நடத்த வேண்டிய கிரியைகளை நடத்தித் தன் புருஷனை அறியாமல் என்னிடம் வந்து, என்னுடைய குற்றத்தை நீ ஒப்புக்கொண்டு அவமானத்தோடு இருக்க நேர்ந்ததே யென்று அழுது, நீ இங்கிருப்பது நியாயமல்ல, நீ எனக் கருகாமை யில் இருப்பதே நல்லது, அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்கிறே னென்று தன் பிள்ளையை யெடுத்து முத்தங்கொடுத்துப் போனாள். இரண்டு மாதத்துக்குப் பின் ஒருவன் என் தமக்கையிடமிருந்து கடி தத்தோடு வந்தான். அக்கடிதத்தை வாசித்து என்னோடி ருந்த பெண்பிள்ளையை அழைத்துக்கொண்டு குழந்தையோடு

இந்தக் கிராமத்தில் வந்திருக்கிறேன். நான் குற்றமற்றவளாயிருந்தும் அவமானத்திற் குள்ளாகித் துக்கத்தோடிருப்பது போதாதென்று தங்களையும் துக்கத்திலிருக்கவிடுவது நியாயமல்ல. நான் இறப்பதே உத்தமமென்று இக்கடிதத்தை எழுதித் தங்களுக்கனுப்பி நான் இறக்கத் துணிந்தேன். ஆனதால் இனிப் பெண்கள்மேல் குற்றம்சொல்லாமல் விவாகம் செய்துகொண்டிருக்கவேண்டும். என் தமக்கை தன் குழந்தையைக் காப்பாற்றமாட்டாளென்றே நினைக்கிறேன். ஆனதால் தங்களுக்கு என்மேல் அன்பிருந்தால் இந்தக் கடிதத்தையும் இதனுள் அடக்கஞ் செய்திருக்கும் கடிதத்தையும் வாசித்தபின் கிழித்தெறிவதோடு குழந்தையையும் காப்பாற்ற வேண்டுகிறேன். இந்த இரகசியம் வெளியாஞல் அது என் தமக்கைக்குக் கெடுதியாக முடியும். நான் இது விஷயத்தில் கொடுத்த சிரமையை மன்னிக்கவேண்டும்.

தென்னூர்
ஆடிமீ 8உ.

இப்படிக்கு,
தங்களைக் கனவிலும் மறவாதிருந்த
அம்புஜம்.

இதனோடு இருக்கும் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதென்று அதையும் வாசித்தார். அதில் அடியிற் கண்டவிதம் இருந்தது:—

பிரிய தங்கையே! என் நாயகனை நான் வசப்படுத்தி எங்களுக்கருகில் உள்ள தென்னூரில் உன்னைக்கொண்டு வந்து வைத்துக்கொள்ள உத்தரவு பெற்றுக்கொண்டேன். நீ காலதாமதஞ் செய்யாமல் இக்கடிதம் சொண்டு வருபவனோடு கிழவியைவிடாமல் பிரயாணப்பட்டு வரவேண்டும்.

அம்மா அம்புஜம்! நான் பெற்றபிள்ளையை நீ பெற்றதாக ஒப்புக்கொண்டு எல்லாச் சுகத்தையும் விட்டு நீ இருப்பதைப் பார்க்க என்மனம் சகிக்கவில்லை. ஆதலால் நீ என்னருகிலிருந்தால் அடிக்கடி உன்னைவந்து பார்த்துக்கொண்டிருக்கலாமென்னும் ஆசையால் உன்னை வரும்படி எழுதினேன். தடைசொல்லவேண்டாம். இப்படிக்கு

உன்பிரிய சகோதரி,
கனகாம்புஜம்.

தன் பெண்சாதியின் கையெழுத்தை நன்றாயறிந்த சபாபதிமுதலியார் கடிதங்களைச் சொக்கலிங்கத்திடம் போட்டு, அடி படுபாவி! உன் நடத்தை இவ்விதமானதா! என்று கனகாம்புஜமிருக்கும் இடத்திற்குச் சென்று வைத்தியரே! இத்துன்மார்க்கிக்கு எப்படியிருக்கிறதென்றார்.

வைத்தியர்.—அப்பா சபாபதி! எனக்கு இருட்டில் ஒன்றும் தெரியவில்லை; விளக்கொன்று கொண்டுவரச்சொல்.

கமலாக்ஷி தான் கேட்டுவழக்கப்பட்ட குரல் எனக்கண்டு விளக்கோடு வெளியில் வந்து, தாதா! நீங்களா வென்றாள். வைத்தியரும் பார்த்து, ஆ!

கமலாக்ஷி! நீயா இங்கிருக்கிறாய்? நீ இங்கிருப்பாயென்று நான் நினைக்கவில்லையே! நாம் சாவகாசத்தில் பேசலாமென்று சொல்லிக்கொண்டே கனகாம்புஜத்தின் முகத்தைப்பார்த்து வாயிலும் மூக்கிலும் இரத்தம் அதிகமாய் வருவதைக்கண்டு சூலையில் வாயிற்படி அடிப்பட்டுவிட்டதால் இறந்தாள். இனி பார்த்துக் கொண்டிருப்பதிற் பிரயோசனமில்லை. எடுத்து வளர்த்து விடுங்கள் என்று சொன்னார்.

சபாபதி முதலியார்.—இவள் இறந்ததைக்குறித்து எனக்குத் துக்கமில்லை. அம்புஜம் இறந்துவிட்டாள்போல் காணப்படுகிறது. சொக்கலிங்கத்தின் கதி இன்னதென்று தெரியவில்லை. அவர்களைப் பாருங்கள். (என்று அனுப்பிக் கனகாம்புஜத்தை வேறொரு அறையில் வளர்த்திவிட உத்தரவு செய்தார்.)

வைத்தியர் வீட்டுக்குள் சென்று அம்புஜத்தையும் கொக்கலிங்கத்தையும் பார்த்து இவர்களுக்காகப் பயப்படவேண்டியதில்லையென்று தன் பையை அவிழ்த்து ஓர் சிமிழை எடுத்துத் திறந்து சொக்கலிங்கம் நாசியிற் காட்டிய வுடன் தும்மலோடு கண்களை விழித்து, ஆ! அம்புஜம்! உன்னை இறக்கவிட்டு நான் உயிரோடிருக்க முடியுமா வென்று முகத்தில் அறைந்துகொண்டு அழுதான்.

வைத்தியர்.—அப்பா சொக்கலிங்கம்! அம்புஜம் உயிரோடிருக்கிறாள். அவளுக்கு என்ன செய்தீர்கள்? (என்று கமலாக்ஷியைக் கேட்டார்.)

கமலாக்ஷி.—தாதா! அம்புஜத்துக்கு வாந்திபேதி கண்டிருந்தது. தாங்கள் வழக்கமாகப்பேதி கண்டவர்களுக்குக் கொடுக்கும் கியாழம் போட்டுக் கொடுத்தோம். அது முதல் வாந்தியுமில்லை பேதியுமில்லை யாயினும், நன்றாய்ப்பேசிக்கொண்டிருந்தவள் பேச்சு மூச்சு இல்லாமலிருக்கிறாள்.

வைத்தியர்.—(சிரித்து) அம்மா! கமலாக்ஷி! நீ கொடுத்த கியாழத்துக்கு வாந்திபேதி சஞ்சீவி யென்றுபெயர். அதை வாந்திபேதி கண்டவர்களுக்குக் கொடுத்து உடலில் தங்கினால் அவர்கள் பிழைத்துக்கொள்ளத் தடையில்லை. அம்புஜம் நெடுநேரம் பேசியிருந்தாள்போல் காணப்படுகிறது. அதனால் களைத்து நித்திரை செய்கிறாள். அவள் விழித்த வுடன் ஏதாகிலும் கஞ்சி முதலிய ஆகாரம் கொடுங்கள். (என்று சொல்லியபின் சொக்கலிங்கத்தைப் பார்த்து) அப்பா! வெளிக்கூடத்திலிருப்பதைப் பார்த்தாயா வாவென்றழைத்தார். சொக்கலிங்கம் சடிதங்களைக் கமலாக்ஷியிடம் கொடுத்து, அம்மா! இவைகளை நீயும் தாயாரம்மாளும் வாசித்துப்பாருங்கள். (என்று வைத்தியரோடு சென்றார்.)

கமலாக்ஷி வாங்கிய கடிதங்களை வாசிக்க இது சமயமல்லவென்று பத்திரமாக வைத்துக்கொண்டு அம்புஜத்துக்கு வேண்டியதைச் செய்துகொண்டிருந்தாள்.

வைத்தியர் சொக்கலிங்கத்துக்குக் கனகாம்புஜத்தின் மூடிவைக் காட்டினார்; சபாபதி முதலியாரும் சொக்கலிங்கத்தைப் பார்த்து, தம்பி! இப்பாதகி உன்னை நெடுநாள் துன்பத்திலழுத்தியிருந்தாள். அவள் குற்றத்துக் கேற்ற தண்டனை கிடைத்ததென்றார்.

சொக்கலிங்கம்.—அண்ணா! தங்களுடைய மனைவி என்னைத் துன்பத்திலழுத்தவேண்டிய காரணம் ஒன்றுமில்லையே!

சபாபதிமுதலியார்.—அப்பா! நீ மூர்ச்சையாயிருந்தபொழுது உன் கையிலிருந்த கடிதத்தைப் பிரித்து வாசித்து யாவும் அறிந்தேன். விரைவில் சில நாவரவழைத்தால் இப்பொழுதே பிரேதத்தை எடுத்து அடக்கஞ்செய்து விடலாம். இத்துன்மார்க்கியை வைத்துப்பார்க்க எனக் கிஷ்டமில்லை.

சொக்கலிங்கம்.—அண்ணா! அதிக கொடுமையைச் செய்தவர்களாயிருந்தும் இறந்தால் அவர்கள் செய்த குற்றத்தை ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடாது. மணி பத்தாய்விட்டதால் காலையிலெடுத்து அடக்கம் செய்யலாம்.

என்று வீட்டிலிருந்தவர்கள் உதவியால் பிரேதத்தைப்படுக்கவைத்து அலங்கரித்துத் தொழிலாளிகளை அழைத்து மறுநாள் காலையில் வேண்டியவைகளைத் தருவித்துச் சபாபதி முதலியாரிடம் தான் வீட்டுக்குப் போய்வருவதாக விடைபெற்றுச் சென்றான். அம்புஜம் விழித்துக் கஞ்சிகுடித்துத் தனக்குச் சௌக்கியமாக இருக்கிறதாகக் காணப்படுகிறதென்று சொல்லும்பொழுது மரகதமும் அவள் தாய்தந்தையும் வந்து அம்புஜத்தைத் தழுவிக்கொண்டு, அம்புஜம்! நீ இந்தத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாமா வென்று அழுதார்கள்.

அம்புஜம்.—ஐயோ! நான் என்ன செய்துவிட்டேன்! என் இரகசியம் யாவருக்கும் தெரிந்துவிட்டதாகக் காணப்படுகிறதே! ஐயோ! என் தமக்கையின்கதி என்னாகும்! என் சமாசாரம் இரகசியத்தில் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தும் இரகசியத்தை அத்தான் வெளியில் விட்டுவிட்டாரே! என் தமக்கை என்னால் அவமானம் அடைந்தபின் நான் உயிரோடிருக்க முடியுமா? (என்று அழுதாள்.)

அம்மணியம்மாள்.—அம்புஜம்! உன் தமைக்கையின் இரகசியம் வெளியிற் போகாது. அவள் அவமானத்தைத் தாங்கித் திரியமாட்டாளென்று நாங்கள் பிரமாணத்தோடு சொல்லுகிறோம். அவளுக்கோர் கெடுதியும் எங்களால் நேரிடுமென்று நீ கனவிலும் நினைக்கவேண்டாம். நீ முன் சுரமாக இருந்தபொழுது உன்னைக் காப்பாற்றிய வைத்தியர் தெய்வச்செயலாய் இன்றுவந்து உன்னைப்பார்த்து உனக்குக் கமலாக்ஷியம்மாள் கொடுத்தியாழமே உன்னைச் சௌக்கியப்படுத்திவிட்டதென்று சொல்லியிருக்கி

ரூர். ஆனதால் நீ இந்த வீட்டிலிருக்கக்கூடாது. உன் சொந்தவீட்டுக்கே வந்து விடவேண்டும். (என்று தழுவிமுத்தங்கொடுத்து மெதுவாக அழைத்துப்போய், சபாபதிமுதலியாரை மறைத்தும் பிரேதத்தைக்காட்டாமலும் வண்டியிலேற்றி வீட்டுக்குக் கொண்டுபோய்க் கட்டிலிற் படுக்கவைத்து உபசரித்தாள்.)

பெரியவர் கமலாக்ஷியைப்பார்த்து, அம்மா கமலாக்ஷி! இன்று நீ செய்த காரியத்தைக்குறித்துச் சாவகாசத்தில் உன்னிடம் பேச இருக்கிறேன் என்று நகைத்து சபாபதிமுதலியார் இருக்கும் இடம் சென்றார்.

மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்கு வைத்தியரும் பெரியவரும் சொக்கலிங்கமும் அவன் தாயாரும் அம்புஜம் இருக்கும் அறைக்குள் சென்றவுடன் அம்மணியம்மாள் கமலாக்ஷியைக் கட்டியணைத்துக்கொண்டாள். சொக்கலிங்கமும் பெரியவரும் ஆளுக்கோர் கையைப்பிடித்துக் கொள்ள, பெரியவர் கமலாக்ஷியைப்பார்த்து, அம்மா கமலாக்ஷி! நீ இலக்ஷ்மியைப்போல் எங்கள் வீட்டில்வந்து காலைவைத்து எங்கள் குடும்பம் ஓங்க என் கடினமானமனதைத் திருப்பியதோடு என் மகன் கோபத்தை மாற்றவேண்டியவைகளைச்சொல்லி அம்புஜத்திடம் அழைத்துச்சென்று உண்மை வெளிவரும்படியும் செய்தாய். நீ செய்த உபகாரத்துக்கு நாங்கள் பதில் என்னசெய்யப்போகிறோம் என்றார். கட்டியணைத்திருந்த அம்மணியம்மாள் கமலாக்ஷியின் முகமெல்லாம் கடித்து முத்தங்கொடுத்து, மகளே! நீ செய்த வேலைக்கு உன்னைக் கடித்துக் கடித்து முத்தங்கொடுக்க ஆசையாயிருக்கிறது. இது வரைக்கும் நீ எனக்கு ஒப்பாரிக்கு மகளாக இருந்து இப்பொழுது உரிய மகளாய்க் காணப்பட்டதால் உன் உடல் வருந்துமே என்று பயப்படுகிறேனென்பதாக அடிக்கடி முத்தங்கொடுத்துக்கொண்டிருந்தாள். ஒருகையைப் பிடித்திருந்த சொக்கலிங்கம்-அம்மா கமலாக்ஷி! அன்று பெண்பிள்ளைகளை நம்பக்கூடாதென்று சொல்லியதை மாற்ற, அம்புஜத்தின் விஷயத்தை அறிவிக்காமலே உன் வேண்டுகோளுக் கிரங்கும்படி செய்து அம்புஜத்தின் விஷயத்தைச் சொல்ல, நான்பாவி! என் சொல்லினின்றும் மாறியதைக்கண்டு கோபமுற்று, அம்புஜம்செய்தது குற்றமேயானாலும் வெட்டிப் பேசுகிறேனென்று உன் சாமர்த்தியத்தினால் அவள்மேல் குற்றமில்லாததைக் காட்டினாய்; நீ செய்ததற்குப் பதில் செய்ய முடியாதாதலால் உன்னைப்போல் படமெழுதி வைத்து அது என் குலதெய்வமென்று வணங்கிக் கொண்டிருப்பேனென்றான். அம்புஜம் எழுந்து கமலாக்ஷியைப் பார்த்து, மச்சி! என்னை மூன் பின் அறியாமல் என் விஷயத்தில் பரிதாபப்பட்டு முடியாதவைகளை முடித்துவைத்தாய்; பிள்ளையைக் காப்பாற்றுகிறே

னென்ற வாக்குங்கொடுத்தாய் ; நான் என் ஆயுள்காலமெல்லாம் உனக்கு அடிமையாயிருந்தாலும் நீ செய்த உபகாரத்துக்குச் சரியாகாதே யென்றாள். கமலாக்ஷி அவர்களைப் பார்த்து நான் அறியாதவள், ஒன்றும் தெரியாதவள், நீங்கள் உலகில் செய்துவரும் புண்ணிய வசத்தால் உங்களுக்கு எல்லா நன்மையும் உண்டாகவேண்டியது கடமை என்றறிந்தும், அநாதரவாகப் பசியால் வருந்துங்காலத்தில் பணம் கொடுத்துத் தெருவில் விழுந்திருந்தவளைக் கொண்டுவந்து ஆதரித்து இப்பொழுது என்னை யாவரும் புகழ்வது நியாயமல்ல. நீங்கள் என் விஷயத்தில் செய்த உபகாரத்துக்குப் பதில் செய்யவும் முடியுமா ? என்று கண்களில் ஜலம் வடிய நின்றாள்.

வைத்தியர்.—கமலாக்ஷி செய்கிற வேலைகளெல்லாம் எல்லாருக்கும் கோபத்தைக் கொடுக்கத் தக்கவைகளே. அவள் தாய் வீட்டிலிருக்கும் பொழுதும் வழியில் விழுந்து கிடந்த ஒரு கிழவனை வீட்டுக்குக் கொண்டுவந்து அவரைக் கொல்ல என்னைத் தூண்தேடினாள். வனசாக்ஷி என்பவளுடைய தாயிடம் இருக்கும் பொருள்மேல் அருவருப்பு கொண்டு வனசாக்ஷியை விவாகம் செய்துகொள்ள வந்தவனை ஓட்டிவிட்டாள். (என்று சிரித்தார்.)

கமலாக்ஷியும் சிரித்து மரகதத்தை அழைத்துக்கொண்டு சமையலறைக்குள் சென்றாள்.

பெரியவர்.—அம்புஜம் ! உனக்கு எப்படியிருக்கிறது ? இராத்திரி நன்றாய் தூங்கினாயா ?

அம்புஜம்.—மாமா ! இராத்திரி தூங்கி விழிக்கும்போதெல்லாம் மச்சிகள் இருவரும் கஞ்சி கொடுத்துத் தூங்கச்சொல்லிக் கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மாமி படுத்துக்கொண்டார்களா வென்று கேட்ட பொழுது இல்லையென்றும், அவர்களும் தாயாரம்மாளும் சாவு வீட்டுக்குப்போயிருந்ததாகவும் சொன்னார்கள். மாமி ! தாங்கள் யார் வீட்டுக்குப் போயிருந்தீர்கள் ? யார் இறந்துபோனது ?

அம்மணியம்மாள்.—நாங்கள் யாவரும் சாவு வீட்டுக்குப் போயிருந்து இப்பொழுதுதான் வந்தோம். இறந்தவள் உனக்குத் தெரியாததாலால் அவள் பெயரைச் சொல்வதிற் பிரயோசனமில்லை. (என்று யாவரையும் சாப்பிட்டு வரும்படி அனுப்பி அம்புஜத்தோடு உட்கார்ந்திருந்தாள்.)

அரைமணி நேரத்திற்குப் பின் கூடத்தில் பெரியவரும் வைத்தியரும் சொக்கலிங்கமும் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது பெரியவர் வைத்தியரைப் பார்த்து வைத்தியரே ! சபாபதியை இரண்டொரு நாளாவது நிறுத்தாமல் அனுப்பிவிட்டது நியாயமாகக் காணப்படவில்லை யென்றார்.

வைத்தியர்.—ஐயா ! புண்ணியகோடி முதலியாரே ! கனகாம்புஜம் தன் தங்கை விஷயத்தில் பெருங்கொடுமையைச் செய்திருந்ததாலும் அம்புஜம் மரண ஸ்திதியிலிருப்பதாலும் தான் இக்கிராமத்திலிருந்தால் அம்புஜத்தைப் பார்க்காமலிருக்க மனந்தாளாதென்றும், அம்புஜத்தை வந்து பார்த்தால் அவள் தமக்கையின் இரகசியம் வெளிவந்துவிட்டதென்ற பயத்தால் அம்புஜத்துக்குக் கெடுதியாக முடியுமென்றும், கருமம் கழித்தபின் வந்து பார்ப்பதே உத்தமமெனப் போய்விட்டார்.

சொக்கலிங்கம்.—நான் கேட்டதற்கும் அப்படியே சொன்னார். அதோ கமலாக்ஷியம்மாளும் மரகதமும் வருகிறார்கள். கமலாக்ஷியம்மாளே நீங்கள் நன்றாய் அறிவீர்போலிருக்கிறது. தங்களுக்குத் தெரியாதென்றே நினைத்திருந்தேன்.

வைத்தியர்.—கமலாக்ஷியை மட்டுமல்ல ; அவள் குடும்பத்தை முற்றிலும் நன்றாய் அறிவேன். கமலாக்ஷியை இவ்விடத்திற் கண்டது ஆச்சரியமாக இருந்தது.

கமலாக்ஷி.—தாதா ! என் பெயரைத்தாங்கள் சொன்னதாக என்காதில் விழுந்தது. என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் ?

வைத்தியர்.—அசியாயமாக அம்புஜத்தைக்கொல்லக் கியாழத்தைக் கொடுத்தனையே என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

கமலாக்ஷி.—ஆம் தாதா ! தாங்கள் வாந்திபேதி கண்டவர்களுக்கெல்லாம் வாந்திபேதி சஞ்சீவி என்கிற கியாழத்தைக் கொடுத்துக் கொல்வதைப் பார்த்திருந்ததால் நானும் கொடுத்தேன். (என்று சிரித்தாள், யாவரும் சிரித்தார்கள்.)

வைத்தியர்.—அம்மா கமலாக்ஷி ! நாம் இருவரும் தனித்து வார்த்தையாட வேண்டும்.

கமலாக்ஷி.—தாதா ! அநாதரவாய் வந்தவளைக் காப்பாற்றியவர்கள் முன்னிலையில் வார்த்தையாடாமல் தனித்தா வார்த்தையாடவேண்டும் ? அப்பா, அண்ணன், தங்கை முதலியவர்கள் அறியாத இரகசியம் என்ன இருக்கப் போகிறது ! தாங்கள் ஒன்றையும் மறைக்காமல் பேசலாம்.

வைத்தியர்.—உன் தாயாரும் பெரியவரும் வீட்டிலில்லாத காலம் பார்த்து வீட்டைவிட்டு வந்தது யாது காரணம் ?

கமலாக்ஷி.—தாதா ! நான் வீட்டைவிட்டு வந்தகாரணம் அண்ணனிடத்திலிருக்கும் கடிதத்தால் விளங்கும். அந்தக் கடிதம் இங்கிருக்கிறதோ இல்லையோ ?

சொக்கலிங்கம்.—அது என் விபூதிப்பையில் எப்பொழுது மிருக்கிறது. (என்று எடுத்துக் கொடுத்தான்.)

வைத்தியர்.—எனக்குப் பார்வை மட்டானதால் நீயே அதை வாசி. (என்று சொக்கலிங்கத்திடம் கொடுத்தார்.)

சொக்கலிங்கம் முற்றிலும் வாசித்தபின் கமலாக்ஷி வைத்தியரைப் பார்த்து, தாதா! இந்தக் கடிதத்தை ஜெகநாதமுதலியார் விஜயரங்கத்தண்ணன் எழுதியதுபோல் எழுதியனுப்பிக், கடிதங்கொண்டுவந்த சிறுவனைப் பதிலுக்காக எதிர்ப்பார்க்காமல் ஓடிவிடச் சொல்லியிருந்த சூதை நான் அறியாமல் சிறுவன் வெளியிலிருப்பானென்று போனவள் பிடிபட்டேனென்றும், தனக்குப் பின் நடந்த விருத்தாந்தத்தில் விஜயரங்கம் தன்னை விவாகஞ்செய்ய எண்ணங்கொண்டிருந்ததையும் கனகாம்புஜம் விஜயரங்கத்தோடு பேசியதையும் மறைத்து மற்றவைகளையெல்லாம் சொன்னாள். கமலாக்ஷி பட்ட கஷ்டத்தைக்கேட்ட நால்வரும் கண் கலங்கினார்கள். சொக்கலிங்கம் ஜெகநாதமுதலியாரை இலேசில் விடக்கூடாதென்றதைக் கேட்ட கமலாக்ஷி, அண்ணா! சுந்தரமும் மனோரஞ்சிதமும் அவருடைய அதிகாரத்துக்கு உள்ளடங்கி இருப்பதால் அவர்கள் வெளியாகுமளவும் அது விஷயத்தைக் குறித்து ஒன்றும் செய்யக்கூடாதென்றபின் வைத்தியரைப் பார்த்து, தாதா! என் தாயாரும் பெரியவரும் எப்படியிருக்கிறார்கள்? முத்துக்குமார முதலியாரும் அவர் பெண்சாதியும் எப்படி இருக்கிறார்கள்? விஜயரங்கத் தண்ணனுடைய தாயாரும் தந்தையும் எப்படி இருக்கிறார்கள்? பாட்டி எப்படி இருக்கிறார்கள்? என்று கேட்டாள்.

வைத்தியர்.—நீ வீட்டைவிட்டு வந்ததுமுதல் உன் தாயார் அழுதுகொண்டிருக்கிறாள். நடராஜ முதலியாரும் பூங்காவனமும் வனசாக்ஷியும் தேறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நானும் நீ மஹா கெட்ட பெண், உனக்கோர் கெடுதியும் வராதென்று சொல்லிக்கொண்டிருந்து உன்னையும் விஜயரங்கத்தையும் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறேனென்று வந்தேன். (என்று நகைத்தார்) முத்துக்குமார முதலியாரும் அவர் மனைவியும் அதிக கஷ்டங்களை அனுபவித்திருந்தார்கள்; அவர்கள் இறந்ததைக் கண்டவர்களெல்லாம் - இந்தப்பாவிகள் மருமகள் விஷயத்திற்செய்த கொடுமைகளுக்கேற்ற நரகவாதனையை இவ்வுலகத்திலேயே அனுபவித்தார்கள், இனி மருமகளைக் கொடுமையாய் நடத்த யாவரும் பயங்கொள்ளுவார்களென்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

கமலாக்ஷி.—முத்துக்குமார முதலியாருக்கும் அவர் பெண்சாதிக்கும் வந்த நோய் கெடுதி செய்யுமென்று நான் நினைக்கவில்லை.

வைத்தியர்.—ஐயோ! அவர்களுக்கு வந்த நோயைப்போல் ஒருவருக்கும் வந்ததை நான் கண்டதில்லை. பேச்சியாயி நாக்கில் வந்த பிளவில் புழுக்களுண்டாகி அவள் மருமகளைப் பேசியதைக் காட்டுதல் போல் துர்க்கந்தத்தோடு சொரிந்து கொண்டிருந்தன. முத்துக்குமாரமுதலியார் மருமகளை உதைத்துக்கொண்டிருந்த காலில் ஒரு புண் உண்டாகி உள்ளுக்குள் வீனை வைத்துக் கால் சதையெல்லாம் தின்றுகொண்டுபோய் எலும்பைக் காண விட்டது. அதனால் அவர்களிருவரும் துன்பப்பட்டே இறந்தார்கள். தீயவை உடனுக்குடனே தீய பயத்தலை அவர்களிடத்துப் பிரத்தியக்ஷப் பிரமாணமாகக் காணலாம். கலியாணசுந்தர முதலியாரும் அவர் பெண்சாதியும் தங்கள் மகன் போய் விட்டதைக்குறித்துக் கொண்டிருந்த வியசனம் சிறிது குறைந்திருக்கிறது. நியாயாதிபதி அரங்கராவ் அவர்கள் கலியாணசுந்தர முதலியாருக்கும் விஸ்வநாத செட்டியாருக்கும் ஒருவேலை கொடுத்திருப்பதால் அது விஷயத்தில் அவர்கள் சவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள்.

கமலாக்ஷி.—என்னவேலை கொடுத்திருக்கிறார்?

வைத்தியர்.—மதுரையிலிருந்து ஒரு தனவந்தன் நம்மூரில் குடியேறப் போகிறதால் பெரிய மெத்தை வீடொன்றை விலைக்குவாங்கி அவ்வீட்டை அலங்கரிக்கும்படி கேட்டுக்கொண்டதனாலே கலியாணசுந்தர முதலியாருடைய கவனம் அதன்மேலிருக்கிறது. நானும் அவருக்குத் தைரியம் சொல்லி விஜயரங்கத்தைக் கொண்டுவருகிறேனென்று வந்திருக்கிறேன்.

கமலாக்ஷி.—இரத்தினம் என்பவன் சமாசாரம் ஏதாகிலும் தங்களுக்குத் தெரியுமா? எனக்கு விஜயரங்கத்தண்ணன் எழுதியதுபோல் எழுதிய கடிதத்தில் ஏதாகிலும் உண்மை இருக்குமா?

வைத்தியர்.—நான் அவன் விஷயத்தைச்சொல்ல மறந்தேன். வனசாக்ஷி இனி தனக்குக் கிடைக்கமாட்டாளென்றறிந்தபின் சில மாதங்கள் வெளிவராமல் இருந்தவனுக்கு வந்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அவன் சிறிய தகப்பனார் ஒருவர் காலம் சென்றதாகவும், அவருக்கு வேறொரு வாரிசில்லாததால் தம்முடைய ஆஸ்தியையெல்லாம் இரத்தினத்துக்கு வைத்து இறந்தாரென்றும் அதனால் அவன் பெருமகிழ்ச்சியோடிருக்கிறான்.

கமலாக்ஷி.—கிடைத்த சொத்துக்கள் அதிகமோ?

வைத்தியர்.—சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் என்று கேள்வி.

கமலாக்ஷி.—இனியாகிலும் இரமமாயிருந்தால் நன்மையை யடைவான்.

சொக்கலிங்கம்.—வைத்தியரே ! அம்புஜத்துக்கு அவளுடைய தமக்கையின் சமாசாரத்தைச் சொல்லவேண்டியது தானே ?

வைத்தியர்.—இன்னும் பொறுத்தே சொல்லவேண்டும். அம்புஜம் மனம் திடுக்கிடத் தற்காலம் ஒன்றும் சொல்லக்கூடாது.

சொக்கலிங்கம்.—தாங்கள் விஜயரங்கத்தைத்தேடிக்கொண்டு வந்தீர்களென்று சொன்னீர்களே ! விஜயரங்கத்தின் சமாசாரமொன்றும் அறியவில்லையா !

வைத்தியர்.—நான் அவனைத் தேடிவரும் வழியில் சபாபதிமுதலியாரைக் கண்டு விசாரித்ததில், விஜயரங்கம் அவர் வீட்டிலிருந்து கனகாம்புஜத்தை அடைய முயற்சி செய்ததால் அவனை வீட்டிலிருந்து துரத்திவிட்டதாகச் சொன்னார். விஜயரங்கத்தின் குணம் மேன்மையானதென்று நான் விரிவாகச் சொல்லியதற்குத் தான் நேரில் பார்த்ததை மாற்ற ஒரு வராலும் முடியாதென்றென்னை அழைத்து வந்தார். நேற்றிரவு இக்கிராமத்துக்கு வரும்பொழுது மணி பத்துக்குச் சமீபமானதைக் கண்டு இரவை இவ்விடத்தில் கழிக்க எண்ணங்கொண்டு கனகாம்புஜத்தின் வேண்டுகோளால் அம்புஜமிருக்கும் வீட்டிற்கு வந்தோம். நாங்கள் அவளோடு பின் சென்று அவள் சொன்னதெல்லாம் நாங்கள் கேட்டுக்கொண்டே சமீபத்தில் போனபோது அவள் வாயிற்படி தடுத்து விழுந்த நேரத்தில் ஒரு உதவியும் செய்ய முடியாமற்போயிற்று. காலை நாலு மணிக்கு எழுந்து ஊருக்குப்போகலாமென்று சொல்லிய கனகாம்புஜம் அப்பொழுதே இவ்வுலகத்தைவிட்டுப் போய்விட்டாள்.

புண்ணியகோடிமுதலியார்.—வைத்தியரே ! கனகாம்புஜம் என்ன சொல்லிக் கொண்டுபோனாள்.

வைத்தியர்.—சொக்கலிங்கத்தை அம்புஜத்தருகில் பார்த்தவுடன், தன் தங்கை தன்னை மோசஞ்செய்துவிட்டானென்றும் அவனைக் கொன்றுவிடுவேனென்றும் சொல்லிக்கொண்டே ஓடினாள்.

சொக்கலிங்கம்.—தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது. கனகாம்புஜத்தின் சமாசாரத்தை அண்ணன் தங்களிடம் ஏதாகிலும் சொன்னாரா ?

வைத்தியர்.—அந்த இரகசியம் அறிந்ததால் அவரைத் தடைசெய்து கிறுத்தாமல் அனுப்பிவிட்டேன்.

கமலாக்ஷி.—இறந்தவளைப்பற்றிய இரகசியத்தை மறைத்துவைத்து இருப்பவர்களுக்கு அதனால் துன்பத்தைக்கொடுத்திருப்பது அழகல்ல. ஆனதால், அண்ணன் சபாபதிமுதலியார் விஜயரங்கத்தண்ணன்மேல் கொண்டிருக்கும் கெட்ட அபிப்பிராயம் நீங்க நான் அறிந்த கனகாம்புஜத்தின் இரகசியத்தைச் சொல்லவேண்டியது அவசியமாக இருக்கிறது.

என்று கமலாக்ஷிதான் வைக்கோற்போரில் படுத்திருந்ததையும், விஜயரங்கம் கனகாம்புஜத்துக்குப்பயந்து அங்குவந்ததையும், கனகாம்புஜம் விஜயரங்கத்திடம் கெட்ட எண்ணத்தோடு வார்த்தையாட அவ்வெண்ணத்திற்கு உடன்படாமல் "என் எண்ணத்தை மாற்றேன், நான் சாப்பிடும் சாதம் என்னுடம்பில் ஒட்டவும் நான் கவலையற்றிருக்கவும் மனமிரங்க வேண்டும்." என்று கனகாம்புஜத்தைக்கேட்டுக் கொண்டிருந்த சம்பாஷணை முடிவில் என் சமீபத்திலே அண்ணன் சபாபதிமுதலியார் வந்து நின்று சில வசனங்களைமட்டும் கேட்டு விஜயரங்கத்தண்ணனை அடித்துத் தள்ளிக்கொண்டு போனதையும், தான்நேரில் சென்று சபாபதிமுதலியாருக்கு உண்மையைச்சொல்ல எண்ணங்கொண்டு போனபோது கல்தடுக்கி விழுந்ததையும் விளங்கச் சொன்னள்.

கமலாக்ஷி சொன்னதைக் கேட்டிருந்த யாவரும் அதுபரியந்தம் அவ்விஷயம் சொல்லாமலிருந்த கமலாக்ஷியின் நற்குணத்தைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

18-ம் அத்தியாயம்.

சபாபதிமுதலியார்.—தம்முடைய மனைவி கனகாம்புஜத்தின் துர்நடத்தையை அறிந்ததோடு, வைத்தியரால் வைக்கோற்போர்க்கருகில் நடந்ததைக்கேட்டும் ஆச்சரியப்பட்டு, விஜயரங்கத்துக்கும் கனகாம்புஜத்துக்கும் நடந்தசம்பாஷணையை நாமொருவருக்கும்சொல்லாமலிருக்க அவ்விடம் மற்றெவரேனுமிருந்து கேட்டிருந்தாலன்றி அவ்விஷயம் வெளிவரதியாயமில்லையே ! நாம் ஆத்திரப்பட்டு விஜயரங்கத்தின்மேல் குற்றமேற்றி அனைக்கேவலமாகப் பேசியதோடு அடித்துத் துரத்தியும் விட்டோம் ; தன்மேல் குற்றமில்லாதிருந்த விஜயரங்கம் உண்மையை யறியாமல் நாம் அவனுக்குச் செய்ததைக்குறித்து நம்மை என்னவென்று மதித்திருப்பான் ! எஜமானுடையமனைவியின் துர்நடத்தைக்கு இடங்கொடுக்காமல் தடைப்படுத்திய உத்தமன்மேல் குற்றஞ்சுமத்தியபாதகனுகிய என்னை உலகம் என்னசொல்லும் ! கனகாம்புஜத்தின் துர்நடத்தையொன்றே நம்மை அவமானத்தி லமிழ்த்தப் போதுமானதாயிருக்க, நம்முடைய புத்தியீனத்தால் குற்றமற்றவன்மேல் குற்றஞ்சுமத்திய குற்றத்தையும் சேர்த்துக்கொண்டோமே ! நாம் சில நாள் வெளிப்பட்டு நம்மை அறிந்தோர்களுக்கு மறைந்திருந்தாலன்றி நாம் அவமானத்தால் இறக்கவேண்டி வருமென்று, கனகாம்புஜத்துக்குச் செய்யவேண்டிய கிரியைகளெ யெல்லாம் குறைவற நடத்தியபின் சில மாதங்கள் யாத்திரை செய்துவருவதாகத் தம்முடைய இனத்தாரிடம் சொல்லி, இரண்டு வாரங்களாகப் பல இடங்களிலிருந்து, ஒருநாள்

மாலை வண்டி மெதுவாகப் பின்வர முன் நடந்துபோகும் பொழுது வழிப்போக்கர் இருவர் வார்த்தைய டிச்கொண்டு போவதைக் கேட்டுக்கொண்டே அவர்களைத் தொடர்ந்து சென்றார்.

முதல் வழிப்போக்கன்.—அண்ணே! நாம் இவ்வளவு தூரம் வந்தும் பிரயோசனமில்லாமற் போய்விடும்போல் காணப்படுகிறதே! பொழுதுபோகும் நேரமாய் விட்டதால் நாம் இனிமேல் சென்று அவரைப் பார்த்துவர முடியுமா?

இரண்டாவது வழிப்போக்கன்.—அவர் இருக்கும் இடத்திற்கருகில் வந்து விட்டோம். இன்னும் கால்மைல் தூரமிருக்குமென்று நான் நினைக்கவில்லை. நாம் அவரைக்கண்டு இரண்டொரு வார்த்தையாடித் திரும்ப வேண்டியவர்களேயன்றி நெடுநேரம் அவ்விடத்திலிருக்கப் போகிறதில்லை. பொழுதிருக்கும் பொழுதே திரும்பிவிடலாம். நாம் இவ்வளவு தூரம் வந்தும் அவரைப் பார்க்காமற்போவது உசிதமல்ல.

முதல் வழிப்போக்கன்.—அவருடைய வல்லமையைப்பற்றி கேள்விப்பட்டது உண்மையாயிருக்குமாயின் நாம் நேரத்தையும் தூரத்தையும் கவனிக்க வேண்டியதில்லை.

இரண்டாவது வழிப்போக்கன்.—நான் சொன்னது யாவும் உண்மையாகக் காணப்படும். அவரோடிருப்பவர்கள் முன்பின்னறியாத ஒரன்னியினை எனக்கெதிரில் பெயர் சொல்லி யழைத்து, அவனுக்கு நேரிட்டதும் நேரிடப்போகிறதையும் அவன் எண்ணிவந்த காரியத்தையும் சொல்லியாவரும் ஆச்சரியப்படும்படி செய்தார்கள்.

முதல் வழிப்போக்கன்.—பெரியவர் சங்கதிகள் சொல்லியபின் பணம் எதாகிலும் எதிர்ப்பார்க்கிறாரா?

இரண்டாவது வழிப்போக்கன்.—பணம் கொடுக்கப்போனால் தமக்குப் பணம் வேண்டுவதில்லையென்றும் தமக்கு வேண்டுமானால் செய்துகொள்ளத் தெரியுமென்றும் சொல்லுகிறார்.

முதல் வழிப்போக்கன்.—அவருக்கு இரசவாதமும் தெரியுமோ?

இரண்டாவது வழிப்போக்கன்.—அவர் அஷ்டமாசித்தியிலும் கைதேர்ந்தவராகக் காணப்படுகிறார். அவரைக் காணப்போகிறவர்களுக்கு விபூதியொன்று கொடுத்தே எல்லாச்சித்தியும் உண்டாகும்படி செய்கிறார்.

சபாபதிமுதலியார் - வழிப்போக்கரிருவர் ஒரு பெரியவரைக் குறித்துப் பேசுகிறார்கள், தாமும் அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை கொண்டு வழிப்போக்கரைப் பார்த்து, நீங்கள் இருவரும் பேசிக்கொண்டு போவதைக் கேட்டு வந்தவனுதலால் அந்தப் புண்ணிய புரு

டனைப் பார்க்க எனக்கும் ஆசையுண்டாகிறது, என்னையும் அழைத் துப்போக உங்களுக்கு ஆட்சேபனை யுண்டோவென்று கேட்டார்.

இரண்டாவது வழிப்போக்கன்.—ஐயா ! ஆட்சேபனைக்குப்பதிலாக எங்க ளுக்குச் சந்தோஷமே ! தங்களை அழைத்துப்போவ தெங்களுக்குச் சுயப் பிரயோசனமேயன்றி உங்களுக்கோர் நன்மையை நாங்கள் செய்கிறதா கக் காணப்படவில்லை.

சபாபதி முதலியார்.—உங்களுக்கென்ன சுயப்பிரயோசனமாகும் ?

இரண்டாவது வழிப்போக்கன்.—எங்களுக்குத் தாங்கள் துணையாக வருவ தே ! தங்களை அழைத்துப்போவதில் எங்களுக்குப் பாரமில்லை. சந்நி யாசியைப் பார்க்கத் தங்களுக்கெண்ணமிருப்பதைக் கெடுப்பா ரொரு வரும் இல்லை. தாங்கள் சந்தோஷமாக வரலாம்.

சபாபதி முதலியார்.—நாம் மூவரும் வண்டியிலேறிப்போனால் விரைவில் போகலாம். (என்று தமக்குப் பின்னால் வந்த வண்டியை நிறுத்த சொன் னார்.)

இரண்டாவது வழிப்போக்கன்.—ஐயா! நாம் இன்னும் கூப்பிடு தூரம் போன வுடன் சாலையைவிட்டுக் காலடிப்பாதையில் போகவேண்டியதால் வண்டி நமக்குப் பிரயோசனத்தைத் தராது.

சபாபதி முதலியார்.—அவ்விதமாயின் வண்டியைப்பாதையில் விட்டு நாம் மீண்டுவருமளவும் காத்திருக்கும்படி செய்யவேண்டும்.

இரண்டாவது வழிப்போக்கன்.—இஷ்டம்போல் செய்யலாம். அல்லது வண்டியிலுள்ள பணத்தைக் கைக்கொண்டு வண்டியை மெதுவாகப் போகவிட்டு நாம் சென்றாலும் சந்நியாசியைக்கண்டபின் குறுக்குப் பாதையாகச் சென்று வண்டியைப் பிடித்துக்கொள்ளலாம்.

முதல் வழிப்போக்கன்.—குறுக்குப்பாதையும் இருக்கிறதா ?

இரண்டாவது வழிப்போக்கன்.—ஆம் உண்டு ! நாம் இந்த இடத்திற்குத் திரும்பிவர வேண்டிய அவசியமில்லை பெரியவர் இருக்கும் இடத்தி லிருந்து மேற்காகக் கால்மைல் தூரம் சென்றால் சாலையில் போய்ச்சேர லாம். (வண்டி மெதுவாகப் போவதே உத்தமமென்று வண்டியைப் போகவிட்டுச் சபாபதி முதலியார் இவரோடு சென்றார்.)

முதல் வழிப்போக்கன்.—ஐயா ! வண்டியில் பணம் இருக்கக்கூடும் ; ஆத லால் வண்டிக்காரனை எச்சரிக்கையாகப் போகச் சொல்லுங்கள். திருடர் கள் இப்பக்கத்தில் அதிகமாயிருப்பதாகக் கேள்வி.

இரண்டாவது வழிப்போக்கன்.—பணத்தை வண்டியில் யார் வைக்கப்போகி றார்கள் ! ஏதாகிலுமிருந்தால் மடியில் வைத்திருக்க வேண்டியதல்லவா கடமை !

சபாபதி முதலியார் சிரித்துக்கொண்டு வண்டியில் ஒன்றுமில்லையென்று இருவரோடு குறுக்குவழியாகக் காட்டுக்குள் சென்று சந்நியாசியின் வல்லமையை இருவரும் பேசிக்கொண்டு போகத் தமக்கு ஏதோ நல்ல காலத்தால் பெரியவர் தரிசனை கிடைக்கப் போகிறதென்று நெடுந் தூரம் போயும் சந்நியாசியின் இருப்பிடத்தைக் காணுமல், இன்னும் அதிகதூரம் போகவேண்டுமோவென்று தமக்குத்துணையாக இருக்கும் இருவரையும் கேட்டதற்கு, இரண்டாவது வழிப்போக்கன் சமீபித்து விட்டோம், இந்த முடக்குத்திரும்பினால் அவர் இருக்குமிடம் நமக் கெதிரில் காணப்படுமென்று இருவர் முன் நடக்க, சபாபதி முதலி யார் பின் செல்லும்பொழுது, பறைந்திருந்த சிலர் ஒடிவந்து சபா பதிமுதலியாரை நிமிரவிடாமற்பிடித்துக் கைகளைக்கட்டியதால், அவ ருக்குத் துணையாயிருந்தவர்களைக்கூவி உதவிசெய்யவேண்டுமென்று வேண்டினர். அவர்கள் ஒடிவந்து கைகளைக் கட்டுவோருக்கு உதவி செய்து, ஐயா ! பெரியவரைப் பார்க்கப் போகிறவர்கள் கைகளைக் கட்டிக்கொண்டே போகவேண்டுமென்று நகைத்துக் காட்டுக்குள் ளிருந்த பெரியகோயிலுக்குள் அழைத்துப் போனர்கள். சபா பதிமுதலியார்-நம்மை மோசஞ்செய்து கொண்டுவந்து விட்டார்கள், இதற்கென்ன செய்யப்போகிறோமென்ற கவலையோடு பின்செல்ல, அவரை ஒரு விசாலமாகிய மண்டபத்தில் வேடிக்கையாக வார்த்தை யாடிக் கொண்டிருந்த சிலர் முன் கொண்டுபோய் நிறுத்தினர்கள். அவ்விடம் இருந்தவர்களில் ஒருவன் சபாபதி முதலியாரைக் கீழும் மேலும் பார்த்து, நீர் யார்? உம்முடைய பெயரென்னவென்று கேட் டான். சபாபதிமுதலியார் கோபத்தோடு, கேட்டவனைப் பார்த்து, என்னைக் கட்டிக்கொண்டு வரச்சொன்னவன் யார்? எதற்காக என்னை இங்கு கொண்டுவந்தீர்கள் ? விளைவிலென்னை விட்டுவிடாமற்போனால் இவ்விடத்திலிருப்பவர்கள் யாவருக்கும் கெடுதி நேரிடும், என்னைக் கட்டிக்கொண்டு வரச்சொன்னதோடு நான் யாரென்றும் என்பெயர் யாதென்றும் கேட்கச்சொல்ல உங்களுக்கு அதிகாரம் கொடுத்தவன் யார் ? என்று விளவினர்.

தலைவன்.—சிங்கத்தை நரி மிரட்டிய தென்கிறார்களே ! அவ்விதமாக நீர் இவ் விடம் வந்தவுடன் எங்களைப் பயமுறுத்தத் துணிந்தீர். பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சாதென்பது உமக்கு ஞாபகத்திலிருக்கவேண்டும். நீர் கோபமாகப் பேசுவதில் பிரயோசனமில்லை. உம்மைக் கட்டிக்கொண்டு வரச் சொன்னவன் நானே. உம்மை வினவும்படி எனக்கதிகாரம் கொடு துக் கொண்டதும் நானே. நீர் என் அதிகாரத்துக்கடங்கியிருப்பதால் உமக்கு உண்டாகும் கோபத்தை ஒரு பக்கம் வைத்து, நான் கேட்பவை களுக்குத் தக்கபடி பதில் சொல்லவேண்டும். பதில் சொல்லாமலெனக்

குக் கோபத்தை உண்டாக்கினால் நீர் துன்பமடையும்படி செய்து உம்மைக் கொன்றுவிட உத்தரவளிப்பேன். ஆனதால், நன்ரு யோசித்துப் பதில் சொல்லும். நீர் யார்? உமது பெயரென்ன?

சபாபதி முதலியார்.—நான் பாதையிற்போக, எனக்கிவ்விடத்தில் ஒரு சந்நியாசி வந்திருக்கிறரென்றும், அவர் அநேக அற்புதங்களைச் செய்கிறரென்றும் எனக்காசையை உண்டாக்கி இவ்விடம் கொண்டுவரச் செய்து, எனக்கு நானே எல்லா அதிகாரங்களையுங் கொடுத்து அவைகளை நானே ஏற்றுக் கொண்டேனென்ற இறுமாப்போடு பேசும் உன்னை இலக்ஷியம் செய்து, நீ கேட்பவைகளுக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனதால் உன்னுடைய துஷ்டகாரியத்தைச் செய்யலாம். நானென் உயிருக்குப் பயந்து உன்னைக் கெஞ்சுவேனென்று நினைக்கவேண்டாம்.

தலைவன்.—(தன்னருகி லிருந்தவர்களைப் பார்த்து) இவன் மெத்த அகங்காரியாக இருக்கிறான். இவனைப் பரிசோதித்து இவனிடத்தி லிருப்பதை எடுத்துக்கொண்டு இவனுக்குப் புத்தி வருமளவும் ஓர் அறையில் விலங்கிட்டு மூடி விடுங்கள்.

தலைவனுடைய உத்தரவு பிரகாரம் சபாபதிமுதலியாரைப் பரிசோதித்து, அரைப்பை யொன்றில் பொன் நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் அதிகமாயிருப்பதைக்கண்டு, நம்முடைய கஷ்டத்துக்கேற்ற கூலியே கிடைத்ததென்று மகிழ்வோடு தலைவனிடங் கொடுத்துச் சபாபதி முதலியாரை அழைத்துக் கொண்டுபோய் ஓர் அறையில் விட்டு அவ்வறையின் சுவரில் பதித்திருந்த வளையத்தோடிருக்கும் சங்கலியைக் காலில் மாட்டிக்கதவைமூடிப் பூட்டிக் கொண்டுபோய்த் தலைவனிடம் தெரிவித்தார்கள்.

தலைவன்.—நம்மிடத்திலகப்பட்டவன் பெரிய தனவந்தனென்பதற்குச் சந்தேகமில்லை; அவனைப் பயப்படுத்திச் சிலநாள் வைத்திருந்தால் பெரிய தொகை கிடைக்கும். நம்மைக் கண்டபொழுது கோபமாய்ப் பேசினனென்று அவனைக் கொன்றுவிட்டால் பலனொன்றுமில்லை. அவனை எந்த இடத்தில் வைத்திருக்கிறீர்கள்?

முதல்மனிதன்.—ஐயா! அவனை மூன்றுவதறையில் அடைத்திருக்கிறோம். முதலிலும் இரண்டிலும் இருப்பவர்கள் யாரென்று தங்களுக்குத் தெரிந்ததே!

தலைவன்.—மூன்றுவதறையில் இருப்பவனால் நமக்குப் பணம் அதிகம் கிடைக்கும். ஆதலால், அவனுக்கும் சாப்பாடு முதலானவைகளைக் குறைவறக் கொடுத்துக்கொண்டிருங்கள். நம்மிடத்தில் சாதம் வாங்கிச் சாப்பிடப்பிரியமில்லாதிருந்தால் பழவர்க்கங்கள் இளநீர் முதலானவைகளைக் கொடுங்கள்.

என்று உத்தரவளித்துத் தன் ஆடம்பரத்திலிருந்தான். இரவு எட்டுமணிக்கு முதல் அறையின்கதவு திறக்கப்பட்டு அரையிற் கட்டிய பட்டா கத்தி யோடு சென்ற ஒருவன் உள் நுழைந்து அவ்வறையிலிருந்த விளக் கைக் கொளுத்திப் படுத்திருந்த ஒரு பெரியவரை யெழுப்பி, ஐயா ! விரைவில் சாப்பிட்டு என்னை அனுப்பிவிடுங்கள், நான் இன்னும் இரு வருக்குச் சாப்பாடு கொண்டுபோக வேண்டுமென்று சாதம் வட்டித் தான். படுத்திருந்த பெரியவர் எழுந்து, தம்பி வெள்ளையப்பா ! எனக்காக நீ காக்கவேண்டாம். நான் விரைவில் சாப்பிடுகிறே னென்று சாப்பிட்டுக்கொண்டே நீ இன்னும் இருவருக்குச் சாப்பாடு கொண்டுபோக வேண்டுமென்றாயே ! இருவரேது ? ஒருவர் தானே! என்று கேட்டார்.

வெள்ளையப்பன்.—இன்று ஒரு புதிய விருந்தாளி வந்திருக்கிறார். (என்று நகைத்தான்.)

பெரியவர்.—என்னைப்போல் அவர்கள் நெடுநாள் இங்கிருந்தால் உனக்கதிக தொந்தரவே ! என்னுடைய ஆயுளும் முடிவாகாமல் இருக்கிறது. (என்று பெருமூச்சுவிட்டுச் சாப்பிட்டுக் கைகழுவி வெள்ளையப்பனைப் போகும் படி உத்தரவளித்தார்.)

வெள்ளையப்பன் இரண்டாவது அறையின் கதவைத்திறந்து விளக்கேற்றி அதில் இருப்பவனைப் பார்த்து, ஐயா ! ஏதாகிலும் சாப்பிடுகிறீரா ? வேண்டாமா? என்று கேட்டான். அவ்வறையிலிருந்த வாலிபன் எனக்குச் சாப்பாடுவேண்டாம். நீ கொண்டுவந்திருக்கும் பழங்களில் சிலவற்றையும் இளநீரும் கொடு என்றான்.

வெள்ளையப்பன்.—பழவர்க்கங்களில் சிலவற்றை எடுத்துக்கொள்ளும். இள நீர் உமக்காகக்கொண்டுவராமல் இன்று வந்திருப்பவருக்குக் கொண்டு வந்திருக்கிறேன். நாளை உமக்கு வேண்டியதைக் கொண்டுவருகிறேன்.

வாலிபன்.—எனக்காகக் கொண்டுவந்தாயென்றே நினைத்துக் கேட்டேன். (என்று சில பழங்களைச் சாப்பிட்டு ஜலங்குடித்துப் போகும்படி உத்தர வளித்தான்.)

வெள்ளையப்பன் நீங்கியபின் அவ்வறையிலிருந்த வாலிபன் இந்தப்பாவிகள் அநேகரைக் கொண்டுவந்து சிறைப்படுத்திப் பணம் சம்பாதிக்கிறார் களே ! இவர்களுடைய துற்செய்கையை நீக்க வழியொன்றும் அகப் படவில்லையே என்ற துக்கத்தோடிருந்தான்.

வெள்ளையப்பன் மூன்றாவது அறையின் கதவைத்திறந்து, ஐயா ! தங்களுக் குச் சாப்பிடப் பிரியமிருந்தால் சாப்பிடலாம். அல்லது பழவர்க்கம்

வேண்டுமென்றாலும் கொண்டுவந்திருக்கிறேன். தங்களுக்கு பிரியம் எதுவென்று கேட்டான்.

சபாபதி முதலியார் — அடா பாவிகளா! குற்றஞ் செய்தவனைப்போல் என் காலில் விலங்குபோட்டு வைத்திருப்பதென்ன நியாயம்? இவ்விதமான கொடுந்தொழிலைச் செய்து கொண்டிருக்கிறவர்கள் எத்தனை நாளைக்குத் தப்பித்துக்கொண்டிருப்பார்கள்?

வெள்ளையப்பன்.—ஐயா! நீரென்னிடத்தில் இவைகளைச்சொல்வதைவிட்டு எங்கள் எஜமானிடத்தில் சொல்லுவீராகில் அதற்குச் சரியான பதில் கிடைக்கும். எங்களுக்குக் கோபம் உண்டாகும்படி செய்வது உமக்குக் கெடுதியாக முடியுமேயன்றி நன்மையைத்தராது. நீர் இவ்விடத்தை விட்டு விரைவில் நீங்கவேண்டுமானால் எங்கள் எஜமான் கேட்பதைக் கொடுத்தால் உம்மைவிட்டுவிடுவார். அது விஷயத்தைக்குறித்து யோசியாமல், எங்கள் செய்கைகளைக் கண்டிக்கவேண்டிய அவசியம் உமக்கு என்? அது விஷயத்தை நிறுத்தி உமக்கேதாகிலும் வேண்டுமா? வேண்டாமா? அதைச்சொல்லும்.

அவன் சொல்லியவைகள் முற்றிலும் நியாயமாகவே இருப்பதைச் சபாபதி முதலியார் நினைத்து இத்துன்மார்க்கர் கையில் நாம் அகப்பட்டுக் கொண்டோம், இவர்களிடத்திலிருந்து தப்பும் வழியைவிட்டு இவர்களுக்குக்கோபம் உண்டாகும்படி பேசினால் இவன் சொல்வதுபோல் நமக்குக்கெடுதி உண்டாகுமேயல்லது நன்மை உண்டாகாதென்று தனக்குள் யோசித்து, வெள்ளையப்பன் கொண்டுவந்த இளநீரைக்குடித்து, அப்பா! நீ என் விஷயத்தில் எதாகிலும் செய்யமுடியுமா வென்று வெள்ளையப்பனைக் கேட்டார்.

வெள்ளையப்பன்.—ஐயா! உமக்கென்ன செய்யவேண்டும்?

சபாபதி முதலியார்.—நான் இவ்விடத்திலிருந்து நீங்கும்படி உதவி செய்தால் உனக்கு வேண்டியதைக் கொடுக்கத் தடையில்லை.

வெள்ளையப்பன்.—ஐயா! உமக்கு உதவிசெய்து வெளியாக்கிவிட்டால் என்ன கொடுப்பீர்?

சபாபதி முதலியார்.—உனக்கென்ன வேண்டும்?

வெள்ளையப்பன்.—ஆயிரம் ரூபாய் கிடைக்கிறதாக இருந்தால் அது விஷயத்தைக்குறித்து யோசிக்கலாம்.

சபாபதி முதலியார்.—ஆயிரம் ரூபாய் பெரிய தொகையா யிருந்தாலும் கொடுக்கத்தடையில்லை. இந்தப்பாவிகள் தண்டனையடைய ஒரு வழியை உண்டாக்கினால் உனக்காயிரமல்ல ஐயாயிரம் கேட்டாலும் கொடுத்து உன்னைத் தனவந்தனாக்கிவிடுவேன்.

வெள்ளையப்பன் தன் பெரிய உடல் குலுங்க நகைத்து, ஐயா ! எனக்கு இலஞ்சம் கொடுத்து என்னை வசியப்படுத்த எண்ணங்கொண்டது மூடியாத காரியமென்று கதவை மூடிக்கொண்டு போனான்.

இரண்டாவது அறையிலிருந்த வாலிபன் புதிதாகச்சிறைப்பட்டவர் வெள்ளையப்பனோடு பேசிக்கொண்டிருந்ததைக்கேட்டுப், பழக்கப்பட்ட குரலாக இருக்கிறது, இவர் யாரென்று யோசித்துச்கொண்டு இன்னரென்று கண்டுகொள்ளாமலிருந்தான்.

மறுநாள் காலையில் சபாபதிமுதலியார் அறைக்குள் தலைவன் வெள்ளையப்பனுடன் சென்று, ஐயா ! உம்மை வெளியாக்கினால் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகவும், எங்களைத் தண்டிக்க வழிகாட்டினால் ஐயாயிரம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும் கேள்விப்பட்டேன். எங்களைத் தண்டிக்க வழி தேடுகிறதைப் பின்பார்த்துக் கொள்ளலாம். நீர் இவ்விடத்திலிருந்து விடுதலையாக ரூபாய் ஐயாயிரம் வேண்டும். அந்தத் தொகையைக் கொடுத்தால் உம்மை விட்டுவிடத் தடையில்லை. நீர் என்னிடத்திலிருப்பவருக்கு நயவஞ்சகஞ்சொல்லி அவர்களை ஏமாற்றி விடலாமென்று எண்ணியது மூடியாத காரியமென்றான்.

சபாபதி முதலியார்.—நான் இவ்விடத்திலிருந்து உனக்கு ஐயாயிரம் ரூபாய் எவ்விதம் கொடுச்சமுடியும் ? என்னுடைய அளைப்பையில் ஏறக்குறைய ஐந்நூறு ரூபாயிருந்தது. அதை எடுத்துக்கொண்டது போதாதா ? இல்லாதவனிடத்தில் ஐயாயிரம் கேட்பது அடுக்காது.

தலைவன்.—உம்மைப்போல் தனவந்தன் என் கையிலகப்பட்டால் நான் ஐந்நூறுமட்டும் பெற்று விட்டுவிடுவது நான் கைக்கொண்டிருக்கும் தொழிலுக்கு விரோதமாகும். நீர் காலதாமதம் செய்யாமல் என்னுடைய மனிதனிடம் ஐயாயிரம் ரூபாய் கொடுக்கும்படி ஓர் கடிதம் என் முன்னிலையிலெழுதி யனுப்பினால் பணம் வந்தவுடன் உம்மை விட்டுவிடத் தடையில்லை. நீர் எழுதுங் கடிதத்தில் நீர் இருக்குமிடத்தைக் குறிக்காமலும் பணம் வேண்டியதற்குக் காரணம் காட்டாமலும் எழுதவேண்டும். பணம் வாங்கப்போகிறவர்களுக்கு ஏதாகிலும் ஆபத்து நேரிட்டால் நீர் இவ்விடத்தில் உயிரிழக்கவேண்டிவரும். அவ்விதம் ஒன்றும் நேரிடாமலிருக்க நீர் எழுதுங் கடிதத்தை நான் வாசித்துப்பார்த்து அனுப்புவேன். இவ்விதம்செய்ய உமக்கிஷ்டமா ?

சபாபதி முதலியார்.—நான் கடிதம் எழுதிப் பணம் வரவழைத்துக் கொடுத்தபின் என்னை விடாமலிருந்தால் யார் என்ன செய்யக்கூடும் ?

தலைவன்.—சோலையப்பன் சொன்ன சொல் தவறானென்று நமபலாம்.

சபாபதி முதலியார்.—உன்னுடைய வார்த்தையில் நம்பிக்கை உண்டாக எனக்கு உபதேசிட்டதை விட்டு, என் வார்த்தையை நம்பி என்னோடு ஒரு

வனை அனுப்பினால் நீ கேட்ட ஐயாயிரத்தைக் கொடுத்தனுப்புகிறேன். நான் காரணம் ஒன்றும் காட்டாமல் பெருந்தொகையைக் கொடுக்கும் படி எழுதினால் பணம் கொடுக்கச் சந்தேகப்படுவார்கள்.

கோலையப்பன் —முதலை நீரிலிருக்கும்பொழுது அதற்கு ஒரு யானையின் பலம் இருக்கிறது. அதைக் கரையில் கொண்டுவந்து விட்டால் பூனைக்கு இருக்கிறபலமுமில்லாமற் போகிறது. அதுபோல் உமக்கு இடபேதத் தால் வலிகுன்றியிருக்கிறது. நீர் என் கைப்பிடியிலிருந்து நீங்கினால் உம் மைக் கட்டாயப்படுத்திப் பணம் வாங்கமுடியாது. ஆனதால், உம்மை வெளியில் விட்டு ஏமாந்துபோவேன் என்ற உறுதிப்பாடு உமக்கிருக்கு மாகில் அந்த எண்ணத்தை விட்டுவிடும். நீர் நன்றாய் யோசித்துப்பார்க்க எட்டுநாள் தவணைகொடுக்கிறேன். நீர் அதற்குள் யாவையும் நன்றாய் யோசித்து வெள்ளையப்பனிடம் சொல்லியனுப்பலாம். (என்று நீங் கினான்.)

வெள்ளையப்பன் சிலரோடு சபாபதிமுதலியாருடைய கைகளைக்கட்டி வெ ளியில் அழைத்துப்போய்க் காலைக்கடனை முடித்துக்கொள்ளச்செய்து அறையில் விட்டுப் பழவர்க்கங்கள் கொடுத்துச் சென்றான்.

சிலநாள்களுக்குப்பின் நடு அறையிலிருந்த வாலிபனிடம் வெள்ளையப்பன் வந்து, ஐயா ! நீர் இன்னும் எத்தனை காலைக்குப் பழங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கப்போகிறீர் ! எஜமான் கேட்ட ஆயிரம் ரூபாயை வர வழைத்துக்கொடுத்துப் போகாமல் பஞ்சவேடங் கொண்டிருக்கிறீர். உம்மைப்பார்ப்போர் யாவரும் நீர் பெரிய தனவந்தன் மகனென்று சொல்லுவார்களேயென்று நகைத்தான்.

வாலிபன்.—நீ னைக்கிறவிதம் நான் ஒருதனவந்தன் மகனாயிருந்தால் ஆயி ரம் ரூபாய் வரவழைத்துக் கொடுக்கலாம். நான் ஏழையாயிருப்பதால் ஆயிரம் ரூபாய் வரவழைத்துக் கொடுக்கச் சக்தியில்லாமல் இவ்விடத்தில் ஒரு மாதத்துக் கதிகமாயிருக்கிறேன். இதனால் நான் ஓர் ஏழையென்று நீங்கள் கண்டுகொள்ளாமலிருப்பதற்கு நான் என்ன செய்வேன் !

வாலிபன் சொல்லியவைகளைக் கேட்ட வெள்ளையப்பன் பதில் ஒன்றும் சொல்லாமல் நீங்கினான்.

சபாபதி முதலியார் சிறையிலடைப்பட்ட ஒரு வாரத்துக்குப் பின் வெள் ளையப்பன் இரவில் பத்துமணிக்குமேல் வாலிபனிருக்கும் அறைக் குள் சென்று வழக்கப் பிரகாரம் விளக்கேற்றி வைத்து, ஐயா ! எது வாகிலும் வேண்டுமா ? வேண்டாமா ? என்று கேட்டான்.

வாலிபன்.—ஏதப்பா இன்று அதிக நேரம் பொறுத்து வந்தாய் ? எனக்குத் தாகம் அதிகமாக இருக்கிறது, ஜலங்கொடு.

வெள்ளையப்பன்.—இன்று மதுரைவீரன் பூசை போட்டோம். ஆனதால் நேரமாய் விட்டது. (என்று ஜலம் கொடுத்தான்.)

வெள்ளையப்பன்மேல் சாராயநாற்றம் வருவதைக்கண்ட வாலிபன் செம்பை வாங்கி ஜலம் குடித்துச் செம்பைக் கொடுத்துவிடாமல் தன்னருகில் வைத்துக்கொண்டதை வெள்ளையப்பன் கண்டு செம்பையெடுக்க நெருங்கியபொழுது, வெள்ளையப்பனுடைய பெரிய உருவத்தைக் கண்டு அஞ்சாமலும் இச்சமயத்தைக் கைவிடக்கூடாதென்றும் அவன் காலைத் தன் ஒரு காலால் மடக்கி மார்பில் கையை வைத்துத் தள்ளினான். மதயானை போன்ற வெள்ளையப்பன் சாராயம் குடித்திருந்த மயக்கத்தாலும் அசதியில் தள்ளுண்டதாலும் அடியற்ற பனைபோல் திடீரென்ற சத்தம் உண்டாக விழவே, அது கல்பாவிய இடமானதால் தலை கல்லில் தாக்குண்டு மூர்ச்சையாய்விட்டான். வாலிபன் இனி காலம்போக்கக்கூடாதென்று வெள்ளையப்பனிடம் இருந்த வாளையும் சாவிக்கொத்தையும் எடுத்துக்கொண்டு தன் காலிலிருந்த விலங்கின் பூட்டை வாளால் தட்டி உடைத்தெறிந்து, தான் இருந்த அறையைப் பூட்டி, நம்மைப்போல் இருவர் இங்கிருப்பதால் அவர்களையும் அழைத்துக்கொண்டு போய்விடவேண்டுமென்று முதலறையைத் திறந்து, ஐயா! தூங்குகிறீர்களோ, என்றான்.

பெரியவர்.—நான் தூங்கவில்லை. நீ யார்? அடுத்த அறையில் திடீரென்ற சத்தம் கேட்டதே! அது என்ன?

வாலிபன்.—நான் அடுத்த அறையிலிருந்தவன். வெள்ளையப்பனைக் கீழே தள்ளி அவனை மூர்ச்சையாக்கித் தங்களை விடுவித்து அழைத்துப்போக வந்தேன். நாம் இன்னும் தாமதம் செய்துகொண்டிராமல் போய்விட வேண்டும். தங்களுடைய காலிலிருக்கும் பூட்டைக்காட்டுங்கள். (என்று அவ்வறையிலிருந்த விளக்கொளியால் பூட்டை உடைத்தெறிந்தான்.)

பெரியவர்.—அப்பா! நீ என்னை அறியாதவனாக இருந்தும் எனக்காகப் பரிதாபப்பட்டு விடுவிக்க வந்தாய்; ஐயோ! உன்னுடைய எண்ணம் பூர்த்தியாவதில் அதிக சந்தோஷமடைவேன். திருடர் கூட்டம் அதிகமானதால் நாம் அவர்களைத் தப்பித்துக்கொண்டுபோவது கடினமாயினும், நீ மட்டாவது தப்பித்துக்கொண்டு போவதில் போதுமானது. (என்று வாலிபனோடு வெளியில் வந்தார்.)

வாலிபன் மூன்றாவதறையின் சதவைத்திறந்து, ஐயா! என்று கூப்பிட்டான்.

சபாபதி முதலியார்.—யாரடா விளக்கில்லாமல் வந்தவன்? அதென்ன அடுத்த அறையில் பெரிய சத்தம்கேட்டது?

வாலிபன்.—ஐயா! நமக்கு உணவுகொண்டுவருபவனே விழுந்தான். தங்களே விடுவித்து அழைத்துப்போக வந்தேன். தங்கள் கால்விலங்கின் பூட்டெங்கே? (என்று தடவிப்பார்த்து உடைக்கும்பொழுது தன்கைவிரலில் அடிவிழுந்ததையும் கவனிக்காமல் உடைத்தெரிந்தான்.)

சபாபதி முதலியார்.—நம்மைச் சிறைப்படுத்திவைத்திருக்கும் துன்மார்க்கர் நம்மைக்கொல்ல யோசித்திருப்பதால் நாம் அவர்கள் ஆக்ஞையாலிறக்காமல், அவர்கள் அதிகமாக இருந்தாலும் அவர்களோடு போர்புரிந்து சிலரைக்கொன்றபின்னுவது இறப்பது விசேடமே! (என்று வெளியில் வந்து தம்மை விடுவித்தவன் குரல் வழக்கப்பட்டதாகக் கண்டும் இருட்டால் அவன் இன்னுனென்று அறிந்து கொள்ளாமல் பின் சென்றார்.)

என் கையில் வாளிருப்பதால் என்னை முன் விட்டு நீங்கள் இருவரும் எனக்குப் பின் வரவேண்டும்! நாம் போவதைக்கண்டு யாராகிலும் எதிர்ப்பட்டுத் தடை செய்தால் நான் பார்த்துக் கொள்கிறேனென்று இருவரையும் பின் வரும்படி செய்து வாலிபன் முன்சென்று கோபுரவாயிற்படியருகில் வந்தான். அவ்விடத்தில் விளக்கு மங்கியெரிய ஒருவன் உட்கார்ந்து உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு வாலிபன் சந்தடி செய்யாமல் இருவரையும் முன்போகவிட்டு அவர்களுக்குப்பின் செல்லும் பொழுது, உறங்கியவன் போகிறவர்கள் சந்தடியால் விழித்துப் பார்த்து, ஓ! ஓ! மோசஞ்செய்து ஓடுகிறார்களென்று உள்ளிருக்கிறவர்களறியச் சத்தம் போட்டுத் தன்னிடத்திலிருந்த வாளை எடுத்துக் கொண்டு ஓடி வழிவிடாமல் தடையாக நின்றான். அதைக்கண்டவாலிபன் இவன் இருந்தால் நம்முடைய எண்ணம் முடிவுபெறுதென்று அவனை எதிர்த்து ஒரு வெட்டால் அவன் பிடித்திருந்த வாளோடு கை விழும்படி வெட்டினான். சபாபதி முதலியார் அந்த வாளை எடுத்துக்கொண்டு இனி இங்கிருப்பது நமக்குக் கெடுதியாகுமென்று மூவரும் துரிதமாகச் சென்றார்கள்.

வாலிபன் இருள் நமக்கு வழி காட்டாமலிருப்பதால் பெரியவர் நம்மோடு நடந்து வரமாட்டார். நாம் மெதுவாகவே போகலாம். நம்மைச் சிறைப்படுத்தி வைத்திருந்த துஷ்டர்களை வதைக்காமற்போவது பிரியமில்லையென்று நெடுந்தூரம் போகுமுன்னம் அனேகர் வெளிச்சத்தோடு வருவதைப்பார்த்து, என்னுடைய எண்ணங் கைகூடியதென்று சிரித்தான்.

கோபுரவாயிற்படியில் காத்திருந்தவன் போட்டசத்தத்தாலும் வெள்ளையப்பன் மூர்ச்சை தெளிந்தெழுந்து போட்ட சத்தத்தாலும் திருடர்கள் யாவரும் தங்கள் தங்கள் வாள் கைக்கொண்டு தலைவனோடு சேர்ந்து தீவட்டிகளுடன் வருவதைக்கண்ட வாலிபன் தன்னோடிருப்பவர்

சபாபதி முதலியாரென்று வெளிச்சத்தாலறிந்து, அண்ணு ! நீங்கள் பெரியவருக்குத் துணையாக இருங்களென்று கூறி அவர் பதில் சொல் லுமுன் திருடர்களே இருவர்களருகில் வரவிடாமல் பாதி வழியில் வாலிபன் ஓடி எதிர்த்தான்.

தலைவன் அடா துன்மார்க்கா ! உன்னால் இருவர் வெளிப்படவும் என் மனி தன் ஒருவன் கையற்றுவிழவும் நேரிட்டதல்லவா ! உன்னுடைய ஆ யுள் இன்றோடு முடிவுபெற்றதென்று தன் வீரர்களைப்பார்த்து, இத்தத் துஷ்டனைத் துண்டு துண்டாய் வெட்டி எறியுங்களென்று உத்தரவு செய்தான்.

திருடர்கள் யாவரும் வாலிபனைச்சுற்றி வளைத்துக்கொண்டு வாலிபனை நெ ருங்கி வெட்டச் சமயம்பார்த்திருந்தார்கள். வாலிபன் கிஞ்சித்தும் அதைரியப்படாமல் தன்னருகில் ஒருவனையும் நெருங்கவொட்டாம லிருந்தான். திருடரில் ஒருவன் துணிந்து நெருங்கி வாலிபனை வெட் டவர, வாலிபன் அவ்வெட்டைத்தட்டி அவன் தலை நிலத்தில் விழ வெட்டி எறிந்தான். மற்ற இருவருக்கு அதிக கோபம் உண்டாகி நெருங்கி நெடுநேரம் உயிரோடிருக்காமல் வாலிபன் வாளால் வெட் டுண்டிறந்தார்கள். வாலிபன் தன்னைத் துண்டு துண்டாய் வெட்டி எறியவேண்டுமென்று எதிர்த்த மற்ற மூவருடைய தலைகளும் பூமி யில் உருளச்செய்தான். அத்தருணத்தில் அதிக கோபத்தோடு வெள் ளையப்பன் ஓடிவந்து யாவனையும் விலகும்படி செய்து, அடா துன் மார்க்கா ! என்னை அசதியில் பிடித்துத் தள்ளி மூர்ச்சையாகும்படி செய்த உன்னை என் வாளால் வெட்டி எறிகிறேன் பாரென்று ஒரு மதயானைபோல் எதிர்த்தான். திருடர்கள் கொண்டுவந்த தீவட்டிகள் சில தவறி கீழே விழுந்து புல்பூண்டுகளைக் கொளுத்திப் பெரிய வெளிச்சத்தை உண்டுபடுத்தி விட்டதால், சபாபதி முதலியாரும் பெரி யவரும் வாலிபனுக்காகத் துக்கப்பட்டுக்கொண்டிருந்து, பெரியவர் சபாபதி முதலியாரைப்பார்த்து, ஐயா ! நீர் என்னோடு இருப்பதை விட்டு வாலிபனுக்குத் துணையாகப்போனல் உத்தமமாக இருக்குமே யென்றார். ஐயா ! நான் உம்மைவிட்டுப்போனல் ஒருவரிருவர் இப் பக்கம் திரும்பினால் என்ன செய்கிறதென்று சபாபதிமுதலியார் ஒன் றும் செய்யாமலிருக்கிறதே நல்லதென்று பரிதாபப்பட்டுக் கொண் டிருந்தார்.

வாலிபன் தன்னோடு எதிர்த்த வெள்ளையப்பனோடு நெடுநேரம் போர்புரியா மலும் முன்போல் அவனை மூர்ச்சையாய் நிலத்தில் விழச்செய்யாம லும் தலையொரு பக்கமும் முண்டம் ஒரு பக்கமுமாக விழும்படி செய்ததேயன்றித் திருடர்களைப்போல் தன் வல்லமையைப் புகழ்ந்து

பேசிக்கொண்டிராமல் தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் எமலோகங் குடிபுகுத்திக்கொண்டிருந்தான்.

தலைவன்.—அடா பாதகா! நீ அனேகரைக் கொன்றுவிட்டாய்! நான் அனேக இடத்தில் போர்செய்திருக்கிறேன். உன்னைப்போல் போர் செய்த வர்களை நான் கண்டதுமில்லை; உன்னைப்போல் வல்லமையைக் கொண்டவனொருவன் உலகிலிருப்பனென்ற நினைவுகொண்டது மில்லை. உன்னுடைய சாமர்த்தியத்தைக்கண்டு மெச்சி உனக்கு வெகு மதி அளிக்கவேண்டியது கிரமமாயினும் அதற்குப் பதிலாக உன்னை வெட்டி எறிகிறேன் பார். (என்று தன் வல்லமையையெல்லாம் சேர்த்து வாலிபன் தலையில் ஒங்கி வெட்டினான்.)

அப்பொழுது வாலிபன் தன்மேல்விழுந்த வெட்டைச் சிரமமில்லாமல் வளால் தாங்கினான். அவ்வெட்டால் வாலிபன் வாள் இரண்டு துண் டாய்ப்போகவே அதை அறிந்து இலகுவாய் வேறிடத்திற் பாய்ந்து அவ்விடத்தில் இறந்து விழுந்துகிடக்கிறவனருகிற்கிடந்த வாளொ ன்றை எடுக்குமுன், தன்கையில் ஆயுதமில்லாததைக் கண்டு ஓடிவந்த சிலரை நிலத்தில் சாய்த்துத் தலைவனிருக்குமிடம் ஒடி அவன் சிரம் அற்றுவிழ வெட்டி யெறிந்து, திரும்பிச் சபாபதிமுதலியாரோடு சிலர் போர்புரிந்து அவனைவெற்றி கொள்ளும் சமயமாக இருப்பதைப் பார்த்து அவ்விடத்திற்கோடிச் சபாபதிமுதலியாரோடெதிர்த்தவர்கள் நிலத்தில் விழும்படி செய்தான். தப்பிய இருவர் இந்த இராக்ஷத னோடு போர்புரிய யாரால்முடியும்! என்று ஓடினார்கள். சபாபதி முதலியார் வாலிபனைக் கட்டித் தழுவிக்கொண்டு, தம்பி விஜயரங்கம்! உன் வல்லமையை மெச்சத்தகுந்தவர்கள் இங்கு யாரிருக்கிறார்கள்! நீ ஒருவனாய் நின்று வந்தவர்களை யெல்லாம் வென்று ஜெயங்கொண் டாயே! ஐயோ! நான் அவர்களைக் கண்டவுடன், வருகிறவர்கள் ஏறக் குறைய மூப்பது பேரிருக்கிறார்களே! இவர்களை இருவர் எதிர்த்து வெல்ல முடியுமா? நாம் இறப்பது நிச்சயமென்று எண்ணியிருந் தேன். அவர்கள் இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டதோடு, என் உயிரை வாங்க வந்தவனையும் நிலத்திற் சாயவிட்டு என் உயி ரைக் காப்பாற்றினையே யென்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். அருகிலிருந்த பெரியவர் விஜயரங்கத்தைப் பிடித்து, அப்பா! நான் நெடுநாள் சிறையிலிருந்தும் இனி இறப்பதே உத்தமமென்றிருந்த வனுக்கு உயிர்ப்பிட்சை கொடுக்க உன் உயிரைத் திரணமாக மதித்து வருகிறவர்களுக்கு மூதற்பலியாக ஒடி எதிர்த்து ஜெயங்கொண்ட வீரா! உன் வல்லமைக்கும் நீ செய்த உபகாரத்துக்கும் பதில் என்ன செய்யப்போகிறேன்! உன்னை மகனாகக்கொள்ள நியாயமில்லாமற்

போனலும் எனக்கோர் மகளிருந்தால் மருமகளுகவாவது கொள்ளு வேனே ! என்று கன்னத்தில் முத்தமிட்டார். நான் செய்த அற்பமான தொழிலை இவ்வளவு சிலாக்கியமாகப் பேசுவது நியாய மல்ல. நாம் இன்னும் இவ்விடம் கின்றிருந்தால், ஓடிப்போனவர்கள் அசகாயப்பட்டவர்களுக்கு உதவிசெய்யவரமாட்டார்கள். நாம் இவ் விடம் விட்டுப்போவதே உத்தமமென்று விஜயரங்கம் இருவரையும் அழைத்துப்போகும்பொழுது தன்னெதிரும் பெரியவரைப்பார்த்து, ஐயா ! தாங்கள் அனேகநாளாக இங்கிருந்தீர்களோ ? என்றுகேட் டான்.

பெரியவர்.—ஆம் தம்பி ! நான் இவர்கள் கையிலகப்பட்டு அனேக வருஷங்க ளாய்விட்டன.

சபாபதிமுதலியார்.—தம்பி விஜயரங்கம் ! நீ இவர்கள் கையில் எவ்விதம் அகப்பட்டுக்கொண்டாய் ?

விஜயரங்கம்.—அண்ணு ! நான் வேங்கடாசலமுதலியாரால் வெறுக்கப்பட் டபின் சாப்பாடில்லாமல் நான்குதினம் பட்டினியோடு தங்களைக்கண்ட போது, தாங்கள் எனக்கிரங்கி ஆதரித்துவந்த நன்மையை நினையாமல் வாலிபச் சேட்டையால் தங்கள் விஷயத்தில் அபாராதம் செய்ய, அதை அறிந்த தாங்கள் எனச்கோர் கெடுதியும் செய்யாமல் என்னை வீட்டை விட்டுத் துரத்தியபின், சில நாள் அங்குமிங்கும் திரிந்து இம்மார்க்கம் வரும்பொழுது, இவ்விடத்தில் ஒரு சன்யாசி வந்திருந்து அனேக அற் புதங்களைச்செய்வதோடு தம்மைப்பார்க்க வருபவர்கள் எண்ணிவந்ததை முடித்து அவர்களுடைய இரசியங்களையெல்லாம் சொல்லுவாரென்று கேள்விப்பட்டதால் நான் அறியப் பிரியங்கொண்டிருக்கு மொன்றை அவராலறிய நல்லசமயம் கிடைத்ததென்று இருவரோடு செல்ல, நெடுந் தூரம் போனபின், என்னை அசதியில் பிடித்துக் கைகளைக்கட்டி அவர் கள் அறையில் விட்டுப்பூட்டி, ஆயிரம் ரூபாய் வரவழைத்துக் கொடுத்தால் விட்டுவிடுகிறேமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். என்னை நான் தோறும் காலைக்கடனை முடித்துக்கொள்ள அழைத்துப்போகும் பொழு தெல்லாம் நாம் தப்பித்தோட ஒரு சமயம் வாய்க்காதாவென்று பிரார்த்தித் திருந்தேன். ஆயினும், எனக்குச் சமயம் கிடைக்க இடங்கொடுக்காமல் சாக்கிரதையாக அவர்கள் இருந்தார்கள். பெரியவர் வெள்ளையப்பனோடு பேசியதைக் கேட்டிருந்ததுபோல் தாங்கள் அவனோடு பேசியதைக்கேட் டிருந்தும் தங்களை இன்னுரென்று அறிந்துகொள்ளாமலிருந்தேன்.

சபாபதிமுதலியார்.—அப்பா விஜயரங்கம் ! நான் இன்னுனென்று அறியாம லிருந்தும் என்னையும் பெரியவரையும் காப்பாற்ற எண்ணங்கொண்டவன் என்னிடத்திலிருந்தபொழுது அவ்விதம் நடந்ததற்குக் காரணம் யாது ?

இதென்ன வேஷம் உன்னைக் கண்டுகொள்ள முடியாமற்போனதே!

(253ம்-பக்கம பார்க்க.)

உன்னைப்பரீட்சித்துப் பார்க்கப் பார்க்க நீ உயர்வாகிறாயே ! உன்னைப் போலும் புண்ணியவான்கள் யாரிருக்கிறார்கள் ! ஐயோ ! துன்மார்க்கியாகிய என்மனைவி உன்னை வலுவந்தம் செய்துகொண்டிருக்க அவள் கண்ணுக் ககப்படாமல் நான் வருமளவும் நீவைக்கோற்போரில் மறைந்திருப்பதை அவள் கண்டுபிடித்து உன்னை வசியப்படுத்தச்சொல்லிய வைகளையெல்லாம் தடுத்து அவளுக்கு நற்புத்திசொல்லிக்கொண்டிருக்கும் முடிவில் நான்வந்து, நீ வெளிப்படையாகப்பேசாமல் மறைத்துப்பேசியதைக் கேட்டுத் தப்பாக உன்மேல் குற்றஞ்சுமத்திக் கோபங்கொண்டு அடித்தபொழுது, இப்பொழுது காட்டிய உன் வல்லமையை அப்பொழுதுகாட்டாமல், தனக்கென்ன கேரிடினும் நன்மை செய்தோர்க்குத் துன்பம் உண்டாச்சக்கூடாதென நினைத்து, உண்மையைச் சொன்னால் என்மனைவிக்கு அவமானம் உண்டாகுமென்று சொல்லாமல் நீங்கியபின்னும், நான் இன்னனென்று அறியாமல் என்னைக் காப்பற்றினாய். நீ இப்பொழுது என்னுடைய ஆதரவில் இல்லாததால் இப்பொழுதாகிலும் உண்மையைச் சொல்லுகிறாயா பார்க்கலாமென்று கேட்டால், எல்லாப் பழிபாவத்தையும் ஏற்று என்வசைச் சொல்லையும் அங்கீகரித்து மேற்கொண்டு எனக்குந்துணையாக முதற் காணும் ஊர்பரியந்தம் வருகிறேன் என்றாய். நான் உன்னை எவ்விதம் புகழ்வேன் ! எனக்கொன்றும் தெரியவில்லை ! என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, தம்பி அந்தப் படுபாவி கனகாம்புஜம் இறந்து ஒரு மாதமாகிறது. அவள் உனக்குச் செய்ததைவிட அதிகமாகத் தன் தங்கைக்குச் செய்திருந்தாள். அவள் சமாசாரத்தை அதிகமாகப்பேச எனக்கிஷ்டமில்லை. நீ இனி எப்பொழுதும் என்னை விட்டுப்பிரியாமலிருக்கவேண்டும். தம்பி! நீ வைக்கோற்போரில் நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது வேறொருவர் நீங்கள் பேசுவதை முதலிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தார். அவர் இன்னாரென்று நீ சொல்ல முடியுமா?

விஜயரங்கம்.—அண்ணா ! நான் எவ்விதம் சொல்ல முடியும் !

பெ. யவர்.—அப்பா விஜயரங்கம் ! நீ வேங்கடாசல முதலியாரால் வெறுக்கப்பட்டேனென்றாய். எந்த வேங்கடாசல முதலியாரால் வெறுக்கப் பட்டாய் ? அவர் வெறுக்கும்படி என்னசெய்தாய் ?

சபாபதிமுதலியார்.—ஐயா ! கொஞ்சம் பொறுங்கள் ! இன்னும் ஒரு வார்த்தை என் தம்பிக்குச் சொல்லவேண்டும். தம்பி ! நீ ஒருபொழுதும் மறவாத பெண்ணை அவ்விடம் இருந்து கேட்டிருந்தாள்.

விஜயரங்கம்.—அண்ணா ! அந்நேரத்தில் அவ்விடமிருந்த பெண் யாரென்று கண்டுகொள்ள முடியவில்லை.

சபாபதிமுதலியார்.—அங்கிருந்து நீ சொல்லியவைகளையெல்லாம் கேட்டிருந்தவள் அருணசலமுதலியார் தங்கை செழுங்கமலத்தின் மகள் கமலாக்ஷியம்மாளென்று அறிந்துகொள்.

விஜயரங்கம் கமலாக்ஷியின் பெயரைக் கேட்டவுடன் திகைத்து நின்றான். பெரியவர் நடக்காமல் மரம்போல் அசைவற்று நின்றார்.

19-ம் அத்தியாயம்.

கிண்ணபுரி என்னும் ஊரிலே ஒரு பெரிய மெத்தை வீட்டுக்கெதிரில் தண்ணீர் தெளித்துப் பலவிதபுஷ்பத்தொட்டிகளை அழகாகவைத்து விளக்குகள் போட்டிருக்கும் ஒருவீட்டுக்குள் அனேகர் போவதைக்கண்ட இரு வாலிபர்களும் ஒரு விருத்தரும் அவ்வீட்டுக்குள் சென்று, அனேகத்தூண்டா விளக்குகள் மாட்டி இரத்தினக் கம்பளம் விரித்திருக்கும் கூடத்தில் ஒருபுறமாக மூவரும் உட்காரப்போனபோது, வீட்டுக்குள்ளிருந்தவர் அங்கு என் போகிறீர், இங்கு வந்து உட்காரலாம் வாரும் சபாபதி முதலியார் என்று மூவரையும் அழைத்துவந்து கூடத்துமத்தியில் உட்காரவைத்தார்.

சபாபதிமுதலியார்.—தம்பி விஜயரங்கம்! இன்று நடக்கப்போகும் பிரசங்கம் மிகுமேன்மையாக இருக்குமென்று கேள்வி. தாங்களும் பிரசங்கம் கேட்டு நெடுநாளாயிற்றல்லவா?(என்று பெரியவரைப்பார்த்துக் கேட்டார்).

பெரியவர்.—ஆம்! நான் சத்காலக்ஷேபம் கேட்டு ஏறக்குறைய பதினைறு வருடங்களாயின.

விஜயரங்கம்.—(சபாபதிமுதலியாரைப்பார்த்து) அண்ணை! எது விஷயத்தைப்பற்றிப் பிரசங்கமாகப் போகிறது? அதுதெரியவில்லை.

இதோ பிரசங்கியாரும் வந்துவிட்டார் என்று சபாபதிமுதலியார் சொல்லியவுடன் ஒருவாலிபர் தமக்கென் றேற்படித்திய ஆசனத்தில் உட்கார்ந்து கடவுளைத்துதித்துச் சபைவணக்கம் சொல்லித் தாயுமானசுவாமி பாடலில் முதற்செய்யுளை ஆதாரமாகக்கொண்டு சபையிலுள்ளவர்கள் யாவரும் பிரமிக்க நெடுநேரம் பிரசங்கஞ்செய்து முடித்தார்.

விஜயரங்கம்.—(சபாபதிமுதலியாரைப்பார்த்து) அண்ணை! இந்தச்செய்யுள் இவ்வளவு பொருளை யடக்கிக்கொண்டிருக்கிறதென்று நான் நினைக்கவில்லை. பிரசங்கியார் வாலிபராயிருந்தாலும் சாஸ்திரங்களையெல்லாம் நன்குணர்ந்தவராகக் காணப்படுகிறதால் நமக்குற்ற சந்தேகங்களை

நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். நாமவரோடு தனித்து வார்த்தை யாடமுடியுமா ?

அது முடியும்படி செய்துவருகிறேனென்று சபாபதிமுதலியார் எழுந்து போய்ச் சிலநிமிஷத்தில் திரும்பிவந்து, நாளை காலையில் வந்தால் சம் பாஷிக்கத் தடையில்லையென அறிந்துவந்தேன், ஆனதால் நாம் காலை யில் வரலாமென்று எழுந்து போய் மறுநாள் காலை எட்டுமணிக்குப் பிரசங்கியாருக்கு வந்தனம் செய்து அவரருகில் இருவரும் உட்கார்ந் தார்கள். வீட்டுக்கு எஜமான் பிரசங்கியாரை யடுத்து, ஐயா ! இவர் கள் தங்களுக்குள்ள சந்தேகத்தைக் கேட்டுக்கொள்ளத் தங்களிடம் வந் திருக்கிறார்களென்றான்.

பிரசங்கியார்.—சந்தோஷம் ! என்ன சந்தேகம் கொண்டிருக்கிறீர்கள் ? உங்க ளுக்குற்ற சந்தேகத்தைக்கேட்டால் அதற்குச் சமாதானம் அடியேனுக் குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன். தெரியாதிருந்தால் அடியே னுக்குத் தெரியாதென்று சொல்லிவிடுகிறேன் ; அதில் தோஷம் ஒன்று மில்லை யானதால் தாங்கள் கேட்க யோசித்திருப்பதைக் கேட்கலாம்.

சபாபதி முதலியார்.—தம்பி விஜயரங்கம் ! என் மௌனமாயிருக்கிறாய்?

விஜயரங்கம்.—ஐயா ! எனக்குற்ற சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ள யோசித்ததேயன்றி வேறொன்றையுங் கருதியல்ல. ஆனதால் என்னை மன்னிக்கவேண்டும். உலகிலுள்ள சமயிகள் யாவரும் கடவுள் உண் டென்று ஒப்புக்கொண்டிருக்க நிரீச்சுவரவாதிகள்மட்டும் கடவுள் இல்லை என்கிறார்களே ! அவர்களுக்குக் கடவுள் உண்டென்று ஆதாரத்தோடு மெய்ப்பிக்க இடமிருக்கிறதா ?

பிரசங்கியார்.—நீர் கேட்பதற்குச் சிவஞானபோதம் முதற்சூத்திரம் கொண்ட கருத்தைச் சொல்லுகிறேன். மட்பாண்டங்களைக் கண்டபொழுது அவை களை உண்டாக்கியவன் ஒருவன் இருக்கவேண்டுமென்று நிர்மானிப்பது போல், உயர்திணையும் அஃறிணையுமாய்ச் சொல்லும் பிரபஞ்சமெல்லாம் தோன்று முறையிலே தோன்றி, நிற்கு முறையிலே நின்று, ஒடுங்கு முறையிலே ஒடுங்கி, வருகிறதை நாம் காண்கிறதனாலே, இவைகளைத் தோன்றவைத்தும், தோன்றியதை நிற்கவைத்தும், நின்றதை யொடுங்க வைத்தும் காரியப்படுத்த ஒருவன் வேண்டுமாதலால், மூன் சொன்ன முத்தொழிலையுஞ் செய்பவனையே நாம் கடவுளென்று சொல்லுகிறோம். நாம் பிரத்தியட்சமாய்க் காணுதலை அநுமானத்தாலறிய வேண்டிய தானால் அதை ஐந்து விதத்தில் பரிக்ஷித்துப்பார்த்து ஒப்புக்கொள்ளுகி றோம். ஐந்து விதம் எவையெனில்:—பிரதிஞ்ஞை, ஹேது, திருட் டாந்தம், உபநயம், நிகமனம், என்பவைகளே. இப்பிரபஞ்சத்துக்குக்

கர்த்தா உண்டென்பது பிரதிஞ்ஞை. பிரபஞ்சம் உயர்திணையும் அஃறிணையுமாய் அவயவப்பட்டிருத்தலால் அவ்விதம் சொல்லுகிறேமென்பது ஹேது. குயவனுல் குடம் சட்டிப்பானைகள் உண்டாவதுபோல் என்று சொல்லுவது திருஷ்டாந்தம். குயவன் இல்லாமல் பாண்டங்கள் உண்டாகாததுபோல் உயர்திணை அஃறிணைப்பொருளாய் நிறைந்த பிரபஞ்சம் ஒரு கர்த்தா இல்லாமல் உண்டாகாதாதலால் ஒரு கர்த்தா உண்டென்று தீர்மானித்தல் உபநயம். குயவனைக் கர்த்தாவுக்குத் திருஷ்டாந்தமாகக் காட்டியது ஒத்திருந்து பிரதிஞ்ஞையை உறுதிப்படுத்தியது நிகமனம். ஆனதால் கடவுள் உண்டென்பதற்கு ஆதாரம் காணப்படுகிறதல்லவா?

விஜயரங்கம்.—வாயுவால் நீரில் குமிழிதோன்றுவதுபோல் பூதங்கள் சேர்க்கையால் யாவும் உண்டாகின்றன, எல்லாம் சுபாவமேயன்றி வேறல்லவென்றும், வெற்றிலையும் பாக்கும் சுண்ணமும் கலந்த விடத்தில் சிவப்பு தோன்றுவதுபோல் பூதங்களின் கூட்டுறவால் உடலுண்டாகி அறிவு உதிக்கின்றது, அவ்வறிவோடு உலகில் ஒரு பெண்ணை வதுவை செய்து அவளோடு இன்பத்தை அனுபவிப்பதே முத்தியென்றும், ஒன்று சேர்ந்த பூதங்கள் பிரிந்தகாலத்தில் தேகத்தின் பௌதிகப்பொருள்கள் அவ்வவற்றிற்குரிய பூதங்களோடு கலந்துவிடுகின்றனவென்றும், இதை யறியாமல் புண்ணியம் பாவம் உண்டெனவும் அவைகளினுல் பிறவிகள் கிடைக்கின்றன வெனவும் சொல்லுவது தவறென்றும், நாமில்லாததை உண்டென்பதாக வீண் கவலைகொண்டு திரிகிறேமென்றும் கூறுகிறீர்களே!

பிரசங்கியார்.—நீர் கேட்டவைகளுக்குத் தக்க சமாதானம் அருணந்தி சிவாசாரியார் திருவாய் மலர்ந்தருளிய சிவஞான சித்தியார் பரபக்ஷத்தில் உலோகாயதத்தைப் பற்றிச் சொல்லியிருப்பதால் அதைக்கண்டு தெளியலாம். இப்பொழுது கேட்டவைகளுக்குச் சமாதானம் சொல்லவேண்டியது கடமையேயாயினும், அடியேனுடைய விஞ்ஞத்துக்கு முதலில் விடையளிக்க வேண்டும். உம்முடைய விடையை அறிந்த பின் நீர் கேட்டவைகளைக் குறித்து யோசிக்கலாம். ஆனதால், உள்ளது தோன்றுமா? இல்லாதது தோன்றுமா?

விஜயரங்கம்.—"உள்ளது" என்றுலது எக்காலத்திலும் உள்ளதென்றும், "இல்லாதது" என்றுல் அது எக்காலத்திலுமில்லாததென்றும் பொருள் படுவதால் அவ்விரண்டிற்கும் தோற்றம் சொல்லுவ தெவ்விதம்?

பிரசங்கியார்.—உண்மையைச் சொன்னீர். அவ்விரண்டிற்கும் தோற்றமில்லை. வாயுவால் நீரில் குமிழிதோன்றி நீரோடு நீராகப் போகுமேயல்லது வேறென்றுகத் திரியாது. பூதங்களின் சேர்க்கையால் யாவும் உண்டாகுமானதால் யாவும் சுபாவம் என்றீர். பூதக்கூட்டத்தாலறிவு

உண்டாகுமாயின் யானை பெருத்திருப்பதால் அதற்கு அறிவு பெரிதாக வும், எறும்பு சிறித்திருப்பதால் அதற்கு அறிவு சிறிதாகவு மிருக்கவேண் டுமே! சிறிய உடலெக்கொண்ட மானிடருக்கு அறிவு பெரியதாக இருக்கவேண்டிய காரணமில்லையே! வெற்றிலையும் பாக்கும் சுண்ண மும் கலந்த விடத்தில் சிவப்பு தோன்றுவது போலென்றீர். தோன்றிய சிவப்பு நீங்காமலிருப்பது போல் உடலுக்கறிவு மரணத்திலும் நீங்காம லிருக்கவேண்டும்.

விஜயரங்கம்.—தாங்கள் சொல்லிக்கொண்டு வரும்பொழுது மத்தியில் தடை யாகிறதைக் குறித்து மன்னிக்கவேண்டும். மரணத்தில் வாயு நீங்கிய தால் உடலுக்கு அறிவு இல்லாமற் போகிறது.

பிரகங்கியார்.—உறக்கத்தில் வாயு நீங்காமலிருக்க அப்பொழுது அறிவில்லா மற் போகிறதே? அதற்கென்ன சொல்லுகிறது? நிலம், நீர், காற்று, தீ என்கிற ஜடபதார்த்தத்தில் சித்தாகிய பதார்த்தம் தோன்றுது.

விஜயரங்கம்.—சிலம்பியிலிருந்து நூல் தோன்றவில்லையா?

பிரகங்கியார்.—இந்த உவமானத்தைக் கவனியாமல் சிலர் உபயோகிக்கிறார் கள். சிலம்பியிலிருந்து நூல் தோன்றுவதென்றால், ஜடத்திலிருந்து ஜடம்தோன்றியதே யன்றி ஜடத்திலிருந்து சித்தாகிய பதார்த்தம் தோன்றவில்லை. அல்லது சித்தாகிய சிலம்பியின் ஆன்மாவிலிருந்து ஜடம் தோன்றவில்லை. ஜடமாகிய பூதத்திற்கு அறிவில்லாததால் அது ஒன்று சேர்ந்த காலத்தும் "இல்லாதது தோன்றுது." என்ற முறைப் படி, இல்லாத அறிவு உண்டாக நியாயமில்லையே! புண்ணிய பாவம் உண்டென்றும், அதனால் பிறவிகள் கிடைக்கின்றன வென்பதாகச் சொல்லுவது தவறென்றும் கூறினீர். பூதக்கூட்டத்தாலுண்டாகும் உடல் ஒரே விதமாயிராமல் ஆண், பெண், அலி என்னும் பேதமும், மானிடயோனி ஒன்பது நூறுயிரமும், அமரர்யோனி பதினெறு நூறு யிரமும், நாற்காலுடையவைகள் பத்து நூறுயிரமும், பறவைகள் பத்து நூறுயிரமும், நீர்வாழ்வன பத்துநூறுயிரமும், ஊர்வன பதினேந்து நூறு யிரமும், தாபரங்கள் பத்தொன்பது நூறுயிரமும் ஆக எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதத்தோடும் பிறந்து ஒருவன் அரசனாகவும் மற்ற வன் ஏழையாகவும், ஒருவன் சுகத்தை அனுபவிக்கவும், வேறொருவன் துக்கத்தை அனுபவிக்கவும் வேண்டிய காரணமென்ன? இதனால் அவ ரவர்கள் செய்த கன்மத்துக்கீடாக உடல் கிடைத்துச் சுகதுக்கங்களை அனுபவிக்கிறார்களென்று காணப்படவில்லையா? வெற்றிலையும் பாக்கும் சுண்ணமும் தாமாய் ஒன்று கூடாவாகையால், அவைகளைச் சேர்த்து வைக்க ஒருவன் வேண்டியதுபோல், ஐந்து பூதங்களையுங் கூட்டுவிக்க வும், கூட்டுவித்ததைப் பிரிக்கவும், பிரித்ததை ஒடுக்கவும், ஒடுங்கியதைத்

தோற்றுவிக்கவும் ஒரு கர்த்தா வேண்டும். இன்னும் இதை விவரிக்கிற் பெருகும்.

விஜயரங்கம்.—ஐயா! நம் கர்த்தாவுக்கு வடிவம் உருவமாலுல் நம்மைப் போல் அவரையும் ஒருவர் உண்டாக்க வேண்டுமென்றும், அருவமாலுல் அருவம் உருவமாகவும் உருவம் அருவமாகவும் ஆவது கூடாதென்றும், அருவுருவம் என்னில் ஜலத்திற்குக் குளிர்ச்சிமட்டும் இருப்பதன்றிச் சூடில்லாததுபோல் ஒரு பொருளுக்கு இரண்டுவித குணங்களும் ஏக காலத்தி லிராவென்றும் சொல்லுகிறீர்களே!

பிரதங்கியார்.—நீர் கேட்டவைகளுக்கு

"அருவமோரூபாரூபமானதோவன் றிகின்ற
வுருவமோவுரைச்குங்கர்த்தாவடிவெனக்குணர்த்திங்சென்னி
லருவமும்ரூபாரூபமானதுமன்றிகின்ற
வுருவமுமூன்றுஞ்சொன்னவொருவனுக்குள்ளாவாமே." என்றும்,

"பந்தமும்வீடுமாயபதபதார்த்தங்களல்லா
னந்தமுமாதியில்லானளப்பிலனுதலாலே
யெந்தைதானின்னனென்று மின்னதாமின்னதாகி
வந்திடானென்றுஞ்சொல்லவழக்கொடுமாற்றமின்றே."

என்றும் சிவஞான சித்தியாரி லிருப்பதைக் கண்டு தெளிவீராக. எந்தை அருளிலுல் சகளமான திருமேனி பூண்டாரென்றபொழுது, சகள மான திருமேனியேயன்றி கிட்களத்திருமேனியும் உண்டென்றும், கிட்களமும் சகளமும் ஏற்பட்டதால் அவர் திருமேனி சகள கிட்களம் என்றும் விளங்குகின்றது. அஃதென்போலென்னில்-சகளம் மரமா னதுபோலவும் கிட்களம் கிழல் போலவும், சகளகிட்களம் பூவும் பூவின் மணமும் போலவுமென்று மறைஞானதேசிகர் விளக்கிக்காட் டியிருப்பதால், எங்கும் பரிபூரணமாய் கிறைந்துள்ள நம் கர்த்தாவுக்கு வடிவமானது உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்றுமே யென்று சொல்லத் தடையில்லை.

விஜயரங்கம்.—எங்கும் பரிபூரணராய் கிறைந்துள்ள கர்த்தாவுக்கு ஓராலயங்கட்டி அதில் ஓர் விக்கிரகத்தை வைத்து வணங்கவேண்டுமோ? நாம் இருந்த இடத்திலிருந்து வழிபடக்கூடாதா?

பிரதங்கியார்.—ஆற்றில் அல்லது குளத்திலுள்ள ஜலத்தைக் கையாற்றள் ளிய பொழுது விலகிய ஜலம் ஒன்றுகூடிக் காணப்படுவது போல், எங் கும் கிறைந்துள்ள வாயுவை விசிறியிலுல் விலக்கப் பின் அது ஜலம் போல் ஒன்றுசேர நாமதையறியாமல் விசிறி காற்றை உண்டுபடுத்திய தென்று ஆனந்திக்கின்றோம். விசிறியானது இருக்கிற காற்றை உண ரச்செய்வது போலவே, ஆலயம் விசிறியைப்போல் கின்று, எங்கும்

நிறைந்துள்ள நம் கர்த்தாவை விக்கிரகரூபமாக எடுத்துக்காட்ட நாம் பார்த்து வழிபட்டு ஆனந்திக்கின்றோம். உண்மையை அறிந்து பார்க்கில் விசிறியும் நூதனமாகக் காற்றைக் கொண்டுவரவில்லை. ஆலயமும் இல்லாததைக்கொண்டு வரவில்லை. மறந்தோர்க்கும் அறியார்க்கும் எந்தை ஒருவர் உண்டென்று ஆலயம் நினைப்பூட்டுகின்றது.

விஜயரங்கம்.—விக்கிரக ஆராதனை கூடாதென்று அனேகர் சொல்லுகிறார்களே!

பிரசங்கியார்.—அவ்விதம் சொல்லுகிறவர்களைக் கண்டிக்கவேண்டியதே நம் கடமை. இறைவர் தம்மன்பர் நிமித்தம் பல அவதாரத்தில் கொண்ட திருக்கோலத்தைப்போல் உருவேற்படுத்தி வேதாகமவிதிப்படி வழிபடுகின்றோமென்று புறச்சமயிகளுக்குச் சொல்வதிற் பிரயோசனமில்லை. ஆனதால் வேறுவித சமாதானமே அவர்களுக்குச் சொல்லவேண்டும். நாம் விக்கிரகத்தைக் கண்ணால் பார்க்கிறோமா? அல்லது மனதால் பார்க்கிறோமா? என்று முதலில் அறியவேண்டியது. ஞானேந்திரியங்களிலொன்றுகிய நேத்திரத்துடன் தன்மாத்திரையும் மனமும் சேராத பொழுது நேத்திரத்தின் தொழில் முற்றிலும் நிறைவேறாது. மனம் நேத்திரத்தோடு சேராமல் விஷயத்தில் சம்பந்தப்பட்டிருந்தபொழுது நாம் ஒன்றை வாசித்தாலும் பார்த்தாலும் ஒன்றும் தெரியாமலிருப்பதை நீர் கவனித்திருக்கக்கூடும். ஆனதால் மனமே காரணமாய் நின்று ஒருருவை அறிகின்றது. நாம் பார்த்திராத ஒருரின் அலங்காரத்தை ஒருவர் சொல்லும் பொழுதும், நாம்பார்த்திராதஒருபுருடனையாவது ஒரு பெண்ணையாவது ஒருவர் வருணித்துக் கூறும்பொழுதும் நம்மனதில் உருவு தோன்றுவது போல், அவரவர்கள் வழிபடுந் தெய்வத்தை விக்கிரக ரூபமாகப் பார்த்திராதவர்களுக்கும் அத்தெய்வத்தின் குணனுபவத்தை யறிந்தபொழுது உருவம் ஏற்படுகின்றது. ஈசுவரனை விக்கிரக ரூபமாகச்கொண்டு வழிபடுகிறவர்களும் அங்ஙனம் வழிபடாதவர்களும் தங்கள் மனதை விஷயத்திற் செலுத்தாமல் தாங்கள் வழிபடுந்தெய்வத்தைத் தியானிக்கும் பொழுது தாங்கள் கொண்ட அல்லது கண்ட உருவத்தை மனம் பற்றுகிறதால், விக்கிரகத்தை ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்து வணங்குகிறவர்களுக்கும் அங்ஙனம் வணங்காமலிருக்கிறோமென்பவர்களுக்கும் பேதமில்லாமலிருப்பதனாலே, விக்கிரகாராதனை செய்யக்கூடாதென்று சொல்லுகிறவர்களும் விக்கிரகத்தை வணங்குகிறவர்களாகிறார்களென்று நன்றாய் விளங்கவில்லையா? விக்கிரகம் எங்கள் மனதின்கண் தோன்றுகிறதில்லையென்று சிலர் சொல்லுவார்களாயின் தியானத்திலவர்கள் மனம் பற்ற ஆதாரமில்லாமற் போகிறதால், அவர்கள் வழிபடுந் தெய்வத்தை மனம் பற்றவில்லையென்று துணிந்துசொல்லத் தடையில்லையே!

"சிவன் கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனுங்கே." என்று பிரமாணமிருப்பதாலும், விக்கிரகத்தைவணங்கிப் பேறுபெற்றவர்கள் அனேகரென்றறிந்திருக்கிறதாலும், நாம் ஏனைய மதஸ்தரைப்போல் விக்கிரகத்தை ஆலயத்தில் வைக்காமல் வேதாகம விதிப்படி மந்திர இயந்திரஸ்தாபனையோடு எந்தை பல சமயத்திற் கொண்ட திருமேனியைப்போல் உருவை ஏற்படுத்திப் பிரதிஷ்டை செய்து வழிபடுகிறதாலும் நம்மவர்களுக்குச் சிறப்பே!

விஜயரங்கம்.—ஐயா! விக்கிரகாராதனை செய்வது கூடாதென்கிறவர்களே விக்கிரகாராதனை செய்கிறார்களென்று மெய்ப்பித்தாலும், மந்திரத்தில் மாங்காய் விழாததுபோல் மந்திரத்தை உச்சரிப்பதாலும் இயந்திரஸ்தாபனை செய்வதாலும், அதாவது உச்சரிப்பாலும் ஒன்றை எழுதிவைப்பதாலும் என்ன பிரயோசனம் உண்டாகும்? ஒன்றுமில்லையே!

பிரசங்கியார்.—மந்திர உச்சரிப்பின் பிரயோசனத்தையும் இயந்திரத்தின் வல்லமையையும் நம்மவர்கள் அறிந்திருப்பதால் தெரிந்தோர்க்கு அவைகளைக் குறித்துச் சொலலவேண்டிய அவசியமில்லை. புறச்சமயிகளுக்கே அவைகளின் வல்லமையைச் சொல்லவேண்டும். உச்சரிப்பால் ஒன்றும் பிரயோசனமில்லை யென்றீர். முன் சொன்னவிதம் ஞானேந்திரியத்தோடு மனம் சேராதவழி ஞானேந்திரியம் காரியப்படாது; மனம் சேர்ந்த வழி ஆன்மா யாவுமறியுமாதலால் ஒருவன் தடிகொண்டு தேகத்தில் புடைத்தால், அடிபட்டது தேகமானாலும் துக்கப்பட்டது ஆன்மா. பார்க்கக் கூடாததை நேத்திரம் பார்த்தாலும் துக்கப்பட்டது ஆன்மா. துர்க்கந்தத்தை நாசி யறிந்தாலும் துக்கப்பட்டது ஆன்மா. கெட்ட உருசியை அறிந்தது நாவேயானாலும் துக்கப்பட்டது ஆன்மா. ஞானேந்திரியங்களில் நான்கும் அறிந்தது வெவ்வேறு படித்தாயிருந்ததாலும் அதனால் ஆன்மா அடைந்த துக்கம் வெவ்வேறு விதமாக இருக்குமா?

விஜயரங்கம்.—ஆன்மாவுக்குப் பலவகையால் அடைந்த துக்கமெல்லாம் ஒரேவிதமாகவே இருக்கவேண்டும்.

பிரசங்கியார்.—செவி கேட்கத்தகாதவைகளைக் கேட்டு அதனால் ஆன்மா துக்க மடைந்தால் அந்த துக்கம் வேறாக இருக்குமா?

விஜயரங்கம்.—வேறாக இராது. எல்லாம் ஒரேவிதமான துக்கமாகவே இருக்குமென்று நினைக்கிறேன்.

பிரசங்கியார்.—அது விஷயத்திலின்னும் சந்தேகங்கொள்ளக் காரணமில்லை. தேகத்தில் அடிபட்டு வருந்திய காலத்திலும் கண்களில் நீர் வருகின்றது. சகிக்கக்கூடாததைப்பார்த்த காலத்திலும் கண்களில் நீர் வருகின்றது. நா கெட்ட உருசியை அறிந்த காலத்தினும் கண்களில் நீர் வருகின்றது.

கேட்கக்கூடாததைக் கேட்ட காலத்திலும் கண்களில் நீர் வருகின்றது. ஆனதால், ஞானேந்திரியங்களின் வாயிலாக ஆன்மா கொண்ட துக்க மெல்லாம் ஒரேவித மென்றும், சொல்லாலடித்ததும் கல்லாலடித்ததும் ஒரே பிரயோசனத்தைக் கொடுத்ததென்றும் தெளிவாய் விளங்குகின் றது. ஞானேந்திரியங்களில் செவியைச் சிலாகித்து மூன்னோர்கள் பேசி யிருப்பதை நாம் நம்பாமற்போனலும், சப்த சுரங்களே ஆதாரமாகக்கொ ண்டு அவைகளைப் பின்னிப் பேதப்படுத்தி நீட்டியும் குறைத்தும் உச்ச ரிப்பதற்கு இராகங்களெனப் பெயர்வைத்துப் பாடுவதைக்கேட்ட சிறு குழவியும் பரவசமாகிறதாலுல் மனங் சாயாதார் யாரிருக்கிறார்கள் ? கல்லுங் கனிந்ததென்ற கதையும் கேட்டிருக்கிறோம். உச்சரிப்பே எதற் கும் துணைக்காரணமாக இருக்கிறதை யறிந்தபின் அதனுல் பிரயோசன மில்லையென்று கூறுதல் குற்றமாகும். மந்திரத்தில் மாங்காய் விழாதென் றீர். ஒளவையார் ஒரு பனைமரத்துண்டைப்பார்த்து—

" திங்கட்குடையுடைசேரனும்சோழனும்பாண்டியனும்
மங்கைக்கறுகிடவந்துவின்றார்மணப்பந்தரிலே
சங்கொக்கவெண்குருத்தீன்றுபச்சோலைசலசலத்து
நுங்குக்கண்முற்றியடிக்கண்சறுத்துதுனிசிவந்து
பங்குக்குமூன்றுபழந்தரவேண்டும்பனந்துண்டமே."

என்ற பாடலைச் சொன்னபொழுது பட்டுப்போன பனைமரம் தழைத்து மூன்று பழத்தைக் கொடுத்ததென்றதைக் கேட்டதில்லையா ? பாண் டவர்கள் ஆரணியத்திலிருந்தபொழுது துரோபதை வேண்டுகோ ளால் விஜயன் தெல்லிக்கனியைத் தன் அம்பால் விழச்செய்யப், பின் மித்திர மகாரிஷிக்கு அது ஆகாரமாயுள்ளதெனவறிந்து பயந்தபொ ழுது, ஸ்ரீ கிருஷ்ண பகவான் " உற்றது பகர்ந்தால் அற்றது பொறுந் தும்." என்றபின் பாண்டவனைவரும் துரோபதையும் தங்கள் தங்கள் மனதிலுள்ளதைச் சொல்லுதலும் கனி மூன்னிருந்த இலையில் ஒட் டிக்கொண்டதென்றதைக் கேட்டதில்லையா ? நீர் மந்திரத்தில் பழம் விழாதென்றதற்குப் பழம் அந்தப்படி விழுந்ததற்கும், விழுந்தது மீண் டும் ஒட்டிச்கொண்டதற்கும் பிரமாணம் காட்டினேன். ஆனதால் " அவனருளாலே, அவன்ருள்வணங்கி " என்றபடி மந்திரமே திரு மேனியாகக்கொண்ட எந்தையை முறையோடு மந்திரத்தை உச்ச ரித்து வழிபடுகிறோம்.

விஜயரங்கம்.—ஐயா ! மந்திர உச்சரிப்பால் பலனிருக்கிறதென்று கண் டாலும் சில அட்சரங்களே ஒரியந்திரத்திலெழுதிப் புதைத்து விட்டால் அவை என்ன பலனைக்கொடுக்கும் ? அதிற் பிரயோசனமில்லையென்று தெளிவாய்க்காண்கிறதே !

பிரசங்கியார்.—உச்சரிப்பை வரிவடிவாக்கி இயந்திரத்திலெழுதிவைத்தாலும் உச்சரிப்பைப்போல் தேவதா சொரூபம்முதலிய அட்சரங்களும் பிரயோசனத்தைக் கொடுக்காமற்போகா. உச்சரிப்புக்குப் பதிலாசத்தோன்றிய அட்சரங்களை முறையோடு இயந்திரத்திலடைத்துப் புதைத்தவிடத்திலுட்கார்ந்து மூக்காலத்தை யறிந்து சொல்வதையும், பேய்பிடித்தவள் உட்கார்ந்து தலைவிரிகோலத்தோடு ஆடுவதையும் பார்த்ததில்லையா?

விஜயரங்கம்.—பார்த்திருந்தாலும் அதுவிஷயத்திலெனக்கு நம்பிக்கை உண்டாகவில்லை.

பிரசங்கியார்—உமக்கதில் நம்பிக்கை யுண்டாகச்செய்வது கடினமல்ல. ஒரு வீட்டை யலங்கரித்து அனேகரை வரவழைத்து அவர்கள் வந்து வீட்டிலுள்ள அறைகளில் எல்லாம் பிரவேசிக்கப் போகும்பொழுது ஒருவன் ஒரறைக்கு வெளியில் நின்று "இந்த அறைக்குள் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது." என்று சொல்லிக்கொண்டிருந்தால் தடைபடுத்தும் அறைக்குள் எவராவது போவார்களா?

விஜயரங்கம்.—போகக்கூடாதென்று சொல்லிக்கொண்டிருக்குமிடத்திற்குப் போகமாட்டார்கள்.

பிரசங்கியார்.—ஒருவன் நின்று சொல்லிக்கொண்டிராமல் "இந்த அறைக்குள் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது." என்று ஒரு கடுதாசியில் எழுதி ஒட்டியிருந்தால் அப்பொழுது என்ன செய்வார்கள்?

விஜயரங்கம்.—அப்பொழுதும் போகாமலிருப்பார்கள்.

பிரசங்கியார்.—உச்சரிப்பும், வரிவடிவமும் ஒரே காரியத்தைச் செய்ததைப் பார்த்தீரா! இனி வரிவடிவத்தைக் குறித்துச் சந்தேகங்கொள்ள நியாயமில்லையல்லவா?

விஜயரங்கம்.—ஐயா! வரிவடிவத்தைப் பார்க்க நேரிட்டதால் அது பிரயோசனத்தைத் தந்ததாயினும், அதைப் புதைத்துவைத்தாலும் பிரயோசனத்தைக் கொடுக்குமென்று எண்ண இடமில்லையென்பதாகத் துணிந்து சொல்லுவேன்.

பிரசங்கியார்.-நாம் வசிக்கும் பூமிதட்சணத்துருவத்திலிருந்து உத்தரத்துருவத்தின் குறுக்களவு 7912 மைல் என்று பூகோள சாஸ்திரம் சொல்லுகிறது. இந்த 7912மைலும் (பூமி உருண்டைவடிவமானதால்) மண்ணால் மூடப்பட்டிருந்தும் தட்சணத்துருவத்தில் (கம்பஸ்) என்னும் திசையறி கருவியை வைத்தால் அதிலுள்ள முள்ளை உத்தரத் துருவத்திலுள்ள காந்தமலை தன்பக்கமிழுக்கிறது. வியாழக்கிரகம் 398,000,000 மைல்தூரத்திலிருந்தும், சனிக்கிரகம் 778,000,000 மைல் தூரத்திலிருந்தும், சூரி

யன் 92,000,000-மைல் தூரத்திலிருந்தும், சந்திரன் 240,000-மைல்தூரத்திலிருந்தும் இந்த பூமி மேல்கீழான காலத்திலும் பலன் கொடுக்கின்றன. ஒரு எலுமிச்சம்பழத்தைத் துளைத்துப் பாதரசத்தைவிட்டுத்துளையை மூடி வெயிலில் வைத்தால் எலுமிச்சம்பழத்துக் குள்ளிருக்கும் பாதரசம் சூரிய வெப்பத்தால் காரியப்பட்டுக்குதிக்கின்றது. ஒரு சுணங்கனை வளர்த்துவந்தவனைக் கொலைசெய்து சுணங்கனறியாமல் கொண்டுபோய்ப் புதைத்துவிட்டால் அச்சுணங்கன் எஜமான் பிரேதமிருக்கு மிடத்தைக் கண்டுபிடிக்கவில்லையா? இயந்திர வல்லமையைச்கொண்டு அனேக ஆலயங்கள் அவ்விடம் போகிறவர்களுடைய மனதுக்கு ஆனந்தத்தைக்கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனதால், யாவருடைய பார்வையையும் மறைத்துப் புதைத்துவைத்திருக்கும் இயந்திரம் பலன் கொடுப்பது அதிசயமல்ல.

விஜயரங்கம்.—ஐயா! வாந்திபேதியைத் தொத்துவியாதியெனக் கண்டும் அது காளியம்மையென்றும் காளியம்மைக்குப் பிரீதி செய்தால் அது போய்விடுமென்றும் காளியம்மைக்குக் காப்புக்கட்டிக் கரகமெடுத்துத் திருவிழா கொண்டாடுவது அறியாமையென்பதாகப் புறச்சமயிகள் நம்மைக் கேவலமாகப்பேசுகிறார்களே! அவர்கள் சொல்வது நியாயமாகக் காணப்படுகிறதல்லவா?

பிரதங்கியார்.—காரணமறிந்தால் நாம் அறியாமையால் செய்கிறோமென்றும் அவர்கள் அறியாமையால் சொல்லுகிறார்களென்றும் விளங்கும். வாந்திபேதி தொத்துவியாதியென்பது நம்மவர்களறியாததல்ல. தொத்துவியாதியென அறிந்தே அவர்கள் அது உண்டான காலத்தில் கிராம தேவதைக்குக் காப்பு கட்டுகிறார்கள். கிராமதேவதைச்குக் காப்புகட்டுவார்களாலால் அக்கிராமத்திலுள்ளவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போகக் கூடாதென்னும் நியமனை ஏற்பட்டிருப்பதால் காப்புத்தடையிலுள்ளவர்கள் வேறோரிடத்திற்குப் போகத் தடையாகிறது. அதனால் வாந்திபேதியைப் பரவவிடாமல் ஓரிடத்தில் நிறுத்த இடமுண்டாகின்றது. வாந்திபேதியை ஓரிடத்தில் நிறுத்திக் கொண்டபின், வாந்திபேதி அசுசியாலுண்டாகிற காரணத்தால், அந்த அசுசியை நீச்சவேண்டுமென்னும் எண்ணத்தோடு எங்கும் கரகம் வரப்போகிறதென்று பறையறைவிக்கிறார்கள். காளியம்மையின் கரகம் வரப்போகிறதெனவறிந்த யாவரும் தங்கள் தங்கள் வீட்டை மெழுகிச் சுத்தப்படுத்திக் கரகம் வந்தபொழுது கற்பூரத் தீபங்காட்டி வீட்டுக்குள் கொண்டுபோய் வைத்து வீட்டைப் புனிதப்படுத்துகிறார்கள். கரகத்தோடு வந்தவர்களைத் தொத்துநோய் தொடர்ந்து வராமலும் தொடர்ந்து போகாமலு மிருக்க அவர்கள் கால்கள் நனைய மஞ்சள் நீரைக் குடத்தாலூற்றியும் சற்பூர வாசனை யூட்டி

யும் சூடிகள் அனுப்புகிறார்கள். கிராம முற்றிலுமுள்ள அசுசி நீங்கிப் புனிதப்படுவதால் வாந்திபேதி தலைகாட்டாமல் நீங்குகின்றது. காளியம்மையைக்காட்டி யாவரையும் பயமுறுத்தி வீடுகளைச் சுத்தப்படுத்தச் செய்வது பெரியோர்களுடைய யுக்தியின் பலனேயாம். ஆகவே, அறியாமையைக் கொண்டவர்கள் நாமா ? அந்தப்படி சொல்லுகிறவர்களா ? இதுபோலவே வைசூரியையும் தொத்துவியாதியெனவறிந்து மாரியம்மையினால் வந்ததென்று பயமுறுத்தி யாவரையும் வீட்டுக்குள் வரவொட்டாமல் தடைப்படுத்துகிறார்கள். வைசூரி பெரும்பாலும் சிறுவர்களுக்குச் சூடதிகரிப்பால் வருகின்றது. தங்கள் தங்கள் வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு வைசூரி கண்டால் அத்தெருவிலுள்ள சிறுவர்களெல்லாம் பாதுகாக்க அவர்களுக்கு முழுவதும் குளிர்ச்சியைக்கொடுக்கும் தின்பண்டங்களைத்தருகிறார்கள். தங்கள் வீட்டிலிருக்கும் வைசூரி நீங்கினாலும், பின்னும் வந்தாலும் வருமென்ற பயத்தால் மற்றச் சிறுவர்களெல்லாம் பாதுகாக்கிறார்கள். மாரியம்மை அவர்கள் வீட்டில் வந்திருக்கிறாளென்றால் சிறுவர்கள் அவ்விடம் போகப் பயப்படுவார்கள். ஆனதால், காரணத்தை யறியாமல் குற்றஞ்சொல்வது சிறப்படையாது.

விஜயரங்கம்.—ஐயா ! தாங்கள் சொல்லிய விஷயம் நிரம்பவும் திருப்திகரமாயிருக்கிறது. கடவுள் ஒருவராயிருக்க அவரை விட்டுப் பல தெய்வங்களை வணங்குதல் குற்றமல்லவா ?

பிரகாங்கியார்.—ஆன்மாக்களுடைய பக்குவத்திற்சேர்க்க ஏற்படுத்திய சோபனப்படி பல தெய்வங்களை அவை வழிபடுவதில் குற்றமொன்றுமில்லையென்றும், அவரவர்கள் கொண்ட எண்ணத்திற்கேற்கக் கடவுள் நின்று அங்கங்கு அருள் புரிவாரென்றும் சாத்திரங்கள் சொல்லுகின்றன. "ஆகாயத்திலிருந்து விழுந்த ஜலம் சமுத்திரத்தைச் சேருவதுபோல எந்தத் தெய்வத்தை வைத்து வணங்கினாலும் எல்லாம் கேசவனைப் பற்றும்." என்று விஷ்ணு சஹஸ்ர நாமத்திலிருக்கிறது. " எவர்கள் எவ்விதமாகப் பாவித்து வணங்கினாலும் அவர்களை அவ்விதமாகவே நான் அனுக்கிரகிக்கிறேன். மனிதர்கள் என்னுடைய மார்க்கத்தை அனுசரிக்கிறார்கள்." என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருச்சுனனுக்குரைத்த பகவத்கீதையிலிருக்கின்றது. " யாதொரு தெய்வங் கொண்டீர், அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனுர் தாம் வருவர்." என்று சிவஞான சித்தியார் முறையிடுகின்றது. ஆனதால், பொன்னினாற் செய்தபணி பலவகையாகக் காணப்பட்டாலும் பொன்னென்றே யானதுபோல், ஆன்மாக்கள் கொண்ட உருவங்களிலெல்லாம் எந்தை நின்று அவரவர்களுக்கு அனுக்கிரகிக்கிறானென்பதற்குச் சந்தேசமில்லை.

விஜயரங்கம்.—சைவர்கள் சிவன் பெரியவனென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணு பெரியவனென்றும் வாதிட்டு வம்புக்கு நிற்கிறார்களே !

பிரதங்கியார்.—சாத்திரப் பயிற்சியா லுண்மையறிந்தவர்கள் அவ்விதம் வாதி டத்துணியார்கள்.

நாராயணோபநிஷத்தில்— * * * நாராயணன் நித்தியன், பிரம்மா நாராயணன், சிவன் நாராயணன், இந்திரன், காலம், திக்கு, எல்லாம் நாராயணன் * * * * * * * * * என்றும், கைவல்லியோப நிஷத்தில்— * * பரிசுத்தராயும், துக்கமற்றவராயும், சிந்திக்கக்கூடாத வராயும், மங்கள சுவரூபராயும், மிகவும் சாந்தராயும், மோக்ஷ சுவரூப ராயும், மாயைக்கு உற்பத்தி காரணராயும், ஆதிமத்தியாந்த ரகித ராயும், ஒருவராயும், எங்கும் வியாபகாராயும், ஞானானந்தசுவரூப ராயும், ரூபமற்றவராயும், ஆச்சரியகரராயும், பிரபுவாயும், மூக்கண் ணுடையவராயும், நீலகண்டராயும், சாந்த மூடையவராயும், உமை யுடன்கூடியிருக்கிறவராயு மூள்ள * * * * * * * * * * * பர மாத்துமாவே பிரம்மா, அவரே சிவன் * * * அவரே விஷ்ணு என் றும், ஸ்கந்தோப நிஷயத்தில்— * * * * விஷ்ணு ரூபமாயிருக் கிற சிவன் பொருட்டும், சிவ ரூபமாயிருக்கிற விஷ்ணுவின் பொருட் டும் நமஸ்காரம். சிவனுடைய இருதயமே விஷ்ணு ; விஷ்ணுவினு டைய இருதயமே சிவன். * * * சிவகேசவர்களுக்குள்ளே பேதம் கிடையாது என்றும்,

திருமங்கை யாழ்வார்.—

பாருருவில்நீரெரிகால் விசும்புமாகிப்
பல்வேறுசமயமுமாய்ப்பரந்துகின்ற
ஏருருவில் மூவருமே யெனநின்ற விமையவர்தம்
திருவுருவேறெண்ணும்போது
ஒருருவம்பொன்னுருவமொன்று செந்தீ
ஒன்றுமாகடலுருவமொத்துகின்ற
மூவுருவங்கண்டபோதொன்றுஞ்சோதி
முகிலுருவமெம்மடிகளுருவந்தானே. என்றும்,

பொய்கை யாழ்வார்.—

அரனுரணுமம் ஆன்விடைபுள்ளூர்தி
உரைநூல் மறையுறையுங்கோயில்——வரைநீர்
சருமமழிப்பளிப்புக் கையதுவேல்நேமி
உருவமெரிகார்மேனியொன்று என்றும்,

நம்மாழ்வார்.—

யானுந்தானு மொழிந்தானே யாதுமெவர்க்கும் மூன்றினானே
தானுஞ்சிவனும் பிரமனுமாகிப் படைத்த தனிமுதலே
தேனும்பாலும் கன்னலுமமுதுமாகித் தித்தித்தென்
ஊனிலுயிரிலுணர் வினினின்ற வொன்றை யுணர்ந்தேனே. என்றும்,

திருஞான சம்பந்த சுவாமிகள்.—

ஒருருவாயினை மானுங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல் பூதல
மொன்றியவிருசுடரும்பர்கள் பிறவும்
படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை * * * என்றும்,

திருநாவுக்கரசு சுவாமிகள்.—

ஒருவனுயுலகேத்தலின்றநாளோ
வோருருவே மூவுருவு மானநாளோ * * என்றும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.—

வாழ்வர் சண்டீர் நம்மூளைவர் வஞ்சமனத்தீரே
டாவராலு மிசழப்பட்டிங் கல்லலில் வீழாதே
மூவராயு மிருவராயும் முதல்வனே * * * என்றும்,

மாணிக்கவாசக சுவாமிகள்.—

மூந்திய முதனடு விறுதியுமானுய் * * * என்றும்,

தாயுமான சுவாமிகள்.—

குன்றுத மூவுருவா யருவாய் ஞானக்கொழுந்தாகி
யறுசமயக் கூத்துமாடி * * * என்றும்.

சிவஞான சித்தியார்.—

தேவரி லொருவரென்பர் திருவுருச் சிவனேத்தேவர்
மூவராய் நின்ற தோரார் * * என்றும்,

சொல்லியிருப்பதைக் கண்டவர் எந்தை கொண்ட மூன்றுருவில் ஒன்றை உயர்வென்றும் ஒன்றைத் தாழ்வென்றும் கூறுவது, தாந்தாம் வணங்கும் கடவுளை இழிவுபடுத்திப் பேசுவதேயாகும். தாம் வணங்கும் கடவுளைப் புகழ்ந்து துதித்தால் அவர் அருள் செய்வாரென்று நினைப்பவர்கள் இகழ்ந்து பேசினுல் அருள் செய்யாரென்று எண்ணுதது யாது காரணமோ? சைவர் விஷ்ணு ரூபத்தைத் தரிசிக்குங் காலத்தில் எமது சிவபெருமானே இத்திருக்கோலத்தோடிருக்கிறரென்றும், வைஷ்ணவர் சிவனைத் தரிசிக்குங் காலத்தில் எமது பாண்டரங்கனே இத்திருக்கோலத்தோடிருக்கிறரென்றும் மூன்னேர்கள் எண்ணிய படி எண்ணுவார்களேயானுல், வாதும் வம்பும் இல்லாமற்போகும். அவர்களும் மேன்மையை அடைவார்கள்.

விஜயரங்கம்.—ஒரு பதிவிரதை தன் நாயகனைத் தவிர வேறொரு நாயகனைப் பார்க்கச் சம்மதியாததுபோல் தாங்கள் வேறொரு தெய்வத்தைப் பார்க்க மாட்டோமென்று சிலர் இருந்தால் அதுதானு அவர்கள்மேல் தோஷம்? வீணுக அவர்கள்மேல் தோஷம் சற்பிக்கலாமா?

பிரசங்கியார்.—வேறொரு நாயகனைப் பார்க்கக்கூடாதென்றெண்ணுகிறவள் வேறொரு நாயகனை இழந்துபோகவேண்டிய அவசியமில்லையே! தன் நாயகனே வேறொரு உருவத்தோடிருக்கிறனென்றறிந்தபின்னும், அவனை இகழ்ந்தால் அது பழிப்பாகு மல்லது சிறப்பாகாது.

விஜயாங்கம் —அறுவகைச் சமயத்தோர்க்கும் ஆதாரம் வேதமாயிருந்தும் ஒரு சமயி உண்டென்பதை மற்றொரு சமயி அலலவென்று மறுக்க, ஒன்றை யொன்று தழுவாமலிருப்பதன் காரணம் என்ன?

பிரசங்கியார்.—ஐயா! ஒன்றையொன்று தழுவாமலில்லை.

சிவஞான சித்தியார்.—

ஓது சமயங்கள் பொருளுணரு நூல்க ளொன்றேடொன் றெவ்வாமலுள பலவு மிவற்றுள், யாது சமயம் பொருணூலியாதிங் சென்னிலிதுவாகு மது வல்லவெனும் பிணக்கதின்றி, நீதியிலுலிவையெல்லா மோரிடத்தே காண நிற்பதி யாதொரு சமயமதுசமயம் பொருணூ, லாதலிலு லிவையெல்லா மரு மறையாகமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக் கீழடங்கும்.

என்றிருப்பதால், எல்லாச் சமயங்களேயும் தழுவும் ஒரு சமயமும் இருக்கிறதென்று காணப்படுகிறதல்லவா? சமயங்கள் வெவ்வேறு விதமாகச் சொல்வதன் காரணம் யாதெனில்—ஒரு மலேமேலேறிப் பார்க்கப் போன சிலருள் ஒருவன் மலேயடி வாரத்தில் சென்று திரும்பியும், ஒருவன் காற்பங்கு தூரம்சென்று திரும்பியும், ஒருவன் அரைப்பங்கு தூரம் சென்று திரும்பியும், ஒருவன் அதைவிடச் சிறிதுதூரம்சென்று திரும்பியும் இவ்விதம் தங்கள் தங்கள் சக்திச்கேற்க மலேயேறிப்பார்த்து வந்தவர்களும், மலேயுச்சி பரியந்தம் சென்று வந்தவனும், தாந்தாம் பார்த்துவந்ததைச் சொல்லுமிடத்து, அடிவாரத்தில் நின்று வந்தவன் தன் பார்வைக்கு அகப்பட்டதை மாத்திரம் ஒப்புச்கொள்ளுவானேயன்றி மற்றவர்கள் சொல்லுவதை ஒப்புக்கொள்ளான். காற்பங்குதூரம் சென்றுவந்தவன் தான் பார்த்துவந்ததை ஒப்புக்கொள்வதோடு அடிவாரத்தில் நின்றுவந்தவன் சொல்லியதையும் ஒப்புக்கொள்வான். அரைப்பங்கு தூரம் சென்றுவந்தவன் தான் பார்த்து வந்ததோடு தன் கீழ்நின்ற இருவர் சொல்லேயும் நம்புவான். அதுபோல், ஒவ்வொருவரும் தாம் தாம் பாரத்துவந்ததையும் தமச்குக் கீழ் நின்றோர் சொல்லுவதையும் ஒப்புக்கொள்ளுவார்கள். மலேயுச்சி பரியந்தம் சென்று வந்தவனே தான் பார்த்ததையேயன்றி மற்றவர்கள் சொல்வதையுமெல்லாம் ஒப்புக்கொள்ளுவான். அதுபோல், சமயங்களும் ஒன்றையொன்று தழுவியும் தள்ளியுமிருச்கின்றன. அனேக வகுப்புகளேக் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்திற்கு உபாத்தியாயர் ஒருவராயிருந்தா

லும் தம்மிடத்தில் வாசிக்கும் பிள்ளைகளுடைய சக்திக்கேற்க அவர் பாடஞ்சொல்லு முறைபோல், ஆன்மாக்கள் பக்குவத்திற்கேற்க வே தங்களைத் தழுவிப் பல சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அன்றியும், சமயம் என்னும் பதம் காலமென்று பொருள்படுகின்றது. டெளத்த சமயம் என்பது, ஒருவன் பௌத்தனுயிருந்து கடவுளை யாராதிக்குங் காலமென்றும், வைணவ சமயமென்பது ஒருவன் வைணவனுயிருந்து கடவுளை யாராதிக்குங் காலமென்றும், சைவமென்பது, ஒருவன் சைவ னுயிருந்து கடவுளை யாராதிக்குங் காலமென்றும் பொருள்படும். ஆக வே, சகல மதங்களும் ஒரு மனுஷியனே பிறவிகள் தோறும் தன் பரி பக்குவத்திற் சேர்க்க ஜகதீசனை வழிபடுவதற்காக உண்டான வெவ் வேறு காலங்களென்றேற்படுகின்றன. ஆசையால், உலகத்திலுள்ள எல்லா மதங்களிடத்தும் சகோதர வாஞ்சைகொண்டு, நாம் ஒரு காலத் துத் தழுவிய அல்லது இனித் தழுவப்போகும் மதங்களே பிறமதங்க ளென்று கருதுவதுதான் யாவரிடத்தும் ஆன்மநேய வொருமைப்பாடு உண்டாவதற்கேற்ற சாதனமாகும். "மதங்கடொரு னின்ற குருவே!" என்றும், "சமயகோடிகளெல்லாம் தந்தெய்வமென்தெய்வமென்றெங் குந் தொடர்ந்ததிர் வழக்கிடவும் னின்றதெது" என்றும், "சமயக்கட வுள் வேறுவேறின்றி யாஞருவனே அங்கங்கிருந்தன்பர்க்கு முத்தி தரு வித்தென்று யாவர்க்கு மறிவித்த வதனமணியே." என்றும், "பல பல மதமு மீற்றிலொரு வழிப்படலும் போலும்." என்றும், "கல்லி டைப்பிறந்து போந்து கடலிடைக்கலந்த நீத்தம்...துறைதொறும் பரந்த சூழ்ச்சிப் பல்பெருஞ்சமயஞ் சொல்லும் பொருளும் போற் பரந்ததென்றே" என்றும் ஆன்ரோர் கூறிய வசனங்களே இச்கோட் பாட்டுக்குச் சான்ருகும்.

விஜயரங்கம்.—ஐயா! எனக்குற்ற சந்தேகங்கள் நீங்கத் தாங்கள் சருதியுக்தி யனுபவ வாயிலாகச் சமாதானம் சொல்லியதைக்குறித்து நான் நேரில் தங்களைப்புகழ்வது முகஸ்துதியாயிருக்குமென்று அஞ்சுகிறேன்.

பிரசங்கியார்.—ஐயா, நீர் கேட்டவைகளுக்கு சோ-சிவ-அருணகிரி வள்ள லின் அனுக்கிரகத்தாலறிந்ததைச் சொன்னதேயன்றி என்னுடைய வல் லமையால் நான் நூதனமாக ஒன்றும் சொல்லவில்லை.

விஜயரங்கமும் சபாபதிமுதலியாரும் பெரியவரும் பிரசங்கியாரிடம் விடை பெற்றுத் தங்களிருப்பிடமுற்ருர்கள்.

20-ம் அத்தியாயம்.

ஒரு கிராமத்துக் கருகில் பாதையிலுள்ள சிறிய பாலத்தின் சுவரின்மேல் தலையைப் பிடித்துக்கொண்டிருந்த சோமசுந்தரம் நெடுநேரம் மௌன

மாக விருந்து பின் பெருமூச்சுவிட்டு, ஆ! சடவுளே! எனச்கெல்லாத் துன்பமும் ஒன்முகவா வரவேண்டும்! என் தாய்தந்தையர் மருமகளே வதை செய்ததஞல் அதிக துன்பமடைந்து இறந்தார்சளென்று பலர் சொல்லவும் தங்கை சோரம்போசவும், மனைவி வழிப்போச்சனுடன் செல்லவும் நான் உயிரோடிருப்பதிற் பலலென்ன? தங்கை சோரம் போனுளென்றதை என்னுடைய மைத்துனன் வெளிச்சு வராமல் செய்துகொண்டான். ஆயினும், நானே என்னுடைய மனைவியால் நேரிட்ட அவமானத்தை நீக்கிக்கொள்ள வகையில்லாம விருக்கிறேன். இந்தச் சமயத்தில் என்னுடைய நண்பன் விஜயரங்சமிருந்தால் நான் இவ்வளவு துக்சத்தோடிருச்சப் பார்த்துக்கொண்டிரான்! அவனே இன்னும் எங்கு தேடிப்பார்ச்கிறது! நான் பார்ச்சாத இடமில்லையே! என்று துக்கத்தோடு உட்கார்ந்திருந்தபொழுது சரிகை தலேகுட்டை சட்டிக்கொண்டு, பெரிய சொக்காயோடு ஒருவன் அம்மார்க்கம் போவதைக்கண்டு, ஆ!ஆ! இவன் என்னுடைய மனைவியைக்கொண்டுபோன கள்வனுகக்சாணப்படுகிருனே யென்று ஓடி அவனருகிற்சென்று தான் நினைத்தது உண்மையாகக்கண்டு, அடா துன்மார்க்கா! நீ முன்னம் உன்னை அலங்சரித்துக்கொண்டு வந்து ஒரு பெண்பிள்ளையைக்கொண்டுபோனது போதாதென்று இப்பொழுது அலங்சரித்துக்கொண்டு திரிகிருயே! இன்னும் யார் குடியைக்கெடுக்க யோசித்திருக்கிருய்? உன்னைக் கடவுள் இன்னும் தண்டிக்காமல் வைத்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது! என்கையில் முன் நீ அகப்பட்டும் உன்னைக் கொல்லாமல் விட்டேன். இன்றோடு உனச்கு ஆயுள் முடிந்ததால் என்கையில் அகப்பட்டாய். இனி ஒருவருச்கும் உன்னல் தீங்கு உண்டாகாதிருக்க உன்னை முடித்து விடவேண்டியதே! நில், போகதக்க என்று தடுத்தான்.

அன்னியன்.—ஐயா! உமக்கென்மேல் அதிக கோபம் இருக்கிறதாகக் காணப்படுகிறது; காரணம் யதோ தெரியவில்லை!

சோமசுந்தரம்.—அடா துன்மார்க்கா! நீ இரவில் என் மனைவியைக் கொண்டு போனதாலும் அது நெடுநாளாய்விட்டதாலும் நான் உன்னைக் கண்டுகொள்ள முடியாதென்று நினைத்து என்னெதிரில் வந்து, நான் உன்னைக்கண்டு கொண்டதால் வேறுவகை யில்லால் என்னை ஏமாற்றி ஓடிவிடக்காரணங் கேட்கிருய். நீ அதிக தூரத்தில் வரும்பொழுதே உன்னைக்கண்டு கொண்டேன். உன்னை இந்த இலக்ஷணத்தோடு வைத்து வார்த்தையாடாமல் உன் அழகிய பற்கள் உதிர உன்வாயில் அடித்து உன்னழகைக் கெடுத்துப் பின் வார்த்தையாடவேண்டும், (என்று கையை மேலே தூக்கினுன்.)

அன்னிய ர்.—ஐயா ! என் பற்கள் உதிர அடிக்குமளவும், நான் உம்மைப்பார்த்து என் கைகளைச் சும்மா வைத்துச்கொண்டிருப்பேனு ? என் பற்கள் நிலத்தில் சொட்டுண்டுபோகுமுன், உமக்கு அச்சதியாஞல் என்செய்வீர் ? போம் ! போம் ! பெண்சாதியை வைத்தாளச்சக்தியில்லாத உமக்கு இவ்வளவு சோபமிருப்பது அதிசயமாக இருச்கிறது ! (என்று நகைத்தான்.)

அன்னியன்சொன்னதைக்கேட்ட சோமசுந்தரம் தூச்கிய கையைத் தொங்கவிட்டுத் திகைத்து நின்று பெருமூச்செறிந்து, அடாடாதகா ! என்ன சொன்னுய் ? என்னுடைய பெண்சாதியை மோசம் செய்துகொண்டு போனதுமல்லாமல் பெண்சாதியைவைத்தாள வசையில்லாமற்போனேனென்று சொல்லவும் உனக்கு என்ன தைரியம் இருந்தது ? அவரவர்கள் பெண்சாதிகளே யெல்லாம் நீ சொண்டுபோகலாமென்றும் உனக்குப் பெண்சாதியை வைத்தாளுந்திறமை அதிசமிருக்கிறதென்றும் காட்டும் ஆணவம் அழிய இன்று நீ மாளப்போகிறதால், சாகப்போகிறவருக்கு சமுத்திரம் முழங்காலாழமென்பதுபோல் எண்ணி என்னை இழிவாகப் பேசத்துணிந்தாய் போலும் !

அன்னியன்.—நான் ஒருவருடைய வீட்டுக்குப்போய் வஞ்சித்து ஒரு பெண்ணைக் கொண்டுபோகவில்லை. ஆதரவற்றவளாகத் தனித்துப் போகவிட்டவளை அழைத்துக்கொண்டு போனது தப்பிதமா ? நாயகனுல் வைத்தாளத் திறமையில்லாமல் விட்டு விடப்பட்டவளைக் கொண்டுபோய் வைத்தாள்பவன் திறமையுள்ளவனென்றே சொல்லவேண்டும் ! வேண்டாமென்று விட்டுவிடப்பட்டவளைக் கொண்டுபோய் ஆதரிப்பதால் உமக்கு சோபம் வரவேண்டிய நியாயமில்லையே !

சோமசுந்தரம்.—அடா ! நான் வேண்டாமென்றதாலோ, அல்லது ஆளுந்திறமை இல்லாததாலோ ஆதரவற்றவள்போல் போனுள். அவள் உன்னைக்கண்டு வார்த்தையாடியபின் உன்னுடுவரச் சம்மதமில்லாமலிருந்தபோது அவளை அழைத்துக்கொண்டுபோய்ச் சற்பைக்கெடுத்தது தப்பிதமென்று உனச்குக் காணப்படவில்லையா ?

அன்னியன்.—சற்பைக் கெடுக்க எண்ணங்கொண்டு வலுவந்தம் செய்யவில்லையே !

சோமசுந்தரம்.—அடா ! நீ உன்னைமறந்து பேசுகிறுய் ! நீ அவளைக்கண்டு இச்சித்து வார்த்தையாடியபொழுது அவள் சொல்லிய நீதிகளைக் கேட்டுவிட்டுவிடாமல், அவள் மயங்கி உன்வலையில் சிக்க ஏதோ ஓர் மந்திரத்தை அவள் காதில் ஓதி வசியப்படுத்தினுயே ! இதைவிடக் கெட்டதும் உலகில் உண்டா ?

அன்னியன்.—அவள் காதில் ஓதிய மந்திரத்தை உம்முடையகாதில் ஓதினுல் நீரும் வசியமாவீரென்பதற்குச் சந்தேசமில்லை. வீணில் நீரும் என்னி

டத்தில் வசியப்பட்டு நான்சொல்வதைச் செய்துகொண்டிராமல் தப்பித் தோம் தப்பித்தோம் என்று ஓடிப்பிழைத்துப்போம். (என்று நகைத் தான்.)

சோமசுந்தரம்.—அடா பாதகா! என்னசொன்னாய்? என்னையுமா வசியப் படுத்திவிடுவாய்! சபாஷ்! நன்றாயிருக்கிறது! என்னை வசியப்படுத்து முன் உன்னை முடித்துவிடுகிறேன் பார். (என்று நெருங்கினான்.)

அன்னியன்.—என்னோடு போர்புரிய உமக்கிஷ்டமிருந்தால் நான் உம்மு டைய மனைவியைக் கொண்டுபோனது குற்றமென்று நீர் நிரூபித்தபின் உம்முடைய இஷ்டம்போல் செய்யலாம். குற்றத்தை அறியுமுன் என் னோடு போர்புரிந்து நீர் மரணமடைந்தால் நான் வீண்பாவத்திற்கு உள் ளாகவேண்டும். அவ்விதம் முடிய இடங்கொடுக்கவேண்டாம்.

சோமசுந்தரம்.—அடா! நீ கொடிய துன்மார்க்கன்! என்மனைவியைக் கொண்டுபோனது போதாதென்று என்னை அவமானப்படுத்திப் பேசுகி றாய்! ஒருவனுடைய மனைவியைக் கொண்டுபோனது குற்றமென்று இன் னும் உனக்குத் தெரியவில்லையா?

அன்னியன்.—மாமன்மாமி கையால் மாளப் பார்த்தும் நாத்தியால் கல்லடிபட் டும் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டுத் தனிவழியாகப் போனவளைக் கொண்டுபோய் வைத்துக்கொண்டிருப்பது குற்றமா? அவள் இறந்தால் உத்தமமென்று எண்ணியிருந்த உம்மிடம் விட்டிருப்பது குற்றமா?

சோமசுந்தரம்.—என்மனைவியை என்னிஷ்டம்போல் நடத்த எனக்கெல் லாச் சுதந்தரமுமிருக்கிறது. அது விஷயத்தை நீ கேட்கவேண்டிய அவசியமில்லை.

அன்னியன்.—பெண்சாதியின்மேல் புருடனுக்கு எல்லா அதிகாரமுமிருக்கிற தென்று அவளைப் புருடன் கொன்றால் துரைத்தனத்தார் சும்மாவிட்டு விடுவார்களா?

சோமசுந்தரம்.—துரைத்தனத்தாரைப்போல் நீ எல்லா அதிகாரத்தையும் பெற்று இந்தக் கேள்விகளைக் கேட்கிறாய்?

அன்னியன்.—இது விஷயத்தைச் சாதாரணமாய் யாவரும் கேட்கத்தகுந்ததே யாயினும் நான் கேட்பது நியாயமென்றே நினைக்கிறேன்.

சோமசுந்தரம்.—மறுநாள்மணிக்கு நீ இரண்டாவது நாயகனுக ஏற்பட்டதால் நீ கேட்பது நியாயமென்று நினைத்தாய்போலும்!

அன்னியன்.—ஆம்! அதற்குச் சந்தேகமில்லை.

சோமசுந்தரம்.—அடா துன்மார்க்கா ! உன்னோடு வார்த்தையாடிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. என் மனைவியைக்கொண்டுபோய் என்னை அவமானத்தில் அழுத்திய பழியை முதல் வாங்கவேண்டும். (என்று நெருங்கினான்.)

அன்னியன்.—உமது மனைவி வேறொருவருக்குப் பிறந்தவள். அவளைக்கொண்டு போனவிஷயத்தில் உமக்குமானம் உண்டாகிப் பழிவாங்கவந்தீர். உம்மோடுபிறந்த தங்கை நீலதவறினாளே ! அதனால் உமக்கு அவமானம் வரவில்லையா ? அவள் கற்பைக் குலத்தவனிடம் பழிவாங்கிவிட்டீரா ?

சோமசுந்தரம்.—இதென்ன அநியாயமாக இருக்கிறது ! இந்தத் துன்மார்க்கனுக்கு எல்லா இரகசியமும் தெரிந்திருக்கிறதே ! அடா சண்டாளா ! இந்த சமாசாரங்களையெல்லாம் எவ்விதம் அறிந்தாய் ? என்னுடைய இரகசியங்களை அறிந்துகொண்டால் அது சமயத்தில் உன் உயிரைக்காப்பாற்றும் என்றே நினைத்தாய் ? அந்த எண்ணம் கைகூடாது. என்னுடன் எதிர்த்து நின்று போர்புரிய இஷ்டமிருந்தால் வா. (என்று கையைப் பற்றி இழுக்க எத்தனித்தான்.)

அன்னியன்.—நீர் அவசரப்படவேண்டாம். மனைவி போனபின் உயிரைத் துரும்பாக மதித்துவிட்டீர்போல் காணப்படுகிறது. ஒருசொல்லால் உம் முடைய கைகால்கள் ஆடவொட்டாமல் செய்துவிடுவேனென்பதை இன்னும்அறியாமலிருக்கிறீர். உமக்கென்றோடு போர்புரிய இஷ்டமுண்டானது உண்மையாவென்று நன்றாய் யோசித்துத் துணிவீராக. வீணில் அவமானம் அடைவீர்.

சோமசுந்தரம்.—அடா பாவி ! நீ வீண்வார்த்தையாடிக் காலதாமதம் செய்கிறாய். நீ என்றோடு போர்புரியப் பயங்கொண்டிருப்பது நன்றாய்த்தெரிகிறது. உன்னை உயிரோடுவிட்டால் அனேக குடும்பங்களைக் கெடுத்துவிடுவாய். உன்னைக்கொன்று பழிவாங்குகிறேன் பார். (என்று தூரத்தில் நின்ற அன்னியன் சொக்காயைப்பற்றி இழுத்தான்.)

அன்னியன்.—ஐயா ! நான் எவ்வளவுசொல்லியும் கேளாமல் நெருங்கிவிட்டீர். நீர் ஒரு சுத்தவீரனாயிருப்பது மெய்யானால் நானிருக்கும் ஆடையோடு போர்புரிய எதிர்பார்க்கமாட்டீர். நான் ஜல்லடம்போட்டுக் கச்சைகட்டி வந்தபின் போர்புரிதல் உத்தமம். உண்மையாக என்றோடு நின்று உம்முடைய வல்லமையைக்காட்ட இஷ்டமிருந்தால் என்றோடு சமீபத்திலிருக்கும் என் சினேகன் வீட்டுக்குவந்தால் உம்மோடு சமர்செய்யத் தடையில்லை.

சோமசுந்தரம்.—அடா துன்மார்க்கா ! நானும் உன்றோடு யுத்தம்செய்ய நேரிடுமென்று அறிந்திருந்தால் யுத்தகோலமாய் வந்திருப்பேன். நான் அவ்விதம் வராமற்போனாலும் தோஷமில்லை. நீ உன்னிஷ்டப்படி யுத்த

கோலங் கொண்டுவரலாம். உன் சினேகனுடைய வீட்டுக்கு வரத் தடையில்லே. ஆயினும் அந்த துன்மார்க்கியைப் பார்க்கும்படியான இடத்திற்கு அழைத்துப் போகவேண்டாம். அவளைப்பார்க்க எனக்கிஷ்டமில்லே.

அன்னியன்.—மாமி மாமன் நாத்தி இவர்களால் சதா துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்த மனேன்மணியைப் பார்த்துத்துக்கப்பட்டிருந்த நீர் அவள் ஒருவரிடத்தும் துன்பப்படாமல் சந்தோஷத்தை அனுபவித்துக்கொண்டு கர்ப்பத்தோடிருப்பதைப் பார்த்து நீரும் சந்தோஷமடையாமல் அவளைப் பார்க்க இஷ்டமில்லேயென்று சொல்லுவது நியாயமா ?

சோமசுந்தரம்.—அடா சண்டாளா ! அப்பாதகி கற்பழிந்ததோடு கர்ப்பமாகவும் இருக்கிறளென்று எனக்குத் தெரிவித்து மேலும்மேலும் எனக்குக் கோபத்தை மூட்டுகிறாய். குறும்பாகப்பேசும் உன் கர்வத்தை அடக்கிச் சித்திரவதை செய்து உன்னைக் கொல்லவேண்டும். எங்குபோக உனக்கிஷ்டம் வா. (என்று முன் நடந்தான்.)

அன்னியன்.—ஐயா ! சாவுக்குத் துணிந்து என்னோடு வரப் பிரியங்கொண்டீர். வாரும் போகலாம். (என்று அழைத்துச் சமீபத்திலிருந்த வீட்டுக்குள் நுழைந்து உமக்கென்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.)

சோமசுந்தரம்.—அடா பாதகா ! இன்னும் காலதாமதம் செய்து கொண்டிராமல் நீ இறக்க வேண்டியதற்குத் துரிதப்படு. ஒரு விநாடியில் உன்னைக் கொன்று ஜெயமடையப் போகிறேன்.

அன்னியன்.—நீர் ஜெயமடையப்போகிறதும் நான் ஜெயமடையப்போகிறதும் பின் அறியவேண்டியதேயன்றி அது விஷயத்தில் அதிக நம்பிக்கை கொள்வது உசிதமல்ல. நீர் இறக்குமுன் உம்முடைய மனேவியைப் பார்க்க இஷ்டமிருந்தால் வரவழைக்கிறேன்.

சோமசுந்தரம்.—உன் ஏளனத்திற்கு இன்னும் இடங்கொடுத்துக் கொண்டிருக்க மாட்டேன். மறுவார்த்தையாடாமல் விரைவில் சித்தமாகுக.

அன்னியன்.—நான் உம்மை ஏளனம் செய்கிறதாக எனக்குக் காணப்படவில்லே. உம்முடைய இஷ்டம்போல் செய்வேன். நீரும் நானும் போர்புரிந்தால் யார் ஜெயங்கொள்ளுவாரென்று நினைக்கிறீர் ?

சோமசுந்தரம்.—நானே ஜெயங்கொண்டு உன் கர்வத்தை அடக்கப்போகிறேன். அது விஷயத்தில் உனக்குச் சந்தேகம் வேண்டாம்.

அன்னியன்.—ஐயா ! நான் உம்மோடொத்த பலசாலியல்லவென்று எண்ணியதால் நீரே ஜெயங்கொள்ளுவீரென்று சொல்லத் துணிந்தீர். தன்னோடொத்த பலசாலியல்லவென்று மதித்த ஒருவனோடு போர்புரிய எண்ணங்கொள்வது சுத்த வீரர்களுக்கு அழகாகுமா ?

சோமசுந்தரம்.—அடா ! தன்னோடொத்த பலசாலியாயிராத ஒருவன் உலகில் கெடுதியைச் செய்துகொண்டிருக்கக் கண்டால் அவனைக்கொல்ல வேண்டியதே கடமை. அற்ப ஜந்துவாகிய தேள் பாம்பு முதலியவைகள் ஒருவருக்குக் கெடுதி செய்யாமலிருந்தாலும் அவைகள் கெடுதிசெய்யுமென்ற எண்ணங்கொண்டு கொன்று விடுகிறார்கள். எனக்குக் கெடுதியைச் செய்த நீ என்னோடொத்த பலசாலியல்லவென்று நான் எண்ணினாலும் உன்னைக் கொல்லவேண்டியதே முறைமை.

அன்னியன்.—ஐயா ! நீர் என்னை இன்னாரென்றறியாமல் உம்முடைய பலத்தால் என்னை வென்றுவிடலாமென்று தீர்மானப்படுத்திவிட்டீர். தன்னையறியாதாரிடத்தில் தன்னுடையவல்லமையைச்சொல்லலாமென்று விதியிருப்பதால் என்னுடைய வல்லமையைச் சொல்லுகிறேன். நன்றாய்க் கவனித்துக்கேளும். நான் சிறுபொழுதில் சிலம்பத்திற் பழகி பட்டா, கோப்டா, தடி, செடி, மாடி முதலியவைகளில் கைதேறியும், குஸ்தியில் அனேகரை வென்றும் தோடாக்கள் பெற்றிருக்கிறேன். என்னோடெதிர்த்துச் சண்டை செய்ய ஒருவரும் துணியார்கள். நான் ஜல்லடம் போட்டுக் கச்சைகட்டி கிற்பேனுகில் யாவரும் பயப்படுவார்களென்றால் நீர் எம்மாத்திரம் ! வீணில் அவமானப்பட்டுப் போகா முன்னம் ஓடிப்போகிறது உமக்கழகு. மறந்து செத்தேன், உயிரே ! வாவென்றால் உயிர் வருமா ? அவமானம் அடைந்தபின் அதை நீக்கிக்கொள்ளமுடியாது. ஆனதால் நான் சொல்லும் புத்தியைக் கேட்டால் உமக்கு அனுகூலமாயிருக்குமென்று நம்புகிறேன். (என்று நகைத்தான்.)

சோமசுந்தரம்.—அடா காதகா ! உனக்குச் சிரிப்பும் ஒரு கேடா ? நீ என் விஷயத்தில் செய்த குற்றத்திற்காக நான் உன்னைக்கொல்ல வந்திருக்கிறதால் என்னைப் பயங்காட்டி ஓட்டிவிடப் பார்க்கிறாய். நீ விரைவில் சித்தமாகாமற்போனால் உன்னை உன் உடுப்போடுவைத்தே கொல்லுவேன்.

அன்னியன்.—ஐயா ! உம்முடைய மனைவியை ஒருவனுக்குக் கொடுத்துவிட்டால் வந்த அவமானம் போதாதென்று என்னோடு போர்புரிந்தும் அவமானம் அடையவேண்டுமென்று பிரமன் உமது தலையிலெழுதியிருந்தால் அது விட்டுப்போக நியாயமில்லை. உமது மனைவி கர்ப்பமாய் இருக்கிறாளென்று கேள்விப்பட்டதே உமக்கு அதிக வியசனத்தை உண்டுபண்ணிவிட்டது. சர்ப்பம் இல்லாமற்போனால் என்னைச் சமாதானப்படுத்தி மனோன்மணியை அழைத்துக்கொண்டுபோய் விடுவீர். அது தப்பியதால் உமக்கு இத்தனைநாள் இல்லாதிருந்த வல்லமை இன்று மூளைத்தது. (என்று சொல்லிக்கொண்டே சொக்காவின் நாடாவை அவிழ்த்துக்கொண்டிருந்தான்.)

அன்னியன் சொல்பவைகளையெல்லாம் கேட்டுச் சகிக்க முடியாமலிருந்த சோமசுந்தரம் கடுங்கோபங்கொண்டு, அடாதோஷி ! இன்னமும் உன்னைப் பேசவிட்டுக் கேட்டிருப்பது தகாதென்று முகத்திற் குத்தினான். அன்னியன் அக்குத்து முகத்திற்படாமல் தலையைத் தாழ்த்தியதில் குத்து தலைகுட்டையிற்பட்டு தலைகுட்டையும் மீசையும் கீழே விழுந்தன. அன்னியன் சொக்காயை அவிழ்த்தெறிந்தான். சோமசுந்தரம் திகைத்து நிற்பதைக் கண்ட அன்னியன் எங்கு ஓட வழிபார்க்கிறீர் ? வாரும், ஒரு கைபார்க்கலாமென்றான். சோமசுந்தரம் நகைத்து, சிந்தாமணி ! இதென்ன வேஷம் ? உன்னைக் கண்டுகொள்ள முடியாமற் போனதே ! என் பிரிய மனோன்மணி எங்கே ?

அத்தருணத்தில் எதிரிலிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டு மனோன்மணி ஓடிவந்து சோமசுந்தரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, அத்தான் ! என்மேல் இவ்வளவு கோபங்கொள்ளலாமா வென்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். சோமசுந்தரம் மனோன்மணியைத் தழுவி முகத்தோடு முகம் வைத்து, என் நவமணி ! உன் நடத்தையைக் குற்றமாக எண்ணிக் கோபித்ததற்கு என்னை மன்னிக்க வேண்டுமென்று வேண்டினான். தன் நாயகனைவிட்டு அன்னியனோடு சென்றவர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று சிரித்துக்கொண்டே ஒரு பெண் அறையிலிருந்துவருவதையும் அவளோடு இருவர் பின்தொடர்வதையும் சோமசுந்தரம் கண்டு மனோன்மணியை விட்டு, அம்மா கமலாக்ஷி ! நீ எப்படி இங்கு வந்தாய் ? உன்னோடிருக்கிறவர்கள் யாரென்று கேட்டான்.

கமலாக்ஷி.—அண்ணா ! நானும் என் தங்கை மரகதமும் என் சிறிய தாயார் தாயாரம்மாளும் என் தமையன் சொக்கலிங்கமுதலியாரும் ஊருக்கு வண்டியிலேறிப் போனவர்கள் இவ்விடம் வரும்பொழுது வண்டிச் சக்கரத்தின் கட்டு விழுந்து விட்டதால் சொக்கலிங்கத்தண்ணன் எங்களை இவ்விடம் விட்டுச் சக்கரத்துக்குக் கட்டுப்போட்டு வருவதாகப் போயிருந்தார். நான் நின்றிருந்ததைப் பார்த்த மனோன்மணி எங்களை அழைத்து வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது தாங்களும் இந்தத் தலைப்பாகட்டியும் தூரத்தில் வருவதைப் பார்த்துப் பெரிய வேடிக்கை யொன்று நடக்கப்போகிறது, நாம் ஒளிந்திருந்து பார்க்கலாமென்று மனோன்மணி எங்களை அறைக்குள் விட்டுச் சந்தோஷத்தில் பூரித்திருந்தாள். நீங்களிருவரும் பேசும்பொழுது எனக்குப் பயமாயிருந்தது. ஏதாகிலும் கெடுதி நேரிடுமோ ? என்றதற்கு ஒரு கெடுதியும் நேரிடாது, தன்னுயகனோடு வருகிற தலைப்பாகட்டி ஆண்பிள்ளையல்ல, தன் தமக்கை சிந்தாமணியே, ஆண்பிள்ளை வேஷத்தோடிருக்கிறாளென்று மனோன்மணி

சொல்லியிருந்தாள். ஆனதால், இந்தத் தலைப்பாகட்டியை விடக்கூடாது. தலைப்பாகையையும் விழுந்துபோன கள்ள மீசையையும் எடுத்து வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். (என்று நகைத்தாள்.)

சிந்தாமணி.—மனோன்மணி! நான் அத்தானோடு சண்டை போடப்போகிறேன். என் ஜல்லடம் கச்சை முதலியவைகளை விலைவில் கொண்டுவா. அத்தான்! குஸ்திக்கு நிற்கலாமா? பட்டாவோடு நிற்கலாமா? என்னசெய்யலாம்? விலைவில் சொல்லுங்கள். தங்களை ஒடவிடமாட்டேன். என்னை ஜெயங்கொள்ள முடியுமென்ற தீரத்தைப் பார்க்கவேண்டும். (என்று நகைத்தாள்.)

சோமசுந்தரம்.—தன்னோடொத்த பலசாலியல்லவென்று கண்டபின்னும் உன்னோடு போர்புரிதல் அழகாகாது. ஆனதால், அதை நிறுத்தி நீ இவ் வேஷத்தோடு வெளிப்பட்டதற்குக் காரணம் யாது? என்னிடத்தில் உண்மையைச் சொல்லாமலிருந்ததன் கருத்தென்ன? இந்த மீசையை எங்கு சம்பாதித்தாய்?.இவைகளைச் சொல்லவேண்டும். (என்று கேட்டு நகைத்தான்.)

சிந்தாமணி.—நான் உடுப்பைக் கழற்றி ஜல்லடம்போட்டுக் கச்சைகட்டி வந்தால் யாவரும் பயப்படுவார்களென்றேன். நான் உடுப்பு கழற்றியவுடனே என்னைப்பார்த்துப் பயந்து சமாதானமாய்ப்போனீர்கள். தாங்கள் எப்பொழுது தலைக்குட்டை தட்டப்போகிறீரென்றே பார்த்திருந்தேன்.

சோமசுந்தரம்.—தலைக்குட்டை விழுந்தால் அதனோடு கட்டியிருந்த மீசையும் விழும். அத்தருணத்தில் சொக்காயை எடுத்தெறிந்து எககாலத்தில் என்னைப் பிரமிக்கச் செய்யலாமென்று இந்த யோசனை செய்திருந்தாய்? நான் கேட்டதற்குப்பதில் ஒன்றும் சொல்லவில்லையே! அது விஷயத்தில் ஏதாகிலும் இரகசியம் உண்டா?

சிந்தாமணி.—இரகசியம் ஒன்றுமில்லை. என்னுடைய நாயகன் எப்பொழுதும் தேவடியாள் வீடேகதியென்றும், தன் பெயரிலிருந்த நிலத்தையெல்லாம் அடைமானம்வைத்துத் தேவடியாளுக்குத் தூலைத்துவிட்டபின் என்னிடத்திலிருக்கும் நகைகளைக் கேட்டும் நான் கொடுக்காமற்போனதால் என்னை அடிக்கடி அடித்துத் தொந்தரைசெய்து அகப்பட்ட ஒன்றிரண்டைக் கொண்டுபோவதுமாக இருந்தார். நான் அவர் இஷ்டம்போல் என்னிடத்திலிருக்கும் நகைகளைக்கொடுக்காமலிருந்ததால் என்னைக் கொன்று யாவையும் கைக்கொள்ள எண்ணங்கொண்டிருந்ததை யறிந்தேன். என் தமையன் சிவப்பிரகாசமுதலியார் இருந்தால் அவருடைய ஆதரவிலிருக்கலாம். அவர் இல்லாமற் போய்விட்டதால் இனி அவ்

விடத்திலிருப்பது எனக்குக் கெடுதியாக முடியுமென்று என்னிடமிருந்த ஆபரணங்களைக் கைக்கொண்டு என் சொந்தவீட்டை அன்னியரிடத்தில் ஒப்பித்து மனோன்மணியோடு போயிருக்கலாமென்று வரும்பொழுது, மனோன்மணியை மாமனரும் மாமியாரும் அதிக தொந்தரை செய்து வந்தார்களென்று சிலரால் கேள்விப்பட்டு, துன்பமடைந்து கொண்டிருப்பவளுக்குப் பாரமாகப்போகக்கூடாதென்று நினைத்துத் தங்கள் தங்கை இருக்கும் ஊருக்கும் போகலாமென்பதாக உத்தேசித்துப்போகும்பொழுது மார்க்கத்தில் நான் தனித்துச்செல்வதைக் கண்ட சில துன்மார்க்கர் என்னை அடுத்துக் குறும்பாக வார்த்தையாட அவர்களைக் கண்டித்துத் துரத்தியபின், பகல் வேஷக்காரன் ஒருவனை மார்க்கத்தில் கண்டு அவனிடம் மீசையையும் தலைக்குட்டையையும் விலைக்கு வாங்கி ஆண்பிள்ளை வேஷம் போட்டுத் தங்கள் தங்கை இருக்கும் வீட்டுக்கருகில் வரும் பொழுது, காளியாயி அம்மாள் வீட்டுக்கு வெளியில் நிற்பதைக்கண்டு பார்த்துக்கொண்டே போனேன். அம்மார்க்கம்போன வாலிபனொருவன் என்னைப்பார்த்து, ஐயா! நீரும் காளியாயி வலையிலகப்பட்டுக் கொண்டீரா? என்று கேலியாகப் பேசிக் காளியாயியின் நடத்தையையெல்லாம் தெரிவித்தான். நான் அவளோடு போயிருக்க மனம் கொள்ளாமல் வேறொரு இடத்தில் வசித்திருந்தேன். சில மாதங்களுக்குப்பின் காளியாயி அம்மாள் என் பார்வையிலகப்படாதனைக் கண்டு விசாரித்ததில் அவள் தன் தாய் வீட்டுக்குப் போய் அங்கு மனோன்மணியை வதைத்துக் கொண்டிருக்கிறளென்று கேள்விப்பட்டு மனோன்மணியைப் பார்த்து வருவதே உத்தமமென்று வரும்பொழுது, புதுவூர் சாலையில் மனோன்மணி தனித்துப் போவதைக்கண்டு ஆச்சரியமடைந்து அவள் தனித்துப் போகுங்காரணம் அறிய நெருங்கி வார்த்தையாடிய காலத்திலே அவள் என்னை ஒரு அன்னியனெனமதித்து வார்த்தையாடினள். நான் யாரென்றும் நான் எதற்காகப்போகிறேனென்றும் என்கருத்தை அவள்காதில் இரகசியமாகச் சொல்லியபின் நடந்தது யாவும் தாங்கள் அறிந்ததே. தங்களுக்கென் இரகசியத்தைத் தெரிவித்தால் எங்களைக் கட்டாயப்படுத்தி வீட்டுக்கு அழைத்துப்போவீர்: நான் இருந்த கோலத்தோடு தங்களோடுவராமல் பின்னின்றால் மனோன்மணியின் துக்கத்தை ஆற்ற வழியில்லையேயென்று நினைத்து, தாங்கள்கொண்ட எண்ணத்தோடு போகவிட்டால் மனோன்மணி துன்பமில்லாமல் என்னோடு சிலநாள் இருக்கக்கூடுமென்றெண்ணி மனோன்மணிக்குத் தைரியம் சொல்லி அழைத்துவந்தேன்.

சோமசுந்தரம்,—மனோன்மணி! என் தாய் தந்தை தங்கை செய்த கொடுமைகளையெல்லாம் அநேகநாள் சகித்திருந்து நான் வீட்டிலிராத காலத்தில் நீ வீட்டைவிட்டுவரலாமா?

மனோன்மணி.—ஐயோ! வீட்டைவிட்டுப்போகமாட்டேனென்று இருந்த என்னைப் புறக்கடைவாயில்வழியாக வெளியில் தள்ளிக்கொண்டுபோய் விட்டுக் கற்களை மச்சி கையில் எடுத்துக்கொண்டு, வந்தால் அடிப்பேன் பார் என்று கின்றார்கள். நான் அதற்கும் அஞ்சாமல் வருவதைக்கண்டு பெரியகல்லால் அடித்தார்கள். அந்த அடியைப்பட்டு, இனி வீட்டுக்குள் நுழைய வொட்டார்கள், எங்குபோகிறதென்று அழுதுகொண்டு போகும் பொழுது அக்காளைக்கண்டு இங்குவந்திருக்கிறேன்.

சோமசுந்தரம்.—என்தங்கையை நான் தூஷிப்பது நியாயமல்ல. மனோன்மணி சோனபின் என்னிடம்வந்து பரிதாபப்பட்டுப்பேசினாள். என் தாய்தந்தை சமாசாரங்கள் ஏதாகிலும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

மனோன்மணி.—ஒன்றும் கேள்விப்படவில்லை. நான் வீட்டைவிட்டு வந்தபின் யாவரும் எனக்காகத் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களென்று தானே தாங்கள் சொல்லப்போகிறீர்கள்.

சோமசுந்தரம்.—உன்விஷயத்தில் செய்தகொடுமைகளையெல்லாம் கினைத்து நீண்டகாலம் துக்கப்படாமல் மூவரும் இறந்தார்கள்.

மனோன்மணி.—என்னசொன்னீர்கள்! ஐயோ! நான் இனி என்னசெய்வேன்! தெய்வமே! நான் இந்த வயதில் மாமியார் மாமனார் நாத்தனார் இவர்களைக் கொடுத்துவிட்டு, நான் உயிரோடு இருக்கலாமா! ஐயோ! தெய்வமே! அவர்கள் முடிவுகாலத்தில் நானிருந்து பணிவிடைசெய்யக் கொடுத்துவைக்காத பாவியானேன்! ஐயோ மச்சி! நான்வீட்டைவிட்டு வந்தவுடன் எனக்காப் பரிதாபப்பட்டுப்பேசியதாகச் சொன்னார்களே! என்மேல் உள்ளுக்குள் அன்புகொண்டிருந்ததை அறியாமற்போனேனே! (என்று முகத்திலறைந்துகொண்டு கண்களில் நீர் தாரைதாரையாக வடியக் கதறினாள். விழுந்துகடகடவென்று புரண்டாள்.)

சிந்தாமணி கமலாக்ஷி தாயாரம்மாள் மரகதம் இவர்களெல்லாம் மனோன்மணியைத்தூக்கி அவள்கொண்ட துக்கம் நீங்கப் பலவற்றைச் சொல்லியும் மனோன்மணி கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிந்துகொண்டிருக்கச் சோமசுந்தரம் தன்மனைவி உண்மையாகத் துக்கப்படுவதைக்கண்டு அதிசயமடைந்து இவ்விதமும் பெண்கள் இருப்பார்களா? அவர்கள் நாளெல்லாம் பெருங்கொடுமையைச் செய்துகொண்டிருந்தும் அவைகளைச் சிறுதுமெண்ணுமல் வருந்துகிறளே! என்று தன் மனைவியைப்பார்த்து, மனோன்மணி! அவர்கள் உன்விஷயத்தில் செய்த கொடுமைகளை எண்ணிப்பாராமல் அவர்களுக்காகத் துக்கப்படுகின்றனையே! அது என்னகாரணம்? கொடுமையைச் செய்தவர்கள்

இறந்தால் சந்தோஷமடைகிறது உலகவழக்கமாக இருக்கக் கொடுமை செய்தவர்களுக்காகத் துக்கப்படுவது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதன்றோ.

மனோன்மணி.—எல்லாம் அறிந்த தாங்களும் இவ்விதம் சொல்லலாமா? அற்பஜந்துக்களைக் கண்ட சிறுவர்கள் அவைகளை அடித்தால் அவைகளுக்கு வாதனையாயிருக்கு மென்பதை நினையாமல் விளையாட்டாக அடித்துச் சந்தோஷப்படுவதுபோலவும், பிள்ளைகள்மேல் அதிக அன்புள்ளவர்கள் பிள்ளைகளை அடித்தும் கடித்தும் கிள்ளியும் அதனால் வாதனைப்பட்டு அழுகிற குழந்தைகளின் வருத்தத்தைக் கவனியாமல் ஆனந்தமடைவது போலவும், என் மாமன், மாமி, மச்சி என் விஷயத்தில் செய்தார்களே யன்றி வேறு எண்ணங்கொண்டு செய்ய யாதொரு காரணமும் இல்லையே! (என்றழுதாள்.)

மனோன்மணியின் நற்குணத்தைக் கண்ட யாவரும் சந்தோஷப்பட்டு அவளுடைய துக்கத்தை மாற்ற வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சொக்கலிங்கம் வீட்டுக்குள் வந்து, அம்மா கமலாக்ஷி! வண்டி சித்தமாயிருக்கிறது. பிரயாணப்படவில்லையா? என்றான்.

கமலாக்ஷி.—அண்ணா! இந்த அண்ணன் எங்களூரிலிருந்து வந்திருக்கிறார். அவர் சில தினத்தில் ஊருக்குப்போக நேரிடுமென்று நினைக்கிறேன். தாங்கள் உத்தரவு கொடுத்தால் இவர்களோடு சென்று என் தாயாரைப் பார்த்து வருகிறேன்.

சோமசுந்தரம்.—ஆம் ஐயா! நான் நாளையே என் ஊருக்குப்போக யோசித்திருக்கிறேன். தங்களுக்குச் சம்மதம் இருந்தால் கமலாக்ஷியம்மாளை அழைத்துப்போகத் தடையில்லை. பெண்கள் துணையும் இருக்கிறது.

சொக்கலிங்கம்.—ஐயா! கமலாக்ஷியம்மாளை நான் அழைத்துப்போய் விட்டு வராமல் அனுப்பி விடுவது நியாயமல்ல. நான் இன்னும் சில தினத்தில் அழைத்து வருகிறேன். தங்களுடைய பெயர் தெரிந்திருந்தால் தங்களையும் பார்த்துவர அனுகூலமாயிருக்கும்.

சோமசுந்தரம்.—என் பெயர் சோமசுந்தரம்.

சொக்கலிங்கம்.—அம்மா கமலாக்ஷி! வைத்தியர் சொல்லிக்கொண்டிருந்த சோமசுந்தர முதலியாரா?

கமலாக்ஷி —ஆம் அண்ணா! இந்த அம்மாள் அவருடைய மனைவி. அந்த அம்மாள் கொழுந்தியாள்.

சொக்கலிங்கம்.—ஐயா! தங்கள் ஊரிலிருந்து வந்த வைத்தியரால் தங்களைக் குறித்து அதிகம் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் மயிலாபுரிக்கு வந்தவுடன் தங்களை வந்து பார்க்கிறேன்.

சோமசுந்தரம்.—தங்களை அவ்விடத்தில் பார்க்க அதிக சந்தோஷமாக இருக்கும். கமலாக்ஷியம்மாள் தங்கள் வீட்டுக்கு எப்பொழுது வந்தார்கள்?

சொக்கலிங்கம்.—ஏறக்குறைய ஒரு மாதம் இருக்கலாம்.

சோமசுந்தரம்.—கமலாக்ஷியம்மாள் இவ்விடம் வந்திருக்கிற சமாசாரம் எனக்குத் தெரியாது. அம்மா கமலாக்ஷி! நீ உன் தாயாரை விட்டுத் தனியாய் வந்த காரணம் யாது? உன் தாயாரையும் பெரியவரையும் ஒரு விநாடியும் விட்டுப் பிரிந்திருக்கமாட்டாயே?

கமலாக்ஷி.—ஆம் அண்ணு! அந்த சமாசாரத்தைத் தங்களுக்குச் சொல்ல வேண்டியது அவசியமாதலால் நாம் தனித்துப் பேசவேண்டும்.

என்று சோமசுந்தரத்தையும் சொக்கலிங்கத்தையும் வேறிடத்திற்கு அழைத்துப்போய்த் தனக்கு நேரிட்டதும், காத்தனும் சாத்தனும் வண்டியிற் பேசியதும், விஜயரங்கம் தன் தாய் தந்தையை விட்டு நீங்க நேரிட்ட காரணத்தைத் தான் கேட்டிருந்ததும் சொல்லி, அண்ணு! தங்களால் ஒரு பெரிய காரியம் முடியவேண்டியதாயிருக்கிறது என்றாள்.

சோமசுந்தரம்.—அம்மா! என்னாலாக வேண்டியதைச் சொன்னால் செய்ய யாதொரு தடையுமில்லை.

கமலாக்ஷி.—தாங்கள் காத்தனையும் சாத்தனையும் கண்டுபிடித்து அவர்களைக் கைவசப்படுத்தி அவர்களால் நாம் அறியவேண்டியதை அறிந்து கொள்ள வேண்டியதே.

சோமசுந்தரம்.—அம்மா! அந்த இரகசியம் வெளிக்குக் கொண்டுவர என்னுடைய ஆஸ்தியெல்லாம் செலவாகிறதாயிருந்தாலும் நான் பின் வாங்க மாட்டேன். விஜயரங்கத்தின் சமாசாரம் எதாகிலும் கேள்விப்பட்டால் எனக்குத் தெரிவிக்கவேண்டும்.

கமலாக்ஷி.—அதுபோலவே செய்வேன். தாங்கள் ஊருக்குப்போனவுடன் எனக்கு நடந்தவைகள் யாவும் என் தாயாரிடத்தும் பெரியவரிடத்தும் பிரஸ்தாபித்து நான் உயிரோடிருப்பது இன்னும் சிலநாள் வெளிவராமலிருக்க வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

21-ம் அத்தியாயம்.

மயிலாபுரிக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்துக்குப் போகிற வண்டியொன்று நிறுத்தப்பட்டு, இரத்தினமும் மாணிக்கமும் வண்டியிலிருந்திறங்கியவுடன், நாம் வண்டியிற்போவதைவிட்டு இறங்கிப்போக வேண்டிய காரணமென்ன வென்று மாணிக்கம் இரத்தினத்தைக் கேட்டான்.

இரத்தினம்.—நான் மதனரஞ்சனியைக் குறித்துப் பேசும்பொழுது யாதொரு தடையும் உண்டாகாதிருக்கவேண்டுமென்றும், வண்டியில் உட்கார்ந்து பேசிக்கொண்டு போவது நம்முடைய சம்பாஷணைக்கு இடையூறு யிருக்கிறதென்றுங் கண்டு இறங்கி நடந்து வார்த்தையாடிக்கொண்டு போவது உத்தமமென்பதாக நினைத்தேன். நான் எவ்விடத்தில் விட்டேன் ?

மாணிக்கம்.—நமக்கெதிரில் காணப்படும் கிராமத்தில் சில தினங்களுக்கு முன் நீ தனியாகத் தெருவழியே போகும்பொழுது ஒரு வீட்டின் வாயிற்படியில் நின்றிருந்த மதனரஞ்சனி அத்தெருவழியாகச் செல்லுகிறவர்களைக்கண்டு நாணங்கொள்ளாமலிருந்து உன்னைக்கண்டவுடன் வெட்கப்பட்டுக் கதவின் பக்கத்தில் மறைந்து உன்னைப்பார்த்துக் கொண்டிருந்ததாகவும், நீ சிலதூரம் சென்று அவளை மீண்டும் பார்க்க ஆசைகொண்டு திரும்பி வந்ததாகவும் அப்பொழுது அவள் தன் தாயாரோடு நின்றிருந்து உன்னைக்கண்டு தன் தாய்க்குப் பின் மறைந்து நின்றுளென்பதாகவும் சொன்னாய்.

இரத்தினம்.—மாணிக்கம் ! நான் சொல்வதை நீ அதிக கவனமாகக் கேட்டு வருகிறாய் ! தன் தாய்க்கு பின் மறைந்து நின்ற மதனரஞ்சனி என்னை எட்டி எட்டிப் பார்ப்பதைக்கண்டு அவளோடு பேச ஆசைகொண்டு அவள் தாயைப் பார்த்து, "அம்மா ! இராமசாமிமுதலியார் வீடு எங்கே ? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். அதற்கவள் தம்பு ! இவ்விடத்திலிருப்பவர்வரை அதிகமாய் நானறியேன். நான் மற்றவர்களை லறிந்து சொல்லுகிறேன். அது பரியந்தம் நீர் தெருவில் நின்றிருக்க வேண்டிய அவசியமில்லை. வீட்டுக்குள் வரலாம்." என்றழைத்துக் கூடத்திலிருந்த நாற்காலியில் உட்காரச்செய்து அடுத்தவீட்டுப் பெண் பிள்ளையை அழைத்து, இராமசாமி முதலியார் வீட்டை விசாரித்துவர அனுப்பியபின் என்னிடம்வந்து, "தம்பி தாங்கள் எந்த ஊர் ? தங்கள் பெயரென்ன ? என்ன உத்தியோகம் ?" என்று கேட்டாள். நான் என் பெயரையும் என்னிருப்பிடத்தையும் சொல்லி, எனக்கு உத்தியோகம் ஒன்றும் இல்லை, உத்தியோகஞ்செய்து ஜீவிக்கும்படி கடவுள் என்னை வைக்கவில்லை,எனக்கதிகமான பொருள் உண்டென்று சொல்லி " நீங்கள் எந்த ஊர் ?" என்று கேட்டேன். அவள் ஒன்றும் மறைக்காமல் தான் திருசிரபுரத்தில் ஒருபெரிய குடும்பத்தைச் சேர்ந்தவளென்றும், தன் மாமனூர் பெயரைச் சொல்லக்கூடாதென்று தன் மகளால் சரவணமுதலியாரென்று நான் அறியச்செய்து, தன் மாமனூருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்களென்றும், மாமனூர் காலஞ்சென்றபின் தகப்பனுடைய ஆஸ்தியையும் கடனையும் பிரித்ததில் ஒவ்வொருவருக்கும் இரண்டு இலக்ஷத்தம்பதினாயிரம் பெறுமான நிலமும் நகைகளும் நாற்பதினாயிரம் ரூபாய் கடனும் கிடைத்தனவென்றும், சகோதரர்கள்

வெவ்வேறு குடும்பமானபின் தன் புருடன் கடனில் இருபதினாயிரம் தீர்த்துத் தன்மகனோடு காலஞ்சென்ரு ரென்றும் சொல்லும்பொழுது அவள் கண் கலங்கினாள். எனக்குப் பரிதாபமாக இருந்தது. தன் புருடன் போனபின் மைத்துனருடைய ஆதரவிலிருந்ததால் அவர்கள் தன் புருடன் ஆஸ்தியால் வரும் பலன்களைத் தாங்களே அனுபவித்துக் கொண்டும் கடனுக்காக ஒன்றும் கொடாமலும் தன்மகளை விவாகம் செய்துகொடுக்க எண்ணங்கொள்ளாமலுமிருப்பதை அறிந்து, ஆண்பி ள்ளை திக்கில்லாததால் தனக்கிக்கதி நேரிட்டதென்று தன்னுடைய மகளை யழைத்துப்போய்த் தக்க இடத்தில் விவாகஞ்செய்து கொடுத்து மருமகனுடைய உதவியைக்கொண்டால் மைத்துனர்களுடையஎண்ணம் ஒன்றும் அதன்பின் ஒங்காதென நினைத்து இவ்விடம் வந்திருக்கிறே னென்றும் அவள் சொன்னாள். அச்சமயத்தில் இராமசாமி முதலியார் வீட்டை விசாரிக்கச் சென்றவள் வந்து அவருடைய வீடு அடுத்த தெரு வின் கோடியிலிருப்பதாகச் சொன்னாள். ராமசாமி முதலியார் வீடு இன்ன இடத்திலிருக்கிறதென்று அறிந்தபின், அவ்விடமிருந்தால் அவர் கள் சந்தேகங் கொள்ளுவார்களென்று நினைத்தேன்.

மாணிக்கம்.—இராமசாமி முதலியார் வீடு எவ்விடத்திலிருக்கிறதென்று உன க்குத் தெரியாதா ?

இரத்தினம்.—இராமசாமி முதலியார் வீடு மட்டுமல்ல. அக்கிராமத்திலிருக் கிறவர்களுடைய வீடுகளெல்லாம் எனக்கு நன்ருய்த் தெரியும். நான் மதனரஞ்சனியைச் சமீபத்தில் போய்ப் பார்க்கவும், அவர்கள் இவ்வூருக் குப் புதிதாயிருந்ததால் அவள் தாயாரோடு வார்த்தையாடி அவர்கள் யாரென்றும் எங்கிருந்து வந்திருந்தார்களென்றும் அறியவே இராமசாமி முதலியார் வீட்டைக் கேட்டு வார்த்தையாட எண்ணங்கொண்டேன்.

மாணிக்கம்.—மதனரஞ்சனியின் தாயாரோடு வார்த்தையாடிய சிறிது நேரத் தில் அவள் சொல்வதைக்கேட்டு மதனரஞ்சனியை விவாகஞ்செய்யவா துணிந்தாய் ?

இரத்தினம்.—இல்லை ! இல்லை ! நான் மதனரஞ்சனியின் தாயோடு வார்த் தையாடி இராமசாமி முதலியார் வீட்டுக்குப் போகும் மார்க்கத்தில் வார்த் தையாடிக் கொண்டிருந்த இருவர்களிலொருவன் " மதனரஞ்சனியின் குடும்பத்தை நன்ருய் அறிவேன், அவர்கள் பெரும்பணக்காரர், அவர்க ளுக்கு இருக்கும் நிலமெல்லாம் மூப்போகம் விளையத் தகுந்தது, மதன ரஞ்சனியும் அதிக சுந்தரமுள்ளவள், அவளுக்குப் புருடனாக வரப்போகி றவன் புண்ணியவான்." என்று மற்றவனிடம் சொல்லிக்கொண்டிருந் தது என் காதில் விழுந்தது.

மாணிக்கம்.—அவர்கள் யாரென்று உனக்குத் தெரியுமா ?

இரத்தினம்.—என்பார்வையில் நின்றவன் எனக்கு அன்னியனாகக் காணப் பட்டான். மற்றவன் வேறு பக்கம் திரும்பியிருந்ததால் அவன் யாரென்று கண்டுகொள்ள முடியாமற்போனது. அவர்கள் பேசியிருந்ததைக் கேட்ட பின் நமக்கு நற்காலம் வரும்போல் காணப்படுகிறதென்று இராமசாமி முதலியார் வீட்டுக்குச்சென்றேன்.

மாணிக்கம்.—உனக்கு நற்காலம் வந்திருக்கிறதென்று இன்னும் தெரியவில் லையா ? உன்னை முற்றிலும் வெறுத்திருந்த உன் சிறிய தந்தை ஐம்பதினா யிரம் பெறுமான பூஸ்திதியை உனக்கு வைத்துப்போன பின்னும் சந் தேகங்கொள்ளுவது அதிசயம் ! வனசாகூஷியை உனச்குக் கொடுக்காமற் போனது அவர்களுக்கு இப்பொழுது பெருந் துக்கமாயிருக்குமென்பதை நீ நினைக்கவில்லையா ?

இரத்தினம்.—நடந்துபோனதை ஞாபகத்தில் வைக்கவேண்டாம். வனசாகூஷி யை விவாகஞ்செய்துகொள்ளென்று, என் சிறிய தந்தையின் ஆஸ்தி என்னைச் சேர்ந்தவுடன் சொல்லியிருப்பார்களானாலும் ஒருவேளை ஒப் புக்கொண்டேயிருப்பேன். என் கண்ணில் மதனரஞ்சனி அகப்பட்ட பின் என் எண்ணத்தைமாற்ற ஒருவராலும் முடியாது. அல்லாமலும், மதனரஞ்சனியைக் கொள்ளுவதால் தொகையும் அதிகம் கிடைக்கும்.

மாணிக்கம்.—ஒரு இலக்ஷத்திற்கும் இரண்டரை இலக்ஷத்திற்கும் வித்தியாச மெனக்குத் தெரியாமற் போகவில்லை. இலக்ஷணத்தைக் கருதிஞலோ?

இரத்தினம்.—இலக்ஷணம் வந்து பெட்டியை நிரப்பாது. இரண்டரை இல க்ஷமே வந்து பெட்டியை நிரப்பும். மதனரஞ்சனியும் இலக்ஷணத்தில் குறைந்தவளென்று நினைக்கிறாய் ? இருவரும் இலக்ஷணத்தில் சமமாக இருப்பார்களென்றே நினைக்கிறேன்.

மாணிக்கம்.—நீ சொல்லிக்கொண்டு வந்ததை மத்தியில் நிறுத்திவிட்டேன். அதை முடித்துவிடு.

இரத்தினம்.—அன்னியரிருவர் வார்த்தையாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு இராமசாமி முதலியார் வீட்டுக்குப் போய் அவர் வீட்டிலிருக்கிறாரா வென்று விசாரித்ததில், அவர் வெளியில் போயிருக்கிறார், வருகிற நே ரமாயிற்று என்று அங்கிருந்தவர்கள் சொன்னதன் மேல், வீட்டுக்குள் செ ன்று உட்கார்ந்திருந்தேன். சில நேரத்திற்குப்பின் இராமசாமி முதலி யார் வீட்டுக்கு வெளியினின்று, மதனரஞ்சனி சுந்தரமூள்ளவள், பெரும் பணக்காரன் மகள், மூப்பதினாயிரம் பெரிய தொகையாயிருந்தாலும் இல க்ஷக்கணக்காய்ப் பெறும்படியான நிலத்தைக் கவனிக்க வேண்டியதில்லை யா? நிலப்பத்திரங்களை ஈடுவைத்துக் கடன் வாங்குவது கடினமல்லவெ ன்று ஒருவனோடு பேசிக்கொண்டிருந்து வீட்டுக்குள் வந்து என்னைப்

பார்த்து நான் போனவேலையைக் குறித்துப் பேசியிருந்தபின், ஒருவருக்கு நிலத்தின்மேல் மூப்பதினாயிரம் ரூபாய் கடன்வேண்டுமென்றும், எனக்கு இஷ்டமிருந்தால் நான் செட்டிகள் வீட்டில் வைத்திருக்கும் தொகையைக் கொடுக்கலாம், நல்ல வட்டி கிடைக்குமென்றும் சொன்னார். நான் நிலத்தை வைத்துக்கொண்டிருப்பது கஷ்டமாக இருந்ததென்று விற்றுப்பணமாக்கியிருக்க, அதை நிலத்தின்மேல் கடன் கொடுப்பது உசிதமல்லவே என்றதற்கு, அவர் இரண்டு மூன்று இலக்ஷம் பெறக்கூடிய நிலத்தின்மேல் கடன் கொடுத்தால் நிலக்காரர் தவணையில் மீட்டுக் கொள்ளாத விஷயத்தில் நிலத்தை ஏலத்தில் விற்றால் வரப்போகும் இலாபத்தைக் கவனித்தீரா? செட்டிகள் வீட்டிலிருக்கும் பணத்திற்கு அவர்கள் என்ன கொடுக்கப் போகிறார்கள்? இவர்கள் கொடுக்கும் வட்டியைப்போல் கிடைக்காது. இவ்வூரில் வந்திருக்கும் ஒரு பெண் பிள்ளைக்குத் தான் சொன்ன தொகை வேண்டும், செட்டிகள் அறிந்தால் முன்பின் யோசியாமல் கொடுப்பார்களென்றார். நான் யோசித்துப் பார்க்கலாம் என்று சொல்லி வந்த இரண்டு தினத்திற்குப்பின் செட்டிகள் வீட்டுக்குப் போன பொழுது, செட்டிகள் அந்த தொகையைக் கொடுக்க இருந்ததையறிந்து இனிக் காலதாமதஞ் செய்யக்கூடாது, யாவையும் நேரில் பேசி அறியலாமென நினைத்து உன்னை அழைத்துப் போகிறேன் வா. (என்று மதனரஞ்சனி வீட்டுக்கருகில் வண்டியை நிறுத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.)

இருவர் தன் வீட்டுக்குள் வருவதைக் கண்ட மதனரஞ்சனியின் தாய் உபசரித்து உட்காரவைத்தாள்.

இரத்தினம்.—அம்மா! தாங்கள் இவ்வூருக்கு வந்த காரியம் முடிவுபெற்றதா?

மதனரஞ்சனியின் தாய்.—தம்பி! நான் இரண்டு காரியங்களை உத்தேசித்து இவ்வூருக்கு வந்தேன். அவைகளில் ஒன்று முடிந்தது, மற்றொன்று முடியவில்லை.

இரத்தினம்.—இரண்டில் எது முடிந்தது? எது முடிவாகவில்லை?

மதனரஞ்சனியின் தாய்.—நான் சில தினங்களுக்கு முன் உம்மிடத்தில் சொல்லியது இன்னும் முடிவுபெறவில்லை. எனக்குத் திரிசிரபுரத்திலிருக்கும் கடனை முதலில் தீர்த்துவிட்டால், என் மைத்துனர்களுடைய சல்லியம் விட்டுப்போகுமென்று எண்ணியது முடிவு பெற்றது. நாளை பணம் கைக்குவரும். நாளையதினம் பொறுத்து மதனரஞ்சனியைச் சில நாள் இவ்வூரிலிருக்கவிட்டு நான் ஊருக்குப்போய்ச் சில தினத்தில் திரும்பிவந்து மருமகனைத் தேடவேண்டும். (என்று நகைத்தாள்.)

இரத்தினம்.—தங்கள் மகளுக்கு விவாகத்தை முடித்து மருமகனைக் கையோடு அழைத்துப் போனால் தங்களுடைய மைத்துனர்களோடு பேசி யாவையும் முடித்துக்கொள்ள உதவியாக இராதா ?

மதனரஞ்சனியின் தாயி.—மைத்துனர்களே நீக்கிவைத்து என் மகளுக்கு விவாகத்தை முடித்தால் பெண்பிள்ளே தன் பெரியதனமாகவே யாவையும் முடித்து விட்டாளென்ற பழிப்புக்கு இடம் உண்டாகும். அதற்கு இடங்கொடுக்கக்கூடாது. என் புருடனுக்கிருக்கும் கடனைக் கொடுக்கும் வரையிலே நான் மைத்துனர்களின் வார்த்தைக்கு அடங்கி நடக்கவேண்டும். அக்கடன் தீர்ந்தால் யாவரும் என் சொல்லுக்கடங்கி நடப்பார்கள். அப்பொழுது என் இஷ்டம்போல் யாவும் செய்யலாம்.

இரத்தினம்.—தங்கள் நாயகன் கொடுக்கவேண்டியதைத் தீர்க்கவேண்டியது தங்களுடைய கடமையாயிருக்கத் தங்களுடைய மைத்துனர்களது சம்பந்தம் அதில் வரவேண்டிய காரணமில்லையே! அக்கடனைத் தீர்த்தபின் தங்களுடைய மகளுக்கு விவாகம் செய்யவேண்டு மென்பதன் கருத்தென்ன ?

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி ! என் நாயகனுடைய கடனை நானே கொடுக்கவேண்டியதாலும், அவர் காலஞ்சென்றபின் எல்லா வரும்படியையும் என் மைத்துனர்கள் தங்கள் வசப்படுத்தி வரவு செலவை அவர்களே பார்த்துவந்ததால், கடனுக்கும் அவர்களே பொறுப்பென்று வெளிக்குக் காணப்படுகிறபடியிலுலே நான் ஏதாகிலும் ஒன்றைச் சொன்னால் கடனுக்கு முதலில் வழிபண்ணிப் பின் நீ சொல்லவேண்டியதைச் சொல்லலாம் என்கிறார்கள். அவர்கள் கருத்தென்னவென்று ஆராய்ந்து பார்த்தால் தங்கள் தங்கள் மனைவி வழியில் சேர்ந்தோர்களுக்கு என் மகளைக் கொடுக்க வேண்டுமென்றும், அது விஷயத்தில் ஒற்றுமைப் படாமலும் இருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. நாமாகிலும் அவர்கள் எண்ணங் கொண்டிருக்கும் பிள்ளைகளைப் பார்க்கலாமென்று நினைத்தால் ஒவ்வொருவரும் கல்வியற்ற கசடர்களாயிருக்கிறார்கள். கடவுள் எனக்குக் கொடுத்ததில் இன்றது ஒருபெண். அவளை என்மனம் இஷ்டம்கொண்ட இடத்தில் கொடுக்காமல் வேறிடத்தில் கொடுக்க விருப்பமில்லை. அவர்கள் சொல்லுமிடத்தில் கொடுக்க நான் சம்மதப்படாததால் அடிக்கடி கடன்பேச்சுவருகிறது. இவைகளை யெல்லாம் பார்த்தபின் என் லிலப்பத்திரங்களையும் வீட்டுப் பத்திரங்களையும் எடுத்துக்கொண்டு வந்தேன். பத்திரங்களைப் பார்த்தவர்களெல்லாம் கடன் கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். ஆனாலும், வட்டி அதிகமாகக் கேட்பதே எனக்கு வியாகூலத்தைத் தருகின்றது. வட்டியைக் குறித்து யோசித்துக் காலம் போக்குவதில் பிர

யோசனமில்லையென்று ஒப்பி நாளையதினம் பணம்கொண்டு வரும்படி ஒருவரிடம் சொல்லியனுப்பி யிருக்கிறேன்.

இரத்தினம்.—என்ன வட்டிக்கு ஒப்புக்கொண்டீர்கள் ?

மதனராஞ்சனியின் தாயி.—நூற்றுக்கு ஒன்றேகாலாக ஒப்புக்கொள்ள நேரிட்டது.

இரத்தினம்.—இதென்ன அநியாயம் ! நூற்றுக்காவது ஒன்றேகாலாவது கொடுக்கிறதாவது ! வேண்டாம் ! வேண்டாம் ! நான் சிலதினங்களுக்கு முன் தங்களைக் கண்டபொழுது பணத்தின் விஷயம் ஒன்றும் என்னிடத்தில் ஏன் சொல்லவில்லை ?

மதனராஞ்சனியின் தாயி.—நான் தங்களை முன்னறியேன் ! பின்னறியேன் ! அல்லாமலும், தங்களைக் கண்டவுடன் வேறு எண்ணங்கொண்டிருந்ததால் தங்களிடத்தில் சொல்ல மனம் துணியவில்லை. நான்கொண்ட எண்ணத்துக்கும் அது விரோதமாகக் காணப்பட்டது.

இரத்தினம்.—என் விஷயத்தில் என்ன எண்ணங்கொண்டிருந்தீர்கள் ?

மதனராஞ்சனியின் தாயி.—தாங்கள் யோக்கியராகவும் நல்ல குணமுள்ளவராகவும் தாங்கள் பேசிய பேச்சாலறிந்து தாங்கள் எங்கள் குலமாக இருந்தால் மதனராஞ்சனியைத் தங்களுக்குக் கொடுக்க எண்ணங் கொண்டிருந்தேன்.

இரத்தினம்.—தங்களுடைய கருத்தைச் சிறிதும் என் தெரிவிக்காதிருந்தீர்கள் ?

மதனராஞ்சனியின் தாயி.—பசுவின் தோலைப் போர்த்துக்கொண்டு திரியும் புலியும் உண்டென்று பயந்து மற்றவர்களால் விசாரித்தறிந்தபின் பேச வேண்டும் என்றிருந்தேன்.

இரத்தினம்.—என்னைக்குறித்து விசாரித்தீர்களா ?

மதனராஞ்சனியின் தாயி.—விசாரித்தறியாமல் என் எண்ணத்தைத் தெரிவிக்க நியாயமில்லையே ! தாங்கள் சில மாதங்களுக்கு முன் தாசிகள் வலையிற் சிக்கித் தங்களுடைய ஆஸ்தியைத் தூலைத்துவிட்டதாகவும், அதனால் வனசாக்ஷியைக் கொடுக்கத் தடையாயிற்றென்பதாகவும் பின் தங்களுக்குச் சிறிய தந்தையால் ஆஸ்தி கிடைத்ததென்பதாகவும் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்தேன்.

இரத்தினம்.—எனக்கிருக்கும் ஆஸ்தியைப் பார்த்துப் பெண் கொடுக்க எண்ணங் கொள்ளாதவர்கள் என்னுடைய நடத்தை கெட்டதாக இருந்தும் சம்மதித்த காரணம் தெரியவில்லை.

மதனராஞ்சனியின் தாயி.—தங்களுக்குக் கிடைத்த நிலத்தை விற்றுப் பணமாக்கிச் செட்டிகள் வீட்டில் வட்டிக்கு வைத்திருப்பதை அறிந்து அதனால் ஆசைகொண்டு பெண் கொடுக்க நினைக்கவில்லை. எனக்குக் கடவுள் கொடுத்திருப்பது அதிகம். பின் எதற்காக இவ்விடங் கொண்டேனென்

முல் முன் தாங்கள் பணத்தைச் செலவழித்துத் துன்பப்பட்டதலே சூடுகண்ட பூனே அடுப்பிடை நாடாதாகையால் தாங்கள் இனிப் பண விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கப் புத்தி சுற்பித்துக் கொண்டிருப் பீர்களென்று சந்தோஷம் அடைந்திருந்தேன்.

இரத்தினம்.—நான் தங்கள் புத்திரியின்மேல் கொண்டிருந்த எண்ணப்பிரகா ரம் தங்களுக்கு மிருந்தது தெய்வசங்கற்பமே! ஆனதால் தாங்களினிமேல் என் சொல்லேக்கேட்டு நடக்கவேண்டும். தாங்கள் ஒன்றேகால் வட் டிக்குப் பணம் கடன் வாங்கவேண்டியதில்லே. நான் செட்டி வீட்டில் வைத்திருக்கும் தொகையை வாங்கித் தருகிறேன். தாங்கள் சென்று கடனேத் தீர்த்துவிடுங்கள்.

மதனாஞ்சனியின் தாயி.—தம்பி! தாங்கள் இந்த விஷயத்தை விட்டு வேறெ தைச் சொன்னலும் செய்யத் தடையில்லே. கொண்டார் கொடுத்தா ரிடத்தில் கடன் வாங்குவது மிகவும் கேவலம். அல்லாமலும், பெண் ணேக் கொடுக்குமுன் பணம் வாங்கினல் உலகம் அதிக கேவலமாகப் பேசும். வட்டி அதிகமானலும் தோஷமில்லே. என் நிலப்பத்திரங் களே வைத்துக்கொண்டு கடன் கொடுக்க ஒருவரும் பின் வாங்கமாட் டார்கள். அந்தப் பத்திரங்களேக் காட்டுகிறேன் பாருங்கள். (என்று வீட்டுக்குள் சென்று பெட்டியைத்திறந்து ஒரு பெரிய காகித உறையை க்கொண்டு வந்து கொடுத்தான்.)

இரத்தினம் தான் கேள்விப்பட்டது உண்மையாவென்று உறையிலிருந்த பத்திரங்களே யெடுத்துப் பார்த்து உள்ளுக்குள் பூரித்து அனேக வரு டங்களுக்கு முன் ஏற்பட்ட பத்திரங்களாக இருப்பதைக் கண்டு, அம்மா! இப்பத்திரங்களே ஈடாக வைத்து ஒன்றேகால் ரூபாய் வட்டி கொடுப்பது கூடாது; என்னிடத்திலிருக்கும் தொகைக்கு அரை ரூபாய் வட்டியும் கிடைக்கவில்லே. ஆனதால், தாங்கள் என்னுடைய பணத்தை அந்த அரை ரூபாய் வட்டிக்காகவாவது பெற்றுக்கொள்ளக் கூடாதாவென்று வருந்திக்கேட்டான்.

மதனாஞ்சனியின் தாயி.—தம்பி! நான் யாவும் செட்டிகளிடத்தில் தீர்மானம் செய்து விட்டேன். நாளேயதினம் காலேயில் நான் சேட்ட முப்பதினுயிர த்தையுங் கொண்டுவருவார்களே நான் என்ன செய்கிறது!

இரத்தினம்.—பணம் கொண்டு வந்தால் வேண்டாமென்று சொல்லிவிடலாம். தாங்கள் சொல்லப் பின்வாங்கினல் நான் சொல்லிவிடுகிறேன்.

மதனாஞ்சனியின் தாயி.—தம்பி! தாங்கள் இவ்வளவு வற்புறுத்தும் பொழுது நான் இன்னும் தடைசொல்வது நியாயமல்ல. ஆயினும், தாங்கள் இந் தப் பத்திரங்களே ஈடாக வைத்துக் கொள்வதோடு மூக்கால் ரூபாய் வட்

டிச்சு ஒப்புக்கொள்ளவும் வேண்டும். இந்த ஏற்பாடு தங்களுக்கு இஷ்ட மாயிருந்தால் நான் தங்களிடத்தில் சடன் வாங்கிக் கொள்ளுகிறேன்.

இரத்தினம்.—தங்களுடைய இஷ்டம் அவ்விதமானால் அதுபோலவே செய்ய லாம். நான் நாளை மாலைக்குள் பணத்தோடு வருகிறேன். தாங்கள் வேறு பத்திர முதலானதும் எழுதவேண்டிய வேலை வைத்துக்கொள்ள வேண்டாம். இந்தப் பத்திரங்கள் ஈடாக இருப்பது போதுமானது.

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி! மனிதருடைய காயம் நிச்சயமில்லை. ஈடு காட்டிப் பத்திரம் எழுதாமலே இந்தப் பத்திரங்கள் தங்களிடத்தில் இரு ப்பதனால் பிரயோசனமில்லை. தாங்கள் சரியான முத்திரைத்தாள் வாங்கி வரவேண்டும். என் இஷ்டத்துக்கு விரோதம் சொல்லவேண்டாம்.

என்று இரத்தினத்துக்கும் மாணிக்கத்துக்கும் சாப்பாடு முதலானதும் செய்து உபசரித்து அனுப்பினாள். இரத்தினமும் மாணிக்கமும் வீட்டை விட்டு நீங்கித் தங்கள் ஊருக்குப் போகும்பொழுது மாணிக் கம் இரத்தினத்தைப்பார்த்து, உனக்கு நல்லகாலம் வந்துவிட்டதென் பதற்குச் சந்தேகமில்லை. மதனரஞ்சனியின்தாய் கிஞ்சித்தும் கள்ளக் கருத்தில்லாமல் சொல்வதைப்பார்க்க எனக்கதிக சந்தோஷமாக இருக்கிறது. நிலப்பத்திரங்களை நீ பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது நானும் பார்த்துக்கொண்டு நிலக்கிரயங்களை கூட்டிக்கொண் டிருந்தேன். தொகை இரண்டு இலக்ஷத்திற்கதிகமாக இருந்தது.

இரத்தினம்.—ஆம்! அவைகள் அனேக வருடங்களுக்குமுன் ஏற்பட்டதாகக் காணப்படுகிறதால் தற்காலத்து விலை இன்னும் அதிகமாகவே இருக்க வேண்டும். பத்திரங்களைப் பார்த்தவுடன் இவைகள் நம்முடைய கையை விட்டுப் போகவிடக்கூடாதென்று யோசித்து நான் பணங்கொடுக்கச் சம் மதித்தேன்.

மாணிக்கம்.—உன் கருத்தைக் கண்டுகொண்டேன். தொகை எவ்விதம் கொடுக்க யோசித்திருக்கிறாய்?

இரத்தினம்.—நான் சில்லரையாகத் தாசிகளுக்குக் கொடுக்கவேண்டிய கட னைத்தீர்த்து மூப்பதினாயிரம் செட்டிகளிடத்தில் வைத்திருக்கிறேன். எனக்கு இன்னும் ஐயாயிரம்வேண்டும். அதைச் சம்பாதிக்கிறது கஷ்ட மாக இருக்கிறது.

மாணிக்கம்.—ஐயாயிரம் எதற்கு? அவர்களுக்கு வேண்டியது மூப்பதினாயி ரந்தானே.

இரத்தினம்—அவர்களுக்கு வேண்டியது மூப்பதினாயிரமே! நிலம் நம்மை விட்டுப் போகாமலிருக்க மூப்பதினாயிரம் கொடுத்துக் கைவசப்படுத்திக் கொள்ளுகிறோம். மதனரஞ்சனி என்னைவிட்டுப் போகாமலிருக்க அவ

ளுக்கோர் ஐயாயிரம் ரூபாய்க்காவது நகைகளேவாங்கிப் போட்டுவிட் டால் அவளே வேறொருவருக்குக் கொடுக்க யோசிக்கமாட்டார்கள். நகைகள் வாங்கவே ஐயாயிரம் வேண்டுமென்று நினைக்கிறேன்.

மாணிக்கம்.—உன்னுடைய உதவியால் அடைமானத்திலிருந்து திருப்பிய என்னுடைய நிலப்பத்திரங்களேவைத்து ஐயாயிரம் கடன்வாங்க முடி யுமா ? என்னுடைய நிலமெல்லாம் இரண்டாயிரத்துக்கு அதிகம் பெற மாட்டா. அந்தப் பத்திரங்களேக் கொடுக்கிறேன், உன்னிஷ்டம்போல அவைகளே உபயோகித்துக் கொள்ளலாம்.

இரத்தினம்.—மாணிக்கம் ! நீ எப்பொழுதும் என் விருப்பத்தின் பிரகாரம் நடக்கிறாய். உன்னேக் கைசோரவிடேன். உன்னுடைய நிலப்பத்திரங்க ளோடு என்னுடைய வீட்டுப்பத்திரத்தையும் ஈடாகவைத்து உனக்கு நிலம் வாங்கப் பணம்வேண்டுமென்றுசொல்லி, நானும் உனக்குச்சகாய மாகக் கையொப்பம்வைக்கச் சம்மதப்பட்டிருக்கிறேனென்று நீ கடன் கேட்டால் செட்டிகள் கொடுக்கத் தடைசொல்லார்கள். இரண்டொரு மாதத்தில் மீட்டுக்கொள்ளலாம்.

அது நல்லயோசனையென்று மாணிக்கமும் இரத்தினமும் வீடுசேர்ந்து தாங்கள் நினைத்தவிதம் யாவும் முடித்து அடுத்தநாள் சாலையில் இரத்தின மும் மாணிக்கமும் மதனரஞ்சனியின் தாயை அவள்வீட்டில் கண்டு, ரூபாய் வந்துவிட்டது, தங்களுக்கதிக தொந்தரவுகொடுக்காமல் எல்லாம் மோராக்களாகவே கொண்டுவந்தேனென்று இரத்தினம் இரண்டுபைக ளேக் கொண்டுவந்து எதிரில் வைத்தான்.

மதனரஞ்சனியின் தாய்.—தம்பி ? பத்திரத்தை எழுதிமுடிக்காமால் பணத்தை நான் பெற்றுக்கொள்ளுவது நியாயமல்ல ! ஆயினும், பணத்தை வெளி யில் வைத்திருப்பது நன்மையல்ல. (என்று கூடத்தின்மூலையிலே மேஜையின் மேலிருந்த பெட்டியில் மோராக்களேவைத்து அதிலிருந்த பத்திரங்களே உறையோடுகொண்டுவந்து இரத்தினத்திடம் கொடுத்து) இதிலிருக்கிற பத்திரங்களே ஈடாகக்காட்டிப் பத்திரத்தை எழுதுங்க ளென்றாள்.

இரத்தினம்.—தங்களே மாமியென்றழைக்கப் பிரியப்படுகிறேன். தட்டு ஒன்று கொண்டுவர உத்தரவுசெய்யுங்கள் மாமி !

மதனரஞ்சனியின் தாய்.—தம்பி ! தாங்கள் என்னே மாமி என்றவுடன் என் தேகம் பூரித்து விட்டது. தட்டு எதற்கு ? என்று சொல்லிக் கொண் டே ஒரு வெள்ளித்தாம்பாளத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

இரத்தினம் தாம்பாளத்தை வாங்கி அருகில் வைத்துக்கொண்டவுடன் மாணிக்கம் தன்னிடத்திலிருந்த பெட்டியைத் திறந்துவைரக்கம்மல்,

மோசாமாலே, பொன் கெட்டிக்காப்பு, கல்லிழைத்த வங்கி, ஒட்டியாணம், வைரமோதிரம், வெள்ளிச்சுருள்சொலுசு, தண்டை, பாதசரம், இவைகளேயெல்லாம் எடுத்து வைத்தான்.

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி இவைகள் எதற்கு?

இரத்தினம்.—மாமி! என்னுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். இந்த நகைகளேத் தங்கள் புத்திரிக்காகக் கொண்டுவந்தேன். இவைகளே யெடுத்துக் கொடுத்து அணிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி! தங்கள் கருத்தை நன்றாய் அறிந்து கொண்டேன். நான் மதனரஞ்சனியை வேறு யாருக்காவது கொடுத்து விடுவேனென்று எண்ணங்கொண்டதால் நகைகளேப் போட்டுச் சுவாதீனப் படுத்திக்கொள்ள யோசித்தீர்கள். தாங்கள் மதனரஞ்சனி விஷயத்தில் ஐயப்படவேண்டாம். நான் சொன்ன சொல் தவறேன். மதனரஞ்சனிக்கு இரண்டு ஜதை நகைகளிருக்கின்றன. நான் அவளே விவாகஞ் செய்து கொடுக்கும்பொழுது எல்லா நகைகளேயும் போட்டுக் கன்னிகாதானமாகச் கொடுக்கவேண்டுமென்கிற விருப்பமிருப்பதால், தாங்கள் கொண்டுவந்த நகைகளே ஒப்புக்கொள்ளுவது என் எண்ணத்திற்கு விரோதமாகிறது.

இரத்தினம்.—மாமி! தங்களுடைய புத்திரியைக் கன்னிகாதானமாகக் கொடுக்க யோசித்தால் கையில் மடியில் இல்லாதவன் ஒப்புக்கொள்ளுவானேயுன்றி என்னேப்போன்ற பிறவிச்செல்வந்தன் ஒப்புக்கொள்ளுவானு? (என்று நகைத்தான்.)

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி! தங்களுக்கிஷ்டம் வேறு விதம் இருப்பதால் அதற்குக் கெடுதி வராமலும் என் எண்ணம் முடிவு பெறவும் செய்து கொள்ள அனேக வழிகளிருப்பதனுலே தங்களுடைய இஷ்டம்போல் இந்த நகைகளே என் மகளுக்குக் கொடுத்துவிடுகிறேன். (என்று தாம் பாளத்தை எடுத்துக்கொண்டு போய்த் தன் மகளிடம் கொடுத்து அணிந்துகொள்ளச்சொல்லிவந்தாள்.)

இரத்தினம் வாங்கிவந்த முத்திரைக்கடுதாசியில் எழுதவேண்டியதை எழுதி மதனரஞ்சனியின் தாயிடம் வாசித்துக் காட்டியதில் அவள் சந்தோஷப்பட்டுக் கையொப்பம் வைத்ததோடு தன் மகளேயும் சாக்ஷிக் கையொப்பம் வைக்கச்செய்து பத்திரத்தை இரத்தினத்திடம் கொடுத்தாள்.

இரத்தினம்.—மாமி! இந்தப் பத்திரங்களேயெல்லாம் நான் கைப்பற்றியது தங்களுடைய இஷ்டத்தாலன்றி என்னுடைய வேண்டுகோளல்லவென்று எல்லாப் பத்திரங்களேயும் உறையிற் போட்டு வைத்துக்கொண்டான்

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி! பணத்தால் எல்லாச் சந்தோஷமும் எல்லா வியசனமும் உண்டாகிறதால் நாம் அது விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நான் தங்களைக் கேட்டுக்கொள்வதை மட்டும் செய்ய வேண்டும். நான் நிலசாஸனங்களை எடுவைத்துக் கடன் வாங்கியது நான் திரும்பி வருமளவும் இரகசியமாக இருக்கவேண்டும். இப்பத்திரங் களை ஒருவருக்கும் காட்டவேண்டாம். நான் வந்தபின் உலகமுற்றி லும் அறிந்தாலும் தோஷமில்லை. என் மைத்துனர்களுக்கு இந்த சமா சாரம் எட்டவிடாமலிருக்க வேண்டுமென்பதே என்கருத்து.

இரத்தினம்.—மாமி! தங்களுடைய கருத்து அதுவானால் இந்த உறையில் எல்லாப் பத்திரங்களும் இப்பொழுது எழுதிய பத்திரமும் இருப்பதால், இதை முத்திரை வைத்துக் கொடுக்கும்பக்ஷத்திலே தாங்கள் வந்தபின் அந்த முத்திரையோடு இருப்பதைக் காட்டித் தங்களுடைய எண்ணம் பூர்த்தியானதைமெய்ப்பிப்பேன்.

மதனரஞ்சனியின் தாய் நகைத்து அது நல்லயோசனைதானென்று சென்று கூடத்துமூலையில் போட்டிருந்த மேஜையின்மேலிருந்த பெட்டியைத் திறந்து அரக்கையும் முத்திரையையும் எடுத்துவந்து விளக்கொன்று கொண்டுவரத் தன் மகளுக்கு உத்தரவளித்தாள். மதனரஞ்சனி விளக் கொன்றுகொண்டுவந்து, எங்குவைக்கச் சொல்லுகிறீர்கள்? காற்று அதிகமாக இருக்கிறதே! என்றாள். இரத்தினம் விளக்கு இங்கு வீற் காது, மேஜைக்கருகில் கொண்டுபோவது உத்தமம் என்றான். மத னரஞ்சனியின்தாய் உறையை வாங்கிக்கொண்டு மேஜையின்மேலிரு ந்த பெட்டியைமூடி அதன்மேல் உறையைவைத்து அரக்கையுருக்கி சில இடங்களில் முத்திரைவைத்துப் போதாதாவென்று தன்மகளைக் கேட்டாள்.

மதனரஞ்சனி.—உறைவாயில் முத்திரைவைக்காமல் எங்கெங்கோ முத்திரை வைத்துவிட்டீர்களே!

மதனரஞ்சனியின் தாயி.—ஆம் அம்மா! மருமகப்பிள்ளை என்னைப்பார்த்து ஏளனம்செய்யாமலிருக்கச் செய்துவிட்டாய்! அரச்குபோதவில்லையே! உன்னிடத்தில் அரக்கு இருக்கிறதா?

மதனரஞ்சனி.—பெட்டியில் அனேகதுண்டுகள் இருந்தனவே!

மதனரஞ்சனியின்தாய் உறையைக் கையிலெடுத்துக்கொண்டு பெட்டியைத் திறந்து அரக்கையெடுத்தாள். கையிலிருந்த உறை பெட்டியில் தவறி விழ, அதை எடுத்துப் பெட்டியை மூடி முத்திரைவைத்து இரத்தி னத்திடம் கொடுத்து இருவரையும் சாப்பிடச்செய்து உபசரித்தாள்.

இரத்தினம்.—மாமி! எங்களுக்கு உத்தரவுகொடுக்கவேண்டும். தாங்கள் எப் பொழுது ஊருக்குப்போக உத்தேசம்!

மதனரஞ்சனியின் தாயி.—தம்பி! நான் நாளையதினம் பிரயாணமாக யோசித்திருக்கிறேன். தங்களிடத்தில் தனித்துப்பேசவேண்டும் (என்று ஒரு மூலையில் அழைத்துப்போய்) தம்பி! நான் மதனரஞ்சனியை ஒரு ஜிழவியோடு விட்டுப்போகிறேன். நான் வருமளவும் தாங்கள் இரவில் இங்குவந்து படுத்துக்கொள்ளவேண்டும். பகலில் வந்தால் பெயர்கெட்டுப் போகுமென்று நினைக்கிறேன். தங்களே மதனரஞ்சனிக்குத் துணையாக வந்து படுத்துக்கொள்ளுங்களென்று கேட்டுக்கொள்வதே தங்களுக்கு என்விஷயத்தில் நம்பிக்கையுண்டாகுமென்றும், வேறொரு ஆண்பிள்ளை துணைதேடுவதைவிட என் மகளே விவாகஞ் செய்துகொள்ளப்போகிற வரைத் துணை வைத்துப்போவதே உத்தமமென்றும் தங்களிடத்தில் சொன்னேன்.

இரத்தினம்.—மாமி! தாங்கள் என்விஷத்தில் வைத்திருக்கும் அன்பு அதிகமென்று நன்றாய் விளங்குகிறது. என்னுடைய நன்றியறிதலை எவ்விதம் காட்டப்போகிறேன்!

மதனரஞ்சனியின் தாயி.—எங்கள் விஷயத்தில் தாங்கள்செய்தது அளவுக்கு மிஞ்சியது வேறொன்றும் எங்களுக்குச் செய்யவேண்டி அவசியமில்லை.

இரத்தினம்.—தாங்கள் எத்தனைநாளையில் திரும்பி விடுவீர்கள்?

மதனரஞ்சனியின் தாயி.—இரண்டு வாரத்தில் வந்துவிடலாமென்ற அபிப்பிராயத்தோடுபோகிறேன். எவ்விதமாகிறதோ தெரியவில்லை.

என்று இருவருக்கும் விடைகொடுத்து அனுப்பினாள்.

இரத்தினம் உறையை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து, மாணிக்கம்! நீ என்ன வாய்திறக்காமலிருந்தாய்?

மாணிக்கம்.—நான் மனதில் நினைப்பதை நீ சொல்லிவந்ததால் எனச்சுப்பேச இடங்கொடுக்கவில்லை.

இரத்தினம்.—என்னிடத்திலிருந்ததையும் உன்னிடத்தில் இருந்ததையுங்கொடுத்து இந்தப் பத்திரங்கள் வாங்கிவந்தது உனக்குத் திருப்தியா? இல்லையா?

மாணிக்கம்.—எனக்கெல்லா விஷயத்திலும் திருப்தியே? உனக்கு நற்காலம் வந்தால் எனக்குச் சந்தோஷமே!

இரத்தினம்.—என் சிறியதகப்பனார் எனக்கு வைத்துப்போன ஆஸ்தியில் அதிகம்கொடுக்காமற்போனாலும், மதனரஞ்சனியால்கிடைக்கப்போகிற ஆஸ்தியில் உன் ஆயுள்காலமெல்லாம் சௌக்கியத்தோடிருக்க உனக்கு வேண்டியதைக்கொடுப்பேன்.

மாணிக்கம்.—உன்னிஷ்டம்போல் செய்யலாம். பத்திரங்களே எங்குகொண்டு வைக்கப்போகிறாய்?

இரத்தினம்.—வீட்டிலே இருப்புப் பெட்டியில் கொண்டுபோய் வைக்க வேண்டும். இவ்வுறைக்குள் நம்மிருவருடைய உயிருமிருக்கிறதல்லவா? (என்று நகைத்தான்.)

மாணிக்கம்.—உன் மாமியார் உன்னைத்தனித்து அழைத்துப்போய் பேசினார் களே அது நான் அறியக்கூடாத இரகசியமா?

இரத்தினம்.—நீ அறியக்கூடாத இரகசியம் ஒன்றுமில்லை. என் மாமியார் திரும்பி வருமளவும், என்னைத் தன்மகளுக்கு இரவில் துணையாகப் படுத்துக்கொள்ளச் சொன்னார்கள்.

மாணிக்கம்.—உன் மாமியார் உன்னை எல்லா விஷயத்திலும் நம்பியிருக்கிறார்கள். நீ மதனரஞ்சனியோடு வார்த்தையாடவும் கூடுமென்று நினைக்கிறேன். (என்று நகைத்தான்)

இரத்தினமும் மாணிக்கமும் தங்கள் தங்கள் வீடு சேர்ந்தபின், இரத்தினம் அன்றிரவை அதிக கஷ்டத்தோடு கழித்து மறுநாள் தனித்துச் சென்று இரவு எட்டுமணிக்கு மதனரஞ்சனியின் வீட்டுக் கதவை மெதுவாகத் தட்டினான். உடனே கதவு திறக்கப்பட்டது. இரத்தினம் வீட்டுக்குள் சென்று, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அருகில் நின்ற கிழவியைப்பார்த்து, அம்மா! எனக்குப் படுக்கை எங்கு போட்டிருக்கிறாய்? என்று கேட்டான்.

கிழவி.—தம்பி! இந்த அறையில் போட்டிருக்கிறேன். (என்று ஒரு அறையைக்காட்டினாள்.)

இரத்தினம் எழுந்து அவ்வறைக்குள் சென்று அங்கு இருந்த கட்டிலின் மேல் போய் உட்கார்ந்திருந்தான். உடனே கிழவி வேறொரு அறைக்குள் சென்று திரும்பி இரத்தினத்திடம் வந்து, தம்பி! நான் சிறிது நேரம் என் வீட்டுக்குப் போய்வரவேண்டும். கதவை மூடிக்கொள் நான் அங்கு உத்தரவு வாங்கிக்கொண்டேனென்று வெளியிற் சென்றாள். நம்மை மதனரஞ்சனியோடு தனித்திருக்கவிட்டுக் கிழவி போனதன் காரணமென்ன? மதனரஞ்சனி வேண்டுமென்றே அவளை அனுப்பியிருக்க வேண்டும், நம்மை முதல்நாள் கண்டபொழுது நெடுநேரம் வாயிற்படியில் நின்று நம்மைப்பார்த்திருந்தாள். அதனால் நம்மேல் அதிக ஆசை கொண்டிருக்கிறாளென்று அன்று கண்டு கொண்டோம். இப்பொழுதும் தன் தாயாரில்லாததால் நம்மோடு குலாவி விளையாட இடையூறுயிருந்த கிழவியை அனுப்பிவிட்டாள். கிழவியால் நம்வரவை அறிந்தும் இன்னும் வெளிவராமலிருக்க வேண்டிய காரணமென்ன? புதுப்பெண் ஆனதால் தன்னை விவாகஞ் செய்து கொள்ளப்போகும் புருடனோடு வார்த்தையாட வெட்கப்பட்

டிருக்கிறாள் போல் காணப்படுகிறது. நாம் சென்று அவளோடு வார்த்தையாடுவது உத்தமமென்று எழுந்துபோய் வெளிக்கதவை மூடித் தாள் போட்டு மதனரஞ்சனியின் அறைக்குள் போக யோசித்தவன் போகாமல் கட்டிலின்மேல் மீண்டும் வந்து உட்கார்ந்து, நாம் ஆத்திரத்தோடு ஒரு காரியமும் செய்யக்கூடாது. ஒரு வேளை மதனரஞ்சனிக்கு அவ்வித எண்ணமில்லாமல் நிணற்றுநீரை வெள்ளங்கொண்டு போகாதென்று பொறுத்திருக்க நினைத்துக் கிழவியை வேறு காரணத்தால் அவருடைய வீட்டுக்கனுப்பியிருந்தால் என்ன செய்வது? அவ்வித எண்ணத்தோடு இருப்பவள் படுத்திருக்கும் அறைக்குள் போனால் அவள் கோபித்துத் தன் தாய் வந்தவுடன் நடந்தது இவ்விதமென்றால், நம்மை அவள்தாய் கேவலமாகநினைப்பாளல்லவா? என்று பலவற்றை யோசித்துப்பின் நாம் காலதாமதம் செய்துகொண்டிருந்தால் தன் வீட்டுக்குப் போன கிழவி வந்துவிடும்பட்சத்திலே பின் மதனரஞ்சனியைக்கண்டு வார்த்தையாட முடியாமற் போய்விடுமே! நாம் மதனரஞ்சனியின் க்ஷேமத்தை விசாரிப்பதுபோல் போய்ப் பார்க்கலாமென்று எழுந்து மதனரஞ்சனி சயனித்திருக்கும் அறைக்குள் சென்று ஆள்அரவங் காட்டினான். ஒன்றும் பதில் கிடைக்காமலிருப்பதைக்கண்டு கட்டிலே மூடியிருந்த கொசுத்தாங்கியை எடுக்காமல், மதனரஞ்சனி! என்று கூப்பிட்டான்.

அதற்கு ஊம் என்ற பதில் கிடைத்தவுடன், என்ன! இதற்குள்ளாகவா தூங்கிவிட்டாயென்று கொசுத்தாங்கியைத் தூக்கிப்பார்த்தான். கட்டிலில் சேலையால் நிறைய மூடிக்கொண்டு படுத்திருப்பதைவிளக்கு வெளிச்சத்தாற் கண்டு, என்கண்மணி! என்னைப்பார்க்க வெட்கப்பட்டா முகத்தை மூடிக்கொண்டிருக்கிறாய்? நீ கிழவியை அனுப்பிவிட்ட காரணத்தை அறிந்தேன். நீ என்மேல் அதிக ஆசைகொண்டிருக்கிறாயென்று கண்டுகொண்டேன். என்மேல் உனக்கு அதிக ஆசை இல்லாமற்போனால் என்னைக்கண்ட முதல்நாள் வாயிற்படியில் நின்று நெடுநேரம் பார்த்துக்கொண்டிருப்பாயா? நானும் உன்மேல் ஆசை கொண்டு இராமசாமிமுதலியார் வீட்டைத்தெரிந்திருந்தும் தெரியாதவன்போல் மாமியைக் கேட்கவந்தேன். நாம் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் ஆசைகொண்டிருப்பதால் இன்னும் வெட்கத்தோடிருக்க வேண்டிய காரணமில்லை. எழுந்து என்னோடுவார்த்தையாடுவாய். என் இன்பரசமே! உன்னைக்கூடி அனுபவிக்க இன்னும் எத்தனை நாள் செல்லுமோ என்ற ஏக்கங்கொண்டிருந்தேன்! கிழவிவருமுன் உன் சுந்தரமான முகத்தைக்காட்டி என்னோடு வார்த்தையாடி என் மனச்சந்தோஷப்படுத்துவாயென்று மெதுவாகச் சரீரத்தைத்தடவிக் கொடுத்து, இதென்ன? நான் உன்மேல் கைவைத்தவுடன் மற்றப்

அடா பாவி ! உன்னால் எனக்கிருந்த பெருமையும் போனதே ! (275-ம் பக்கம் பார்க்க.)

பக்கம் திரும்பிப்படுத்துக்கொண்டாய்! மாமி உன்னைவிட்டுப்போன தால் துக்கத்தோடிருக்கிறாயா! மாமித்சாசத் துச்சப்படவேண்டாம். இரண்டு வாரத்தில் வந்துவிடுகிறேன் என்றவர்கள் அதற்கு முன்னாகவே வந்துவிடுவார்கள். நீ எழுந்து என்னோடு பேசினால் உன் துக்கமெல்லாம் நீங்கிவிடும். நீ சாப்பிட்டாயா? என்ன சரிவனைகள்செய்தாய்? நான்சேட்பதற்கெல்லாம் பதில் சொல்லாமல் இருக்கிறாயே! நான் வாங்கிச்சொடுத்த பாதசரம் உன் காலுக்குச்சரியாக இருக்கிறதா? காலைக்காட்டு பார்க்கலாம் என்று குனிந்து காலைத் தடவினான். மூடியிருந்த காலால் அவன் மார்பில் உதைவிழ, அதைப்பெற்றுக்கொண்டு, பெண்மணி! என்னை உதைக்கவா இஷ்டங் கொண்டாய்? என்று கட்டியணைத்துப் பிடித்து, பெண்ணே! உன் தேகம் கருங்கல்போலிருக்கிறதென்றவுடன், இரத்தினத்தின் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. இரத்தினம் திடுக்கிட்டு, மதனரஞ்சனி! உன் கையா என் கன்னத்தில் பட்டது? என்றுசொல்லி முடியுமுன் மேற்போர்வையை எடுத்தெறிந்து எழுந்துநின்று இரத்தினத்தின் முகத்தில் குத்தி, அடா துன்மார்க்கா! மதனரஞ்சனியையா தேடிவந்தாய்? என்று கன்னத்திலும் அறைந்து, நான்தான் மதனரஞ்சனி; என்னைப்பார்—என்று கிற்கிறவனை இரத்தினம் பார்த்து, தருமலிங்கமா என்னை அடித்தது? என்றான். ஆம்! தருமலிங்கமே உன்னிடத்தில் பழி வாங்க இங்கு வந்திருக்கிறேனென்று எட்டி உதைத்தான். அவ்வுதையால் இரத்தினம் கீழே விழுந்தெழுந்து, தருமலிங்கம்! என்னை என் அடிக்கிறாய்? உனக்கென்ன கெடுதியைச் செய்தேன்? என்று கேட்டான்.

தருமலிங்கம்.—நீ செய்த கெடுதி உனக்குத் தெரியாமலா இருக்கிறது? என் தங்கை கனகாம்புஜத்தைக் கற்பழித்ததும், அதனால் என் தாயார் இறக்கும்படி செய்ததுமன்றி என்னையும் துக்கத்திலழுத்திய துன்மார்க்கா! உன்னை உயிரோடு விடுவது நியாயமல்லாமற்போனாலும் நீ அடைந்த தண்டனையே போதுமானதென்று உன்னைவிட்டுவிட்டேன். (என்பதாகப் பிடர்பிடித்துத்தள்ளி வீட்டுக்கு வெளியில் விட்டு முதுகில் உதைத்துப் போவென்றான்.)

இரத்தினம் அடிபட்டுத் துன்பத்தோடு, நாம் காண்பது கனவா! நனவா! நாம் மதனரஞ்சனி இருக்கிற வீடென்று வேறொரு வீட்டுக்குள் போனோமோ? நாம் அவள் வீட்டை நன்றாயறிந்திருக்கிறோமே! அவள் வீட்டுக்குப் போயிருந்தபொழுது பார்த்த சாமான்களெல்லாம் இருக்கின்றனவே! மதனரஞ்சனி தன் தாயைவிட்டுப் பிரிந்திருக்கச் சம்மதங் கொள்ளாததால் அவளை அவள் தாய் அழைத்துப் போயிருக்கவேண்டும். சாவகாசமில்லாததாலும் நாம் இருக்குமிடம் தெரியாததாலும் நமக்குத்

தெரிவிக்காமல், தருமலிங்கம் அவர்களே அறிந்தவனுதலால் நமக்குச் சந்தர்ப்பம் தெரிவிச்சும்படி அவனிடத்தில் சொல்லியிருக்கவேண்டும்; நம்மைக் கண்டவுடன் தன் தங்கையின் ஞாபகம் வந்து நம்மை யடித்துத் துரத்திய கோபத்தால் அவர்கள் சொல்லிப்போனதை நப்பிடத்தில் சொல்லாமலிருந்தான்போல் காணப்படுகிறதென்று நினைத்து இரவில் தனித்துச் சொல்லுகிறவன், ஒருவேளை மதனரஞ்சனியின் தாய் ஏமாற்றிப்போயிருப்பாளோவென்று எண்ணி, நாம் என்ன அவர்களைக் சேவலமாக நினைக்கிறோம், நாம் கொடுத்த பணத்துக்கதிகமாக நிலப்பத்திரங்களை நம்மிடத்தில் வைத்துக்கொண்டும் அவர்கள்மேல் வீண் குற்றம் சாட்டுகிறோமென்று தன் வீடு சேர்ந்து இருப்புப்பெட்டியைத் திறந்து உறையை எடுத்துப்பார்த்து வைத்து மூடிச் சாவியைப் பத்திரமாக வைத்துக்கொண்டு படுத்து நெடுநேரம் நித்திரை கொள்ளாமல், தருமலிங்கத்தால் பட்ட அடியினுலே தேகமெல்லாம் நோகப் பின் அயர்ந்து நித்திரைபோனுன். மறுநாள் காலையில் மாணிக்கம் வந்து, இரவில் நடந்ததை எண்ணி உட்கார்ந்திருக்கிறவனைப் பார்த்து, இரத்தினம்! இராத்திரி பொம்பியம்மாள் காவலுக்கு மதுரைவீரன் போனதுபோல் போய் வந்தாயா? என்று நகைத்தான்.

இரத்தினம்.—மாணிக்கம்! இராத்திரி போயிருந்தேனுயினும் மதனரஞ்சனியையும் அவள் தாய் அழைத்துப்போயிருந்ததால் நான் பெருங்கஷ்டப்பட்டுவந்தேன்.

மாணிக்கம்.—என்ன சொன்னுய்! மதனரஞ்சனியை அழைத்துக்கொண்டு போய் விட்டாளா? உன்னிடம் ஒன்றும் சொல்லாமலா! மதனரஞ்சனியை அவள் தாய் அழைத்துக்கொண்டு போனுளென்று யார் உனக்குச் சொன்னது?

இரத்தினம் தான் மதனரஞ்சனி வீட்டுக்குப் போனதையும் அவ்விடத்தில் நடந்த யாவற்றையும் சொன்னவுடன் மாணிக்கம் இரத்தினத்தைப் பார்த்து, எனக்கு முற்றிலும் சந்தேகமாக இருக்கிறது; உன்னிடத்திலிருக்கும் உறையை எடு பார்க்கலாம் என்றுன்.

இரத்தினம்.—மாணிக்கம்! நீ ஒரு பைத்தியக்காரன்! இரண்டு இலக்ஷத்திற்கு அதிகம் பெறக்கூடிய பத்திரங்களே உள்ளடக்கிய உறை என்னிடத்தில் பத்திரமாக இருக்கிறது. அது விஷயத்தில் நமக்குப் பயமில்லை. உனக்கிஷ்டமானுல் பார். (என்று உறையைக் கொண்டுவந்து கொடுத்தான்.)

மாணிக்கம்.—இரத்தினம்! இந்த உறையைப் பிரித்துப்பார்த்தாலென்ன? எனக்கேதோ சந்தேகம் உண்டாயிருக்கிறது.

இரத்தினம்.—என்ன சந்தேகம்? உறையின் முத்திரையை உடைக்கவேண்டாமென்று என் மாமி சொல்லியிருக்க, அவ்வார்த்தையைத் தட்டி நாம் உடைக்கலாமா? அவர்கள் வந்தபின் என்ன சொல்லுவார்கள்!

மாணிக்கம்.—இரத்தினம்! நம்முடைய அதிர்ஷ்டமும் துன்பமும் இதில் அடங்கியிருப்பதால் இதைப் பிரித்துப்பார்க்காமலிருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. உன் மாமி வந்தால் அவர்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். (என்று உறையைப் பிரித்தான்.)

இரத்தினம்.—ஐயையோ! நான் என்ன செய்யப்போகிறேன். (என்று நிலத்தில் சாய்ந்தவனெழுந்து) மாணிக்கமே! உன்னையும் கெடுத்தேனே! நானும் கெட்டேனே! எல்லாம் எழுதாத காகிதங்களாக இருக்கின்றனவே! பத்திரங்களொன்றுமில்லையே! இது என்ன மாயம்? (என்றழுதான்.)

மாணிக்கம் உறையிலிருந்த வெறுங்காகிதங்களையெல்லாம் பார்க்கும்பொழுது எழுதியிருந்த காகிதம் ஒன்றிருக்கக்கண்டு அதை எடுத்து வாசித்தான். அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது:—

அடா துன்மார்க்கா!

நீ உலகிலுள்ள கற்புடைய பெண்களை வஞ்சிக்கவும், வஞ்சித்தும் திரியும் பாதகன். உன்னிடத்தில் பொருளிருந்தால் இன்னும் அனேக கெடுதியைச் செய்வாய் என்றெண்ணி உன் மனம் மைசூரிலிருந்த தாசிகளிடத்தில் செல்ல ஓர் அன்னியனிடத்தில் என் முகத்தை உனக்குக் காட்டாமல் அவர்களைக்குறித்து மேன்மையாகப்பேசியும், நீ சென்ற இரா மசாமிமுதலியாரிடம் கடன் கேட்டும் உன்னை ஏமாற்றி உன்னிடம் இருந்ததையும் உன் சினேகன் மாணிக்கத்தினிடம் இருந்ததையும் எல்லாம் கொடுக்கும்படி செய்தேன். இரவலாக வாங்கிவந்த பத்திரங்கள் சொந்தக்காரரைப் போய்ச் சேர்ந்தன. நீ கனகாம்புஜத்தின் விஷயத்தில் செய்ததே உன்னை இந்த முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. நீ உலகிலிருக்க வேண்டிய நாளை எவ்விதம் கழிக்கப்போகிறாய்! இரந்துண்டே காலம் கழிக்கவேண்டும்.

மாணிக்கம்.—அடா பாவி! உன்னால் எனக்கிருந்த பொருளும் போனதே. அந்தத் தேவடியாள் முத்திரை வைக்கும்பொழுது உறை பெட்டியில் தவறி விழுந்தது போல் போட்டு வேறொன்றை எடுத்து முத்திரை வைத்துக்கொடுத்து விட்டாளே! இனிமேல் என்ன செய்கிறது! இந்தக்கடிதம் எழுதினவன் யாரென்று பார்க்கலாம் என்றாலும், அது இடதுகையால் எழுதியதுபோல் காணப்படுகிறதே! (என்று கடிதத்தை இரத்தினத்திடம் போட்டுத் தலையில் கையை வைத்துக்கொண்டிருந்தான்.)

இரத்தினம் கடிதத்தை வாங்கி வாசித்துத் திகைத்துக்கொண்டிருந்தான்.

22-ம் அத்தியாயம்.

மயிலாபுரியில் நாலேந்து வேலி நிலத்தைத் தோட்டமாகக் கொண்ட ஓர் அரண்மனையை மிகவும் அலங்காரப்படுத்தி வருணங்கள் புதிதாக வைத்தும், அரண்மனையின் மேல்மெத்தையிலே கூடத்தின் பலவிடங்களிலும் விஞ்ஞதமான படங்களே மாட்டியும், பலவருணமமைந்த சுடரொளி வட்டத்தீபங்கள் தொங்கவிட்டும், ஒரு பக்கம் மேடை ஏற்படுத்தி அதை மசமல் பட்டால் மூடி மூன்று நாற்காலிகள் போட்டும், அதற்கு எதிரில் அனேக நாற்காலிகளே வரிசை வரிசையாக அமைத்து இருபக்கத்திலும் அதிக இடம் காலியாக விட்டும், சிறிய மேஜைகளேச் சரிகைசளிஞல் விசித்திரமான வேலைகளமைந்த பட்டுத்துண்டுகளால் மூடி அவைகளில் நூதனமான பதுமைகளேயும் யானேத்தந்தத்திஞற் செய்த அற்புதமான சாமான்களேயும் கண்ணுடியால் செய்த வேடிக்கைச் சாமான்களேயும் வெள்ளித்தட்டில் புஷ்பங்களே நிறைத்துக் காலியாக இருந்த இடத்தின் மத்தியில் இடைச்சிடை வைத்தும், மூலேக்கு மூலே புஷ்பத்தொட்டிகளே அமைத்தும், சந்தனச்கிண்ணங்களும் பன்னீர்ச்சொம்புகளும் தாம்பூலமும் கொண்ட தட்டுகளேப் பலபக்கங்களில் வைத்தும் அலங்கரித்திருப்பதை அரங்கராவ் பார்த்து இடையிடையே இங்குமங்கும் சிர்திருத்தும்படி கலியாண சுந்தர முதலியாரிடத்தும் விஸ்வநாத செட்டியாரிடத்தும் சொல்லிக்கொண்டிருந்து, சாப்பாடு விஷயம் எப்படியிருக்கிறதென்று கேட்டார்.

விஸ்வநாத செட்டியார்.—சுவாமி! பிராமணர்கள் மடைப்பள்ளியில் நிறைந்து பிராமண போஜனம் ஒரு பக்கமும் மற்றவர்களுக்கு வேறுபக்கமும் சமையல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன்.

அரங்கராவ்.—ஐயா கலியாணசுந்தர முதலியார்! பத்திரிகைகளே நான் சொன்னவர்களுக்கெல்லாம் அனுப்பியிருக்கிறீர்களா? அவைகள் எல்லாருக்கும் சேர்ந்திருச்குமா?

கலியாணசுந்தர முதலியார்.—தாங்கள் உத்தரவு செய்தவர்களுக் செல்லாம் அனுப்பியதோடு நான் அறிந்தவர்களுக்கும் அனுப்பியிருக்கிறேன். வெளியூரிலிருந்து அனேகர் இவ்வூருக்கு வந்திருக்கிறதாகவுங் கேள்வி.

அரங்கராவ்.—நம்மூரில் நான் சொன்னவர்களன்றி யார் யாருக்குப் பத்திரிகைகளே அனுப்பி வரும்படி சேட்டுக்கொண்டீர்?

கலியாணசுந்தர முதலியார்.—சோமசுந்தர முதலியார் என்னும் வாலிபன் என் குமாரனுக்குச் சினேகனுனதால் அவனேயும், புது ஊரிலிருக்கும் வைத்தியனையும், ஜெகநாத முதலியார் தங்கையையும், அவள் வீட்டில்

வந்திருக்கும் நடராஜ முதலியார் என்னும் ஒரு பெரியவரையும், பூங்கா வனத்தையும் அவள் மகளையும் வரும்படி கேட்டுக்கொண்டேன்.

அரங்கராவ்.—நீர் பெண்பிள்ளைகளை வரவழைப்பதனால் பிரயோசனமில்லை யாயினும் அவர்கள் வருவது எனக்குச் சந்தோஷமே !

கலியாணசுந்தர முதலியார்.—செழுங்கமலத்தை வரவழைக்காமற்போனால் பெரியவர் வரமாட்டார். பூங்காவனத்தை வரவழைக்காமற்போனால் செழுங்கமலம் வரமாட்டாளென்றே அவர்களையெல்லாம் வரவழைக்க எண்ணினேன்.

அரங்கராவ்.—நீர் சொல்வதைப்பார்த்தால் நடராஜ முதலியாரை வரவழைக்க வேண்டுமென்றே இவர்களை யெல்லாம வரவழைக்க எண்ணங் கொண்டீர் போல் காணப்படுகிறது. ஆனதால் நடராஜ முதலியார் பெரிய தனவந்தராக இருக்கவேண்டும் !

கலியாணசுந்தர முதலியார்.—அவர் தனவந்தரல்ல. அவர் ஏழைகளிலெல் லாம் ஏழையே.

அரங்கராவ்.—பின் அவரை வரவழைக்க வேண்டிய காரணம் யாது ?

கலியாணசுந்தர முதலியார்.—அவர் சாமர்த்தியமாகப் பேசுந்திறமையுள்ள வர். என் மகன் ஒரு ரூபாய் கைக்கொண்டு என்னைவிட்டு நீங்கிக் கடிதம் எழுதாமலிருந்தான். இவைகளை ஆதாரமாகக்கொண்டு அனேக விஷயங்களைத் தீர்க்கதரிசிபோலச் சொன்னார். அவர் இருந்தால் இவ்விடம் வரப்போகும் தங்களுடைய சினேகரைச் சந்தோஷப்படுத்தி வாரென்றே வரும்படி கேட்டுக்கொண்டேன்.

அரங்கராவ்.—உம்முடைய விருப்பம் அவ்விதமானால் நான் சந்தோஷப்பட வேண்டியதே ! அதோ ஜெகநாதமுதலியாரும் வந்து விட்டார். வாரும் வாரும் ஜெகநாத முதலியார்.

ஜெகநாத முதலியார்.—நமஸ்காரம் சுவாமி ! தங்களைச் சினேகமாகக் கொண்டு இப்பதியில் குடியேறப்போகும் தனவந்தர் மிக்க பாக்கியவா னென்றே சொல்லவேண்டும் !

அரங்கராவ்.—இனத்தை இனம் தேடுமாசையால் தனவந்தரைத் தன வந்தரே தேடுவார்கள். எத்தனை தனவந்தர் இந்த ஊருக்கு வந்தாலும் உம்மைப்போல் தனவந்தனைக் போகிறதில்லை.

ஜெகநாத முதலியார்.—சுவாமி ! நான் பெயருக்குமாத்திரம் தனவந்தனே யல்லது, உண்மையாகத் தனவந்தனல்லவே ?

அரங்கராவ்.—ஜெகநாத முதலியார் ! உம்முடைய தமையன் சொத்துக்கள் யாவும் உம்மைச் சேரும்படி நாளை உத்தரவாகப் போகிறது. இன்று என்

சினேசன் இவ்விடம் வருவதால் நான் இங்குவர நேரிட்டது. அல்லர் மற்போனுல் இன்றே தீர்மானம் சொல்ல எண்ணியிருந்தேன். ஒரு நாள் தாமதமானதைச்குறித்து நான் அதிக வியசனப்படுகிறேன். இன்று வரப்போகும் தனவந்தனுகிய என் சினேசனுக்கு யாவும் நீரே இன்று நடத்த வேண்டுமென்று உள்ளமிசவும் சேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெகநாத முதலியார்.—சுவாமி! தங்களுடைய விருப்பம்போல் செய்யத் தடையில்லை. அவர் எப்பொழுது வருவார்?

அரங்நாவ்.—அவரை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கி றேன். (என்று தம்மோடு இருந்தவர்களைப் பார்த்து) நாம் செய்ய வேண்டியவைகளையெல்லாம் செய்துமுடித்துவிட்டோம். சேவகர் வரு கிறவர்களுக்கு மரியாதை செய்து உட்கார வைப்பார்கள். நாம் ஓரிடத் தில் உட்கார்ந்திருக்கலாம் வாருங்கள்.

கலியாணசுந்தர முதலியார்.—ஸ்வாமி! நானும் சேவகர்களோடிருந்து வரு கிறவர்களுக்கு மரியாதை செய்துகொண்டிருக்கிறேன்.

வில்வநாத செட்டியார்.—சுவாமி! நான் மடைப்பள்ளியைப் பார்த்து வருகிறேன்.

அரங்நாவ்.—ஜெகநாத முதலியார்! நாம் இருவருமே வேலையில்லாமல் இரு க்கிறோம். நாம் போய் உட்காரலாம் வாரும். (என்று ஜெகநாத முதலி யாரை அழைத்துச்சென்று மேல்மெத்தைக்குப் போகும் படிகளுக்கு அருகிலுள்ள அறையில் உட்காரச்சொல்லித் தாமும் உட்கார்ந்தார்.)

ஜெகநாத முதலியார்.—இங்கிருந்தால் வருகிறவர்களே யெல்லாம் பார்த்துக் கொள்ள முடியும். (என்று உட்கார்ந்து வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.)

அனேகர் அவ்வழி வரவும் அவர்களுக்குப்பின்னுல் செழுங்கமலமும், பூங் காவனமும், வனசாக்ஷியும், நடராஜமுதலியாரும் வரும்பொழுது, நட ராஜமுதலியார் செழுங்கமலத்தைப் பார்த்து, அம்மா! எனக்கு இவ்வி டத்திற்கு வரப்பிரியமில்லையென்று சொல்லிய என்னைக் கட்டாயப் படுத்தி அழைத்து வருகிறாயே! இதனுல் உனக்கு என்ன பிரயோச னம்? நாம் தனவந்தரோடு இன்று வார்த்தையாடப் போகிறோமா? இல்லையே! நாம் வீட்டில் சாப்பிடாமல் வந்தது தப்பிதம். கலியா ணசுந்தரமுதலியாரும் வேலையில்லாமல் உனக்கும் எனக்கும் பத்திரி கையை அனுப்பிவிட்டார். நீயும் உன்மகளும் இந்த அரண்மனையி லிருந்து என்னை வரும்படி யழைக்க நேர்ந்தால் நான் வரவேண்டி யது கட்டாயம். அதை விட்டு, எவனோ வரப்போகிறான், அவனுக் காக அரங்கராவோ தொங்கராவோ படாத பாடெல்லாம் பட்டுத் தன்

சினேகனைச் சந்தோஷப்படுத்த எண்ணங்கொண்டிருக்கிறனென்ற இடத்தில் நமச்சென்ன வேலையென்றெண்ணமல் வந்து விட்டோமென்றார். நடராஜமுதலியார் சொல்வதைக் கேட்டுக்கொண்டு வந்த கலியாணசுந்தரமுதலியார் இதென்ன அபிப்பாயமாக இருக்கிறது. அரங்கராவ் காதில் விழும்படி ஏதேதோ சொல்லுகிறாரே யென்று பெரியவரிடம் சென்று, ஐயா! தாங்கள் சொல்வதை அரங்கராவ் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார். பேசாமல் போய் உட்காருங்களென்று அனுப்பிவிட்டு, அரங்கராவ் இருந்த அறைக்குள் சென்றார். நடராஜ முதலியார் பயந்து, அம்மா! செழுங்கமலம்! அரங்கராவ் அவர்கள் அங்கிருக்கிறாரென்று நீயாகிலும் சொல்லக்கூடாதா? நான் என்னென்னவோ சொல்லி விட்டேனே! இந்த அவதிக்கு என்ன செய்கிறது? என்றார்.

செழுங்கமலம்.—அண்ணா அவரை நானறியேனுதலால் சொல்லவில்லை.

அறைக்குள் அரங்கராவோடு உட்கார்ந்திருந்த ஜெகநாதமுதலியார் நடராஜ முதலியார் சொல்லியவைகளைக் கேட்டு, பார்த்தீர்களா! இந்தக் கிழவன் என்ன சொன்னான்? அவனை இவ்விடத்தில் இருக்கவிடாமல் தூரத்திவிட உத்தரவளித்து வருகிறேனென்று எழுந்தார். அரங்கராவ் ஜெகநாத முதலியாரை நிறுத்தி அந்தப்பெரியவர் உம்முடைய தங்கையோடு வந்திருப்பதால் நாமொன்றும் சொல்லக்கூடாது. அவரை ஏதாகிலும் சொன்னால் உம்முடைய தங்கைக்கு மனவருத்த முண்டாகும். கலியாணசுந்தரமுதலியாரும் அவர் விஷயத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறாரென்றார். தன் பெயரைச் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு வந்த கலியாணசுந்தர முதலியார் என்னைக்குறித்து என்ன பேசுகிறீர்களென்று அறைக்குள் நுழைந்தார்.

ஜெகநாத முதலியார்.—ஐயா! நீர் வரவழைத்த கிழவன் நம்முடைய சுவாமியவர்களைக் கேவலமாகப் பேசிப் போகிறான்.

கலியாணசுந்தர முதலியார்.—சுவாமி! நான் அவரை வரவழைத்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். உத்தரவாலை அவரை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன்.

அரங்கராவ்.—முதலியாரே அவர் என்னைக் கேவலமாகப் பேசவில்லை. அவர் பேசியது எனக்குச் சந்தோஷமேயன்றி வருத்தமில்லை. நீர் எதற்காக இங்கு வந்தீர்?

கலியாணசுந்தர முதலியார்.—ஸ்ரீனிவாஸ ஐயங்கார் தங்களைப்பார்க்க வேண்டுமென்று ஆள் அனுப்பினார். என்ன சொல்லியனுப்புகிறது?

அரங்கராவ்.—அவரை இங்கு வரச்சொல்லும்.

அப்படியே சொல்லியனுப்புகிறேனென்று கலியாணசுந்தர முதலியார் நீங் கிய சிலநேரத்தில் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஒரு பிராமணனை அழைத்துக் கொண்டு அரங்கராவ் இருந்த அறைக்குள் வந்து நின்றார்.

ஜகந்நாத முதலியார்.—அடா துன்மார்க்கா! பத்திரத்தைக்கொண்டுபோய் என் தங்கை செழுங்கமலத்திடம் கொடுக்கச் சொல்லியனுப்ப அதை எடுத்துக்கொண்டு ஓடிப்போன பாதகா! உன்னை இலேசில் விடக் கூடாது. (என்று ஸ்ரீநிவாஸ ஐயங்காரோடு வந்த பிராமணனை அடிக்க எழுந்தார்.)

அரங்கராவ்.—சற்று நிதானியும்! அந்தப் பிராமணனை அடிக்கவேண்டாம்! ஓய்! ஐயரே! உமது பெயரென்ன? ஜகந்நாத முதலியாரவாள் உம்மி டத்தில் பத்திரம் கொடுத்தேனென்பது உண்மையா?

பிராமணன்.—சுவாமி! என்பெயர் குப்புசாமி ஐயன். என்னிடத்தில் முத லியாரவர்கள் பத்திரம் கொடுக்கவில்லை.

ஜகந்நாத முதலியார்.—என்ன சொன்னாய்? பத்திரத்தை என்னிடத்திலிரு ந்து வாங்கிக்கொண்டு போகவில்லையா?

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—முதலியாரவர்கள் சொல்லுகிறது எந்தப் பத்திரம்?

ஜகந்நாத முதலியார்.—என் தங்கையினுடைய நிலத்தை ஒற்றியாக வாங்கிய பத்திரத்தையே இவரிடம் கொடுத்தனுப்பினேன்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—அந்தப் பத்திரத்தை எங்கிருந்து எடுத்துக்கொடுத் தீர்? நீர் கொடுக்கும்பொழுது மணி என்ன இருக்கும்?

ஜகந்நாத முதலியார்.—என் பெட்டியிலிருந்தே எடுத்துக்கொடுத்தேன்! மணி ஒன்பது இருக்கலாம். (என்று கோபமாகச் சொன்னார்.)

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—ஐயா! உம்முடைய தங்கையின் நிலத்தை ஒற்றியாக யார் எழுதி வாங்கினது?

ஜகந்நாத முதலியார்.—குப்புசாமி ஐயரே எழுதி வாங்கிக்கொண்டார்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—அந்தப் பத்திரம் தங்களிடத்தில் வரவேண்டிய தென்ன?

ஜகந்நாத முதலியார் திகைத்து நாம் குப்புசாமி ஐயனைக் கண்டவுடன் கோபித்து முன்பின் வருவதை யோசியாமல் சேட்டதால் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் நாம் சொல்லியதை ஆதாரமாகக்கொண்டு உண்மையை வெளியாச்சப் பார்க்கிறார். நம்முடைய வார்த்தையினாலேயே நாம் அகப்பட்டுக் கொண்டோமென்று நினைத்து, ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அர

ங்கராவ் முன்னிலையில் சேட்பதால் பதில் சொல்லியே தீரவேண்டு மென்று ஸ்ரீநிவாச ஐயங்காரைப்பார்த்து, பத்திரத்துக்குச் சேரவேண் டிய தொகையை நான் செலுத்தி வாங்கி வைத்திருந்த பத்திரத்தை இவரிடம் தந்து என் தங்கையிடம் கொடுக்கும்படி சொன்னேன் என்றார்.

ஸ்ரீநிவாச ஐயங்கார்.—பணம் எப்பொழுது கொடுத்தீர் ?

ஜகநாத முதலியார்.—இந்தக் கேள்வி களெல்லாம் என் சேட்கிறீர் ?

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—காரணம் இல்லாமல் கேட்கவில்லை, எப்பொழுது பணம் கொடுத்தீர் ?

ஜகநாத முதலியார்.—அன்று காலையில் பணம் கொடுத்தேன்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—உமக்குப்பணம் எது ?

ஜகநாத முதலியார்.—ஐயங்காரே நீர் கேட்பது சிரிப்புக்கிடம் தருகிறது ! எனக்குப் பணம் எதென்றால், அது வந்த வழியைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே !

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—நீர் பத்திரத்துக்குப் பணம் கொடுத்து அன்று காலை யில் வாங்கி வைத்துக்கொண்டு, அன்றெல்லாம் பத்திரத்தைக் கொண்டு போய் உம்முடைய தங்கையினிடம் கொடுக்க ஆளகப்படாமல், இரவில் ஒன்பதுமணிக்குக் கொண்டுபோய்க்கொடுக்க இவர்தானா அகப்பட்டார்? சவாஸ்! இவரிடம் பத்திரத்தைக் கொடுக்குமுன் நீர் வெளியில் வந்து பார்த்தீரே, உமக்கு ஞாபகம் இருக்கிறதா ? நீர் வெளியில் வந்து பார்த்த பொழுது ஒருவர் உம்முடைய கண்ணுக்குத் தட்டுப்பட்டு, அங்கு போகி றது யார் ? என்று நாகபூஷணத்தை நீர் கேட்ட பொழுது, நாகபூஷணம் யாரோ ஒருவன் யாசகத்துக்கு வந்தானென்று சொல்ல, நீர் நல்ல சமயம் பார்த்து யாசகத்துக்கு வந்தான், ஒருவரையும் உள்ளே விடவேண்டாம் என்று வீட்டுக்குள் சென்றீரே ! இவைகளில் எதேனும் உமக்கு ஞாப கத்திலிருக்கிறதா ?

ஜகநாத முதலியார்.—இவைகளெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை.

ஜகநாதமுதலியார் மறுத்தவுடன் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் படிக்கட்டுக்கருகில் சென்று நாகபூஷணம் என்று கூப்பிட்டார். உடனே ஒருவன் என் ஐயாவென்று ஓடிவந்தான். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவனை அழைத்துப் போய் அரங்கராவ் முன் விட்டு, நாகபூஷணம் ! என்னை எப்பொழு தாகிலும் முதலியார் வீட்டில் பார்த்திருக்கிறாயா ? என்று கேட்டார்.

நாகபூஷணம்.—சில மாதங்களுக்கு முன் குப்புசாமி ஐயரோடு தாங்கள் என் எஜமான் வீட்டுக்கு வந்தீர்கள்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.—அப்பொழுது என்ன நடந்தது ? ஒன்றையும் விடாமற்சொல்.

நாகபூஷணம்.—குப்புசாமி ஐயர் வீட்டுக்குள் போனவுடன் தாங்கள் இன்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். நானும் தங்களோடு இன்று கேட்டிருந்தேன். எஜமான் வெளியில் வரப்போவதை யறிந்து தாங்களும் நானும் அவ்விடத்தை விட்டு நீங்கினோம்.

அரங்கராவ்.—போதும், மற்றவைகளைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஓய் குப்புசாமி ஐயரே ! பத்திரத்தின் சமாசாரம் உமக்கென்ன தெரியும்?

குப்புசாமி ஐயர்.—சுவாமி ! செழுங்கமலத்தம்மாளுடைய நிலத்தை எனக்கு ஒற்றி வைத்ததாக என் பெயருக்குப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டவுடன் எனக்கு ஆயிரம் ரூபாய் இனாமாகக்கொடுத்ததுமன்றி, அதன் மாசூலைத் தண்டி முதலியாரவர்களிடத்தில் செலுத்தி வர எனக்கு மாதச் சம்பளம் நூறு ரூபாய் கொடுத்தும் வந்தார். பத்திரம் முதலியாரவர்களிடத்திலேயே இருந்தது. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்னைப் பயமுறுத்திப் பத்திரத்துடன் உண்மையான விஷயத்தைக் குறித்துக் கேட்ட பொழுது, நிலத்தை ஒற்றிவாங்கினது ஒப்புக்கேயன்றிப் பணம் ஒருவரும் கொடுக்கவில்லையென்று உண்மையைச்சொல்லி ஸ்ரீநிவாஸ ஐயங்காரிடம் போய் அவரோடு முதலியாரவர்கள் வீட்டுக்குச் சென்று பத்திரத்தைப்பெற்று ஸ்ரீநிவாஸ ஐயங்காரிடம் சென்றேன்.பத்திரம் என்னிடத்திலிருக்கிறதைக் கொண்டு வந்தேன். (என்று அரங்கராவிடம் பத்திரத்தைக் கொடுத்தார்.)

குப்புசாமி ஐயர் சொல்லியதை முற்றிலும் கேட்டிருந்த ஜெகநாதமுதலியார், பத்திரத்தின் உண்மையை அரங்கராவ் அறிந்து கொண்டதால் அது விஷயத்தை மறுத்து இன்னும் பேசுவது பிரயோசனத்தைத் தராதென்று மௌனமாயிருந்தார்.

அரங்கராவ்.—முதலியாரவர்கள் தம்முடைய தங்கையின் நிலத்தைக் கைப்பற்றி யிருந்தாரேயன்றி வேறொருவருடைய சொத்தையும் அபகரிக்கவில்லை யானதாலும், செழுங்கமலத்தம்மாள் தன் சகோதரன்மேல் குற்றம் சொல்லாமலிருக்கிறதாலும் நாம் அது விஷயத்தைக் குறித்துப்பேசவியாயமில்லை. நான் இந்தப் பத்திரத்துக்கு வேண்டியதைச் செய்து முதலியாரவர்களுடைய தங்கையிடம் சேர்த்து விடுகிறேன். நான் விரும்பிய யாவரும் வருகிறதால் நாம் கூடத்துக்குப் போகலாம் வாருங்கள். (என்று அலங்கரித்திருக்கும் இடத்திற் கழைத்து வந்தார்.)

சேவகர்கள் கூடத்தில் நின்று வருகிற பிராமணரை ஒருபக்கமும் மற்றவர்களை ஒருபக்கமும் உட்காரவைத்து உபசாரம் செய்து கொண்டிருந்

தார்கள். கலியாணசுந்தர முதலியாருடைய பெண்சாதி மீனாக்ஷியம்மாள் வருகிற பிராமணஸ்திரீகளே ஒரு பக்கமும் மற்றப் பெண்பிள்ளைகளே வேறு பக்கமும் இரத்தினக் கம்பளத்தில் உட்காரும்படி உபசாரம் சொல்லிக்கொண்டிருந்தாள். அரங்கராவ் அவ்விடம் வந்ததைக் கண்டயாவரும் எழுந்து நின்றார்கள். அவர்களே உட்காரும்படி அரங்கராவ் யாவரையும் கேட்டுக்கொண்டபின், ஸ்ரீநிவாச ஐயங்கார் அங்கு நின்றிருந்த ஒருவனை அழைத்துவந்து அரங்கராவிடம்விட்டு, சுவாமி! இவர் சத்திரம் வேங்கடாசல முதலியார் என்றார். அரங்கராவ் அவனைச் சன்மானித்து உட்காரச்செய்து, யாவரும் வந்துவிட்டார்கள், முதலாளிதான் வரப்பாக்கியாக இருக்கிறார், அவர் வருமுன் நான்செய்ய வேண்டியவை சில உள. அவற்றை முடிக்க உத்தரவு கொடுங்களென்று வேங்கடாசலமுதலியாருடைய சம்மதத்தைப்பெற்று ஜெகநாத முதலியாரோடு மேடைமேல் போட்டிருந்த நாற்காலியருகில் நின்று—

பிரிய சினேகர்களே!

தங்களுக்கு அனுப்பிய பத்திரிகையால் நான் தங்களே வரவழைத்த காரணம் இன்னதென்று அறிந்திருப்பதால் மீண்டும் அதுவிஷயத்தைச்சொல்ல வேண்டிய அவசியமில்லை. என்னுடன் பள்ளியில் வாசித்தபாலிய சினேகன் இவ்வூரில் குடியேறப்போகிறதால் அவர் முதல் முதல் இவ்வூருக்குவரும்பொழுது என்னால் இயன்றதைச்செய்து என் சினேகனைக் கனப்படுத்தவேண்டுமென்று கலியாணசுந்தர முதலியாருடைய் உதவியையும் விஸ்வநாதசெட்டியாருடைய உதவியையும் பெற்று இவ்வீட்டை என் சக்திக்கேற்க அலங்கரித்து வைத்திருக்கிறேன். என்னுடைய சினேகன் பெரிய தனவந்தனுதலால் அவனை நானே தனியாக நின்று கனப்படுத்துதல் அழகாகாதென்று இவ்வூரில் யாவரிலும் மேன்மையாயிருந்து காலஞ்சென்ற வேலுமுதலியாருடைய குமாரர் அருணாசலமுதலியார் ஜெகநாதமுதலியார் என்ற இருவரில் மூத்தவராகிய அருணாசலமுதலியார் கப்பலேறிச்சென்று இறந்ததைக்கேட்டு ஆறுமாதம் வெளியில் வராமலும் ஒருவரோடும் வார்த்தையாடாமலும் தம் தமையனுக்காகத் தூக்கப்பட்டிருந்த இப்புண்ணியவானாகிய ஜெகநாத முதலியாரவர்களே வருகிற என் சினேகனே எதிர்கொண்டழைத்துச் சன்மானிக்கக் கேட்டுக்கொண்டேன். இவரும் என் வேண்டுகோளுக்கொப்பினர். நான் செய்தது யாவருக்கும் சந்தோஷமாகவும் சம்மதமாகவும் இருக்குமென்று நம்புகிறேன்.

என்று உட்கார்ந்து ஜெகநாத முதலியாரையும் உட்காரும்படி வேண்டினர். அரங்கராவ் தம்முடைய கருத்தைத்தெரிவித்து உட்கார்ந்தவுடன் ஒருவன் எழுந்து,—

சுவாமிகளுக்கும் இங்கு வந்திருக்கும் கனதனவான்களுக்கும் நமஸ்காரம்! நியாயாதிபதி அரங்சராவ் அவர்கள் தம்முடைய சினேசன் நல்வரு கையை எதிர்நோக்கி இவ்வரண்மனையைப் பார்க்கிறவர்களுடைய கண்களுக்கவரும்படி அதிக சிறப்பாய் அலங்காரித்து, இந்தச்சாக்ஷி யைக் கண்டானந்திக்க மயிலாபுரியிலுள்ளவர்களையும் மற்ற ஊர்களி லுள்ளவர்களையும் வரவழைத்ததைச்குறித்து நாம் யாவரும் நன்றியறி தலான வந்தனத்தைச் செலுத்தவேண்டும். அருமையாக வரப்பெற்ற தம்முடைய சினேசன் அகமகிழ அலங்காரத்தைச்செய்து அவலக்ஷ ணத்தை முன்காட்டுவது அநியாயம். ஒருவன் குணத்தை அவன் சினேசரால் அறிவதுபோலவும் பானைச்சோற்றின்பதத்தை ஒரு சோ ற்றிலால் அறிவதுபோலவும் இவ்விடம் வந்திருப்பவர்கள் எத்தன்மை யானவர்சளென்று வருகிறவர் களிதிலறிய நற்குண நற்செய்கையுள்ள ஒருவனை நியமித்து அவரால் வருகிறவனைச் சன்மானிக்கச் செய்ய வேண்டியதேபன்றித், தன் தமையன் சொத்து நாளை தன்னைச் சேர்ந் தால் அடுத்த மூன்று தினத்திற்குள் தாசிகளுக்கும் துன்மார்க்கர்களுக் கும் பங்குபோடச் சர்வசித்தமாயிருக்கும் இந்தத் துன்மார்க்சனை அவ் வளவு பெரிய தனவந்தனை உபசரிக்க நியமிப்பது கூடாது.

என்று சொல்லி உட்கார்ந்தான். அங்கு உட்கார்ந்திருந்த யாவரும் வெளிப் படையாக இவ்வளவு சொல்லியது கூடாதென்று முறுமுறுத்தார் கள்.

ஜெகநாத முதலியார்.—அடா சோமசுந்தரப்! என்னசொன்னாய்? உன் வாய்க் கொழுப்பால் உளறியதெல்லாம் நாளை நியாயஸ்தலத்தில் அறிந்துகொள் ளுவாய்! என்னைத் துன்மார்க்கன் என்றதை நீ நாளை மெய்ப்பிக்கா மற்போனால் உன்னை விடமாட்டேன்.

சோமசுந்தரம்.—அடா பாபி! தோஷி! எனக்கு நாளைபரியந்தமா தவணை கொடுக்கிறாய்! அது அனுவசியம்! இங்கு வந்திருப்பவர்கள் யாவரும் அறிய இப்பொழுதே மெய்ப்பித்துவிடுகிறேன். பார்.

என்று படிக்கட்டருகில் சென்று, காத்தன்! சாத்தன்! விரைவில் வாருங்கள் என்று அழைத்துவிட்டுத், தன் நாற்காலியில்வந்து உட்கார்ந்தான். காத்தனும் சாத்தனும் வந்தோம் வந்தோமென்று ஓடிவந்து சோமசுந் தரம் அருகில் நின்றார்கள். சோமசுந்தரம் எழுந்து நின்று சாத்தனுக் கும் சாத்தனுக்கும் ஜெகநாத முதலியாரைக் காட்டி அங்கிருப்பவர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டான்.

காத்தனும் சாத்தனும்.—ஆம். எங்களுக்கு அவரை நன்றாய்த் தெரியும். அவ ருக்கு அனேக காரியங்கள் செய்திருக்கிறோம்.

சோமசுந்தரம்.—அவைகளில் முக்கியமானதாக ஒன்று சொல்லுங்கள்.

காந்தன்.—அனேக வருடங்களுக்குமுன் ஒரு குழந்தையை எங்களிடம் கொடுத்து அக்குழந்தையைக் கொண்டுபோய்க் கொன்று ஒருவரும் காணாத இடத்தில் புதைத்துவிடுங்களென்று சொல்லி எங்களுக்கு ஆளுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்ததுமன்றி முடித்துவந்தபின் ஆயிரம் ரூபாய் இனு மளிப்பதாகவும் சொன்னார்.

சோமசுந்தரம்.—நீங்கள் என்னசெய்தீர்கள்?

காந்தன்.—நாங்கள் இரவில் பத்துமணிக்கு இந்த ஊருக் கருகிலுள்ள காட்டுக்குள் குழந்தையைக் கொண்டுபோய் உயிரோடு புதைத்துவிட எண்ணங்கொண்டு காத்தன் குழிவெட்டும்பொழுது குழந்தை அழுதது. நான் கைவாளால் குழந்தையை வெட்டப்போன சமயத்தில் யாரோ ஒருவர் என் கையிலிருந்த வாளைத் தட்டிவிட்டு வாளின் பின் புறத்தினால் என் தலையில் அடித்து என்னை மூர்ச்சையாக்கினர்.

காந்தன்.—காத்தன் மூர்ச்சையாகி விழுந்தவுடன் நான்போய் அவரை வெட்டினேன். அவ்வெட்டையும் தட்டிவிட்டு நான் மூர்ச்சையாய் விழ என்னையும் அடித்தார். நாங்கள் இருவரும் நெடுநேரத்துக்குப்பின் எழுந்து குழந்தை இல்லாததைக்கண்டு இரகசியத்தை வெளிவிடாமல் குழந்தையைக் கொன்றுவிட்டோமென்று இவரிடம் சொல்லி எங்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்த இரண்டாயிரம் ரூபாயையும் பெற்று ஆளுக்காயிரம் எடுத்துக்கொண்டோம்.

சோமசுந்தரம்.—உங்களையடித்து மூர்ச்சையாக்கியவர் இன்னரென்று தெரியுமா?

காந்தன்.—எனக்குத் தெரியும், அவரை இரண்டு மூன்று தடவைகளில் பார்த்திருக்கிறேன். காத்தனுக்குப் பின்புறமாக அவனே வந்து அடித்ததால் அவரை அவன் பார்க்கவில்லை.

சோமசுந்தரம்:—உங்களையடித்து மூர்ச்சையாக்கினவர் இந்தக் கூட்டத்திலிருக்கிறாரா?

காத்தன் அவ்விடத்தில் இருந்தவர்களையெல்லாம் பார்த்து, அவர் இங்கில்லை என்றான். சோமசுந்தரம் தன்னருகில் உட்கார்ந்திருந்தவரிடம் ஒரு சாவியைக்கொடுத்து மெதுவாகச் சாதில் சில வார்த்தைகளைச் சொல்லி அவனை அனுப்பியபின், காத்தனைப் பார்த்து, நான் உன்னைக் கூப்பிடுமளவும் வெளியில் போயிருவென்று அனுப்பினான். சோமசுந்தரத்திடம் சாவியைப் பெற்றுப்போனவர் திரும்பித் தன்னிடத்தில் வந்து உட்கார்ந்தவுடன் சோமசுந்தரம் காத்தனை யழைத்து, நீ இவ்விடத்திலிருப்பவர்களை நன்றாய்ப் பார்த்துச் சொல்லவில்லைபோல் காணப்படுகிறது, நன்றாய்ப் பார்த்துச் சொல்லென்றான். காத்தன் கவனமாய்ப் பார்த்து, அதோ நிற்கிறார் என்று கலியாணசுந்தர முதலியாரைக் காட்டினான்.

சோமசுந்தரம்.—(கலியாணசுந்தர முதலியாரைப் பார்த்து) ஐயா! தாங்கள் அனேக வருடங்களுக்கு முன் இரவில் இவ்விருவரையும் அடித்து மூர்ச்சையாக்கினீர்களாம்! ஏன் அவ்விதம் செய்தீர்கள்? உண்மையைச் சொல்லவேண்டியது இப்போது அவசியமாக இருக்கிறது.

கலியாணசுந்தர முதலியார்.—எனக்கு விவாகஞ்செய்து கொடுக்கக் கொண்டுவந்த பெண்ணைத் திருடர்கள் கொண்டுபோக நான் அத்திருடர்களை அடித்துத் துரத்திவிட்டுக் காட்டுவழியாக வரும்பொழுது குழந்தையின் அழுகுரலைக்கேட்டு என் மனைவியை விட்டுப்போய்ப் பார்த்தபோது ஒருவன் ஒரு குழந்தையை வெட்டப் போவதைக்கண்டு அவனையும் அவனோடிருந்தவனையும் அடித்து மூர்ச்சையாக்கிக் குழந்தையைக் கொண்டு வந்தேன்.

சோமசுந்தரம்.—ஐயா! அக்குழந்தை உயிரோடிருக்கிறதா!

கலியாணசுந்தர முதலியார்.—அப்பா சோமசுந்தரம்! நான் நெடுநாள் மறைத்து வைத்திருப்பதை பலர்முன் சொல்லும்படி செய்துவிட்டாய்! இவர்கள் கையிலிருந்து நான் விடுவித்துக் கொண்டுவந்த குழந்தைதான் உன் சினேகன் விஜயரங்கம். (என்று கண்ணிறைய நீர் கொண்டார்.)

சோமசுந்தரம்.—சுவாமிகளே! காத்தனும் சாத்தனும் சொல்லியவைகளை ஐயா அவர்கள் கேட்டிருந்தார்களென்று குறை சொல்லாமலிருக்க, ஐயா அவர்களைப் பின் சட்டறையில் விட்டுப் பூட்டிக்கொண்டுவந்தும், குழந்தையை விடுவித்துக்கொண்டு போனவர் இங்கில்லையென்று சாத்தன் சொல்லிய பின், ஐயா அவர்கள் வருவதைக்கண்டு சொல்லாமலிருக்க உவனை வெளியில் போகச்செய்து, என்னருகில் இருக்கிறவரால் கதவைத் திறப்பித்து ஐயா அவர்களை அழைத்துவரச் சாவியைக் கொடுத்தனுப்பினேன். ஆனதால், குழந்தையைக் கொலைசெய்யச் சொன்னது உண்மையென்று நிராக்ஷேபனையாய்க் காணப்படவில்லையா?

ஜெகநாத முதலியார்.—இவைகளெல்லாம் கட்டுச்சதை! நான் இந்தத் துஷ்டர்களை ஒருநாளாவது பார்த்ததில்லை. யாருடைய குழந்தையை இவர்கள் கொண்டுபோனார்களோ என்னவோ எனக்கொன்றுந் தெரியாது.

அரங்கராவ்.—ஜெகநாத முதலியாரவர்கள் சொல்வது மூற்றிலும் நியாயமாகத் தோன்றுகிறது. சாத்தனும் சாத்தனும் குழந்தையைக் கொண்டுபோனதைக் கலியாணசுந்தர முதலியார் மெய்ப்பித்துவிட்டாலும் குழந்தையை ஜெகநாத முதலியார் கொடுத்தாரென்றது உண்மைப்படவில்லை. குழந்தையைக் கொலைசெய்யத் துணிந்தவர்கள் ஜெகநாத முதலியாரவர்கள் மேல் பொய்சொல்லப் பின்வாங்கமாட்டார்கள்.

சோமசுந்தரம்.—சுவாமிகளே! தாங்கள் சொல்லியது நியாயமே! தாங்கள் எதிர்பார்த்திருக்கும் தனவந்தர் இன்னும் வரவில்லை. அவர் வருமளவு

வும் இப்படுபாவியின் கதையை நடத்திக்கொண்டிருக்க உத்தரவு கொடுக்கவேண்டும். காத்தனும் சாத்தனும் ஜேசுநாத முதலியார் விஷயத்தில் சொல்லியதைத் தாங்கள் தள்ளிவிட்டால் தான் தப்பித்துக் கொள்ளலாமென்று நினைத்திருக்கிறான். ஐயோ பாவம்! (என்று அருகில் நின்றிருந்த ஒரு சேவகனை அழைத்து) நீயே சுந்தரம் என்ற பெண்பிள்ளை இருக்கிறாள், அவளை அழைத்து வா. (என்றனுப்பினான். சிறிது நேரத்தில் சுந்தரம் வந்து நின்றாள்.)

சோமசுந்தரம்.—(சுந்தரத்தைப் பார்த்து) அம்மா! அங்கு நிற்கிறாரே! அவர் யார் தெரியுமா?

சுந்தரம்.—அனேக வருடங்களாகத் தெரியும்.

சோமசுந்தரம்.—எவ்விதம் தெரியும்?

சுந்தரம்.—என் புருடன் இவர் தமையனுடைய புன்செய்நிலங்களை மேற்பார்வை செய்திருந்ததால் நானும் என்புருடனும் காட்டில் குடியானவர்களுக்கு அருகில் குடியிருந்தோம். இவர் தமையன் இறந்த சில மாதங்களில் என் புருடனும் இறந்தார். நான் அக்காட்டிலிருக்கும் பொழுது இவர் என்னிடம் வந்து என்னால் ஒருவேலை முடியவேண்டியதாயிருந்ததென்றும் தாம் சொல்லும் விதம் நடந்தால் எனக்கு வேண்டியவைகளைச் செய்வதாகவும் சொன்னார். நான் இவர் கருத்தென்னவென்று கேட்டபோது, இவர் தம்மிடத்தில் ஒரு பெண்பிள்ளை இருப்பதாகவும், அவளை என்னிடத்தில் அனுப்புவதாகவும், அவளுக்குத் துணையாக இருப்பதோடு அவளை எங்கும் போகவிடாமல் வைத்துக்கொள்ளவேண்டியதாகவும் சொல்லிப்போன மூன்றும் நாள் இரவில் பூரணசருப்பமான ஒரு பெண் பிள்ளையை இங்கு நிற்கும் காத்தனும் சாத்தனும் கொண்டு வந்தார்கள். பூரண கருப்பமாயிருப்பவளை வண்டியிலேற்றலாமா? இந்நேரத்தில் கொண்டுவரலாமா? என்று காத்தனையும் சாத்தனையும் கேட்ட பொழுது அவர்கள் தங்களுடைய எஜமான் உத்தரவு பிரகாரம் விடிய ஒரு ஜாமத்துக்கு முன் வண்டியிலேற்றிப் பகலெல்லாம் நடந்து இரவில் கொண்டுவர நேரிட்டதென்றார்கள். நான் அப்பெண்பிள்ளையை உபசரித்துத் தேறுதல் சொல்லி வந்த சில தினங்களுக்குப்பின் அவள் சுந்தரமான ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அவளையும் குழந்தையையும் அதிக கவனத்தோடு பார்த்துவந்தேன். சில மாதங்களுக்குப்பின் ஒருநாள் அவள் பின்புறத்தில் போயிருந்தபொழுது, நானும் குழந்தையை அணையாடையில் தூங்கவைத்து அவளோடு சென்றிருந்துவந்து பார்த்த காலத்துக் குழந்தை காணுமற் போனதைக்கண்டு நாங்கள் கொண்டதுக்கத்துக்கு அளவில்லை. தன் பிள்ளை போய்விட்டதால் தான் உயிரோடிருப்பதிற் பயனில்லை யென்று அம்மாது இறக்கத் துணிந்தாள். நான்

அவளுடைய எண்ணம் மாறப் பலவற்றைச் சொல்லிவந்தேன். மூன்று மாதமானபின் இவர் (ஜெகநாத முதலியார்) நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து குழந்தை சாணுமற்போனதைக் சேட்டுக் குழந்தையை ஓ நாய்க்கோ நரிக்கோ கொடுத்துவிட்டோமென்று என்னைக் சோபித்து அப் பெண்பிள்ளையின் துக்கம் மாறச் சிலநேரம் பேசியிருந்து பின் அவளைத் தமக்கு மனையாட்டியாக இருக்கத் தொந்தரை செய்தபோது அவள் சம் மதப்படாததைச்சண்டு அவள் தனக்கு வசியப்படும்படி செய்து வைக்க வேண்டுமென்று எனக்கு உத்தரவு செய்தார். நான் இவ்விதத் தொழி லுக்கு உடன்பட மாட்டேனென்று கோபமாகச் சொன்னதைக் சேட் டித், தம்முடைய உத்தரவைக் கடந்து நடந்தால் அக்குழந்தையை நானே கொன்று விட்டதாக மெய்ப்பித்து விடுவதாய்ப் பயமுறுத்தி எட்டுநாள் தவணை கொடுத்துப் போனவர் ஒன்பதாம் நாள்வந்து அப்பெண்பிள்ளை இறந்து புதைக்கப்பட்டிருக்கும் சமாதியைக்கண்டு அவள் போட்டிருந்த நகைகளை என்னை எடுத்துக்கொள்ளச் சொல்லிப் போய்விட்டார். சில வருடங்களுக்குப் பின் குழந்தையை நாங்களறியாமல் இவரே எடுத்துக் கொண்டு போனதாகவும் தாமே கொல்லத்துணியாமல் சாத்தனையும் காத் தனையும் தேடிக்கொடுத்து சொன்று விடும்படி சொன்னதாகவும் அறிந் தேன். அது முதல் இவரை நன்றாய் அறிவேன்.

ஜெகநாத முதலியார்.—இவைகளெல்லாம் இந்தச் சபையில் என்னை அவ மானப்படுத்த எண்ணங்கொண்டு உண்டு படுத்திய கட்டுக்கதைகள். ஒன் றும் பிரயோசனப்படுமென்று நினைக்கவேண்டாம்.

சோமசுந்தரம்.—இந்தப் படுபாவி தன்குற்றத்தையும் கெடுநினைவையும் இலே சாக ஒப்புக்கொள்ளமாட்டான். சீர்படுபவனல்லவா குற்றத்தை ஒப்புக் கொள்ளுவான்! மனோரஞ்சிதம் என்னும் பெண் கீழே இருக்கிறாள். அவளை அழைத்துவா. (என்று சேவகனை அனுப்பினன். உடனே மனோ ரஞ்சிதமும் சோமசுந்தரத் தருகில் வந்து நின்றாள்.)

சோமசுந்தரம்.—அம்மா! மனோரஞ்சிதம்! மேடைமேல் சுவாமியவர்களோடு இருப்பவரைக் குறித்து உனக்கு ஏதேனும் தெரிந்திருந்தால் அதை இங் கிருப்பவர்கள் கேட்கச் சொல்லவேண்டும்.

மனோரஞ்சிதம்.—இவர் பெண்சாதிவழியில் நான் இருவருக்கும் மசள்முறை யாசவேண்டும். என்னுடைய இளமையில் என் தாய்தந்தை இறந்துவிட் டதால் என்னை ஆதரிப்போர் ஒருவருமில்லாமல் தன்தாய் வீட்டிலிருந்த இவருடைய மனைவியோடிருந்தேன். மூன்று வருடத்திற்குமுன் இவர் அங்கு வந்திருந்தபொழுது என்னைக்கண்டு யாரென்று விசாரித்து என் மேல் பரிதாபப்பட்டுத்தான் அழைத்துப்போய்த் தன் மசள்போல் பாவித் துத்தக்க இடத்தில் விவாகஞ்செய்து கொடுப்பதாக யாவருக்கும் சொல்லி

அழைத்துவந்து ஒரு காட்டுக்குள் இந்தச் சுந்தரத்தம்மாள் இருந்த வீட்டில் விட்டுப்போய்ச் சிலநாள் பொறுத்துப் பலவித தின்பண்டங்களும் துணிகளும் கொண்டுவந்து கொடுத்தார். நான் தகப்பன் என்ற வாஞ்சையோடு வாங்கிக்கொண்ட சிலநேரத்துக்குப்பின்தன்செட்டை எண்ணத்தை வெளியிட்டார். நான் எதிர்பார்க்காத வார்த்தையைக் சேட்டதாலோ அல்லது திருவுளச்செயலாலோ எனக்கு நடுக்கம் உண்டானது. சமையலறையிலிருந்து வந்த சுந்தரத்தம்மாள் என்தேகம் நடுங்குவதைக்கண்டு என்னை அழைத்துப்போய்ப் படுக்கவைத்தார்கள். உடனே குளிரும் காய்ச்சலும் வந்தன. அதனால் அனேக நாள் நலியாயிருந்து இந்த சுந்தரத்தம்மாளால் காப்பற்றப்பட்டேன். நான் சொஸ்தமானபின் நெடுநாள் என்னைத் தேடிவராதிருந்தவர் சற்றேறக்குறைய இரண்டுமாதத்துக்கு மூன் நாங்களிருக்கும் இடத்திற்கு வந்தார். இவரைப் பார்த்தவுடன் என் கர்ப்பம் கலங்கி நான் தனித்து இவர் கையில் அகப்படாமலிருப்பதைக் கண்டு, என்னையும் சுந்தரத்தம்மாளையும் அழைத்து, சிலதினத்தில் காத்தனும் சாத்தனும் ஒரு பெண்ணை இம்மார்க்கம் கொண்டு வருவார்கள், அவளைப் பக்குவமாகப்பார்த்துத் தன் தோட்டவீட்டில் கொண்டுபோய் வைத்து அவளுக்குவேண்டியதைச் செய்துகொண்டிருக்க வேண்டியதென்றும், தோட்ட வீட்டில் தோட்டக்காரன் இருப்பதால் என்னை முன்னுக அங்கு போயிருந்து வேண்டியவைகளைச் சித்தப்படுத்தவேண்டியதென்றும், கொண்டுவரப்போகிற பெண் தன்மேல் அதிக ஆசை கொண்டிருந்தாலும் அவள் தன் சுற்றத்தாருக்குப் பயந்திருந்தாளென்றும், அவள் அவ்விடம் வந்தவுடன் சுந்தரத்தம்மாள் துணையாகப்போக வேண்டுமென்றும் சொன்னார். நான் அவ்விடத்தைவிட்டு நீங்கியபின் சுந்தரத்தம்மாளோடு சிலநேரம் பேசியிருந்துபோனார். நான் இவர் உத்தரவு பிரகாரம் வந்த வண்டியில் தனியாகத் தோட்டத்து வீட்டுக்குச் சென்றிருந்தேன். நான் அங்குபோன மறுநாள் கமலாக்ஷியம்மாளைக் காத்தனும் சாத்தனும் சுந்தரத்தம்மாளோடு இரவில் கொண்டுவந்தார்கள் நான் கமலாக்ஷியம்மாளை அழைத்துப்போய் உபசரித்தும் அந்த அம்மாள் எங்களைத் தூஷித்து நாள்தோறும் இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். மூன்றும் நாள் இப்புண்ணியவான் வந்து கமலாக்ஷியம்மாளைப் பார்த்தபொழுது, இவர் இஷ்டத்துக்கு உடன்படாமல் அந்த அம்மாள் இவரை நிந்தித்து, "காட்டிலிருக்கிற வீட்டில் ஒரு பிணத்தைப் புதைத்துவைத்துக் கொண்டதுபோல் தான் இருக்கும் வீட்டிலும் தன்னைப் புதைத்துவிட எண்ணங்கொண்டா?" என்றவுடன் இவர் பயந்து சுந்தரத்தம்மாளிடம் ஓடிவந்து, காட்டிலிருக்கிற வீட்டில் பிணம் புதைத்திருக்கிற சமாச்சாரம் கமலாக்ஷியம்மாளுக்கு எப்படித் தெரிந்ததென்று கேட்டு, தான் மூன்று நாள் தவணை கமலாக்ஷி

யம்மாளுக்குக் கொடுத்து அதற்குள் அவள் யோசித்துத்தன்னை விவாகஞ் செய்து கொள்ளாத விஷயத்தில் சற்பையழித்து அவளை வைப்பாட்டியாக வைத்துக்கொள்ளுவதாய்த் தெரிவித்து வந்ததாகச் சொல்லி நீங்கி மூன்றும் நாள் காலையில் வந்தபோது அவருக்குக் கமலாக்ஷியம்மாளைப் புதைத்திருக்கும் இடத்தை நான் காட்டியபின் கமலாக்ஷியம்மாளைப்பற்றிய சமாசாரத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று போய்விட்டார்.

ஜெகநாதமுதலியார்.—ஒரு வாலிபனைநே கமலாக்ஷி ஒடிப்போக அவள் குற்றத்தை மறைத்து என்மேல் குற்றம் சுமத்தவா துணிந்தீர்கள்? உங்களுடைய பிரயத்தனம் பிரயோசனப்படுமென்று நினைக்கவேண்டாம்.

கமலாக்ஷியை இழிவாக ஜெகநாதமுதலியார் சொல்லியதைக் கேட்டிருந்த செழுங்கமலமும் பூங்காவனமும் வனசாக்ஷியும் நடராஜ முதலியாரும் கண்களில் நீர்வடியத் துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

சோமசுந்தரம்.—சுவாமிகளே! இந்தப் படுபாவியை ஒரு துண்டு கடிதாசியில் தன் பெயரை எழுதச்சொல்லி வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும்.

அரங்கராவ்.—ஜெகநாதமுதலியாரவர்கள் கையொப்பம் என்னிடத்திலிருக்கிறது. அது எதற்காக?

சோமசுந்தரம்.—இத்துன்மார்க்கன் எழுதிய கடிதங்கள் சில என்னிடத்திலிருப்பதால் அவைகள் தன்னுடைய தல்லவென்று அவன் மறுக்கும் பொழுது தன் கையெழுத்தைக் காட்டவே கையொப்பம் வேண்டுமென்றேன். (என்று தன்னிடத்திலிருக்கும் கடிதங்களில் ஒன்றை எடுத்துப் போய் ஜெகநாத முதலியாருக்குக்காட்டி, இது உம்முடைய கையெழுத்தல்லவா? என்று கேட்டான்.)

ஜெகநாதமுதலியார்.—அது என்னுடைய கையெழுத்தைப்போல் எழுதி இருக்கிறதேயன்றி என்னுடைய கையெழுத்தல்ல.

சோமசுந்தரம்.—சுவாமிகளே! இந்தத் துன்மார்க்கன் தான் எழுதிய கடிதத்தை அல்லவென்று மறுக்கிறான். இக்கடிதத்தில் அடங்கியதைக் கேட்டபின்னாவது ஒப்புக்கொள்ளுகிறானா பார்க்கலாம்! (என்று அடியிற் கண்டவிதம் அக்கடிதத்தில் எழுதியிருந்ததை வாசித்தான்.)

என் பிரிய மைத்துனரே!

என் தந்தை இறந்தபின் அவருக்குப் பதிலாக என் தந்தையைப்போல் என்னைக்காப்பாற்றிய என் தமையன் காலஞ்சென்றபின் நான் உலகத்திலிருப்பது பிரயோசனமில்லையென்று நான் ஆறுமாதம் வேளைக்குச் சாப்பிடாமலிருந்தும் என்னுயிர் நீங்காமலிருக்கிறது. என் தமையனையறிந்தவர்கள் எனக்குத் தைரியம் சொல்லி வந்தாலும் அவர்களைக் காணும்பொழுது என் தமையன் ஞாபகம் எனக்குநித்து மேலும்

மேலும் என்னைத் துன்பத்திலழுத்துகின்றது. நீ என்னருகிலிருக்கும்பொழுது உம்முடைய பிரிய வசனங்களைக் கேட்டுக் கவலையுற்றிருக்கிறேன். ஆனதால் நீர் சிலநாளென்னிடமிருக்கவேண்டும். இக்கடிதத்தை என் தங்கை செழுங்கமலத்துக்குக் காட்டிவரவும்.

இப்படிக்கு,
ஜெகநாதமுதலியார்.

கடிதம் வாசித்ததைக் கேட்ட ஜெகநாதமுதலியார் ஆம்! ஆம்! அந்தக் கடிதத்தை நானே எழுதினேன்; கடிதத்தை முற்றிலும் காட்டாமல் கையொப்பத்தைமட்டும் காட்டியதால் நான் நன்றாய்க் கவனித்துப் பார்க்காமல் என்னுடையதல்ல வென்றேன் என்றார்.

சோமசுந்தரம்.—நான் காட்டிய கடிதம் உன்னுடைய துர்நடத்தையை வெளிக்குக் கொண்டுவரச் சாக்ஷியாக வந்ததோவென்று பயந்து என்னுடையதல்லவென்று மறுத்தாய். இந்தக் கடிதத்திலிருக்கும் கையொப்பம் உம்முடையதா அல்லவா வென்று நன்றாய்ப் பார்த்துச் சொல். (என்று வேறொரு கடிதத்தைக் காட்டினான்.)

ஜெகநாத முதலியார்.—இது என்னுடைய கையொப்பமே! காகிதமும் முன் வாசித்த காகிதம்போலிருப்பதுமன்றி என் முத்திரையும் கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? அந்தக் கடிதமும் என் மைத்துனர் கேசவ முதலியாருக்கே எழுதியிருக்கவேண்டும்.

சோமசுந்தரம்.—நீ இதை யாருக்கு எழுதியிருக்கிறையென்று நொடியிலறியப் போகிறாய். (என்று அடியிற் கண்டதை வாசித்தான்.)

பிரியமான சோலையப்பனுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

நீர் குறிப்பித்த காத்தனும் சாத்தனும் எனக்கு வேண்டியவைகளைச் செய்ததேயன்றி நான் உம்மிடம் சொல்லிய பிள்ளையின் பெயரெங்கும் இல்லாமலும் செய்துவிட்டார்கள். இனி என் தமையன் ஆஸ்தி என்னைச் சேரத் தடையில்லை. அது என்னைச் சேர்ந்தவுடன் உம்மை மறக்கமாட்டேன். என் மைத்துனன் கேசவமுதலியார் உலகில் உலாவிக்கொண்டிருப்பது எனக்குக் கெடுதியாயிருக்கிறது. அவர் என்னுடைய வீட்டைவிட்டு இரவில் போகும்பொழுது அவரைப் பிடித்துக்கொண்டு போய்க் காவலில் வைத்திருக்கவேண்டும். அவரை உயிரோடு வைத்திருக்க வேண்டியது அவசியமில்லையாயினும் அவருடைய தமையனொருவன் தனவந்தனையும் சந்ததியற்றவனையுமிருப்பதாலும், அவருடைய பூஸ்திதியெல்லாம் அவருக்குப்பின் கேசவமுதலியாரைச் சேரவேண்டியதாலும் அவ்விதம் நேரிட்டகாலத்தில் கேசவ முதலியாரைப் பயமுறுத்தி அதை நாம் கைக்கொள்ள முடியுமாகையால் அவரை உயிரோடு வைத்திருக்கவேண்டியது அவசிய

மாயிருக்கிறது. கேசவமுதலியார் உம்மிடம் வந்து சேர்ந்தாரென்று கேள்விப்பட்டவுடன் உமக்குப் பெரிய வெகுமதி அனுப்புவேன். அவரைப் பாதுகாத்து வருகிறதற்காக வருடத்துக்கு ஐந்நூறு ரூபாய் அனுப்பிக்கொண்டிருப்டேன். அவர் தற்காலம் ஊரிலில்லை. அவர் வருவதற்குள் என் தந்தை மூடத்தனமாய் என் தங்கைச்குக் கொடுத்த நூறுவேலி நிலத்தையுங் கைப்பற்றி உமக்குத் தெரிவித்தபின் என் மைத்துனனைக் கொண்டுபோகவேண்டும். நம்முடைய சிநேகம் நீடித்திருக்கவேண்டும். இது நிற்க. உம்முடைய மனிதர் உமக்காகக் கொண்டுபோக எத்தனித்த மணப்பெண்ணைக் கொண்டுவர முடியாமற் போனதுமுதல் நீர் துக்கத்தோடிருப்பதாக அறிந்தேன். ஆனைக்கும் ஓர் கால் அடிசறுக்குமென்பதுபோல முடிந்தது. அதை நினைத்து நினைத்துத் துக்கப்படுவதை நான் நேரில் பார்த்ததேயன்றிப் பலரால் கேள்வியும் பட்டுக்கொண்டிருக்கிறேன். அது முடிந்து நாலைந்து வருடமாயும் இன்னும் அதை நினைவில் வைத்திருப்பது அழகல்ல. அதை மறந்து சந்தோஷத்தோடிருக்க வேண்டுமென்று விரும்புகிற

ஜெகநாதமுதலியார்.

சோமசுந்தரம் கடிதத்தை வாசித்து முடித்தவுடன் ஜெகநாத முதலியார் கைகால் நடுக்கத்தோடு, அடா பாதகா! என்னை முற்றிலும் கெடுக்க யோசித்து, எழுதாத காகிதங்களை என்னிடத்திலிருந்து திருடி அதில் என் கையெழுத்தைப்போல் எழுதித் தப்புக்கையெழுத்து செய்து கொண்டா வந்தாய்? பார்த்தீர்களா சுவாமி! (என்று அரங்கராவைப் பார்த்தார்.)

அரங்கராவ்.—ஐயா சோமசுந்தர முதலியார்! நீர் ஜெகநாத முதலியார் மேல் கொண்டு வந்த குற்றங்களையெல்லாம் அவர் அல்லவென்று மறுத்துவிட்டதால் அது விஷயத்தில் இன்னும் காலத்தைப்போக்காமல் நாம் யாவரும் இவ்விடம் வந்திருக்கும் காரியத்தைக் கவனிப்பதே உத்தமம்.

சோமசுந்தரம்.—சுவாமிகளே! ஜெகநாத முதலியார் கொடிய துன்மார்க்கன். அவன் பிள்ளையைக் கொல்லத் தூண்டியதற்கும், கற்புடைய பெண்களைக் கற்பழிக்கத்துணிந்து அவர்களைக்கொன்றதற்கும், தன் சொந்த மைத்துனனைக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்திருப்பதற்கும் சாக்ஷிகளாலும் அவன் எழுதிய கடிதங்களாலும் உண்மை காட்டிக் காட்டி நிரூபித்த பின்னும் தாங்கள் நம்பாமலிருந்தால் நான் என் செய்வேன்! இன்னும் யாரைநான் சாக்ஷியாகக் கொண்டுவருவேன்! இனி காட்டிலும் தோட்டத்திலும் இறந்தவர்களே சாக்ஷியாக வரவேண்டும். இறந்தவர்களை எழுப்பும் சக்தி எனக்கிருந்தால் அவர்களை எழுப்பிக்கொண்டு வரலாம். நான் இனி என்னசெய்ய இருக்கிறது? (என்று உட்கார்ந்தான்.)

ஜெகநாத முதலியார்.—என்னைத் துன்மார்க்கனென்று வாய்பிதற்றிய தன் மார்க்கா! நீ இறந்தவர்களைக் கொண்டுவந்து மெய்ப்பித்தாலன்றி அதிக தண்பத்தை அனுபவிக்க நேரிடும். (என்று கோபத்தோடு நகைத்தார்.)

சோமசுந்தரம்.—ஐயா ஜெகநாத முதலியார்! இறந்தவர்களைச் சாக்ஷிகோரி னால் உம்முடைய நடத்தை வெளியாரா தென்று நினைத்தீர்! உம்முடைய குற்றங்களை வெளிக்குக் காட்டாமல் மறைக்க இந்த சுவாமி அரங்சராவ் அவர்களுக்கு எண்ணமிருந்தாலும் உம்முடைய கொடுந்தொழில் இன் னும் நீடித்திருக்கத் தெய்வம் சம்மதியாது.

என்று சோமசுந்தரம் சொல்லும்பொழுது வண்டியொன்று வருகிற சந் தடி கேட்டுத் தனவந்தர் வந்து விட்டாரென்று யாவரும் எழுந்து பார்த் தார்கள்.

சோமசுந்தரம்.—ஐயா முதலியாரே! உம்முடைய குற்றங்கள் வெளியாகக் கடவுள் இறந்தவர்களுக்கு உயிர்கொடுத்தனுப்பவேண்டுமெனப் பிரார்த் தித்திருக்கிறேன். (என்று சொல்லி உட்கார்ந்தான்.)

கடவுள் எங்களுக்கு உயிர்கொடுத்தனுப்ப, இதோ வந்தோம் வந்தோம் என்று இரு பெண்பிள்ளைகள் ஓடிவந்து சோமசுந்தரத் தருகில் நின்றார்கள். வந்தவர்கள் யாரென்றுபார்க்க அவ்விடம் நாற்காலியிலிருந்தவர்களெ ல்லாம் எழுந்து நிற்க, அருகில் உட்கார்ந்திருந்த பெண்பிள்ளைகள் பார்வையை மறைத்துக் கொண்டார்கள். வந்த இருவரையும் சோம சுந்தரம் பார்த்து, ஆ! இதென்ன அதிசயம்! நான் கடவுளைப் பிரார்த் தித்தால் இருவரும் உயிர்பெற்று வந்துவிட்டார்கள். பெண்மணிகளே! அங்கு மேடையிலிருக்கும் ஜெகநாத முதலியார் குணனுபவங்களை யாவரும் அறியச் சொலலவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

இருவரில் மூத்தவள் ஜெகநாதமுதலியாரைப் பார்த்து, ஐயா! மைத்துன ரே! என் நாயகன் இறந்தபின் நான் பூரண கர்ப்பமாக இருந்ததைச் சிறிதும் எண்ணிப்பாராமல் என்னைக காட்டில் கொண்டுபோய்விட்டு எனக்கு ஆண் குழந்தை பிறக்க, அதை யொருவரும் அறியாமல் நீர் கொண்டுபோய்க் கொலைசெய்துவிடக்கொடுத்து என்னையும் பெண் டாளத்தணிந்தீர்! தெய்வம் உமக்கு நல்லவழிகாட்டுமா? நான் இந் தச் சுந்தரத்தம்மாளுதவியினால் என் சற்பைக் காப்பாற்றிக்கொண்டு நீங்கியபின் புண்ணியகோடி முதலியாரும் அவர் பெண்சாதியும் என்னை அன்னவஸ்திரத்துக்கு அலையவிடாமல் காப்பாற்றினார்கள். அவர்களென்னை ஆதரிக்காமல் கைவிடுவார்களானால் என்சதி என் னாகும்! அன்னியர்களுக்கிருந்த அன்பும் பரிதாபமுங்கூட உமக்கு இல்லாமற் போனதல்லவா! உமமுடைய தந்தையால் உமக்குக்கிடை த்த ஆஸ்தியையெல்லாம் தாசிகளுக்குக் கொடுத்துக் கையில ஒன்று

மிலலாமல் திரிந்த உம்மைக் கொண்டுவந்து உமச்கு விவாகம் முதி லானவைகளைச் செய்து உம்மை மேன்மையாக வைத்து ஆதரித்த உமது தமையன் மனைவியை நடத்துவது இவ்விதம் தானோ? என்றாள். அருகிலிருந்த பெண் – அத்தை! இந்தப் பாவியைக் கண்டு வார்த்தை யாடலாமா? தன் னுடைய தமையன் குமாரன் உயிரோடிருந்தால் எல் லா ஆஸ்திபும் அவனைச்சேருமென்று அவனைச்சொல்ல எண்ணங் கொண்டார். தானொன்று நினைச்சத் தெய்வம் ஒன்று நினைக்கும் என் னும் பழமொழி பொய்க்குமா? என்றபின் ஜெகநாதமுதலியாரைப் பார்த்து, மாமா: நீ எல்லாருடைய விஷயத்திலும் செய்தது போதா தென்று என்னையும் மோசம்செய்துகொண்டுபோய் என் சற்பைக் கெடுக்கத் துணிந்தனையே! கொலபாதகா! நீ என்னைக்கெடுக்க எண்ணங்கொண்டதே உன் தலைக்குத் தீங்காய்முடிந்தது. உன் செட்ட நடத்தை வெளியாக உன்னுடைய தமையன் பெண்சாதியையும் அவர் குமாரனையும் சடவுள் உதவியால் சண்டு பிடித்துக் கொண்டு வந்தேன். உன்னுடைய தமையன்மகன் வல்லமையினால் என் தந் தையும் வெளியானரென்றாள்.

இந்த இரண்டு பெண்பிள்ளைகள் பேசுவதைக் கேட்டிருந்த பெண்பிள்ளை களின் கூட்டத்திலிருந்து ஒரு பெண்பிள்ளை ஓடிவந்து இரண்டாவது பேசிய பெண்ணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, கமலாக்ஷி! கமலாக்ஷி! இந்தப் படுபாவி அண்ணனால் அதிக துன்பத்தை அடைந்தாயாமே! மகளே! மகளே! என்று அழுது அடிக்கடி முத்தங்கொடுத்துக்கொண் டிருந்தாள்.

கமலாக்ஷி.—தாங்கள் அண்ணியவர்கள் நிற்கிறார்களே! அவர்களைப் பார்க்க வில்லையா?

செழுங்கமலம் கமலாக்ஷியோடு நின்றிருந்த பெண்பிள்ளையை அணைத்துக் கொண்டு பெண்பிள்ளைகள் நிற்கும் இடத்திற்கு அழைத்துச்சென் றாள். நடராஜமுதலியார் விரைவாயோடி, அம்மா! கமலாக்ஷி! உன் தாதாவை இத்தனைநாள் விட்டிருந்தது நியாயமாவென்று கமலாக்ஷி யின் கையைப் பிடித்துக்கொண்டார்.

கமலாக்ஷி.—தாதா! நான் சொல்வதை முற்றிலும் கேட்டால் நான் தங்களை விட்டிருந்தது நியாயமென்று ஒப்புக்கொள்வீர்கள். (என்று நகைத்தாள்.)

பூங்காவனமும் வனசாக்ஷியும் வந்து கமலாக்ஷியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கமலாக்ஷியைப் பதில்சொல்லவொட்டாமல் அனேக சமாச் சாரங்களை மாறி மாறிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அரங்கராவோடிருந்த ஜெகநாத முதலியார் வியசனத்திலழுந்தி நாற்சாலியில் சாய்ந்து விழித்தகண் இமைக்காமலிருந்தார். அச்சமயத்தில் பெரிய கும்பலொன்று வரும் சந்தடிசேட்டு, எதிர்ப்பார்த்திருச்சும் தனவந்தர் வந்துவிட்டாரென்று, யாவரும் எழுந்து நின்றார்கள். "வந்தவர்களில் ஒருவன் ஜெகநாதமுதலியாரைப்பார்த்து, சிறிய தந்தையே! நீர் என் விஷயத்திலும் என் தாய்விஷயத்திலும் செய்தசொடுமைகள் அதிகமாக இருந்தாலும் அவைகளை மன்னித்து விட்டேனென்றான். அவனோடிருந்த ஒருவர் ஜெகநாதமுதலியாரே! என் மனைவிக்குச் சொந்தமான நிலத்தைக்கொண்டதோடு என்னையும் சிறையிலிருக்கச் செய்தீர்! இந்த வீரன் சோலையப்பன் முதலானவர்களை யமலோகம் குடிபுகுத்தி எங்களை விடுவித்துக்கொண்டு வந்தாரென்று சொல்லிக்கொண்டிருச்கும்பொழுது, இருவர் ஜனங்களை விலச்கிக்கொண்டு வந்து முதற் பேசியவனைப் பிடித்துச்கொண்டு, அடா மகனே! விஜயரங்கம்! எங்களைத் துன்பத்தில் விட்டுப்போக மனந்துணிந்தாயே! இது உனக்குத் தருமந்தானுவென்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். விஜயரங்கம் பேசச் சக்தியற்றுக் கண்களிலிருந்து தாரை தாரையாய் ஜலம்வடிய நின்றான். விஜயரங்கத்தோடு நின்ற வைத்தியர்-ஐயா, கலியாணசுந்தரமுதலியாரே! அம்மா மீனாக்ஷி! உங்கள் குமாரனைக் கொண்டுவருகிறேனென்று சொன்ன வாச்சுப் பிரகாரம் கொண்டுவந்தேன், இனி சந்தோஷமாக இருங்களென்றார். கமலாக்ஷி விஜயரங்கத்தோடு நின்றிருந்தவரைப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் தன் தாயிடம்விட்டு, அம்மா! இவர்கள் யாரென்று பாருங்களென்றாள். அவர் செழுங்கமலத்தைத் தழுவிக்கொண்டு செழுங்கமலம் உன்னைக் கைம்பெண் கோலத்தோடு பார்க்சவா இருந்தேனென்று குழந்தையைப் போல் அழுதார். செழுங்கமலத்தோடிருந்தவரைப் பார்த்த சத்திரம் வேங்கடாசல முதலியார் அவரைத் தழுவிக்கொண்டு, தம்பி, கேசவா! என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். இவைகளையெல்லாம் பார்த்திருந்த அரங்கராவ் எழுந்துநின்று எல்லாரையும் உட்காரவேண்டிக்கொண்டு, தன்னுடைய சினேகன் வரும் நேரமானதால் அவர் வரும்பொழுது எதிர்கொண்டழைத்து உபசரிக்க யாரை நியமிக்கலாம்? இவ்விடத்திலுள்ள தனவந்தரில் ஒருவரைக்கேட்டுக்கொண்டால் மற்றவர்களுக்கு மனச்சலிப்பாயிருக்குமென்று யோசிக்கிறேன். இவ்விடத்திலிருச்கும் கனவான்கள் யோசித்து ஒருவரை நியமிக்கவேண்டுமென்றார்.

கமலாக்ஷி.—(தன் தாயைப்பார்த்து) அம்மா! யாரோ தனவந்தர் மதுரையிலிருந்து வரப்போகிறாரென்றார்களே! அவர் இன்னும் வரவில்லையா? அவர் வந்திருப்பாரென்றே நினைத்திருந்தேன்!

சொக்கநாதம்.—வரப்போகிறவரை எதிர்கொண்டழைக்கவே ஒருவரை ஏற்படுத்த யோசிக்கிறார்கள்.

அவ்விடம் இருந்த அன்னியனொருவன் எழுந்து நின்று, சுவாமிகளே! இவ்விடத்திலுள்ளவர்களுக்கு மனவருத்தம் தோன்றுமலிருக்க யாராகிலுமொரு விருத்தரை நியமித்தால் உத்தமமாக இருக்குமென்று நினைக்கிறேன். யாவருக்கும் சம்மதமானால் அந்தப் பெரியவரை நியமிக்கலாமென்று நடராஜமுதலியாரைக் காட்டினான். மற்றவர்களும் ஆம்! ஆம்! எங்களுக்கு முழுச்சம்மதமென்று கைதட்டினார்கள். அரங்கராவ் இறங்கி நடராஜமுதலியார் கையைப்பற்றி அழைத்துவந்து மேடையில்விட்டு, ஐயா! நீர் இவ்விடம் வரும்பொழுது அரங்கராவோ தொங்கராவோ என்றீரே! அது உமக்கு ஞாபகம் இருக்கிறதாவென்று கேட்டார். நடராஜமுதலியார் வரும்பொழுது அரங்கராவ் நியாயாதிபதியென்று சிறிதும் நினைக்காமல் பேசியதை அவர்குற்றமாகக் கொண்டுவிட்டார், இதற்குக்காரணம் நாமாக இருந்தோம் என்று கலியாண சுந்தர முதலியார் துக்கப்பட்டார்.

நடராஜ முதலியார்.—நான் வரும்பொழுது அரங்கராவோ தொங்கராவோ வென்று சொல்லியது உண்மையென்றே இவ்விடம் இருப்பவர்களுக்கு மெய்ப்பிக்கப்போகிறேன், பார்த்துக்கொண்டிரு. (என்று விலகினார்.)

நடராஜமுதலியார் அரங்கராவ் அவர்களைக் கேவலமாகப்பேசியதோடு யாவருக்கும் மெய்ப்பிக்கப் போகிறேனென்றுஞ் சொல்லுகிறாரே! என்னென்ன சொல்லிவிடுவாரோ! அவனை அவமானப்படுத்திப்பேசினால் என்னசெய்கிறது! நடராஜமுதலியாரை வரவழைத்ததற்கு ராயர் நம்மையல்லவா சோபிப்பார்! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததென்ற கதைபோலானதே! என்று கலியாணசுந்தரமுதலியார் இதை எவ்விதம் தடுக்கலாமென்று யோசித்துக்கொண்டிருந்தார்.

அரங்கராவ்.—என்னைத்தொங்கராவு என்று மெய்ப்பிக்குமுன்னம், நீ ஒரு திருடன். சிலமாதங்களுக்குமுன் இவ்வூரில்வந்து ஒளிந்து கொண்டிருக்கிறாயென்று யாவரும் அறிய முதலில் நான் மெய்ப்பித்துவிட்டால் அப்பொழுது என்ன செய்வாய்?

நடராஜ முதலியார்.—அப்பொழுது நான் உன்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு நீயே என்பிரிய சினேகனென்று சொல்லுவேன். (என்று தழுவிப்பிடித்துக்கொண்டார்.)

அரங்கராவ் நடராஜ முதலியாரை ஆலிங்கனஞ்செய்து அழுது, யாவரையும் பார்த்து,

நண்பர்களே !

இவர் இன்னுரென்று இன்னும் நான் சொல்லாமலிருப்பது நியாயமல்ல. இவரே நான் எதிர்ப்பார்த்திருந்த பாலிய சினேகர் ! இவரே அருணாசல முதலியார் ! இந்தப் படுபாவி ஜெகந்நாத முதலியாரால் இவர் தம் ஊரை விட்டு இருபது வருடங்களாக அனேக கஷ்டங்களை அனுபவித்தார். இந்தப் புண்ணியவான் எனக்குப் பொருளுதவி செய்து தன் சகோதரனைப்போல் பாவித்து என்னை என் தற்கால நிலைமைக்குக் கொண்டுவந்தார். எனக்கின்னும் அதிகம் சொல்ல முடியவில்லை. (என்று தினறிக்கொண்டு நின்றார்.)

அருணாசலமுதலியார் அரங்கராவ் அவர்களை அணைத்துக்கொண்டு,

என்பிரிய சினேக இரத்தினமே ! நீ என் விஷயத்தில் எடுத்துக் கொண்ட பிரயாசைக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேனென்று அழுது அங்கிருந்து சென்று விஜயரங்கத்தைத் தழுவிக் கொண்டு, மகனே ! என்னை இன்னுரென்று அறியாமுன்னம் என் மேல் அன்புகாட்டி எனக்குப் பழவர்க்கம் கொண்டுவந்து கொடுத்த என் செல்வமே ! என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உன்னை வளர்த்த தந்தைதாய் மனம் மகிழ நீ சிரஞ்சீவியா யிருக்கவேண்டுமென்று முத்தங்கொடுத்துக் கலியாணசுந்தர முதலியாரைப்பார்த்து, ஐயா ! உம்முடைய குமாரன் உம்மைவிட்டு இனி எக்காலமும் நீங்கானென்று கூறி, அவரருகில் நின்றிருந்த வைத்தியரைத் தழுவிக் கொண்டு, ஐயா ! நீர் எனக்கு நெருங்கிய சினேகராயிருந்து நான் இன்னுரென்று அறியாமலே என்னைக் காப்பாற்றினீர், நீர் செய்த உபகாரத்தை என்றும் மறக்கமாட்டேன் என்றார். பிறகு கமலாகூி கையைப்பிடித்துத் தலையிலும் கையிலும் முத்தங்கொடுத்து, என் கண்மணி ! உன்னால் இவ்வளவு நன்மையும் விளைந்ததல்லவா ? நான் ஆதரவற்று மரத்தடியில் விழுந்திருந்தபோது என்னைக்கொண்டு வந்து காப்பாற்றினையே ! நானதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் ! எது செய்தபோதினும் நீ காட்டிய அன்புச்சு விகராகாதே யென்று, செழுங்கமலத்தைப் பிடித்துக்கொண்டு, அம்மா ! நான் உன் தமையனென்றறியாமலிருந்தும் என்னை உண்மையான சகோதரனைப்போல் நீ பாவித்தனையே ! இவைகளெல்லாம் மறச்சத் தக்கனவா ? அம்மா பூங்காவனம் ! அம்மா வனசாகூி ! உங்களை எப்பொழுதும் மறக்கமாட்டேனென்று, மீனாகூியம்மாளைப் பார்த்து, அம்மா ! உன்மகன் உன்னைவிட்டு எப்பொழுது மிருப்பான், நீ அவன் விஷயத்

தில் செய்திருந்ததை நாங்கள் எக்காலமும் மறவோமென்று சொல்லியபின், செழுங்கமலத்தோடு கைம்பெண்போல் நின்றிருந்தவளைத் தழுவிக்கொண்டு, சம்பூரணம்! நான் உயிரோடு இருக்கும்பொழுது நீ இவ்வித கோலத்தோடு இருப்பதைப் பார்க்கவா இருந்தேன்! என்று அழுதார், சம்பூரணமும் தன் நாயகனைப்பிடித்துக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள்.

கமலாக்ஷி.—அம்மா! அத்தையின் பெயர் தாயாரம்மாளென்றல்லவோ இருந்தேன்! மாமா வேறு பெயர் சொல்லி அழைக்கிறார்களே!

அருணாசலமுதலியார்.—அம்மா, கமலாக்ஷி! நீ என்னை மாமாவென்று அழைக்கக்கூடாது, தாதா என்றே கூப்பிடவேண்டும். நீ என்னை ஸ்ரீனஞ் செய்துபேசியது ஞாபகத்திலிருக்கிறதா?

கமலாக்ஷி தன்மாமன் விஷயத்தில் ஏதோ குற்றம் செய்துவிட்டோமென்று பயந்து தேகம் நடுக்கத்தோடு நான் அறியாமல் ஏதாகிலும் குற்றம் செய்திருந்தால் மன்னிக்கவேண்டுமென்று வேண்டினாள்.

செழுங்கமலம்.—அண்ணா! கமலாக்ஷி அறியாமல் ஏதாகிலும் தங்கள் விஷயத்தில் குற்றம் செய்திருந்தால் அதை மனதில் வைத்திராமல் மன்னிக்கவேண்டும்.

அருணாசலமுதலியார்.—கமலாக்ஷி செய்த குற்றம் மன்னிக்கத் தகுந்ததல்ல. (என்று அருகில் நின்ற விசுவநாதசெட்டியாரைப் பார்த்து) ஐயா! தாங்கள் என் விஷயத்தில் செய்ததை எக்காலத்திலும் மறவேன். (என்று கையை நீட்டினார்.)

விசுவநாத செட்டியார் பக்கத்தில் தாங்கி மறைத்து வைத்திருந்ததைக் கொடுத்தார். அருணாசலமுதலியார் அதை வாங்கி, அம்மா கமலாக்ஷி! நான் மோராமாலையை உன் கழுத்தில் போட்டபொழுது, "தாதா! தங்கள் மகனுக்கென்னைக் கட்டிக்கொள்ளப் போகிறீர்களே! அப் பொழுது இந்த மோராமாலையைமட்டுமல்ல. இந்தப் பெட்டியிலடங்கிய நகைகளையெல்லாம் தாங்கள் சந்தோஷமடைய அணிந்து கொள்ளுகிறேன்." என்றாய். அதற்கு உன் தாயாரும் செட்டியாரும் சாக்ஷியிருக்கிறார்கள். ஆனதால், அதுபோல இப்பொழுது அணிந்து கொள்ளவேண்டுமென்று பெட்டியைக்கொடுத்தார். கமலாக்ஷி நகைத்து, பெட்டியை இருகையாலும் வாங்கிக்கொண்டாள். வனசாக்ஷி மாமா கொடுத்த பெட்டியில் என்ன இருக்கிறதென்று வாங்கிப் பெட்டியிலிருந்த சாவியால் திறந்து, கமலாக்ஷி! இதில் எல்லா நகைகளுமிருக்கின்றன வென்றாள்.

கமலாக்ஷி.—ஆம் வனசாக்ஷி! இந்தப் பெட்டியை இந்தச் செட்டியார் வீட்டுக்குக் கொண்டுவந்து, விற்கிற நகைகளென்று பொய்சொல்லி இதுபரியந்தம் தம்மிடத்தில் வைத்திருந்தார்.

செழுங்கமலம்.—செட்டியாரே! தங்களே ஒன்று கேட்கவேண்டும். (என்று அதிக கூட்டமில்லாத இடத்தில் விசுவநாத செட்டியாரை அழைத்துப் போய்) ஐயா! எங்களோடு இங்கிருந்தவர் இன்னுரென்று தங்களுக்குத் தெரிந்திருந்தும் எங்களுக்கு ஒரு வார்த்தையாகிலும் சொல்லாமல் இருந்தீரே! இது நியாயமா?

விசுவநாத செட்டியார்.—என்னை முதலில் தங்கள் வீட்டுக்கு விஜயரங்கம் அழைத்துவந்தபொழுது அருணைசல முதலியாரைச்கண்டு நான் ஆச்சரியப்பட்டதை அவர் கண்டுகொண்டு, என்னைத் தோட்டத்துக்குள் அழைத்துப்போய் நான் யாரென்று உமக்குத் தெரியுமாவென்று கேட்டார். நான் பதில்சொல்லாமல் சிரித்தேன். அவரை நான் அறிந்து கொண்டதை ஒருவருடனும் சொல்லாமல், அரங்கராவ் அவர்களிடத்தில்மட்டும் சொல்லி, அவர் தம்முடைய பெண்சாதி பிள்ளை விஷயங்களை நன்றாய் அறியுமளவும் இரகசியத்தை வெளிவிடாதிருக்கும்படி அவருக்கும் சொல்ல வேண்டுமென்றபின், இரத்தினத்தின் கடனைத்தீர்த்து அவனைக் கடனிலிருந்து மீட்டுவிட்டால் அவன் நல்வழிக்கு வரமாட்டானு வென்று கேட்டார். அவனுடைய நடத்தை கெட்டதாதலால் அவனுக்கு என்ன செய்தபோதிலும் நல்வழிக்கு வரமாட்டானென்று நான் சொன்னபின் என்னை அழைத்துவந்தார். நான் அவர் சொல்லியவண்ணம் அரங்கராவ் அவர்களிடம் அருணைசலமுதலியார் தம் தங்கைவீட்டில் வந்திருக்கிறுரென்று சொன்னவுடன் அவர்கொண்ட சந்தோஷத்திற்களவில்லை. அருணைசல முதலியாருடைய இஷ்டத்துக்கு விரோதம் செய்யக்கூடாதென்று அவரும் என்னிடம் சொன்னதோடு, லக்ஷத்தின் வரவுசெலவை என்னைப் பார்த்துவர உத்தரவுசெய்வதாக வாக்களித்ததுமன்றிச் சந்தேகம் நீங்க அவ்வாறே கட்டளையுமிட்டார். நாங்கள் அருணைசலமுதலியார் உத்தரவுக்கடங்கி நடந்ததேயன்றி வேறெரு அபிப்பிராயத்தோடு ஒன்றும் செய்யவில்லை. ஆனதால் தாங்கள் என்னைக் கோபிப்பது நியாயமல்ல.

அருணைசல முதலியார் தமக்கு எதிரிட்டவர்கள் சந்தோஷமடைய அவர்களிடம் நன்மொழி புகன்று பின் அரங்கராவைப்பார்த்து, அப்பா! அரங்கராவ்! ஜெகநாதம் என் விஷயத்தில் செய்த கொடுமைகள் அதிகமாயிருந்தாலும் அவன் இன்றடைந்த அவமானம் போதுமானது. அவனை இன்னும் துன்பத்தில் அழுத்துவது நியாயமல்ல. நாம் அவனை மன்னித்ததாகச் சொல்லி வரலாம் வாவென்று கூற, அரங்கராவ் இஷ்டமில்லாதிருந்ததை அறிந்தும் கையைப்பற்றி இழுத்து வந்து ஜெகநாத முதலியாரிருந்த இடத்தில் அவரில்லாததைக் கண்டு, எங்காகிலும் மறைந்திருப்பானென்று எண்ணி, சோமசுந்தரத்தை அழைத்து அவன் எங்கிருக்கிறுன்? பார்த்துவா வென்று உத்தரவளித்தார். சத்திரம் வேங்டாசல முதலியார் தம் சகோதரர் கேசவமுதலியாரோடு விஜய

ரங்கத்திடம் சென்று, தம்பி விஜயரங்கம்! உன்னுடைய விஷயத்தில் நான் செய்த குற்றம் மன்னிக்கத்தகுந்ததல்ல. ஐயோ! தம்பி! நீ என்ன கஷ்டப்பட்டாயோ! நீ உன் தந்தை கலியாணசுந்தரமுதலியாருடைய சம்மதமில்லாமல் வெளிப்பட்டேனென்ற உன் உண்மையான வார்த்தையை நம்பாமல் நீ சொல்லியது யாவும் அபத்தமென்றே எண்ணினேன்.

விஜயரங்கம்.—தாங்கள் அபத்தமென்று நினைத்ததற்கு முக்கியமான காரணம் இருந்திருக்கக்கூடும்.

சத்திரம் வேங்கடாசல முதலியார்.—நீ என்னிடத்தில் வருமுன்னம் உன்னுடைய தந்தை என்னிடத்தில் வந்து உனக்கு என்மகளைக்கொடுத்து விவாகம் செய்துவைக்கவேண்டுமென்ற விருப்பத்தைக் காட்டினார். நீ கண்டெடுக்கப்பட்ட குழந்தையென்று அவருடைய மைத்துனரால் கேள்விப்பட்டிருந்தவனுதலால் உன்னுடைய தந்தையைக் கோபித்துக்கொண்டேன். அவர் என் கோபத்தையும் சமனியாமல் நீரென்மகனை நேரில் பார்த்தால் கொடுக்கத் தடைசெய்யமாட்டீரென்று சொல்லிப்போன சில மாதங்களுக்குப்பின் நீ வந்ததால், நீ சொன்னதையெல்லாம் முதலில் நம்பியிருந்தவனுகிய நான் உன்னுடைய தந்தையின் பெயரை நீ சொன்னவுடன் உன்னுடைய தந்தையே உன்னைச் சூதாக அனுப்பினுரென்றெண்ணி உன்னை விட்டு நீங்கினேன். ஆனதால் என்னை மன்னிக்கவேண்டும். (என்று விஜயரங்கத்தின் இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு வேண்டினார்.)

விஜயரங்கம்.—மாமா! தாங்கள் இவ்விதம் சொல்வது அடாது. தாங்கள் என்னிடத்திற்காட்டிய அன்பு மறக்கத்தக்கதல்ல. என் வினைப்பயனல் தங்களை விட்டுப்போக நேரிட்டதேயன்றி வேறல்ல.

கேசவமுதலியார்.—அண்ணு! தம்பி விஜயரங்கத்தை நிறுத்தியிருப்பீர்களா யின் எனக்கு விமோசனமாக நியாயமில்லையே!

அதற்குள் சபாபதிமுதலியாரும் சொக்கலிங்கமுதலியாரும் புண்ணியகோடி முதலியாரை அழைத்துக்கொண்டு வேங்கடாசல முதலியாரையும் கேசவமுதலியாரையும் பார்த்துச் சாப்பிட்டுவந்தபின் பேசிக்கொண்டிருக்கலாம் வாருங்களென்று விஜயரங்கத்தோடு சென்றார்கள். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவ்விடம் வந்திருந்த பிராமணர்களையெல்லாம் அழைத்துச்சென்றார். மீனுக்ஷியம்மாள் அங்கிருந்த அம்மணியம்மாள், மரகதத்தம்மாள், அம்புஜத்தம்மாள், சிந்தாமணியம்மாள், மனேன்மணியம்மாள், மற்றுமுள்ள பெண்பிள்ளைகளையெல்லாம் போஜனத்துக்கு அழைத்துச் சென்றார். சோமசுந்தரம் அருணுசலமுதலியார் சொல்லிய வார்த்தையைச் சிரமேற்கொண்டு ஜெகந்நாதமுதலியாரைத்தேடிப்

பார்த்தும் அவர் இவ்வாமையைக்கண்டு, வீட்டுக்குப்போய் விட்டதாகக் காணப்படுகிறதென்று அருணசல முதலியாரிடம் சொல்லி விடைபெற்றுத் தானும் மற்றவர்களோடு சென்றான்.

23-ம் அத்தியாயம்.

அரங்கராவ் அவர்களால் வரவழைக்கப்பட்டவர்களுக்கெல்லாம் தக்க மரியாதைசெய்து அவரவர்களை அனுப்பியபின் அவ்வரண்மனைக்கு விருந்தாளியாக வந்திருக்கும் ஆண்பிள்ளைகளை ஒரு பக்கமும் பெண்பிள்ளைகளை ஒரு பக்கமுமாக உட்காரச்செய்து அருணசலமுதலியாரும் அரங்கராவும் தத்தம் ஆசனத்திலிருந்தபின், அருணசலமுதலியார் விஜயரங்கத்தைப் பார்த்து, அப்பா விஜயரங்கம்! பெற்றபிள்ளையை விட மேன்மையாக உன்னை வளர்த்துவந்த தாய்தந்தையர் துன்பப் படும்படி அவர்களை விட்டுப்போன காரணமென்ன? அதைச் சொல்லவேண்டு மென்று கேட்டார்.

விஜயரங்கம்.—தந்தையே! என்னை வளர்த்துவந்த தாய்தந்தையர் என் பிறப்பு வளர்ப்பைச் சொல்லாமல் நான் எவ்விதத்திலும் சந்தேகங்கொள்ளாமலிருக்க என்னை வளர்த்துவந்ததால், நான் என்னை வளர்த்தவர்கள் என்னைப் பெற்றோர்களல்லவென்று நினைக்க இடமுண்டாகாமலேயிருந்தது. ஒரு நாள் நான் சித்திரை செய்வதாக எண்ணி என்தாயார் என் தந்தையிடம் "நம்முடைய குமாரன் விஜயரங்கத்துக்கு இன்னும் விவாகம் செய்யாமலிருக்கிறது நியாயமா?" என்று கேட்டார்கள். அப்பொழுது நான் விழித்திருப்பதாக அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டேனுயினும், நான் என் தாயாரிடம் என் விவாகத்தைக்குறித்து என் மனதிலுள்ளதைத் தெரிவிக்க எண்ணங்கொண்டிருந்தவனுதலால்-அவர்கள் எண்ணத்தையறிய மௌனமாயிருந்தேன். நான் கண்டெடுக்கப்பட்டவனுதலால் இன்னகுலத்தானென்று அறியாமல் அவர்கள் என்னை வளர்க்குங்காரணத்தினுலே தங்கள் பந்துக்கள் ஒருவரும் தங்கள் வீட்டுக்கு வருகிறதில்லையென்றும் என் மாமன் என் தந்தையிடம் என்னைக் குறிப்பிட்டுக் கேவலமாகப்பேசி, குலமறியாதவனை வளர்ப்பதால் தான் உங்கள் வீட்டுக்கு வருவதில்லையென்றும் சொல்லியதை என் தகப்பனுர் தாயாரிடம் கூறித் துக்கப்பட்டார். நான் கண்டெடுக்கப்பட்டவனென்றும் என்னுலென் தாய்தந்தை தங்கள் பந்துக்களால் விலக்கப்பட்டிருந்தார்களென்றும் அறிந்தபின் அவர்களைத் துன்பத்திலிருக்கவிடுவது நியாயமல்லவென்று அப்பொழுதே நீங்கினேன். நானிருக்குமிடத்தைத் தெரிவித்தால் என்னை அழைத்துக்கொண்டுபோய் விடுவார்களென்று என்னிருப்பிடத்தைத் தெரிவிக்காமலிருந்தேன்.

அருணாசல முதலியார்.—ஐயா கலியாணசுந்தரமுதலியார்! நான் உம்முடைய குமாரன் கருத்தை அறியாமல் சொன்னவைகள் உண்மையாயின பார்த்தீரா! (என்று சிரித்தார்.)

வேங்கடாசல முதலியார்.—அத்தான்! விஜயரங்கம் வீட்டைவிட்டு நீங்கிய பின் என்னைக்கண்டான். (என்று தான் அவன் விஷயமாகச் செய்த கொடுமைகளைச் சொல்லித் துக்கப்பட்டார்.)

கேசவ முதலியார்.—அத்தான்! தம்பி விஜயரங்கத்தை என்தமையன் துரத்தி விட்டதைக்குறித்து எனக்குத் துக்கமில்லை. எனக்குச் சந்தோஷமே!

கலியாணசுந்தரமுதலியார்.—விஜயரங்கம் கஷ்டத்தோடு வழி நடப்பதையும் பசியால் களைத்துப் போவதையும் பார்க்கவா உமக்குச் சந்தோஷமாக இருந்தது?

கேசவ முதலியார்.—ஆம்! ஆம்! அவ்விதம் கஷ்டப்பட்டு, நானிருக்கும் இடம் வந்ததால்தான் நான் வெளிப்பட்டேன். அவ்விதம் முடியாமல் என் தமையன் தம்முடன் வைத்துக்கொண்டிருந்தாராயின் என்கதி யென்னவாயிருக்கும்! சபாபதி முதலியார் கதி என்ன? எங்களை மீட்டுவரவே தம்பி விஜயரங்கத்தை என் தமையன் அனுப்பினார். (என்று தாம் மதுரைக்குப்போயிருந்து வந்தபின் தம் மைத்துனர் நிலத்தை அபகரித்ததைக் கேள்விப்பட்டதையும், தம்முடைய மைத்துனர் ஜெகநாத முதலியாரைப் பார்க்கப்போனபொழுது தமக்குச் சமாதானம் சொல்லியனுப்பியதையும், தாம் வரும்பொழுது தம்மைச் சோலையப்பன் ஆள்கள் மூலமாய்ப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் மூன்றுநாள் ஒரு அறையில்விட்டு அது முதல் அனேக வருடங்கள் சிறைப்பட்டிருந்ததையும் பின் விஜயரங்கம் சோலையப்பன் முதலானவர்களை ஒருவழியாக நின்று வென்ற அதிசயத்தையும் யாவருங்கேட்டு ஆச்சரியப்படச் சொல்லிமுடித்தார்.)

அருணாசல முதலியார்.—அப்பா விஜயரங்கம்! நீ சோலையப்பன் கையிலெவ்விதம் அகப்பட்டாய்?

விஜயரங்கம்.—தந்தையே! சோலையப்பன் இருந்த இடத்திற் கருகாமையிலுள்ள சாலைவழியாக நான் போகும்பொழுது ஒரு சன்னியாசி வந்திருக்கிறாரென்றும் அவரைப் பார்க்கப்போகிறவர்களுக்கு இரகசியங்களைச் சொல்லுகிறாரென்றும் கேள்விப்பட்டதால் என் பிறப்பை யறியலாமென்பதாகச் சென்றேன். (என்று தனக்கு நேரிட்டதை விளங்கக் கூறினான்.)

சபாபதி முதலியார்.—தம்பி விஜயரங்கம் தான்செய்த யாவும் சொல்லவில்லை. (என்று தன்மனைவி கனகாம்புஜத்தினால் நேரிட்டவைகளும், தங்களை மீட்டபின் விஜயரங்கத்தைப் பரிகஷித்தபொழுது குற்றத்தைத் தானே

ஏற்றுக்கொண்டு பேசியதுமாகிய விஷயங்களை மறைக்காமல்யாவ ருங் கேட்டு அதிசயப்படச்சொன்னார்.)

அருணாசல முதலியார்.—ஜெகநாதமுதலியார் எழுதிய கடிதங்கள் சோமசுந்த ரத்துக்கு எப்படி கிடைத்தன ?

கேசவ முதலியார்.—நாங்கள் வெளிப்பட்ட மறுநாள் அடுத்த கிராமத்தின் தாசில்தார் அனேக சேவகரோடு திருடர்கள் இருந்த விடத்திற்குச் சென்று கோயிலுக்கெதிரில் இறந்திருந்தவர்களை எடுத்து அடக்கஞ்செய் யத்தம்மோடுவந்தவர்களுக்கு உத்தரவளித்தபின், சோலையப்பன் அறை யிலிருந்த பெட்டிகளைத் திறந்து பார்த்தகாலத்திலே அளவற்ற திரவியத் தைத் தம்பி விஜயரங்கம் கண்டு, இந்த ஆலயத்தின் திருப்பணிக்கும் கும் பாபிஷேகத்திற்கும் நித்தியகட்டளைக்கும் வேண்டிய பொருளிருப்ப தால் தக்க ஏற்பாடுசெய்யலாமென்ற பொழுது, தாசில்தார் தூண்டினதா தார் அனுமதிபெற்று அவ்விதமே செய்யலாமென ஒப்புக்கொண்டார். அவ்விடத்திலிருந்த திரவியத்தோடு அனேக கடிதங்கள் இருப்பதையுங் கண்டோம். நான் சிறைப்பட்டதுமுதல் ஜெகநாதமுதலியார்மேல் சந்தே கங்கொண்டிருந்தவனுதலால் அவருடைய கடிதம் ஏதாகிலும் அவைகளி லிருக்குமோவென்று பார்த்தபொழுது, நான் பிடிபட்டகாலத்தில் என் னிடத்திலிருந்தெடுத்துக்கொண்ட கடிதத்தோடு ஜெகநாதமுதலியார் என்னைக்குறித்துச் சோலையப்பனுக்கு எழுதிய கடிதங்கள் அனேகமிரு க்க அவைகளைத் தாசில்தார் உத்தரவுபெற்றுப் பின் சோமசுந்தரமுதலி யாரைக் கண்டபொழுது அவரிடம் கொடுத்தோம்.

அருணாசல முதலியார்.—அம்மா கமலாக்ஷி ! நீ உன் தாதாவையும் உன் தாயா ரையும் விட்டுப்போன காரணத்தையும் உனக்கு நடந்ததையும் சொல்ல வேண்டும்.

கமலாக்ஷி.—மாமா, ஊம் தாதா ! அத்தையவர்களுக்கு நேரிட்டதைக் கேட்ட பின் என்னைக்கேட்க வேண்டுகிறேன்.

அருணாசல முதலியார்.—அம்மா கமலாக்ஷி ! நான் உங்கள் வீட்டுக்கு வந்தது முதல் இதுவரையிலே நீ சொல்வதெல்லாம் யாவருக்கும் வியப்பைத் தந்ததையும் அது நியாயத்தை அனுசரித்திருப்பதையும் அறிந்திருக்கி றேன். இப்பொழுதும், உனக்கு நேரிட்டதைப் பின் சொல்லுகிறேன். என்பதும் முக்கியமான காரணத்தைக்கொண்டே யிருக்கவேண்டும். ஆனதால் சம்பூரணம் ! உனக்கு நேரிட்டதை முதலிற் சொல்லவேண் டும்.

சம்பூரணம்.—அம்மா கமலாக்ஷி ! என்னை ... ...

கமலாக்ஷி.—அத்தை ! நான் தங்களைக் கேட்கவில்லை. மாமா ! ஊம், தாதாவி டம் சொல்லாமல் என்னிடம் சொல்லுதல் அழகாகாது, தாங்கள் மாமா, ஊம், தாதாவிடம் சொல்லவேண்டும்,

கமலாகூஷி சொல்லியதைக் கேட்டு யாவரும் நகைத்தார்கள்.

அநுஞ்சல முதலியார்.—கமலாகூஷிசொல்லியது நியாயமே! என்னிடத்திலே யே யாவும் சொல்லவேண்டும். (என்று நகைத்தார்.)

அரங்கராவ்.—உன்னிடத்தில் சொல்லவேண்டிய அவசியமில்லை. அம்மா! நீ என்னிடத்தில் சொல்லலாம்.

கம்பூரணம்.—அண்ணா! என்னைத் தங்கள் சினேகர் விட்டு நீங்கும்பொழுது ஏழுமாதம் கருப்பமாயிருந்தேன். என் மைத்துனர் இரண்டுமாதம் என் பார்வைக்கு அகப்படாமல் இருந்தார். இரண்டுமாதத்துக்குப்பின் ஒரு நாள் விடிய ஒருஜாமத்துக்குமுன் காத்தனும் சுத்தனும் நான் படுத்திருந்த அறைக்குள் வந்து என்வாயில் துணியை வைத்துத் திணித்துக் கைகளையுங் கால்களையுங் கட்டிப், பேசினால் கொன்று விடுவோமென்று ஒரு கத்தியைக்காட்டிப் பயமுறுத்தி வண்டியில்போட்டுக் காட்டுக்குள் வண்டி போனவுடன் என் வாயிலிருந்த துணியையெடுத்துக் கட்டை அவிழ்த்துக்கொண்டுபோய்ச் சுந்தரத்தம்மாளிடம் என்னை விட்டுப்போனார்கள். சுந்தரத்தம்மாள் என்னைக்கண்டு பரிதாபப்பட்டு எனக்குத் தேறுதலைசொல்லி வந்தார்கள். நான் சுந்தரத்தம்மாளிடம்போன சில தினங்களுக்குப்பின் ஓர் ஆண்குழைந்தையைப் பெற்றேன். சுந்தரத்தம்மாள் குழந்தை சுந்தரமாக இருக்கிறதென்று சந்தோஷப்பட்டாலும், நான் சந்தோஷப்படாமல் துக்கப்பட்டு நம்மைக் காட்டில் கொண்டுபோய் விடும்படி செய்தவர் நம்முடைய மைத்துனராக இருக்கவேண்டும், கப்பலேறிச் சென்ற நம்முடைய நாயகன் வந்துவிடுவானென்ற எண்ணம் அவருக்கிருந்தால் நம்மைக் காட்டில் கொண்டுபோய் விடத்துணியார், ஆனதால் நம் முடைய நாயகனுக்கேதோ கெடுதிசெய்ய எண்ணங்கொண்டிருக்கிறார் போல் காணப்படுகிறது, நம்முடைய நாயகனுக்குக் கெடுதிசெய்தபின் நம்முடைய குழந்தையை உயிரோடு வைத்திருக்கமாட்டாரே என்ற பயத்தோடிருந்தேன். சில மாதங்களுக்குப்பின் நானும் சுந்தரத்தம்மாளும் வீட்டுக்குப் பின்புறத்தில் போயிருந்து வந்து குழந்தையைக்காணுமல் திகைத்து மரணமூர்ச்சையானேம். சுந்தரத்தம்மாள் உதவியால் மூர்ச்சைதெளிந்து, நம்முடைய நாயகனும் பிரிந்தார், குழந்தையும்போனது, நாமும் இறக்கவேண்டியதென்றிருந்தேன். மூன்று மாதங்களுக்குப்பின் என் மைத்துனர்வந்து தாமொன்றும் அறியாதவர்போல் குழந்தையைக் கொண்டுவா என உத்தரவளித்துக் குழைந்தையின் விஷயத்தையறிந்து அதிக துக்கங்கொண்டவர்போல் நடித்து என்னிடம்வந்து, கப்பலேறிச் சென்ற தன் தமையனும் காலஞ்சென்றார், குழந்தையும்போனது என்று எனக்குத்தைரியம்சொல்லி, என்னைப் பெண்டாள எண்ணங்கொண்டார். நான் அவரை நிந்தித்து அனுப்பிவிட்டேன். அவர் நீங்கியபின் நான் சுந்தரத்தம்மாளிடம் என் நாயகனுக்கு நேரிட்டதைச் சொல்லித் துக்கப்பட்

யதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு எனக் கித்தனைநாள் தேறுதலேசொல்லி இப்பொழுது இவ்விதம் கேட்பது தருமமா? என்றேன். சுந்தரத்தம்மாள் என்னைத் தன்தங்கையைப்போல் எண்ணியிருப்பதால் அந்தப்பாவி கையி லிருந்தென்னை விடுவிக்கவே தான்கேட்டதாகவும், நான் இறந்துவிட்ட தாகத்தான் அவருக்கு மெய்ப்பித்து விடுவதாகவும், எங்காகிலும் போய் மறைந்திராமல் உயிரோடு இருப்பதை அவர் அறிந்தால் தன்னுயிர் நில் லாதென்பதாகவும் சொல்லக்கேட்டு, அவளைத் தழுவிக்கொண்டு, அவளே என் தாயென்றும் கருதி, நான் இப்பொழுதே நீங்கி எங்காகிலும் மறை ந்திருந்து என் காலத்தைக் கழித்து விடுகிறேன், ஆயினும் நீ நான் இற ந்துவிட்டேனென்று எப்படி மெய்ப்பித்து விடுவாயென்று கேட்ட போது, அவள் அது ஒரு கஷ்டமல்ல, தோட்டத்தில் ஒரு குழிவெட்டி ஒரு கட்டையில் நான் கட்டியிருந்த சேலையில் ஒன்றைச் சுற்றிப் புதைத் துவிட்டால், அவர் தன் சொல்லை நம்பாமல் குழியைத் தோண்டிப் பார்த் தாலும் சேலையால் சுற்றப்பட்டிருக்கும் கட்டையைப் பார்த்து நம்பிக்கை கொண்டுபோவார்; அல்லாமலும் தம்முடைய தமையன் சொத்தைக் கைக்கொள்ளப்போகிறவருக்கு எப்பக்கத்திலும் அனுகூலமாய் முடிந்த தைப்பற்றிச் சந்தோஷப்படுவாரேயன்றித் துக்கப்படமாட்டாரென்றும் கூறி, என்னை இரவில் தனித்தனுப்பத் தனக்கு மனம் துணியவில்லை யென்று துக்கப்பட்டாள். நான் இரவில் போவதைவிட்டுப் பகலில் போக யோசித்தால் யாராகிலும் கண்டு அவரிடம் சொல்லிவிட்டால் இருவருக்குங் கெடுதியாக முடியுமே! நம்முடைய எண்ணம் கைகூடா தென்றதை ஒப்பி, என்னைச் சாப்பிடச்செய்து எனக்கு உத்தரவு கொடு த்து அனுப்பும்பொழுது, தான் ஒன்றை மறந்துவிட்டதாகவும்-அதாவது என்னைப் புதைத்துவிட்டேனென்று என் மைத்துனருக்குத்தான் சொன் னால் அவள் போட்டிருந்த நகைகளெங்கே என்றால் தான் என்ன சொல் லுகிறதென்று கேட்டாள். அவள் சொல்லுவது நியாயமே என்று நான் பூட்டியிருந்த தாலி முதலிய நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்தேன். அவைகளைச் சுந்தரத்தம்மாள் துக்கத்தோடு வாங்கிக்கொண்டு தன்னி டத்திலிருந்த பையொன்றைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ள என்னைக் கட்டாயப்படுத்தினாள். நான் மறுக்காமல் பெற்றுக்கொண்டு சுந்தரத்தம் மாளோடு வெளியில் சென்று அவள் காட்டியவழியாகச் சென்றேன்.

என்று சம்பூரணம் சொல்லிமுடித்தாள்.

சம்பூரணம் சொல்வதைக் கேட்டிருந்தவர்களோடு உட்கார்ந்திருந்த சுந்தரத் தம்மாள் எழுந்துவந்து, அம்மா கமலாக்ஷி! உன் அத்தையிடம் நான் பெற்றிருந்த இந்த நகைகளை உன் அத்தைக்கு அணியென்று ஒரு முடிச்சைக் கொடுத்தாள். முடிச்சைவாங்கிய கமலாக்ஷி, மாமா! ஊம் தாதா! தருமர் அசுவமேதயாகம் செய்யவேண்டிக் குபேரனிடத்தில்

கடன் கேட்ட காலத்தில், வாங்கும் பொழுதிருக்கும் சந்தோஷம் கொடுக்கும்போதிருந்தால் கொடுக்கத்தடையில்லை யென்றதைக் கேட்ட தருமர் யாவருக்கும் வாங்கும்பொழுது சந்தோஷமாகவும் வாங்கி யதைக் கொடுக்கும்பொழுது துக்கமாகவும் இருப்பது சகஜ மாதலால் அவ்விதம் சந்தோஷமாகக் கொடுக்கமுடியாதென்று கடன் வாங்காதிருந்தார். சுந்தரத்தம்மாள் வாங்கும்பொழுது துக்கப்பட்டதை யும் கொடுக்கும்பொழுது சந்தோஷப்பட்டதையும் பார்த்தீர்களா வென்று, தன் அத்தைக்கு எல்லா கைகளையும் அணிவித்துத் தாலியை யும் கழுத்தில் கட்டி, அத்தை! தாங்கள் இப்பொழுது சிறு பெண்ணாய் விட்டீர்களென்று நகைத்தாள்.

சம்பூரணம்.—ஆம் கமலாக்ஷி! உன்னால் நான் சிறு பெண்ணானேனென்பதற் குச் சந்தேகமில்லை. (என்று அரங்கராவைப் பார்த்து) அண்ணா! நான் சுந்தரத்தம்மாளைவிட்டு அன்றிரவெல்லாம் காட்டிலுள்ளது அதிக கஷ்ட ப்பட்டு ஒரு சாலையைச் சேர்ந்து மறுநாள் பகலெல்லாம் நடந்து மாலை யில் ஒருசிறிய கிராமத்தை யடைந்து இரவைக் கழிக்க இடங்கேட்கலா மென்று அநேக வீடுகளருகில் சென்றாலும் கேட்பதற்கு அஞ்சி ஒவ் வொரு வீட்டையும் கடந்து போகும்பொழுது, ஒரு வீட்டின் வெளி யில் நின்றிருந்த புண்ணியகோடி முதலியார் என்னைப் பார்த்து, "யா ரைத் தேடுகிறாய்? என்னவேண்டும்?" என்று கேட்டார். நான் வெட் கப்பட்டு ஒன்றும் சொல்லாம லிருந்ததைக் கண்டு, தன் மனைவியை அழைத்து என்னைக்காட்டி, இந்தப் பெண்பிள்ளைக்கு என்ன வேண் டுமோ தெரியவில்லை, அதை விசாரியென்று வீட்டுக்குள் சென்றார். அவர் மனைவி அம்மணியம்மாள் என்னை வீட்டுக்குள் அழைத்து என் னால் யாவும் அறிந்தபின் தங்கள் வீட்டில் என்னை இருக்கும்படி வேண் டித் தன் தங்கையைப்போல் பார்த்து வந்ததோடு, என்னைக் குறித்து வினவுவோர்களுக்கெல்லாம் நான் தன் தங்கையென்று சொல்லியும் வந் தார்கள். நான் அவர்கள் வீட்டுக்குப் போகும்பொழுது அவர்களுக்குக் குழந்தைகளில்லாமலிருந்து பின் சொக்கலிங்கமும் மரகதமும் பிறந்தார் கள். கமலாக்ஷி யம்மாளை மரகதமும் சொக்கலிங்கமும் முதல் வீட்டுக் குக் கொண்டுவந்தபின் கமலாக்ஷி சுரத்தால் வாய் பிதற்றியபொழுது காத்தனையும் சாத்தனையுங் குறித்தும் விஜயரங்கத்தைக் குறித்தும் சொன்னவைகளைக் கேட்டு, கமலாக்ஷி சௌக்கியமானபின் அவள் சொல் லிய சங்கதிகளினால் விஜயரங்கமே என் மகனென்று மூர்ச்சையா னேன். விஜயரங்கத்தின் விஷயத்தில் இருந்த சந்தேகம் மூற்றிலும் நீங்கக் கமலாக்ஷி வேண்டியதைச் செய்து என் மகனை எனக்குக் காட்டி இவ்விடம் கொண்டுவந்து என் நாயகனோடு சேர்த்தாள்.

அருணாசல முதலியார்.—அம்மா கமலாக்ஷி! இனி உனக்கு நேரிட்டதைச் சொல்லலாம் அல்லவா?

கமலாக்ஷி.—மாமா! ஊம் தாதா! தங்களைத் தாதாவென்றழைக்கச் சுலபத்தில் வரவில்லை. எனக்கு நேரிட்டதைச் சொல்லத் தடையில்லை. தாங்களும் அம்மாளும் என்னை விட்டு நீங்கியபின் ஒரு சிறுவன் இந்தக் கடிதத்தைக்கொண்டுவந்து கொடுத்தான். (என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.)

கமலாக்ஷி கொடுத்த கடிதத்தை அருணாசலமுதலியார் யாவருங்கேட்க வாசித்தபின், கமலாக்ஷி தனக்கு நேரிட்ட விஷயங்களிலே, வைக்கோற்போரில் நின்று கனகாம்புஜம் வருமுன் விஜயரங்கம் தனியே பேசிக்கொண்டிருந்ததையும், கனகாம்புஜத்துக்கும் விஜயரங்கத்துக்கும் நடந்த சம்பாஷணையையும் சொல்லாமல், மற்ற முக்கியமான சங்கதிகளைச் சொல்லியபிறகு, மாமா! ஊம் தாதா! நான் அண்ணன் சோமசுந்தரமுதலியாரைக்கண்டு, காத்தனையும் சாத்தனையுந்தேடி விசாரிக்கச் சொன்னபடி, அவர் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குப் பெரிய வெகுமதி கிடைக்கப்போகிறதாகச் சொல்லி, அவர்களை ஒன்றும் கேட்காமல் நான் இருந்த இடத்திற்கு அழைத்துவந்து என்னை நேரில் வைத்துக்கொண்டு கேட்டபோது, அவர்கள் பயந்து பதில் சொல்லாமலிருந்ததைக் கண்டு, அவர்கள் வண்டியில் பேசியதைச் சொல்லி, உண்மையைப் பேசினால் பெரிய வெகுமதி தருவதாக நான் வாக்களித்தபின், அவர்கள் ஒன்றையும்மறைக்காமல் சொன்னதையன்றிச், சுந்தரத்தம்மாளுக்கும் இந்த இரகசியம் நன்றாய்த் தெரியுமென்றுங் கூறியபடியினால், காத்தன் சாத்தன் குறிப்பிட்ட இடத்திற்குச், சோமசுந்தரத் தண்ணன் சென்று சுந்தரத்தம்மாளையும் மனோரஞ்சிதத்தையும் அழைத்துவந்து அவர்களை விசாரித்த பிறகு, பிள்ளையின் செய்தியைத் தான் முற்றிலும் அறிந்திருந்தும், பிள்ளையைப் பெற்ற புண்ணியவதி எங்கிருக்கிறாளோ, அவர்களுக்கென்ன நேரிட்டதோ? என்று சோமசுந்தரத்தண்ணன் துக்கப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, நாங்கள் வார்த்தையாடிக்கொண்டிருந்த அறையின் கதவு தட்டப்பட்டது. உடனே நான் கதவைத் திறந்தபொழுது, அத்தான் நின்றிருந்ததைக் கண்டேன். அவர் கமலாக்ஷி! உன் தந்தையை அழைத்துவந்தே னென்றார். உடனே அண்ணன் சபாபதி முதலியாரோடு நின்றிருந்த என் தந்தை என்னைப் பிடித்துக்கொண்டு, நான் சிறு குழைந்தையில் விட்டுப்போனே னென்று துக்கப்பட்டார். அவர் துக்கம் நீங்கியபின், எனக்குத் தந்தையைக் கொடுத்தவருக்குப் பிரதியுபகாரம் செய்யாமலிருப்பது அழகல்லவென்று வீட்டுக்குள்ளோடி என் அத்தையைப் பிடித்துத் தரதரமாய் இழுத்துவந்தேன்; அவர்கள் எங்கு இழுத்துக்கொண்டு போகிறா ரென்றதற்குப் பதில் சொல்லாமல் அத்தானிடத்தில் விட்டு, அத்தான்! தாங்கள் எனக்குத் தந்தை

யைக் கொடுத்தீர்கள்! நான் தங்களுக்குத் தாயைக்கொடுத்தேன் என் றேன். என் அத்தை தன் மகனைப் பிடித்தழைத்துக்கொண்டு கொஞ்சி குலாவி அழுதார்கள். சோமசுந்தரத்தண்ணனும் சுந்தரத்தம்மாளும் சொக்கலிங்கத்தண்ணனும் மற்றவர்களும் அடைந்த ஆச்சரியத்திற் களவில்லை.

அருணாசலமுதலியார்.—சம்பூரணம் விஜயரகத்தின் தாயென்று உனக்கு எப் படித்தெரியும்?

கமலாக்ஷி.—மாமா! ஊம் தாதா! அத்தையவர்கள் அத்தானைக்குறித்து நான் பேசியபொழுது மூர்ச்சையானதாலும், அத்தையவர்கள் முகச்சாயல் அத் தானுக்கு இருப்பதாலும், அத்தையவர்களைத் தாங்கள் சிறுவயதில் விட் டுப் போனீர்களென்று அத்தையவர்களால் சொல்லக்கேட்டதாலும், அத்தானுடைய தாயென்றே அவர்களை எண்ணினேன். அத்தையவர் கள் தன் மகனைப்பார்த்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்துகொண்டிருப்ப தைக் கண்ட சுந்தரத்தம்மாளும் அத்தையவர்களைக் கண்டு ஆனந்தங் கொண்டார்கள். நாங்கள் யாவரும் சந்தோஷத்தோடிருக்கும்பொழுது சுவாமியவர்கள் அனுப்பிய பத்திரிகையைச் சொக்கலிங்கத் தண்ணன் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். அப்பத்திரிகை எங்களுடைய எண்ணத்திற்கு அனுகூலமாய் முடியுமென்று கருதினேம். சுவாமி யவர்கள் மதுரையிலிருந்து வரும் சினேகிதரை மகிழ்விக்கச் சுவர்ண புரியிலிருந்து சில தனவந்தரை வரவழைக்க எண்ணங்கொண்டிருந்த தால், தாம் இருக்கும் ஊரிலுள்ள தனவந்தர்களை வரவழைக்காமலிரா ரென்றும், என் சிறிய மாமன் வந்திருந்தால் தான் கௌரவமாக எதற் கும் முன்னிடுவாரென்றும், அவர் முன்னிட்ட காலத்தில் அவருடைய செய்கையை வெளிக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் நாங்கள் யாவ ரும் பேசி முடிவுபடுத்தி யாவரையும் ஆச்சரியப்படுத்த இருந்தோம். எங்களிஷ்டப் பிரகாரம் யாவும் முடிந்ததோடு, நாங்கள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடையத் தாங்களும் வெளிப்பட்டீர்கள்.

கமலாக்ஷி சொல்லைக் கேட்டிருந்தவர்கள் யாவரும் கமலாக்ஷி பசியோடு கடைத்தெருவில் எலிகடித்த பழத்தை எடுக்கப்போனே னென்ற தையும், அக்கிராமத்தில் ஒரு கவளம் அன்னத்திற்கு வீடுவீடாய்த் திரிந்தே னென்றதையும் கேட்டுத் துக்கப்பட்டுப் பின் நடந்ததை யறிந்து பேரானந்தமடைந்தார்கள்.

செழுங்கமலம் தன் மகளைப்பிடித்துக்கொண்டு, கமலாக்ஷி! என்பாவி அண் ணனால் படாதபாடுபட்டுக் கையிலோர் காசுமில்லாமல் கடைத்தெரு வில் திரிந்தும், படுத்துறங்க இடமில்லாமல் வைக்கோற்போரில் படு த்துறங்கவுமா விதியிருந்ததென்று அழுதாள். செழுங்கமலத்தின் துக் கத்தை நீக்கவேண்டுமென்னு மெண்ணத்தோடு சம்பூரணம் கமலாக்ஷி

யைப்பார்த்து, அம்மா கமலாக்ஷி ! நீ வைக்கோற்போரில் படுத்திருந்த பொழுது விஜயரங்கம் ஏதேதோ சொன்னனென்றதைக் கூறுமல் விட்டது யாது காரணம் ?

அருணாசல முதலியார்.—அம்மா கமலாக்ஷி ! உனக்கு நேரிட்டதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, பாதியை மறைத்து வைத் துக்கொண்டது நியாயமா ?

கமலாக்ஷி.—தங்களைத் தாதாவென்று அழைக்காமல் மாமாவென்றழைக்க உத் தரவுகொடுத்தால் அதைச் சொல்லுவேன். அல்லவென்றால் சொல்லேன். (என்று நகைத்தாள்.)

அருணாசல முதலியார்.—இன்னும் இரகசியம் இருக்கிறதுபோல் காணப்படு கிறது. உன்னிஷ்டபிரகாரம் அழைக்கலாம். நீ ஒன்றையும் ஒளிக் காமல் சொல்லவேண்டும்.

கமலாக்ஷி.—தாதா ! ஊம் மாமா ! நான் தங்களைத் தாதா வென்ற வழக்கம் விடமாட்டேனென்கிறது. பார்த்தீர்களா ?

அருணாசல முதலியார்.—ஆம்! வழக்கப்பிரகாரம் தாதாவென்றழைக்கச்சொன் னபொழுது மாமாவென்று அடிக்கடி உன்வாயில் வந்துகொண்டிருந்தது. மாமாவென்றழைக்க எண்ணங்கொண்டபொழுது தாதாவென்றவழக்கம் வருகிறது. ஆனதால் வழக்கத்தைக் கெடுக்காமல் தாதா வென்றழைப் பதே உத்தமம். (என்று நகைத்தார். யாவரும் நகைத்தார்கள்.)

கமலாக்ஷி.—இல்லை, இல்லை ! இனி தாதாவென்று சொல்லாமலிருக்க முய லுகிறேன். நான் வைக்கோற்போரில் படுத்திருந்தபொழுது நான் அவ் விடத்திலிருந்ததை அறியாமல் தங்கள் குமாரன் அவ்விடம வந்து நின்று தன் மனதில் குடியிருந்த கள்ள எண்ணங்களை யெல்லாம் கொட்டி விட்டார். இவ்வித எண்ணங்கள் அவரிடத்தி லிருக்குமென்று நான் நினைக்கவில்லை. (என்று நகைத்தாள்.)

அருணாசலமுதலியார்.—விஜயரங்கம் சொன்னதை இன்னதென்று கூறுமல் வீணில் அவன்மேல் குற்றஞ் சுமத்துவது நியாயமல்லவே !

கமலாக்ஷி.—அவர் என்னைச் சகோதரியைப்போல் பாவித்துச் சகோதரவாஞ் சையோடு வார்த்தையாடிவந்து அந்தரங்கத்தில் என்ன எண்ணங் கொண்டிருக்கவேண்டும் ! "நான் உன்னை விவாகஞ் செய்துகொள்ள எண்ணங்கொண்டு என் தாயாரை அனுப்பிக் கேட்க நினைத்திருந்தேன். என் தாயார் பெண்கேட்டு உன் தாயாரும் சம்மதப்படுவார்களாஞல் என்னை என்னவென்று அழைபபாய் ? இனி அவ்வாசை ஒழிந்ததால் நான் இனி ஒரு பெண்ணையும் விவாசஞ்செய்து கொள்ளாமல் பிரம சாரியா யிருப்பேன்." என்று சொல்வது நியாயமா ? (என்று நகைத்தாள்.)

சம்பூரணம்.—கமலாக்ஷி! ஆம்! ஆம்! விஜயரங்கம் அவ்விதம் சொல்லியது முற்றிலும் தப்பிதம். விஜயரங்கத்தின் கருத்தை யறிந்தபின் நீயும் "விஜயரங்கத்தண்ணனுக்கு விவாகம் நடவாது, அவருக்கு என்னைக் கொடுக்க என் தாயார் சம்மதிக்கமாட்டார்கள், ஆனதால் நானும் விவாகமில்லாமலிருக்கவேண்டியதே!" என்றுயே இது நியாயமா? என்று நகைத்தாள்.

அங்கிருந்த யாவரும் கல் என்று நகைத்தார்கள். விஜயரங்கமும் கமலாக்ஷியின் அந்தரங்கக் கருத்தை அறிந்து அடங்கா மகிழ்வோடு புன்சிரிப்பு கொண்டான்.

அருணாசல முதலியார்.—ஐயா மைத்துனரே! அம்மா செழுங்கமலம்! உங்கள் மகள் கருத்தை அறிந்தீர்களோ? விஜயரங்கத்துக்குத் தன்னைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்த இருந்தது தெரிகிறதா! (என்று நகைத்தார்.)

கமலாக்ஷி.—மாமா! தங்களை ஒருவர் சாப்பிடுகிறீர்களா என்ற பொழுது தாங்கள், வேண்டாம் இப்பொழுதான் சாப்பிட்டேன் என்றால், தாங்களின்னும் சாப்பிடவில்லை, ஆனதால் சாப்பிடப் பிரியம் யிருக்கிறதென்றும், ஒருவர் தங்களிடத்தில் வந்து "ஒரு பெண்பார்த்து விவாகம்செய்துகொள்ளுகிறீர்களா?" என்று கேட்டால், தாங்கள் "எனக்கு விவாகம் வேண்டாம்" என்றால் தங்களுக்கு விவாகத்தின்மேல் இஷ்டமிருக்கிறதென்றே தாற்பரியம் கொள்ளவேண்டுமென்றும் சொல்வீர்களாயின் நான் சொல்லியதற்கும் எதிரிடையாகத் தாற்பரியம் கொள்ளவேண்டும். (என்று நகைத்தாள்.)

அரங்கநாவி.—அருணாசலம்! நம்முடைய மருமகளைப் பேச்சில் வெல்ல நம்மால் முடியாத காரியம்!

புண்ணியகோடி முதலியார்.—ஐயா! தங்களுடைய மருமகள் வல்லமையை அறிய எவராலும் முடியாது. நானும் என்மகன் சொக்கலிங்கமும் அம்புஜத்தின்மேல் கொண்ட அருவருப்பும் நீங்க எங்களிருவரையும் வாக்குச் சாதுரியத்தினால் கட்டி எங்களிஷ்டத்தை மாற்றித் தன்னுடைய இஷ்டம்போல் நடக்கச்செய்து எங்கள் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்தாள். (என்று அம்புஜத்தின் விஷயத்தில் நடந்ததைச் சொல்லி யாவரையும் அதிசயப்படச் செய்தார்.)

அரங்கநாவி.—அருணாசலம்! நீ மற்றவர்களைக் கேட்டதுபோல் நான் உன்னைக் கேட்கவேண்டியதாயிருக்கிறது. நீ இவ்வூரைவிட்டுப்போனது முதல் நடந்ததைச் சொல்லவேண்டும்.

அருணாசலமுதலியார்.—எனக்கு நேரிட்டதைச் சொல்லவேண்டியது அவசியமேயாயினும் என் சகோதரன் இன்று அடைந்த அவமானம் போதா

தென்று, இன்னும் அவனை அவமானத்திலழுத்த வேண்டியதாயிருக்கு மென்றே இதுபரியந்தம் சொல்லாமலிருந்தேன். ஒருவனுக்கு வரும் அவமானத்தைக்காட்டிலும் மனச்சலிப்பை உண்டாக்குவது வேறில்லை யாமல்லவாதால் சொல்லுகிறேன்.

நானும் என் சகோதரன் ஜெகநாதனும் சிறுவர்களாயிருந்த பொழுது என் தந்தை ஜெகநாதத்தின்மேல் அதிக அன்பை வைத்திருந்தார். என் தந்தையின் பூரண அன்பை அவன்கொண்டிருந்ததால் நான்சொல்வதைக்கிஞ்சித்தும் சகனியாமல் எளியவர்களுடைய பிள்ளைகளை அடித்தும் துன்மார்க்கப் பிள்ளைகளோடு பழகியும் சகல துர்நடத்தைகளையுங் கற்றுத்திரிவதையுங் கண்டு நான், தம்பி! இவ்விதம் செய்வது நன்றல்ல என்றால், அதை ஒன்றைப் பத்தாக்கி எங்கள் தந்தை தாயிடத்தில் சொல்லி அவர்கள் என்மேல் கோபங்கொள்ளும்படி செய்வான். நான் என் தந்தை தாயிடம் ஜெகநாதன் செய்தது இன்னதென்றும் அவன் செய்கையைக் கண்டித்ததால் என்மேல் கோபமுண்டாக உங்களிடத்தில் இல்லாததைச் சொன்னனென்றுங் கூறினால் என் வார்த்தையை அவர்கள் நம்பாமல் என்னையே கோபித்து, நான் ஜெகநாதனைக் கண்ணிற் காணவிடாமல் அடிக்கிறேனென்பார்கள். அவன் சிறுபொழுது செய்தவைகளில் ஒன்று சொல்லுகிறேன். அதனால் அவன் குணம் இப்படிப்பட்டதென்று கண்டு கொள்ளலாம் ஒருநாள் நான் போட்டிருந்த மோதிரத்தைக் குளித்த இடத்தில் வைத்து மறந்துவிட்டதால் அதை ஜெகநாதனெடுத்துத் தன் சினேகருடன் சென்று மூப்பது ரூபாய் பெறுமானதை மூன்று ரூபாய்க்கு விற்றுத் தின்பண்டங்களை வாங்கி ஒரு குளக்கரையில் அவர்களோடு சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது, சிறுவர்களில் ஒருவன் தனக்கு அதிகம் கிடைக்கவில்லையென்றும் தானில்லாமற்போனால் மோதிரத்துக்குப் பணம் கிடைத்திராதென்றும் தனக்குச் சரியான பங்கு கிடைக்காமற்போனால் தான் அருணாசலத்திடம் நடந்ததைச் சொல்லி விடுவேனென்றும் கூறியதைக் கேட்ட ஜெகநாதன் முன்பின் யோசியாமல் குளத்தின் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்திருந்தவனைக் குளத்தில் தள்ளிவிட்டான். அவனோடிருந்தவர்கள் துன்மார்க்கர்களாயிருந்தும் தங்களில் ஒருவன் குளத்தில் விழவும் சப்தம் போட்டு ஓடிவிட்டார்கள். ஜெகநாதன் சிறுவனைக் குளத்தில் தள்ளியதை நான் தூரத்திலிருந்து பார்த்து ஓடிவருமுன்னர் அம்மார்க்கமாக வந்தவர்களிலொருவன் குளத்திற்குதித்து சிறுவனோடு கரை சேர்ந்தான். ஜெகநாதன் என்னைக் கண்டவுடன் வீட்டுக்கோடி எங்கள் தாய் தந்தையிடம், அண்ணன் கையிற் போட்டிருந்த மோதிரத்தை விற்றுச் சிறுவர்களோடு சண்டை போட்டு ஒருவனைக் குளத்தில் தள்ளியும், தம்பி தள்ளி விட்டானென்று உங்களிடத்தில் சொல்லவும் சிறுவர்களை ஏவி அவர்களிடம் பேசிகொண்டிருந்ததைக்

சேட்டு உங்களிடம் நடந்ததைச் சொல்ல ஒடிவந்தேனென்று கூறி உட் கார்ந்திருந்தான். நான் வீட்டுக்குச் சென்றவுடன் என் தந்தை சோப மாக என்னைப் பார்த்து, எனப்பா ! தம்பி ஜெகநாதன் தானே சிறுவ னைக்குளத்தில் தள்ளி விட்டான். கையிலிருந்த மோதிரம் எங்கே? தம்பி அறியாதவனுயிருந்தும் அவன் கையில் போட்டிருக்கும் மோதி ரம் இருக்கிறதே! என்று கோபித்துத் தம் கைசலிக்க என்னை அடித் துப் போனுர். என் தாயாரும் நெருங்காமல் தூரத்திலிருந்தே பார்த் துப் போனுர்கள். ஜெகநாதன் என்னிடம் வந்து நீ என்மேல் கோள் சொல்லு முன்னம் உனக்கு உதைவாங்கி வைத்தேன் பார்த்தாயா ? என்றும், இனித் தன்மேல் கோள் சொல்லும் விஷயத்தில் ஜாக்கிரதை யாக இருக்கவேண்டுமென்றும் பயமுறுத்தினுன். பாம்பின் குட்டிக் குப் பிறக்கும் பொழுதே விஷம் உண்டாகி அது வளர வளர விஷமும் அதிகரிப்பது போல் ஜெகநாதனுக்கும் எனக்கும் வயது பத்தும் பன் னிரண்டுமாக இருந்த பொழுதே ஜெகநாதனுக்கு அவ்விதமான குணம் இருந்து நாளுக்கு நாள் அவனுடைய துர்க்குணம் விருத்தியாய் வந் தது. நான் ஜெகநாதனைக் கவனிக்காமல் அவன்மேல் வெறுப்பைக் கொண்டிருந்தேனென்று எண்ணிய என் தந்தை தனக்குப்பின் நான் அவனைப்பராமரிக்க மாட்டேனென்று தன் ஆஸ்தியில் செழுங்கமலத்துக் குக் கொடுக்க எண்ணங் கொண்டிருந்ததை அவள் பெயர்க்காக்கி மற்ற நிலத்தை எங்கள் இருவருக்கும் பங்கு எற்படுத்தினுலும் நல்ல நிலமெல்லாம் என்தம்பியைச் சேரவே எற்பாடுசெய்து எழுதிவைத் துச் சில வருடங்களுக்குப்பின் காலஞ்சென்ருர். என் தாயும் அவருக் குப்பின் நெடுநாளிராமல் மரணமானுள். தாய்தந்தையர் காலஞ்சென்ற பின் என்தந்தை எழுதிவைத்த பிரகாரம் என்சகோதரனுக்குக் கொடுத்து எனக்குக் குறிப்பிட்டிருந்தை மகிழ்வோடு ஒப்புக்கொண்டேனென்று சொல்லித் தனியே வந்துவிட்டேன். நாங்கள் பாகப்பிரித்துக்கொண்ட சில வருடங்களுக்குள் என்சகோதரன் தன்கையிலிருந்த பொருளையெல் லாம் செலவழித்துவிட்டு நிலத்தை விற்கமுயன்ருன். நான் அதை வெளி யிற் போகவிடாமல் அயலாரைக்கொண்டு விலைக்கு வாங்கிக்கொண்ட பின் என் தங்கைக்கு விவாகத்தைமுடித்து நானும் விவாகஞ்செய்து கொண்டேன். சில அசந்தர்ப்பத்தால் என்மனைவியை என்தங்கை பார் க்காமலிருக்க நேரிட்டது. என் சகோதரன் தன் கையில் உள்ளதை யெல்லாம் அழித்துவிட்டு நிராதரவாய் இருந்ததைக்கண்டு நான் அழை த்துவந்து என்னுடு வைத்துக்கொண்டு அவனுக்கு விவாகம் முடித்து வைத்தேன். என் மனைவி ஏழுமாதகர்ப்பமாக இருந்தபொழுது ஒருநாள் சிலரோடு வார்த்தையாடிக்கொண்டிருந்த சமயத்து, கப்பலேறிப் பிற தேசங்களைப் பார்த்துவருவதைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்க நேர்ந் தது. எக்காரணத்தாலும் அது விஷயத்தில் பிரியமுண்டென்று சொன்னேன்.

என்னோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தவர்களிலொருவர் தங்களுக்குப் பிரியம் அவ்விதமிருந்தால் இன்னும் சில தினத்தில் நமது தூரைமுகத்தைவிட்டு ஒரு கப்பல் நக்குவரத் தீவுக்குப்போய்த் தேங்காய்களை ஏற்றி மோல் மீனுக்குச்சென்று அவைகளை விற்றுத் தேக்குமரங்களை ஏற்றிக்கொண்டு வரப்போகிறது; அதில் போய்வரலாமென்று அவர் சொன்னதைக் கேட்டவுடன் எனக்கு ஆசையதிகரித்துப் பிரயாணத்துக்கு வேண்டியதைச் சித்தப்படுத்திக் கொண்டிருந்தேன். நான் கொண்ட எண்ணத்தைக்கேட்ட ஜெகநாதன் என்னிடம்வந்து, தாங்கள் முன்பின் யோசியாமல் கப்பலேறிப்போக எண்ணங்கொண்டீர்களே, இது என்ன அநியாயம்? தாங்கள் கப்பலேறிப்போகவேண்டிய அவசியமென்ன? கப்பலேறிப்போவது அதிக கஷ்டமென்றுசொல்லுகிறீர்களே! தாங்கள் கப்பலேறிச்சென்று தங்களுக்கோர்கெடுதி நேரிட்டால் என் கதியென்ன? எனக்கு வேறுகதியில்லையென்று துக்கப்பட்டான். நான் அவன் துக்கத்தை நீக்கி, நான் கப்பலேறிப்போய்ப் பற்பல தேசங்களைப்பார்த்துவர வேண்டுமென்கிற எண்ணம் எனக்கு நெடுநாளாக இருப்பதால் அதைத் தடுக்கவேண்டாமென்றும், நான் இரண்டொருமாதத்தில் வந்துவிடுவதாக வும்வார்த்தளித்துச்சம்பூரணத்துக்குத்துணையாசஅவன்மனைவியை அழைத்துவந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டு அவனுக்குவேண்டியபுத்திமதிகளைச்சொல்லி, என்னோடு துணையாய்ப்போக இருவரைச் சித்தப்படுத்தச் சொல்லிச்சிலதினத்தில் யாவரிடத்தும்விடைபெற்றுக் கப்பலேறினேன். கடலில் கொந்தளிப்புகாரணமாகக் கப்பல் ஆடிக்கொண்டிருந்ததால் நான் வாந்தி எடுத்து மயங்கி நித்திரைபோனேன். மறுநாள்காலையில் எனக்கு மயக்கம் சிறிது நீங்கி எழுந்தபொழுது ஜெகநாதன் என்னெதிரில் வரக்கண்டு "கப்பல் அதிக ஆட்டங்கொடுக்கிறதே! நீ சாைச்சுப்போகவில்லையா?" என்று நான்கேட்டபொழுது, என்னை மயக்கத்தில்விட்டுப் போகத் தனக்கு மனத்துணிவு வரவில்லையென்று சொன்னதைக்கேட்டு, மேல்தட்டில் வந்து நான் பார்த்தபொழுது கப்பல் பாய்விரித்து ஓடுவதையும் கரைதெரியாமலிருப்பதையுங்கண்டு, "என்னவேலை செய்துவிட்டாய்? தம்பி! உன்னை வீட்டிலிருந்து நான் வரும்பரியந்தம் வேண்டியதைச் செய்துகொண்டிருப்பாய் என்று நான் எண்ணியிருக்க என்னோடு வர்துவிட்டாய்"! என்று கேட்டபொழுது, நான் கப்பலேறியவுடன் மயக்கத்தால் இருப்பதைக்கண்டு என்னைவிட்டுப்போகத் தனக்கு மனம் தைரியப்படாததால் மயக்கம் தெளிந்தபின் போகலாமென்றும், மயக்கம் தெளியாமலே இருந்ததாகவும் அவன் சொன்னான். அவன் என்மேல் அதிக அன்புகொண்டிருந்ததால் இவ்விதம் செய்தானென்று எண்ணியிருந்தேன். காற்றனுகூலத்தால் நாலாம்நாள் நக்குவரத்தீவைச் சேர்ந்து கப்பலில் தேங்காய்களைக் கொண்டுவந்து ஏற்றிக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் நாள்தோறும் கரைக்குப்போய்ச் சமையல்செய்து சாப்பிட்டுப் படலைக்கரையில் கழித்துவந்தோம். மூன்றும் நாள் மாலையில் சமையல் செய்ய அதிக நேரமாய்விட்டது. நாங்கள் சாப்பிட்டு ஓடத்திலேறி வழக் கப்பிரகாரம் இருவர் துடுப்பால் நீரைத்தள்ளவும் ஜெகநாதன் சுக்கான் பிடிக்கவும் ஓடத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள். நான் அங்குமிங் கும் பார்த்துக்கொண்டிருந்து, கப்பலைக்கண்டு கப்பல் ஒரு பக்கத்திலிரு க்க நீங்கள் வேறொரு பக்கம் போகிறீர்களே யென்று கேட்டபொழுது, ஜெகநாதன் சுக்கான் திரும்பாமலிருக்கிறதென்று அதைத்தான் சரிப்படு த்துவதாகச் சுக்கானைப் பிடித்து என்னென்னவோ செய்துகொண்டிருந் தான். துடுப்பைக்கொண்டிருந்த சாத்தனும் சாத்தனும் நிறுத்தாமல் தள் ளிக்கொண்டிருந்ததால் ஓடம் அதிக தூரம் போய்விட்டது. நான் அந்தக் காத்தனையும் சாத்தனையும் பார்த்துத் தள்ளவேண்டாமென்றபொழுது சாத்தன் கைப்பற்றியிருந்த துடுப்பைத் தண்ணீரில் விட்டுவிட்டான். துடுப்பு எங்கள் கைக்குக்கிட்டும் விதம் மற்றவன் தள்ளிக்கொண்டிருந் தான். துடுப்பு எனக்கருகில்வர நான் எட்டி எடுக்கப்போனபொழுது சாத்தனும் என்னருகில் வந்து தான் எடுப்பதுபோல் தாவிக்கொண்டிரு ந்து திடீரென்று என்னைக் கடலில் தள்ளியதோடு துடுப்பையும் எடுத் துக்கொண்டான். உடனே ஜெகநாதன் சுக்கானைத்திருப்பிக் கப்பலுக்கு நேராக ஓடத்தைச் செலுத்தினான். எனக்கு நீந்த நன்றாய்த் தெரிந்திருந் ததால் ஓடம் திரும்பி என்னருகில் வர நான் சுக்கானைப்பிடித்தேன். ஜெகநாதன் கையிலிருந்த நீண்ட சயிற்றால் என்னை அடித்தான். நான் கயிற்றடி பட்டும் விடாமலிருந்ததைக்கண்டு நாங்கள் சமையலுக்குக் கொண்டுபோன கட்டையொன்றை எடுத்து என் பொறிகலங்கத் தலையி லடித்தான். நான்பட்ட அடியால் சுக்கானைவிட்டுக் கடலில் முழுகிச் சில நேரத்தில் சமாளித்து ஓடம் அதிக தூரம் போய் விட்டதைக்கண்டு எனக்கருகாகத் தெரிந்த திட்டின் பக்கந்திரும்பி அதிக சஷ்டத்தோடு நீந்திக்கரைசேர்ந்து மூர்ச்சையாய் விழுந்திருந்தேன். நான் மூர்ச்சை தெளிந்து எழுந்து பார்த்தபொழுது காலை ஏழுமணியானதையும் நாங் கள் ஏறிவந்தகப்பல் இல்லாமலிருந்ததையுங் கண்டு பயங்கொண்டேன். நான் இருந்தது சிறிய தீவாகவும் அதில் மனித சஞ்சாரம் இல்லாமல் இருப்பதையுங் கண்டபின் எனக்கிருந்த தைரியம் என்னை விட்டு நீங்க, அருகிலிருந்த தீவுகள் ஒரு மைல் இரண்டு மைல் தூரத்திலிருந்ததால் அவ்வளவு தூரம் நீந்த முடியாதென்று தூக்கப்பட்டு, நாமென்ன வேலை செய்தோம்! தனக்கிருந்த சொத்தை யெல்லாம் வேசியர்களுக்குக் கொடுத்துப் பின் வயிற்றுக்குச் சோறில்லாமலிருந்தவனைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டோம். அவன் நமக்கு யமனைத் தோன்றிக் கொல்லத் துணிந்தானென்று சில நேரம் தூக்கப்பட்டபின், அவனை

வெறுப்பது நியாயமல்ல ; நாம் முன் போந்த ஜன்மத்தில் செய்தவைகளின் பலன் இதுவோ எனக்கருதியும்,

"கூறுநாவே முதலாகக் கூறுங்கரணமெல்லாம் நீ
தேறும்வகை நீ திகைப்பு நீ தீமைநன்மை முழுதும் நீ
வேறுரூர் பரிசிங்கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்கில்
தேறும்வகையென் சிவலோகா திகைத்தால் தேற்றவேண்டாவோ"

என ஸ்ரீமணிவாசகர் கூறிய அமுதவசனம் ஞாபகத்துக்குவர மனந்தேறியும்,

இரண்டு நாளை யவ்விடம் கழித்து மூன்றும் நாள், நாம் இங்கிருந்து இறப்பதைவிட நீந்தி மற்றொரு தீவை அடைந்தாவது நீந்தச் சக்தியற்றுக் கடலில் இறந்தாவது போவதே உத்தமமென்று கடலுக்கருகில் வந்த பொழுது, திக்கற்றவனுக்குத் தெய்வம் துணையாவது திண்ணமாதலின், அதிக தூரத்தில் ஒரு கட்டுமரம் வருவதைப் பார்த்திருந்தேன். அக்கட்டுமரம் நான் இருந்த தீவுக்கருகாமையில் போவதைக் கண்டு இருவரைக் கூப்பிட்டழைத்தும் அவர்கள் வராமல் போவதைக் கண்டு கடலில் விழுந்து நீந்தித் தெப்பத்தைப்பிடித்து ஏறிக்கொண்டு என்னைக் காப்பாற்றுங்களென்று வேண்டினேன். அவர்கள் இத்தீவில் யாராகிலுமிருக்கிறார்களாவென்று கேட்க, அவர்கள் தமிழ் பேசியதைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு நான் ஒருவரும் தீவிலில்லையென்று எனக்கு நேரிட்டதைச் சொன்னதன்மேல், அவர்கள் பரிதாபப்பட்டுச் சில தின்பண்டங்களைக் கொடுத்துச் சாப்பிடச் செய்து அவர்களிடம் இருந்த சட்டை யொன்றைக் கொடுத்து என்னைப் போட்டுக்கொள்ளச் செய்து எனக்குத் தைரியம் வரப் பலவற்றைச் சொல்லியபின், இத்தெப்பத்தில் ஏறி எங்குபோக எண்ணங் கொண்டிருக்கிறீர்களென்று நான் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் எங்காகிலும் ஒருகரையைச் சேரவேண்டுமென்கிற ஆசையோடு போகிறோம், ஆயினும் நக்குவரத் தீவில் இறங்கப் பிரயோசன மிராதென்று என்னிடம் சொல்லி எனக்கு நேரிட்டதைக் குறித்துப் பேசிக்கொண்டே நக்குவரத்தைக் கடந்தோம். மறுநாள் காலையில் எங்களுக்கெதிராக நீராவி மரக்கலம் ஒன்று வரக்கண்டு நான் சந்தோஷப்பட்டிருந்தேன். என்னோடிருந்த இருவரும் என்னைப்போல் சந்தோஷப்படாமல் அதிக துக்கப்பட்டுக்கொண்டிருந்ததை நான் கண்டேன். சில நேரத்துக்குப்பின் ஓடம் ஒன்று நீராவி மரக்கலத்திலிருந்து இறக்கப்பட்டு எங்களுக்கருகில் வந்து எங்களை ஓடத்திலேறக் கட்டாயப்படுத்திக் கப்பலுக்குக் கொண்டுபோய் மீகாமனிடம் விட்டதில், அவன் எங்களைப்பார்த்து ஒன்றுங் கேட்காமல் எங்களைப் பத்திரமாக ஓரிடத்தில் வைத்திருக்கச்செய்து மறுநாள் ஒரு தீவை யடைந்து

எங்களை ஓரிடத்திலிறக்கிக் கரைச்சுக் கொண்டுபோய் அங்கிருந்தவர்களிடம் எங்களை விட்டுவர உத்தரவு செய்தான். உடனே எங்களைக் கரையில் கொண்டுபோய் விட்டவுடன், கரையிலிருந்தவர்கள் எங்களைப் பார்த்துக் கேவலமாகப் பேசினார்கள். அவர்களில் ஒருவன் எங்களை அழைத்துப் போய் ஒரு அதிகாரியிடத்தில் விட்டு, ஐயா! ஒருவாரத்துக்குமுன் ஓடிப்போன மூவரும் அகப்பட்டு வந்திருக்கிறார்களென்றான். அதிகாரி எங்களைப்பார்த்துக் கோபித்து, இவர்களைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் அடைத்துவிடு என்று உத்தரவு செய்தான். நான் அதிகாரியை வணங்கி, ஐயா! நான் எங்கிருதும் ஓடவில்லையே! என்னைச் சிறைச்சாலையில் அடைக்க உத்தரவு செய்தது என்ன காரணமென்று சொல்லியதைக்கேட்காமலே அவன் என்னைப் பேசாமலிருக்க அதட்டி எங்களைக் கொண்டுபோய் ஒரு அறையில் விட்டு மூடிப்போனான். நான் என்னோடிருந்த இருவரைப் பார்த்து, நாம் எங்கிருந்து ஓடிப்போனோம்? நம்மைச் சிறைச்சாலையில் வைத்திருக்கவேண்டிய காரண மென்ன வென்று கேட்டபொழுது, அவர்கள் என்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, "ஐயா! நாங்கள் குற்றஞ் செய்து மரண பரியந்தம் இத்தீவிலிருக்கத் தண்டனை பெற்றிருந்தோம். இத்தீவிலிருந்து மரண பரியந்தம் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைவிட ஓடிப்போவது உத்தமமென்று ஒருவருக்கும் தெரியாமல் ஒரு தெப்பங்கட்டி மூன்று பேர் தடபிததுச் சென்றதில், ஒருவன் தெப்பத்திலிருந்து தன் சட்டையை அவிழ்த்து வைத்துக் குளித்துக்கொண்டிருந்தவன் தவறிக் கடலில் விழுந்து மீனுக்கு இரையாகவும், நீர் துணியில்லாமலிருந்ததால் அவன் போட்டிருந்த சட்டையை உமக்குக் கொடுத்தோம். குற்றவாளிகள் இலக்கத்தைக் கொண்ட சட்டையை நீர் போட்டிருப்பதால் உம்மையும் குற்றவாளியென்றே அதிகாரி நினைத்து விட்டார் என்றார்கள். நான் குற்றவாளிகள் போடும் சட்டையைப் போட்டிருந்தாலும் ஒருவரைப் பார்த்து மற்றொருவனை எண்ணுவதுமுடியாத காரியம் அல்லவாவென்ற பொழுது, அவர்கள் "அது உண்மையேயாயினும் எங்களோடு ஓடிப்போனவன் உம்முடைய சாயலைக் கொண்டிருந்தான். உம்மைத் தீவில் கண்டபொழுது கடலில்விழுந்திருந்த நடராஜனே உயிர்பெற்று வந்தானென்று எண்ணியிருந்தோம்! நாங்களே அவ்விதம் நினைக்க இடமிருந்தால் அவனை அறியாதவர்கள் என்ன நினைக்க வேண்டும்! அவன் இத்தீவில் இருபது வருடங்கள் இருக்கத் தண்டனை பெற்றிருந்ததால் நீர் அவனுக்குப் பதிலாக அந்த இருபது வருடங்களும் இருக்கவேண்டும். இத்தீவில் நாலாயிரத்துக்கதிகம் குற்றவாளிகள் இருப்பதால் அதிகாரிகள் ஒவ்வொருவருடைய சாயலையும் கண்டு கொள்வது முடியாத காரியம். நடராஜன் இத்தீவுக்கு

வந்த மூன்றும் நாளே எங்களோடு நீங்கினவனுதலால் அவனை அறிந்தவர்கள் அதிகமில்லை. ஆயினும் நீர் அதிகாரியைக் கண்டு உம் முடைய வரலாற்றைச் சொன்னால் விடுதலை செய்து விடுவார் என்று எனக்குத் தைரியம் சொன்னார்கள். என்னினை இவ்விதம் இருந்தால், அதைத் தடுக்க ஒருவராலும் முடியாது. கடலில் இருப் பதைவிடச் சிறையிலிருப்பது விசேடமென்றும் சமயம் வாய்த்தகால த்தில் அதிகாரியைக் கண்டு பேசலாமென்றுமிருந்தேன். பின் எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவந்த பிராமணனிடம் என் வரலாற் றைச் சொல்லி அதிகாரியைப் பார்க்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதில், அவன், நான் சொல்லும் கதை வேடிக்கையாய் இருக்கிறதாயினும் இதை அதிகாரியாவது மற்றவர்களாவது நம்பார் கள், இவ்விதமான கதைகள் அனேகம் கேட்டிருக்கிறோமென்று நகை த்துச் சென்றான். நம்மை இவ்வித துன்பத்துக் காளாக்கவோ ஜெக நாதன் நம்மோடு கப்பலில் வந்தான்! பொருள்மேல் ஆசை கொண்டு நம்மை முடித்துவிட எண்ணங்கொண்டதால், நாம கர்ப்பத்தோடு விட்டுவந்த சம்பூரணத்தை என்ன செய்வானோ! உயிரோடு வைக்க மாட்டானென்ற துக்கத்தோடு சிலநாளைக் கழித்தேன். ஒரு வாரத்தி ற்குப்பின் நான் இருந்தசீவில் இரவிலே அதிக சந்தடி உண்டானது. உடனே ஒருவன் நாங்கள் இருந்த அறையின் கதவைத் திறந்து பார்த் தான். நான் சந்தடி என்னவென்றதில் அவன் அதிகாரியையும் அவ ரோடிருந்த சிலரையும் குற்றவாளிகள் கொன்றுவிட்டார்கள் என்று சொல்லி நீங்கினான். பின் சிலவாரங்கள் பொறுத்து வெளியூரிலிருந்து ஒரு அதிகாரி வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனும் குற்ற வாளிகளைப்பார்த்து என்னிடத்தில் வந்தபொழுது என் வரலாற்றைச் சொன்னேன். அவன் நான் சொன்னவைகளைக்கேட்டு நகைத்து நல்ல கதை கட்டிவிட்டாயென்று சொல்லிப்போன சிலதினத்தில் அத்தீவிலிருந்த குற்றவாளிகளை ஒன்றாய் வைக்கக்கூடாதென்று வெவ் வேறு தீவுகளிலும் போயிருக்கும்படி உத்தரவு செய்தான். நான் யாரி டத்தில் என்னசொன்னபோதிலும என் வார்த்தையை எவரும நம் பாமலிருந்தார்கள். இனி என் விருத்தாந்தத்தைச் சுருக்கிச்சொல்லவே ண்டுமாயின், எனக்கு நேரிட்டதை நினைந்து வருந்தாமல் என் மன தைத்தேற்றி நான் போய்ச் சேர்ந்த தீவில் எனக்குக் கிடைத்த நிலத் திலே காய்கறிகளை உண்டாக்கி விற்றும் சில பசுக்களைக் கடனுக வாங் கிப் பால் விற்றும் நான் கழிக்கவேண்டிய இருபது வருடத்தையும் கழித்தபின் என்னை இக்கரையில் கொண்டுவந்து விட்டார்கள். நான் அத்தீவில் தேடியபொருளோடு நாகைக்கு வந்தவுடன் ஆரங்கராவ் மயி லாபுரியில் வியாபாரதிபதியாக இருப்பதையறிந்து, அவருக்கு நான் உயி

ரோடிருக்கிறேனென்றும், நேரில் நான் விருத்தாந்தத்தைச் சொல்வ தாகவும், நான்வந்து என்சருத்தை அறியுமுன்னம் என் வருகையை இரகசியத்தில் வைத்திருக்க வேண்டுமென்றும் எழுதியனுப்பி, என க்கு நடராஜ முதலியாரென்று கடிதம் எழுதக் கேட்டுக்கொண்டேன். அரங்கராவ் எனக்குப்பதிலெழுதி என்னை இவ்வூருக்கு உடனே வர வேண்டுமென்று வேண்டியபடி நான் இவ்வூருக்கு வந்த பொழுது இருபது வருடம் பொறுத்து என் சொந்த ஊரைப் பார்த்து என் மனை வியையும் மற்றவர்களையும் நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டு மரத் தடியில் உட்கார்ந்திருந்தபோது அதிக தூரம் நடந்துவந்ததாலும் பசியாலும் களைப்பட்டு மூர்ச்சையானேன். கமலாக்ஷியும் வனசாக்ஷி யும் என்னை வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள். நெடுநேரத்திற்குப் பின் என் மூர்ச்சை தெளிந்து செழுங்கமலத்தைக் கண்டவுடன் என் தங்கை யென்றும் நான் அவர்கள் வீட்டில் இருப்பதாகவும் கண்டுகொ ண்டாலும் நான் இரகசியத்தை வெளியிட அது தருணமல்ல வென்றி ருந்தேன். என்னை நன்றாயறிந்த வைத்தியரும் என் தங்கையும் என் னைக் கண்டுகொள்ளாமற் போனது என்னுடைய எண்ணத்துக்கு அனு கூலமாய் முடிந்ததென்றிருந்தேன். சில தினங்களுக்குப்பின் நான்விஜ யரங்கத்தைக் கண்டவுடன் அவன் சம்பூரணத்தின் சாயலே முற்றிலும் பெற்றிருந்ததால் அவன்மேல் அன்பு எனக்கதிகமுண்டானது போல் காணப்பட்டது. அவனும் என்மேல் அதிக அன்புகொண்டிருந்தான். விஜயரங்கத்துக்கு விவாகமாகாத காரணத்தினால் அவன்மேல் சந்தே கம் உண்டாகி, அவன் அழைத்துவந்த விசுவநாதசெட்டியார் என்னைக் கண்டவுடன் என்னை இன்னுனென்று அவர் அறிந்து கொண்டா ரென்று அவனைத் தனித் தழைத்துப்போய் என்வரவை இரகசியத் தில் வைத்திருக்கவும் அரங்கராவினிடத்தில் மட்டும் சொல்லவும் நான் கேட்டுக்கொண்டதோடு, அவர் மூலமாக எனக்கும், அரங்க ராவுக்கும் பேச்சு அந்தரங்கமாய் நடந்துகொண்டிருந்தது. நான் விஜயரங்கத்தின் சமாசாரம் எதாகிலும் என்தங்கைக்குத் தெரிந்திருக் குமாவென்று செழுங்கமலத்தோடு சம்பாஷித்தபொழுது என் தங் கைக்கு ஒன்றும் தெரியாமலிருந்ததைக் கண்டு விஜயரங்கம் நீங்கிய பின் கலியாணசுந்தரமுதலியாரால் என் சந்தேகம் ஒழிந்தது. என்னை ஜெகநாதன் நேரில் கண்டும் நான் கடலிலிறந்தேனென்ற நம்பிக்கை கொண்டிருந்ததால் கண்டுகொள்ளாமற் போனான். நான் வயதா லும் அதிக கஷ்டங்களை அனுபவித்ததாலும் உருமாறியதால் என்னை யறிந்தோர் யாவரும் கண்டுகொள்ளாமலிருந்தார்கள். என் எண்ணம் முடிவுபெறக் கமலாக்ஷியும் அவளுக்குத் துணையாகச் சோமசுந்தரமும் நின்று என் காரியத்தைப் பூர்த்திசெய்தார்கள். இவைகளுக்கெல்லாம்

அனுகூலம் செய்து இவ்வளவு தொந்தரவு எடுத்துக்கொண்ட அரங்க ராவுக்கு என்ன செய்யப்போகிறேனென்று தன்வரலாற்றைச்சொல்லி முடித்தார்.

அரங்கராவ்.—அருணாசலம்! நீ என் விஷயத்தில் செய்ததை யோசித்தால் உன்னை நான் தந்தையென்று சொல்லுகிறதா? சினேகனென்று சொல்லுகிறதா? அல்லது இன்னும் வேறென்ன சொல்லுகிறதென்று எனக்குத்தெரியவில்லை. நான் தாய்தந்தையில்லாமல் என்னுடைய சிறிய தாயாருடைய ஆதரவிலிருந்தபொழுது என் சிறிய தந்தையால் அனேக கொடுமைகளை அனுபவித்துச் சாப்பாட்டுக்குத் துன்பப்பட்டு வருங்காலத்தில் எனக்கு தந்தையைப்போல் வந்து என்னை ஆதரித்து உனக்குக் கிடைக்கும் காசுகளைச் சேர்த்துவைத்து என்னுடைய செலவுக்கும் உபாத்தியாயருக்குக்கொடுக்கவேண்டிய சம்பளத்துக்கும் உதவிசெய்து வந்தாய். புத்தகங்கள் வாங்கவேண்டியதாயிருந்தால் நீபோட்டிருக்கும் நகைகளைக் கொதுவை வைத்து எனக்குப் பணம் வாங்கிக் கொடுத்து உன்தந்தையிடத்தில் அடிபட்டுவந்தாய். நான் துக்கப்படுங் காலத்தில் என்னைடுபிறந்த சகோதரனைப்போல் நீயும் துக்கப்பட்டாய். நான் நலியாயிருந்தால்சினேகனைப்போல் எனக்குவேண்டியதைச்செய்து கொண்டிருந்தாய். உன் தாய்தந்தை காலஞ்சென்றவுடன் நீ விவாகம் செய்துகொள்ளுமுன் எனக்கு விவாகம்முடித்துவைத்து என்னுடைய குடும்பச்செலவுக்கு நிலபலத்தைக்கொடுத்ததோடு எனக்கு எப்படிக்கத்திலும் குறைவுவராமலிருக்கவும் பார்த்துவந்து ஆதரித்த உத்தமா! நீ என்விஷயத்தில் செய்ததை மறக்கலாமா? நீ இவ்வூரை விட்டுப் போனவுடன் நான் உத்தியோகம்பெற்று வெளியூருக்குப்போக நேர்ந்ததாலும் ஜெகநாதன் உன்விஷயத்தில் கெடுதிசெய்வானென்று எண்ணுதாலும் உன்னுடைய குடும்பத்தின் க்ஷேமத்தைக் கவனியாமலிருந்தேன். நான் நியாயாதிபதியாய் இவ்விடம் வந்தவுடன் ஜெகநாதனைக்கண்டபொழுது நீ ஓடத்திலிருந்து தவறியதுடப்பை எடுக்கப்போய்க் கடலில் விழுந்து உடனே ஒரு பெரியமச்சம் உன்னை இழுத்துக்கொண்டுபோனதைத் தடுக்கமுயன்றும் பிரயோசனப்படாமல் போனதென்றும், உன்னுடைய மரணத்தைக்கேட்ட உன் மனைவி அதே வியாகூலமாகவிருந்து கர்ப்பத்தோடு இறந்தாளென்றும் அவன் அதிகதுக்கத்தோடு சொல்லியதைக் கேட்டு, அவன்சொல்லிய யாவும் உண்மையென்று நம்பியிருந்தேன். அதிக துக்கத்தோடு சொல்லியவன் வியசனம் க்ஷணத்தில் மாறித்தன்னுடைய தமையன்சொத்து தன்னை விரைவில்சேர உத்தரவு செய்யவேண்டுமென்று என்னைவேண்டியதால் அவன்மேல் சந்தேகக்கொண்டு அவன் விரும்பியவண்ணம் முடியாமலிருக்கத் தடுத்துக்கொண்டுவந்தேன். தங்கை செழுங்கமலத்தைக்கண்டு வார்த்தையாடினால் அவர்கள்

மேல் ஜெகநாதன் சந்தேகங்கொள்ளுவானென்றே செழுங்கமலத்தைப் பார்க்காமலிருந்தேன். உன்னுடையகடிதம் எனச்குக் கிட்டியவுடன் நான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லமுடியாது. உன்னை எப்பொழுது காணுவேனென்ற ஆவலோடிருந்து நீ இவ்வூருக்குவந்தவுடன் விசுவ நாதசெட்டியாரால் கேள்விப்பட்டு உன்னுடைய துக்ககரமான விர்த்தாந் தத்தை யறிந்தபின் என் ஸினேகர் ஸ்ரீநிவாஸ ஐயங்காரால் குப்புசாமி ஐயரை வரவழைத்து நான்மறைவிலிருந்து யாவையும்கேட்டுப் பத்திரம் குப்புசாமி ஐயர்கையில் கிடைக்கச்செய்தேன். ஜெகநாதன் தண்டனை யடைய வேறுவழியில்லாமற்போனால், செழுங்கமலத்தை மோசஞ்செய்ய ஏற்படுத்திய பத்திரத்தால் தண்டிக்கலாமென்று குப்புசாமி ஐயரையும் பத்திரத்தோடு வைத்திருந்தோம். பின் சோமசுந்தரமுதலியார் என்னைக் கண்டு ஜெகநாதத்தின் குற்றங்களைப்பற்றிச் சொன்னதைக்கேட்டு உள் ளுக்குள் சந்தோஷப்பட்டும் வெளிக்குக் காட்டாமல் அவருடைய சாக்ஷி களோடு இங்குவரும்படி சொல்லியிருந்தேன். யாவும் உன்னுடைய இஷ்டம்போலவே தெய்வானுகூலத்தால் சந்தோஷகரமாக முடிவுபெற் றன.

அருணாசலமுதலியார்.—என்னுடைய மனைவியும் மகனும் அகப்பட்டார்களென்று என்னிடத்தில் ஏன் சொல்லவில்லை ?

அரங்நாவ்.—சோமசுந்தரமுதலியார் என்னிடத்தில் அதுவிஷயம் ஒன்றும் சொல்லவில்லை. அம்மா கமலாக்ஷி ! உன்னிடத்திலிருந்து நகைகளைக் கொண்டுபோனவர்கள் பெயரின்னதென்று தெரியுமா ?

கமலாக்ஷி.—தெரியும் சுவாமி ! சறுப்பன் வீரன் என்றே அவர்கள் வார்த்தை யாடிக்கொண்டார்கள்.

அரங்நாவ்.—அந்தக் கறுப்பனுக்கும் வீரனுக்கும் மரணதண்டனையாய்விட் டது. நகைகள் துரைத்தனத்தாரிடத்தி லிருக்கின்றன. அவைகளை அனு ப்பிவிடச்செய்கிறேன். உன் தாயாருடைய ஜலத்தின்சீட்டும் என்னிடத் திலிருக்கிறது. இன்று தெய்வானுகூலத்தால் யாவும் நன்மையாகவே முடிந்ததால் யாவரும் கடவுளின் திவ்யதிருநாமங்களைத் துதித்துக்கொ ண்டிருக்கவேண்டும். ஆனதால் இன்றிரவில் அடியார்களுடைய சரித்தி ரத்தை வாசித்துப் பிரசங்கம் செய்ய ஒருவரை அழைக்கவேண்டும்.

அருணாசலமுதலியார்.—ஒரு காலக்ஷேபம் இன்று வைக்கவேண்டியது அவ சியமே !

சபாபதிமுதலியார்.—நான் அதை உத்தேசித்து ஒரு பிரசங்கியாரை அழை த்துவரச் சொல்லியிருக்கிறேன். பிரசங்கத்துக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்த எனச்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

கலியாணசுந்தரமுதலியார்.—உம்முடைய இஷ்டம்போல் செய்யலாம்.

சோமசுந்தரமுதலியார் அருணாசலமுதலியாரைப்பார்த்து, அண்ணா! நான் காத்தினையும் சாத்தனையும் அழைத்துப்போய் அவர்களுக்குக் கமலாக்ஷியம்மாள் வாக்களித்தவண்ணம் பரிசுகொடுத்தனுப்பிவிட்டு வருகிறேனென்று உத்தரவுபெற்று நீங்கினான்.

அன்றிரவில் ஸ்ரீ மணிவாசகப்பெருமானது திவ்ய சரித்திரத்தைப் பிரசங்கிக்கக்கேட்டு ஆனந்தத்தை அடைந்திருந்தவர்கள் பிரசங்கியாருக்கு வயது சிறிதாயினும் மிகு சமர்த்தரென்று பேசிக்கொண்டிருந்தார்கள். சோமசுந்தரம் வெளியிலிருந்து கேட்டிருந்து பிரசங்கம் முடிந்தபின் பிரசங்கியார் யாரென்று சமீபித்துப்பார்த்து, ஆ! சிவப்பிரகாசம்! நீரா இங்கிருந்தவர்களெயெல்லாம் ஆனந்தக்கடலில் மூழுகும்படி செய்தவர்! என்று தழுவிக்கொண்டு, இவர் என் மைத்துனர், நெடுங்காலம் தம் ஊரைவிட்டுப் போயிருந்தார் என்று யாவருக்கும் தெரிவித்தான்.

அருணாசலமுதலியார்.—நம்மினத்தாரில் கல்வியிலே வல்லவராய் ஒருவர் இருப்பது நமக்கெல்லாம் பெருமையே. (என்று மகிழ்ந்தார்.)

24-ம் அத்தியாயம்.

அருணாசலமுதலியார் அரண்மனையில் குடியேறிய இரண்டு வாரத்துக்குப் பின் அரங்கராவ் அவர்கள் அவ்விடம்வந்து உட்கார்ந்து, அருணாசலம்! நீ இன்னும் தூக்கப்பட்டுக்கொண்டிருப்பது நியாயமல்ல. அவன் உன் விஷயத்திலும் உன் மனைவி மகன் விஷயத்திலும் செய்ததை யாவரும் அறிந்தார்கள். இந்த அவமானத்தைத் தாங்கி இருப்பதைவிட அவன் இறந்ததே மேலென்று நினைக்காமல் அவனிறந்து ஆறுமாதத்துக்கு எல்லாக்கிரியையும் கிரமமாக நடத்தியபின்னும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது தகாதென்றார்.

அருணாசலமுதலியார்.—ஜெகநாதன் என் விஷயத்தில் செயததெல்லாம் பொருளே நாடியே யல்லாமல் வேறொரு காரணத்தாலு மல்லவே! ஆனதால் அவனுக்கு வேண்டிய தனத்தைக்கொடுத்து அனுபவிக்கச் செய்யவேண்டுமென்று எண்ணியிருந்த எண்ணத்தை அவன் புண்ணகிப் பாஷாணத்தை உண்டு இறந்ததே எனக்கு வருத்தத்தைத் தருகிறது. (என்று தூக்கப்பட்டார்.)

அரங்கராவ் அவர்கள் அருணாசலமுதலியார் துக்கம்நீங்க அனேக விஷயங் களைச்சொல்லி நீங்கினார்.

சில நாள்களுக்குப் பின் புண்ணியகோடிமுதலியாருடைய வேண்டுகோ ளின்படி அருணாசலமுதலியாரும் கலியாணசுந்தரமுதலியாரும் தங் கள் குடும்பத்தோடு சுவர்ணபுரிக்குச் சென்று அங்கு தருமலிங்க முத லியாருக்கும், மரகதத்துக்கும்,சொக்கலிங்கமுதலியாருக்கும் அம்புஜத் துக்கும் நடந்தேறிய விவாக மகோற்சவங்களுக்கிருந்து, கமலாக்ஷியம் மாள் செய்கிற பாவனையாக வரிசை முதலானவைகளைச் செய்தும், பூங்காவனத்தின் சம்மதத்தால் வனசாட்சியைச் சிவப்பிரகாசத்துக்குக் கொடுத்து விவாகத்தை முடித்துப் பெண் வீட்டோடு இருக்கச்செய் தும், மனோஞ்சிதத்தைச் சபாபதிமுதலியாருக்குக் கொடுத்து விவா சத்தை முடித்தும், சத்திரம் வேங்கடாசலமுதலியார் புத்திரியைப் பஞ்சநாத முதலியாருக்குக் கொடுத்து நடந்த விவாகத்துக்கு யாவரும் சென்று வேண்டிய மரியாதைகளைப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் செய் தும், விவாகம் முடிந்தவுடன் சத்திரம் வேங்கடாசல முதலியாரை அழைத்து விஜயரங்கத்துக்குப் பெண்வேண்டுமே யென்ன சொல்லு கிறீரென்று கலியாண சுந்தரமுதலியார் கேட்டபொழுது, அவர் நகை த்து மூன் பெண் கேட்டபொழுது கொடுக்கச் சம்மதமில்லாதிருந் தேன் ; இப்பொழுதும் அவ்விதம் சொல்ல முடியுமா ? விஜயரங்கத் துக்கென்றிருக்கும் என் சகோதரன்மகள் கமலாக்ஷியம்மாளைக் கொடு க்கத் தடையில்லை, நீங்கள் வேண்டாமென்றாலும் உங்களை விடமாட் டேனென்று நகைத்தார். அவர் சொல்லியதைக் கேட்டிருந்த அருணா சலமுதலியாரும் மற்றவர்களும் நகைத்தார்கள். கேசவ முதலியார் தம் தமையன் சொன்னதை மறுத்துச் சொல்ல ஒருவருமில்லையென்று தங்களூருக்கு வந்தபின் விவாகத்துக்கு வேண்டியதைச் சித்தப்படுத்தி யும் வீட்டை யலங்கரித்தும் அநேக ஊர்களிலிருந்து தாசிகளையும் வாத்தியங்களையும் வரவழைத்தும் நல்ல சுபதினத்தில் கமலாக்ஷி யம்மாளுக்கும் விஜயரங்கத்துக்கும் விவாக மஹோற்சவத்தை நிறை வேற்றினார்கள். மாங்கலியதாரணம் ஆனவுடன் பிள்ளையும் பெண் ணும் அரங்கராவ் அவர்களையும் அவர் மனைவியையும் வணங்கி ஆசீர் வாதம்பெற்றும் ஸ்ரீனிவாஸ ஐயங்காரையும் அவர் மனைவியையும் வண ங்கி ஆசீர்வாதம்பெற்றும், அருணாசலமுதலியாரையும் அவர் மனைவி யையும் கலியாணசுந்தர முதலியாரையும் அவர் மனைவியையும் வேங் கடாசல முதலியாரையும் அவர் மனைவியையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்றபின்பு கேசவ முதலியாரையும் அவர் மனைவியையும் வணங்கி யபொழுது, கேசவ முதலியார் ஆசீர்வதித்து மாப்பிள்ளையைத் தழு விக்கொண்டு, தம்பி விஜயரங்கம்! என்னை அன்று விடுவித்தபொழுது

நான் வாக்களித்த வண்ணம் என் செல்வப் புத்திரியை உனக்குக் கொடுத்தேனென்று முத்தங்கொடுத்து மகளைப்பார்த்து, அம்மா கமலாக்ஷி! உன் அத்தான் மனங்கோணமல் நடந்துகொள் என்றார். செழுங்கமலம் தன் மருமகனையும் மகளையும் பார்த்துத் தேகம் பூரித்து ஆசீர்வதித்து அனுப்பினாள். அருகில் நின்ற வைத்தியர் தம்மையும் தம்மனைவியையும் வணங்கிய மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஆசீர்வதித்தனுப்பிச் செழுங்கமலத்தைப்பார்த்து, அம்மா செழுங்கமலம்! மாப்பிள்ளையைக் கண் இமையாமல் பார்த்திருந்தால் கண் திருஷ்டி யுண்டாகுமென்று நினைக்கவில்லையா? என்று நகைத்தார். செழுங்கமலமும் நகைத்து, இல்லை அண்ணே! தாங்கள் என்மகளைப் பார்த்ததாலுண்டாகிய திருஷ்டிக்கு என்ன சாந்தி செய்கிறதென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன் என்று வேடிக்கையாகச் சொன்னாள். அருணசல முதலியாரும் அவர் மனைவியும் பிள்ளையையும் பெண்ணையும் பார்த்துச், சில மாதங்களுக்கு முன் நமக்கொன்று மில்லாமலிருக்க இப்பொழுது நமக்கு மகனும் மருமகளும் கிடைத்தார்கள்.

"எல்லா முன்னடிமை, எல்லா முன்னுடைமை,
எல்லா முன்னுடைய செயலே."

என்னும் ஸ்ரீதாயுமானவருடைய அருமை வாக்கை நினைந்து நினைந்து இணையில் ஞான பூரணராகிய ஜகதீசனைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். கலியாணசுந்தரமுதலியாரும் அவர் மனைவியும் தங்கள் எண்ணம் பூர்த்தியானதென்று ஆனந்தத்தில் மூழ்கி யிருந்தார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் ஏனைய பெரியோர்களையும் வணங்கி ஆசீர்வாதம்பெற்றார்கள். விவாகச்சடங்கு ஐந்துநாள் நடந்தேறியபின் விவாகத்துக்கு வந்திருந்தவர்களெல்லாம் ஒரு அரசனுக்கும் இவ்வளவு சிறப்பு நடக்காதென்று அதிசயப்பட்டார்கள். விவாகத்தை யுத்தேசித்து வந்தவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்யும்பொழுது, சத்திரத்திலிருந்து வந்த அண்ணமலைக்குமாவரும் மதிக்கத்தகுந்த ஒரு மதிமகாடுத்தனுப்பியபின் சத்திரம வேங்கடாசலமுதலியார் மாப்பிள்ளையும் பெண்ணையும் அழைத்துப்போய் அவாகளுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச்செய்து தன்னுடைய ஆஸ்தியில் பாதியைக் கமலாக்ஷியம்மாளுக்குச் சீதனமாகக்கொடுத்தனுப்பினார். புண்ணிய கோடி முதலியாரும் சபாபதி முதலியாரும் சோமசுந்தர முதலியாரும் மாப்பிள்ளையையும் பெண்ணையும் தங்கள் தங்கள் வீட்டுக்கழைத்துப் போக அருணசல முதலியாரையும் அவர் மனைவியையும் கேட்டபொழுது, எங்களைக்கேட்கவேண்டாம், மாப்பிள்ளையின் தந்தை சலிஞ்யா

சுந்தர முதலியாரைக்கேட்க வேண்டுமென்று அவரிடமனுப்பிக் கலி யாணசுந்தர முதலியாருடைய மனமும் அவர் மனைவியின் மனமும் சந்தோஷமடையும் விதம் செய்துகொண்டிருந்தார்கள். மாப்பிள்ளை யையும் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போக எண்ணியவர்க ளெல்லாம் கலியாணசுந்தர முதலியார் உத்தரவு பெற்று மாப்பிள்ளை யையும் பெண்ணையும் அழைத்துப்போய் விருந்தளித்து அனுப்பினர் கள். மாப்பிள்ளையும் பெண்ணும் வீடு சேர்ந்தபின் விஜயரங்கமும் கமலாக்ஷியும் பெரும்பாலும் கலியாணசுந்தர முதலியார் வீட்டில் தங் கள் வாழ்நாளைக் கழித்துவந்தார்கள். அருணாசல முதலியார் வைத்தி யனைத் தம்மோடு எப்பொழுதும் இருக்கவேண்டி அவருடைய சம் மட்சணைக்குப் பூஸ்திதியைக் கொடுத்து ஆதரித்தார் சிந்தாமணி ஆண் பிள்ளை வேடத்தோடு சொல்லியதுபோல் சோமசுந்தர முதலியாருக் கும் மனோன்மணிக்கும் சுந்தரமான ஆண் குழந்தை யொன்று பிறக்க, அதைச் சிந்தாமணியம்மாள் அதிக அன்போடு வளர்த்துவந்தாள். சில வருடங்களுக்குப் பின் கமலாக்ஷி வாக்களித்த வண்ணம் அதிக திரவி யத்தைப் பெற்றுப்போன காத்தனும் சாத்தனும் தங்களுடைய பழைய தொழிலைக் கைக்கொண்டிருந்ததால் துரைத்தன அதிகாரிகளிடம் அகப்பட்டு மரணபரியந்தம் சாவலில் இருக்கத் தீர்ப்புப்பெற்று அலை கவருடங்களுக்குப் பின் காலம் சென்றார்கள். சுந்தரத்தம்மாள் தன் மூடிவு பரியந்தம் கமலாக்ஷியம்மாளை விட்டுப்பிரியாமலிருந்தாள். சோ மசுந்தரம் தன் சினேகன் விஜயரங்கத்தை விட்டுப் பிரியாமலிருந்து ஒரு நாள் தன் சினேகன் விஜயரங்கத்தைப் பார்த்து இன்று என்னு டைய வீட்டுக்குச் சிந்தாமணியின் புருடன் தன்கையிலுள்ளவைகளை யெல்லாம் தாசிகளுக்குத் தத்தஞ்செய்துவிட்டு ஒரு பிட்சைக்காரனைப் போல் வந்தான், அவனைக் கண்டவுடன் சிந்தாமணி கொண்ட துக் கத்துக்களவில்லை, அவனுக்கென்ன செய்யலாமென்று கேட்கவந் தேன், உன் கருத்தென்னவென்றான். வந்தவர்களை ஆதரித்து அவர் களை வேறுகுடும்பமாக வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டியதே நம்முடைய கடமை என்ற விஜயரங்கத்தின் சொல்லைக்கேட்டு அவ்வா றே சோமசுந்தரம் நடந்தான். மரகதம் அடிக்கடி கமலாக்ஷியை வந்து பார்த்துப்போவதும் மரகதத்தை அழைத்துப்போக அவள் நாயகன் வருவதுமாக இருந்தார்கள். வழக்கப்பிரகாரம் மரகதம் வந்திருக்க அவளை அழைத்துப்போகத் தருமலிங்கம் வந்து விஜயரங்கத்தோடு வெளித்திண்ணையிலிருந்து அம்புஜம் வளர்த்துவந்த குழந்தை இற ந்துபோய் விட்டதென்று பேசிக்கொண்டிருந்த பொழுது, ஒரு ஏழை வீட்டுக்கெதிரில் நின்றிருப்பதைக்கண்டு விஜயரங்கமும் தருமலிங்க மும் அவனைப்பார்த்துக் கமலாக்ஷியை அழைத்து இங்கு நிற்கிறவன்

யாரென்று தெரிகிறதா பாரென்றூர்கள். கமலாக்ஷி பார்த்துத் திகைத்து இவருக்குத் தன் சிறிய தந்தையால் பொருள் கிடைத்ததென்று வைத்தியரால் கேள்விப்பட்டேனே என்றூள். தருமலிங்கம் கமலாக்ஷியைப் பார்த்து, இந்தத் துன்மார்க்கன் இரத்தினத்தின் பொருளும் இவனுடைய சினேசனுக்கிருந்த ஆஸ்தியும் இவர்களேவிட்டு நீங்க நானே வேண்டிய சூழ்ச்சி செய்தவன்; தன் கையிலிருந்ததையெல்லாம் கொடுத்துப் பிள்ளை எடுக்கத்தலைப்பட்டார்களென்றுகோபத்தோடு சொன்னான். அவனுடைய கோபம் நீங்கக் கமலாக்ஷி நயவசனம் சொன்னதன்மேல், தன் கோபத்தைவிட்டு அவனை அழைத்துப்போய் அவனுடைய பொருளை அவனிடம் கொடுத்தும், மாணிக்கத்தைக்கண்டுபிடித்து அவனுடைய சொத்தோடு சிறிது சேர்த்துக்கொடுத்தும் இனியாகிலும் கிரமமாய் இருங்களென்று தருமலிங்கம் அவர்களுக்குப் புத்திமதிகளைச் சொல்லியனுப்பினான். இரத்தினமும் மாணிக்கமும் கமலாக்ஷியை வாழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

சில வருடங்களில் கமலாக்ஷியம்மாளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் உண்டாக அக்குழந்தைகளை அருணாசல முதலியாரும் கலியாணசுந்தர முதலியாரும் கேசவமுதலியாரும் ஒவ்வொருகுழந்தையை அழைத்துக் கொண்டுபோய் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஜகந்நாத முதலியார் இறந்த பொழுது வந்திருந்த அவர் மனைவி அருணாசலமுதலியாருடையவீட்டிலிருந்தகுழந்தையை அதிக கவனமாக வளர்த்து வந்தாள். விஜயரங்கம் ஒரு நாள் கடைவீதி வழியாகப் போகும் பொழுது தான் வீட்டை விட்டுப் போனகாலத்தில் வழியிலே தனக்குக் கட்டமுது கொடுத்தவனும் சத்திரத்தில் உபசாரஞ்செய்ய அன்னமிட்ட பிராமணனும் வார்த்தையாடிக் கொண்டிருந்ததைக்கண்டு அவர்களிருவரையும் அழைத்துவந்து அருணாசல முதலியாரிடம்விட்டு அவர்கள் தனக்குச் செய்ததைச் சொன்னவுடன் அவர் இருவருடைய க்ஷேம இலாபத்தை விசாரித்து அவர்கள் தரித்திரம் அதமாகிச் சுகத்தோடிருக்கப் பெரும் நிதியைக் கொடுத்தனுப்பினார். கமலாக்ஷியின் சிறுவர்களுக்கு வயது பன்னிரண்டும் பத்தரையும் எட்டும் ஆனகாலத்தில் அருணாசல முதலியார் அடிக்கடி சிறுவர்களை ஒன்று சேர்த்து உட்காரவைத்துத் தன் மனைவியோடிருந்து முத்துக்குமார முதலியாருக்கும் பேச்சியாயிக்கும் காளியாயிக்கும் நேரிட்டதை உங்களுக்குத் தெரியும்படி சொல்லுகிறேனென்று சொல்லி, அவர்கள் அடாதகாரியத்தைச் செய்ததால் படாத பாடுபட்டு இறந்தார்கள், உங்கள் தாய் தந்தையர் நற்குணத்தை நீங்களும் கொண்டிருந்தால் மேன்மையாக மதிக்கப்படுவீர்களென்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்

பதை விஜயரங்க முதலியாரும் கமலாக்ஷியம்மாளும் கேட்டுப் புனகை நாட்டிச் சந்தோஷ மடைந்திருந்தார்கள்.

விஜயரங்கம் கண்ணபுரியில் கேட்டானந்தித்த பிரசங்க விசேஷத்தாலே பெரியோர்களியற்றிய அனேக ஞான நூல்களிற் கசடறப் பயின்றும், சாதுக்கள் சங்கம் மருவிச் சிறந்த கேள்வியாதிகளினால் பேரறிவாலுயுமிருந்து,

" பரிந்தோம்பிக்காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை."

என்னும் அரிய வாக்கினைக் கடைப் பிடித்து " செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் கட்டளைக்கு நிதரிசனமாய் ஒழுகிவந்தான்.

" அன்னே தையு மடியாள்பணியு மலர்ப்
பொன்னினழகும் புகிப்பொறையும்—வன்னமூலை
வேசிதுயிலும் விறன்மந்திரிமதியும்
பேசிலிவை யுடையாள் பெண்." என்றும்,

" கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாளூர் நாணியல்பினு--ளூட்கி
இடனறிந்தூடி யினிதி லுணரு
மடமொழி மாதராள் பெண்." என்றும்,

மேலோர்கூறிய இலக்கணங்களைக் கமலாக்ஷி பூரணமாகப்பெற்றுத் தன் னரிய நாயகனுக்கு.

" ஈதலறந்தீவினை விட்டிட்டல் பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத்தொக்க வாதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்ற இலக்ஷணத்துடன் வாழ்க்கைத் துணைவியாயிருந்தனள். புருஷரத்தினமும் பெண்மணியுமாகிய இவ்விருவரும் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் மூவர்க்கும், துறந்தார், துவ்வாதவர், இறந்தார் இவர்க்கும் துணையாக நின்று, தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் இவர்களைவழாது போற்றியும்,

" அறனெனப்பட்டதே யில்வாழ்க்கையஃதும்
பிறன்பழிப்பதில்லாயினன்று."

என்று செந்நாப்புலவர் சிகாமணியாகிய திருவள்ளுவநாயனார் கூறியபடி இல்வாழ்க்கை யத்தை வளர்த்தும், சிந்தையுமனமுஞ்செல்லா நிலை

மைத்தாய அந்தமிலின்பத்தழிவில் விட்டின் பயன்துய்க்குமார்வத்தால், பண்ணுமின்னிசையும் போலொளிரும் உமாமஹேசுவரரை ஸித்தலும் வழிபட்டு வந்தனர். சுபம்.

முற்றிற்று.

50400

rinted by Thompson and Co., at the "Minerva" Press, Madras.